மகாத்ம சரிதாமிருதம்

24-4

கோவிலூர் ஆண்டவர்
A. No. 8891...
R65:31
நூலகம், கோவிலூர்

ஸ்ரீ காசிகாநந்த ஞானாச்சாரிய சுவாமிகள்

பூவணநாதர் புத்தகாலயம்
106-A, கீழப்பெருமாள் மேஸ்திரி வீதி
மதுரை-1.

பூவணநாதர் புத்தகாலயம் வெளியீடு

முதற்பதிப்பு ஜனவரி, 1974

பதிப்புரிமை :

(C) பூவணநாதர் புத்தகாலயம், மதுரை

விலை ரூ. 9-00

அச்சிட்டோர் :

தனலெட்சுமி பிரஸ்,

திண்டுக்கல் ரோடு, மதுரை - 1.

மகாத்ம சரிதாமிருதம் 1—446 (40 பெயர்கள்)

ஓம் தத் சத்.

மஹாத்ம சரிதாமிருதம்.

1. ஸ்ரீ ஜகத் குரு.

ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம்.

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் துதி.

கருவலி களையும் இபமுகன் தன்னைக்
    கதிர்வடி வேலனை அடுத்தோர்,
இருமல ஹாரி ஈசுரன் தன்னை
    இணையில்கா மாக்ஷியைச் சிறந்த,
திருஉரு துங்க பத்திரை புரக்கும்
    சிருங்கைவாழ் செகத்குரு என்னும்,
பரன்உரு வான சங்கர பகவத்
    பாதவா சிரியனைப் பணிவாம்.

இப் பூ லோகத்தின்கண், கலியுகாதி 3000ஞக்கு மேல், வைதிக மாகிய சந் மார்க்கம் குறைந்து, பௌத்தாதி அவைதிக பாஷண்ட மார்க்கங்கள் பெருகி, அதனுல், ஜீவர்கள் துன்புறுவதைக் கண்ட தேவர்கள், ஸ்ரீ கைலாச பதியினிடஞ் சென்று முறையிட்டனர். அப் போது, எம் பெருமான், அவர்கள் முறையீட்டிற் கிணங்கி, ஸ்ரீ குமாரக் கடவுளைப் பார்த்து, "இதற்கு முன் எம்மா லேவப்பட்ட விஷ்ணுவும், ஆதிசேஷனும், சங்கருஷ்ண,பதஞ்சலி முனிவர் களா யவதரித்து, வேதத்தின் தேவதா காண்டத்தினையும், யோக காண்டத்தினையும், விளக்குகின்றுர்கள். நீ புவியில், பட்ட பாத ரெனும் பெயரால், அவதரித்து ஜைமினியாற்

செய்யப்பட்ட நூலை யாதரித்து, பிரஹ்ம தேவனது அவதார மாகிய மண்டநமிசிரன் என்னும் மாணுக்கனையும், இந்திரனது அவதார மான சுதந்வன் என்னும் அரசனையும், துணை யாகக் கொண்டு,சாருவாகர், புத்தர் முதலியோரைத் தண்டிப்பித்து, வேதத்தின் கர்ம காண்டத்தை நிலை நிறுத்துவாயாக. பின்னர், யாம் அவதரித்து, ஞாந காண்டத்தை நிறுத்துவாம்'' என்று ஆஞ்ஞாபிக்க, அவ் வாறே,குமாரக் கடவுளும் அவதரித்து, பாட்டப் பிரதீப மென்னும் பூர்வ மிமாம்ஸா நூலை யியற்றி,அவ் விரு வரையும் துணை யாகக் கொண்டு, நாஸ்திகர்களைக் கண்டித்துக், கர்ம காண்டத்தின்படி, உல கெங்கும் வைதீக வொழுக்கங்களைப் பரவச் செய்தனர். இப் பட்டபாதரே குமாரில பட்ட ரென்றும் சொல்லப்படுவர்.

பின்னர், கேரள நாட்டில், இடபாசலத்தின் பூரணா நதிக் கரையில், தானே முளைத்த ஜோதிர் லிங்க மூர்த்தியி னருகி லிருந்த, காலடி யென்னும் அக்கிரகாரத்தில், வைதிக சிரேஷ்ட ராகிய வித்தியாதி ராயருக்கு, அவ் விடபாசலத்துச் சுயம்பு லிங்கேசன தருளாற், சிவ குரு என்பவர் பிறந்தனர். இவர், சிறு பொழுதே, சகல வேத சாஸ்திரங்களையும், ஆசிரியரிடம் கற்றுத் தேறி, பிரஹ்மசாரியாகவே இருக்க வேண்டு மென்றதை, வருங் கால முணர்ந்த அவ் வாசிரியர் மறுக்க, அவ ராஞ்ஞையைச் சிரமேற் கொண்டு, பிதாவின் இஷ்டப்படி, மகி பண்டித ரென்னும் பிராஹ்மணோத்தமரது புதல்வி யாகிய ஆரியாம்பாளை விதிப்படி மணஞ் செய்து கொண்டனர்.

அவ் விருவரும் விதி வழுவாது, இல் லற கருமம் நடத்தி வரு நாளில், அவர் பிதா வித்தியாதி ராயர், சிவப்

பேற்றை யடைய தம்பதிக ளிருவரும் சுகித்து வரும் நாளில், பத்தினியார் வேண்டுகோளின்படி புத்திரப் பேற் றைக் கருதி, இருவரும் தவஞ் செய்யுங்கால், 12-வது வரு டத்தில், பூர்ணவாகினி நதி தீரத்தில், சிவ பெருமான் அவர்க ளிருவருக்கும், சந்தான பல மருளுவதாக நித்திரையில் சேவை சாதித்தருளினர். அதனைப் பெற் றிருவரும், தமது கிருஹத்தில், புத்திர காமேஷ்டியாதி சர்வ கிரியைகளையும் முடித்துத் தருப்பாசநத்தில் படுத்திருக்கையில், அன் றிரவு, ஈசன் வேதியராய் வந்து, "அற்பாயு சுள்ள ஞான நிறை வுற்ற ஒரு புதல்வன் வேண்டுமோ? அல்லது, தீர்க்காயு சுள்ள மூட மக்கள் பலர் வேண்டுமோ?" என்று வினவ, அவர்கள், ஞான பூர்ண னான ஒரு புதல்வனே போதும், ஆயுள், வேண்டின் மிருத்தியுஞ் சயன்கொடுப்பா னென, 'அவ்வாறே யாகுக' வென்று மறைந்தனர். உடனே விழித் தெழுந்து, சிவ பெருமான் மகிமையை வியந்திருந்தனர். அது முதல், மாயாவி யாகிய பரமேசுவரன், அவர்கள் கர்ப் பத்தில், முறையே பிரவேசித்துத், தனது சத்தியால் கர்ப்ப சின்னங்களையும், அநேக அற்புதங்களையும் காட்டி, இக் கலியுகத்தில், 3058-வது ஆண்டுக்குச் சரியான, விக்கிரம சகம் 14வ தாகிய, ஈஸ்வர வருஷம், வைசாக சுத்த பஞ்சமியில், தேவ துந்துபி முழங்கப், புஷ்ப விருஷ்டி பொழிய, வைதிகர் மநங் களிக்க, பேத வாதியர் மநம் புழுங்க, அவ் வாரியாம்பாளது கர்ப்பத்தினின் றும் வெளிப் பட்டது போல், சங்கர மூர்த்தி யானவர் ஆவிர்ப்பவித் தனர்.

அப் போது, சிவ குருவானவர், விதிப்படி ஜாத கர்ம முதலிய எல்லாச் சடங்குகளையுஞ் செய்து, புத்திரோற் சவங் கொண்டாடி, அக் குழந்தைக்கு, நெற்றியில், நெற்

றிக் கண்ணின் குறிப்பும், உச்சியில், எவ்வளவு துடைத்தாலும், உலராத ஈரமும், இளம் பிறை யொத்த வெண்ணிறக் கீற்றும், கண்டத்தின் மீது, கருத்த மருவும், கைகளில் உடுக்கை, சூல முதலிய ரேகைககளும், சந்திர காந்தம் போன்ற, தேக காந்தியு மாகிய, பல சிந்நங்கள், சங்கராம்ச மெனக் குறிப்பித்து நிற்றல் கண்டு, 'சங்கரர்' என்னும் நாம கரணம் சாற்றினர். அக் குழந்தை, நாளுக்கு நாள் வளர் பிறை போல் அபிவிர்த்தி யாய் வந்தது. பின்னர், இடபாசலத்து வேதியர், சுயம்பு லிங்கேசருக்குக். கார்த்திகைத் திங்களில், அர்ப்பித்த வில்வ ருத்திராக்ஷ மாலைகள், அப்பால் சங்கரர் கண்டத்தி லிருக்கக் கண்ட வேதியர், ஐய முற்று, ஆலயத்துட் சென்று பார்க்குமிடத்து, அவ் வீசன் திரு மேனியில் அவை யில்லாதிருக்கக் கண்டு, வியப்புற்று, அம் மூர்த்தியே, இக் கோலங் கொண் டுளது, என்று கருதி, வந்தனை வழிபாடுகள் செய்தனர். அவ் வீசன் றிரோபவத்தால், மறுபடியும் அவ் வுண்மையை மறந்தனர்.

மற் றொரு நாள், அச் சிவ குருவின் மனையில், ஸஹஸ்ர வேதிய சந்தர்ப்பணை யென்னும் விரதம் நடந்து வருகையில், ஓர் சுழல் காற்று மழை நேர்ந்து, இப் பால சங்கரர் ஆகாய வெளியில் தூக்கிச் செல்லப்பட்டனர். பின், சிவ குரு முதலாயினோர் இடபாசலேசனைப் பக்தியோடும் துதித்தனர். எண் டிசையும் தேடிச் சென்றவர், எட்டுக் குழந்தைகளைக் கொண்டு வந்தனர். இவ் வாறு, ஒரு சங்கரர் எட் டுருவா யிருப்ப தென் என்று ஆச்சரிய முற்றிருக்கையில், குரு வாயூர் என்னும் ஸ்தலத்தில், ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்துள் சிந்முத்திரைக் கரத்தினரா யிருந்த, ஸ்ரீ சங்கரரைப் பார்த்துச், சிலர் கொண்டுவர, மனையி லிருந்த எட்டுக்

குழந்தை வடிவமும், மறைந்தன. அதன் பின் காப்பு முதலிய மங்களாசரணஞ் செய்து, நமது புண்யப் பயனு ய்க் குழந்தை சுக மாக வந்ததே யென்று களித்திருந்தனர். அன் றிரவு, கனவில், பிரகஸ்பதி, சார்வாகர், லோகாயதர் முதலியோர், யுக்தி ரகஸ்யத்தினையும், வாயு, துவைத முதலிய வியவ்கார ரகஸியங்களையும், ஸ்ரீ கண்ணன், சுத்தாத்வைத விரகசியத்தையும், அக் குழந்தைக்கு உபதேசித்தனுப்பிய தாகக் கண்டவர், அப் பகற் போது, தாம் கனவிற் கண்ட காட்சிக் கொத்த தன்மையைக் கண் டாச்சரிய மடைந்தனர்.

அச் சங்கரர், இரண்டா மாண்டில், அகாராதி யக்ஷரங்களை யுச்சரிக்கத் தொடங்கிய வளவிலேயே, மிகுந்த நாவன்மை யுடைய பிற வாதியர், நா வானது இருந்தாங்கிருந்த படி யடங்கக் கண்டனர். அவர், நன் ருகச் சிறுமொழி கூறத் தொடங்கியபோது, அவ் வாதியர் நாக் குழறுதலை யடைந்தனர். எல்லா விஷயங்களையும் கேட்ட வளவிலேயே நன் குணர்ந்து, தெரிவிக்கத் தக்க அம் மைந்தர், மூன்ரு மாண்டிலேயே வைதிக லௌகிக பாஷைகளெல்லாவற்றினையும் குற்றமற விவகரிக்கத் தொடங்கினர்.

மற் ருெரு நாள், இடபாசலேசர் ரதோற்சவம் நடந்த போது, பார்ப்பவர் யாவர்க்கும் ரதத்தில் உற்சவ மூர்த்தி தோற்ருது, இப் பால சங்கரரே இருப்பதாகவும், ஒவ்வொரு கூட்டத் துள்ளும், இச் சிறுவரே இருப்ப தாகவும் புலப்பட்டது. இஃ தோர் சித்த புருஷ கதை யென்று இச் செய்தி எங்கும் பரவியது.

ஒரு கால், சிவ குரு தீக்ஷிதர், வேள்விச் சாலையில் பதினுயிரம் அந்தணர் கூடி வேத சாத்திரப் பிரசங்கம் செய்து

கொண்டிருந்தனர். அப் போது, அங்கு அருகில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்கள், இப் "பூசினைக்காயினுள் எத்தனை வித்து, இக் கத்திரிக்காயுள், எத்தனை வித்து" என்று வினவி, விளையாடுமிடத்து, அவர்களுக்குள், விவாத முண்டாகி, இப் பால சங்கரரை வினவ, இவர், "உலக வித்தின் கணக்கினையே, உலக முற்று மாக நினைக்கலாம்.,' என்றனர். அதற்குப் பொருள் தெரியாத அச் சிறுவர்கள், அங்குப் பிரசங்கிக்கும் வித்வான்களிடம் தெரிவிக்க, அவர்களும், பொருள் தோன்ருது, அக் காய்களைச் சோதிக்குமிடத்து, ஒவ் வொன்றனுள், ஒவ் வொன்றே யிருக்கக் கண்டு வியந்து, அவ ருரைக்குப் பொருள் செய்ய விபலா து சித்திரப் பாவைபோ லசைவற் றிருந்தனர். இவ் வாறு, ஸ்ரீ கண்ண பிரானுக்கு நிகழ்ந்தது போல, எவ ராலும் வியக்கத் தக்கனவும், இன்பந் தருவனவாயு முள்ள, அநேக அற்புத மான, பல லீலைகள் ஸ்ரீ சங்கரரிடத்து நிகழ்ந்தன. இவ் வாறு, மூன் ருண்டு நிறை வுற்ற காலத்துப், பிதாவாகிய சிவ குரு தீக்ஷிதர் சௌள முதலிய கருமங்களைச் செய்வித்து, தேக வியோக மெய்தி, நற் கதி யடைந்தனர். அதன் பின், ஆரியாம்மையும், இக் குழந்தையை முன்னிட்டுத் தான் உடன்கட்டை யேருது, ஞாதியரைத் துணையாகக் கொண்டு, பர்த்தாவுக்குச் செய்ய வேண்டுங் கருமங்களைச் செய்து முடித்து, இவரைச் செவ்வை யாய்ப் பரிபாலித்து வந்தனர். பின் பருவத்தில், சான்ருேர் முன்னிலையில், அப் பால சங்கரருக்கு, உபநயநச் சடங்கினை செய்தனர். பிரஹ்ம வடிவின ராகிய இவர், பிரஹ்மோபதேசத்தால் பிரஹ்மா நுபூதி பெற்று, பிரஹ்மசர்ய மநுஷ்டித்து வரும் நாளில், ஒரு நாள், அயாசதி தீக்ஷிதர் வீட்டில், பிக்ஷைக்குப் போயிருந்தபோது, அவ் வீட் டம்மையார் வறுமையால்

தன்னிடம் கிடைத்துள்ள நெல்லிக் கனியைப் பக்தியோடுதவியதை பெற்ற சங்கரர், அவ்விடம் தயையினால், ஸ்ரீலக்ஷ்மியைத் துதிக்க, வெளிப்பட்ட தேவியார், இவருக்கு வறுமை தொலையும்படியான பூர்வ கர்ம மில்லையென, அதற்குச் சங்கரர் இம்மையில், நெல்லிக் கனி ஈந்த, இப் பெரும் புண்யத்தின் பயனை யாவது, தரல் வேண்டுமென்று, "கநக தாரா ஸ்தவத்தால்", "காருண்யஸ்தவத்தால்" துதிக்க,லக்ஷ்மி தேவியார் அவ் வாறே,அம் மனையவர் வறுமை தொலையு மாறும், இம்மையிற் பெரும் புண்ணியஞ் செய்தவர், இம்மையிற்றானே, அதனை அடைவா ரென்பதனை வெளிப்படுத்து மாறும், அறு பது கலம் பொன்னெல்லிக் கனி நிரம்பும்படி, மழை பெய்வித்து,இச் சங்கரர், கருணையினையும் வெளிப்படுத்தி மறைந்தனர்.இவர் ஏ ழாண்டிற்றானே,பிரஹ்மசர்யத்தோடு வேதாதி சகல கலைகளையும் நிரம்பப் பெற்றவ ராய், எவராலும் துதிக்கப்படும் கல்வியொழுக்க மிக்கவ ரானார். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச், சான்றோ னெனக்கேட்ட தாய்." (குறள் 79) என்றபடி, ஆரியாம்மை மிக்க சந்தோஷ முடையவ ராயினார். இச் சங்கரர் எல்லாங் கைவந்த பெரியரா யிருப்பினும், உலகில் சம்பிரதாயக் கிரமம் பரவ வேண்டித் துர்வாசர் தன் னம்ச மாகிய இவரிடம் வந்து, எல்லா வித்தையிலும் தலைமை யளித்து, அட்டாங்க யோக முபதேசித்து; தமது தவத் திறமுங் கொடுத்து வாழ்த்திச் சென்றனர், இச் சங்கரர், மிக வயது சென்றதனால் தளர்ந்த தன் அன்னை, ஆற்றில் நீ ராடச் சென்று பெருங் கோடையினால் வருந்துவதைக் கண்டு, ஆகர்ஷண பீஜாக்ஷரங்களோடு கூடிய, "மஹா மகாஸ்தவம்" என்பதனைப் பாடி, அந்நதியை, அவ் வக்கிராரத்தி னருகிற் பெருகியோடும்படி

செய்தனர். பின், அம் மலை நாட்டில், துன்ப வேதுக்க ளெவையு மின்றி, எல்லா வளமும் மிகுந்து வருதல் காரண மாக, இவர் பெருமை யுணர்ந்த, அந் நாட் டரச னாகிய சத்திய வன்மன், தா, னழைக்க வராது மறுத்த சங்கரரிடம் தானே நேரிற் சென்று, தான் செய்த மூன்று நாடகத்தினை யும், பதி னாயிரம் பொன்னையும், காணிக்கை யாக வைத்து, வணங்கினான். அப் போது, சங்கரர் மகிழ்ந்து, "இந் நாட கம் இந் நா டொன்றின்கண்ணே வழங்குக, இப் பொன்னை யாகஞ் செய்யு மந்தணர்க்கே உதவுக" என்று கூறி, மக்கட் பே றுண்டாதற் குரிய, ஓர் யாகத் தினையும், உணர்த்தி யனுப்பினர், அதனால், அவன் புத்திரப் பே றுற்று, நல் லொழுக்கத்தோடு அர சாண்டு வந்தான்.

பின்பு உபமந்யு, ததீசி, கௌதமர், அகத்தியர், இந் நால்வரும்,இவரிடம் வந்து, தம் தவ வலியை யளித்து, உலகியல் வேண்டிக் கருணையினால்,தனித் தனி, அகஸ்தியர், சிதம்பர ரகசியம், மந்திர லய ஹட ராஜ யோகங்கள் உடனே சித்தி பெறு முபாய மென்பவற்றையும், உப மந்யு முனிவர், சிவ தத்துவத்தினையும், ததீசி சிவ மாந் மியத்தினையும, கௌதமர், தேவ கர்ம ரகசியங்களையும் உபதேசித்தனர். பின், தாம் சந்நியாசஞ் செய்து கொள்ள விருப்புற்றிருப்பதை, தம் மன்னையாருக் கறிவிக்க, அதனை யவர் மறுக்க, மாதாவின் ஆணையைக் கடக்க முடியாதவ ராய்ச் சும்மா விருந்தனர்.

பின் னொரு நாள் நாரதரும், தத்தாத்திரேயரும், வந்து வைஷ்ணவ சம்பிரதாயம் விளங்கும் பொருட்டு, விஷ்ணு தத்துவ ரகசியங்களைப் போதித்துச் சென்றனர். அன் றிரவே யம தர்ம ராஜன் வந்து துதித்துச் சென்றனன்.

மறு நாளுதயத்தில், அன்னையோடு நீராடச் சென்ற போது, ஓர் முதலை இவர் காலைப்பற்றியது. அப் போது அன்னையாரைக் கூவி, "அம்மே இப் போது சந்நியாசத் திற் குத்திரவு கொடுத்தால் மறு பிறப்பு வருதலாற் பிழைப் பேன்" என்ன, அன்னையார் பயந்து, அவ் வாறே அநுமதி கொடுத்தனர். அது கேட்ட அப் பொழுதே, மனோ வாக்கு களால், விதிப்படி சந்நியாசஞ் செய்து கொள்ளவே, அம் முதலை இவர் காலை விட்டு, இவர் ஸ்பரிசத்தால் பூர்வ சாப விமோசநம் பெற்று, முன்னைய கந்தருவ உருவ மடைந்து, சில சுலோகங்களால் சங்கரரைத் துதித்துச் சே ணடைந்தது. பின், தனது பிரிவாற்றாமையால் வருந்தும் அன்னையாரைத் தேற்றி, "உமது மரண காலத்தில் நினைக் கில் வந்து உமது செய் கடன் முடித்துக் கதிபெறு விப்பேன்" என் றுறுதி கூறித், தமது ஞாதியாரிடம் அவரை யொப்புவித்துத், தான் வைதிக விதிப்படி சந்நியா சம் பெற்று, பிரஹ்மசாரிக்குச் சந்நியாசங் கூடா தென்ற வர்களை மறுத்துச்,சந்நியாசப் பிரதிஷ்டாபநாசாரிய ரெனப் பேர் பெற்று விளங்கினர்.

பின், அங் கிருந்து காஷாயதாரியாய், தண்ட கமண்ட லங்களைக் கையிற் றாங்கி, நல்ல வாசிரமங்கள், நதிக் கரை, மலை, குகை முதலிய பல விடங்களில், நல் லாசிரியனைத் தேடி, மாலைப் பொழுதில், நருமதை யாற்றங் கரை யிலுள்ள, ஸ்ரீ கோவிந்த யோகீசுவரர் தபோ வநத்தினை யடைந்து, தியாந நிலையினால், அம் மலைக், குகையில், ஆதி சேஷ னுகிய கோவிந்தபாதர், ஞாநச் செல்வ ராய்ச், சமாதி யிருப்பது தெரிந்து, அவ ரிருக்கும் குகை யருகே சென்று,

விதிப்படி வலம் வந்து, அவரை ஆதிசேஷ வடிவ மாகவே துதி செய்து, தம்மைச் சர ணடைந்த, என்னை ரக்ஷிக்க வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அப் போது, அந்த யோகீசுவரர் சமாதியி னின்று விழித்து, குகையினின்று வெளி வந்து, நீர் யார் என்று வினவ, அதற் கிவர், "ஐயரே! யான் மண் நீர் தீ கால் வெளி யல்லேன், அவற் றின் குண மல்லேன், பொறி யல்லேன், எல்லா விலக்கண முடைய தாய்க் காட்சியை யொழித்து நின்ற, சச்சிதாநந்த வடிவ சுத்த வறி வாகிய நான் - சிவோகம்" என்றனர். அது கேட்ட கோவிந்த பாதர், ஐயா! நீ சங்கரனது வடிவ மென யா னறிந்தே வந்தனன். உண்மையில், யானே நீயா யிருக்க, யான் செய்பத் தக்க தொன்று மில்லை யெனினும் ஸ்ரீ சுகப் பிரஹ்மத்தின் மாணாக்க ராகிய ஸ்ரீ கௌடபாத முனிவர், எனக் கருளிய, பிரஹ்ம வித்தியா ரகசியத்தினை, மரபு விளங்குதற் பொருட்டு, நினக் கருளுகின்றேன் என்று கூறி, முறைப்படி எல்லா இரகசியங்களையும் உபதேசித்து ஆசீர்வதித்துத் தாம் குகையிற் சென்று சமாதியிலிருந்தார். பின், சங்கர முனிவர், சாதுர் மாச மாகிய விரதத்திற்கு அங் குத் தங்கி, சிரவணாதிகளைச் செய்திருக்குங்கால், அந் நரு மதைக் கரையி லுள்ள தபோநிஷ்டருக்கும், அவ் வநத்திற் கும், இடையூ றாக, ஓர் வெள்ளம் பெருகி வர, அதனைத் தமது கமண்டலத்தில் அடக்கிக் கொண்டனர். மற் றொரு நாள், தமது ஆசிரியர் நதியில் ஸ்நா ராடி நித்திய கரும முடித் துச் செல்லுகையில், உச்சி வெயில் ஆசிரியர் மீது விழா வண்ணம், தமது காவித் துண்டத்தினை ஆகாயத்தில் எறிய, அது குடை போல், நிழற்றி வந்தது. அதனை, ஆசிரியர் கண்டு, அவர் செய்யும் தொண்டினுக்குத் திரு வுளமு வந்து கூறுகின்றனர்:- ஐயா! யான் முன் னொரு கால்

வியாஸ முனிவரிடம் தா மியற்றி யருளிய சூத்திரங்கட்குப் பிறவாதியர் கலக்காத வண்ணம், ஓர் பாஷிய வுரை யிருத்தல் வேண்டு மென்று பிரார்த்தித்த போது, அம் முனிவர், ஐயா! அவ் வா றியற்றுவது எவரா லும் இயலாத காரியம். ஆனால், எந்தப் பால சந்நியாசி உன்னிடம் பிரஹ்மோபதேசம் பெற்றுப், பெரு வெள்ளத்தினைத் தமது கமண்டலத் தடக்குவாரோ, அவரே இப் பிரஹ்ம சூத்திரங்கட்கும், வேத முடிபுகட்கும்,பாஷ்யம் செய்து, நமது பரம்பரையை விளக்கி, உலகத்தினை உத்தாரணஞ் செய்வ ரென்றனர். ஆதலால், நீர் அவரிடம் சென்று, அநுக்கிரகம் பெற்றுச் செய்யத் தகுவன செய்து, வெற்றி பெறுவீராக வென்று கட்டளையிட்டு வாழ்த்தினர். அப் போது, சங்கர முனிவர் அவர் திருப் பாதுகையைப் பன் முறை வணங்கி, ஆசிரிய ராணையைச் சிரமேற் கொண்டு, புறப்பட்டுக் காசி க்ஷேத்திரத்தை யடைந்து, விதிப்படி கங்கை யாடி க்ஷேத்திர யாத்திரை முடித்து, முறையே துண்டி விநாயகர், கால பைரவர் முதலிய தேவதைகளைக் குறித்த தோத்திரப் பாடல் கூறி, விசுவேசுவரரைத் தரிசித்து, வித்தை வல்லவ ராகிய பட்டாசார்யர்களின் சாத்திர சந்தேஹங்களை யொழித்து, அங்குச் சந்நியாச ஆச்ரமத்தினை நிலை பெறுவித்து, 12000 புலவரால் சூழப்பட்டுச் சிவ பெருமானது ஆநந்த வநத்தில் வீற்றிருந்து, அத்வைத சித்தாந்தத்தை விர்த்தி செய்து வருகையில், ஒரு நா ளிரவு, விந்து மாதவர் கனவில் வந்து, நமது அம்ச மாய்ப் பிறந்த ஓர் பிரஹ்மசாரி யொருவன் நாளை யுன்னிடம் மாணாக்க னாக வருகிறான் என்று அருளிய வண்ணம் மறு நாட் காலை, நீ ராடப் போகையில் தென் னாட்டிற் பிறந்த நந்த னென்னும் பிரஹ்மசாரி தனக்கு அகோபிலத் திருப்பதியி லுள்ள, ஸ்ரீ நரசிங்க

மூர்த்தி கட்டளையிட்டபடி, காசிப் பதியை யடைந்து, இப் பெரியார் தொனியில் விசுவநாதப் பெருமான் திருவுருக் கண்டு, இவரே நம் குருமணி யென்று கருதி, அவரைச் சரணாகதி யடைந்தனர். அச் சங்கரர் அவரை யாட் கொள்ளலும், அவர் சந்நியாசம் பெற்று, குரு பணியில் தற்பர ராய்ச், சிரவணாதிகளைச் செய்து வந்தனர். இவர், தமது மாணாக்கருட் சிறந்து விளங்குகின்றமையின், கோவிந்த பாதர் தமக் கருள் செய்திருந்த ஸ்ரீ கைலாசச் சந்திர மௌளீசுவர சிவ லிங்கம், ரத்ந கர்ப்ப கணபதி, ஸ்ரீ சக்கரம், நவக்கிரக யந்திரம், நரசிங்க ஸாளிக் கிராமம், என்பவற்றை இவரிடம் கொடுக்க, அவர் அதனை விதிப் படி பூஜை செய்து, பஞ்சாயதந பூஜா மார்க்கத்தை யாவ ருக்கு முபதேசித்து வந்தனர்.

பின்னா, ஒரு நாள் சங்கரர் கங்கை நீராடி வருகை யில் விசுவேசுவர் சண்டாள வேஷந் தரித்து, இவரை நெருங்கி வர, அவரை விலகு விலகு என்றார். அது கேட்ட விசுவேசர், அந்நமயத்தினின்றும் அந்நமயத்தினை விலகச் சொல்லுகின்றாயா? அல்லது, சைதந்யத்தினின்றும், சைதந் யத்தினை விலகச் சொல்லுகின்றாயா? என்பன முதலிய வினாக்களை யுசாவ, சங்கரர் உள்ளத் தாநந்தபரித ராய், இத் தன்மைய ரகசியம் எவரிடத்தினின்றும் வெளிப்படுகின் றதோ, அவர் சண்டாள ராயினும் என் குரு என்னும் பல சமரச அபிப்பிராயங்க ளடங்கிய மநீஷா பஞ்சக மென் னும் செய்யுட்களைக் கூறி, அவ் விசுவேசர், தன் நிஜ வடி வத்தோடு காட்சிதரப், பல வாறு துதித்தனர். அப் போது, விசுவேசர் அவரை விடைமீதேற்றி உபநிஷதார்த்தங்களை யநுக்ரஹித்து, அஸ்தத்தினை சிரஸில் வைத்து, "யாமே

நீயா யிருக்கின்றாய்'' எம தருள் வலியால் உபநிஷதங் களுக்கு உண்மை யுரை செய்வதோடு பிரஹ்ம சூத்திரக் கருத்தினை வெளிப் படுத்தி, வியாசரைக் கேட்பித்து, வாதி யரை வென் றுடன்படுத்தி, முமுக்ஷுக்களுக்கு ஞானோ பதேசஞ் செய்து, குரு பரம்பரையை உலகில் நிலை நிறுத்தி, எம்மை வந் தடைவாயாக என்று கூறி மறைந்தனர். உடனே, அங் கிருந்த யாவரும் ஆச்சரிய மடைந்தவர்க ளாய்ச், சங்கர முனிவரோடு விசுவேசுவர ராலயத்துட் சென்று தரிசித்து நிற்குங்கால், அச் சிவ லிங்கத்தினின்றும் "(சிவம் சத்தியம்), (சத்தியம் அத்வைதம்") என்று இரண்டு வாக்கியங்கள் எல்லோரும் கேட்க வெளிப்பட் டன, பின், அங் கிருந்து புறப்பட்டுப் பதரிகாச்சிரமம் சென்று, அங்கு மாணுக்கரை, நிறுத்தி, தா மொருவராகவே வியாசரைத் தேடிக் காணாது, நர நாராயணரைத் தெரிசித்த போது, அவர் நீர் பிரஹ்ம சூத்திரத்திற்கு வியாக்யானஞ் செய்த பின்னரே, வியாசர் வெளிப்படுவா ரென்று கூறி, "சந்நியாச தருமத்துப் பிரணவ ஜப மொன்றினாலேயே சுத்த சைவமாகாதபடி, ஹரி ஹர வபேதந் தோன்ற நும் மாணுக்கர் வழியில், நாராயண ஸ்மரணை செய்யும்படி நியமநஞ் செய்க'' என்பன முதலிய பல விஷயங்களைக் கூறி, தம் தவ வலியையும் கொடுத்து, வாழ்த்தினர். பின், சங்கர முனிவர், பதரிகாசிரமத்தி லிருந்து திரும்பி வந்து, தமது பன்னிரண்டா மாண்டிற் றுனே, உபநிஷதம், பிரஹ்ம, சூத்திரம், பகவற் கீதை, முதலியவற்றிற்குப் பாஷ்யமும்,மற்றும் அநேக அத்வைத தனி நூல்களு மியற் றித், தம் மாணுக்கருக் குணர்த்தி, ஆசிரிய பீடத்திருந்து விளங்கி வந்தனர். பின், பதும பாதர் முதலிய மாணுக்க ரோடு, காசிக்கு வருங்கால், இடை க்ஷேத்திரங்களில்

எதிர்த்த அநேக மத வாதியரை வென்று, தம் மாணுக்க ராக்கினர். (அவ் வாதியர் பெயரும் ஊரும் விரிந்த நூலிற் காண்க.) அவ் வவர் மதங்களையும், வேத விரோத மின்றி யன வாக நிறுத்தினர். பின், காசிப் பதியில் வந்து, அங்கு வந்த அநேக வாதியரையும், அத்வைதிக ளாக்கி, யாவரா னும் பூஜிக்கப் பெற்று. தம் மாணுக்கர்க்குப் பாஷ்ய மோதுவித் திருக்கையில், ஒரு நாள் வியாச முனிவர் விருத்த வேதிய ராக வந்து, அவர் பாஷ்யத்தில், அநேக சங்கை களைச் செய்ய, அவற்றிற் கெல்லாம் விஸ்தார மாய், விடை கூறி வந்தனர். இவ் வாறு எட்டு நாள் வரையில், தர்க்கம் நடந்தும், முடிவு பெற்ற தில்லை. அப் போது, பத்ம பாதர் தமது தியாநத்தால் இவரை வியாச ரென் றுணர்ந்து, வாதி னுல் பராமுகமா யிருக்கும் தம் மாசிரியருக்குச் சூசிப்பிக்க, அவரு முணர்ந்து, வியாசரை வணங்கினர். உடனே வியா சர், நிஜ வடிவத்தால் வெளிப்பட்டு, அவர் பாஷ்ய முழுவ தனையும் உற்று நோக்கி, அதில், தம் கருத்திற்குச் சிறிதும் மாறுபாடின்மை கண்டு வியந்து, சங்கர முனிவரைப் புகழ்ந்துச் செல்ல எத்தனிக்கையில், அவரிடம் அச் சங்கர முனிவர், "ஐயா, தாம் இங்குச் சிறிது நேரம் தாழ்க்கின், தம் சந்நிதியிற் ருனே இவ் வநித்த வுடம்பினை விட்டுக் கவலை யற்றவ னுவேன்" என, அதனை யுணர்ந்த வியாசர், ஐயா!, நினது கருத்தை யா னுணர்வேன்; கவலை யில்லை, நினக்குப் பதி னு ருண்டு நிறைவு பெறினும், மற்று மோர் பதினு ருண்டு, நீ இவ் வுலகி லிருந்து, திக் விஜயம் செய்து, மற்று முள்ள பல வாதியரையும் வென்று, அத்வைதத்தை நாட்டி, மற்றும், பல வைதிக மார்க்கங்களையும், நிலை நிறுத்தி, முப் பத் திரண்டு வய தான வுடனே, கைலைக்குச் சரீரத்தோடு சென்று சிவ சொரூப னுகுக" வென்று, ஆசீர்

வதித்துச் சென்றனர். வியாக்கியான சிம்மாசனாதீசுவரன் என்பன முதலிய நான்கு விருதுகளும், என்றும் விளங்கும் படி கொடுத்துச் சென்றனர். பின், சங்கரர், அங் கிருந்து பிரயாகை சென்று, நீராடித் தங்கி யிருக்கையில், அங்குப் பட்டபாத ரானவர், லோகாயதர், பௌத்தர் முதலியோரைக் குரவ ராகப் பெற்று, அவரிடம் அவர் மதங்களின் ரகசியங்களை யெல்லாம் தெரிந்து, அவர்களை, வாதில் வென்ற தோஷம் நீங்க, வைதிக விதிப்படி மரணாந்தப் பிராயச்சித்தம் செய்து கொள்ளத் துஷாக்கினியில் (உமித் தீயில்) பிரவேசிப்பதைக் கேட்டு, அத் தீயிற் படுத்திருக்கும் பட்ட பாதருக்கு வேண்டிய சமாதானஞ் செய்தும், அவர் தம் பாதியுடம்பு வெந் தமை பற்றித்,தமது பாஷ்யத்திற்கு விவரணஞ் செய்ய வேண்டு மென் றிருந்த, எனது அவா முற்றுப் பெற வில்லை. ஆனால், சர்வ வல்லமையுள்ள பிரஹ்மாவின் அவதார மாகிய மண்டன பண்டிதரையும், அவர் மனைவி யாகிய உபயபாரதியாரை(சரஸ்வதியை)யும், வென்று, அவரை மாணாக்க ராக்கிக் கொண்டால், உலகை வென்றது போலாம். அவர் இதற்கு விவரணஞ் செய்ய வல்ல ரென்று கூறித், தாம் அச் சங்கர முனிவரிடம் பிரஹ்மோபதேசம் பெற்று, அர்ச்சிராதி மார்க்க மாக சரீரத்தை விட்டனர். பின், அங் கிருந்து புறப்பட்டு, இரேவா நதிப் பக்கத் துள்ள மகிஷ பதி நகரின் உபவனத்தில், தம் மாணாக்கரை நிறுத்தித், தாம் தனியே விசுவரூப மண்டன பட்டர் கிருஹத்திற் சென்று, பார்க்குங்கால், கதவு மூடப் பட்டிருக்கத், தம் யோக வலியால், ஆகாய மார்க்க மாகப் அம் மனை முற்றத்தின்கண்ணே இழிந்த போது, அம் மண்டன பண்டிதர், வேத வியாசரையும், ஜைமினி முனிவரையும், தன் தவ வலியால் வருவித்துக் கொண்டு, பிதிர் கருமத்

துக்கு அவர்களை நிமந்திரணஞ் செய்து, பூஜித்துக் கொண்டிருந்தமையால், இச் சங்கரரைக் கோபித்து நோக்கி, "குதோ முண்டி"மொட்டை எங்கிருந்து வந்தது என்று கேட்டார். அதற்குச் சங்கரர், "எதுவரையில் மொட்டை" என்று பொருள் செய்து கொண்டு, "ஆகளான் முண்டி, கழுத்து வரை மொட்டை" என்றனர். இவ் வாறே மண்டன பண்டிதர் கூறியவற்றிற் கெல்லாம், சங்கரர் விதண்டையாகவே விடை கூறிவர, மண்டன மிசிரர், மேலு மேலும் வெகுண்டு கூறினர். அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த, வியாசரும், ஜைமினியும், "ஐய! விசுவரூப! நியம மாக விருக்கத் தக்க கரும காலத்தில், வீண் உரையாட லாகாது. இச் சந்நியாச சிரேஷ்டரின் தகுதி யறியா யாகலின், அவரை பிக்ஷையின் பொருட்டு நிமிந்தரணஞ் செய்" யெனத், தம் கோபத்தினை விட்டுச் சங்கரரைப் பூஜித்துப் பிக்ஷைக் கழைக்க, அவர் வாத பிக்ஷை கொடுக்க வேண்டு மென்றனர். அவ் வாறே, யுடன்பட்டு, அன்று பலி பிக்ஷை கொடுத்து, மறு நாள் முதல், உபய பாரதியாரை நடு வாக வைத்து, இருவருள் தோல்வி யடைந்த ஒருவர், மற் றொருவரின் ஆசிரமத்தை வகித்தலே, ஒட்ட(பந்தய)மாகக் கொண்டு, வாதம் செய்யப் புகுந்தனர். அப் போது, உபயபாரதியார், அவ் விருவர் கழுத்திலும் தோல்வி, வெற்றி,யறியு மாறு பூ மாலை யொன்று போட்டு, எவர் பூ மாலை கருகிற்றோ, அவர் தோல்வி யடைந்தவராவரென்று கூறினர். அவ் வாறே, இருவரு மொப்பிச் சங்கரர், "பிரஹ்மமே நித்தியம், ஜகத் தநித்யம், ஜீவன் பிரஹ்மமே, வே றல்லன்" என்றும், பண்டிதர், "சுவர்க்கமே மோக்ஷம், கர்மமே மோக்ஷ ஸாதந" மென்றும், அநேக யுக்திப் பிரமாணங்களால், பதி னாறு நாள் வரையில்

வாதித்தனர். கடைசியாக மண்டந பண்டிதர் பக்ஷம் தோல்வியுண்டாகவே, அவர் மாலை கருகிற்று. உடனே உபய பாரதியார் சங்கரரைத் திநமும் பிக்ஷைக் கழைப்பது போல், பண்டிதரையும், தோல்வி சூசநமாகப் பிக்ஷைக் கழைத்தனர். பின்னும், மண்டந பண்டிதர் தமக்கிருந்த அநேக சந்தேகங்களைச் சங்கரர் முன்னிலையில் வினவி ஒழித்துக் கொண்டனர்.

பின், பாரதியார், தம்மோடு வாதஞ் செய்து, ஜயித்தால் முழு வெற்றி யுண்டாகுமெனவே, சங்கரர் அவ்வாறே, அப் பெண்மணியோடு வாதஞ் செய்து வரவே, இவரை எவ் வழியிலும் வெல்லமுடியாமை கண்டு, இவர் பிரஹ்மசாரியா யிருந்து சந்நியாசம் பெற்றவ ராகலின், இவரைக் காம நூலில் வாதித்தால் வெல்லலா மென்று அந்நூலில் வினவ, அதற்குச் சங்கரர், அம்மே! ஒரு திங்கள் வரையும் கால வெல்லை தரின், பின்னர் உமது வினவுக்கு விடை யுண்டா மென்று அவரிடம் அநுமதி பெற்று, யோகப் பயிற்சியால், தமது சரீரத்தை விட்டுப் பிரிந்து, அதற்கு மாணுக்கரைக் காவல் வைத்து, அங்கு மரித்திருந்த அமரக வரசன் சரீரத்துட் புகுந்து, மூர்ச்சித் தெழுந்தாற் போற் காட்டி, அவன் மனைவியர் நூற்றுவரோடுங் காம கலையிற் பயின்று தேர்ந்தனர். அவ் வரச வுடம்போடு அமரக மென்னும் நூலினையும் செய்தனர். இவ் வாறு, நிகழுங்கால், அவ் விராஜ்யத்தில், முன்னிலும் எல்லா வளங்களும் பொருந்தியிருத்தல் கண்டு, அரச பத்நிகளும், மந்திரிமாரும், யாரோ, ஓர் மகா புருஷன், இவ் வரச சரீரத்தில் பிரவேசித்திருக்கலா மென்று கருதி, அந்த நாட்டினுள் எங்ஙாயினும் மூச் சற்ற வுடல் கிடந்தால், அதனை

யெரித்துவிடும்படி ஏவலாளர்களுக்குக் கட்டளை யிட்டார்கள். இதற்குள், சங்கர முநிவர் மாணுக்கர், தம் மாசிரியர், இது காறும் வராமையால், அவரை ஞாபகப் படுத்தி அழைத்து வர வேண்டு மென்று, இசைப் புலவர் வேடங் கொண்டு, அவரிடம் சென்று, தத்துவமஸிப் பொருளடங்கிய ஒரு செய்யுளைச் செய்து பாடவே, அதனைக் கேட்டுச் சங்கரர், இசைச் சுவையால் மயங்கி சோர்வுபட்டவர் போல், அவ் வரச யாக்கையை விட்டு வெளிவர, மாணுக்கரும் இசைப் புலவர் வேடம் விட்டு வெளி வந்தனர். இதற்குள், அரச னேவலாளர், அசைவற்றிருந்த அச் சங்கர யாக்கையைத் தீ மூட்டிச் சென்றனர் அவ்வளவில், சங்கரர் அதனுள் பிரவேசித்து, அஃது தெரியாத வண்ணம் லக்ஷ்மி நரசிங்க மூர்த்தியின் ஸ்தோத்திரம் செய்ய, அந் நர சிங்க மூர்த்தி பிரசந்ந ராய்த், தீயினின்று மெடுத்துத் தழுவிச் செல்லவே, இவர் திருமேனியும் திவ்ய ஸ்வருப மாயிற்று. அத் தருணம், மாணுக்கரும் வந்து சேர்ந்தனர். அவர்களை யழைத்துக் கொண்டு மண்டந பண்டிதர் சபைக்கு வந்தனர். அப் போது தமது ஆகர்ஷ சக்தியால், அச் சபையின் நடுவில், அமரக மென்னும் நூலை விழச் செய்தனர். அதனைக் கண்டு உபயபாரதியார் சங்கருக்கு முழு வெற்றியைக் கூறித், தாம் பிரஹ்ம லோகம் செல்ல முயலவே, சங்கரர் அம்மையாரைச் சுவாதீநஞ் செய்து, சிருங்க கிரியில், தம்மால் ஸ்தாபிக்கப்படும் இடத்தில், இலக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி என்னுத் மூ வடிவத்தோடு வீற்றிருந்தருளல் வேண்டு மென்று பிரார்த்திக்க, அவ் வாறே, அம்மையார் வர மளித்துச் சென்றனர். பின், மண்டந மிசிரர் சந்யாசம் பெற்று, சங்கர ருபதேசத்தால், பிரஹ்மாநுபூதிச் செல்வ ராய் விளங்கி, ஆசிரியரால்

ஸுரேசுவராசாரிய ரென்னும் யோக பட்டப் பெயர் பெற்று, அவர் மாணுக்கருட் டலைவ ராயினுர். பின், ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ சைலத்திற்குச் சென்று, அங்கு வந்த அநேக வாதியரை தம் மாணுக்கரைக் கொண்டே வெல்வித்து, அங் கிருக்கையில், காபாலிக மதத் தலைவ ஞகிய உக்கிர வைரவ னென்பவன், இவரை எவ் வாற்ருனும் வெல்ல முடியா தெனக் கருதி, அவர் மாணுக்கருள் ளொருவரைப் போல் நடித்துச், சமயம் பார்த்திருந்தான். ஒரு நாள் தனித் திருக்கும் சங்கரரிடம் வந்து துதித்து, ஐயா! தாம் தேகாபி மாநம் முற்றும் விட்ட கருணு மூர்த்தி யாகலின், ஓர் வரம் கொடுத்தல் வேண்டும். அதாவது, யான் 12 வருஷம் வரைப் பைரவ பூஜை செய்தேன். அவர் என் முன் ருேன்றி உலகாளும் பே ரரசன் றலையை யாவது, முற்று முணர்ந்த பிரஹ்ம ஞாநி தலையை யாவது, நரபலி கொடுத் தால் உன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்வே னென்ருர். அத் தகைய வரசன் கிடைக்க வில்லை. பிரஹ்ம ஞாநியும் தம்மைத் தவிர வேறு கிடைப்பது அரி தாகலின், இரந்தே னென, சங்கரரும் உலகம் பொய் யெனக் கண்டவ ராக லின், அதற் குடன் பட்டார். படவே காபாலிகன் வாள் சூலங் கொண்டு விரைந்து அருகே சென்ருன். அச் சமயம் அங்கு திடீ ரென்று வந்த சநந்தநாசாரியர், கடுங் கோபங் கொண்டு, ஹுங்கார சப்தஞ் செய்து, நரசிங்கா வென்ற வுடனே, உக்கிர நரசிங்க மூர்த்தி வெளிப்பட்டு, அவ் வைர வனைக் கிழித் தெறிந்தான். பின், கோகரண க்ஷேத்திரத்திற் சென்று, அங்கு வந் தெதிர்த்த, சைவ விசிஷ்டாத்வைத பாஷ்ய கர்த்தா வான நீல கண்டரை வாதில் வென்று, பின், மார்க்கத்தில் கொல் லூர் க்ஷேத்திரத்தில், இறந்து கிடந்த, பிராஹ்மணக் குழந்தையைக் கருணையினுல் எழுப்பி, பின்,

ஸ்ரீவல்லிபுர மென்னும் அகரத்தில் 2000 வேதியர்க்குத் தலைவரான பிரபாகரபட்டர் தமது பிள்ளை பிறப்பு முதல் இப்போது எட்டாண்டு வரைப் பேசாது ஊமையா யிருத்தலை இம் மகானிடம் தெரிவிக்க, அச் சங்கரர், அம் மகவைக் கருணையால் நோக்கி நீ யார்? ஏன் ஜடன் போ லிருக்கின்றாய் என, அச் சிறுவன் யான் ஜட னல்லன், ஜடமும் என் சந்நிதியின் னடைபெறு மென்னும் தனது அத்வைத நிலையை யறிவிக்கும் 12 செய்யுட்களைக் கூறவே, சங்கரர் அவர் சிரத்திற் கையை வைத்து, ஹஸ்தாமலக ரென்று பெய ரிட்டனர். பிதா மகிழ்ந்து இவர் தமக்கே யுரியவ னென்று தம் புதல்வனை அவரிடம் விட்டு வணங்கிச் சென்றனர். பின், அம் மைந்தனை யழைத்துக் கொண்டு மாணாக்கரோடு சிருங்ககிரிக்குச் சென்று, அது, துங்கபத்ரா நதிக் கரையில், புண்ணிய க்ஷேத்திரமா யிருப்பது கண்டு, அங்கோ ராலயம் நிருமாணஞ் செய்து, அங்கு முன் தாம் கருதிய படி சரஸ்வதியை வர வழைத்து ஸ்தாபநஞ் செய்து, மட மொன்றியற்றி, அதில் "சாரதா பீடம்", "வியாக்யாந சிங்காசநம்", "பாரதீச ம்பிரதாயம்" என்பவற்றை ஸ்தாபித்து, அங்குத் தமது தலை மாணாக்க ராகிய, ஸுரேசுவராசாரியாரை, மரபு விளங்கும் பொருட்டு, இவ் வுலகத்துட் சிறந்த ஆசார்யாபிஷேகஞ் செய்தனர். பின் மிகச் சாந்த ராய் ஓர் மாணாக்கர் சங்கரரை நிழல் போல் பற்றித் தொண்டு செய்து வந்தனர் எப்போதும் ஆநந்தத்தோடு யார் எது கூறினும் சலியாது மலை போன்ற பெருமையோ டிருந்தனர். அதனால், ஆசிரியர் அவரை, ஆநந்தகிரி யென்று பெயரிட் டழைத்தனர். ஒரு நாள் அவர் ஆசிரிய ராடையைச் சுத்தி செய்து வரப் போனவர், வரத் தாமதிக்கவே, அவர் வந்த பின் பாடம் நடத்துவோம் என்று சங்கரர்

கூற, மற்றையவர் அவர் தொண்டு செய்பவர், இப் பாடத் தா லவர்க் காவ தென் னென்று கூறினர். கூறவே, இவர் கட்கு குரு பக்தியின் பெருமை விளங்க வேண்டு மென்று கருதி, சங்கரர் தமது மநத்தால் வித்தியா தாநஞ் செய்யவே, ஆநந்தகிரியார், அங் கிருந்து வரும்போதே, "தோடகம்" என்னும் விருத்தத்தால், குரு ஸ்துதி செய்து கொண்டு வந் தனர். அது கேட்டு யெல்லோரும் ஆச்சரிய மடைந்தனர். அது முதல் அவருக்கு தோடகாசாரிய ரென்று மற் றொரு பெய ராம். இவரும், ஓர் சிறந்த மாணாக்க ராயினர். அப் போது சங்கர முநிவர் சிஷ்யர் பல் லாயிரவருள், ஸுரேசு வரர், பத்ம பாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்னும் நால்வருமே, நாற் றிசையினையும் வெல்லு மாற்ற லுடை யவ ராய் விளங்கினர். அவர்களுள், ஸுரேசுவரர், ஆசாரி யர் ஆஞ்ஞைப்படி சாரீரக பாஷ்யத்திற்கு வார்த்திக மென் னும ஓ ருரை எழுத ஆரம்பித்த போது, பலர் அசூயைப் பட்டமையால் நிறுத்தப்பட்டது.

பதும பாதரும் 5 பாதங்கட்கு உரை யெழுதி ஆசிரி யரிடம் படித்துக் காட்டினர். இவர் தாம் ஆசிரியர் ஆணையின்படி வார்த்திக வுரை யெழுதுவதில், அசூயை கொண்டிருக்கின்றார் என்பதை யுணர்ந்த சுரேசுவரர் அவ் வுரை முற்றுப் பெறா வண்ணம் சாபங் கொடுத்தனர். அது கேட்ட பதும பாதர், அச் சாபம் நீங்கு மாறு, ஆசிரி யர் உத்தரவு பெற்று, தீர்த்த யாத்திரை யாகப் புறப்பட்டு, பல க்ஷேத்திரங்களும் சென்று, ஸ்ரீ ரங்கம் வந்து அநேக மீமாஞ்சகர், வைஷ்ணவர்களை வாதத்திற் றோல்வி கண்டு பிரபாகரர் மாணாக்கரும், பல் லாயிரம் மாணாக்கர்க்காசிரி யரும், பூர்வ மீமாம்சா நூ லபிமாநியும், சிறந்த பண்டிதரு

மாகிய தமது அம்மானிடம் தமது பாஷிய வுரையைக் காட்ட, அவர் தம் மதத்திற்கு மறுப் புண்டானது கொண்டு, துன்புற்றவ ராயினும், வெளிக் காட்டாது நூலைப் புகழ்ந்தார். பின், பதும பாதர், தமது நூல்களை யெல்லாம் அவர் மனையில் வைத்து, இராமேசுவர யாத் திரை சென்று திரும்பி வருவதற்குள் தமது மனையோடு, அவர் நூல்களும், பற்றி யெரியும்படி நெருப்பு வைத்து விட்டனர். இராமேசுவர யாத்திரையினின்று திரும்பி வந்த பத்ம பாதர், நூல்கள் எரிந்தமை கேட்டு, மிக வருத்த முற்று, ஆசாரியரிடஞ் சென்று, தெரிவித்த காலத்து, அவர் தாம் முன்னே கேட்டிருந்த வண்ணமே பஞ்ச பாதிகை யென்னும் நூலினைக் கூறி யெழுதுவித்தனர். பின் ஸுரேசுவரரும் ஆசாரியர் கட்டளைப்படி சில பாஷியங் கட்கு வார்த்திகமும், ஸ்வதந்திர மாகச் சில நூல்களும், செய்து, ஆசாரியருக் கர்ப்பித்தனர். ஆநந்தகிரியார் முதலி யோர், பாஷியத்திற்கு உரை முதலியவற்றைச் செய்தனர். பத்ம பாதர் விஜய டிண்டிமம் என்னும் மற்றோர் உரையும் எழுதி குரு தக்ஷிணை யாகக் கொடுத்தார். அவற்றை யெல் லாம் ஆசிரியர் அங்கீகரியாது, "பஞ்சபாதிகை யொன்றே போதும்" என்று கட்டளையிட்டனர்.

பின், சங்கரர் திக் விஜயத்திற்குச் சென்று, அங்கங் குள்ள பல மத வாதியையும் வாதில் வென்று, எங்குங் மதச் சண்டை ஒழியச் செய்து, அத்வைதத்தை நிலைநிறுத்தி னர். (அவர் ஆங் காங்கு சென்று மதவாதியரோடு வாதஞ் செய்த விஷயங்களைக் காண விரும்புவோர் ஆநந்தகிரியினாற் செய்யப்பட்ட சங்கர திக் விஜய முதலிய நூல்களிற் காண்க.) சங்கரர் கங்கைக் கரையில், விசாரஞ் செய்து

கொண்டிருக்கையில், அபிநவகுப்த னென்னும் மந்திர சித்தி யுடையவன், தான் வாதில் தோல்வி யடைந்தமையால் சங்கரர் மேல் ஏவற் கருமஞ் செய்ய, அது, அவர் ஆசநத் தைப் பற்றி, மூல ரோகத்தை யுண்டுபண்ணியது. அது தெரிந்த பதும பாதர், அவ் வேவலைத் திருப்பிவிட, அத் தேவதை அபிநவ குப்தனது உடம்பைப் பற்றி விரைவிற் கொன்றுவிட்டது. இதுவும் அவருக் கோர் லீலையே. மற் றொரு நாள், சங்கரர் யோகப் பயிற்சியால் உத்தர குரு, சித்த புர முதலிய நாட்டிற்குச் சென்று, ஆங் காங்குப் பிரஹ்ம வித்தையை நாட்டி, ஸ்ரீ கைலாசம் சென்று ஸ்ரீ சந்திரமௌலீசுவர லிங்க முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு வந்து, கிம்புருட வருஷத்தில் காத்திருந்த பிரஹ்ம ராக்ஷதனது பிரஹ்ம ஹத்தியை யொழிப்பித்து, அப் பெரும் பூதத்தினைச் சீடர் மடங்களைக் காக்கும்படி கலி யுகம் நான்கு லக்ஷ வருடம் வரையில், பணிவிடையி லிருத்தி, பின், சுவாலா முகி முதலிய ஸ்தலங்களி லிருந்த வர்கட் கநுக்ரஹஞ் செய்து, அநேகரை சன்மார்க்கத்திற் செலுத்திக், கங்கைக் கரை யடைந்தார். பின் னொரு நாள் பூகோள உண்மைகளை வினவிய பதும பாதரையும், அழைத்துக் கொண்டு வான் வழிச் சென்று, மேரு சிகரம் துருவ நிலை முதலியவற்றைத் தெரிவித்து, பூ கோள, க கோள சாஸ்திர ரகசிய முற்று மறிவித்து, மீட்டும் கங் கைக் கரை சேர்ந்தார்.

மற் றொரு நாள், சங்கரர் பரமாசிரிய ராகிய கௌட பாதர், இவரிடம் வந்து மாண்டூக்ய வுபநிஷத பாஷ்யத்தினை யும், தமது காரிகைக் கெழுதிய பாஷ்யத்தினையும், கேட்டு, இவரை வியந்து ஆசீர்வதித்துச் சென்றார். மற் றொரு நாள்,

சங்கரர் காசுமீர மண்டலத்து, ஸ்ரீ நகர நாட்டின்கண்ணுள்ள சரஸ்வதியின் சர்வஜ்ஞ பீடத்தி லேற முயற்சித்தார். தேவ ரிஷிகளால் அமைக்கப்பட்ட அப் பீடத்திற்கு, நான்கு வாயில்க ளுண்டு. அந் நான்கு வாயில்களிலும் வித்தியாபிமானி தேவதைகள் காவல் செய்திருப்பர். எல்லாமுணர்ந்தவன், அக் கதவைத் திறந்து உள்ளே சென்று, ஸர்வஜ்ஞ சிங்காசநத் துட்கார்ந்தால், அவன் எல்லாக் கல்விநலமும் பெறுவன். அத் தன்மைய பீடத்தின் மூன்று வாயில்கள் முன்னரே திறக்கப்பட்டன. தெற்கு வாயில் மாத்திரம் சர்வஜ்ஞர் ஒருவரும் வராமையினால், மூடப்பட்டிருந்தது. சங்கரர் அவ் வாயிலின் அபிமானி தேவதைகளின் வினுக்கட்கு விடை கூறி, கதவுந் திறந்து, சர்வஜ்ஞ பீடத் திருந்தனர். அப் போது, சர்வ மண்டலாசாரியனென்னும் விரு துடையவ ரானுர். பின், அங் கிருந்து கேதாரத்தை யடைந்து, அங் கிருந்தவர் யாவருக்கும் பிரஹ்மோபதேசஞ் செய்து, அங் குள்ள குளிர் வாதை நீங்க, லோகோபகார மாகப் பரமேசுவர கிருபையால், அங்கு, வெந் நீர் யாற்றினைத் தோற்றுவித்தனர். அஃது இன்றும் பிரசித்தமா யுளது. பின், அத்வைத வித்யா மரபு காக்கும்படி பதரிகாச்சிரமம், துவாரகை, ஜகந் நாதம் என்னும் மூன்று தலங்களிலும், மட மமைத்து, அங்கு முறையே, ஆநந்த கிரி, பதும பாதர், ஹஸ்தாமலகர் இவர்களை அபிடேகஞ் செய்து, உலக குரவ ராக்கினுர். அப் போது 32 வயதும் நிரம்பியது. சங்கரர் தத்தாத்திரேயர் குகை வாயிலில் மாணுக்க ரனைவருக்கும் விடை கொடுத்துத், தாம் அக் குகையிற் சிவ யோக சமாதியி லிருந்து, ஞாநாநந்த திவ்ய லிங்க சரீரத்தை யோக சக்தியால், சிதாகாசத்துட் கலக்கச்

செய்து, ஆகாயத் தெழும்பி, ரிஷபாருட ராய்த் தேவ ரெல்லாம் புகழக் கைலாயத்திற்கு விஜயஞ் செய்தார்.

இப் புண்ய வடிவ மான குரு சரித்திரத்தைப் படிப்பவர், கேட்பவர், பூஜிப்பவர். சிவ கிருபையால், இம்மையில், இஷ்ட சித்தியும், மறுமையில் மோக்ஷமும், எய்துவர்.

எல்லாம் வல்ல குரவன் வாழ்க.

ஸ்ரீ ஜகத் குரு
ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகள் சரித்திரம்
முற்றுப் பெற்றது.

ஸ்ரீ சங்கராச்சாரியார் இயற்றிய நூல்களாவன:-

1. பிரஹ்ம ஸூத்ர பாஷ்யம்.
2. பகவத் கீதா பாஷ்யம்.
3. ஈஸாவாஸ்யோபநிஷத் பாஷ்யம்.
4. கேநோபநிஷத் பாஷ்யம்.
5. கடோபநிஷத் பாஷ்யம்.
6. பிரசிந உபநிஷத் பாஷ்யம்.
7. முண்டகோபநிஷத் பாஷ்யம்.
8. ஐதரேய உபநிஷத் பாஷ்யம்.
9. தைத்திரீயோபநிஷத் பாஷ்யம்.
10. மாண்டூக்யோபநிஷத் பாஷ்யம்.
11. சாந்தோக்யோபநிஷத் பாஷ்யம்,
12. பிரஹதாரண்யகோபநிஷத் பாஷ்யம்.
13. நரசிம்ம பூர்வதாபநீய, உத்தராதாபநீய, உபநிஷத் [பாஷ்யம்.
14. விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 8291
R65:31

15. ஜாந்சுஜாதீய பாஷ்யம் (சு 149)
16. லலிதா திரி சதீ பாஷ்யம்
17. அஸ்தாமலக பாஷ்யம் (சு 12)
1. உபதேச ஸஹஸ்ரீ (சு. 671) வசநம்.
2. ஸர்வ வேதாந்த சித்தாந்த சார சங்கிரகம் (சு 1006).
3. ஆத்ம போதம் (சு. 68)
4, அபரோக்ஷாநுபூதி (சு 144)
5. விவேக சூடாமணி (சு 581)
6. வாக்ய விருத்தி (சு 53)
7. ஸ்வாத்ம நிருபணம் (சு 154)
8. சத சுலோகி (சு 101)
9. தச சுலோகி (சு 10)
10. பிரபோத சுதாகரம் (சு 257)
11. ஸ்வாத்ம பிரகாசிகா (சு 68)
12. மநிஷா பஞ்சகம் (சு 5.)
13. அத்வைத பஞ்ச ரத்நம் (சு 5)
14. நிர்வாண ஷட்கம் (சு 6)
15. அத்வைத அநுபூதி (சு 84)
16. பிரஹ்ம அநுசிந்தநம் (சு 29) மகாவாக்ய சித்தாந்த
17. பிரசிந உத்தர ரத்நமாலிகா (சு 67) ஸ்தோத்ரம்)
18, சதாசார அநுசந்தாநம் (சு 55)
19. யோக தாராவளி (சு 29)
20. உபதேச பஞ்சகம் (சு 5)
21. தந்யாஷ்டகம் (சு 8)
22. ஜீவந் முக்தாநந்த லஹறி (சு 17)
23. அநாத்ம ஸ்ரீ விஹர்ஹணப் பிரகரணம் (சு 18)
24. ஸ்வரூபாநுசந்தாநாஷ்டகம் (சு 9)
(விக்ஞாநநௌகா)
25. யதி பஞ்சகம (கௌபீந பஞ்சகம்) (சு 5)

26. பஞ்சீகரணம்-வசநம்
27. தத்வ உபதேசம் (சு 87)
28. ஏக சுலோகி (சு 1)
29. மாயா பஞ்சகம் (சு 5)
30. பிரௌடாநுபூதி (சு 17)
31. பிரஹ்ம நாமாவலி மாலா (சு 21)
32. லகு வாக்கிய விருத்தி (சு 18)
33. நிர்வாண மஞ்சரி (சு 12)
34. கணேச பஞ்ச ரத்நம் (சு 6)
35. கணேச புஜங்கம் (சு 9)
36. சுப்பிரமணிய புஜங்கம் (சு 33)
37. சிவ புஜங்கம் (சு 40)
38. சிவாநந்த லஹரி (சு 100)
39. சிவ பாதாதி கேசாந்த வர்ணந ஸ்தோத்ரம் (சு 41)
40. சிவ கேசாதி பாதாந்த வர்ணந ஸ்தோத்ரம் (சு 29)
41 வேத சார சிவ ஸ்தோத்ரம் (சு 11)
42. சிவ அபராத க்ஷமாபண ஸ்தோத்ரம் (சு 15)
43. ஸ்வர்ண மாலா ஸ்துதி (சு 50)
44. தச ஸ்லோகி ஸ்துதி (சு 10)
45. தக்ஷிணா மூர்த்தி வர்ண மாலா ஸ்தோத்ரம் (சு 25)
46. தக்ஷிணா மூர்த்தி அஷ்டகம் (சு 10)
47. மிருத்யுஞ் ஜெய மாநசிக பூஜா ஸ்தோத்ரம் (சு 46)
48. சிவ நாமாவலி அஷ்டகம் (சு 9)
49. சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம் (சு. 5)
50. உமா மகேசுவர ஸ்தோத்ரம் (சு 13)
51. சௌந்தரிய லஹரி (சு 100)
52. தேவி புஜங்க ஸ்தோத்ரம் (சு 28)
53. ஆநந்த லஹரி (சு 20)

54. திரிபுர சுந்தரி வேத பாத ஸ்தோத்ரம்(சு 110)
55. திரிபுர சுந்தரி மானஸிக பூஜா ஸ்தோத்ரம் (சு 127)
56. தேவீ சதுஸ்ஷஷ்டி உபசார பூஜா ஸ்தோத்ரம் (சு 72)
57. திரிபுர சுந்தரி அஷ்டகம் (சு 8)
58. லலிதா பஞ்ச ரத்நம் (சு 6)
59. கல்யாண விருஷ்டி ஸ்தவம் (சு ?6)
60. நவ ரத்ந மாலிகா (சு 10)
61. மந்திர மாதிருகா புஷ்ப மாலா ஸ்தவம் (சு I7)
62. கௌரீ தசகம் (சு 11)
63. பவாநீ புஜங்கம் (சு 17)
64. ஹநுமத் பஞ்ச ரத்நம் (சு 6)
65. ஸ்ரீ ராம புஜங்க பிரபாத ஸ்தோத்ரம் (சு 29)
66. லக்ஷ்மீ நிருஸிஹ்ம பஞ்ச ரத்நம் (சு 5)
67. லக்ஷ்மீ நிருஸிஹ்ம கருணாரச ஸ்தோத்ரம் (சு 17)
68- விஷ்ணு புஜங்க பிரபாத ஸ்தோத்ரம் (சு 14)
69. விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் (சு 52)
70. பாண்டு ரங்காஷ்டகம் (சு 9)
71. அச்யுதாஷ்டகம் (சு 9)
72. கிருஷ்ணாஷ்டகம் (சு 8)
73. ஹரி ஸ்துதி (ஹரிமீடே) (சு 43)
74. கோவிந்தாஷ்டகம் (சு
75. பகவந் மாநஸ பூஜா (சு 10)
76. மோஹ முத்கர (சர்பட த்வாதச பஞ்சரிகா ஸ்தோத்ரம் (சு 31)
77. கநக தாரா ஸ்தோத்ரம் (சு 18)
78. அந்ந பூர்ணாஷ்டகம் (சு 12)
79. மீநாக்ஷி பஞ்ச ரத்நம் (சு 5)
80. மீநாக்ஷி ஸ்தோத்ரம் (சு 8)

81. தக்ஷிணு மூர்த்தி ஸ்தோத்ரம் (சு 19)
82. கால பைரவாஷ்டகம் (சு 9)
83. நர்மதாஷ்டகம் (சு 9)
84. யமுனாஷ்டகம் (சு 8)
85. யமுனாஷ்டகம் (சு 9)
86. கங்காஷ்டகம் (சு 9)
87. மணி கர்ணிகாஷ்டகம் (சு 9)
88. நிர்க்குண மானஸ பூஜா (சு 33) (பரா பூஜா, ஆத்ம பூஜா)
89. பிராத ஸ்மரண ஸ்தோத்ரம் (சு 4)
90. ஜகந் நாத அஷ்டகம் (சு 8)
91. ஷட் பதி ஸ்தோத்ரம் (சு 7)
92. பிரமர அம்பா அஷ்டகம் (சு 9)
93. சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்திர மாலா ஸ்தோத்ரம் (சு 28)
94. த்வா தச லிங்க ஸ்தோத்ரம் (சு 13)
95. அர்த்த நாரீசுவர ஸ்தோத்ரம் (சு 9)
96. சாரதா புஜங்கப் பிரயாதாஷ்டகம் (சு 8)
97. குரு அஷ்டகம் (சு 9)
98. காசி பஞ்சகம் (சு 5)
99. பிரபஞ்ச சாரம் 33 படலம் (சு 2402)

சுலோகம் 6700ம், வசந நூல்களும், செய்தனர்.

வேறு நூல் செய்த தாகக் கூறுவர்.

1. சுவேதாசுவதர உபநிஷத் பாஷ்யம்
2. ஆபத்ஸ்தம்பீய அத்யாத்ம படலம் சூத்ரம் (சு 14)
3. ஆத்மாநாத்ம விவேசநம் (விவேகம்) வசநம்
4. பால போதிநி வசநம்.
5. அக்ஷர மாலிகா ஸ்தோத்ரம் (சு)
6. தத்வ போதம் வசநம்.

7. வாக்ய சுதா
8. அத்யாத்ம வித்யா உபதேச விதி
9. பஞ்ச ரத்ந காரிகா
10. சர்வ சித்தாந்த சங்கிரகம்.

1. பாஷ்யம் 17, 2. வேதாந்தம் 34, 3. சிவ ஸ்தோத்ரம் 14, 4. விஷ்ணு ஸ்தோத்ரம் 11, 5. தேவி ஸ்தோத்ரம் 21, 6. நதி ஸ்தோத்ரம் 5, 7. கணேசர் ஸ்தோத்ரம் 2, 8. சுப்ரமணியர் ஸ்தோத்ரம் 1, 9. ஹநுமார் ஸ்தோத்ரம் 1, 10. குரு ஸ்தோத்ரம் 1, 11. ஊர் ஸ்தோத்ரம் 1, 12. கால பைரவர் ஸ்தோத்ரம் 1 ஆக 109.

---

2. ஸ்ரீ சுரேசுவராசாரியரது சரிதம்.

கருவலி களையும் இபமுகன் தன்னைக்
கதிர்வடி வேலனை அடுத்தோர்,
இருமல ஆரி ஈசுரன் தன்னை
இணையில்கா மாக்ஷியைச் சிறந்த,
திருஉரு துங்க பத்திரை புரக்கும்
சிருங்கைவாழ் செகத்குரு மடத்துப்,
பரன்உரு வான சுரேசுவரா சானற்
பாததா மரையினைப் பணிவாம்.

நர்மதை யென்னும் நதத்தின் தீரத்தில், மாகிஷ் மதி என்னும் நகர மொன் றுண்டு. அதில் ஹிம மித்ர ரென்னும் பிராஹ்மணர் ஒருவ ரிருந்தார். அவருக்குக் குண நல மமைந்த ஒரு சத் புத்ரன் ஜநந மாயினன். அச் சுபுத்ர னுக்கு விசுவ ரூப ரென்னுந் திரு நாமஞ் சூட்டி, இளை மைப் பருவத்திலேயே அந்தண நெறி வழுவாது சர்வ

சமஸ்காரங்களையும் பிதாச் செய்வித்தார். விசுவ ரூபரும் அதி பால்யத்திலேயே, சுருதி ஸ்மிருதி, இதிகாச முதலிய சர்வ சாஸ்திரங்களிலும், பாண்டித்ய முடையவ ராகித், தமது புகழ் பாரெலாம் பரவி வரு மாறு பிரகாசித்து வந்தார். இவர், புவிக்கு மண்டநமா யிருந்ததனுல், இவருக்கு மண்டந மிசிரர் என்னும் காரணப் பெயர் வந்தது. விசுவ ரூபர் யௌவநப் பருவ மடைந்த காலை, அவ ருடைய தகப்பனுர், அவருக்கு விவாகம் செய்விக்கக் கருதி, சோண பத்திரை யென்னும் நதி தீரத்தின்கண் வாசஞ் செய்யும் விஷ்ணு மித்ர ரென்னும் பிராஹ்மண ருடைய, ரூப லாவண்யமும், நற் குண நற் செய்கையும், கல்வித் திறமையும், வாய்ந்த சரச வாணி என்னும் பெண் ணணங்கை விவாஹத்திற்கு நிச்சயஞ் செய்தனர். அவ் வாறே, விசுவ ரூபருக்கும், சரச வாணிக்கும், சுப தினத்தில், வதுவை முடிந்தது. பின்னர், தம்பதிகள் மாகிஷ்மதி நகரஞ் சென்று, கிருஹஸ்தாசிரம தர்மத்தை நெறி தவரு து நடாத்தி வந்தனர். விசுவ ரூபர், இல் லற நெறி வழாது நடந்து வருங்கால், அவ ருடைய பெற்றோர்கள் கால கதி யடைந்தனர். மண்டந மிசிரர், ஒருகால், தமது பெற்றோருக்குச் சிராத்தம் கொடுக்க நேர்ந்த போது, பூர்வ மீமாஞ்சையின் கர்த்தா வாகிய ஜைமினி மகரிஷியையும், உத்தர மீமாம்சையின் கர்த்தா வாகிய வேத வியாச பகவானையும், முறையே, விசுவே தேவர் ஸ்தாநத்திலும், பிதிரு ஸ்தாநத்திலும்: நிமந்தரணத்திற்கு வரித்தார். அந்தத் தினத்தில், அவர் தமது வீட்டின் வாயிற் கதவைத் தா ளிட்டு, அதி சிரத்தை யுடன் சிராத்தத்தை நடத்தி வந்தார்.

மண்டந மிசிரர், கல்வியிலும், ஒழுக்கத்திலும், மேம்பட்டவ ரென்று ஸ்ரீ பட்ட பாதாச்சாரியர், ஸ்ரீ சங்கர

பூஜ்ய பகவத் பாதாசாரியருக்குச் சொல்லுதலும், அவர், மண்டநமிசிரரை வாதில் வென்று, அவரைத் தமது சிஷ்யராக்கக் கருதி, மாஹிஷ்மதி நகரத்தில், மண்டந மிசிரரின் கிருகத்தை நாடிச் சென்றார். அங்குக் கிருகத்தின் வாயில் மூடப்பட்டிருப்பதைக் கண்டு, யோக மகிமையால், கிருகத்தின் மேன் மாடி வாயிலாக உள்ளே சென்றார். அப்போது, மண்டந மிசிரர், விசுவே தேவர்களையும், பிதிருக்களையும், பாத்யாதிகளால் நல்வரவு கூர்ந்து, பிரத்யக்ஷ மகா விஷ்ணு ஸ்தாநத்தில், தர்ப்பையை வைத்து, அதில் பாத்யத்தைச் சமர்ப்பிக்குந் தருணத்தில், அவ் விடத்தில், இரண்டு பாதங்களிருக்கக் கண்டு, நிமிர்ந்து பார்த்தார், சிராத்த காலத்தில், சந்நியாசிகளைக் காண்பது கூடாதென்று கர்ம காண்டத்திற் கூறியிருப்பதனால், அங்குத் தோன்றிய சந்நியாசியின் மீது மிகு கோபங் கொண்டு, அவரைப் பல வாருகத் தூஷித்தனர். இவற்றிற் கெல்லாம் ஸ்ரீ சங்கரர் சாவதாநமாகச் சாந்த மொழிகளால், விடை பகர்ந்தனர், இவரது சாந்த மொழிகள், மண்டந மிசுரருக்கு, அதிக த்வேஷத்தை யுண்டாக்கின. இவ் விருவருக்கும் நடக்கும் வாக்கு வாதங்களை ஜைமிநி பகவான், கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனர். ஆனல், வியாச பகவான், ஸ்ரீ சங்கரரது மகிமையையும், அவரது அபார சக்தியையும், எடுத்துக் கூறி, அவரை ஸ்ரீ மகா விஷ்ணுவே பிரத்தியக்ஷமாக வந்தனரென்று கருதிப், பிரத்யக்ஷ மகாவிஷ்ணு ஸ்தாநத்தில், நிமந்தரணத்திற்கு வரிக்குமாறு மண்டந மிசிரருக்கு ஆக்ஞாபித்தனர். அதனல், மண்டந மிசிரர் சாந்தி பெற்று, ஸ்ரீ சங்கரரை நிமந்தரணத்திற் கழைத்தனர். ஸ்ரீ சங்கரர், தமக்கு வாத பிக்ஷை வேண்டுமென்று கேட்டனர், சிராத்தம் முடிந்த பிறகு வாதஞ் செய்யச் சம்மதித்தனர்.

சிராத்தம் முடிந்த பின்னர் மண்டனாசாரியர் வாதத்திற்கு மத்யஸ்த ராக, ஸ்ரீ வேத வியாசரையும், ஜைமினி பகவானையு மிருக்க வேண்டிக் கொண்டனர். அவர்கள் மண்டன மிசிரரின் பத்நியும், சர்வ கலா வல்லியு மாகிய, சரச வாணியை மத்யஸ்த மாக வைத்து வாதத்தை நடத்த லாம் என்று கூறி விடை பெற்றுப் போயினர்.

சிராத்தம் முடிந்த மறு தினம், ஸ்ரீ மண்டனாசாரியரும், ஸ்ரீ சங்கராசாரியரும், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, வாதத்திற்கு தயா ராயினர் சரச வாணி மத்திய ஸ்த மாக வந்திருக்க முடியாதது கருதி, இருவர் கழுத்தி லும், இரண்டு பூ மாலைகளை மந்திரித்துச் சூட்டி, "இப் பூ மாலைகள் வாடும் இயல் புடையன வல்ல, அதனால், யார் கழுத்திற் சூட்டப்பட்ட பூ மாலை, வதங்கி உலர்ந்துவிடு கின்றதோ, அப் போது அவருக்குத் தோல்வி யுண்டான தென் றுணர லாம்" என்று கூறித், தமக் குரிய மனைத் தொழிலைக் கவனித்து வந்தனர். இவ் வாதத்தில், யார் தோல்வி யடைந்தாலும், தோல்வி யடைந்தவர், வெற்றி பெற்றோ ருடைய ஆசிரமத்தை மேற் கொள்வது, வாத நியமமா மென்று தீர்மானித்து, வாதம் ஆரம்பிக்கப்பட் டது. சிவாவதார ரான ஸ்ரீ சங்கரரும், பிரஹ்மாவதார மான மண்டனாசாரியரும், வாதிப் பிரதிவாதிக ளாகவும், சரஸ் வதி தேவியே, வாதத்திற்கு மத்தியஸ்த மாகவும், அமர்ந் துள்ள தருக்க வேள்வி, சத்திய லோகத் துள்ள பிரஹ்ம சபையே போன் றிருந்தது, இச் சபைக்கண், ஸ்ரீ சங்கரா சாரியரும், ஸ்ரீ மண்டனாசாரியரும், தருக்கஞ் செய்ய ஆரம் பஞ் செய்தனர். முதற்கண் ஸ்ரீ சங்கராசாரியார், ஜீவேசு வரர்க ளொன்றே யென்னும் அத்வைத சித்தாந்தத்தைப்

பிரதிஞ்ஞை செய்தனர். ஸ்ரீ மண்டனாசாரியர், கருமத்தானே மோக்ஷஞ் சித்தியாகின்ற தென்றும், மக்களாயுள்ளார் யாவரும்,தமது ஜீவிய தசையில்,கருமத்தையே கடைபோகச் செய்ய வேண்டுமென்றும், பிரதிஞ்ஞை செய்தார். இப் பிரதிஞ்ஞைகளைச் சாதிக்கும் நிமித்தம் இருவரும் தமக்குச் சாதகமான யுக்திகளையும், சுருதிகளையுங் கொண்டு நெடுநாள் வாதித்து வந்தனர். இங்ஙனம், நிகழ்ந்து வருங்கால், ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ மண்டனமிசிரர் தொடுத்த ஒவ்வொரு கட்சியையும் பூர்வ பட்சஞ் செய்து, தமது சித்தாந்தத்தை நிலைநாட்டி வந்தனர். நித்திய கர்மாநுஷ்டான காலங்கள் தவிர,ஏனைய காலங்களில் ஓய்வு இல்லாமல்,அபூர்வமான தருக்கம் இருவருக்கும் நடைபெற்று வந்தது. பூர்வ மீமாம்ஸா கர்த்தரான ஜெயமினி பகவானே வியப்பெய்துமாறு பூர்வ மீமாம்ஸைக்கு அபூர்வமான அர்த்தங்களை ஸ்ரீ சங்கரர் விளக்கி வந்தார். இவ்வாறு, இருவருக்கும் நடைபெற்ற வாதம், பன்னீராயிரங் கிரந்தங்களாயின. இவ்வற்புத வாதத்தைக் கேட்டிருந்த புலவர்கட்கு அறிதற்கரிய சுருதிகளின் உட்பொருள்கள் பலவும அதிக சுலபமாக வெளியாயின. இங்ஙனம், வாதம் நடந்து வருங்கால், ஒரு நாள், ஸ்ரீ மண்டனாசாரியர் கழுத்திலிருந்த பூமாலை வாடியது. அப்போது அங்குக் குழுமியிருந்த சபையோரனைவருக்கும், ஸ்ரீ சங்கரர் வெற்றி பெற்றனரென்று விளக்கமாயிற்று. சபைக்குச் சாட்சியாயிருந்த சகல கலா வல்லியாகிய சரசவாணி,நியாயத்தை நிலை நிறுத்துதற் பொருட்டு, சபைக்கண் வந்து உபய வாதியரையும், பிக்ஷைக் கழைத்தனள். அப்போது, தேவர்கள் புஷ்ப மாரி பொழிந்தனர். இச் சம்பவங்களைப் பார்த்திருந்த ஸ்ரீ மண்டனமிசிரர் தாம்

தோல்வி யடைந்தோ மென்று கருதி, வாதத்தின் ஆரம்பத்திற் செய்து கொண்ட பிரதிஞ்ஞையின் பிரகாரம், சந்நியாச ஆசிரமத்தை மேற்கொள்ள விரும்பி, ஸ்ரீ சங்கரரை நமஸ்கரித்துத், தமக்கு உபதேசஞ் செய்து, கிரம மாகச் சந்நியாச ஆசிரமம் தரு மாறு பணிவுடன் பிரார்த்தித்தனர்.

ஆயினும், மண்டந மிசிரர், நீண்ட நாள் பழகி வந்த கரும காண்ட நூ லாராய்ச்சியின் வன்மையால், அத்வைத சித்தாந்தமே உண்மை யென்ற ஸ்திர புத்தி உண்டாகியும், அவ ருள்ளத்தில், ஆசிரியர் ஜைமினியார் கரும காண்டமே முக்கிய மென்று கூறியுள்ள சூத்திரங்கள் பய னற்றன வாமோ? அங்ஙன மிரா வாதலின், அவர் கருத் தியாதோ? என்னும் சம்சயங்கள் ஜனித்தன, இவை விளக்க மாகும் வரையில், ஒன்றினிடத்தும் நம்பிக்கையும், வைராக்கியமு முண்டாகாது என்று கூறினர்,

ஆசிரியார் ஜைமினியார். பிரஹ்மத்தினிடத்துக் கருத்துடையவ ராயினும், அநாதிகாலந் தொடங்கி, ஜீவ ராசிகள் விஷய வாசையிலேயே செல்லும் மநத்தினை யுடையவ ராக விருத்தலின், அன்னோர்களைக் கடைத் தேற்றும் பொருட்டு, ஞானத்திற்குக் காரண மாகிய கருமத்தையே சிறந்த தென்று கூறின ரென்று பற் பல நியாயங்களை ஸ்ரீ சங்கரர், மண்டநாசாரியருக்கு எடுத்துக் காட்டினர். அங்ஙனங் காட்டிய வழியும், மண்டந மிசிரருக்கு ஐயம் நீங்காது, மநக் கலக்க மடைந்து, தமது குருவைத் தியானித்தார். வாழ் நாட்கள் முழுமையும், தமது நூலையே நம்பி யிருந்த மண்டநாசிரியரைக் கடைத் தேற்றும் பொருட்டு, ஜைமினி மகரிஷியார். சிஷ்யன் முன்னர்ப் பிரசந்ந ராகி, நீ இது காறும் கருமத்தைக் கடைபோகச் செய்து வந்தமை

யின், ஞான மார்க்கத்தை மேற்கொள்ள அதிகாரியாய் விட்டாய், ஸ்ரீ சங்கராசாரியர் கூறிய கருத்துக்களே, என்னுடைய கருத்தும், எனது ஆசிரியர் ஸ்ரீ வேத வியாசர் கருத்து மாம். ஸ்ரீ வேத வியாசர் கருத்திற்கு மாறாக, யாரொன்றும் கூற வில்லை. இது காறும் யான் உனக்குக் குருவா யிருந்தேன், இனிமேல், ஸ்ரீ சங்கரரே உனக்குக் குரவ ஞவர். இவர் என் னுள்ளக் கருத் தொன்றனையே யன்றி, எல்லா உயிர்களின் கருத்தினையும், வேத முதலிய எல்லாக் கலைகளின் கருத்தினையும், உணர்ந்த பே ரறிவாளராவர். அப் போது, ஸ்ரீ சங்கரர் தக்ஷிணு மூர்த்தி வடிவமாகத் தோற்றினர். ஜைமினி மகாரிஷியார் ஞானக் கண்ணுல் அவரைத் தரிசித்து, மண்டன பண்டிதரைப் பார்த்து, இச் சந்நியாசியை, மாநுடனே என்றுவது, எம் போலிய ரென்றுவது கருதுவது கூடாது. இவர் உலகம் உஜ்ஜீவிக்கும் பொருட்டு அவதரித்த பரமேசுவரனே யாவர், நீயும், பிரஹ்மாவின் அம்சத்தினுற் றேன்றியவன், நீ இந்த ஜகத் குருவின் பாத பங்கயத்தைச் சேவித்துக் கிருதார்த்த ஞவாய் என்று ஆசீர்வாதஞ் செய்து, ஞான நோக்கத்தையு மருளி மறைந்தனர். மண்டன மிசிரர் ஞான நோக்கத்தினுல், ஸ்ரீ சங்கரரைப் பார்த்தனர்.

அப் போது, ஸ்ரீ சங்கரர் அறிவானந்த வடிவின ராகிய ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி கோல மாகத் தோன்றினர். அங்ஙனம் தரிசித்தலும், மண்டன மிசிரரின் ஐய மெல்லாம் அகன்றன, அவரும் தமது மாணுக்கர் முதலியோருக்குச் சதுர்முகப் பிரஹ்மா வாகத் தோன்றினர். அப் பிரஹ்ம ரூப தரிசனத்தினுல், சபையோ ரெல்லாம் அதிக வியப்பினையும், ஆநந்தத்தினையு மடைந்தனர். பின்னர் மண்டன மிசிரர்

தமது மாணுக்கட்கு, மனை, பொருள் முதலியன மிகுதியுங் கொடுத்துத், தாம் தேடிய ஏனைய பொருள்க ளனைத்தினை யும், தானஞ் செய்து, வைராக்ய சீல ராய், ஸ்ரீ சங்கரரைத் தோத்திரஞ் செய்து, தம்மைச் சந்நியாச ஆசிரமத்திற் சேர்ப்பித்து, ஆட்கொள்ளு மாறு பிரார்த்தித்தனர். ஸ்ரீ சங் கரர், அவர் மீது கிருபை கூர்ந்து, விதிப்படி அவரைச் சந்நியாசி யாக்கி, வேதாந்தத்தின் உண்மைப் பொருளை யுபதேசித்தருளி, அவருக்கு, சுரேசுவராசாரிய ரென்னும் பெய ரிட்டு, அவரைத் தம் மாணுக்கருட் டலைவ ராக்கினர்.

பின், சுரேசுவராசாரியர், தமது ஆசிரியருடன் பல தலங்களுஞ் சென்று, ஆங் காங்கு அத்வைத சித்தாந்தத் தைப் பரவச் செய்து வந்தார். ஒரு கால் ஸ்ரீ சைலத்திற் றங்கியிருந்த போது. அங்கு வந்த ஆயிரத் திரு நூறு புற மத வாதியர்களை வென்று, சத்தியம், அத்வைதம் என் பதை நிலைநாட்டினர். பின்னர், ஸ்ரீ சங்கராசாரியருடன் சிருங்க கிரி யடைந்தனர். அங்கு, ஸ்ரீ சங்கரர், மட மொன் றமைத்து, சுரேசுவராசாரியருக்கு ஆசார்யாபிஷேகஞ் செய்து, அதற்கு அவரை அதிபதியாக்கினர்.

ஒரு கால், சுரேசுவராசாரியர், ஸ்ரீ சங்கரரை வணங் கிக் குரு தக்ஷிணை யாக யான் யாது செய்யத் தக்கது என்று பணி வாய்க் கேட்டார். அதற் கவர், யான் செய் துள்ள சாரீரக பாஷ்யத்திற்கு, நீர் வார்த்திகம் செய்யு மென்று கட்டளை செய்தார். சிற்சுகாசாரியர் முதலிய மாணுக்கர்கள், சுரேசுவராசாரியர் மீது பொருமை கொண்டு, கரும காண்டி யாகிய அவர், வார்த்திகம் எழுது வதற்கு அதிகாரி யல்ல ரென்று ஸ்ரீ சங்கராசாரியரிடத்து முறையிட்டனர், அதற் கவர், யான் சுரேசுவராசாரிய

ரோடு வாது செய்தவ னாதலின், அவருடைய சாமர்த்தி யத்தை யான் நன்ருக அறிவேன். மேலும், அவர் சாதா ரண ரல்லர், பிரஹ்ம தேவனே யாவர். அவ ரன்றி, என பாஷ்யத்திற்குத் தக்க வார்த்திகம் செய்ய வல்லார் வே ருெருவர் காணப்படவில்லை யென்று ஸ்ரீ சங்கரர் கூறி ஞர். ஆயினும், இவ் விஷயத்திற் பல விராதிக ளேற்பட்டி ருக்கின்றமையின், யாவருக்கும் விரோத மானதை யான் செய்ய மாட்டேன் என்று கூறி, சுரேசுவராசாரியரை யழைத்து, உன் மீது யாவரும் பொருமை கொண்டிருக் கின்றனர். ஆதலின், நீ வார்த்திகம் செய்ய வேண்டாம், வேறு நூல் செய் யென்று கட்டளை செய் தருளினர், குரவ ஞணையைச் சிரமேற் கொண்டு, சுரேசுவராசாரியர் நைஷ்கர்மிய சித்தி முதலிய நூற்களை யியற்றிக் குரு சந்நி தாநத்தில் சமர்ப்பித்தனர். இந் நூல்களால் சுரேசுவராசாரி யர் மீது பொருமை கொண்ட பதும பாதாச்சாரியர் முத லா ேஞர் பொருமை நீங்கினவ ராயினர். பின்னர்ச், சுரேசுவராச்சாரியர் தாம் சாரீரக பாஷ்யத்திற்கு வார்த்தி கம் இயற்றுவதைத் தடை செய்த, பதும பாதர் முதலி யோர் மீது வெகுளி மேற்கொண்டவ ராய், குரவ ஞணைப் படி யான் செய்ய விருந்த பணிவிடைக்கு விரோதஞ் செய் தவர், என்னைப் போற் செய்யும் நூல்க ளியாவும் அவர்கள் கருத்தின் பிரகாரம் நிறைவேருமற் போகக் கடவன வென்று கமண்டலு நீரைக் கையிற் கொண்டு சபித்தனர், அவ் வாறே, பதும பாதர் செய்த வார்த்திகம் பூர்த்தியாகா மற் போயிற்று. அங்ஙன மாயினும், குரவ ஞணைக்குத் தடை நேரிட்டதே என்னும் கலக்கம் சுரேசுவராசாரி யரை வாதியாநின்றது. இதனை அறிந்த ஸ்ரீ சங்கரர், கிருஷ்ண யஜுஸ் சாகைக்கும், சுக்ல யஜுஸ் சாகைக்கும்,

யான் இயற்றி யுள்ள பாஷியங்களுக்கு, நீர் வார்த்திக மெழுது மென்று சுரேஸ்வராசாரியருக்குக் கட்டளை செய் தருளினர். அவ் வாறே, அவர் அவ்விரண்டு நூற்களையும் செய்து, குரு தக்ஷிணை யாகக் குரவன் பாதத்திற் சமர்ப்பித் தனர்.

பின்னரும், சுரேசுவராசாரியர் தமக்கு சூத்திர பாஷ்யத்திற்கு விபாக்கியானஞ் செய்யும் பாக்கியம் லபிக்காமைக்கு மிகவும் வருந்தி நிற்பா ராயினர். அதற்கு, ஸ்ரீ சங்கரர்; நீர் இன்னும் 800 வருடம் தவஞ் செய்திருந்து, அடுத்த ஜந்மத்தில் வாசஸ்பதி என்னும் பெயரோடு விளங்கி, ஆறு, ஆஸ்திக பாஷ்யங்களுக்கும், ஆறு, நாஸ்திக பாஷ்யங்களுக்கும், நீரே உரை செய்வீர். பின், எல்லாவற்றிற்குஞ் சித்தாந்த மாக என் பாஷ்யத்திற்குப் பெரியதோருரை யெழுதி, அழிவற்ற கீர்த்தியைப் பெறுவீர். அப் போது உம்மிடத்தி லுள்ள பிரகஸ்பதியின் கூறு, வாசஸ்பதிப் பிறப்பில் செய்யத் தக்க காரியங்களைச் செய்து முடிக்கும், அதனல், நீர் ஒன்றிற்கும் வருந்த வேண்டாம் என்று வரங் கொடுத் தருளினர். சுரேசுவராசாரியர் குருவருள் பெற்றுத் திருப்தி யடைந்திருந்தனர்.

சுரேசுவராசாரியர் சரிதம் முற்றும்.

---

3. ஸ்ரீ தோடகாசாரியர் சரிதம்.

கருவலி களையும் இபமுகன் தன்னைக்
கதிர்வடி வேலனை அடுத்தோர்,
இருமல ஆரி ஈசுரன் தன்னை
இணையில்கா மாக்ஷியைச் சிறந்த,
திருஉரு துங்க பத்திரை புரக்கும்
சிருங்கைவாழ் செகத்குரு மடத்துப்,

பரன்உரு வான தோடக ஆசான்
பாததா மரையினைப் பணிவாம்.

அநந்த கல்யாண குணங்கள் நிறைந்த மகா தேவரது அநுக்கிரக லீலா விக்கிரக மாகிய ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாத ஆசாரிய சுவாமிகள், அஸ்தாமலகர் என்னும் நாமம் வாய்ந்த சீடனைத் தமக் கடிமை யாக்கிய பின், பதும பாதாதி சீடத் திருக் கூட்டங்களோடு, ஒரு கால், சிருங்க கிரி என்னும் புரியில் ஸ்ரீ சாரதாம்பிகையைப் பூஜித்துக் கொண்டிருக்குங் காலத்தில், தமது தருமத்தில் வழுவாது நடப்பவரும், ஜீவ காருண்யமே உரு வானவரும், அதி விநயரும், தேசிக சேவையிற் றற்பரரும், மிகுந்த சமாஹித சித்தரு மாகிய, ஆநந்த கிரி யென்னும் நாமம் வாய்ந்த ஒருவர், அத்வைத ஸ்தாபநாசிரிய ராகிய, ஸ்ரீ ஜகத் குரு சந்நிதியைச் சரணாகதியா யடைந்து, ஊசி செல் வழி, நூற் செல்வது போலவும், கட் கிமை போலவும், உயிர்க் குயிர் போலவும், அநவரதம், ஆத்தம், அங்கம், தாநம், சற்பாவம் என்னும் நான்கு விதப் பணிவிடைகளையும், அள வில்லாத அன்போடு செய்து வந்தனர். அக் கால், சாஸ்திரங்களிற் பிரவிருத்தி சிறிது மின்றிக் கேவலம் சேவையிலேயே அன்பு பூண்ட அவ் வன்பரைத் தயாநிதி யாய், மான் மழு வொழித்து, மறை முதற் பொருளை யுணர்த்தி வந்த விறைவர், தமது திரு வுளத் தடைத்துப், பதும பாதாதி முநிவர்கள் சாந்தி பாட மாகிய சிரவணஞ் செய்யும் பொழுது, தமது திரு வார்த்தையைச் சிரவணித் துய்யு மாறு கருணை புரிந்தனர். இங்ஙனம் நடந்துவரு ஞான்று அவ் வன்பர்,

ஓரோர்காற் றமது தேசிகேந்திரர் சேவை முடியாதிருப்பிற் சிறிது பொறுத்து வருவார். அவ் வக்கால், உலக

நாயக ராகிய குரவர் பெருமான், சாந்தி பாடஞ் செய்பவரை நோக்கிச், சிறிது பொறுங்கள், கிரி சிறிது போதில் வந்து விடுவன், பின்னர்ச் சிரவணஞ் செய்யலா மென்று திரு வாய் மலர்ந்தருளுவார். அது குறித்துச், சர்வ வித்யா சம்பந்ந ராகிய, பதும பாதாதி முனிவர் மனங்கள் தபித்துக் கொண்டே வந்தன. சிறிது நாட் கழித்து, ஒரு நாள், அவர், தேசிகர் பெருமான் பரிவட்டம் சுத்தஞ் செய்ய நதிக்குச் சென்றிருக்குங் கால், சாந்தி பாடஞ் செய்யச் சகஸ்திரக் கணக் காகச் சீடர் கூடியிருக்கச், சாந்தி பாடம் நடக்க ஆக்ஞை புரிய வேண்டு மென்று குரவர் பெருமானைப் பதும பாத முனிவர் பிரார்த்தித்த பொழுது, அவர், வாராம லிருக்கச் சிறிது பொறுங்கள், கிரியும் கணப் பொழுதில் வந்து விடுவன் என்று தேசிகேந்திரர் திரு வாய் மலர்ந் தருளினர். அதைச் செவி யுற்ற, பதும பாத முனிவர், சகி யாதவ ராகிச், சாஸ்திரத்தி லநதிகாரி யாய்க் குட்டியம் போலச் சட மாய்ப், புத்தி யீநனாய்த் தன் வேலையைச் செய்துகொண்டிருக்கும் அவனுக் காக ஏன் எதிர்பார்க்க வேண்டு மென்று பீதியோடுந் தெரிவிக்க, அதைத் திருச் செவி யுற்ற, தயா சமுத்திர மாகிய தேசிகர் பெருமான், பதும பாதரது மிகுந்த கர்வம் நீங்கும் பொருட்டும், பக்தர் கள்பால், அநுக்கிரகத்தை வெளியிடும் பொருட்டும், தமது அன்ப னாகிய கிரியின்பால், சதுர்த் தச வித்தைகளும் உள வா மாறு, திரு வுளத்தி லக்கணமே கருணை புரிந்தருளி னர். குரு பரன் திரு வருளால், அவ் வித்தைகளைப் பூரண மாகப் பெற்ற, அவ் வன்பர், பாதங்க டோறும் நான்கு சகணங்கள் வாய்ந்த தோடக சந்தத்தால், மறை முடி யாவையுந் தொகுத்துச் "சுருதி சார சமுத்தரணம்" என

நாமஞ் சூட்டி, இந் நூலைச் சகந் நாயக ஞகிய தேசிகர் பெருமான் றிரு வடியிற் சமர்ப்பித்தனர். அதன் சொற் பொரு ளமைதியையும், தேசிகன் சேவையின் வலியால் விரைவில் இவ் வாறு இயற்றியதையும், பதும பாதர் கண் ணுற்றுத், தமது கர்வத்தை விடுத்துப், பொறுத் தருளு மாறு, ஸ்ரீ சங்கர முனிவர் திரு வடித் தாமரையில் விழுந்து அநேகங் கோடி நமஸ்காரஞ் செய்தனர் கருணையே திரு வுருவமாய் எம துயிர்க் கிறைவர், அதனை அவ் வாறே, பொறுத்தருளினர் என்பது, சங்கர திக் விஜயத்தின்கண் ணுள்ள இந் நூ லவதரித்த சரித்திரத்தின் சங்கிரக மாம்.

தோடகாச்சாரியர் சரிதம் முற்றுப்பெற்றது.

---

4. *ஸ்ரீ வித்தியாரண்ய ஸ்வாமிகளின் சரித்திரம்*

கருவலி களையும் இபமுகன் தன்னைக்
கதிர்வடி வேலனை அடுத்தோர்,
இருமல ஆசி ஈசுரன் தன்னை
இணையில்கா மாக்ஷியைச் சிறந்த,
திருஉரு துங்க பத்திரை புரக்கும்
சிருங்கைவாழ் செகத்குரு மடத்துப்,
பரன்உரு வான வித்யாரண்யர்
பாததா மரையினைப் பணிவாம்.

பூர்வாசிரம விருத்தாந்தம்.

தக்ஷிண திசையில், கர்னுடக தேசத்திலே, துங்க பத்ரா நதிக் கரையில் பம்பை யென்று ஒரு க்ஷேத்திர முண்டு. அதில் விஜய மென்னும் நகர மிருந்தது. அதனை முன் கிஷ்கிந்தா புரி யென்று சொல்லிக் கொண்டிருந்தனர். இப்

போது, கோல் கொண்டா என்கின்றனர். எங்கு, விருபாக்ஷர் என்னும் மகா தேவருடைய ஆலய மிருக்கின்றதோ, அங்கு ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகளின் ஜந்மமும், பூர்வாசிரமத்தின் ஸ்திதியும், நிகழ்ந்திருக்கின்றது.

அவர்களுக்கு (1) மாதவர். (2) மாதவாரியர், (3) மாதவாசாரியர், (4) மாதவாமாத்தியர், (5) மாதவ பட்டர் என்னும் பெயர்களிருந்தன. பின் உத்தராசிரமத்தில், ஸ்ரீ வித்தியாரண்ய ரென்னும் பெயர் இருந்தது.

1. இவருக்குப் பிறப்பினால் மாதவர் என்னும் பெயருண்டாயிற்று.

2, 3. மிகுந்த வித்துவத் தன்மையாலும், இவர் இராஜாவின் குல குருவா யிருந்ததனாலும், மாதவாரியர், மாதவாசாரியர், மாதவ பட்டரீ என்னும் பெய ருண்டாயிற்று.

4. ஸ்ரீ வசிஷ்ட முநிவரைப் போல, இராஜாவின் பிரதாந மந்திரியா யிருந்தமையால், மாதவாமாத்தியர் என்னும் பெயரால், அக் காலத் தியற்றி யருளிய நூல்களிற் பிரசித்தஞ் செய்திருக்கின்றனர்.

5. வித்தைக்கு வநம் போன்றிருந்தமையால் வித்தியாரண்யர் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள், மகா யோகப் பிரஷ்டராய், உத்தம சம்ஸ்கார முடையவரா யிருந்தனர். வித்தை, ஐசுவர்யம், இலக்ஷ்மி, தேஜசோடு கூடிய தன்மை முதலிய விபூதியினால், ஜகத்தை உத்தாரணஞ் செய்தற்

பொருட்டு, ஈசுவரனது கலை வடிவமாகப் பிரகடமானு ரென்று கொள்ளல் வேண்டும். அதனுல், இராஜ சபையில், இவருக்கு யாவரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கொண்டிருந்தனர்.

ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள், பராசர ஸ்மிருதியினது வியாக்கியாநத்தின் உபோற்காதத்தில், இவ் விரண்டு சுலோகங்களை எழுதியிருக்கின்றனர்:-

1. ஸ்ரீமதி எவனுக்கு மாதாவோ,

2. அழகிய கீர்த்தி வாய்ந்த மாயணர், எவனுக்குப் பிதாவோ,

3. சாயணர், சோம நாதர், என்னும் இருவரும், எவனுக்குச் சகோதரர்களோ,

4. பௌத்தாயநம், எவனுக்குச் சூத்திரமோ,

5. கிருஷ்ண யஜுர் வேதத்தினுள்ளிருக்கும் போதாயநீ, எவனுக்குச் சாகையோ,

6. பாரத்வாஜம் எவனுக்குக் கோத்திரமோ, அவனே, சர்வஜ்ஞனாகிய மாதவன்.

இவ் வாறு, தமது குல கோத்ராதிகளை யறிவித்திருக்கின்றனர்.

வித்தியாரண்ய சுவாமிகள், ஜந்மம் சாலிவாகந சகம் 1300ல் உண்டாயிற்று என்று மகாராஷ்டிர கவி சரித்திர கிரந்தம் கூறுகின்றது.

ஓர் தாம்பிர பட்டயத்தில், "சாலிவாகநம் 1313லதில், பிரஜோற்பத்தி என்னும் வருஷத்தில், வைசாக மாதத்தின் கிருஷ்ண பக்ஷத்தில், சூரியக் கிரகண சமயத்தில், மகா மந்திரீசுவர ரான, உபநிஷத மார்க்கப் பிரவர்த்தக ராகிய ஸ்ரீமத் மாதவ ராஜா வானவர், மாதவ புர மென்னும் பெய ரைப் போட்டுக் கசர மென்னும் பெயரால் பிரசித்த மான கிராமத்தை, இரு பத்து நான்கு பிராஹ்மணர்களுக்குத் தானஞ் செய்தார்" என்று எழுதப்பட்டிருக்கின்றது. அத னால், சகம் 1200க்கு மேல், வித்தியாரண்ய சுவாமிகளின் ஜந்மம் உண்டாயிருக்க வேண்டும். ஸ்ரீ சிருங்க கிரி குரு பத்ததியின்படி, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு 1300 வருஷங்களுக்குப் பின் வித்தியாரண்ய சுவாமிகள் இருந் திருக்கின்றார்கள். இதன்படி 650 வருஷங்க ளான தாகத் தெரிய வருகிறது. சித்தாந்த கௌமுதி என்னும் வியா கரண நூலைச் செய்த பட்டோஜீ தீக்ஷிதர் காலம் சற் றேறக் குறைய 500 வருஷ மிருக்க லாம். அவர் ஸ்ரீ வித்தி ரண்ய சுவாமிகளது மாதவ விருத்தி யென்னும் நூலினைத் தமது நூலில் பிரமாணங் கொடுத்திருக்கின்றார். இதனு லும், 500 வருஷங்களுக்கு முன்னே ஜந்ம முண்டாயிருக்க வேண்டு மென்று தெரியவருகிறது.

மஹம்மது டோகுலாக் காலத்தில், கி. பி. 1334-ல் மாலிக்காப்பூர் என்பவனால், ஆனை குந்தி நகரம் அழிக்கப் பட்ட தென்றும், அப்போது ஆனை குந்தி நகரத் தரசனாகிய பூப ராயலு தீயிற் குதித் திறந்து போகவே, அவன் சேநாதி பதிகள் ஹரிஹர னும், புக்கனும், துலுக்கர்களுக்குப் பயந்து பம்பா வநத்தில், ஒளியப் போன போது, ஓர் பர்ண சாலையில் தவஞ் செய்து கொண்டிருந்த, ஸ்ரீ வித்தியாரண்ய

ரிடம் தெரிவித்துக்கொள்ள, அவர் தம் தபோ வலியால் அவர்களுக்கு உதவி செய்து, தம் பெயரால் வித்தியாரண்ய நகர மென்று ஒரு பட்டணமுங் கட்டுவித்து, அதனை ஹரிஹர ராயலு ஆண்டு வரும்படி செய்தார். அவனுக்குப் பிறகு அவன் சகோதரன் புக்க ராயலும் ஆண்டு வந்தான். இவ் விருவருக்கும் ஸ்ரீ வித்தியாரண்யர் மந்திரி யாகவும், புரோகிதராயு மிருந்திருக்கிறார். இவ் விருவரும் கி. பி. 1336 முதல் 1379 வரையில், அரசாக்ஷி செய்திருக்கிறார்கள். அதன் பின், புக்க ராயலுவின் புத்திர ஞன ஹரிஹர ராயலு, அரசாக்ஷி செய்த காலத்தும், மந்திரி யாக விருந்து வேத பாஷ்யம் முடித்த தாகத் தெரிய வருகிறது. இதனால், ஸ்ரீ வித்தியாரண்யர் ஜந்ம காலம் கி. பி. 1300-ல் உண்டா யிருக்கலா மென்று ஊகிக்கப்படுகிறது.

வித்தியாரண்ய சுவாமிகள், மகா துரந்தர பண்டிதரா யிருந்தனர். இவர், சொற்ப காலத்திலேயே சகல வித்தைகளையும் அத்யயநம் செய்திருந்தனர் வெகுவாய்ச் சொல்லுவதி லென்? அநேக மேன்மை யான பண்டிதர்களால் அங்கீகரிக்கப்பட்ட சர்வ சிரோமணி யாகிய ஸ்ரீ சங்கர மதத்தில் ஆசாரியர்களை விட ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகளைப் போன்ற வித்வான்கள் ஒருவரும் இருந்த தில்லை. இவர் அபூர்வ வித்வாஞ யிருந்தனர் என்பது வித்வான்களது முகத்தாலும், அவர்களினது நூலினாலும், தெரியவருகின்றது.

ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள், வைத்திய சாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம், வியாகரண சாஸ்திரம், வேதாந்த சாஸ்திர மென்பவற்றின் பேரில், அநேக நூல்களைச் செய்

திருக்கின்றனர். அவற்றுள், பிரதாந மான சிலவற்றை இங்கு, எடுத்துக் காட்டுவாம்;-

1. வித்தியாரண்ய சுவாமிகள், நான்கு வேதங்களின் பேரிலும் பாஷ்யஞ் செய்திருக்கின்றனர். அவற்றுள், ருக் வேத பாஷ்யம், யஜுர் வேத பாஷ்யம், சாம வேத பாஷ்யம், அதர்வ வேத பாஷ்யம், நான்கு வேதங்களின் ஐதரேயம், தைத்திரீயம், தாண்டியம், சதபதம், என்னும் இவை முதலிய பிராஹ்மணங்களின் பாஷ்ய முதலியன அச்சிடப்பட்டிருக்கின்றன.

2. சர்வ தர்சந சங்கிரகம் செய்திருக்கின்றனர். அதில், வேதாந்தத்திற்கு வேறுகிய சில பிராசீந மதங்களைக் காட்டியிருக்கின்றனர்,

3. அநுபூதிப் பிரகாச மென்னும் 3000, சுலோக சங்கை யுள்ள நூலைச் செய்திருக்கின்றனர். அதில், வேதாந்தத்தின் சர்வ உபநிஷதங்களின் சாரார்த்தத்தினையும் சுருக்கமாகச் சர்வ ஆக்கியாயிகை (கதை)களுடன் காட்டியிருக்கின்றனர்.

4. பிரஹ்ம கீதை யென்னும் நூல் செய்திருக்கின்றனர். அதில், மாத்துவ ராமாநுஜ மதங்களையும், சங்கர மதத்தினையும், எடுத்துக் காட்டிச் சுருதி சம்மத மான அத்வைத சித்தாந்தத்தினை நாட்டியிருக்கின்றனர்.

அதன் பேரில், பிரகாசிகை யென்னும் உரை யுளது.

5. பஞ்சதசி என்னும் நூலைச் செய்திருக்கின்றனர். அதன் வர்ணனம், பஞ்சதசி நூலின் முக வுரையில் பிரசித்தம்.

6. ஜீவன் முக்தி விவேகம் செய்திருக்கின்றனர். இதிற் சந்நியாசத்தின் விபாக பூர்வக மான ஜீவந் முக்தி விலக்ஷண சுகத்தின் தன்மை காட்டப்பட்டுளது.

7. திருக்குத் திருசிய விவேக மென்னும் நூலும், ஸ்ரீமத் சங்க ராசாரிய சுவாமிகளாற் செய்யப்பட்ட, அப ரோக்ஷா நுபூதிக்கு உரையும், செய்திருக்கின்றனர்.

8. மாதவ விருத்தி யென்னும் வியாகரண நூல் இயற்றி யிருக்கின்றனர். இதில் கிரியா பதங்களின் மூல தாதுக்க ளாகிய 2200 வினைப் பகுதிகளோடு, வேறு வேறு பிரத்தியயங்களாகிய விகுதிகளைச் சேர்த்து, சொல் லமையும் வண்ண மாகப் பாணினி சூத்திர பாஷ்ய வார்த்திக வசநங் களைக் கொண்டு, முறையே உதாரணங்கள் காட்டப்பட் டிருக்கின்றன. இதிற் பெரும்பாலும் எல்லாச் சொற் களும் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந் நூல் 25000 சுலோக சங்கை யுளது.

9. நிதாந மாதவம்:- இது 1500 சுலோக சங்கை யுள்ள வைத்திய நூல்.

10. கால மாதவம்:. இது எல்லாக் காலங்களையும் நிர்ணயஞ் செய்வது.

11. சதப் பிரசிந கல்ப லதிகா:- இதில் ஒவ்வொரு வினாவிற்கும் விடை வடிவப் பப் பத்துச் சுலோகங்கள் செய் யப்பட்டிருக்கின்றன. அப் பிரகரணங்களுக்குத் தசக மென்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இவ் வாறு, நூறு வினாக்களுக்கு விடை யாக நூறு தசகங்க ளிருக்கின்

றன. அதில், பஞ்சத் திராவிட, பஞ்ச கௌடர்க ளுள் ளடங்கிய பிராஹ்மணர்களின் பேதங் காட்டப்பட்டுளது.

12. பராசர ஸ்மிருதியின் வியாக்கியாநம்;- இதற்குப் பராசர மாதவ மென்று பெயர்:

13. கால மாதவம்:. இது கால நிர்ணயத்திற்குச் சுவதந்திர மாகச் செய்த நூல். இதில், பஞ்சாங்கம் வர் ணிக்கப்பட்டிருக்கின்றது.

14. ஜைமிநீய நியாய மாலா விஸ்தாரம்;- இது ஜைமிநி சூத்திரத்தின் பேரில் செய்யப்பட்டது-

15. ஆசார மாதவம்:- இதில் பிராஹ்மணர்களது கிரமம் காட்டப்பட்டிருக்கின்றது.

16. வியவஹார மாதவம்:. இது வியவஹாரத்தின் நியாயத்தைப் பற்றிய நூல்.

17. வித்தியாரண்ய கால ஞாநம்;- இதில், தெலுங்கு தேசத்து இராஜாக்களின் மரியாதையும், இராஜ்ஜியம் செய் யும் புருஷர்களின் செய்கையு மாகிய வருங் கால வார்த்தை கூறப்பட்டுள்ளது

18: ஸ்ரீ சங்கர திக் விஜயம்:- இதில், சங்கராசாரியர் களது சரித்திரம் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இந் நூற் கவிதை வெகு மநோகரமும், மேன்மை யுள்ளதும், ஆழ முடைத்து மாம். இந் நூலின் முதல் சர்க்கத்தில், வித்தியா ரண்யர் தமக்கு நவீந காளிதாசன் என்னும் பெயர் கொடுத் திருக்கின்றனர். அஃது, உசிதமே யாம். அவ ருடைய

எழுத்துக்கள் வேத சரளமும், மனோகரமும், கம்பீரமும், இரகசியார்த்த முடையனவு மாம்.

19. சூத சங்கிதையின் வியாக்யானம்:- இவ் வுரையி ஞல், அவர் சைவாகமத் தேர்ச்சியின ரென்பது விளங்கு கின்றது,

20, சங்கர விலாஸம்:- இதில், சிவ பாரம்யம் கூறும் எல்லாப் புராணங்களின் வசநமும் திரட்டப்பட் டுள்ளது. இதனுல்; இவர் சிவோபாஸக ரெனக் காணப்படு கின்றது.

21. விவரணப் பிரமேய சங்கிரஹம்:- இது பிரஹ்ம சூத்திர டீகை.

22. உபநிஷத் தீபிகா வென்னும் பெயரால் அநேக வுபநிஷதங்களுக்கு வியாக்யாநஞ் செய்யப்பட்டு இருக் கின்றது.

23. பிரஹ்மவிதாசீ:- இஃது, சகல உபநிஷதங் களின் சார பூத மான சிறிய அத்வைத நூல், வசந ரூப மாய், சகல சித்தாந்த ரகசியத்தினையும் சூத்திரம் போல், அடக்கிக் கூறப்பட்டுளது. இது, மந்தப் பிரஞ்ஞை யுள்ள வர்களிடத்து அவர் காட்டிய கருணையை விளக்குகின் றது

கர்ம விபாக மாதவீயம், பாட்ட சாரம், பாட்ட சார வியாக்கியாநம், வேதாந்த விஜயம், பஞ்ச சார வியாக்கி யாநம், சங்கர பாஷ்ய டீகா, கீதா தாத்பரியம், ஸ்மிருதி சங்கிரக முதலிய அநேக நூல்களைச் செய்திருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள் பூர்வாசிரமத்தில், விஜய நகரத்தின் யது வம்சி யான புக்க தேவ ராஜாவின் குல குரு வாகவும், பிரதாந மந்திரி யாகவும், இருந்தனர். என் பது அதிகரண ரத்ந மாலை முதலிய நூல்களில் விளக்க மாய் எழுதப்பட்டிருக்கின்றது. இவரது பிரதாபத்தால் அவ் வரசனது ராஜ்யமும், அவ் விராஜ்யத்தில், தர்மத்தின் அபிவிருத்தியும் உண்டாயிற்று.

கோவா நகரத்தி லிருந்த துலுக்கர்களை, விலக்கி, இவ் வரசனது ஆணையைச் செலுத்துவித்தார். சப்த நாத ரென் னும் மகா தேவரது விக்கிரகத்தை ஸ்தாபநம் செய்தார். கசர மென்னும் கிராமத்திற்கு, மாதவ புர மென்று பெயர் கொடுத்துப், பிராஹ்மணர்களுக்குத் தாநம் செய்தார். தமது மாதாவின் பெயரால், பூமியைத் தாநஞ் செய்த போது பிராஹ்மணர்களுக்குப் பூமியைப் பிரித்துத் தம் மாதா வினது பெயரின் அநுசார மாகக் கிராமத்தினை ஆக்கினார். அங்கு ஓடுகின்ற நதிக்கு இவரது பழக்கத்தால், மாதவ தீர்த்த மென்னும் பெயர் உண்டாயிற்று. வித்தியா சாலை களும், அந்ந சத்திரங்களும், தேவாலயங்களும், அள விறந் தன செய்திருக்கின்றனர்.

தம்மாற் செய்யப்பட்ட அநேக நூல்களை, வெகு சுத்தப்படுத்திப், பனை யோலை முதலியவற்றில் எழுதுவித் துச், சிலவற்றை மடங்களிலும், க்ஷேத்திரங்களிலு மாகப் பிரித்துக் கொடுத்தார். சிலவற்றை, மலைக் குகையில், வைத் தார். சில விடங்களில் பூமியிலும், பல புதைத்து வைத் திருக்கின்றார். அவற்றுள், சிலவற்றை ஆங்கிலேயர் பூமியை வெட்டி யெடுத்திருக்கின்றார்கள். இது நடந்து சுமார் 70 வருஷ மாயிற்று.

இவர், கிரகஸ்தாசிரமத்திலும், அத்வைதத்தில் நிஷ்டை யுள்ளவர். விவேக வைராக்யாதி சகல சற்குணங்களாலும் நிறைந்தவர். இப் படிப்பட்ட சற் புருஷர் பூத. பவிஷ்யத் வர்த்த மாந காலத்திலும் கிடைத்த லரிது, இவ்வாறு, ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமி யானவர், கிரகஸ்தாசிரமத்தில், கால க்ஷேபம் செய்திருக்கின்றனர். பின், ஒரு சமயத்தில் காயத்திரி தேவியை அபரோக்ஷ மாக்க இச்சை யுண்டாயிற்று, அதன் பொருட்டுச் சகல தேசத்துப் பிராஹ்மணர்களையும் அழைப்பித்துக் காயத்திரியின் புரச்சரணம் செய்தார். கடைசி அநுஷ்டாந வடிவ பல மாகிய காயத்திரி அப ரோக்ஷ மாக வில்லை. அப் போது காயத்திரி ஜபத்தின் பெருமையினாலோ, அல்லது, பூர்வ புண்யக் கூட்டத்தின் பரிபாகத்தினாலோ, அவருக்குத் தீவிர வைராக்கிய முண்டாயிற்று. "எந்தத் திநத்தில் வைராக்கிய முண்டாகின்றதோ, அந்தத் திநத்திலேயே சந்நியாசத்தைக் கொள்ள வேண்டும்" என்றல், முதலிய சுருதி வாக்கியங்களை யநுசரித்து, அப்பொழுதே வித்வத் சந்நியாசம் செய்து கொண்டனர். பின், காயத்திரி வந்து வரங் கொடுக்கத் தொடங்கினள். அப்போது வரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யாயினும், அமோக தரிசந முடைய தேவி யானவள், வலிய வரங் கொடுக்கத் தொடங்கி மிகப் பின் தொடர்ந்தாள். அப்போது அவர், "என் இச்சைப்படி இக் கர்நாடக தேச முழுவதிலும் சகல ஜநங்களின் வறுமையும் தொலையுமாறு பொன் நாணயம் வருஷிக்க வேண்டும்" என்று வரங் கேட்டனர். அதற்கு, "அப்படியே ஆகுக" வென்று கூறித் தேவி மறைந்தாள். பின், அத் தேசத் தரசனை, ஜநங்கள், அந் நாணயத்தினை யடையும் விஷய மாகக் கேட்ட போது, அரசன், "ஜநங்களினது வீட்டின் பேரி

லும், ஒன்றே கால் முழ பரியந்தம் வீட்டைச் சுற்றிலும், விழும் நாணயம் அந் தந்த ஜநங்களைச் சேர்ந்தது. மிஞ்சிய வழி முதலிய பூமியில் விழும் நாணயம் என்னைச் சேர்ந்தது" என்று சொன்னான். அப் போது, அவரது ஆணையால் ஒன்றே கால் சாம பரியந்தம் நாணய மழை பெய்தது. அந்த நாணயத்தினை ஜநங்கள் வராகன் என்கிறார்கள். பின், அத் தேசத் தரசன், அதனைப் போல, மற்றும் நாணயங் களைச் செய்வித்து, அத் தேசத்தில், வியவகாரம் நடத்தினான் என்னும் வார்த்தை உலகத்திற் பிரசித்தம்.

பிந்திய ஆசிரம விருத்தாந்தம்.

பிந்திய ஆசிரமத்தில், ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள் யாஜ்ஞவல்கியரைப் போல, வெகு உபரதி யுண்டாய்ப் பிரஹ்ம விசாரத்திலேயே தற்பரா யிருந்தார். ஒரு முறை சுவாமிகள்,வெளிப் பூமிக்குப் போயிருந்தனர். அப் போது, ஓர் துலுக்க அரசனது பொற் செங்கல், காட்டில் விழுந்து கிடந்தது. அங்கு, அதனோடு மற்றோர் கல்லினைச் சேர்த்து, அதன் பேரி லுட்கார்ந்து,மல விசர்சநம் செய்து போயினர். அப் போது, அவ் வரசன், இவ் வாறு சோதித்து, வெகு சந்தோஷ மடைந்து,இவருக்குக் கிராமாதிகளைக் கொடுக்க, அதனை அங்கீகரிக்க வில்லை. இவ் வாறிருந்தது, இவரது விரக்தி யென்னும் வார்த்தை உலகத்தில் கேட்கப்படுகின் றது.

காசியில், ஓர் வகை முயற்சியினால், ஸ்ரீ வேத வியாச ரைச் சந்தித்துத், தான் செய்த வேத பாஷ்யத்தைப் பரி சோதிக்கு மாறு காட்ட, அதில் ஓரிடத்தும் தோஷ மின் மையைக் கண்டு வியாசாசாரியர்,இவருக்கு வித்தியாரண்யர் எனப் பெயர் கொடுத்தார் என்று கேட்கப்படுகின்றது.

பிந்திய அவஸ்தையில், யாத்திரைக்குச் சக்தியில்லாதிருந்த மையால், தமது குருவின் ஆணையால், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்க கிரி மடாலயத்தில், ஆதிபத்தியத்தை யடைந்து, சங்கராசார்ய பதவியால், பிர சித்த ராய், அநேக மதங்களின் கண்டநத்தோடு, தனது சுருதி சம்மத மான அத்வைத மதத்தை உயர்த்தினார்.

தம்மாற் செய்யப்பட்ட, சர்வ தரிசந சங்கிர கத்தின் ஆதியில், "தமது உசித மான அர்த்தத்தோடு கூடிய ஆசரிதத்தினுல் அர்த்த முடையவர்க ளாக எல்லோரையும் எவர் செய்திருக்கின்றனரோ, அப்படிப்பட்ட ஸ்ரீ சாரங்க பாணி தநயரும், சகலாகம முணர்ந்தவரு மான சர்வஜ்ஞ விஷ்ணு குருவை, யான் நிரந்தரம் ஆசிரயிப்பே னுக," என்று மங்கலஞ் செய்திருத்தலால், சர்வஜ்ஞ விஷ்ணு வென்னும் பண்டிதர், இவருக்குக் குருவா யிருந்திருக்கின் றனர். ஆனுல், அவர் வித்தியா குருவா யிருந்திருக்கலா மென்று தெரிகிறது. பஞ்ச தசியின் ஆரம்பத்தில், "ஸ்ரீ சங்கராநந்த குருபதாம்பு ஜந்மங்களுக்கு நமஸ்கார" மென்று மங்கலஞ் செய்திருத்தலால், ஸ்ரீ சங்கராநந்த சுவாமியும், இவருக்குக் குருவா யிருக்கின்றனர். ஆனுல், அவர், பிரஹ்ம தத்வோபதேச குருவா யிருக்கலா மென்று காணப்படுகின்றது. சங்கர விஜயம், ஜீவந் முக்தி விவேகம் முதலிய கிரந்தங்களிலும், ஸ்ரீ வித்தியாதீர்த்த குருவின் மங் கலஞ் செய்திருக்கின்றனர். அதனுல், ஸ்ரீ வித்தியா தீர்த்த ரும் இவருக்குக் குருவா யிருக்கின்றனர். ஆனுல், பால் யாவஸ்தையில், மந்திர தீக்ஷைக்கும், உத்தராவஸ்தையில், சந்நியாச தீக்ஷைக்கும் குருவா யிருந்திருக்கலா மென்பது தர்க்கத்தினு லறியப்படுகின்றது. இவரும் இவருக்கு முன்

பட்டத் திருந்த, ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தரும், இப் பரம்பரையின் 10-வது பட்டத் திருந்த வித்தியா தீர்த்தர், அல்லது, வித்தியா சங்கரரது மாணுக்க ரென்று, சிலர் எழுதியிருக்கின்றனர். பின் வரும் குருபரம்பரையிலும், வேலாயுத முதலியார் செய்த, சங்கர விஜய முகப்பி லுள்ள குரு பரம்பரையிலும், வித்தியா தீர்த்தருக்குப் பின் பாரதி கிருஷ்ண தீர்த்தர் ,அவருக்குப் பின்,வித்தியாரண்யர் என்று தெளி வாய்க் காணப்படுகின்றது.

குரு பரம்பரை

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஜகத்குரு பரம்பரா பிராரம்ப:

1 மகாதேவோ மஹாவிஷ்ணுஸ் திரிதியக் சதுராநந:
வசிஷ்டசக்தி யோகீந்திர, பராசர மகாமுநி,

2 வியாசஸ் சுகோ கௌடபாதோ கோவிந்த பகவாந்முநி
குரு: ஸ்ரீ சங்கராசார்யஷ் ஷண்மத ஸ்தாபநப் பிரபு:

3 சுரேச்வராசார்ய யோகீ நித்ய போத கநாபித:
ததோ ஞாநகநாச்சார்யோ க்ஞாநோத்தம மகாமுநி:

4 ஞாந கிர்யாசார்ய வர்யஸ்ததா சிஹ்ம கிரீச்வர: [தக:
ததச்சேஸ்வர தீர்த்தாக்யோ ந்ருசிஹ்மமா காபித தீர்த்

5 வித்யா சங்கர தீர்த்தாக்யோ லம்பிகா யோக தத்பர:
பாரதீ கிருஷ்ண தீர்த்தாக்யோ வித்யாரண்ய மகாமுநி:

6 வித்யா நகர நிர்மாதா வேதபாஷ்யாதிகிருத் குரு:
ஸ்ரீ சந்திரசேகராக்ய பாரதீச தத: பரம்

7 ந்ருஸிஹ்ம பாரதீவர்யோ ந்ருசிம்மகோபாசகஸ் தத:
பக்த சங்கர நாமாக்யா புருஷோத்தம பாரதீ
8 ஸ்ரீ சந்திர சேகராபிக்ய பாரதீதந்தரதி
ந்ருஸிஹ்ம பாரதீசைவ புருஷோத்தம பாரதீ
9 பாரதீ ராமசந்த்ராக்யோ ந்ருசிம்ஹாக்ய பாரதீ
நருஸிஹ்ம பாரதீ பூயோ ந்ருஸிஹ்மோபி நவஸ்தத:
10 சச்சிதாநந்த யோகீந்த்ர: ஸ்தம்பே ஹேரம்பதர்சக:
ஸ்ரீந்ரு சிம்ஹாக்யயோகீந்திர; சச்சிதாநந்த பாரதீ
11 ததச்சாபிநவாக்ய சச்சிதாநந்த பாரதீ
ததோபிநவ பூர்வ ஸ்ரீந்ருசிம்ஹாபித பாரதீ
12 சச்சிதாநந்த யோகீச: தபச்சர்யா பராயண:
புநச்சாபிநவாக்ய சச்சிதாநந்த பாரதீ
13 ஸ்ரீ சிருங்கே புராதீச: ஸ்ரீ வித்யா மந்தர போதக:
ஸ்ரீ மதாசார்ய சதிர்ச: ஸ்ரீ ந்ருஸிஹ்மாக்ய யதீஸ்வர:
14 பாரதீ நாம வித்யோத: தபச்சீலோ ஜகத் குரு:
ராஜாதிராஜ சம்பூஜ்யோ ஜகத் யோதோ விராஜதே.
15 ஸ்ரீ சாமுண்டாக்ர பாபூர்ண ஸ்ரீ கிருஷ்ணேந்திரேண கீர்திதா
ஜீயாத் சதா ஸ்ரீ சிருங்கேரி ஜகத்ருரு பரம்பரா
இதி ஜகத் குரு பரம்பரா

(1) சதாசிவம், (2) நாராயணர் (விஷ்ணு), (3) பிரஹ்மா, (4) வசிஷ்ட மகர்ஷி, (5) சக்தி மகர்ஷி, (6) பராச மகர்ஷி, (7) வேத வியாசர், (8) ஸ்ரீ சுகாச்சாரியர், (9) கௌடபாதாச்சாரியர், (10) கோவிந்த பகவத் பாதாச்சாரியர்.

(1) ஸ்ரீ சங்கராச்சாரியர், (2) சுரேசுவ ர ா ச ா ரி ய ர், (3) நித்ய போத கந ஆசாரியர், (4)ஞாந கந ஆசாரியர்: (5) ஞாந உத்தம ஆசாரியர், (6)ஞாந கிரி ஆசாரியர்,(7) சிஹ்ம கிரி ஆசாரியர், (8) ஈசுவர தீர்த்தர், (9) நிருசிஹ்ம தீர்த்தர், (10) வித்யா சங்கர தீர்த்தர், (11) பாரதீ கிருஷ்ண தீர்த்தர், (12) வித்தியாரண்யர், (13) சந்திர சேகர பாரதி, 14. நிரு சிஹ்ம பாரதீ,(15) சந்திர சேகர பாரதீ ,(16) புருஷோத்தம பார்தீ, (17) சங்கராநந்த பாரதீ, (18) சந்திர சேகர பாரதீ, (19) நிருசிஹ்ம பாரதீ. (20) புருஷோத்தம பாரதீ, (21) ராம சந்திர பாரதீ, (22) நிருசிஹ்ம பாரதீ, (23) நிருசிஹ்ம பாரதீ, (24) அபிநவ நிருசிஹ்ம பாரதீ, (25) சச்சிதாநந்த பாரதீ, (26) நிருசிஹ்ம பாரதீ, (27) சச்சிதாநந்த பாரதீ, (28) அபி நவ சச்சிதாநந்த பாரதி, (29) அபிநவ நிருசிஹ்ம பாரதீ, (30)சச்சிதாநந்த பாரதீ, (31) அபி நவ சச்சிதா நந்த பாரதீ, (32) நிருசிஹ்ம பாரதீ, (33) சச்சிதாநந்த சிவ அபி நவ நிருசிஹ்ம பாரதீ, (34) சந்திர சேகர பாரதீ, (35) அபி நவ வித்தியா தீர்த்த பாரதீ, என்பவர்கள் ஆவார்கள்.

இவ் விதத்தால்,ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் 12வது பதவியில்; ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிக ளிருந்திருக்கின்ற னர். இதனாலும், இப் போது, ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமி களுக்கு 500 வருஷங்களுக்கு மே லாயின என்று நிச்சயிக் கப்படுகின்றது. ஸ்ரீ பாரதீ தீர்த்தர், வித்யாரண்யருக்கு நேரே பரம்பரைக் குருவா யிருத்தலால், அவர், செய்த பிரஹ்மாநந்த மென்னும் நூலையும், அவராலேயே செய்யப் பட்ட தான விஷயாநந்தம் 39-வது சுலோகத்தின் "உபயம் திருப்தி திபேஹி ஸம்யக்ஸ்மாபிரீரிதம்" இரண்டும் திருப்தி

தீபத்தில் நம்மால் செவ்வை யாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.'' என்னும் வாக்கியத்தாற் றுணியப்படும். திருப்தி தீப முதலிய 4 பிரகரணங்களையும் சேர்த்து, ஸ்ரீ பஞ்ச தசி யென்னும் ஒரு நூலாக வித்தியாரண்யர் செய்திருக்கலா மென்று ஊகிக்கப்படுகின்றது. ஜீவன் முக்தி விவேகத்தில், "துக்க நாச சுகாவிர்ப்பாவ வடிவ நான் காவது, ஐந் தாவது, பிரயோஜநங்கள் பிரஹ்மாநந்தத்தி லுள்ள, நான் காவது அத்தியாயத்தினல் நிருபிக்கப்பட்டிருக்கின்றன. அவ் விரண்டும் இங்குச் சுருக்கிச் சொல்லப்படுகின்றன'' என்று வித்தியாரண்யரே, தமது முகத்தால், கூறியிருத்தலால், அவருக்குப் பிந்திய காலத்தில், ஆநந்த பஞ்சகம் செய்யப்பட்டிருக்கலா மென்பது கூடாத தாம்:

இவ் வாசிரியர், இவ் வாறு, சிருங்க கிரியில், சிறிது காலம் இருந்து, பின் வயதில், ஸ்ரீ பஞ்ச தசி முதலியவற்றினைச் செய்து, தாம் பிரஹ்ம சமரச பாவத்தினை யடைந்தனர், காயத்திரி யானவள், தனது சாக்ஷாத்கார சமயத்தில், "உத்தராவஸ்தையில் நீ ஓர் நூலைச் செய்வாய். அதை எவன் செவ்வையாய்ப் படிப்பானே, அவனுக்குச் சகல நூல்களையும் படித்தலிலும், கேட்டலிலும், சாமர்த்திய முண்டாகுக'' என்று வரம் கொடுத்தாள் என்று கேள்விப்படுகின்றோம். அஃது, இதுவே யெனப்படுதலின், இது வரப் பிரசாத கிரந்த மாம். ஆதலால், சதுர் வேத பாஷ்ய கர்த்ருத்வ முதலிய சர்வக்ஞத்வ விசிஷ்ட மகா ஞுகிய, வித்தியாரண்யரும், பாரதீ தீர்த்தரும் சேர்ந்து செய்ததும், வரம் பெற்றது மான. இப் பஞ்ச தசிக் கிரந்தம், எல்லா நூல்களிலும் மே லான தாம். இதனைப் படித்து, முமுக்ஷுக்கள் வேதாந்தப் பிரகிரியையில், சமர்த்தர்க ளாய்ப், பிரஹ்மாத்ம ஏகத்வத்தை அபரோக்ஷ மாக்கி, ஜீவன் முக்தி, விதேக முக்திகளுக்குப் டங் குடையவர்க ளாகுக.

ஜீவந் முக்தி விவேகம், சங்கர திக் விஜயம், மாதவ நிதாநம், ஜைமிநீய அதிகரண மாலை, பஞ்ச தசி, நான்கு வேத பாஷ்யம், ஸ்ரீ பாரதீ தீர்த்தர், வியாசாதிகரண மாலை முதலியவற்றைச் செய்திருப்ப தாகத் தெரிய வருகிறது. ஆனால், அவரது சரித்திரம் விசத மாகத் தெரிய வில்லை யாகலின், இங்கு எழுதப்பட வில்லை.

4. ஸ்ரீ வித்தியாரண்ய ஸ்வாமிகளின் சரித்திரம்

முடிந்தது.

5. *ஸ்ரீ சதா சிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரம்.*

உருவமார் யானை முகன்தனை உலகோர்
உணருருச் சண்முகன் றன்னைத்,
திருவளர் ஈசன் நற்றிரு வடியை
திவ்விய அம்பிகை அடியைக்,
கருவினில் வராம லிருக்குமத் தொய்தக்
கரைதனில் வாழுநற் பதியாம்,
நெரூரி னில்வாழ் சதாசிவப் பிரஹ்ம
நெடுங்கழல் நினைந்துவாழ்த் திருவாம்.

சதாசிவப் பிரஹ்ம மென்று பிரசித்தி பெற்ற சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஓர் அரிய ஜீவந் முக்தர், தென் னிந்தியாவில், இராஜயோக பரம்பரையிற், கடைசியாகத் தோன்றியவர். கரூர்ப் பட்டணத் தருகில், ஏறக் குறைய 150 வருடங்கட்கு முன்னர், வாசஞ் செய்தவர். அத்தியயந காலத்திலேயே, மிக நுண்ணிய அறிவுடையவரா யிருந்தவர், காவேரி நதி தீரத் துள்ள, திரு விசை நல்லூ

ரென்னுங் கிராமத்தில், கல்வி பயின்றவர். அப்போது, அக் கிராமத்தில் இராம பத்திர தீக்ஷதரும், "அய்யாவாள்" என்று பிரசித்தி பெற்ற,ஸ்ரீவேங்கடேசரும், மகா பாஷ்யம் கோபால கிருஷ்ண சாஸ்திரியாரும், வித்தியார்த்திகளா யிருந்தனர். இயற்கையிலேயே ஙிரம்ப அறி வாற்ற லமைந் துள்ள இவர்களினும், சதா சிவப் பிரஹ்மேந்திரர் மிகு சூட்சும அறி வுடையவராக விளங்கி வந்தனர். அவர் தமது வித்தியா குருவுடன் பல விஷயங்களைக் குறித்து வாதஞ் செய்பவரா யிருந்தனர். அவ் வமயங்களில் அவர் தமது குருவினும் மேம்பட்ட யுக்தி யுடையவ ராக விளங் கினர். அவரது வித்தியாப்பியாச முடியுங் காலத்தில், அவர் பத்திநி பருவ மடைந்த தாகக் கேள்விப்பட்ட அவ ரது தாயார், அன்று விசேஷ போஜநம் சமைப்ப தாயினர்.

சதாசிவப் பிரஹ்மம் வழக்கம் போல் வீட்டிற்கு வந்த காலத்தில், போஜந காலம் மேற் சொன்ன காரணத் தால் தாழ்த்தது. தாழ்த்தது கொண்டு, அவர் அடியில் வரு மாறு யோசிக்க லாயினர்:-

சம்சார முளை கிளம்புவதற்கு முன்னரே போஜந காலந் தாழ்த்தது, அது முளைத்தா லுண்டாந் துன்பத் திற்கோ அளவு கிடையாத தாகும்,என் றிவ் வாறு தீர்க்கா லோசனை செய்து, சம்சார துக்கம் மிகப் பொல்லாத தென்று அதை விடுத் துடனே ஞாந குருவை யடைய பிரயாணப்பட்டனர். அன்று முதற் கொண்டு உலகத்திற் சிறிது மின்பமின் றென்று அதனை வெறுத்து உலகிற் றுன்பாநுபவிகளா யுள்ள ஜீவர்களுக் கிரக்கங் கொள்வா ராயினர். ஜாதி, மத, வித்தியாச மின்றி, ஜீவ கோடிகளைச், சம பாவனை யாகப் பாவிப்பதும், யாவர், யாது கொடுப்

பினும், அதனை வாங்கி யுண்பதுமா யிருந்தனர். ஒருவரும் அன்னங் கொடாத காலத்தில், வீதியி லெறிந்து கிடக்கும் எச்சி இலைகளி லுள்ளவற்றை யுண்பர். இவ் வா றொழுகு மிவரைக் கண்ட ஜநங்கள் இவ ருடைய அதிதீவர பக்கு வத்தை யறியாது, இவரைப் பயித்தியம் பிடித்தவ ரென்று தீர்மானித் திருந்தார்கள். இவர், அதிவிரை வாகப் பரம சிவேந்திர சரஸ்வதி யென்னுங் குருவை யடுத்து, அவரி டத்து யோகாப்பியாசம் பயிலுவ தாயினர். விரை வாக வித்தையிலும், யோகத்திலும், தேர்ச்சி யடைந்தனர். இக் காலத்திற்றான் அவர் கிரந்தங்களும், கீர்த்தநங்களும்,இயற்றி யிருத்தல் வேண்டும். இக் கிரந்தங்களும், கீர்த்தநங்களும், அவருடைய கொள்கை யின்ன தென்பதை நன்கு விளக் கும். ஆத்மாநுபவத்தை யடைந்த யோகியின் கீர்த்தியை விளக்கிக் காட்டும் 62 சுலோகங்க ளடங்கிய ஆத்ம வித்தி யா விலாச மென்னுங் கிரந்தமும், அவற்று ளொன் றாம். இவர் தமது குருவினிடத்து வருபவரை யெல்லாம் பற் பல கேள்விகள் கேட்டு அவமானப்படுத்திக் கொண்டு வருவர், அவ் வாறு வருங்கால், ஒரு கால், குருவானவ ரிவரை, அதற்காக வெகுண்டு, எப்போது வாய் மூடுமோ வென்று கூறியவளவில், அவர் தமது விவேக மின்மையை யுற்று நோக்கி, அன்று முதல் மௌந விரதம் மேற்கொள்பவ ராய்த் தமது குருவை வணங்கித் தமது குற்றத்தை மன் னிக்கும்படி வேண்டி, அவரது உத்திரவு பெற்றுப் பர தேசி யாகித் தமது ஜநநப் பிரதேசத்தை விட்டு அமராவதி யின் காவேரி நதி தீரத்திற் சஞ்சரிப்பா ராயினர். ஆங்கு ஆத்மாநுபவமிக்குறச் சமாதி புரிந்து வருவதும், விஷய மொன்று மின்றியே உன்மத்தரைப் போற் றிரிபவருமா யிருந்தனர். ஆண் டுள்ள காடுகளிற் சென்று ஜநங்கட்குப்

புலப்படாமல் பல நாள் வெளி வராமல் சமாதி கூடியிருப்பர்; பல கால் நதியின் மணல் மேடுகளில், அரிதுயில் கொண்டிருப்பர். ஒரு கா லவ ரவ்வா றிருக்கும் போது காவேரி நதியிற் திடீ ரென்று பெரு வெள்ளம் வந்து, அவரை அடித்துக் கொண்டு போய் மணலிற் புதைத்து விட்டது. இதைக் கரையின் மீதிருந்த ஜநங்கள் கண்ணுற்றுத் தமது பூஜ்ய ரான யோகீசுவரருக்கு அபாயம் வந்து விட்ட தென்று கிலேசப்பட்டு அவரை மீட்கக் கூடாமல் வீட்டிற்குப் போயினர். மூன்று மாத காலங் கழித்த பின்னர், மழைக் கால முடிவாக, நதியில் ஜலம் வடிய, இராஜாங்க வேலை யாட்கள் மணலை வாரத் தொடங்கினர். அவர்களுள் ஒருவன் தன் மண் வெட்டியை மணலிற் பாய்ச்சும் போது அது தடைப்பட்டது; அவ னதனைப் பிடுங்கிப் பார்க்கும் போது அதில் இரத்தம் பட்டிருப்பதைக் கண்டு, யாவரும் பயமும், அதிசயமுங் கொண்டு, அவ் விடத்திற் சுற்றிலும் பெரும் பள்ளந் தோண்டினர்; தோண்டிய போது ஆண்டு சதாசிவப் பிரஹ்மேந்திரர் சமாதியி லிருக்கக் கண்டு, பய பத்தியுடன் ஆச்சரியமுங் கொண்டு, அவரைச் சமாதியினின்றும் பகிர் முகப் படுத்தினர். அவர் துயிலினின்றும் விழித்தவர் போல எழுந்து, தமக்கு யா தொன்றும் நேராதது போலத் தம் வழியே சென்றனர்.

பின் னொரு கால், கருரை யடுத் துள்ள ஒரு கிராமத்தில்,ஒரு குடியானவன் தன் வயலி லுள்ள நெல்லை யறுத்து நேர மாய் விட்டமையின், அவ் விடத்திலேயே அம்பாரம் போட்டு, இரவிற் காவல் வைத்து விட்டுப் போயினன். அன் றிராத்திரி சதாசிவப் பிரஹ்மேந்திரர் அவ் வழியே

வர, இரவு மிகவுங் கறுக்க லாக இருந்தமையின், நெல் லம்பாரம் தடுத்தமை பற்றி யிடறி விழுந்து விட்டனர். இதனைக் கண் ணுற்ற காவற்காரர், நெல்லைத் திருட வந்த திருட னென் றிவரைக் கருதித் தடி கொண் டடிக்கக் கைகளை நோக்கவும், நோக்கிய கைக ளிறங்காமல் நின்ற இ-த்திலேயே விடியற் கால பரியந்தம் நின் று கொண் டிருந்தனர். விடிந்த பிறகு யஜமானன் வந்தபோது அவ ரிடத்து வேலையாட்கள் நடந்த விருத்தாந்தத்தைச் சொல் லிய போது,சதாசிவப் பிரஹ்மம் அவ் விடத்தைவிட் டகன் றனர்; அகன் ற போது வேலையாட்கள் தமது கைகள் கீழே யிறங்கத் துன்பத்தினின் றும் நீங்கி யுய்ந்தனர்.

மற் றொரு கால், இராஜாங்க உத்தியோகஸ்தர்க ளவ்வூர் வந் திறங்கினார்கள். அப் போது தலையாரிகள் சமையலுக் காக அவர்களுக்கு விறகு கொண்டுவரக் காட் டிற்குப் போய், விறகு வெட்டிச் சுமைக ளாக்கித் தங்கள் தலைமேற் றூக்கிக் கொண்டு, ஒரு சுமை யெடுப்பதற்கா ளில்லாமையை நோக்குஞ் சமயத்தில், சதாசிவப் பிரஹ் மம் தற் செயலா யவ் வழி போவா ராயினர். அவரைத் தலையாரிக ளிழுத்துக் கொண்டு வந்து, விறகுச் சுமையை அவர் தலைமீது வைத்து, அவரைத் தம்மோடு கூட யிழுத் துப் போயினர். தலையாரிகள் தங்கள் சுமைகளைக் குறித்த விடத்திற் போட்டனர். கடைசியில் சதாசிவப் பிரஹ் மமும் தமது சுமையை யவற்றின்மேல் போட்டனர்: அங்ஙனம் செய்த உடன், அங் கிருந்தவ ரியாவரும் அதி சயிக்கு மாறு, அச் சுமைகள் தீப்பற்றி யெறிந் தொழிந்தன. இத் தகைய அற்புத மூர்த்தியாய் விளங்கும் இம் மகா சித்த புருஷரைச் சாதாரண ஜநங்கள் பயித்தியக்கார ரென்று மதித்திருந்தனர். சிறு பிள்ளைகள், அவரைப் பரிகாசஞ்

செய்வதும், அவரைச் சுற்றி நின்று ஆடுவதும், பாடுவதுமா யிருந்தனர். அவரும், தமக்குக் கிடைப்பனவற்றை எவர்கட்கும் பகுத்துக் கொடுப்பர். இவ் வாறிருக்கும் போ தொரு நாள், அச் சிறு பிள்ளைகள், மதுரையில், நடக்கும் ரிஷப வாகன மஹோற்சவத்தின் மகிமையைத் தமது தந்தைமார் சொல்லக் கேட்டு, அத் திருவிழாவைக் காண ஆசை கொண்டு, அதி விநயத்துடன் சதாசிவப் பிரஹ்மத்தை மதுரைக் கழைத்துக் கொண்டு போய்த் தங்கட்கு அவ் வுற்சவத்தைத் தரிசிப்பிக்கு மாறு செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். இக் காரியம் அசாத்திய மான தென் றவர்கட்குத் தெரிந்திருந்தும், பரிகாசமாய்க் கேட்டனர். அவர் அச் சிறுவர்களைத் தமது தலையிலும், தோளிலும், முதுகிலு மேற்றிக் கொண்டு, கணப் போது கண்களை மூடிக்கொள்ளும்படி சொல்லினர். மறு கணத்தில், அச் சிறுவர்கள் கண்களைத் திறந்த போது, அவர்கள் மதுரையி லிருந்து ரிஷப வாகன மகோற்சவத்தைத் தரிசித்துக்கொண்டிருப்பதாகக் கண்டனர். அச் சிறு பிள்ளைகள் விரும்புஞ் சிற்றுண்டி முதலியனவற்றை அவர்களுக்கு வேண்டுமான வரையில் கொடுத்து அவர்களைக் களிக்கச் செய்து, பொழுது விடியுமுன் அவர்களை அவர் தம் இருப்பிடங் கொண்டு வந்து சேர்த்தனர். விடிந்தவுடன் சிறுவர்கள் தமது தந்தைமார்களிடஞ் சென்று நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லிச் சிற் றுண்டிகளையுங் காண்பித்தனர்.

இம் மகானுபாவர், மகா சிவராத்திரி, கோகுலாஷ்டமி முதலிய புண்ணிய தினங்களில் ஒரே காலத்தில் பல க்ஷேத்திரங்களி லிருப்பதாகவுங் காணப்பட்டனர். அக் காலங்

களில், அவர் தம திருப்பீடத்தி லிருக்கக், காசி, இராமேசுவர முதலிய க்ஷேத்திரங்களி லிருந்து வந்தவர்கள் அத்திவ்ய தினங்களி லவர் அவ் விடத்திலிருந்த தாகவும், கூறுவாராயினர்.

படிப்பின் வாசனை சிறிது மின்றிய, ஒரு பிரஹ்மசாரி பிரஹ்மேந்திர ருடைய கிருபையைப் பெரு மாறு, அவர் செல்லு மிடங்களி லெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து செலுவா ராயினர். கடைசி யாக அப் பிரஹ்மசாரி மீது இரக்கங் கொண்டு, சைகையினுல் அவர் வரவில் திருப்தி காட்டி வந்தனர். ஒரு நாள் பிரஹ்மேந்திரரை நோக்கித் தமக்கு ஸ்ரீரங்கத்தி லுள்ள ரங்கநாதரைத் தரிசிப்பிக்கு மாறு செய்ய வேண்டு மென்று வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே பிரஹ்மசாரியைக் கண்ணை மூடிக் கொள்ளச் சொன்னர். அவர் கண் விழித்தவுடன், ரங்க நாதர் சந்நிதியி லிருந்து ரங்க நாதரைத் தரிசிப்பா ராயினர். சதாசிவப் பிரஹ்மம் அந்தக் கணமே, அவ் விடம் விட்டு மறைந்து விட்டனர், பிரஹ்மசாரி அவரை யெங்குந் தேடிக் காணுமல், மெல்ல மெல்ல அநேருருக்கு வரவும், சதாசிவப் பிரஹ்மம் அங்குச் சமாதியி லிருக்கக் கண்டனர். சில காலத்திற்குப் பின்னர், சதாசிவப் பிரஹ்மேந்திரர், அவர் மீது கருணை கூர்ந்து, சில மந்திரங்க ளுபதேசித்தனர். அவற்றின், அநுஷ்டான பலத்தினுல், அப் பிரஹ்மசாரி சமஸ்த புராணங்களிலும் விற்பத்தி யுண்டாய் புத்திமான்கள் நிறைந்த சபையில் வியாக்கியானஞ் செய்வா ராயினர், அதற் காகக் கருரில், அநேக இராஜாக்கள் பல வெகுமதிகளும், மானியங்களும் தந்தனர். அந் நிலங்களை யவருடைய சந்ததியாரிப்போதும் அநுபவித்து வருகின்றனர்.

பின் ஒரு காலத்தில், பிரஹ்மேந்திரர், யதேச்சை யாகப் போகுங் கால், மகமதியத் தலைவ னொருவ னிறங்கி யிருந்த மார்க்க மாகப் போவா ராயினர் அவன் தன்னு டைய பத்தினிகள் சகிதம் தனது அறையி லிருக்கும் போது, இவர் நிர்வாணியாய் அவ் வழியிற் செல்லுவதைப் பார்த்து, மிகவுங் கோபங் கொண்டு, தனது கத்தியால் அவ ரது ஒரு கையை வெட்டிவிட்டனன். பிரஹ்மேந்திரர் இதைக் கவனியாமலே, தமது வழியே போனார். அதனைக் கண்ணுற்ற மகமதியத் தலைவன், ஆச்சரிய முற்று அவர் மகாநுபாவ ரென மதித்துத், தான் செய்த தீமைக் கஞ்சி அவர் பின் சென்றனன். அவர் நெடு நாளைக்குப் பின் னர்த் திரும்பிப் பார்க்கவும், மகமதியத் தலைவன், தம் மைத் தொடர்ந்து வருவதைப் பார்த்து, அவனை நோக்கி, அவன் வருங் காரணத்தைக் கேட்டனர். அவன் தான் செய்த குற்றத்தை மன்னிக்கு மாறு அவரை மிகுதி யாகப் பிரார்த்தித்தனன். அவருக்கு நடந்த தீமை யின்ன தென்று தெரியாமையின், அவன் சொல்லிய அப் போது தான், அவருக்குக் கை போனது தெரிந்தது; தெரிந்தவுடன் தமது மற்றோர் கையால் முட மாகிய கையைத் தடவ, அது வளர்ந்து விட்டது, மகமதியத் தலைவன் அளவு கடந்த ஆச்சரிய மடைந்து, அவரது ஆசீர்வாதம் பெற்றுப் போயினன். இவ் விர்த்தாந்தம் சதாசிவேந்திர ஸ்துதியில் கூறப்பட்டிருக்கின்றது.

சதாசிவப் பிரம்மம் கோயில்களுக்குப் போவது முண்டு; மூர்த்தியை நோக்கி அர்ச்சநா மந்திரங்களை யுச் சரிப்பது முண்டு. அக் கால், ஒவ்வொரு மந்திரத்திற்கும்

ஒவ்வொரு புஷ்பம் மூர்த்தியின் சிரசின் மீது அவாந்தர மாய் விழுவ துண்டாம்.

சதாசிவப் பிரஹ்மேந்திரர், இயற்றிய அற்புதங்கள் பல வுள. அவற்றில், சில இங்குக் கூறப்பட்டன. இவற்றை நபுவது அசாத்திய மாயினும், அவற்றை ஜநங்கள் மறந்து விடுவதில்லை. அவை கர்ண பரம்பரை யாய் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு சித்த புருஷருக்கு, இவ் வற்புதங்கள் மிகு சுலப மாம். சதாசிவப் பிரஹ்மேந்திரரோ, பரம சித்த மூர்த்தி: அவர் மநம் எப் போதும் ஆத்மாகார மாகவே யிருக்கும். அவர் உலக விஷயத்திற் சிறிதேனு மிச்சையில்லாதவர். அவர் தமது சரீரத்தில் மண்ணும், சாம்பலுமே பூசிக் கொண்டு, இவ் வுலகம் தாம் பூசிக் கொண்டிருக்கும் மண்ணினும், சாம்பலினுந் துச்ச மான தென்னு மெண்ண முடையவர். அவர் அடைந்த சொரூப ஸ்திதியை நோக்கி அவரது குரு அவரைத் துதி செய்திருக்கின்றனர். அவர் கருத்து எப் போதும் பிரபஞ்சாதீத மாய் ஆநந்த மாகவே யிருக்கும். அவருக்கு உணவு முதலியவற்றைப், பற்றிச் சிறிதுங் கவலையே கிடையாது. அவர் உலகத்தி லிருந்த போதிலும், புளி அரு பழமு மோடும் போலப் புரை தீர்ந்த நெஞ் சுடையவரா யிருந்தனர்.

இவர் 1738-ம் வருஷத்தில், புதுக் கோட்டையைச் சார்ந்த திரு வரங் குளத்திற் கடுத்த காநகத்தில் திரிந்து கொண்டிருக்குங்கால், புதுக் கோட்டை யரச ரான விஜய ரகுநாத தொண்டைமான் சக்ரவர்த்தி இவரைக் கண்டனர். தொண்டைமான் சக்ரவத்தியும் அதிக விரக்தி யுள்ளவ

ராய்த் தமது காலத்தைப் பெரும்பான்மையும் அக் காநகத்தில், சமாதி புரிவ தாகக் கழித்து வந்தனர். இச் சக்ரவர்த்தி பிரஹ்மேந்திரரை எட்டு வருட காலம் விடாது தொடர்ந்து வந்தனர். அதைப் பிரஹ்மேந்திரர் நோக்கி, அவர் மீது பிரீதியுற்று, மணலில் சில உபதேச மொழிகளை யெழுதிக் காட்டித், திரிசிர புரத்தைச் சார்ந்த பிக்ஷாண்டர் கோவிலில் வசிக்கும் தமது சகபாடி யாகிய கோபால கிருஷ்ண சாஸ்திரி யவர்களிடம், மேல் நடக்க வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுமா றுஞ்ஞாபித்தனர். அவர் அங்ஙனமே, சாஸ்திரியாரைத் தமது சமஸ்தாநத்திற்கு வர வழைத்து, அவருக்கும், அவருடன் வந்த பிராஹ்மணர்களுக்கும், மாநியங்கள் விட்டனர். அக்காலேற்பட்ட செப்புச் சாசந மின்னு மிருக்கின்றது. தசரா பண்டிகையும், தக்ஷிணாமூர்த்தித் திரு விழாவும், சதாசிவப் பிரஹ்மேந்திரர் கட்டளைப்படி நடத்தப்பட்டன. சதாசிவப் பிரஹ்மேந்திரர் எழுதிக் காண்பித்த விடத்திலுள்ள மணலை, அரசர் கொண்டு போய்த் தேவஸ்தாநத்தில் வைத்துப் பூஜித்து வருவா ராயினர். அஃ திப்போதும் பூஜிக்கப் பெற்று வருகின்றது. சதா சிவப் பிரஹ்மேந்திரர் புதுக் கோட்டைக்கு வந்த நாள் முதல், தேசம் செழிப் படைந்ததுடன் தொண்டை மான் சக்ர வர்த்திக்ளும், கீர்த்தியும், பெருமையு மடைந்தனர். இக் காநகத்தில்,இவர் நெடுங் கால மிருக்க வில்லை, ஆனால், யதேச்சை யாகத் திரிந்து கொண்டிருந்தனர். அப்படித் திரியுங் காலத்தில், ஐரோப்பாவிலுள்ள துருக்கி தேசம் வரைக்குஞ் சென்றனர். பிறகு அவர் நெடுங் காலம் சமாதியி லிருந்தனர். அப்பா லொரு நாள், அவர் யான் மிதுந ரவி ஜேஷ்ட சுத்த தசமி யன்று பரிபூரண மடைவே னென்றும்; அன்று காசியி லிருந்து,

ஒரு பிராமணன் பாண லிங்க மொன்று கொண்டு வருவா னென்றும், நெரூரி லுள்ள பிராமணர்களிடத்துச் சொல் லினர். மேலும், அந்தப் பாண லிங்கத்தைத் தமது சமாதிப் பக்கத்தில் பிரதிஷ்டை செய்து, கோயி லொன்று கட்டும் படியும் ஆக்ஞா பித்தனர். குறிப்பித்த நாளில், காசியி லிருந்து ஒரு பிராஹ்மணன் பாண லிங்கத்தைக் கொண்டு வந்தனன்; அன்று சதாசிவப் பிரம்மேந்திரர் தமக்குத் தோண்டிவைத்த சமாதியில் தாமே யிறங்கிப் பரிபூரண மடைந்தனர்.

அவ் வூரி லுள்ளார், சமாதி கட்டி, அதன் பக்கத்தில் கோயிலையுங் கட்டிச் செய்ய வேண்டிய கிரியை யெல்லா வற்றையுஞ் செய்து முடித்தனர். இவர், அதே காலத்தில், மூன்றிடத்திற் சமாதி யாயினர் என்று சொல்லப்படுகின் றது; ஆனல், நெரூரி லுள்ள சமாதி தான் தென் னிந்தியா விற் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. அந்தச் சமாதிக் கும், கோயிலுக்கும், வேண்டிய செலவிற் காகத் தொண் டைமான் சக்கரவர்த்தி விஸ்தார மாக மானியம் விட்டிருக் கின்றனர் இப் போதும், சதாசிவப் பிரஹ்மேந்திரர் குரு பூஜை வருடந் தோறும் ராஜாங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றது.

தொண்டை நன் நாடு சான்றோ ருடைத் தென்றபடி இவ் வரிய மகாத்மா தொண்டை நன் நாட்டில் வாசஞ் செய்து. தம் முடைய ஞான சீல மிகுதியால் விளங்கி யிருந் தனர். யாவரும் அவரை அப்போ தன்றி, இப் போதும் பூஜித்து வருகின்றனர். பூஜ்யராய் சிருங்க கிரியி லெழுந் தருளியிருந்த ஜகத் குரு சச்சிதாந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிக ளவர்களும் சதாசிவப் பிரஹ்மேந்திர ரைப் பூஜித்திருக்கின்றனர்.

இப் பிரஹ்மேந்திரரை ஜகத் குருவே துதித்தா ரெனின், நாம் அவரது பெருமையை யெடுத்துச் சொல்லுத லமையுமோ?

சதாசிவப்பிரஹ்மேந்திரர் திரு வாய் மலர்ந்தருளிய கிரந்தங்கள்:—

1. பிரஹ்ம சூத்திர விருத்தி.
2. பன்னிரண்டு உபநிஷத்துக்களுக்குத் தீபிகைகள்
3, ஆத்ம வித்யா விலாசம்.
4. அத்வைத ரச மஞ்சரி.
5. வேதாந்த சித்தாந்த கல்பாவல்லி.
6. யோக சுதாகரம்,

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரச் சுருக்கம்.

முற்றிற்று.

6. கோவில் ஊர் முக்திராம லிங்க ஞான தேசிகர் சரிதம்

முதலாவது.

கோவில் ஊர்

ஸ்ரீ ஆண்டவர் திருவவதாரஞ் செய்தல்.

நாவலர் போற்றும் சமிசிழல் அமரும்
    நாயகன் நளிநன் மலரை,
மாஎழில் ஆறு முகன்தனைக் கொற்ற
    வாள்இறை திருநெல்லை அம்மை,
ஆவல்நல் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
    கருளொடு ஞானம தளித்துக்,
கோவிலூ ரினில்வாழ் முக்திரா மேச
    குருபரன் தாள்நிதம் பணிவாம்.

திருப் பெருந் துறைக்கு மேல்பால், கண்ட தேவிக்கு வடபால், திருப் புத் தூருக்குக் கீழ்பால், திரு மெய்யத்திற் குத் தென்பால், இன் னுங்கு க்ஷேத்திரங்களுக்கும்,நாப்பண் மாதவ முடைய மதுப் பிரிய ரிஷியின் வேண்டுகோளின் படி, ஸ்ரீ சாலிவாடீசுவரி என்னும் அம்மையோடு ஸ்ரீ இராச கட்க பரமேசுவரர் எழுந்தருளி யிருக்குஞ் சமிவந க்ஷேத்திர மென்னுங் கோவி லூருக்குக் கிழக்குத் திக்கி லுள்ள, காரைக் குடி என்னுந் திரு நகரத்தில், தந வைசிய குலத்தில், அவதரித்த, குமரன் செட்டியார், குமார ராகிய மெய்யப்ப செட்டியாரும், அவரது அருமை மனைவியா ராகிய வள்ளி யம்மையும், முற்பவங்களிற் செய்து வந்த நற் றவங்களாலும், தென் றிசையி லுள்ளோர் நெடு நா ளாகப் புரிந் துள்ள புண்ணிய புஞ்ச பரிபாகத்தாலும், அவ் வள்ளி யம்மையின் றிரு வயிற்றில், பிரம விஷ்ணு முதலிய தேவர்களாற் காண்டற் கரிய சச்சிதாநந்த பே ரொளிப் பிழம் பாகிய சிவமே, தற் காருண்ணியத்தினலே, நீ ராவி யாய்த் தடித்தது போலவும், உலக ரக்ஷக ரான பகவான் தேவகி திரு வயிற் றுதித்தது போலவும், ஸ்ரீ சங்கரர் ஆரி யாம்பாள் திரு வயிற் றுதித்தது போலவும், ஸ்ரீ முக்தி ராம லிங்க தேசிக ரென்னுந் திரு நாமத்துடன் றிரு வவதாரஞ் செய்தருளினர். அக் காலத்தில், உலகத்தில் நன் னிமித்தம், நன் மழை, நல் லொழுக்கம், நன் னடை, நன் னினைவு, நற் கரும முதலிய பல வளங்களும் உண்டாயின. சிவா லயம், விஷ்ணுவாலயம், பிர்ம்மாலயம் முதலியனவும் சிறப்புற் றோங்கின.

இரண்டாவது.

ஸ்ரீ ஆண்டவர் பால லீலை.

அப்படித் திரு வவதாரஞ் செய் துள்ள ஆண்டவர், பால்ய வயதிற் றனே. சகல கலைகளையும் அப்பியாசஞ்

செய்து தேர்ச்சி யுற்று. கிரகத்திற்கு வந்து விவேக வைராக்கியாதி சாதநங்களாற் சிறந்து விளங்கிச், சில காலம் ஊருக்கு ஆக்கினேய திசையி லுள்ள, திரு வாசல் மடத்தில், தமது நண்பரான நல்லான் செட்டியுடன் ஞாந நூற்பயிற்சி செய்து, பிரபஞ்சம் உண்மை என்னும் மயக்கம் இன்மையின், அதில், அலக்ஷிய மாகக், கெம்பீர மாகிய அநேக வார்த்தைகளைக் கேட்பவ ரதிசயிக்கும்படி வசநித்துக் கொண்டு, குருவை யடைந்து, குரு சம்பிரதாயத்தை விளக்க மெண்ண முடையராய், அக் காலத்தை எதிர்பார்த்துச் சில நா ளிருந்தனர். அக் காலத்தில், ஒரு நாள், தமது திரு மேனி நிறைய விபூதியை உத்தூளித்துக் கொண்டு தமது உண்மை நிலையில் வழக்கப்படிக்கு அகநோக்குற் றிருக்கையில், அக் கருத்தை யறியாத அவரது மாதா பிதாக்கள், ஏதோ குழந்தை, தேவதா சல்லியத்தினுல், திக்குப் பிரமை கொண்டது போல, வொன்றும் வசநியாது அடிக் கடி இவ் வாறு இருக்கின்றதே என்று மன வருத்த முற்றுத் தேவி கோட்டையில், சுவாமியை அழைப்பித்துக் கேட்டுப் பரிகாரஞ் செய்யக் கருதி, ஆண்டவரை அழைத்துக் கொண்டு போய் வைத்திருந்த காலத்தில், அந்தச் சுவாமி யாடியின் சமீபத் திருந்த ஆண்டவரை அங்குள்ளவர்கள், சுவாமி யாடிக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கும்படி சொன்னுர்கள். அப் பொழுது, ஆண்டவர் சுவாமி யாடியைப் பரீக்ஷித்தற் கெண்ணிப் பாக்கை, வெட்டிக் கொடுத்து, வெற்றிலையிற் சுண்டைக் கா யளவுள்ள மூன்று சுண்ண வுண்டைகளை வைத்து மடித்துக் கொடுக்க, உடனே சுவாமி யாடிக்கு, வா யழற்சி உண்டாக, அதனுல் வருத்த முற்று வெளியில் வந்து, வாய் நீரை

உமிழ்ந்து. யாரப்பா இப் பாலகனைச் சுண்ணம் தடவி வெற்றிலை மடித்துக் கொடுக்கச் சொன்னவ ரென்று கேட்க, அப் பொழுது, ஆண்டவர் சுவாமி யாடியை நோக்கி, நம் போலிகட்குப் போலச் சுவாமிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாமா வென்று, அதிக மாக வைத்துத் தந்தேன், தாங்களே சுவாமி யாடின தாக இருந்தாற் கொஞ்சங் கொஞ்ச மாக வைத்துத் தருவேன் என்று பரிகாசஞ் செய்ய, உடனே சுவாமி யாட்டமும் நின்றுவிட்டது. அதன் பின்னர், ஆண்டவரை மாதா பிதாக்க ளிருவரும் நகரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டனர். மற்றொரு நாள், தமது நகரத்தில், சில வீடுகளோடு, தமது வீடும் நெருப்புப் பற்றி எரியும் பொழுது, தம் வீட்டி லுள்ளவர்கள்; அங் குள்ள பதார்த்தங்களையும், அன்னத்தையும், ஒரு விடத்தில் எடுத்துக் கொண்டு வந்து வைத்து, குழந்தைகளோடு ஆண்டவரையும், கூட வைத்துவிட்டு, மற்றைய பதார்த்தங்களை எடுத்தற் பொருட்டு மீண்டுங் கிரகத்திற்குப் போயினர். அப் பொழுது ஆண்டவர், பாத்திரங்களி லிருந்த அன்னத்தை அக் குழந்தைகளோடு தாமும் நிரம்ப உண்டு, சமீபத்தி லிருந்த குட்டிச் சுவற்றில், வஸ்திரத்தை மடித்துப் போட்டு, ஏறி உட்கார்ந்து, கையிற் கோலேந்தி, சிவலைக் காளை ஊரை மேய்கின்றது, நீ செவ்வை யாக நட வென்று அதட்டி அடிக்க, அச் சமயத்திற் றமையனார் பத்தினி பார்த்துப், பாத்திரத் துள்ள அன்ன முழுமையும் குழந்தைகளோ டுண்டது மல்லாமல், குட்டிச் சுவற்றையும் குதிரை யாக நடத்தினுல், நடக்குமோ வென்க் கேட்க, அதற் குத்தர மாக நீ மகிழ்ந னன்றி மக்கட் பெறுவையாயின், இக் குட்டிச் சுவருங் குதிரை யாக

நடக்கு மெனப் பரிகாசஞ் செய்தருளிக், கெம்பீர மாக விருந்தனர், இவ் வாறு, செகத்தில் அப்பிரமாண புத்தி யுடனே சின் னுட் கழித்தனர்.

மூன் முவது.

ஸ்ரீ ஆண்டவர் சிக்கலுக் கெழுந்தருளல்.

ஒரு நாட் டமது பிதா வானவர், வட திசையின் கண் ணுள்ள திருநாகைக் காரோணத்திற்கு அடுத்த சிக்க லென் னும் தலத்திற்கு வியாபார நிமித்தம் பிரயாணப்பட்ட பொழுது, யானும் உடன் வருகின்றே னென்று ஆண்டவர் பிதாவைப் பார்த்துத் திரு வாய் மலரப், பிதாவும் அதற் குடன்பட்டு உனது கருத்தின்படியே வா வென்று அழைத்துக் கொண்டு போய்த் தமது வியாபாரத்தி லிருந் தனர், ஆண்டவரும் சிக்கலில் பிதாவோடு கூட எழுந் தருளி யிருக்குங் காலத்தில், அச் சிக்கலைச் சார்ந்த பொருள் வைத்த சேரியில், பிரம்ம நிஷ்ட ராகிய உகந்த குரு சுவாமிக ளென் னும் திரு நாம முடைய ஒரு மகான் இல் லறத் திருந் தனர்.

நான் காவது.

ஸ்ரீ ஆண்டவர் குரு பரம்பரை.

சச்சிதானந்த சொரூப மான ஸ்ரீ தெக்ஷிணு மூர்த்தி ஆதி ஜகத் குரு, அவர் மாணுக்கர், விண்டு, அவர் மாணுக்கர், பிரமன், அவர் மாணுக்கர், வசிட்டர், அவர் மாணுக்கர், சத்தி, அவர் மாணுக்கர், பராசரர், அவர் மாணுக்கர், வியா சர்: அவர் மாணுக்கர், சுகர், அவர் வழி வந்த மாணுக்கர், கௌட பாதர், அவர் மாணுக்கர், கோவிந்த யோகி, அவர் மாணுக்கர், சங்கராசாரியர், அவர் மாணுக்கர், பத்ம பாதர்,

அத்தாமலகர், தோடகர், வார்த்திகர், ஆகிய நால்வர் அவர் வழி வந்த மாணுக்கர், வித்தியாரண்ணியர், அவர் வழி வந்த மாணுக்கர் சுப்பிரமணிய தேவன், அவர் மாணுக்கர், நயிந ஈசன், அவர் மாணுக்கர் அழகப்ப வாரியன், அவர் மாணுக்கர், வீர ருத்திர குரு, அவர் மாணுக்கர், திரு நாகைக் காரோணம், வெற்றிலைக் கடை முத்தைய சுவாமிகள், அவர் மாணுக்கர், உகந்த குரு சுவாமிகள்.

ஐந்தாவது

ஸ்ரீ ஆண்டவர் குருமூர்த்தியாகிய உகந்த குரு சுவாமிகள் சரித்திரம்.

இப் பரம்பரையி லுள்ள உகந்த குரு சுவாமிகள், திருவள்ளுவ நாயனுர் போலவும், கபீர் தாசர் போலவும், பரதிருஷ்டிக்கு நெய்யுந் தொழி லுடையவர் போன் றிருந்து, அதனுல் வரும் ஆதாயத்தை மூன்று விபாகமாக்கி, மறு நாட் டொழிற்கு நூல் வாங்குதற் பொருட்டு, ஒரு பாகமும், குடும்பச் செலவிற்கு ஒரு பாகமும், அடியார்கட்கு அன்ன தானத்தின் பொருட்டு ஒரு பாகமுமாக விநியோகித்து, இவ் விதம் நா டோறும் நடத்திக் கொண்டு, முமுட்சுத் தன்மை யுடைய ராய்த் தம்மை வந்து சர ணடையாநிற்பவரைச் சோதித்து, ஞானோபதேசஞ் செய்து வந்தனர். அக் காலத்தில், இராய வேலூர், கந்தப்ப சுவாமிக ளென்னும் ஒரு மகா னுனவர், உகந்த குரு சுவாமிகள், தம்மை வந்து சர ணடைந்த முமுட்சுகளுக்கு ஞானா நுக்கிரகஞ் செய்தலைக் கேள்வியுற்றுச், சில சாதுக்களோடு பொருள் வைத்த சேரியை அடைந்து, ஸ்ரீ உகந்த குரு சுவாமிகளைப் பத்திர புட்ப பலாதிகளால், ஆராதித்து

நமஸ்கரித் தெழுந்து, இரு கரங்களையும் சிரமேற் குவித்து, நின்று, சனன மரண சம்சார துன்பத்தில் வருந்தும் அடியேங்க ளுய்யும் பொருட்டு, ஞானாநுக்கிரகஞ் செய்தருளல் வேண்டு மென்று பிரார்த்திக்க, அவ் விண்ணப்பத்தைத் திருச் செவி யேற் றருளிய உகந்த குரு சுவாமிகளும், பரீக்ஷித்து அநுக்கிரகம் செய்யத் திரு வுள்ளங் கொண்டு, அவ் விடத்துக் குரு குல வாசஞ் செய்யும்படி உத்தரவு செய்து, மறு நாட் டொழிற்கு வடி கஞ்சியில் முதனாள் நனைத்து வைத்திருந்த பா வுண்டை நூலைப் பிழிந்து, அக் கஞ்சியைப் பருகும்படி கட்டளையிட்டருள, அதைப் பார்த்து வைராக்கியாதி சாதந மின்றிய மற்றைச் சாதுக்கள் அப் பா வுண்டை நூற் கஞ்சியைப் பருகுதற்கு மநஞ் சகியாது, தெருவிற் பிக்ஷைக்குச் சென்றனர். அக் கந்தப்ப சுவாமிகள், ஒருவருமே, அக் கஞ்சியை மநச் சகிப்போடு முகங் கோணாது வாங்கிப் பருகி, திருப்தி யடைந்திருந்தமையைக் கண்டு, இவரே பக்குவி யெனத் தெரிந்து, சில காலம் அவ் விடத்திருக்கும்படி ஆக்ஞாபித்து, அத்தியாத்மீக சாத்திரத்துவார மாகப் பரமாத்துவித ஞானத்தை அநுக்கிரகித்தருள, அக் கந்தப்ப சுவாமிகளும், அவ் வநுக்கிரகத்தினாற் சுவாநுபூதியை அடைந்து, குரு மூர்த்தியினிடத்து விடை பெற்றுக் கொண்டு, திரு வண்ணமலை என்னுந் தலத்தினை யடைந்து, ஈசாநியத்தில், ஆரணிய வாச மாக, நிர்ச்சநப் பிரதேச மான விருக்ஷத் தடியில், சமாதி யுற்றுச், சின் னாட் போக்கிய பின், அவ் வண்ணமலையார் அங் குள்ள அடியார்களுக்குச் சொற்பநத்திற் றோன்றி, திரு மட மியற்றுவிக்கும்படி அநுக்கிரகித் தருள, அவ் வநுக்கிரக பலத்தாற், பக்தர்கள் அவ் வீசாநியத்தில், திரு மட மொன் றியற்றுவிக்க, அதி லெழுந்தருளி இருந்தமை பற்றி, ஈசாநிய

சுவாமிக ளென்றும், தேசிக ரென்றும், திரு நாமம் பெற்று விளங்கி வந்தனர். பின் னொரு நாள், மலையினின்றும் ஒரு பெரும் புலி இறங்கி அவ் வீசாரிய சுவாமிக ளிருக்கு மிடம் நோக்கி, நேரே வந்தது. அவ் வீசாரிய மூர்த்திகளும் தற் செயலாற் சமாதியை விட்டு விழித்துப் பார்த்துப், புலி வருவது தெரிந்து, அண்ணுமலை யப்பா வந்தனையா வென்று தடவிக் கொடுக்க, அவ் வேங்கையும், சற்று நேரம் முன்னர்ப்படுத் திருந்து, எழுந்து மலையை நோக்கிச் சென்றுவிட்டது. அவ் வாறு, அவ் வீசாரய மடத்தில் எழுந்தருளி யிருந்து, பக்குவத்தோடு கூடித் தம்மைச் சர ணடைந்த, சிவ குரு சுவாமி, பரசு ராம சாமி முதலிய மகான்களுக்கு ஞானாநுக்கிரகஞ் செய்து கொண்டிருந் தனர். இது நிற்க,

ஆறுவது

ஸ்ரீ ஆண்டவர் குரு மூர்த்தியைச் சரணடைதல்.

ஆண்டவர் தமது தந்தையாருடன் சிக்கலில், தமது கடையில் எழுந்தருளியிருக்கையில்; தங்களிடத்துக் கணக்கு வேலையி லிருந்த, மதுரைச் சொக்க லிங்கம் பிள்ளை என்பவர், இரேகை சாஸ்திரத்தினும், சோதிட சாஸ்திரத் தினும், வைத்திய சாஸ்திரத்தினும், இலக்கியங்களினும், பூரண விற்பத்தியுடையராயும், நல் லொழுக்கம், நற் குணங் களிற் சிறந்தவராயும், புத்திமானுயு மிருந்தனர். அவர் ஆண்டவரது திருக் கரத்தைப் பற்றி, அவ் வஸ்தத்தி லுள்ள இரேகைகளை ஆராய்ந்து பார்த்து, ஆச்சரியத்தை யடைந்தவராய், இக் குழந்தை தக்ஷிணு மூர்த்தி அவதார மாக விருத்தலால், இக் குழந்தையினுல் உலகம் அதிக க்ஷேமத்தை அடையத் தக்கதா யிருக்கு மென்று நினைத்து

ஆருத அன்பு மேலீட்டினால் அக் குழந்தையை அழைத்துக் கொண்டு உகந்த குரு சுவாமிகள், ஞானாநுக்கிரகம் பண்ணிக் கொண்டிருக்கும் கிரகத்திற்குப் போய், அருளே திருவுருவான அவ் வாசிரியரைத் தரிசிக்கும்படி செய்து, தாமும் நமஸ்கரித்து நின்றனர். அப்போது, உகந்த குரு சுவாமிகள், சொக்கலிங்கம் பிள்ளையைப் பார்த்து, இக் குழந்தை யாரென வினவ. அது கேட்ட சொக்கலிங்கம் பிள்ளை எனது முதலாளி யாகிய மெய்யப்ப செட்டியார் குமாரன் என்று சொல்லிப், பின்னும், இக் குழந்தை கல்வியினும், கேள்வியினும், குணத்தினும், புத்தியினும், விவேகாதி சாதநங்களினும், மிகச் சிறந்ததாகத் தெரிகின்றது. ஆதலால், அவ் விடத்தில் அநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அதனைத் திருச் செவியேற் றருளிய, உகந்த குரு சுவாமிகள், ஆண்டவரைப் பார்த்துத் தரியின் மீது அவிழ்த்து வைத்திருந்த ஞான வாசிட்ட கிரந்தத்தைக் கொடுத்து, இதனைப் படி என்று கட்டளையிட்டருள. அதை அன்புடன் வாங்கி, அதி லுள்ள இக்குவாகு கதையைத் தமது கெம்பீர வாக்காற் படிக்க, அது கேட்ட உகந்த குரு சுவாமிகள், மிக வியப்புற்று, அதிபாலியத்தில் இப்படிப்பட்ட குணங்களை யுடைத்தாதல் அரிதாகலின், இவன் காரணம் பற்றி வந்தவனே, குரு சம்பிரதாயம் விளக்குதற் பொருட்டு இங்ஙனம், நடிக்கின்றனன் எனத் திருவுளத்தின்கண் மகிழ்ந்து, சொக்கலிங்கம் பிள்ளையை பார்த்து, உமது கருத்தின்படியே ஞானாநுக்கிரகஞ் செய்குதும்,நீவிர் போமின் என விடை கொடுத்து அனுப்பிவிட்டு, அன்று முதல் சாஸ்திரங்களைக் கிரமமாகச் சைசவத்திற் ஞெருடருமின் நூ லென்னும் வாசிட்டத்திற் கிலக்கியமாகப் போதித்து வந்தனர். அக் காலத்தில், ஆண்டவருக்குப் பதின் மூன் றாண்டுகள் நிறைந்தன.

ஏழாவது
ஸ்ரீ ஆண்டவருக்கு விவாக முடித்தல்.

இப்படிச் சின்னாட் போய, பின்னர், ஆண்டவருடைய தந்தையானவர் குழந்தைக்கு விவாக முடித்தற் பொருட்டு, உகந்த குரு சுவாமிகள் சந்நிதியிற் பிரார்த்தித்து உத்திரவு பெற்றுக்கொண்டு, குழந்தையோடு தன்னகரடைந்து விவாக எத்தநஞ் செய்து, தேவி கோட்டையில், நன் மனையில், நன் முகூர்த்தத்தில், மீனாம்பிகை என்னும் நாம முடைய ஒரு கன்னிகையை மணஞ் செய்வித்து மணமகனையும், மணமகளையும், தம தூருக்கு அழைத்து வந்து மிகக் களிப்புற்றிருந்தனர்.

எட்டாவது
ஸ்ரீ ஆண்டவர் எதிர் கால மகிமையை யோகீசுவரர் வெளியிடல்.

இவ் வாறு, ஆண்டவர் விவாகஞ் செய்து கொண்டு தமது திரு நகரத்தி லெழுந்தருளி இருக்கும்போது, வட திசையின்கண்ணின்றும் இராமேசுவரயாத்திரையின் பொருட்டுக் காரைக் குடிக்கு வந்த ஓர் பிராமண யோகீசுவரர், அங் குள்ள அன்பர்கள் வேண்ட அந் நகரத்திற் சில நாள் வசித்திருந்தனர். ஒரு நாள் தம்மை யாதரித்து வரும் வைசியரை அவ் யோகீசுவரர் பார்த்து, இந் நகரில் யாரேனும் விவேகிக ளுளரோ வென்று வினவினர், அது கேட்ட அவ் வைசியர்கள்,எங்கள் வருணத்தில் உதித்த ஓர் பிள்ளை, கல்வி அன்றி யொழுக்கங்களிற் சிறந் துள தென்றனர். ஆனால், எனது சல்லாபத்தின் பொருட்டு அப் பிள்ளையை அழைத்து வம்மி னென்றார். அவ் வைசியர்களும் ஆண்ட

வரிடத்துச் சென்று, அவ் யோகீசுவரர் கருத்தை அறிவித்தனர். அது கேட்ட ஆண்டவர், நல்லது வருவ லென்று பழங் கற்கண்டு முதலிய கையுறைகளைக் கொடு சென்று, அவ் யோகீசுவரர் முன் வைத்து வணங்கி நிற்கையில், அவ் யோகீசுவரர் ஆண்டவர் திரு வுருவின்கண் ணிக ழும் திருக் குறிப்பைக் கண்டு, பொருக் கென எழுந்து, ஆண்டவரைக் காடாலிங்கனஞ் செய்து, கணப் பொழுது, ஆநந்தக் கடலி லமிழ்ந்திப் பரவசராய் நகரத்தாரைப் பார்த்து, வாரீர் வைசி யர்களே, இவர் நும் பிள்ளை யல்லர், தெக்ஷிண மூர்த்தியின் கலை யென் றறியுங்கள், அநேகரைக் கிருதார்த்த ராகப் பண் ணவும், வேதாகமோக்த சிவ தருமம் முதலியவற்றைத் தம் மொழுக்கத்தால் உலகத்திற் குபதேசித்தற் பொருட் டும், முமுட்சுகளுக்கு ஞானா நுக்கிரகஞ் செய்தற் பொருட் டும், ஆவிர்ப்பவித்திருக்கின் றனர். இங்ஙனங் கூறிய எனது மாற்றத்தின் பொருளைச் சில நாளில் நீவிர் கண் கூடாக அறிவீர்க ளென அருளிச் செய்தனர். அன் று தொடங்கிப் புண்ணிய சீலர்களான வைசியர்க ளநேகர் ஆண்டவரைச் சிவ மே எனக் கண்டு வழிபட்டு வந்தனர்.

ஒன் பதாவது

ஸ்ரீ ஆண்டவர் பொருள் வைத்த சேரிக் கெழுந்தருளல்.

ஆண்டவர் சில நாட்கழித்த பின்னர், குருவைத் தரி சிக்குங் கருத்தினராய், அன்ப ராகிய நல்லான் செட்டியாரு டன் தமது நகரத்தினின் றும், பிரயாணப்பட்டுச் சிக்கலைச் சார்ந்த பொருள் வைத்த சேரிக்குச் சென்று, குருவைத் தரிசித்து வணங்கிக் கொண்டு, தமது கடைக்குச் சென்று

வியாபாரஞ் செய்யத் தொடங்கி, அதில் வரும் ஆதாயத்தைத் தம தன்பர்களுடைய குடும்ப சம்ரக்ஷணையின் பொருட் டுதவியும், குரு சுவாமிகளுடைய திரு மனைக்கு வேண்டுவனவற்றை யுபகரித்தும், தமது குடும்பத்தாருக்கும் வேண்டுவனவற்றை நல்கியும், இவ் விதமாகச் சில காலம் சம்ரக்ஷணை செய்துவந்து, தொழிற் செய்யுங் காலந் தவிர ஏனைய கால மெல்லாங் குரு சந்நிதியில் நிரந்தரம் சிரவண மநநாதிகளைச் செய்து வந்தனர்.

பத்தாவது

ஸ்ரீ ஆண்டவருக்குக் கொப் புடை யம்மை யநுக்கிரகித்தல்.

இவ் வாறு, சிக்கலில் எழுந்தருளி யிருக்குங் காலத்தில், ஒரு நாள் ஆண்டவரது அருமைத் திரு மேனியிற், சுர உபாதி உண்டாகித், தங்கள் கடையிற் சயனித்திருக்கும் போது, ஆண்டவருக் கருகில், ஒரு பிராமணக் கந்நிகை யிருந்தனள், ஆண்டவர் நித்திரை விழித்த காலத்திற் சமீபத் திருந்த அக் கந்நிகையைப் பார்த்து, அம்மா நீயார் என்று வினவினார், அதற்கு அக் கந்நிகை நாம் வசிப்பது காரைமா நகரம், தமக்குச் சுரம் கண்டிருப்ப தாகக் கேள்வியுற்று அச் சுர நிவிர்த்தியின் பொருட்டு, ஜலம் கொண்டு வந்தேன் என்று சொல்ல, அவ் வார்த்தையைக் கேட்டுள்ள, ஆண்டவர், சற் றுலோசித்திருக்க, அச் சமயம், அப் பிராமணக் கந்நிகை வடிவங் கொண்டிருக்குங் கொப்புடை யம்மை, இந்தச் சலத்தை அருந்தக் கடவை என்று கொடுத்தருள, ஆண்டவர் கரத்தினது தாபத்தால், அந்தச் சலத்தை வாங்கி

உட் கொண்டு நிமிர்ந்து பார்த்த மாத்திரத்தில், அப் பிரா மணக் கந்நிகையின் றிரு வுருவத்தைக் காண்கிலர். உடனே சுரம் நின்று விட்டது, சூரியன் உதய மான பின் னர், ஆண்டவர் குருமூர்த்தியின் கிரகத்திற் கெழுந்தருளிச் சந்நிதியில் நடந்த வாறு விண்ணப்பிக்க, அதனை வினவிய குரு மூர்த்தியும், மகிழ்வுற்றனர். ஆண்டவர் கொப் புடை யம்மை தான் இப் பிரசாதஞ் செய்தருளியது என்று நினைத் துக், குரு மூர்த்தியினது சந்நிதியில் அவ் வம்மை பேறிற் றுதியாய்,

(அறு சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.)

ஆலோ னிறந்து முமைபாகத்
 தண்ண லிறந்துங் கமலமுறை,
நாலா நநத்தோன் முடிந்திறந்து
 நார தாதி யோரிறந்துங்,
காலா திகளு மொழிந்திறந்துங்
 ககன மாதி யழிந்திறந்து,
மாலோ கங்க ளிறந்துநின்ற
 யம்மே கொப்பை யுடையாளே.

என்ற கவியைத் திரு வாய் மலர்ந் தருளினர்.

பதினொன்றாவது

ஸ்ரீ ஆண்டவர் வாசிட்ட பாடாரம்பஞ் செய்தல்

இவ்வண்ண மாக, ஆண்டவர் பொருள் வைத்த சேரியிற், குரு குல வாசஞ் செய்து, சாதந மாகிய மா தநத் தைச் சம்பாதநஞ் செய்து, சாஸ்திர சோதநம் பண்ண எண் ணித்,தமது குரு மூர்த்தி ஆதநத் திருந்து போதநஞ் செய்ய, வேதாந்த சூடாமணி, கைவல்லியம்,பஞ்சதசப் பிரகரணம்,

வாசு தேவ மநநம் முதலிய சற் சாத்திரங்களைச் சிரவணம் பண்ணிப், பின்னும்,மகா காவிய மான ஸ்ரீ ஞாந வாசிட்ட மென்னுங் கிரந்தத்தையும் சிரவணஞ் செய்ய வேண்டு மென்னும். திரு வுள்ள முடையவ ராய்த், தமது குரு மூர்த்தி யாகிய உகந்த குரு சுவாமிகளை நமஸ்கரித்து, அன்புடன் ஆராதித்துத் துதித்து, நன் முகூர்த்தத்தில் பாடாரம்பஞ் செய்து, அதிவிநய பக்தி விசுவாசத்துடன், ஐயந் திரிபறப் பொருள் கேட்டுக் கொண்டு வந்தனர்.

பன் னிரண் டாவது

ஸ்ரீ ஆண்டவர் அருணாசல சுவாமிகளைச் சந்தித்தல்.

அக் காலையில்,குரு வாரந் தோறுந் தியாகப் பணி சாத்தப் பெற்று சோடசோபசாரத்துடன், அநேகம் அடியார் களால் ஆராதிக்கப்பட்டவராயும், ஞாநாநுபூதியினை யுடைவராயும், வீரசைவாகம விதிப்படி சிவ பூசை சிவ சின்ன முடையவராயும், தமக்கு அதிப்பிரியராயும், திரு நாகைக் காரோணத்தில் வசிப்பவராயு மிருக்கின்ற,அருணா சல சுவாமிகளை உகந்த குரு சுவாமிகள் புத்தூரைச் சமீபித்திருக்கும் அக்கரைக் குளம் என்னும் தடாகத்தின் கரையில் சந்தித்த காலத்தில், அவ் வருணாசல சுவாமிகள் தங்களிடம் ஞாந வாசிட்டம் வாசித்து வரும் குழந்தையைப் பார்க்க வேண்டு மென்று எனக்கு மிக விருப்ப முண்டாயிருக்கிறது. ஆகையால், தாங்கள் அனுப்ப வேண்டு மென்று சொல்ல, அதைச் செவியுற்ற, உகந்த குரு சுவாமிகள்,ஆண்டவரை அழைத்துத் திரு நாகைக் காரோணம் அருணாசல சுவாமிகளைத் தரிசித்து வா வென்று ஆஞ்ஞாபித்தனர். அவ் வாஞ்ஞையைச் சிரமேற் கொண்டு,

அநேக பலாதிகளையும், கற்கண்டு முதலிய ரச வர்க்கங்களை யும், எடுப்பித்துக் கொண்டு, சாதுக்களோடு திரு நாகைக் காரோணஞ் சென்று, அருணாசல சுவாமிகளின் திரு மனை வாயிலை அடைந்து, அங்குள்ள சீடர்களால், தமது வரவை சுவாமிகளுக்குத் தெரிவித்தனர். அச் சமயம் ஆத்மார்த்த பூஜை செய்து கொண்டிருந்த சுவாமிகள், அதனை விரை வின் முடித்துக் கொண்டு உடனே வெளியில் வந்து திண் ணையி லெழுந்தருளி யிருந்தனர். ஆண்டவர் தாம் கொண்டு சென்ற பலாதிகளைச் சந்நிதியில் வைத்து, அடியார்களோடு நமஸ்கரித் தெழுந்து நிற்க, அருணாசல சுவாமிகள், ஆண்ட வரைப் பார்த்து, அப்பா குழந்தாய் இப் பொழுது என்ன சாஸ்திரம் அப்பியாசிக்கின்றனை என்று வினவ, அது கேட்ட ஆண்டவர், சுவாமின்! அடியேன், ஞான வாசிட்டம் அப்யாசிக்கின்றே னென்று விண்ணப்பஞ் செய்ய, அருணா சல சுவாமிகள், எவ் வளவு கவி ஆயின வென்று வினவ, இட்சுவாகு கதையில் கவிகள் 60 வரையிற் பாடங் கேட் டாகி யிருக்கிற தென்று சொல்ல, இது வரை கதை எத் தனை என்று வினவ, கதை 41, கவி ஆயிரத்துத் தொளா யிரத் தைம்பத் தாறு என்று விரைவிற் சொல்ல, (சோனை தன்னால்) என்னுந் தொடர் வருங் கவியைச் சொல் லென்று சொல்லு முன்னே.

திங்களினு மிகக்குளிர்ந்து செவ்விதாய்
நோயெல்லாந் தீர்க்கப் பட்ட,
வங்கனுற வருநோக்கஞ் செய்தானை
வணக்கத்தா லருக்கி யத்தாற்,
றுங்கவுப சாரத்தான் மந்தார நன் மலரின்
சோனை தன்னாற்,

சங்கரனை யேத்தினே னுமையையுமப்
படியேத்தித் தாளில் வீழ்ந்தேன்.

என்று அதி விரைவிற் சொல்லிய வாக்கியத்தைக் கேட்டு, உன் வாய்க் கல்லவோ சர்க்கரை போடவேண்டு மென்று சொல்லி, எழுந் துள்ளே சென்று, ஆராதநத்திற்கு வைத் திருந்த சர்க்கரையை அள்ளிவந்து வாயைத் திற வென்று வாயி லிட்டருளிக், கட்டித் தழுவிக் கொண்டு, பேரா நந்த முற்று விடை கொடுத் தனுப்பினர். பின்னர், ஆண்ட வர் விடை பெற்றுக் கொண்டு, மீண்டு சாதுக்களோடுங் குருவின் றிரு மனை வந்து சேர்ந்தனர்.

பதின் மூன் றுவது.

ஸ்ரீ ஆண்டவர் குரு மூர்த்தி சந்நிதியிற் கவி விண்ணப்பித்தல்.

பின் னொரு காலத்தில், ஆண்டவர் தமது ஆசிரியருடனே இரவில் நித்திரை செய்து, விழித்துத் தம தாசிரிய ராகிய உகந்த குரு சுவாமிகளின் திரு வடியை வருடிக் கொண்டிருக்குங் காலத்தில், அக் குரு மூர்த்திகள் ஆண்ட வரைப் பார்த்து, அப்பா ஒரு கவி சொல் லென்று திரு வாய் மலரு முன்னே.

உன்னுமுணர் வுக்குணர் வாயெனக் குண்மைதந்தாய்
மன்னுஞ்சுரு திப்பொரு ளாய்வழி காட்டிநின்றாய்
பின்னுங்குரு வாயடைந் துன்னருள் பேணவைத்தாய்
என்னென் றுரைப் பேனின்க ருணையி ருந்தவாறே.

என்னும் வைராக்கிய சதகத்தி லுள்ள கவியை அன்பு மேலீட்டினாற் கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகச்

சொல்லினர். உகந்த குரு சுவாமிகள் உடனே எழுந்திருந்து, வாரி யணைத்துக் காடாலிங்கநஞ் செய்து கொண்டு, எவ் விடத் திருந்து இப் புதையலை எடுத்தா யென்று வியந்து ஆராமையுற்றனர்;

பதி மூன் காவது

ஸ்ரீ ஆண்டவர் வாசிட்ட சமாப்தி செய்தல்.

இவ் வித மாக, ஆப்தாதி சதுர் விதப் பணிவிடைகளாற், குரு மூர்த்திகளைச் சந்தோஷிப்பித்து விநயத்துடன் வாசிட்ட சிரவணஞ் செய்து வருங் கால், ஆண்டவருக்கு இராகவரைப் போன்று, ஊந சோடச வருடங்க ளாயின. அக் காலத்தில், ஆண்டவ ருடைய பிதாவானவர், தன் னகரத்திற்குப் பிரயா ணமாகி வரும் சமயத்திற் றமது வியாபார நிமித்தம் நியமித்து வைத்த கூட்டாளி யிடத்தில், நமது குழந்தை உகந்த குரு சுவாமிகளிடம் பாடங் கேட்டு வருவதாற், பெட்டித் திறவு கோல் முதலியவைகளைக் கொடுத்தாற் றிரவியத்தை மிகச் செலவு செய்து போடுவான், ஆகலின், அங்ஙனங் கொடாது, செவ்வையாகப் பார்த்துக் கொள்ளுக வென்று சொல்லி, மீண்டு தமது நக ரடைந்தனர். அஃதை அறிந் துள்ள ஆண்டவர், நன் முகூர்த்தத்தில், வாசிட்ட சமாப்தி செய்வதற்குச் சோதிடர்களைக் கொண்டு ஆராய்ந்து, சுபதிந மேற்படுத்தி, அதற் குரிய சாதநங்களைச் சம்பாதநஞ் செய்து கொண்டு வந்தனர். அப் போது, வாசிட்ட சமாப்தி நியமன காலம் நெருங்கியது, அக் காலையில், ஒரு நாள் ஆண்டவர் தடாகக் கரையில் தந்த சுத்தி செய்து கொண்டிருக்கையில், அம் மார்க்கமாகத் தமது நகரத்தி லிருந்து கூலியாள் ஒருவன் எல்லாக் கடைக்காரருக்கும் ஓலைகள் கொண்டு வந்தான். ஆண்ட

வர் அவனை விளித்துத் தமது கடைக்கும் ஓலை இருக்கின்றதா வென்று பார்த்து, இல்லாததினாற், றமது கடையிலிருக்கின்ற கூட்டாளியினுடைய மாதா இறந்துவிட்டதாகவும், தம்பியிடத்திற் பெட்டிச் சாவியைக் கொடுத்து விட்டு, வந்து சேரவேண்டிய தென்றும், ஊரிலிருந்து தமது தமையனார் எழுதியது போன்று, ஒரு ஓலை எழுதி, அவ் வோலைகளோடு கட்டிக் கொடுத்தனுப்பிவிட்டுக், குரு மனைக்குச் சென்று விட்டனர். கூட்டாளியான மெய்யப்ப செட்டியாரும், ஓலை வந்தவுடன் படித்துப் பார்த்து மனக் கலக்க முற்று, ஆண்டவரிடம் ஓடி வந்து அழுது, ஓலையைக் காட்டிப் பெட்டித் திறவு கோலைக் கொடுத்துவிட்டுத்,தம தூருக்குப் பிரயாண மாயினர். அதன் பின்னர் வாசிட்ட சமாப்திக்கு நியமித்த முகூர்த்தத்திற் றமது இஷ்டம் போல் வேண்டிய திரவியங்களைச் செலவு செய்து, திரு வண்ணாமலை ஈசாநிய சுவாமிகள் முதலிய அளவிறந்த சாதுக்களை அங் கங்கு திருமுக மனுப்பி வரவழைத்துத், தமது குரு மூர்த்திக ளாகிய உகந்த குரு சுவாமிகளை உயர்ந்த ஆசநத்தின்கண் எழுந்தருளும்படி செய்து, பால், தயிர், சந்தநம், பன்னீர் முதலிய திரவியங்களாலும், கங்கை முதலிய அநேக புண்ணிய தீர்த்தங்களாலும், அபிஷேகஞ் செய்து, திவ்விய மான உயர்ந்த பீதாம்பரத்தால் அலங்கரித்துத், திரிபுண்டர தாரணஞ் செய்து, சந்தநம், புநுகு சவ்வாது களப கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைச் சாத்தி, அற்புத மான சரப்பளி. கண்டி, மாலை, கடுக்கன், மோதிரம், வலயம் முதலிய அநேக ஆபரணங்களாலும், மல்லிகை, முல்லை, சண்பகம், செங்கழுநீர், மரு, மருக் கொழுந்து முதலிய அநேக புட்பங்க

ளாலும், அலங்காரஞ் செய்து, அறு சுவைகளமைந்த நால் வகை உண்டிகளையும், அதி மதுர மான அநேக பழ வர்க்கங்களையும், நிவேதநஞ் செய்து, சோடசோபசாரங் களால் அன்பு முதிர்ந்து, உள்ளங் கனிந்து, ஆராதித்து யாவருங் கண்டு பிரமிக்கும்படி அதிக சிறப் பாக முப் பத் திராயிரங் கிரந்தத்தோடுகூடிய ஆதி கவி வான்மீகி பகவான் வாக்கினின்று முண்டாகிய மகா காவிய மான பிரகத் வாசிட்டத்திற் சொல்லிய வண்ணம் நடாத்தி, ஆநந்த சமுத்திரத்தில், அமிழ்ந்தி இருந்தனர், இஃதிவ்வா றிருக்க, ஆண்டவர் கடைக் கூட்டாளி, மெய்யப்ப செட்டியா ரென்பவர் ஊருக்கு வந்து, முதலாளி வீட்டிற்குச் சென்ற பொழுது, அவரைக் கண்ட ஆண்டவ ருடைய தமையனு ரான மாயாண்டி செட்டியார், நீவி ரேன் வந்து விட்டீ ரென்று கேட்டனர். அது கேட்ட மெய்யப்ப செட்டியார் எனது மாதா இறந்து விட்டதாகத் தாங்கள் ஓலை எழுதி யிருந்தீர்களே அதற்காகவே வந்தே னென்று கூற, அப் பொழுது மாயாண்டி செட்டியார் இது வென்ன ஆச்சரி யம், நான் எப் பொழுது ஓலை எழுதினேன், உனது தாய் முந்தாநாட் டானே முப்பத் தைந்து ரூபாய் நெல் வாங்கு தற் பொருட்டு வாங்கிச் சென்றனள் என்று சொல்லி, ஆண்டவர் வாசிட்ட முடிப்பதற் கெத்தனை நா ளிருக்கின் றது செலவுக்கு ரூபாய் கேட்டனரோ, வென்று வினவி னர், அது கேட்ட மெய்யப்ப செட்டியார், நான் புறப்படும் பொழுது வாசிட்ட முடிக்க ஆறு நாளிருந்தன. என்னிடம் செலவுக்கு ரூபாய் கேட்க வில்லை. ஓலை வந்தபடியால் நான் அவசர மாகப் புறப்பட்டு வந்துவிட்டே னென்று சொல்ல, அஃது துணர்ந்த மாயாண்டி செட்டியார், சரி ஆண்டவர் தான், அவ் வோலை எழுதியது, இனி நாம் இவ் விடத்தி

விருந்து போறுலும், வாசிட்டம் முடிந்து இரண்டு நாளாகி விடும். எவ்வளவு ரூபாய் செலவாகி இருக்குமோ வென்று சொல்லிச் சற்றுலோசித்து நடந்த யாவும் நடந்ததே இனி என்ன செய்யலாம், நல்ல விஷயந் தா னென்று சந்தோஷித்து, மீண்டு அக் கூட்டாளியைப் பிரயாணம்பண்ணி அநுப்பி வைத்தனர்.

பதினைந்தாவது

ஸ்ரீ ஆண்டவர் காரைக்குடிக் கெழுந்தருளல்.

ஆண்டவரும், ஸ்ரீ வாசிட்ட சமாப்தி செய்து, ஆசிரிய ரிடத்திற் றமது நகரத்திற் கேக விடைபெற்றுக் கொண்டு, குரு பத்தினியாரிடத்தும் விடைபெற்றுக் கொள்ளுங் கால், அக் குரு பத்தினியார், ஆண்டவரின் றிரு முக மண்டலத்தைப் பார்த்து, ஊருக்குச் சென்றவுடன், நமது மனையில் வளர்த்தற் பொருட்டு இரண்டு மயில் குஞ்சுகள் வாங்கி இவ் விடத்துக் கனுப்ப வேண்டுமென்று உத்தரவு செய்தனர். அவ் வுத்தரவைச் சிரமேற் கொண்டு, தமது நகரத்திற்கு நல்லான் செட்டியார் முதலிய அன்பர்களுடன் எழுந்தருளினார்.

பதினாறுவது

ஸ்ரீ ஆண்டவரைச் சீடர்கள் சரணடைதல்.

ஆண்டவர் தமது ஊருக்கு வந்து ஆக்கினேய திசையி லுள்ள, திருவாசல் மடத்தில் வசித்திருக்குங் காலையில், பாலிய முதற் சினேக முள்ள சாத்தப்ப செட்டியார்

நல்லான் செட்டியா ரென்னும் இருவரும் தம்மைச் சரணடைய, அவ் விருவருக்கு ஞான சாஸ்திரோபதேசஞ் செய்து கொண்டு, அக நோக்குற் றிருந்தனர். அவ் விருவரும் ஆண்டவருடைய குணாதிசயங்களை உள்ளபடி யறிந்து, அதிப்பிரேமையோடு ஆத்தும் அங்கம் தாநம் சறபாவ மென்னும் நான்கு வகைப் பணி விடைகளையுந் திரிகரண சுத்தியாய்ச் செய்துகொண்டு வந்தனர். அக் காலையில், அரிய துறவோடு கூடிய மகாதபசியான பால்ச் சுவாமிகள் என்னும் ஒரு மகான் மதுரையி லிருந்து காரைக்குடிக்கு வந்து, ஆண்டவரைச் சரணடைந்து, ஞான சாஸ்திராப்பியாசம் பண்ணிக்கொண்டு கூடவே வசித்தனர். அதன்பின், பள்ளத்தூரி லிருந்து,முத்து வீரப்பய்யா வென்னுந் திரு நாம முடைய, ஒரு முமூட்சுவும், அந்தரங்க பத்தியோடு ஆண்டவரது பிரபாவத்தைக் கேள்வியுற்று மெய் யன்புடன் வந்து அம் மூர்த்தியைச் சரணடைந்து ஞான சாஸ்திராப்பியாசஞ் செய்து வந்தனர், பின்னர்ச் சில காலஞ் சென்று, கல்லல் என்னும் ஊரி லிருந்து வெள்ளையப்பய்யா வென்னும் நாம முடைய ஒரு முமூட்சுவும் அந்தரங்க பக்தியோடு ஆண்டவரது மகிமைகளைக் கேட்டுணர்ந்து அன்போடு வந்து சரணடைந்து வேதாந்த சிரவணாதிகளைச் செய்து வந்தனர். இன்னும், இவர்களைப் போலவே, அநேகம் அடியார்கள் ஆண்டவரது அற்புதத் திரு விளையாடல்களைக் கேள்வி யுற்று, அதிக விருப்பத்தோடும் அடைக்கலம் புகுந்தனர். ஆண்டவர் அவ் வடியா ரனைவர்களையுந் தமது கிரகத்தில் அன்ன முதலியவற்றாலாதரித்து, அவர்களோடு ஞான நூற் கதைகளாற் போது போக்கி வந்தனர்.

பதினேழாவது

ஸ்ரீ ஆண்டவர் கொப்புடையம்மையைத் துதி செய்தல்

இவ்வாறு, ஆண்டவர் தமது நகரத்தில் வசித்திருக்குங் காலத்தில், அந் நகரத்திலுள்ள கொப்புடையம்மை என்னும் பிடாரியைத் தினந்தோறும் அன்புடனே அடியார்களோடு தரிசித்து வணங்கி மடாலயத்திற் கெழுந்தருளி, ஞான சாஸ்திராப்பியாசங்களைச் செய்து கொண்டு எதிர்ச்சாலாப சந்துஷ்டியுடன் கூடி இருந்து, அவ் வம்மை பேரிலும் (ஆரு ரகன்ற பரசிவமா என்ற விநாயகர் வணக்க முதல் (அப்பாய் சிலமா யநலாய் வளியாகி) என்ற வெண்பா வீருக வுள்ள செய்யுட்களைத் திருவாய் மலர்ந் தருளினர்.

பதினெட்டாவது

ஸ்ரீ ஆண்டவர் அரியக்குடி விஷ்ணு மூர்த்தியை துதி செய்தல்.

பின்னொரு நாள், அரியக்குடியிற் றங்கள் குடும்பத்தாரால் வழிபட்டு வாராநின்ற குல தெய்வமாகிய இராம சுவாமி ஆலயத்திற்குத் தரிசநத்தின் பொருட்டு ஆண்டவரை அழைத்துக் கொண்டு போன காலத்தில், அவ்வூராலயத்துள்ள ஸ்ரீமந் நாராயணனை வந்தித்து, அவ் வாலய கும்பாபிடேக சமயத்தில் (நடந்து விடுங்கா ணிருவினைகள்) என்ற கவி முதல் அநேக பாசுரங்களால் தோத்திரஞ் செய்து, தமது நகரத்திற் கெழுந்தருளினர்.

பத்தொன்பதாவது

ஸ்ரீ ஆண்டவர் மயிற் குஞ்சுக்காக கோவிலூருக் கெழுந்தருளல்.

ஒரு நாள், ஆண்டவர் தமது குரு பன்னியின் வாக்கியத்தை நினைத்துத், தமதன்பருன நல்லான் செட்டியாருடன் கோவிலூருக்குச் சென்று, அங்குள்ள கிராதர்களை அழைத்து, இரண்டு மயிற் குஞ்சுகள் வேண்டும் சீக்கிரங் கொண்டுவாருங்கள் என்று உத்தரவு செய்தனர். அங்ஙனமே, அவர்கள் மயிற் குஞ்சு கொண்டு வருவதற்கு அவ்வாரண்ணியத்துட் சென்றவுடன், ஆண்டவரும், நல்லான் செட்டியாரும், அங்குள்ள வன்னிவன க்ஷேத்திர மாகிய கொற்றவாளீசராலயத்தைக் கண்டு விரைவாகச் சென்று கொற்றவாளீசுவரரையுந், திருநெல்லையம்மையாரையும், தரிசித்துப் பேரானந்த முற்று, இவ்வாலயம் மிகவும் ரமணீயமாயிருக்கின்றது நாம் தனித்திருத்தற் குரிய ஸ்தாந மாகவு மிருக்கின்றது. புராதந ஆலய மாகவுந் தோன்றுகின்றது, இவ் வாரண்யத்துள் மகான்கள் வசிப்பது போலவுந் தெரிகின்றது: ஆகையால், நாம் சோமவாரம், சுக்கிர வாரந் தோறும் வந்து தரிசித்துக்கொண்டு போவோ மென நல்லான் செட்டியாரிடம் ஆண்டவர் திருவாய் மலர்ந்து, பின்னர் ஊருக்கு வந்து, அன்று முதல் அவ்வாறே தரிசித்து வந்தனர். ஆண்டவர் தன்னகரத்திற்கு வந்த பின்னர் கிராதர்கள் கோவிலூரினின்றும் இரண்டு மயிற் குஞ்சுகள் கொண்டுவர அவைகளைத் தமது குரு மனைக்கு அனுப்பி வைத்தனர்.

இருபதாவது

ஸ்ரீ ஆண்டவர் சிக்கலுக் கெழுந்தருளிக் குருவின் றிரு மனை யியற்றல்.

பின்னர், ஒரு தினம் தமது குருவைத் தரிசிக்குங் கருத்தின ராய், சில அடியார்களுடன் தமது பிதாவும் உடன்வர அவர்களை யழைத்துக் கொண்டு, பொருள் வைத்த சேரிக்குச் சென்று, குரு மனை யடைந்து, குரு மூர்த்திகளை நமஸ்கரித் தெழுந்து வந்து, தமது கடையிற் களிப்புற் றிருக்குங் காலத்தில், ஒரு நாட் டமது பிதாவிடத் திற் குருவிற்கும், குரு புத்திரிமா ரிருவருக்கும், குரு மனை இயற்றற் பொருட்டுத் திரவிய சகாயஞ் செய்ய வேண்டு மெனத் திரு வாய் மலர்ந்தருள, அதற் கவர்கள், ஒன்றும் வசரியாது, மௌனமா யிருந்தனர். அது கண்ட ஆண்டவர், காது செவிடாய் விட்டதோ வென்று திரு வாய் மலர்ந்து, மீண்டுங் குரு மூர்த்தியின் றிரு மனை யடைந்து, உள்ள வாறு முடியு மென் றிருந்தனர். உடனே ஆண்டவரின் பிதா விற்குக் காதுக ளிரண்டும் ஓசை யுணர்ச்சி யின்றி செவி டாய் விட்டன. பின்னர், ஆண்டவரிடத்து அச்சமும், அன்பும், மேலிட்டுக் "கெட்டோம் நமது உலோப குண மல்லவா இங்ஙனஞ் செய்வித்த" தென்று அதனை வெறுத்து, இனித் தீர்தற்கு ஆண்டவரது திரு வருளன்றி வேறோ ருபாய மில்லை என்று நிச்சயித்துப் பிதா வானவர் குருவின் றிரு மனையை யடைந்து, நடந்த வாறு சந்நிதியில் விண்ணப் பஞ் செய்து, வாய்விட் டழுது, ஆண்டவர் திருக் கரத்தால் விபூதி யளிப்பித்தல் வேண்டு மென்று குருவின் றிருவடி யில் வீழ்ந்து அடியற்ற மரம் போற் கிடக்க, குரு மூர்த்தி யாகிய உகந்த குரு சுவாமிகள், "மாமிரங்கி நின்று அங்ங

னஞ் செய்தும் நீர் அஞ்சற்க" வென்று அநுக்கிரகித்து ஆண்டவரை அழைத்து, உனது பிதாவிற் குள தாகிய வருத்தந் தீர விபூதி கொடு, வென் றுக்ஞாபித்தருள ஆண்டவர் குருவின் றிருவருளின்படியே தமது பிதாவிற்கு விபூதி கொடுத்தருள, உடனே பிதாவிற்கு மூடிய செவிகளைத் திறந்தாற் போன்று ஓசை யுணர்ச்சி யுண்டாயிற்று. உண்டாகவே, புத்திர பாவத்தால் ஆண்டவரைத் தழுவிக் கொண்டு உனது மகிமையைச் சிறிதும் யா னறியாது புத்திர னென்று கருதினமையானும், திரவிய உலோபத்தானும், உனது அருமைத் திரு வார்த்தையை நன்கு மதியாமல் உதாசீநனாயினன். இனி "உனது கருத்தின்படி நடக்கவல்லே" னென்று சொல்லிப் போயினர். ஆண்டவர் அன்று தொடங்கிக் குருவிற்கு ஒரு திரு மனையும், குரு புத்திரிமா ரிருவர்களுக்கும், இரண்டு திரு மனைகளும், சிறப்பாக முடித்துக் கொடுத்துக், குரு சுவாமி குடும்பத்தையும், குரு சுவாமியைச் சார்ந்த ஏனைய குடும்பங்களையும், தாமே வகித்து வேண்டியவைகளை நடத்தி வந்தனர்.

இருபத்தொன்றுவது

ஸ்ரீ ஆண்டவரை நல்லான் செட்டியார் கருடனாகப் பாவித்துத் தரிசித்தல்.

ஒரு தினமாதித்திய வாரத்தன்று காலையில், நல்லான் செட்டியா ரென்னுந் தம தன்பர் கருட தரிசநஞ் செய்யக் கருதி வெளியிற் போகும்போது, அது கண்ட ஆண்டவர் ஓ நல்லான் நீ எவ் விடத்திற்குச் செல்கின்றனை என்று வினவ, நல்லான் செட்டியார் நான் கருட தரிசந நிமித்தம் செல்கின்றே னென்று விண்ணப்பிக்க, "இன்று கருட னகப்

படான் நானே கருட வடிவனு யிருத்தலா லென்னையே அங்ஙனந் தரிசித்துக் கொண்டு போசனஞ் செய்து கொள்ளக் கடவை''என் றுத்தரவு செய்ய,அது கேட்ட நல்லான் செட்டியார் பதில் மொழி கூறாது சென்று, அக் கருடன் இருத்தற் குரிய தடாகக் கரை, நதிக் கரை கழனி முதலிய விடங்களிலெல்லாந் தேடியும் அன்று சாயங் கால பரியந் தங் கருட னகப்படாமல் மீண்டு வந்து ஆண்டவரை நமஸ்கரித்த மாத்திரத்தில் எனக் கன்னிய மாய்க் கருட னிருப் பதாய்க் கருதிச் சென்றனையே, அங்ஙனங் கருடனைக் கண்டனையா இரண்டு கோணக் கால்களும் இருந்தா லல்லவா நீ என்னைக் கருட னாகக் கருதுவை, சேதந ரூப மாகிய நான் சர்வாத்மகமா யிருக்கின்றதை நீ யறிய வல்லையோ, குமரன் செட்டி மெய்யப்பன் மக னெனத் தானே என்னை மதித்தனை, இனி யாகினு மென்னைக் கருட னாகப் பாவித் துனது விரதத்தை முடித்துக்கொண்டு போசனஞ் செய்து கொள்ளக் கடவை எனத் திரு வாய் மலர்ந்தருளினர். அது கேட்ட நல்லான் செட்டியார் எத்தனை அற்புதங்களைத் தெரிவித்தும் நமது மதி இப்படித் தானே மயங்கி விடுகின்ற தென்று, மனதோ டிரங்கி வணங்கி ஆண்டவர் உத்தரவின்படி யுணவை யுண்டிருந்தனர்.

இருபத் திரண் டாவது

ஸ்ரீ ஆண்டவர் குரு மனைக்கு அரிசி மூட்டை அனுப்புதல்.

ஆண்டவர் ஒரு நாள் வியாபார நிமித்தம் திரு நாகைக் காரோணத்துக்குச் சென் றிருந்த பொழுது, தனது குரு மூர்த்தியின் கிரதத்துக்கு அரிசி மூட்டை இருபத் தைந்து

அனுப்பியருளினர். அது தெரிந்த ஆண்டவரது சேஷ்டராகிய மாயாண்டி செட்டியார், இஃதென்னை வியாபாரத்திற்கு வந்த அரிசியைச் செலவிட்டால், முதலெப்படியாகுமென்று மன வருத்தத்துடன் தம் இனத்தவரிடத்துச் சொல்லிய சங்கதி முற்றும் ஆண்டவர் தெரிந்து,

"பரிந்தொரு கோடி மறையோர்க்குப்
பூமிபொன் பண்புடனே,
வருந்து மிடிகெட வைப்பது
தன்னின்மறைமுடிவு,
தெரிந்தமெஞ் ஞானிக்கொருபிடி
பிச்சைசிறப்புடனே,
பொருந்தவைமப்பதற் கொவ்வா
தெனமறை போற்றியதே"

என்றிந்தப் பிரகாரஞ் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியிருக்கின்றன ரெனத் தமது கடைக் குறிப்பி லெழுதி வைத்தருளினர். அதை மாயாண்டி செட்டியார் பார்த்துச் சந்தோஷித்திருந்தனர்.

இருபத்து மூன்றுவது

ஸ்ரீ ஆண்டவர் குரு மூர்த்தியாகிய உகந்த குரு சுவாமிகள் பரிபூரண மடைதல்.

இவ்வாறு, ஆண்டவர் குரு பணிவிடையில், முயற்சித்துக் குருவினது பூரண வநுக்கிரகத்தை யடைந்து, பொருள் வைத்த சேரியில் எழுந்தருளியிருக்குங்கால், குருமூர்த்தியாகிய உகந்த குரு சுவாமிகள் ஆண்டவரிடத் தன்பு முதிர்ந்து நிரந்தரம் அநுபூதி ஞானங்களை அநுக்கிரகித்

துக் கொண்டு பிரம நிஷ்டார யிருந்து கலியப்தம் 4919 சாலி வாகந சகாப்தம் (1740) வெகு தாநிய வருடம் பங்குனி மாசம் 20ௗ மங்கள வாரம் ஏகா தசி திதி, மக நட்சத்திரம், சுப்பிர நாம யோகம், பத்திரவா கரணம் ஆகிய இவைகள் கூடிய சுப திநத்தில், பரப் பிரம சமரச சுபாவ மடைந்தனர். அதன், பின்னர் ஆண்டவர் திரு வண்ணு மலையி லெழுந்தருளி யிருக்கின்ற ஈசாநிய சுவாமிகள், அவர் மாணுக்கர்க ளாகிய, சிவ குரு சுவாமிகள், பரசு ராம சுவாமி கள், திரு நாகைக் காரோணம், அருணுசல சுவாமிகள், திரு வாரூர், தெக்ஷிணு மூர்த்தி சுவாமிகள் முதலிய பெரியோர் களுக்கும், தமது திரு நகரத்தி லிருக்கின்ற, இல் லறத்து அடி யார்களுக்கும், அங் கங்கு திரு முக மனுப்பி வர வழைத்து வைத்துக்கொண்டு, மண்டலாபிஷேக பரியந்த மான கந விதிகளையுங், குரு பூசை மாகேசுவர பூசைகளையும், சாஸ்திர விதிப்படி சிறப் பாகச் செய்து முடித்து, அக் குரு சுவாமி யின் மீது ஒரு பாசுரமும், திரு வாய் மலர்ந்தருளினர். அஃ திது வாம்.

எழு சீ ராசிரிய விருத்தம்.

"தடமுயர் கடல்சூழ் பொருள்வைநன் னகரந்
 தனின்மறுத் தேதகமாய் விளங்கித்,
திடமுடன் சுருதி சாஸ்திரவே தாந்தஞ்
 சிந்தையி லநுபவந் தெளிந்து,
படிதனிற் றனைவந் தடுத்தவர்க் கிரங்கிப்
 பரமசற் குருவதா யுணர்த்தி,
அடியவ ரடிகட் கேயுகந் தாட்சி
 யரன்பதி கயிலைவாழ்ந் தனனே." என

இரு பத்து நான் காவது

ஸ்ரீ ஆண்டவர், வீர பத்திர சுவாமிகளை அவ் வாதீநத்துத் தாபித்துக் காரை மா நகரத்திற் கெழுந்தருளல்.

குரு மூர்த்தி யாகிய உகந்த குரு சுவாமிகள் பரிபூரண தசை யடைந்த பின்னர், ஆண்டவர் அன்புமே லீட்டாற் பத்தி விசுவாசத்துடன், அங் கெழுந்தருளிவந்த பெரியோர்க ளனைவரையும் தக்கபடி பூசித்து, அநேக திரவியங்கள் கொடுத்து, உபசரித்துத், தத் தம் இடங்களுக்கு அனுப்பி வைத்த உடனே, குரு மூர்த்தியின் அதிஷ்டாநத்திற்கும், ஆநந்தத்தோடு அநந்தம் பொருள் செலவிட் டாலய மெடுப்பித்து, அவ் வாலய சம்ரக்ஷணையின் பொருட்டு மநோக்கிய மாக மடாலய மொன் றியற்றிச், சிதம்பரம் கேணி மடத்தி லிருந்து எழுந்தருளிய வேளாள குல தில கரும், புராணேதிகாச காவிய பிரசங்கங்களிற் சிறந்து விளங்கிச், சற் சாஸ்திர பயிற்சி யுற்று, விவேக முடையவருமா யுள்ள, ஸ்ரீ வீர பத்திர சுவாமிகளை, எக் காலமுங் குரு மூர்த்திகளி னது ஆராதந நிமித்தம் அத் தாநத்தி லெழுந்தருளியிருக்கச் செய்து, குரு பூசை, மகேசுவர பூசைக்கும், திநந் தோறும், அபிடேக நிவேதநங்களாற் குரு மூர்த்தியை ஆராதித்தற் பொருட்டும், அநேக திரவியங்களு முதவி, நிலங்களும், வாங்கிக் கொடுத்துப், பரம்பரையாகவே அடியார் குழாங்க ளிருந்து ஆராதித்து வரும்படி நியமித்துச் சில கால மிருந்து, மீண்டு, காரைக் குடிக்கு எழுந்தருளி அடியார் களுக்கு அநுக்கிரகஞ் செய்து கொண்டிருந்தனர்.

இருபத்தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவர், கோயி லூரிற் றிருப் பணி செய்யத் தொடங்கல்.

ஆண்டவர் இவ் வண்ணம், தமது திரு நகரத்தி லெழுந் தருளியிருக்கும் போது, ஒரு நாள், தம் மிடத்திற் அத்தியந் தப் பிரேம பக்தி யுடைய, நல்லான் செட்டியாரை உடன் வர வழைத்துக் கொண்டு, சோம வாரம், சுக்கிர வாரந் தோறும், தரிசநம் பண்ணி வரும் வழக்கப்படி, கோவி லூருக் கெழுந்தருளி, இராச கட்க பரமேசுவரரையும், சாலிவாடீசுவரியையும், தரிசநஞ் செய்து கொண்டு, தமது நகர்க்கு வரப் பிரயத்தநப்படுங் கால், மழை யானது மிகுந்து விடாது பெய்தமையால், தமது நகரத்திற்கு வர இசை யாமல், அவ் விரவில, அவ் வம்மையின் திருச் சந்நிதியி லிருந்த கூரைக் கொட்டகையில், நித்திரை செய்யத் தொடங்க, அக் கொட்டகை எங்கு மொழுகித் தரை நனைந்து இருத்தற்குக் கூட இட மில்லாமற் சேறுகிவிட்ட மையின், அவ் விரவு முழுதும் நித்திரை யில்லாமல், யோக நித்திரையி லிருந்து, சூரியோதய மான பின்னர், நல்லான் செட்டியாரை ஏவித் தொழிலாளரை அழைத்துவரச் செய்து, அக் கொட்டகையைப் பிரித்து, முன் போலவே பனை ஓலையினுற் கட்டுவிக்கும்படி உத்தரவு செய்ய, உடனே அத் தொழிலாளரும் பழைய ஓலைகளைப் பிரித்து அப்புறப்படுத்தும் பொருட்டு, அக் கொட்டகையின் மீ தேறினர். ஏறினவுடனே அக் கொட்டகையின் கால்கள் அடியற்றிருந்தமையாலோ, அல்லது, திரு நெல்லை யம்மை யார், இம் மூர்த்தியைக் கொண்டு கற் பணி யாக்கிக் கொள்

ளத் திரு வுள்ளங் கொண்டமையாலோ, அடியோடே சாய்ந்தது. ஆண்டவரும்,இவ் வாச்சரியத்தைக் கண்டு,திருநெல்லை யம்மையின் றிரு வுள்ளக் குறிப்பை யுட்கொண்டு, நல்லான் செட்டியாரைப் பார்த்து இதனை கற் பணி யாக்குவித்தல் வேண்டும். அதற்குத் தக்க திரவியஞ் சேகரித்துச் செய்விப்பாம் இப் போது வாணம் வெட்டுவித்து நகர்க்குப் போவோம் என் றுத்தரவு கொடுத்து, அங்ஙனம் வாணம் வெட்டுவித்துக், கோவி லூரில் நின்றும் மீண்டு தமது திரு நக ரடைந்து, சில நாட் டாமதித் திருந்து விட்டனர்.

இருபத் தா றுவது.

ஸ்ரீ ஆண்டவர் திரு மனைக்குத் திரு நெல்லை யம்மை யெழுந்தருளி யநுக்கிரகித்தல்.

இவ் வாறு, ஆண்டவர் திரு நெல்லை யம்பாள் சந்நிதியிற் கொட்டகையைப் பிரித்து வாணம் வெட்டுவித்து, அவ் விஷயத்திற் குரிய முயற்சி யொன் றுமின் றித் தமது திரு நகரத்தில், அடியார்களுக்கு ஞானா நுக்கிரகஞ் செய்து கொண்டு, தாமதித் திருக்குங்கால், ஓர் நாள் ஆண்டவர், வீட்டில் நின்றும் வெளியிற் போயிருந்த சமயத்தில், திரு நெல்லை யம்மை தொண்டு பூண்டு தம தண்டையி லிருக்கும் இத் தொண்டரைக் கொண்டே பண் டுள்ள திருப் பணி யனைத்தையும் பார்ப்பவர் கண் டுள்ளங் களிக்கும்படி புதுப்பித்து முடித்துக் கொள்ளுங் கருத் துடைய ளாய், ஓர் பிராமண கன்னிகை வடி வெடுத்து ஆண்டவருடைய கிரகத்திற் கெழுந்தருளி, ஆண்டவரது மாதாவைக் கண்டு, உமது மைந்தன் எங்கே என்று வினவ, அது கேட்ட ஆண்டவரது

தாயாரும், வெளியே போயின னென்று இனிமை யாய்ச் சொல்லித், திருநெல்லை யம்மையின் றிரு வுரு வான பிராமணக் கன்னிகையின் றிவ்விய வுருவத்தைக் கண்டு புளக முற்றுப் பரவச மாய் நிற்க, அத் திரு நெல்லை யம்மை யார் ஆண்டவரின் மாதாவைப் பார்த்து, உமது மைந்தன் கோவி லூருக்குச் சுவாமி தரிசநத்துக்கு வந்த பொழுது, வெய்யில் மழை இவைகட்கு யாவருக்கு முதவியா யிருந்த கொட்டகையைப் பிரித்து, அப்பாற்படுத்திவிட்டுக் கற் பணி யாகச் செய்விப்பே னென்று வாணத்தை வெட்டு வித்து,ஊருக்கு வந்தனன், அதற்கு வேண்டிய பிரயத்தநஞ் செய்யாம லிருப்பது உசித மல்ல, இனிச் சீக்கிரங் கோவி லூருக்கு வந்து, அத் திருப்பணியைத் தொடங்கச் சொல் லுதி யென்று, திரு வாய் மலர்ந்தருளி, அந்தர்த்தாந மாயி னள். உடனே ஆண்டவர் தமது கிரகத்திற்கு வரத்,தமது மாதா வானவள், நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லினள். அது கேட்ட ஆண்டவர்,மயிற்கூச் செறிந்து,கண்ணீர்வார, ஆநந்த பரவச ராய்ப் பிரமாதிகளாற்கநவினுங் காண்டற் கரிய ஞாந சொரூபி யாகிய அம்மையை நனவிற் கண்ட நீயே மகா பாக்கியவதி என்று, தாயாரை வியந்து கொண் டாடி "நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன், றென்க டம்பைத்தி ருக்கரக்கோயிலான்,றன்க டன்னடி யேனையுந் தாங்குத, லென்க டன்பணி செய்துகி டப்பதே", என்று திரு நாவுக் கரசு நாயனு ரொழுகிய வாறே, தாமு மொழுகி உலகத்திற் குபதேசிப்பா மெனத் திரு வுளங் கொண்டு, தம்மாற் பிரிக்கப்பட்ட அம்மையின் சந்நிதியி லிருந்த கூரைக் கொட்டகையை முன் எண்ணியபடி கற் பணி பணி யாய்ச் செய்வித்தற்கும், மற்று முள்ள திருப் பணி

யனைத்தையும், முடிப்பித்தற்கு மெண்ணங் கொண்டு, திரு நெல்லை யம்மையிடத் தன்பு பூண்டவ ராகிய ஆண்டவர், உடனே தமது திரு மனையினின்று மீண்டவ ராகி வேண்டிய திரவியஞ் சேகரித்தற் பொருட்டு பிரயத்தநப்பட்டனர்.

இருபத்தே ழாவது

ஸ்ரீ ஆண்டவர் இராம நாதன் செட்டியாரிடம் திருப் பணிக் காகத் திரவியம் வாங்க எழுந்தருளல்.

ஆண்டவர், சின்னாட் கழிந்து தேவி கோட்டை, வீரப்ப செட்டியார் குமாரர், இராம நாதன் செட்டியாரிடத்திற் றிரு நெல்லை யம்மையாரின் சந்நிதி மண்டபம் முதலிய திருப் பணி விஷய மாய்ப் பொருள் வாங்கும் நிமித்தம், அவ் வாலயத்தில் நெடு நா ளாகப் பன்ன சாலை கட்டிக் கொண்டு வசிக்கும் பிரம நிஷ்டாபர ரான நெய்க் கோணத்துச் சுவாமிகள் என்னுந் திரு நாம முடைய மகாநுபாவரைச் சகாய மாக அழைத்துக் கொண்டு சென்ற பொழுது, தாணுவய லென்னுங் கிராமத்தி லிருக்கின்ற ஏரிக் கரையி லுள்ள விருக்ஷத்தி னிழலிற் றங்கி யிருந்த சமயத்தில், நெய்க் கோணத்துச் சுவாமிகள், ஆண்டவரை நோக்கி, பேத மான விஷயங்களைக் குறிப்பித்துச் சுட்டி, இவை யாவும் உனக்கு எவ் வாறு தோன்றுகின்ற தென்று வினவ அது கேட்ட ஆண்டவர்,

எண் சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

சுவருறையு மோவியங்கள் சுவரே யென்றல்
சுபாவமதி போற்பரத்திற் றோன்றுகின்ற,

பவமுதலாஞ் சங்கற்ப விகற்ப மெல்லாம்
பரவடிவாய்க் கண்டுபர வடிவ மான,
தவருறையுங் கழனிநகர்க் கொற்ற நாதன்
றனதருளாற் பேதமதி நாயி னேனுக்,
கிவனவனு னதுவென்னும் பேத மின்றி
யெவ்வுருவுஞ் சின்மயமா யிருந்த வாறே.

என்று,தமது சுவாநுபூதியைச் சொல்லியருளினர். உடனே நெய்க்கோணத்துச் சுவாமிகள், அநுபூதி ரூப மான இக் கவியினைக். கேட்டு, அடங்கா மகிழ்ச்சி யடைந்தருளினர். ஆண்டவர் அங் கிருந்து அச் சுவாமிகளுடன் தேவி கோட் டைக்குச் சென்று, இராம நாதன் செட்டியாரிடம் வந்த விஷயத்தைச் சொல்ல, அவரும் அடி பணிந்து துதித்து அதிக அன்புடன் உபசரித்து, வேண்டிய திரவியங் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்டு, மீண்டுங் கோவி லூரை யடைந்து, மண்டப முதலிய திருப் பணியை ஆரம் பித்து நடத்தி வந்தனர்.

இரு பத் தெட் டாவது.

ஸ்ரீ ஆண்டவர் குரு பூசை செய்தல்.

ஆண்டவர் அதன் பின்னர் தம தாசிரியருக்குப் பிர தம குரு பூசை செய்ய எத்தனித்து, அநேகம் பெரியோர் களை வர வழைத்து, மடாலயத்தில் அமிர்தமும் கைக்கும் படி, அறு சுவைக ளமைந்த அன்ன வர்க்கம்,பாயசம்,பக்ஷ ணம் முதலியவைகளை அபரிமித மாகப் பாகஞ் செய்து, முக் கனி தேன் .பால் முதலியவைகளையுஞ் சேகரித்துக், கொற்ற வா ளீசர்க்கும், திரு நெல்லை யம்மைக்கும், அபி டேகம் அலங்காரம் நிவேதநம் ஆராதநம் முதலியவைகளை,

யுஞ், சிறப் பாகச் செய்வித்துத், தம்மிடத்து மிக்க அன்புடைய ராயும், முக்கிய சீட ராயு மிருக்கின்ற,பள்ளத் தூர் முத்து வீரப்பய்யா அவர்கள் சிரசின் மீது,ஒரு பெரிய தாம்பாளத்தில், மடத்திற் பாகஞ் செய்துள்ள அறு சுவை யுண்டிகளையும், கனி வர்க்கம் பக்ஷண வர்க்கங்களையும், எடுப்பித்துக் கொண்டு,அநேக வாத்திய கோஷங்களோடும் நர்த்தநங்களோடும், கொற்றவா ளீச ராலயப் பிரதக்ஷணஞ் செய்து, சந்நிதியை யடைந்து, தமது திருக் கரத்தால், ஒவ்வொரு பிடி அன்னமாக, அடியார் குழாங்க ளனைவருக்கு மளித்து, மடத்துக் கெழுந்தருளி, யாவருக்குந் திருப்தியாகப் போசந மளித்துக், களிப் படைந்து, இவ் வாறே, தமது திரு மேனி உள்ள காலம் வரை, குரு பூசையைச் சிறப் பாக நடத்தி வந்தனர்.

இருபத் தொன்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர் பஞ்சாக்கர குருவைத் துதித்தல்.

ஆண்டவர், இவ் விதம் பிரதம குரு பூசை நடத்திய காலத்துப்,பூர்வந் தமக்கு வாலிபத்தில், பஞ்சாக்ஷர தீக்ஷை செய் தருளிய திருப் புனல் வாசல் சேநாதிபதி சுவாமிகள், கோவி லூருக்குச் சமீபத்தி லுள்ள பாதரக் குடியில் மடாலய மேற்படுத்திக் கொண்டிருந்தமையாற், குரு பூசை நடத்திய சமாசாரந் தெரிந்து, தேவி கோட்டை, இராம நாதன் செட்டியார் முதலிய நகரத்தாரை வர வழைத்து, ஆண்டவர் கோவி லூரிற், குரு பூசை நடாத்தியதைச் சொல்லிக், குரு வாகிய நா னிருக்கும் போது, இவ் வாறு, குரு பூசை செய்ய லாமா வென்று வினவ, அது கேட்ட, இராம நாதன் செட்டியார், ஆண்டவரிடம் வந்து, தெரிவிக்க, உடனே ஆண்டவர் பாதரக் குடிச் சுவாமிகள் மீது.

"அஞ்சக்க ரந்தன்னை யெஞ்சாது சிந்திக்கு மவர்கட்கோ ரல்ல லில்லை—யயனும்ப டைக்கரிலை யான்மறலி கிட்டுகில னடையவேண் டுவது மில்லை, விஞ்சத்த நம்பூமி மைந்தரொடு சுற்றமகல் வீடுதுணை யென்ன வேண்டார்—வினை வாருறு மெண்ணுூர்கள் சொன்னாலும் மேலென்று சித்தம் வையார், மிஞ்சுற்ற விந்தவுப தேசந் தனைப்பெற்றோர் வெகுகாலம் வாழ்ந்திருப்பர்— மெய்யனே துய்யனே யையனே யப்பனே வேதாந்த மோந குருவே, மஞ்சுபதி ககனமென நிறையுஞ்சி தாகாச வடிவமே யெமது குருவே— வணிகர்குல வோஷதிக டமைய வுபதேசமழை மாருது பொழியு முகிலே" என

இவை முதலிய பத்துச் செய்யுட்களை, வணிகர் குல வோஷதிகள் தழைய வுபதேச மழை மாருது பொழியு முகிலே என மகுடஞ் சூட்டிப் பாடியருளி, அச் செய்யுட்கள் வரைந்த ஓலையின்கண், யான் செய்த குரு பூசை பொருள் வைத்த சேரியி லெழுந் தருளிய, எனது ஞானாசாரிய ராகிய உகந்த குரு சுவாமிகளுக் கென வரைந்து, ஓர் அந்தணர் கையிற் கொடுத்து, பாதரக் குடிச் சமய தீக்ஷா குரு வான ஸ்ரீ சேநாபதி சுவாமிகளிடத்தில் வாசித்துக் காட்டி வரும்படி அனுப்பியருளினர். அக் கவியைச் சேநாபதி சுவாமிகள் கேட்டு, அடங்காத மகிழ்ச்சியோடும், அதி லுள்ள மகுடத்தை இன்னு மொருதரஞ் சொல் இன்னும் ஒரு தரம் சொல் எனக் கேட்டு. ஆநந்தக் கடலி லமிழ்ந்தி விபூதி கொடுத்தனுப்ப, அதை ஆண்டவர் அன்போடுந் தரித்துக் கொண்டருளினர்.

முப்பதாவது

ஸ்ரீ ஆண்டவர், வீர பத்திர சுவாமிகளை எதிர் கொளல்.

ஆண்டவர், இவ் வாறு, பிரதம குரு பூசை செய்து முடித்த பின்னர், பொருள் வைத்த சேரியில் ஆசாரிய ஸ்தாநத்தி லெழுந்தருளியிருக்கும் வீர பத்திர சுவாமிகள் உகந்த குரு சுவாமிகளின் அதிட்டாநத்திற் குரிய நித்திய நைமித்திய பூசைக்கும், மாகேசுவர பூசை, குரு பூசை முதலிய இன்னும் அநந்த விசேடங்களுக்கும், எக் காலமும், ஆண்டவரும், ஆண்டவரது சீட வர்க்கங்களனைவரும், அபிமாநத்துடன் வேண்டும் பொருளுதவ, அப் பொருளால் தமக் கேற்பட்ட மடாலயத்திற்கும், அதிஷ்டாநத்திற்கும், ஆண்டவருடைய அபிப்பிராயப் பிரகாரம் வேண்டிய செலவுகளை நடாத்தியும், மடாலயத் திருப் பணிகளைப் புதுப்பித்தும், பூமி முதலியவை சேகரித்தும், இந்தப் பிரகார மாக நாளுக்கு நாள் மிகச் சிறப் பாக, மற்று முள்ள கைங்கரியங்களையும், மனக் களிப்போடு நடாத்திவந்து, குரு மூர்த்தி யாகிய உகந்த குரு சுவாமிகட்கும்,பிரதம குரு பூசையை வெகு விமரிசை யாகச் செய்து முடித்து, ஒரு காலத்தில் ஆண்டவரைப் பார்க்க வேண்டு மென்னுந் திருவுள்ளங் கொண்டு, தமது நகரத்தினின் றுமெழுந்தருளிக், கோவி லூருக் கருகில், ஐயுளி அம்மை ஆலயத்து வீற்றிருந்து, தமது வரவை ஆண்டவருக்குப் புலப்படுத்த, உடனே ஆண்டவர், பழங் கற்கண்டு முதலிய பதார்த்தங்களைத் தாம்பாளத்தி லெடுத்துக் கொண்டு, நடந கீத வாத்தியங்களுடன் எதிர் சென்று,

"ஆக நற்கங்க மேனி பெற்றுடைய
ராவி சற்றுமொரு பாவிக,
ளால மொத்தவிழி மேரு வொத்ததன
மாசை யொத்தவிலை கூறுவார்,
மூக விர்த்திகொடு மூட ரத்நமெனு
மூட னுனவனை வெல்லுவார்,
மோக மற்றவுனை நினையு மன்பரையு
மூழ்கு மாறுசெய வல்லரோ,
வேக போகசுக ரூப னுனவுனை
யானு நம்பினவ னுதலா,
லின்ன மங்கையர்கண் மையல் கொண்டுழல்வ
தென்ன பாவமிது வென்னவோ,
வேக முற்றுவரு கோப னேவுகணை
வெட்டி யட்டதொரு வீரனே
வேத ஆகமபு ராண ரூபமெனும்
வீர பத்திரசு வாமியே."

என்னு மிது முதலிய கவிகளையும்,பாடித் துதித்து வணங்கி எழுந்து நிற்க, வீர பத்திர சுவாமிகள், ஆண்டவரை வாரி யணைத்துக், காடாலிங்கனஞ் செய்து கொண்டு, கிருஷ்ண பகவான் தரும ராசனை நமஸ்கரித்தது போன் றிருக்கிற தென் றுரைத்து;ஆசீர்வதித்து இருக்கும்படி ஆக்ஞாபிக்க, ஆண்டவர், அவ் வுத்திரவின்படி யிருந்து, பின்பு சகல மங்களத்தோடும், அவ் வீர பத்திர சுவாமிகளை அழைத்துக் கொண்டு வந்து, மடாலயத்தி லெழுந்தருளப்பண்ணி, நமஸ்கரித் தெழுந்து நிற்கையில, அவ் வீர பத்திர சுவாமி கள்,விபூதி யளிக்கப் பெற்றுத் தரித்துக்கொண் டருளினர். பின்னர், வீர பத்திர சுவாமிகளும்,சின்னுள் அவ் விடத்தில் வீற்றிருந்தருளி, மீண்டும் பொருள் வைத்த சேரிக்கு எழுந்

தருள வேண்டு மென்னும் திரு வுள்ளங் கொண்டதை, ஆண்டவ ருணர்ந்து, குரு தக்ஷிணை யாக, அள விரந்த திரவி யங்களைப் பே ரன்போடு கொடுத்து, அழைத்து வந்த முறையே, சில தூரம் அடியார்களுடன் சென்று, பன் முறை நமஸ்கரித்து, வழியனுப்பிவிட்டு, மீண்டும் மடா லயத்திற் கெழுந்தருளி, இவ் விதமாக வே, அநந்த முறை, வீர பத்திர சுவாமிகள், கோவி லூருக் கெழுந்தருளும் போ தெல்லாம், இம் முறையே உபசரித்து, அச் சுவாமி களைத், தம தாசாரிய ராகவே பாவித்து, இதைச் சிஷ்டாசார மாகக் கொண் டொழுகினர்.

முப் பத் தொன் றுவது

ஸ்ரீ ஆண்டவரிடம், நல்லான் செட்டியார் பாடங் கேட்கப் போதல்,

மற்றொரு காலத்தில், ஆண்டவர், தமது சீட ராகிய நல்லான் செட்டியாரைப் பார்த்து, வேதாந்த சூடாமணி என்னும் சாஸ்திரத்தைப் பாடங்கேட்கும்படி உத்தரவு செய்ய, அது முதல், நல்லான் செட்டியார், ஆண்டவ ருத்தரவின்படியே, காரைக்குடியி லிருந்து, கோவி லூருக்கு வந்து, நா ளொன் றுக்கு, இரண்டு கவிக ளாக, ஆண்டவ ரிடத்திற் பாடங் கேட்டுக் கொள்வதும், மீண்டும் அன் றிரவே தமது நக ரடைவது மாகப் பிரதி திநமும் பாடங் கேட்டு வரு நாளில், ஒரு நாள், கோவி லூருக்குப் பாடங் கேட்கப் போகும் போது, சித்திரை வெள்ளத்தில், மது நதிப் பெருக் கால் மார்க்கம் தடைபடக், கழனியின் வழி யாகச் சென்று, பாடம் தடைப்படக் கூடா தென்னுங் கருததின ராய், ஐயுளி யம்மையின் கோயிற் கரு குள்ள கோ னேறிக் கண்மாய்க் கரை உடைப்பில் அஞ்சா திறங்

கினர். அவ் வெள்ளம் நல்லான் செட்டியாரை ஈர்த்துத், திரு நெல்லையம்மையின் திருவருளால், மது புஷ்கரணியின் ஈசானிய பாகத்தில், பிராணுபாய மின்றி ஒதுக்கிற்று. அச் சமயத்தில், ஆண்டவரும், இவ் வெள்ளத்தினுல் தென்னம் பிள்ளைகளுக்கு கெடுதி நேரிட்டிருக்குமோ வென்று நோக் குமா றெழுந்தருளி, அப்பிர வாகத்தில் சிரமத்தோ டொது ங்கி வந்தவரைக் கண் ணுற்று, ஓர் ஏவலாளனை விளித்து, வெள்ளத்தினின்றும் கடத்தச் செய்த பின்னர், அவர் நல்லான் செட்டியா ரெனத் தெரிந்து, சிரமபரிகாரஞ் செய்வித்து, அடா நல்லான் இவ் வெள்ளத்தில் எங்கு வந் தனை யென்று வினவ, பாடங் கேட்க வந்தே னென்னும் அவரது மறு மொழியைத் திருச் செவி யேற்றருளி, அவ ரது திட பக்திக்கு மிக வியப் படைந்து, இனிப் பாடங் கேட்க வேண்டாம், என்னை நினைத்திருக்கக் கடவை யென்று, நல்லான் செட்டியாருக்கு, அநுக்கிரகஞ் செய் தருளினர். அவரும் சரீர முள்ள வரையில், அவ் வாக்கின் யின் பிரகாரம் ஆண்டவரையே தியானித்து நற்கதி யடைந் தனர்.

முப்பத்திரண்டாவது

ஸ்ரீ ஆண்டவர், திரவியம் ஆர்ச்சித்து திருப்பணியை முடித்தல்.

ஆண்டவர், அதன் பின்னர், தமது இனத்தவர்க ளாகிய நகர வைசியர்களிடத்தினும், மாணுக்கர்களிடத்தி னும், ஸ்ரீ கொற்ற வாளீசர், திரு நெல்லை யம்பாள் ஆலயத் திருப் பணி விஷய மாய், வேண்டிய திரவிய மார்ச்சித்துக் கொண்டு, கோவி லூருக் கெழுந்தருளி, அம்மையின் சந் நிதி, மண்டபம் முதலிய அநேக மண்டபங்கள் இராச

கோபுரம் விமானம், வாவீ, கூப, தடாகங்கள் நந்தவனம், தென்னஞ் சோலைகளால், நிறைந்த இராச வீதி, இரதம், சத்திரம், மடாலயம், பிரமாலயம், வன்னி விநாயக ராலயம், சிதம்பர விநாயக ராலயம் முதலிய அநேகந் திருப் பணிகளை, இத் தன்மைய தென உலகி லுள்ளோர்களாற் கணிக்கப்படாத சிறப்பினை யுடைய தாய்த் தொழிலாளர் மனங் களிப்பத் திரவியங்களைக் கொடுத்துச் செய்து முடித்தனர். பின்னுங், கல்லல், கானாடு காத்தான், சாக்கை முதலிய ஊர்களிலும், அளவின்றிய திருப் பணிகளை, அன்போடுஞ் செய்வித்துத் தம்மை யடைந்த அடியார்களை அன்ன முதலியவற்று லாதரித்து, அவர்களுக்கு ஞானாநுக்கிரகஞ் செய்துகொண்டு, சுவாநுபவத்தி லமிழ்ந்தி விநோதித்திருந்தனர்.

முப் பத்து மூன் ருவது.

ஸ்ரீ ஆண்டவரை இராம நாதன் செட்டியார் முதலிய சீடர்கள் சரணடைதல்.

இவ் வித மாக ஆண்டவர், கொற்றவா ளீச ராலயத் திருப் பணிகளைச் செய்தும், தம்மை வந்து சரணடைந்த அடியவர்களுக் கெல்லாம அன்னம் முதலியன யளித்தும், ஞானாநுக்கிரகஞ் செய்தும், சுவாநுபூதி யுடன் விநோதித் திருக்குங் கால், ஆண்டவ ருடைய மகிமை யானது உலக முற்றும் பரவுதலால், ஆங் காங் குள்ள சாதந நிறைந்த சற் குண சம்பன்ன ரான முமுட்சுக்கள், அளவிறந்தோர்கள் வந்து சரணடைந்து,சிரவணுதிகள் செய்து கொண்டு வந்தனர். அக் காலையில்,தேவி கோட்டை வீரப்ப செட்டியார் குமாரர்,இராம நாதன் செட்டியார் சீவகாருண்யத்திற் சிறந்தவ ராயும், உதார குண முடையவ ராயும், மிகுந்த

தரிசுராயும், குரு பக்தி, சிவ பக்தி அடியார் பத்திகளிற் சிறந்தவ ராயும், ஏனைய சற் குணங்க ளெல்லாம் நிறைந்த வ ராயும், இருந்தமையால், ஆண்டவரைச் சர ணடைந்து, சற் சாஸ்திரம் பயின்று, அடிமைத் திறத் தொழுகிவந்த னர். பின் னொரு கால், தேவி கோட்டை, சுப்பிரமணியஞ் செட்டியார், குமாரர், அண்ணுமலை அய்யா வென்னும் நாம முள்ள குணக் கட லான ஒரு முமுட்சுவும், ஞானிச் சின்னன் செட்டியா ரென்னும் நாம முடைய, சாதந நிறைந்த ஒரு முமுட்சுவும், அதிவிரக்தியோடும், ஆண்ட வரைச் சர ணடைந்து வழிபட்டு வந்தனர். பின்னர், நேமத்தான் பட்டிப் பெரிய கருப்பன் செட்டியார், குமார ராகிய பழ யப்பய்யா அவர்களும், கோட்டை யூர் இலட்சு மணன் செட்டியார், குமா ரராகிய அண்ணுமலை அய்யா அவர்களும், சிறு வயதிலே சாதந சதுட்டய சம்பத் துடை யவர் களாய்,ஆண்டவரைச் சர ணடைந்து விவேக வைராக் கியங்களிற் சிறந்து,சற் சாஸ்திரம் பயின்று, சமாதி நிஷ்டர் க ளாய், வெகு காலம் ஆண்டவ ருடைய பூரண கிருபை யைப் பெற்றுச், சந்நிதாநத்தை விட்டகலாது விளங்கினர். பிறகு, சின்னுட் கழித்து, இராய புரம், வெ. மு. முத்துக் கருப்பன் செட்டியார், குமாரர்க ளாகிய, இராம நாதன் செட்டியார் முதலிய அறுவர்களும், உதாரம் பக்தி முத லிய சற் குணங்களாற் சிறந்து விளங்கி, ஆண்டவ ருடைய மகிமையை உள்ளபடி யறிந்து, மெய் யன்போடும்,ஆண்ட வரைச் சர ணடைந்து, தொண்டு செய்து வந்தனர். அப் பால், கண்ட னூர் கருத் தய்யா அவர்களும், அரிமளம் சுப்பிரமணிய அய்யா அவர்களும், இன்னும் அள விறந்த அடியார்களும்,பன் னுளில் ஆண்டவரைச் சர ணடைந்து, சற் சாஸ்திரம் பயின்று வந்தனர். மேற் சொல்லிய, தேவி

கோட்டை வீரப்ப செட்டியார் குமாரரும், இராய புரம் முத்துக் கருப்பன் செட்டியார் குமாரர்களும், ஆகிய இரு திறத்தாரும், உடய நேத்திரம் போன்று, ஆண்டவ ருடைய திரு மடாலயத்தின்கண் வசிக்குஞ் சாதுக்களுக்கு அன்ன வஸ்திரம் முதலிய சம்ரக்ஷணையின் பொருட்டு, வேண்டுந் திரவியம் முதலியவற்றை யுதவி, ஆண்டவர், திரு நோக்கப் படி நடந்து அபிமானித்து வந்தனர்.

முப் பத்து நான் காவது

ஸ்ரீ ஆண்டவர், திரு முக மறுப்பி மரத்தைக் கொணர்தல்.

மற்றொரு காலத்தில், ஆண்டவர் கொற்ற வாளீசர் சந்நிதானத்தின், குட வரை வாயிலுக்குக் கபாட மமைக்க வேண்டு மென்னுங் கருத் துடைய ராய், எவ் விடங்களி னும் பார்த்துப் பலகைக் கேற்ற மரம் அகப்படாமையின், பரியாலோசனை யோடிருக்குங் கால், திருக் கோஷ்டி யூருக்கு அடுத்த ஏரிக் கரையில், சடாமுனி வசித்துக் கொண்டிருக்கும பெரி தான இலுப்பை மரம் ஒன் றிருப்ப தாகக் கேள்வியுற்று, அவ் வூரவரை அழைத்து மரத்தைத் தரும்படி கேட்க, அவ் வூரவர்கள், இம் மரத்தில், ஒரு சடா முனி வசிக்கின்றது, தங்களால் முடிந்தால், வெட்டிப் போய்ப் பலகைக் குபயோகிக்கலா மென்று சொல்ல, அவ் வார்த்தையைக் கேட்டருளிய ஆண்டவர், பணியாளரை அழைப்பித்து, அம் மாத்தை வெட்டிக் கோவி லூருக்கு எடுத்து வருவீர்க ளாயின், உங்களுக்குத் தக்க பரிசு கொடுப் போ மென் றுக்ஞாபிக்க, அதனைக் கேட்ட தொழிலாளர்கள், அம் மரத்தடியில், நாங்கள் செல்வோமாயின், அதி லுள்ள

சடா முனியால் எங்கள் குடி கெடுவது மல்லாமல், ஏழு தலை முறை பரியந்தம் உள்ளா ரனைவரையும் தொடர்ந் தலைக்கு மெனச் சொல்ல, அதனைக் கேட்ட ஆண்டவர், ஏவலாளர்களை நோக்கி, நீங்கள் யா தொன் றுக்கும் அஞ்சா தீர்கள், யாந் திரு முக மொன் று கொடுக்கின்றோம். அதனை அவ் விலுப்பை மரத்திற் கட்டிவிட்டு, உடனே அம் மரத்தை வெட்டி வாருங்க ளென்று உத்தரவு கொடுக்க, அப் பணியாளர்கள், அக் கருத்திற் குடன்பட்டு நிற்றலும், ஆண்டவர், திருக் கரத்தால் ஓலையை வாரித் துண்டாக நறுக்கி, அதில் அவ் விலுப்பை மரம் எமது சிவ பிரா னுகிய கொற்ற வா ளீச ராலயக் குடவரைக் கதவிற்கு வேண்டி யிருப்பதால், நீ அம் மரத்தை விட்டு வே றோர் மரத் திருக் கக் கடவை யென வரைந்து கொடுத்தனர். அத் தொழி லாளர்கள், ஆண்டவரது கட்டளைப்படி, அத் திரு முகத் தைக் கொடு சென்று, அச் சடா முனி யிருக்கும் அவ் விலுப்பை மரத்திற் கட்டிவிட்டு, உடனே அதனை வெட்டி வண்டியி லேற்றிக் கோவி லூருக்குக் கொண்டு வந்து சேர்க்க, அம் மரத்தைப் பலகை யாக அறுத்துக் குடவறை கதவு செய்வித்தருளினர்.

முப் பத் தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவர், மட முதலியவை யியற்றும்படி அடியார்களுக்கு அநுக்கிரகித்தல்.

ஆண்டவர் மற் றொரு போது, இல் லறத்திருக்கும் தமது மெய் யன்பர்க ளான அநேகம் அடியார்களைப் பார்த்துத் தங்கள் தங்கள் கிராமங்களில், ஏகாந்த மாய் வசித்தற்கும், செப தப மியற்றற்கும், தேவாராதநஞ் செய்

தற்கும், சிரவண மநநாதிகள் புரிதற்கும், சாதுக்கள் வசித்தற்கும், புட்பப் பணி நடாத்துதற்கும், மநோக்கிய மாக மடாலயங்களையும், நந்தந வநங்களையும், மற்றும், வாவி கூப தடாகாதிகளையும், சிவ விஷ்ணு பிரமாலயங்களையும், சத்திரம், பாட சாலை முதலிய சிவ புண்ணியங்களையும், ஏற்படுத்திக் கொண்டு, சற் சாஸ்திரத் துவார மாகச் சதாசாரங்களை யநுஷ்டித்து வரும்படி அநுக்கிரகிக்க, அவ் வாக்கியப் பிரகாரமே மடாலய முதலிய அனைத்தையு மியற்றி வருவது, இப் போதுங் கண்கூடாகவே இருக்கின்றது. இவ் வற்புதங்களைக் கண்ணுற்ற வரகவிச் சேந்தனிப் பழனி யப்பய்யா என்பவர்.

விருத்தம்.

"மடமூண்டோ சிவாலயங்கள் மிகுதி யுண்டோ வாசிட்டம் படிப்ப துண்டோ மனத்துண் ஞாநத், திடமுண்டோ நால்வர்தமிழ் படிப்பா ருண்டே திவ்வியமா மூதாரமுதற் குணங்க ளுண்டோ, விடமுண்டோ னடியர் குழா மிகுதி யுண்டோ மெய்யறஞ்சத் திரம்விரைப்பூங் காவு முண்டோ, வடகைலைக் கிறைவனொனு முத்து ராம வள்ளறிருக் கழனிநகர் வாரா முன்னம்."

என்னு மோர் செய்யுள் இயற்றினர்.

முப் பத் தா ருவது

ஸ்ரீ ஆண்டவர், திரு மடாலயத்திற்குக் கிராமம் வாங்குதல்.

இப்படிச் சின்னுட் கழித்த பின், மேற் சொல்லிய தேவி கோட்டை, இராம நாதன் செட்டியாரும், இராய

புரம், முத்துக் கருப்பன் செட்டியார் குமாரர்களு மாகிய இரு திறத்தவரும், இல் லறத்தினை யுடைய ஏனைய அடியார் குழாங்களும், ஒருங்கு சேர்ந்து, பொரு ளுதவி செய்ய, அதனால் ஆண்டவர் களத்தூ ரென்னுங் கிராமத்தையும், அதற் குட் கடை யாக அநேக கிராமங்களையும் வாங்கி, இல் லறத்தும், துற வறத்து மொழுகுகின்ற தமது அடியார் குழாங்க ளனைவருக்கும், அன்ன வஸ்திர முதலியவை யளித்து ஞானா நுக்கிரகஞ் செய்து வந்தனர்.

முப் பத் தே ழாவது
ஸ்ரீ ஆண்டவர், இராம நாதன் செட்டியார் ஐய மகற்றல்.

மற் றொரு காலத்தில் மேற் சொல்லிய தேவி கோட்டை இராம நாதன் செட்டியார், மதுரையி லிருந்து கோவி லூருக்கு வந்த போது, ஆண்டவரைத் தரிசித்துச் சுவாமி தெய்வத்தைத் தெரிந்து ஆராதிப்பதற்குத் தபசு, அல்லது யோகம் அல்லது குருவி னுபதேச மாகிய இம் மூன்று மன்றிக் கூடுமா வென்று, பிரசினஞ் செய்ய, அக் காலையில் ஆண்டவர் அதற் குத்தர மாக.

வெண்பா

செய்யுந் தவமுந் திரயோக நிட்டைகளுஞ்,
செய்யு முபதேசந் திரபூசை—யையமறச்,
சொல்வேன் சுதந்தரனை யன்றியுல கென்ப,
தில்லென் று ணருமி தே.
தெய்வ வடிவறிந்தத் தேவதையைப் பூசைபண்ணத்,
தெய்வ வடிவார் திறங்கேளீ—ரையமி னூல்,

சற்குருவாற் ருனுணர்தல் சந்ததமுஞ் சிந்தித்த,
னிற்குமது வானரி லே.

என்னும் வெண்பாக்களைத் திரு வாய்மலர்ந்தருளினர். வேறோர் சமயத்தில், அவ் விராம நாதன் செட்டியார் இலக்கணமும், குறளும், வாசிக்கின்ருரென்று ஆண்டவர் திருச் செவியிற் கேள்வியுற்று, அப் பொழுது,

வெண்பா

ஈயக்க திராமி லக்கணமு மின்குறளு.
மாயப்பொ ருளாவ றைந்தாலு—நோயகலா,
துன்னைம றந்தவொரு துரியபூ மியிலே
மன்னியி ருக்கம தி.

என்னும் வெண்பாவைத் திரு வாக்கினுல் அருளிச் செய்து எழுதி அநுப்பினர்.

முப் பத் தெட்டாவது

ஸ்ரீ ஆண்டவரைத் துறவு சுவாமிகள் சரணடைதல்.

வேறோர் தருணத்தில், தேவி கோட்டை வினை தீர்த்தான் செட்டியார், குமார ராகிய, அருணுசல சுவாமிகளும், கண்டனூர், பெரிய கருப்பன் செட்டியார், குமார ராகிய அருணுசல சுவாமிகளு மாகிய இவ் விரண்டு மகான்களும், சகல சற் குணங்களு மமர்ந்து, சாதநங்க ணிறைந்து, பக்குவிகளாய்க், கோவிலூ ரடைந்து ஆண்டவர் திரு வடிகளைப் பணிந்து, அடைக்கலம் புகுந்து, ஆப்தாதி பணிவிடைகளைப் புரிந்து, குருவின் றிருவருளைப் பெற்று, சதா சத் சாஸ்திரம் பயின்று வந்தனர்.

முப் பத் தொன்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர், கைலாய நாதரையும், நித்திய கல்யாணி யம்மையையும், கொணர்தல்.

ஒரு நாள், ஆண்டவர், குட்டைய ஞசாரியை யழைத்துக் கொண்டு போய் அதளக் கண்மாயிற் பூசை, நைவேத்திய மின்றி வெய்யிலி லிருந்த அகத்தீசுவர ரென்னும், மகா லிங்கத்தை எடுத்து வரச் செய்து கொற்றவா ளீச ராலயத்தில், ஓர் புரத்தில் தாபிக்குந் திரு வுள்ள முடையராய்க், கிழக்கு நோக்கிச் சென்ற பொழுது, பூர்வம் ஒரு காலத்தில் பஞ்சாக்கர நாயகி ஆலயத்திற்கு, வடபா லுள்ள குப்புச்சி, ஊருணிக் கருகில், மறவன் கோட்டை யென்னும் ஒரு பெரிய கிராம மிருந்து அழிந்து போக, அங்கெழுந்தருளியிருந்த கைலாய நாதர் ஆலயமும், நித்திய கல்யாணி யம்மை ஆலயமும், அழியாதிருந்தமையாற் கொற்றவா ளீச ராலயக் குருக்களையே அவ் வாலயத்திற்குச் சென்று, நிநம் ஒரு காலம் மட்டும் பூசித்து வரும்படி ஆண்டவர், நியமித்திருந்தமையின், அவ் வாலயத்தி லெழுந்தருளியிருக்கும், நித்திய கல்யாணி யம்மையார், ஒரு பனை யுயரத்திற்கு மேற்பட்டு அந்தரத்தில் வெண்பட்டாடை யுடுத்து, அந்தணர் கன்னிகையைப் போன்று திவ்விய ரூபத்துடன் நேரில் பிரசந்ந மாகி, ஆண்டவரை நோக்கி, அப்பா வென்று, விளித்து, ஓர் கும்ப சலத்திற்கும், ஓர் உண்டை யந்நத்திற்கும், ஈண் டிருவருங் காத்திருக்கின்றோ மென்று, சொல்லி, அந்தர்த் தாந மாயினள். உடனே, ஆண்டவர், வடக்கு நோக்கிச் சென்று, பணியாளர்களை ஏவிக் கும்ப ஸ்தாபந முதலிய வொன்று மின்றி, கைலாச நாதரையும், நித்திய கல்யாணி யம்மையாரையும்,

எழுந்தருளப் பண்ணிக், கொற்றவா ளீச ராலயத்திற்குக் கொண்டு வந்து திரு நெல்லை யம்மையா ராலயத்திற்கும், கொற்றவா ளீச ராலயத்திற்கும், மத்தியிற் ருபிக்கத் திருவுள்ளங் கொண்டனர். அக் கொற்ற வா ளீசுவர ராலயத்திற்கும், திரு நெல்லை யம்பா ளாலயத்திற்கும், மத்தியில், அவ் வூரவர்கள் நீண்ட கால மாய் ஒரு துஷ்ட தேவதையை ஓர் சிலையில் எந்திர மமைத்து, அதிற் ருபித்து, வருடத்துக் கொரு எருமைக் கடாப் பலி கொடுத்து, வழிபட்டு வந்தனர். அச் சிலையைச் சிவாலயத்தை விட்டு, அப்புறப்படுத்துங் கருத்து, ஆண்டவருக்கு, வெகு நாட்டொடங்கி இருந்தமையின், பணியாளர்களைப் பார்த்து, இத் துஷ்ட தேவதை சிவாலயத் திருப்பது முறையல்ல இப் பீடத்தைப் பெயர்த்துக் கண்மாயிற் போட்டுவிடுமென் ருக்ஞாபித்தனர். இங்ஙனங் கூறிய, ஆண்டவர், திரு வார்த்தை, அத் தொழிலாளர்கள் செவிப்படவே, அவர்கள், மனம் பதறி, யுடல் நடுங்கி, வெயர்த்து, ஓ கோ ஆண்டவரே, இப் பீடத்தைப் பெயர்க்க மனந் துணிந்து, கடப் பாரையைக் கையாற் றீண்டு வோ மாயின், நிச்சயமாக எங்கள் குடி முழுவதுங் கெடும் என்பதற்குச் சந்தேக மில்லை. ஆகலின், யாங்க ளதற்குடன்படோ மென்று அகன்று, நிற்க. அது கண்ட ஆண்டவர், ஆனுல் நீங்கள் போங்க ளென்றவர்களை யகற்றித், தாமே தமது திருக் கரத்தாற், கட்டப்பாரையை எடுத்து, அப் பீடத்தை யிடித்துப் பெயர்த்து விட்டனர். அது கண்ட, தொழிலாளர்கள் ஆண்டவரே! இனி யாங்க ளஞ்சோம் தேவரீர் கிருபாபலங் கொண்டு, இப் பீடத்தைக் கண்மாயிற் போட்டுவிடுகின்ருே மென்று, எடுத்துக் கொண்டு போய்க், கண்மாயிற் போட்டுவிட்டார்கள். அது முதல், அத் துட்ட

தேவதை, அவ் வூரி லுள்ள இளம் பெண்க ளனைவரையும் பற்றி யலைத்து வந்தது, ஆண்டவர் ஒரு நாள், வீதியிற் போம் பொழுது, ஓர் விருத்தை, இதோ போகிற இவ ரல்லவா உன்னைப் பேர்த் தெறிந்தவர். வாளா விருந்த எங் கள் பெண்களை இவ் வா றலைப்பது நினக்கு நீதியா வென்று சொல்லினள். அப் போது, அத் தேவதை, அவ ளைப் பார்த்து, அடி! அதுவோ, வெட்ட வெளி, அதனிடத் தெ னதாற்றல் செல்லா தென்று சொல் லிப், பின்னும் சின்னா ளளவும், அவ் வூரவரை யலைக்க, அவ் வூரவர் யாவரும் ஒருங்கு சேர்ந்து, ஆலோசித்துக் கண்மாய்ப் புறக் கரையில் அப் பீடத்தைத தாபித்து, அத் தேவதையை முன் போல வழிபட்டு வந்தனர் ஆண்டவர், முன் றிரு வுள்ளங் கொண்டபடி, அவ் வாலயத்தில் அப் பீட மிருந்த விடத்திற் கைலாச நாதருக்கும், நித்திய கல்யாணி யம்மையாருக்கும், சிறப் பாக வாலய மெடுப் பித்து ஸ்தாபித்து, அபிடேக நைவேத்தியம் ஆராதந முத லிய பல சிறப்புங், கொற்றவா லீசற்குந், திரு நெல்லை யம்மைக்குந் நடந்து வருவது போன்று, எந் நாளும் நடந்து வரும்படி செய்வித்தனர்.

நாற் பதாவது

ஸ்ரீ ஆண்டவர், பஞ்சாக்கர நாயகி ஆலயத் திருப் பணி முடித்தல்.

முன்னர், கைலாய நாதரையும், நித்திய கல்யாணி யம்மையாரையும், மறவன் கோட்டையி லிருந்து, ஆண்ட வர் கொணர்ந்த பொழுது, அங் கிருந்த பஞ்சாக்கர நாயகி யம்மையார், ஆண்டவரைப் பார்த்து, நான் மாத்திர மிவ்

விடத்துத் தனித் திருப்பது உமக்கு நீதியோ வென்று சொன்ன அசரீரி வாக்கை ஆண்டவர் முன்னும், குட்டை யனுசாரி பின்னு மாக வரும் பொழுது செவியுற்று நின்று, உடனே அவ் வம்மையாரையும், எடுத்து வந்து, ஏரிப் புறக் கரையில் ஆலய மெடுப்பித்துத் தாபிக்குங் கருத்தோடு, அவ் வாலயத் திருப் பணி செய்து வருங் காலையில், ஒரு நாள் ஆண்டவரைத் தரிசிக்க வந்த தமது பிரதம சிஷ்ய ராகிய நல்லான் செட்டியார், திரு நெல்லை யம்மையார் திருப் பணிக்கு ஆர்ச்சித்த திரவியத்தைப் பிடாரிக்குச் செல விடுதல் நியாயமா, இஃ தென்னை யென்று பிடாரியைத் தாழ்த்திச் சொல்ல, அதனைத் திருச் செவி ஏற்றருளிய ஆண் டவர்,

நேரிசைக் கட்டளைக் கலித் துறை.

கண்ட பொருளல்ல காணுப் பொருளல்ல
கண்டபொருண்,
மண்டு மிருளல்ல மாயு மொளியல்ல
மன்னுமொளி,
பண்டென் பதுமல்ல வின்றென்பதல்ல
பராபரமா,
மண்டம டங்கவ டங்காப்பெ ருவெளி
யையுளியே.

என்னும் கவியைத் திரு வாய் மலர்ந்து, இத் தன்மை யான ஐயுளி யம்மையாரை அடா நல்லான் நீ தாழ்வாகக் கருது வது, உன் அறியாமை என்று நகைத்து, அவருக்கு விடை கொடுத்தனுப்பிய பின்னர், அத் திருப் பணியை முடித்து, அவ் வம்மையாரை ஆலயத்தி லெழுந்தருளப் பண்ணிக் கும்பாபிடேகஞ் செய்வித்துக், கொற்ற வாளீச ராலயத்

திருந்து, ஒரு கால பூசை எப் பொழுதும் நடத்தி வரும்படி நியமித்தனர். அது போலவே இன்றும் நடந்துவருகின்றது.

நாற்பத் தொன் றாவது

ஸ்ரீ ஆண்டவர், அகஸ்தீசுவரரைக் கொணர்தல்.

பின் னொரு நாள் ஆண்டவர், முன் திரு வுளங் கொண்ட பிரகாரம் தொழிலாளர்களைக் கொண்டு, அதளக் கண்மாயி லிருந்த அகத்தீசுவரரையு மெடுப்பித்து வந்து ஆலயத்துட் பிரதிஷ்டை செய்து, பூசை, நிவேதனங்களுந் தினந் தோறுஞ் சிறப்பாக நடத்திப் பிற்காலத்தும் பரம் பரையாக அடியார் குழாங்க ளிருந்து அவ்வாறே, நடத்தி வரும்படி உத்தரவு செய்தருளினர்.

நாற் பத் திரண் டாவது

ஸ்ரீ ஆண்டவர், இராய புரம், அப்புக் குட்டிச் செட்டியாருக்குத் திரு முகம் அனுப்புதல்.

மற் றொரு காலத்தில், ஆண்டவர் இராய புரம் அப்புக் குட்டிச் செட்டியாருக்கு

அகவற்பா

பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தான்
றாருந் தலையுமிலாத் தோன்றலான்—வேராகி,
வித்தாகி வித்தின் முளையாய் விளங்குதனிச்
சத்தாகிப் பூதங்க டாலுகிச் சத்த
வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பா முக்கப்பா
லுறுபொரு ளாய்நின்ற வொருவன்

றிருவருளால் அநேகவித அஷ்ட ஐசுவரியமும், சாது சங்கச் சிரத்தையும், பகவற் பத்தியும், நிரந்தர முண்டாக வேண்டு மென்று சிந்திக்கின்றேன். இக் காலம் பத்துப் பொதி நெல் அனுப்பினால், மிகச் சகாயமா யிருக்கு மென்று வரைந்து, அத் திருமுகத்தை யனுப்பியருள, அதனைப் பெற்ற அப்புக் குட்டிச் செட்டியார் பேரானந்த முற்று, அத் திருமுகத்தில், ஆக்ஞாபித்த வண்ணம், நெல் அனுப்பி, ஆண்டவர் திரு வருளைப் பெற்றனர். பின் னொரு காலத்தில், அவ் வப்புக் குட்டிச் செட்டியாருக்குப் புத்திர சோக நீங்க.

கனவிற் குழவி மலடிபெற் றுளுட் களித்தவள்தா
னனவிற் கருதப் பொய்யா னதுபோ னனவினுற்ற,
தனமிக்க மக்களும் பெண்டிருஞ் சுற்றமுந் தன்னுடம்பும்,
இனமுற்ற வென்னை யறியப்பொய் யாகியி ருந்ததுவே.

என்னுங் கவியைத் திரு வாய் மலர்ந்து எழுதியனுப்பினர். அதன்பின் (இதைய சிந்தாமணி வாட்டஞ் சிதையாப் பரம சுகம் உண் ணுட்டம் பெற்று லெங்நாளு மின்பம்) என்னும் இப்படிப்பட்ட அற்புத வாக்கியங்களையும், பன் முறை அப்புக் குட்டிச் செட்டியாருக்கு அநுக்கிரகித்திருக் கின்றனர்.

நாற் பத்து மூன்று வது

ஸ்ரீ ஆண்டவர் நல்லான் செட்டியார் முன்னிலையிற் றமது பிரபாவத்தை வெளியிடல்.

ஒரு நாள் தேவாலயத்திற்கு நேரி லுள்ள கழனியில், நெற் கதி ரறுக்குங் காலத்தில், ஆண்டவர் விநோத மாகச் சென்று வரப்பி லெழுந் தருளியிருந்தனர், அக் காலையிற் றமதன்ப ரான நல்லான் செட்டியார், ஒரு காரியார்த்த

மாகத் திரு நெல்லையம்பாள் சந்நிதியில் நன்னிமித்தங் கேட்கும் பொருட்டு, காரைக்குடியினின்று, அம் மார்க்கமாக வந்து, ஆண்டவரைத் தரிசித்து வணங்கி நிற்க, அப்பொழுது ஆண்டவர், இங்கு வந்த காரியம் என்னவென்று வினவினர். அது கேட்ட நல்லான் செட்டியார், ஒரு காரியத்தை முன்னிட்டுத் திரு நெல்லையம்பாள் சந்நிதியில் நிமித்தங் கேட்கும் பொருட்டு வந்தேனென்று கூறியவளவில், நன்னிமித்தமாகாது மீண்டும் வீட்டுக்குச் செல்லக்கடவை என்று ஆண்டவர் உத்தரவு செய்தருளினர். நல்லான் செட்டியார் அவ் வாக்கியத்திற் சிரத்தையுள்ளவராயினும், நன்னிமித்தம் கேட்கும் வேட்கையால் திருநெல்லையம்மையின் சன்னிதியிற் சென்று நமஸ்கரித்து, நிற்க, அங்கு உத்தர கெவுளி சொல்லிற்று, அதைக் கேட்டு ஆண்டவருத்தரவு செய்திருக்கவும், அதை மதியாமல் இங்கு வந்தோமே, நமது மதி எப்போதும் இப்படி மயக்கமுற்றிருக்கின்றதே என்று மனக் கவலையோடு மீண்டும் நல்லான் செட்டியார் ஆண்டவரிடம் வந்து, ஒதுங்கி நிற்கும் போது, ஆண்டவர் பார்த்து நான் கோவிலுக்குள்ளேயிருந்து பல்லியாய்க் கூப்பிட்டால் தானே நீ நம்புவாய் அங்கு யாது உத்தரவாயிற்று என்று வினவ, அம்பாள் இங்கிருந்து முன்னமே உத்தரவளித்தும் அறியாமையினால், மயக்கமுற்றுச் சென்றேனென்று சொல்லி நமஸ்கரித்தெழுந்து காரைக்குடிக்குச் சென்றனர்.

நாற்பத்து நான்காவது

ஸ்ரீ ஆண்டவர் பேத திருஷ்டி நீங்கும்படி அநுக்கிரகித்தல

ஒரு நாள் முக்கிய சிஷியராகிய பள்ளத்தூர் சிங்கய்யா அவர்கள், ஆண்டவரது திருமுகம் நோக்கி, சுவாமி பேத

திருஷ்டி எப் பொழுது நீங்கு மென வினவ, அப் பொழுது ஆண்டவர்.

எண் சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம்

விண்ணாதி பூதமெலாஞ் சிவமே யாகு
மெய்யுருவும் பொய்யுருவுஞ் சிவமே யாகுங்,
கண்ணான வேதமெலாஞ் சிவமே யாகுங்
கருதுகின்ற நினைவெல்லாஞ் சிவமே யாகு,
மெண்ணிறந்த பேதமெலாஞ் சிவமே யாகு
மிப்படியே தினந்தோறுங் காண்பா னாகிற்,
பெண்ணாணு மலியாகும் பேத மின்றிப்
பிரமமய மாதறிண்ணம் பேத மின்றே.

என்னுங் கவியைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

நாற் பத் தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவரை மெய்யப்ப செட்டியார் உபதேசிக்கும்படி பிரார்த்தித்தல்.

பின் னொரு நாள், ஆண்டவர், காரைக் குடிக் கெழுந்தருளிய காலையில், அழகன் செட்டியார் குமாரர் மெய்யப்ப செட்டியா ரென்பவர் ஆண்டவரிடம் வந்து எனக் கொருபதேசஞ் செய்தருள வேண்டு மெனப் பிரார்த்திக்க, அதற்கு ஆண்டவர், மெய்யப்ப செட்டியாரை நோக்கி, அமாவாசை யிரு ளல்லவா, உப தேசிக்க ஒன்றும் விளங்காதே யென உத்தர வளித்தனர். சின் னாட் போய பின், ஆண்டவர் கோயிலூரி லெழுந் தருளியிருக்கும் பொழுது, அம் மெய்யப்ப செட்டியார் காரைக் குடியில் தங்கள் குளக் கரையி லிருக்குங் கல் மண்

டபத்தில் வந்திருந்த ஓர் உத்திர தேசத்துச் சந்நியாசியிடஞ் சென்று, நமஸ்கரித்து நின்று, யா தேனு முபதேசித்தருளல் வேண்டு மென்று, பிரார்த்திக்க. அப் பிராமண சந்நியாசி யார் எல்லா விஷயங்களையும் மண்மய மாய்ப் பா ரென்று அநுக்கிரகிக்க, அம் மொழியைக் கேட்டுக் கொண்டு, உடனே கோவி லூருக்குச் சென்று, திரு நெல்லை யம்பாள் சந்நிதியில், ஆண்டவரைத் தரிசித்து, வணங்கி சுவாமின், காரைக்குடி மேலக் குளத்துக் கீழ்க்கரையி லுள்ள கல் மண்டபத்தில், உத்தர தேசத்தி லிருந்து. ஓர் பிராமணச் சந்நியாசி வந்திருக்கின்றனர், அவரை உபதேசிக்கும்படி அடியேன் பிரார்த்தித்த போது, அதற்கு, அவர் எல்லாம் மண்மய மெனப் பார்க்கும்படி உபதேசித்தருளினர். அது சரிதானு வென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தேன், அநுக்கிரகஞ் செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்தனர், ஆண்டவர், அது கேட்டு, அச் சந்நியாசி யருளியதும் மண் மயந் தான், வேத சாஸ்திரங்கள் பிரதிபாதிப்பதும் மண் மயந் தான், வசிட்ட வியாசாதிகள் அநுக்கிரகஞ் செய்தருளியதும், மண் மயந் தான், ஈசுராதிகள் அநுக்கிரகித்ததும் மண் மயந் தான். இந்தத் திரு நெல்லை யம்மை யறிய, எனது சம்மதமும் மண் மயந் தான் என்று உறுதியாக உத்தர வளித்தனர். அது கேட்ட மெய்யப்ப செட்டியார், சந்தோஷ மாய் நமஸ்கரித்து, உத்தரவு பெற்றுக் கொண்டு, தமது நகரத்துக்குச் சென்று, அவ் வுபதேசத்தைச் சிரத்தையுடன் வெகு காலம் அனுஷ்டித்து வந்து நன்மை யடைந்தனர்.

நாற்பத் தாறுவது

ஸ்ரீ ஆண்டவர் அகங்கார மகலும்படி அநுக்கிரகித்தல்.

ஒரு நாள் ஆண்டவர், கொற்ற வா ளீச ராலயத்திருக்கும் பொழுது தமது முக்கிய சிஷ்ய ரான பள்ளத்தூரய்யா

அவர்களைப் பார்த்துச், சிங்கய்யா வென்று விளித்து, யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் போனால் முத்தி சித்திக்கு மென்று திரு வாக் களிக்க, அது கேட்ட, பள்ளத் தூரய்யா அவர்கள் யா னெனது எவ் வாறு நீங்கு மெனப் பிரசினஞ் செய்ய அதற் குத்தர மாக

நேரிசை வெண்பா.

தன்மயமாஞ் சத்தி தானினைக்க நாமவுரு
மின்மயம்போற் றோன்றி விளிந்திடுமே—யென் மயமே.
யாமே யவையெல்லா மானல்யா னுமெனதும்
போமே சிவமயமாய்ப் போம்"

என்னும் வெண்பாவைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

நாற் பத் தேழாவது

ஸ்ரீ ஆண்டவர் அகங்கார சொரூபத்தைத் தெரிவித்தல்.

ஒரு தினம் மடத்து முகப்பில் ஆண்டவர் எழுந் தருளிய போது, ஒரு சுவான மானது உள்ளே நுழைந்தது, அதைப் பார்த்து, ஏ! சுவானமே நீ உள்ளே நுழையாதே அங்கு நான் நீ என்பவை நிரம்பி யிருக்கின்றன. ஆதலால், உன்னை அங்கு வரவிடார்கள் எனத் திருவாய் மலர்ந்தருளி னர். இவ் வார்த்தையைக் கூட விருந்த, அடியார்கள், செவியுற்று நிற்கையில், அந் நாய் உள்ளே நுழைந்து செல்ல, அது கண்டு, அங் குள்ளவர்கள் அடித்துத் துறத்தி விட்டனர். அடிபட்ட சுவான மானது கூச்சலிட்டுக் கொண் டோடிவருவதை ஆண்டவர் பார்த்து, நான் முன்னமே, நான் நீ என்பவை அவ்விடத்தில், நிறைந்

திருக்கின்றன வென்று, சொல்லியுங் கேளாது சென்றனையே, அந்த நான் நீ என்னும் அகங்காரத்தால் வந்துற்ற துன்பந் தெரிந்ததா? இனி மேலாயினும் நான் நீ என்றவை உள்ள விடங்களிற் செல்லாதே, எனச் சுவாநத்தை முன்னிலை யாக்கிக் கூறியது போலத் தமது அடியார்களிடத்துள்ள அகங்காரம் ஒழியும்படி கூறிப் புன்னகையுற்றுச் சுவாநுபூதியி லிருந்தனர்.

நாற் பத் தெட் டாவது

ஸ்ரீ ஆண்டவர் கற்பக விநாயகரைத் துதி செய்தல்.

ஒரு காலத்தில் ஆண்டவர், கருங் காலக் குடிக்குச் சென்று வரும் பொழுது, பிள்ளையார் பட்டி நகரத்தார் மிக விருப்புடன் சுவாமி தரிசந நிமித்தம் அங் கெழுந்தருளும்படி, ஆண்டவரை வேண்ட, ஆண்டவரும், அக் கருத்திற் கிசைந்து, பல்லக்கைத் திருப்பிப் பிள்ளையார் பட்டியில் அன்று வசித்து, அங் குள்ள கற்பக விநாயகரைத் தரிசித்து,

அறு சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

முற்பவத்தி லியான்புரிந்த தீவினைகண் முழுதகற்று
முகத்தி னானை,
யற்பசுகத் தனையழுத்தா வைங்கரனைப் பிற்பவமு
மகற்றுங் கோவைச்,
சொற்பழுது புரியாத வணிகர்குலந் தினம்பணியுந்
துணைத்தா ளானைக்,

கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமா விநாயகனைக்
கருத்தில் வைப்பாம்.

என்னுங் கவியைத் திரு வாய் மலர்ந்து, மீண்டுங் கோவிலூ ரடைந்தருளினர்.

நாற் பத் தொன்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர் கல்ல லய்யாவுக்கு எதிர் கால விஷயத்தைத் தெரிவித்தல்.

மற் ருெரு காலத்தில், கல்ல லய்யா கோவி லூருக்கு வந்து, ஆண்டவரைத் தரிசித்த வளவில், வெள்ளையப்பா இதுவரை எங்கு வசித்தனை, இங்கு வராததற்குக் காரணம் யா தென்று திரு வாய் மலர்ந்தருள, சுவாமின் கல்லலிற் கட்டிய மடத்திற்கு நேர் கிழக்கில், ஒரு கிணறு வெட்டினேன், அதற்குக் கல்லுங் கட்டினேன், அதனுல் வருவதற்கு இயலாமற் சில திங்கள் சென்று விட்டன வென்று வாய் பொத்திப் பக்தியோடு நின்று சொல்ல, அப் போது, ஆண்டவர் அது என்று மிடி கிணறு தானே, அதற்கே னித்தனை பிரயாச மென்று, திரு வாய் மலர்ந்தருளினர்: அவ் வசநத்தைக் கேட் டுள்ள கல்ல லய்யா, அச்ச முற்றுச் சென்று, ஆலோசனையோடு தெற்குக் குளக்கரையில் நிற்குஞ் சமயத்தில், கல்லலி லிருந்து ஒரு கூலியா ளோடி வந்து, சுவாமி, தாங்கள் வெட்டிய கிணறு இன்று பகற் பத்து நாழிகை யளவிற் சுற்றிலு மிடிந்து உள்ளே விழுந்துவிட்ட தென்று கூறினன், அது கேட்ட கல்ல லய்யாவு மிது சங்கதியை முன்னமே ஆண்டவர் திரு வாக்கினுற் கேட்டுக் கொண்டேன். அதை எத்தனை தரம் எடுத்துக் கட்டினுலும் இடி கிணருகுமே ஒழிய வே றில்லை மடத்திற்குத் தெற்கில் ஒரு கிணறு வெட்டிக் கொள்ளுங்க ளென் றெழுதியனுப்ப,

அங் கிருந்த வேலைக்காரர்கள் அவ் விதமே நடந்து கொண் டார்கள்.

ஐம்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர் இராய புரம் சிதம்பரஞ் செட்டியாருக்குத் திரு முக மனுப்புதல்

மற்றோர் சமயத்திற் பஞ்சம் நேர்ந்தமையின், ஆண்டவர் இராய புரம், சிதம்பரஞ் செட்டியாருக்கு, தம்பி சிதம்பரஞ் செட்டியாருக்குப் பஞ்ச கிருத் திய காரண சருவ சாக்ஷித்துவ முடைய அகண்டாகாச போத தேவதை கிருபையால் சகல நன்மையும் உண்டாக வேண்டு மெனச் சிந்திக்கின்றேன். இப் போது பிராரத்தம் நாநாவா யிருக்கின்றது, மழையைக் காணேன். இக் காலந் தெய்வ கதி இப்படியிருக்கின்றது. ஆனதால், எவ் விதத் தினும் மன வருத்த மன்றியிற், பத்துப் பொதி நெல் லனுப்பி வைத்தால், இந்தச் சரீரத்திற்கு உள்ள காலம் எவ் வளவேனும் பின் னிட்ட மட்டுஞ் சகாயந் தான். அப் பால் வருகின்றவினை வாராதிருக்கப் போகின்றதும் இல்லை. உள்ளபடி நடக்கின்றது. என் போலி களுக்கு வேறே சகாயம் கிடையாது, ஆனதால், இப்படியிருக்கின்றவனுக்குச் சகாயஞ் செய்வதைத் தவிர வேறு சற் காரிய மென்ன விருக்கின்றது. சுபாவ தசையில் எனக்குச் சமுசார சங்கற்பமே யில்லை. விவகாரத் தில் சித்தத்திற்கு கொஞ்சம் தயை யிருப்பதனால், அன்னி யர்களுக்கு வெகு குடும்பியாகவும் தோன்றுகின்றேன். என்னமோ ஏதோ எப்படியோ நடக்கின்றது என்று வரைந்து, ஒரு திரு முகம் அனுப்பியருள, அத் திரு முகத்

தைப் பார்த்துச் சிதம்பரஞ் செட்டியார் ஆநந்தக்களிப் புற்றுக் கண்களிற் சேர்த்து, உத்தரவுப் பிரகாரம் நெல்லனுப்பி ஆண்டவர் பரிபூரண அநுக்கிரகத்தை யடைந்தனர்.

ஐம் பத்தொன்றாவது

ஸ்ரீ ஆண்டவரை அப்பாப் போலீசு சரணடைதல்.

ஒரு காலத்தில், ஆண்டவர் காரைக் குடியில், தமது சிரகத்தி லெழுந்தருளியிருக்கும் பொழுது, பாரதப் பிரசங்கம் நடந்து வந்தது. அத் தருணத்தில், அவ் வூரில், அப்பாப் போலீஸ் என்பவன் போலீஸ் வேலையின் அதிகாரத்தினாலே அவ் வூர்ச் சநங்களை மிகவும் இம்சித்துக் கொண்டிருந்தான். அவன் தனது பூர்வ புண்ணிய புஞ்ச பரிபாகத்தால், ஆண்டவரது தமையனாராகிய மாயாண்டி செட்டியாரிடம் வந்து, அவரது சகோதரரான ஆண்டவர்; பிரதிநமும் வீட்டிற் பிரசங்கித்து வருகின்றாரெனக் கேள்வியுற்று, அதனைச் சிரவணஞ் செய்ய விருப்பங் கொண்டு, இரவிற் பிரசங்கம் நடக்குஞ் சமயத்தில் வந்து, வணக்க மின்றிச் சட்டை தலப்பா அங்கவஸ்திரத்தோடிருந்து ஆண்டவர் பிரசங்கத்தைக் கேட்டுப் பிரமித்தெழுந்து, போய் மறு நாள் சட்டை தலப்பா வின்றி அங்க வஸ்திரத்தோடு வந்து கேட்டுக் கொண்டிருந்து, மூன்றா நாள் பய பக்தி விசுவாசத்துடன் வந்து சாஷ்டாங்க மாக வணங்கி எழுந்து, உட்கார்ந்து. அன்புடன் ஆண்டவர் பிரசங்கத்தைக் கேட்டு விடய விரக்தி முதலிய சற் குணங்க ளுண்டாகி, அன்றே வேலையை இராசி நாமாக் கொடுத்து விட்டுத், தனது குமாஸ்தா முத்தய்யா

பிள்ளையோடும் சேவகன் குச னென்பவனோடும் அடி மைத் திறம் பூண்டு, இடை விடாது ஆண்டவர் சந்நிதியி லிருந்து, சற் சாஸ்திரம் பயின்று, கைங்கரியஞ் செய்து வந்தனன்.

ஐம்பத் திரண் டாவது

ஸ்ரீ ஆண்டவர் யாசகங் கொடுத்தல்.

ஒரு நாள் ஆண்டவர், தமது கிரகத்தி லெழுந்தருளி யிருக்கும் போது, சிவ பத்தியிற் சிறந் துற்ற ஓர் மறை யவர் ஆண்டவரிடம் வந்து, விவாகநிமித்தம் யாசித்த பொழுது ஆண்டவர் அவரை உபசரித்துப் பெட்டியைத் திறந்து ரொக்கப் பையி லிருந்த ருபாயைத் தங்கள் அதிர்ஷ் டம் எப்படியோ அப்படி யிருக்கு மெனச் சொல்லிக் குப்புறக் கொட்டியருள, அதனை அவர் மிகக் களிப்போடு பெற்றுக் கொண்டு போயினர். அது கண்ட ஆண்டவர் கனிஷ்ட ராகிய வேங்கடாசலஞ் செட்டியார், எங்க ளுக்கு இது சரிப்படா தெனச் சொல்ல, உடனே ஆண்ட வர் எங்களுக்கும் நீங்கள் சரிப்படீர்க ளெனச் சொல்லித் திருக் கோவி லூருக்கு அடியார்களுடன் எழுந்தருளினர். அவ் வாறு, எழுந்தருளிய பின்னர், வேங்கடாசலஞ் செட்டியார், தமது சுற்றத்தாரிடத்தில் ஆண்டவர், பணப் பையைத் தலைகீழாகக் கொட்டிய முறையைச் சொல்லி, இப் பிள்ளை இருப்பதைக் காட்டிலும், இறப்பது நன் றென் றுரைத்தனர். அதைச் சுற்றத்தார் வழியாக ஆண்ட வர் செவியுற்று,

நேரிசை வெண்பா

சுற்றத்தா ரின்னந்தொ லைந்தானி லையெனவே
பற்றற்றே னைந்திருத்தல் பண்பாமோ—கொற்றனுடல்,

பாதிப றித்திருக்கும் பண்ணவியே யுன்னேயடைந்
திதிருக்க ஞாயமிலே யே.

என்னும் இவ் வெண்பாவைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

ஐம் பத்து மூன் றுவது

ஸ்ரீ ஆண்டவருக்குக் கொற்ற வா ளீசர் பிரசந்ந மாதல்.

ஒரு திநம் கோவி லூரில் ஆண்டவர், மது புஷ்கரணி யின் கீழ் கரையில், ஈசாந்நிய திக்கில், நள் ளிரவி லெழுந் தருளியிருந்த பொழுது, அகண்டேகரசச் சச்சிதாநந்த பரி பூரண பரமாத்வித ஆநந்தகனீபூத மகாதே வராகிய கொற்ற வாளீசர் கோடி சந்திரப் பிரகாச ராய்ச், சந்திர சூட ராய்க் கங்காதர ராய்க், காள கண்ட ராய்த், திரி நேத்திர ராய், உமாசகித ராய்த், திவ்விய மங்கள விக்கிரக ராய், இடபா ரூட ராய், எழுந்தருளிப் பிரசந்நமாயினர். அப் பொழு தாண்டவ ரெழுந்து, மிகுந்த பக்தி விநயத்தோடு வணங் கித் துதித்து நிற்க, உடனே கொற்ற வாளீசர், அந்தர்த் தாந மாயினர். அதன் பின்னர், ஆண்டவர், அதிக அன் புடனே, ஆராமையுற்று, காலையிற் றமது முக்கிய சீட ராகிய பள்ளத் தூர், முத்து வீரப்பய்யாவை அழைத்து, அப்பா குழந்தாய். நேற்றிரவிற் பதி னைந்து நாழிகை யள வில், மது புஷ்கரணி கரையில் ஈசாந்நிய திக்கில், நான் ஏகாந்தமா யிருந்தபொழுது "வெண்ணிரத்த முகில்கோடி வெண்டிங்கள் கோடியென விளங்குந் தேசைக் கண்ண கத்து நோக்கலுமே, நந்திமுதல் வரவுமையாள் கைமேற் கைவைத், தெண்ணறச்சங் கரன்வர லு மாணுக்க ருடன்,

விரைவி லெழுந்து பூசை, பண்ணுதற்கா னவைகொடு
போய்ப் பன்மலர்தூய்த் தூரத்திற் பணிந்து போற்றி"

என வசிட்ட சுவாமிகளுக்குத் தேவன் பிரசன்ன
மானதற் கெண் மடங் கதிகப் பிரகாசத்தோடு, எமக்குக்
கொற்ற வா ளீசர் பிரசந்ந மாயினர் என்று திரு வாய்
மலர்ந்தருளினர்.

ஐம் பத்து நான். காவது.

ஸ்ரீ ஆண்டவர், சின்னன் செட்டியார் மன வருத்தம் நீங்கத் திரு முக மருப்புதல்

ஒரு பொழுது இராய புரம், வெ. மு. சின்னன் செட்
டியார், வியாபார நிமித்தத்தால், வந்த நஷ்டத்தை உத்தே
சித்து வருத்த முற்றிருக்கையில், ஆண்டவர், அச் சின்
னன் செட்டியாருக்கு மன வருத்தம் நீங்கும் பொருட்டு,

"பொல்லா தவர்நன்மை பொருந்துவது
நல்லோர் மிகவன் றுயர் நண்ணுவதுந்
தொல்லார் வினையால் வரினுந் தொடர்பாய்
நில்லா தெனும்வாய் மொழிச் சயமே"
என ஆன்றோர்க ளியற்றிய கவியையும்,
"அரவச் சட்டை யகலு முறைபோற்,
றிரமா நிலையாத் தேக பாச
முரமாய் நீக்கி யும்ப ரடையாய்
பரம வாரி படியத் துணிந்த
சின்னன் வணிகன் சித்தந் தெளிய
வென்று லெழுது மியல்பை முழுதும்

யாமா ரென்றெணி யிசைந்தா லுலகுந்
தாமாய் நிற்றல் தகுந்தகு மின்றே,

எனத் தாம் திரு வாய் மலர்ந் தருளிய அகவற் பாவை யும், எழுதி யநுப்பியருளினர்.

ஐம் பத் தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவர் அஞ்சாத பெருமா ளாலயஞ் சீர் திருத்தல்.

ஒரு தினம் மடாலயத்திற்குத் தெற்கே யுள்ள மது நதிக் கரையிற் செய்திருந்த பரண்மீது விநோத மாக ஒவ் வொருக்கால் நித்திரை செய்து வரும் வழக்கப்படி ஆண்டவர் நித்திரை செய்தருளுகையில், கோவி லூருக்கு மேற்கே, சற் றேறக் குறையக் கால் யோசனை தூரத்தி லுள்ள சாளி என்னுங் கிராமத்தி லெழுந்தருளி யிருக்கின்ற அஞ்சாத பெருமா ளென்னும் ஐயனுர் ஆண்டவருக்குச் சொற்பநம் போல, ஒரு தோற்ற முண்டாக்கித் தன் முது கிற் புற்று வளர்ந்திருப்பதைக் காண்பித்து, இவ் வாறு, சித லரிக்க யா னிருப்பது நீதியோ, இதனை நீவிர் விசாரித்து, என்னைச் சீர்திருத்தல் வேண்டு மென்று சொல்ல, அது கேட்ட ஆண்டவர், நீவிர் யாவ ரென்று வினவலும், யான் அஞ்சாத பெருமா ளென்று சொல்லி, ஐயனுர் அந் தர்த்தாந மாயினர். உடனே ஆண்டவர் துயி லீங்கி, எழுந்து, கீழே படுத்திருந்த வலயனை விளித்து, நல்லான் செட்டியாரை விரைவிற் சென் றழைத்து வா வென அரு ளித், தமது சுவாநுபூதியி லிருந்தனர். நல்லான் செட்டி யார் வந்து, ஆண்டவரைப் பணிந் தெழுந்து அடியேனை யழைத்த காரண மென்ன வென்று கேட்க, உன் குல

தெய்வ மாகிய அஞ்சாத பெருமா ளாலயத்திற்கு வா வென்று அழைத்துக்கொண்டு, பாத ரக்ஷை யணிந்து, ஆண்டவர் முன்னும் நல்லான் செட்டியார், பின்னு மாகச் சென்று, சூரியோதய மாகுஞ் சமயத்தில் அஞ்சாத பெருமா ளாலயத்தை யடைந்தனர். அப்போது, நல்லான் செட்டியாரை ஆண்டவர் பார்த்து, வாலயத்துட் புகுந்து, ஐயனுரைப் பார்த்து வா வென்று உத்தரவு செய்தருளி னர். அவர் ஸ்நாநம் முதலியவை செய்யாமையால் ஆல யத்திற் புகுதற் கஞ்சி நின்றனர். அஃ தறிந்த ஆண்டவர் அடா நல்லான் இங்கே வா வென்று வாலாலயத்திற்குப் பிறகே, அழைத்து வந்து, அவ் வா லாலயச் சுவரைப் பாதரக்ஷையோடே யுதைத்து, வீழ்த்திச் சுவாமி முதுகிற் புற்று வளர்ந்திருப்பதைப் பா ரென்று காட்டி, இப்படி வருவானே னென்று கேட்க, அது கேட்ட நல்லான் செட் டியார், இவ் வாலயஞ் செய்து முடித்தற்கு இத்தனை தொகை யென்று குத்தகை யாகப் பேசித் தச்சனிடம் மொத்த மாகக் கொடுத்துவிட்டோம். அவனுடைய அசாக்கிரத்தையினுல் இப்படி வந்த தென்று சொல்ல, ஆண்டவர் அத் தச்சனை யழைத்துவரச் சொல்லி அவனைக் கண்டித்து சீக்கிரத்தில் ஆலயஞ் செய்து முடிக்கக் கடவா யென் ருக்ஞாபித்து, பூசை வைத்து வரும் குயவனையுங் கண்டித்துச் செவ்வை யாகப் பூசை, நைவேத்தியஞ் செய்து, வரும்படி கட்டளையிட்டுக், கோவி லூருக் கெழுந்தருளினர். அத் தச்சன் பின்னரும் ஆலயங் கட்டத் தொடங்காதிருந்தனன். ஆதலால், அவனுடைய மனைவி யின் கெற்பம் உதிரமா யொழுகத் தொடங்கிற்று. அத னைக் கண்ட தச்சன் பயந்து, பெரியோர் வார்த்தைப்படி நடவாமையால் இப்படிப்பட்ட வருத்தம் நேரிட்ட

தென்று மனங் கலங்கி, ஓடிவந்து ஆண்டவர், பாதத்தில் வீழ்ந்து, நிகழ்ந்ததைச் சொல்லி யழுது, அடியேன் அபராதத்தைப் பொருத்தருளல் வேண்டும் இனிக் கணமுந் தாமசியாமல் ஆலயஞ் செய்து முடித்து விடுகின்றேன். ஐயனே என் மனைவியின் கருவானது அழிந்து போகாமல், பிரசவிக்கும்படி விபூதி யளித்தருளல் வேண்டு மெனப் பிரார்த்தித்தனன். ஆண்டவர் கருணை மா கட லாகலின், விபூதி யளித்தருளி, இதனை அவள் சிரசிற் றரித்தால் வெந்து போவள், உன் வீட்டுக் கூரையி லிடு. இடவே அவட்குற்ற இடையூ றொழிந்து கருவின் முதிர்ந்து ஆண் குழந்தை பிரசவிப்பாள், அக் குழந்தைக்கு அஞ்சாத பெருமா ளென்று நாம மிட்டு நல்ல புத்தியோடு கூடிப் பிழைதிருத்தி யென்று அவனை யனுப்ப, அவன் ஆண்டவர் அருமைத் திருக் கரத்தா லளித்த விபூதியைப் பெற்றுக் கொண்டு விரைவாக ஓடித் தன் வீட்டுக் கூரையிலிட அது பற்றி எரியத் தொடங்கிற்று. அது கண்ட தச்சன் அதனை யணைத்து விட்டு வீட்டிற் புகுந்து தன் பெண் சாதியை நோக்க, உடனே அவளுக்கு இரத்தப் போக்கு நின்று சின் னுட் கழிந்து ஆண்டவ ருத்தரவின்படியே ஆண் குழந்தை ஜனிக்க, அக் குழந்தைக்கு ஆண்டவர் திருவாக்கின்படியே அஞ்சாத பெருமா ளென்று, நாம மிட்டு அவர தாலயத்தையும் விரைவிற் செய்து முடித்தனன்.

ஐம் பத் தா றுவது

ஸ்ரீ ஆண்டவர் திருப் பெருந் துறைக் கெழுந்தருளி ஆத்ம நாதனைத் துதித்தல்.

மற்றொரு காலத்தில், தேவி கோட்டை ஆவுடையார் கோவில் அண்ணுமலைச் செட்டியா ரென்பவர் கோவிலூ

ருக்கு வந்து, ஆண்டவரை மடாலயக் கிரகப் பிரவேசத்திற் காகத் திருப் பெருந் துறைக்குப் பல்லக்கி லெழுந்தருளப் பண்ணி அழைத்துச் சென்றனர். அக் காலையில் செப்பாவய லென்னும் கிராமத்தி னேரிக் கரையினிற் போகிகள் பல்லக்கைக் கட்டினர். ஆண்டவர் பல்லக்கை விட்டிறங்கிப் பசிக்கின்றது, இவ் வூரினிற் பழையது அகப்படுமோ வென் றுத்தரவாகியது. இவ் வாக்கியத்தைக் கேட்டு நின்ற செப்பாவயல் சின்னயச் செட்டியா ரென்பவர் துரிதமாய்க் கிரகத்திற் சென்று, அவ் விடத் திருந்த பழையதை ஓர் பாத்திரத் தெடுத்து ஊறுகாய், துவையல், உப்புடன் கொணர்ந்து, ஆண்டவ ருடைய சந்நிதியில் வைத்த மாத்திரத்தில், ஆண்ட வரு மப் புராதந வந்நத்தைப் புசித்துக் கை கால் சுத்தி செய்து கொண்டு, தாம்பூலந் தரித்து, நிமிர்ந்து பார்த்து, சின்னய்யா வென விளித்து, நீ பின்னர் மரண காலத்தில், அநாயாச மரணத்தை அடைகுவை யென்று அநுக்கிரகஞ் செய்தனர். அதன் பின்னர் வெகு காலஞ் சென்று, புது வய லென்னுங் கிராமத்தில், தமது குடும்பத்தாரோடுங் குடி யேறி வந்து அங்கு வசிக்குங்கால், ஓர் நாள் சின்னயச் செட்டி யென்பவர் ஸ்நாநஞ் செய்து, பஞ்சாக்ஷர மந்திர செபஞ் செய்து கொண்டிருந்தவர், இருந்தபடியே அநயாச மாகச் சிவ பத மடைந்தனர். ஆண்டவ ருத்தரவாகியிருந்ததை முன்னரே அச் சின்னயச் செட்டியா ரென்பவர் வெகு பெயர்களிடத்திற் றெரிவித்திருந்தனர். அந்த அடியவர்க ளெல்லாம் ஆண்டவர் வாக்கியத்திற்கு மிக வியந்து சந்தோஷ மடைந்தனர்கள். ஆண்டவருந் திருப் பெருந் துறைக்கிச் சென்று அந்த க்ஷேத்திரத் துள்ள ஆலயத்திற்குச் சென்று தெரிசநஞ் செய்து கொண்டு,

தொந்தமுங் கடந்த தூயோர் துதித்திடற் குரிய பாத
மந்தமு நடுவு மின்றி யமர்ந்திடு மற்பொற் பாதஞ்
சந்ததஞ் சுகசிற் சத்தாய்ச் சசோதித மான பாதஞ்
சிந்தனைப் படியே தோன்றுந் திருப்பெருந்
துறையான் பாதம்

என்னுங் கவியைத் திரு வாய்மலர்ந்து ஆத்ம நாதனைத் துதி செய்தருளினர்.

ஐம்பத் தேழாவது.

ஸ்ரீ ஆண்டவர் ஐஞ் ஞூற் றீசரைத் துதித்தல்.

ஆண்டவர் அங் கிருந்து கோவி லூருக் கெழுந்தருளும் போது, இராம நாதன் செட்டியார் தமது மாத்தூர் கோவி லுக்கு அழைத்துக் கொண்டு போய் சுவாமி தரிசநம் பண்ணி வைத்த காலத்தில்,

நேரிசை வெண்பா.

ஐந்நூற்று வீச ரடியிணையைச் சேர்ந்தவுனக்
கெஞ்ஞான்று நெஞ்சே யிடருண்டோ—பைஞ்ஞாகந்,
தாங்கும் புவிவிளங்கச் சஞ்சரிக்கும் பாநுகண்ட
தூங்கிமம்போ காதோ சொல்.

என்னும் வெண்பாவை அருளிச் செய்து, கோவி லூ ரடைந்தனர்.

ஐம்பத் தெட் டாவது.

ஸ்ரீ ஆண்டவர் வசித்த மடாலயங்கள்.

ஸ்ரீ ஆண்டவ(தம தன்ப ருன நல்லான் செட்டியா ருடன் கோவிலூரில் நாகு மகன் சுப்பாப் பிள்ளை கிரகத்திற்

சில காலமும், அதனைக் கண்மாயின் புறக் கரையிற் றென்னம் பிள்ளை வைத்தற் பொருட்டுப் பனை யோலையா லியற்றப்பட்ட கொட்டகையின்கண் சில காலமும், சேகரத்திக் கண்மாய்த் தென் கடையி லுள்ள புள்ளுருணிக் கரையிற் கட்டியிருந்த கொட்டகையிற் சில காலமும், மேற் கூறிய சேகரத்திக் கண்மாய்க் கரை மத்தியிற் கட்டப்பட்ட கொட்டகையிற் சில காலமும், தெக் கூருணி மேல் கரையிற் கட்டப்பட்ட கூரைக் கொட்டகையிற் சிலகாலமும், கொற்றவா ளீச ராலயத்திற்கு மேல வீதியில் ஓட்டா லியற்றப்பட்ட பாதரக் குடிச் சுவாமிகள் மடாலயத்திற் சில காலமும், தேனாற்றின் வட கரையிற் கூரையா லியற்றப்பட்ட சவுக்கையிற் போடப்பட்ட பரண் மீது சில காலமும், தெற்கு வீதிக்குத் தென்பாற் கீழ்ப் பக்கம் ஒரு கட்டும், மேல் பக்க மொரு கட்டு மாக வோட்டா லியற்றப்பட்ட திரு மடாலயத்திற் சில காலமு மாக, கோவிலூருக் கெழுந்தருளிய இருபத் தோரா வது வயது முதல் முப் பத்து நான் காவது வயது வரையிற் கூடிய பதினான்கு வருடங்களினு மிவ் வாறே பல விடங்களிலும் வசித்து ஞான நூற் கதைகளாற் போது போக்கி வந்தனர்.

ஐம் பத் தொன்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர் கல்லினால் திரு மடாலயம் நிருமித்தல்.

ஒரு நாள் ஆண்டவர் திரு வீதிக்குத் தேற்கே ஓட்டா லிரண்டு கட்டடங்க ளாக இயற்றப்பட்ட திரு மடத்திற்கு வடக்கே கல்லினால் ஒரு திருமடாலய மமைக்கத் திரு வுள்ளங் கொண்டு முகூர்த்தஞ் செய்வதற்குத் தேங்காய் வாங்

வதற்காகத் திருப்புத் தூருக்கும், குன்றுக் குடிக்கும், ஆளனுப்புவித்தும், அவ்விரண்டாட்களும் அச்சமயம் வராதிருந்தமை பற்றி ஆண்டவரும் முகூர்த்தஞ் செய்வதற்கு நியமித்த நாழிகை நெருங்கியதே என்று திருவுள்ளத்தின் கண் நினைந்து ஆலயத்தை திரும்பிப் பார்த்தனர். அப்போதே அவ்வாலயத்தினின்றும், ஒரு சிறிய அந்தணர் கன்னிகை தனது கையில் ஓர் கமலத்தில் வெற்றிலே, பாக்கும், இரண்டு தேங்காயுங் கொண்டு வந்தனள். ஆண்டவரும் பொருக்கென வெழுந்து, அக் கமலத்தைத் தமது அஸ்தத்திற் பெற்றுக் கொண்டு, கல் மண்டபம் செய்ய உத்தேசித்த விடத்தில் சென்று நின்றதைக் குட்டையய ஞசாரி பார்த்து, அவ் வந்தனர் கன்னிகையை, அம்மா, நீ யாரென்று வினவ, அந்தக் கன்னிகை அந்தர்த்தாந மாயினள். ஆண்டவருந் தமது திருக் கரத்தால் தேங்காயை எடுத்துப் பரதேவதே என்றும் மாருத அந்ந தாநம் நடக்க வேண்டுமென்று சொல்லித் தேங்காயை உடைத்தருளினர். அன்று முதல் அமோக மாக அந்ந தாநம் நடந்து வருவதை இன்றுங் கண்கூடாகப் பார்க்க லாம்.

அறுபதாவது

ஸ்ரீ ஆண்டவர் சீடர்களுக்குச் சாஸ்திர பாட மநுக்கிரகித்தல்.

அவ்வண்ணம் முகூர்த்தஞ் செய்து மடாலயத் திருப்பணியையுஞ் சீக்கிர மாக முடிப்பித்துப் பகற்போதெல்லாந் தென்னஞ் சோலே, நந்தவநம் ஆரணிய முதலிய ஏகாந்தப் பிரதேசத்தை யடைந்து தனித்து அகநோக் கொழியாது பிரம நிஷ்டையி லிருந்து அத்தமன சமயத்தில் ஆல

யத்திற் கெழுந்தருளி பிரதக்ஷிணம் பண்ணிச் சுவாமி தரிசநஞ் செய்து கொண்டு அம்மையாருக்குத் தீபாராதன மாகுமளவுஞ் சந்நிதியில் சொரூபத்தில் விழிப்பும் பிரபஞ்சத்திலுறக்கமுமா யிருக்கும், நிஷ்டையுட னிருந்து, தீபாராதன மான பின்னர், விழிக்குஞ் சமயம் பார்த்து நின்று, குருக்கள் விபூதி யளிக்கப் பெற்றுத் தரித்துக்கொண்டு, அம்மையாரை நமஸ்கரித்து நின்று மீண்டும் மடாலயத்திற்கு வந்து, அடியார்க ளிட்டிருந்த, ஆசநத்தி லெழுந்தருளிச் சாதநங்கண் முதலிய சற் குணங்க ணிறைந்த அடியார் குழாங்கள் துதித்துப் பணிந்து எழுந்து, இரு கரங் குவித்து நின்று அடியேங்க ளுய்யும் பொருட்டுத் திருவாக் களித்தருளல் வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்ய, அப்போது ஆண்டவர் அவ் வடியார்கள் மீ தருள் சுரந்து அரிய பிரமாநுபூதியைத் தமது கெம்பீர வாக்கினால் அருளிச் செய்து அநேகரைக் கிருதார்த்த ராகச் செய்தருளினர்.

"சகத்தி லே புறத்தொழிலி லாரம் பித்துத் தனியிதயத் தாரம்பஞ் சற்று மின்றி, யகத்திலே செயாதோனாய்ப் புறத்தே செய்வோ னாகியே யுலகில் விளையாடுவீரா"

என்று வாசிட்டத்திற் கூறிய வாறே விநோதித்திருந்தனர்.

அறு பத் தொன் றாவது:

ஸ்ரீ ஆண்டவர் பூர்வ ஜந்மாநுபவத்தை வெளியிடல்.

ஓர் திநம் அடியார்கண்மீது கருணை சுரந்து சாஸ்திர முக மாய்த் தமது சுவாநுபூதியை வெளியிட்டுக் கொண்டு வருஞ் சமயத்தில் சிக்கலி லிருந் தெழுந்தருளிய வீர பத்திர

சுவாமிகளினது வதநத்தை நோக்கி, சுவாமின்! இவ் வான்மா பூர்வ ஜன்மத்திற் பிராமணச் சந்நியாசியாயும், பிரதிபந்த ஞானியாயும், அற்ப யிச்சையை யுடையதாயு மிருந்தமையின், இங்ஙனம், கர்ம சேஷத்தால் சூத்திர ஜென்மத்தை யடைந்து, சருவ காமத்தையும் அநுபவித்து, வருகின்றது. இச் ஜென்மம் முடிந்த ஜென்ம மென்று, காணப்படுகிறது எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

அறுபத்திரண்டாவது

ஸ்ரீ ஆண்டவர் மோதிரங் கொடுத்தல்

மற்றோர் தினம் ஆண்டவர், கல் மண்டப முகப்பில் ஒரு கல்லி லெழுந்தருளியிருந்த சமயத்தில், ஒரு புலவன் வந்து சுவாமி எனக் கேதாயினுங் கொடுக்க வேண்டு மென்று கேட்க. அப் போது யான் பரதேசி என்னிடத் தொன்று மில்லையே என்று உத்தர வளித்தனர். அது கேட்ட புலவன், சுவாமின்! தேவரீர் திருக் கரத்தில் மோதிர மிருக்கின்றதே என்று சொல்ல நான் மறந்து விட்டதை நீ ஞாபகஞ் செய்தது நமக்கு மிக நன்கே எனச் சொல்லிக் கரத்தி லணியப் பெற்றிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தனுப்பி விட்டனர். அவ்வாறு, கொடுத் தனுப்பிய பின்னர், ஒரு கடிகை சென்று, இலக்குமணச் செட்டியார், ஆண்டவரைத் தரிசித்துச் செல்லுங் கருத் துடையராய்க் காரைக்குடியி லிருந்து வந்து தரிசித்து, ஆண்டவர், திருக் கரத்தில் தம்மா லுபயோகிக்கப்பட்ட மோதிரத்தைக் காணமையால் வருத்த முற்று ஆண்டவ ரைப் பார்த்துப் பயபக்தியோடும், திருக் கரத்தில் மோதி ரத்தைக் காணுமே என்று வினவ, நம்மை வந்து யாசித்த

ஓர் புலவனுக்கு அளித்தோ மென்று திருவாய் மலர்ந்தருளி னர். அப் புலவன் எங்குற்றா னென்று மீண்டும் வினவின போது, அந்தப் புலவன் மேற்கு நோக்கிச் சென்றன னுத லால், அவனை நீ போய் அடித்துத் தொந்திரவு செய்யாதே எனச் சொல்லியருளினர். அது கேட்ட இலட்சுமணச் செட்டியார், மேற் றிசை நோக்கிச் சென்று கண்டு, அம் மோதிரம் பெரும் விலையைக் கொடுத்து வாங்கி வந்து சுவாமிகள் சந்நிதானத்தில் வைத்து நமஸ்கரித்து அடியேன் இம் மோதிரம் பெறுந் திரவியங் கொடுத்து வாங்கி வந்தே னென்று விண்ணப்பஞ் செய்து, மீண்டும் ஆண்டவர் அருமைத் திருக் கரத்திற் சேர்ப்பித்து விடைபெற்றுச் சென்றனர்.

அறுபத்து மூன்ருவது

ஸ்ரீ ஆண்டவர் கல்லலய்யா மந வருத்த நீக்குதல்.

மற்றொரு சமயத்தில், கல்லலுக்கு ஆண்டவர் விஜய மாகிச் சிவாலய சீரணோத்தாரணஞ் செய்தற் பொருட்டு வாலாலயப் பிரதிஷ்டை செய்த காலத்துச் சநங் களுடைய நெருக்கத்திறுற் கல்லய்யா வுடைய சரீரம் ஆண்டவர் திரு மேனியிற் றீண்டினது பற்றிக் கல்லலய்யா மந வருத்த முற்று நிற்பதைத் திரு வுள்ளத் துணர்ந்து,

"நானெனவு நீயெனவு நாடலுடன் லக்குறித்தே
ஞானமய மொன்றெனவே நாடாத தென்னமதி"

என்னும் பாடலைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

அறுபத்து நான் காவது

ஸ்ரீ ஆண்டவர் மீது பிள்ளைத் தமிழ்ப் பாடிக் கொணர்தல்.

மற்றொரு நாள் கல் மண்டப முகப்பில் ஆண்டவ ரெழுந்தருளியிருக்குங் காலத்தில், ஒரு புலவர் வந்து, சுவாமி நான் தங்கள் மீது பிள்ளைப் பிரபந்தம் பாடிக் கொண்டு வந்திருக்கின்றேனென்று விண்ணப்பிக்க, அவ் வார்த்தை யைக் கேட்ட ஆண்டவர், துதியைக் காதிற் கேட்க மன மில்லாத நிரகங்கார மூர்த்தியாதலால், நீர் என் பேரிற் றுறு பிள்ளைப் பெற வேண்டும், காடு, செடி, வீடு, வாசல், உமக் கில்லையா எனத் திரு வாய் மலர்ந்து, நகைத்துச் சுவாநுபூதியி லிருந்து விட்டனர். புலவர் ஒன்றும் விளங் காது மயங்கி நிற்கச் சற்று நேரஞ் சென்று, சில திரவியங் கொடுக்கச் செய்து நீ பாடியதைப் படிக்க வேண்டா மென் றருளி அனுப்பி விட்டனர்.

அறுபத் தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவர் துலுக்கப் பரதேசியை நிக்கிரகித்தல்.

மற்றொரு போது, சிதம்பர மிருந்து ஓர் துலுக்கப் பரதேசி, சில சாஸ்திரங்களை வாசித்துக் கொண்டு ஆண்டவ ருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவரைத் தரிசிக்குங் கருத்துடைய னாகப் பிரயாணப்பட்டு வந்து, மட முதலிய ஸ்தானங்களிற் றேடிக் காணாமல் சந்நிதிக் கழனியில் நிற் கும் ஆண்டவரைப் பார்த்து, ஆண்டவர் எங் கிருப்பா

றென்று வினவ, ஆண்டவர் நிமிர்ந்து பார்த்து அக நோக்குற்றுக் குனிந்து, அக் கழனியிற் சிதறிக் கிடக்கும் நெற்கதிரைப் பொறுக்கினர். அப்போது இவர் தான் ஆண்டவரெனக் குறிப்பா லறிந்து பெரியோர்கள் மகிமையைச் சிறிது மறியாதவ னாதலின், அசிரத்தை யடைந்து, ஆண்டவரை நோக்கி, "புணர்ந்த பாவமெ லாம்பரி பூரண முணர்ந்த ஞானிவி ழிபட வோடுமே" என ஆன்றோர்கள் சொல்லி யிருக்கின்றார்களே, தங்களைத் தரிசித்த எனக்கு, "அங்ஙனங் காணப்பட வில்லையே" என்று வினவ, அது கேட்ட ஆண்டவர், பரிசந வேதி மற்ற வுலோகங்களையும் பொன்னாகச் செய்யு மாயினும், குட்டிச் சுவற்றை ஒன்றுஞ் செய்யாதது போன்று, நானாகிய பரிசந வேதி, நீ யாகிய குட்டிச் சுவற்றை யென்ன செய்யு மெனத் திரு வாய் மலர, அப் பரதேசி அச்ச மூற்று நமஸ்கரித்துச் சென்று, பின்னர் சில காலத்தில் ஆதி வியாதிகளாற் றுன்புற் றிறந்தனன்.

அறுபத் தாறுவது

ஸ்ரீ ஆண்டவருக்கு அண்ணாமலை யய்யா புதுமை செய்தல்.

காரைக் குடி அண்ணாமலை அய்யா அவர்கள், ஆண்டவரைச் சரணடைந்து ஆப்தாதி பணிவிடைகளை நன்றாகச் செய்து வரும் பொழுது, ஒர் தினம் அண்ணாமலை அய்யா அவர்களுக்குக் குடும்பத்தி லுள்ள யாவரும் புத்திர சுவீகாரம் பண்ண வேண்டு மென்னும் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர் அண்ணாமலை அய்யா அவர்களும் ஆண்டவரிடம் வந்து, நமஸ்கரித் தெழுந்து நின்று,

சுவாமின்! அடியேனுக்கு எனது குடும்பத்தி லுள்ளோர் யாவரும் பிள்ளை எடுத்துப் புதுமை செய்ய வேண்டு மென்று சொல்லுகின்றனர். அவ் விஷயம் திருச் செவியி லேற்றுவித்தல் வேண்டு மென்று யான் விண்ணப்பித்துக் கொண்டே னென, அது கேட்ட ஆண்டவர் "யா னுனக் குப் பிள்ளையா யிருக்கின்றேன் நீ எனக்குப் புதுமையைச் செய்து முடிக்கக் கடவை, உனது பங்குக் குள்ள திரவிய முழுமையும் பிதிர் ஆர்ச்சித சொத் தாக எனக்குக் கொடுத்து. அத் திரவியத்தால் கொற்றவா ளீச ராலத் திருப் புணியை முடித்துச் சந்தோஷிக்கத் தக்க" தென் றுக் ஞாபிக்க, அவ் வண்ணுமலை அய்யா அவர்களும், அத் திரு வார்த்தைக் கெதிர் வார்த்தை யின்றிக் குடும்பத்தி லுள்ள பந்து வர்க்கங்களுக் கெல்லாம் ஆ ளனுப்பி வர வழைத்துப் புதுமை செய்வதற் குரிய பதார்த்தங்களை யெல்லாம் சம்பாதித்து, வரும்படி ஆண்டவ ருடைய திரு மேனியைப் புண்ணிய தீர்த்தங்களால் ஸ்நாநஞ் செய் வித்துக், கடுக்கன், மோதிரம், மகர கண்டி, கௌரி சங்கரம், பட்டுப் பீதாம்பரம் முதலியவைகளால் அலங்கரித்து, வெல் லப் பாகினுற் கப்பி யரிசி செய்வித்துப் பந்துக்களுக் கெல் லாம், கொடுப்பித்து, அறு சுவை உண்டிகளால் உபசரித் தனர். பந்துக்க ளனைவரும் நான்கு திநம் வந்திருந்து மொய்ப் பண மிட்டுப் புதுமையை முடித்துத் தங்கள் தங்கள் கிரகத்திற்குச் செல்லுங் கருத்தின ராய் ஆண்டவர் சந்நிதியை யடைந்து, உத்தரவு பெற்றுக் கொள்ள, அச் சமயம் ஆண்டவர் அவர்களைப் பார்த்து, அண்ணுமலை உடல், ஆவி இரண்டையும் முன்னமே எனக்குத் தந்த னன். இப் போது யாவரும் காணும்படி பொருளையும் தந்து, என்னைப் பிள்ளை யாக ஏற்றுக் கொண்டனன், இப்

பிள்ளை யாவரும் நன்கு மதிக்கத் தக்கதா வென்று, மந்த காசத்தோடுந் திரு வாய் மலர்ந்தருளினர், அதைக் கேட்ட, அப் பந்துக்கள் அனைவரும் அடங்காத சந்தோஷ முடைய ராய் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

அறு பத் தே ழாவது

ஸ்ரீ ஆண்டவர் சர்வமுஞ் சிவ அவதார மென வெளியிடல்.

ஒரு நாள் ஆண்டவர் கல் மண்டபத்தின் வடக்கு முகப்பி லிருக்கையில், பழநிக் கோவிலுக்குப் போன ஜநங்கள் வந்து, ஆண்டவரைத் தரிசித்து, நமஸ்கரித்த பொழுது, கல்லலய்யா அவர்களிடத்திலும், பள்ளத்தூ ரய்யா அவர்களிடத்திலும்

நேரிசை வெண்பா.

கும்பிடவோ மேலில்லைக் கும்பிடவோ கீழில்லைக்
கும்பிட்டு நீங்கக் குறையில்லை—கும்பிடும்பே
ராரோவ றியேன்யா னுகாகா வோகோகோ
ஓரே துமில்லைச்சி வம்.

என்னும் வெண்பாவைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

அறு பத் தெட் டாவது

ஸ்ரீ ஆண்டவரைக் கருணை நிதியும், மதுரை அய்யா அவர்களும், சரணடைதல்.

இவ் வாறு, துறவு சுவாமிக ளிருவரும் ஆண்டவ ருத்தரவைச் சிரமேற் கொண்டு கோவிலூ ரடைந்ததைக்

கேள்வியுற்று, அவர்கள் சுற்றத்தா ரியாவரும் தரிசிக்கவந்த பொழுது, தேவிகோட்டையிற் புண்ணிய சாலி யாகிய வினை தீர்த்தான் செட்டியாரும், அவரது தரும பத்தினி யாகிய முத்தம்மாளும், ஈட்டிய அரிய தவத்தினாலும், உலகத்தி லுள்ள சீவ கோடிக ளியற்றிய புண்ணிய பலத்தினாலும், முத் தம்மாள் திரு வயிற் றுதித்த அருணாசல சுவாமிக ளென்னுந் திரு நாம முடைய அத் துறவு சுவாமிகளுக்குக் கனிஷ்ட ராகிய கருணா நிதி யென்றும் கோவிலூ ரய்யா வென்றும், பெயர் விளங்கிய,ஸ்ரீ சிதம்பர சுவாமிகளும், பாலிய முதல் அன்பரா யுள்ள மதுரை அய்யா அவர்களோடு தமது சேஷ்ட ராகிய அத் துறவு சுவாமிகளைத் தரிசிக்கும் நிமித்தம் கோவி லூருக்கு வந்து தரிசித்து, அவ்விருவரும் ஆண்டவரையுந் தரிசிக்குங் கருத்தினராய் பழம், கற்கண்டு கைக் கொண்டு சென்று, கண்டு வணங்கி நிற்க, ஆண்டவருஞ் சந்நிதானத்தி லிருக்கும்படி உத்தரவு செய்ய, அங்ஙனம் இருவரு மிருக்கின்ற பொழுது, காரைக் குடி அழகன் செட்டியார், மெய்யப்ப செட்டியார் கடையிலிருந்து, பழநி யப்ப செட்டியா ரென்பவர் திருப் பணிப் பற்று வரவு கணக்குக் கட்டைக் கொண்டு வந்து, ஆண்டவர் சந்நிதியில் வாசித்து வர, ஆண்டவர் முற்றுங் கேட்டு, பற்று வரவு தொகை கட்டும்படி உத்தர வாக, அருகிற் கேட்டுக்கொண்டிருந்த, ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பற்று ரூபாய் இவ் வளவு வரவு, ரூபாய் இவ் வளவு, வரவு நீக்கி அதிகப் பற்று ரூபாய் இவ் வள வென்று உடனே எழுந்து சொல்ல, ஆண்டவர் பழநி யப்ப செட்டியாரைப் பார்த்து, இத் தொகையைக் குறித்துக் கொண்டு சரியா யிருக்கின்றதா வெனப் பா ரென் றுத்தர வளிக்க, அங்ஙனமே பார்த்துச் சரியாயிருக்கின்ற தென்று சொல்லியதை ஆண்டவர்

கேட்டு. இக் குழந்தை ஏகாக்கிர சித்தமும், புத்திசாலித் தன்மையு முடையதா யிருத்தலால், பாடஞ் சொல்லி வைத்தால், சீக்கிரங் கிரகணஞ் செய்யக் கூடு மென் றுத் தரவு செய்தருளினர். அவ் வாக்கியத்தைக் கேட்ட கருணை நிதியும், மதுரை குட்டை அய்யா அவர்களும், தேவி கோட்டைக்குப் போய் மீண்டுந் துறவு சுவாமிகளைத் தரிசித்து, வருவ தாகச் சொல்லிவிட்டு கோவி லூருக்கு வந்து, ஆண்டவரை நமஸ்கரித்து நிற்கையில், ஆண்டவர் உவந்து எங்கு வந்தீர்க ளென வினவ, அதற்குப் பாடங் கேட்க வேண்டு மென்று வந்தோம் என்று சொல்ல, அது கேட்டு, அன்றைய திருமே சூடாமணியைப் பாடங் கேட்கும்படி ஆண்டவ ருத்தரவு செய்தருள, இருவரும், அவ் வாறு பாடங் கேட்டு வந்தனர். பின்னருங் கண்ட னூர் நாகப் பய்யா அவர்களும், பெரிய பெரியணய்யா அவர்களும், குமரப் பய்யா அவர்களும், குப்பய்யா அவர்களும், வேங்கடாசல அய்யா அவர்களும், இவர்களைப் போன்ற மற்று முள்ள சாதுக்களும், ஆண்டவரைச் சரண டைந்து, சற் சாஸ்திரம் பயின்று வந்தனர்.

அறுபத் தொன்ப தாவது

ஸ்ரீ ஆண்டவர், காரைக் குடி, க்ஷேம நிமித்தம் கவி பாடி யனுப்புதல்.

ஸ்ரீ ஆண்டவர் இங்ஙனம் கோவி லூரில், திரு நெல்லை யம்பாளுக்கு ஆடிப் பூரத்தில், ரதோத்சவம் ஏற்படுத்தி வெகு சிறப்பாக நடத்திவரும் பொழுது, ஒரு திரு விழா விற்குக் காரைக் குடிக் கொப்புடையம்பாள் திரு விழாவிற் காகப் புதி தாகச் செய்திருந்த தேர்ச் சீலையை வாங்கி

வந்து ரதத்திற் கட்டித் திரு விழா முடிந்த பின், அனுப்பி விட்டு, மரு வருடத்திற்கு வாங்கி வரும்படி ஏவலாளர்களை யனுப்ப, கோயிற் றர்ம கர்த்தர்கள் கொப்புடையம்பாளுச் செய்த தேர்ச் சீலையைத், திரு நெல்லை யம்பாளுக்குக் கொடுத்தால், இந்த அம்பாள் திரு வுள்ள மெப்படி யிருக்குமோ, ஊருக்கு யாதேனும் இடர் நேர்ந்தா லென்ன செய்வோம் யோசனையா யிருக்கிற தென்று சொல்லி ஏவலாளர்களை அனுப்பிவிட்டார்கள். அவரது அபிப்பிராயத்தை ஏவலாளர்கள் ஆண்டவ ரிடந் தெரிவிக்க அதற்கு ஆண்டவர்

வெண்பா.

எண்ணுன் கறம்வளர்த்த வெந்தாய் திருநெல்லை
கண்ணுரப் பார்த்த கருணையினுற்—றண்ணுருஞ்
சீரக்க டல்வளருந் திங்களைக்கண் டாலதுபோற்
காரைக் குடிநகரங் காண்.

என்னும் வெண்பாவை வரைந்து சிதம்பரஞ் செட்டியாருக்குத் திரு முக மனுப்ப, அவர் உடனே அத் திரு முகத்தைப் பார்த்து, உத்தரவுப்படி தேர்ச் சீலையை யனுப்பி வைத்தனர். அன்று முதல் அந் நகர் மிக க்ஷேமமா யிருக்கின்றதை இன்று மென்றும் பார்க்கலாம். பின் னொரு காலத்திற் காரைக் குடி ஆதப்ப செட்டியார் குமாரர் அண்ணுமலை செட்டியா ரென்பவர், வழக்கம் போற் குன்றக் குடிக்குத் திருக் கார்த்திகைத் தரிசனார்த்தஞ் சென்றவர் அங் கிருந்தபடியே மீண்டு ஸ்ரீ கோவி லூர் மடாலயத்தை யடைந்து, ஸ்ரீ ஆண்டவர் இரண்டாங் கால போசனஞ் செய்யும் சமயம், ஆண்டவரை நமஸ்கரித்தெழுந்து நின்ற அளவில், ஆண்டவர் அவர் மேற் றிருக்

கண்ணுற்று நீ எங் கிருந்து, வருகின்றனை, உனது தேக மிளைத்தற்குக் காரண மென்னை என வினவியருள, அடியேன் குன்றக் குடிக்குச் சென்று முருகக் கடவுள் தரிசனை பெற்று வருகின்றே னெனவும், வயிற்று வலியினால் நெடுங் காலம் நலிவுற்றமையால் உடம்பு இளைக்கப் பெற்றே னெனவும், விண்ணப்பித்து,மீண்டும் நமஸ்கரித் தெழுந்து, நின்றனர். உடனே, ஆண்டவர் பே ரருள் கொண்டு தமது பரி கலத் துள்ள அன்னத்தி லொரு கவள மெடுத்துக் கொடுத்தருளினர். அன்றே வயிற்றுவலி நின்று விட்டது. அது முதல் மரண பரிந்தம் ஆண்டவரிடத் தன்பு பூண்டு தொண்டு செய்து வந்தனர்.

எழு ப தா வது

ஸ்ரீ ஆண்டவர் அப்புக் குட்டிச் செட்டியாருக்கு விபூதி யனுப்பி அநுக்கிரகித்தல்.

ஒரு காலத்தில், இராய புரம், வெ. மு. அப்புக் குட்டிச் செட்டியார் பஞ்சு வியாபாரத்தால் இரண்டு லக்ஷம் ரூபாய் நஷ்ட மடைந்தமை பற்றி மன வருத்த முற்றிருக்கையில், அவ் விஷயம் கேள்வியுற்றமையால் ஆண்டவர் பள்ளத்தூ ரய்யா அவர்களை இராய புரம் அப்புக் குட்டிச் செட்டியா ரிடம் சென்று திருப் பணி விஷயத்தைத் தெரிவித்து, ஏதே னும் அவர் கொடுத்த பொருளைப் பெற்று வா வென்று திரு வாக் களிக்க, அவ் வாக்கியத்தைச் சிரமேற் கொண்டு சென்று, வந்த கருத்தைத் தெரிவிக்க, அவரும், அவர் பிரா தாக்களும், அதனை யுணர்ந்து, ஆண்டவர் உத்தர வான தற்கு இது சமயம் பூரண மாய்க் கொடுத்தற்கு இயலாத கால மாக விருக்கின்றது. ஆனாலும், உத்தரவா யிருப்ப

தால், இச் சமயாநுசார மாய் ஏதேனுங் கொடுத்தனுப்ப வேண்டு மென்று உத்தேசித்து மனக் களிப்புடன் வந்த வரை உபசரித்து, ருபாய் எழு நூற் றைம்பது கொடுத் தனுப்ப, அஃதைப் பெற்று வந்து ஆண்டவர் சந்நிதியில் வைத்து, அவர்கள் கருத்தை யறிவிக்கக், கிருபாநிதி யாகிய ஆண்டவர் கேட்டு அவர்களன்பிற்கு மிக வியந்து பே ரானந்த முற்று, அவர்கண் மீது கருணை சுரந்து, பள்ளத்தூ ரய்யா அவர்களை மீண்டு மழைத்துத், தமது சங்கம் சத்திரம் குலிசம், பத்மம், மச்சம், துவசம், சத்திரம், கலசம், அங்கு சம், டமருகம், முதலிய ரேகைகளால், அலங்கரிக்கப் பெற்று முப் போது மலர்ந்து, எப்போது மொர்வ்வாது அப்போ தலர்ந்த செந் தாமரைப் போ தென்ன யெப்போது மொப்பாது என வாது ஓதித் தன்னை யகத்து நினைத்துத் துதித்து வரும் அடியார்களுக்கு நன் னிதியும், நற் கதியும், நற் பதியும், நன் மதியும், தந்தருளும் திருக் கரத்தால் விபூதிப் பையில் நிறைய விபூதியை யள்ளி வைத்து, பள் ளத்தூ ரய்யா கையிற் கொடுத்து, இக் கணமே விரைவில் இராய புரஞ் சென்று அவர்களிடம் இவ் விபூதிப் பையைக் கொடுத்து இதற்கு நாற் பத் தைந் தாவது தினம் பஞ்சில் வந்த நஷ்டமும் நீங்கி மேற்கொண்டு அதிக லாபமுங் கிடைக் கும் எனச் சொல்லி வா வென் றனுப்ப, அவர்களும், அவ் வாக்கைுயின் பிரகாரஞ் சென்று உத்தரவைத் தெரிவித்து, விபூதிப் பையைக் கொடுத்தனர். அவர்களும் மிக்க சந் தோஷத்துடன் அனுக்கிரக பூர்வ மாய் வந்த, அவ் விபூதிப் பையைப் பெற்று, இழந்த தனத்தை யடைந்தவரைப் போல, மிக்க களிப்புற்றுக் கண்களிற் சேர்த்து மிக ஆதர வுடன் அகத்தில் வைப்பது போல் பெட் டகத்தில் வைத்து, அர்ச்சித்துக் கர்ப்பூர ஆராதனை செய்து ஆண்டவ

ரது கருணைக்கு மிக ஆச்சரிய முற்றுப் பள்ளத் தூரய்யா அவர்களை மகிழ்வுறும்படி உபசரித்த தனுப்பிவைத்தார்கள், பத்துத் திநஞ் சென்ற பிறகு, திரு வாக்கின்படியே பஞ்சுவிலை யுயர்ந்து நஷ்டம் ருபாய் இரண்டு லக்ஷமும் நீங்கி, அதிக லாபம் ருபாய் லக்ஷங் கிடைக்கப் பெற்று, ஆண்டவர் திரு வருளைச் சிந்தித்து ஆருத பேராநந்த முற்றிருந்தனர்.

எழு பத் தொன் ருவது

ஸ்ரீ ஆண்டவர் சித்தத்தை திருநெல்லை யம்மை பேதித்தல்.

பின் னொரு காலத்தில் கொற்றவாளீசர் திருநெல்லை யம்மை யாலயத் திரு மதிலை முற்றும் இடித்து வாணம் வெட்டி வேலை நடத்திவருஞ் சமயத்தில், ஆண்டவர் குரு மூர்த்தியைத் தரிசிக்குங் காரண மாகப் பல்லக்கை கொண்டுவரும்படி உத்தரவு செய்து, அதில் ஆரோகணித்துக் கொண்டு, சூர சம்சார உபாத்தியாயர், அப்பாப் போலீசு என்னும் அடியார்க ளிருவருடன், பொருள் வைத்த சேரிக்குச் செல்லும் பொழுது, மறு நாள் சோம வாரத் திநத் தன்று சாயங் காலம் ஆண்டவருக்கு இரண்டாங் காலப் போசனத்துக்கு வழக்கப் பிரகாரம் நல்லான் செட்டியார், அன்னங் கொண்டு கோயிலூருக்குச் சென்று, ஆண்டவ ரெங்கே என்று விசாரித்து, நேற்றுக் காலையில் பொருள் வைத்த சேரிக்கு ஆண்டவ ரெழுந்தருளியிருக்கின்ற தென்று கேள்வியுற்றுத், திருநெல்லை நாயகி சந்நிதியிற் சென்று, அம்மையைக் கண்ணுற்று நோக்கி, அடி பாவி உங்கள் அப்பன் அநியாய மாய் ஆலயத்தினுள் சுவா

நம் புகும்படி மதிலை இடித்துப்போட்டு போய்விட்டானே, தன் வீடு கொள்ளை கொடுத்துக் கைக்குப் பாதிக்கு நிற்கின்றவர்கள் போலச்,சும்மா விருக்கின்றனையே, இப்படிக்கு உணர்ச்சி யில்லாம விருக்கலாமா வென்று சொல்லிப் போயினர். அன்று ஆண்டவர் அறந் தாங்கி கடந்து ஓர் தடாகத்தின் கரையி லிறங்கி இருக்கும்பொழுது ஒருவன் ஒரு பக்ஷியைச் சுட அந்தத் துப்பாக்கியின் சத்தங் கேட்டுத் திடுக் கெனப் பய முற்றது போல, வெருண்டு சித்தப் பிரமை யுற்று வஸ்திரத்தைத் கிழித் தெறிந்து விட்டு வழி தப்பி யோடினர். அது கண்ட சூர சம்மார உபாத்தியாயரும், அப்பாப் போலீசு அய்யாவும், இ தென்ன புதுமை ஒரு நாளு மில்லாத திரு நாளா யிருக்கின்றதே எனச் சற்றுலோசித்து, இனி நாம் சும்மா விருக்க லாகா தென வெண்ணி, ஆண்டவரைத் தொடர்ந்து பற்றிக்கொண்டு, வந்து பல்லக்கில் வைத்து இரு புறமுங் கதவைச் சாத்திப் பூட்டித் பல்லக்கைச் சிக்கலுக்கு விட அது வரை ஆண்டவர் போசன மின்றிப் பேச்சுக்கள் அள வின்றிப் பேசிப் பிரக்ஞா பங்கமாகவே இருந்தனர். பின்பு பொருள் வைத்த சேரியிற் சென்று மடாலயத்திற் பல்லக்கை இறக்கிப் பூட்டைத் திறந்து ஆண்டவரை மடாலயத்துக்குள் அழைத்துக் கொண்டு போய், வீர பத்திர சுவாமிகள் சந்நிதியில் விட,வணக்க மின்றிச் சுபாவப் பிரக்ஞையு மின்றி, இங்கு இருக்கின்றவ ரீர் இந்தப் பரதேசியைக் கொண்டையை அறுக்க வேண்டு மென்று சொல்லினர். அது கேட்டு வீரபத்திர சுவாமிகள், ஏ சூர சம்மாரம் என விளித்து, நடந்த வரலாற்றை விவரமாய்ச் சொல் லென்று கூற, அப் பொழுது, சூர சம்சார உபாத்தியாயர் கோவிலூரில் திரு மதி லிடித்துக்கிடப்பதையும், அகாரணமாகப்

புறப்பட்டதையும், அது முதல் நடந்த வரலாற்றையும், உள்ளபடி சொல்ல, அது கேட்ட வீர பத்திர சுவாமிகள் இது திரு நெல்லை யம்பாளால் நேர்ந்த இடரே தவிர வே றில்லை என்று சொல்லிப், பல்லக்கி லேற்றித் துரித மாய்க் கோவி லூருக்குக் கொண்டு போங்க ளென்று சொல்ல, அவ் விருவரும் அம் மொழியைக் கேட்டு, ஆண்டவரைப் பல்லக்கி லேற்றிக் கொண்டு மீண்டும் கோவி லூருக்குப் புறப்பட்டு அறந்தாங்கிக்குச் சமீபத் துள்ள முன் இறங்கிய தடாகக் கரையிற் பல்லக்கை இறக்கிய காலத்தில், ஆண்டவர் பல்லக்கினு ளிருந்து ஏ சூரசம்மாரம் என விளித்து, இன்று என்ன கிழமை, நாம் புறப்பட்டு, எத்தனை நா ளாயிற்று பசி மிகுதி யாக விருக்கின்ற தென்று சொல்லி யருளினர். அம் மொழி கேட்ட அவ் விருவரும், ஆண்டவரைப் பார்த்துச் சுவாமி இன்று ஏழு தினங்க ளாயின வென்று சொல்லி முன் துப்பாக்கி சுட்டது முதல் நடந்த சமாசாரங்களை விவர மாகச் சொல்ல, அது கேட்டு ஆண்டவரும் மந்தகாசத்தோடு நல்லான் ஏதேனும் அம்மை சந்நி தியில் உளறி யிருப்பான், அதற் கவள் செய்த திருவிளை யாடலே தவிர வே றில்லை இவ்விடத்துச் சமையல் செய்வித் துப் போசனஞ் செய்து கொண்டு பிரயாணபபடுவோ மென்று உத்தரவு கொடுக்க, அது போல, அவர்கள் சமை யல் செய்விக்கப், போசனஞ் செய்து கொண்டு புறப்பட்டுக் கோவிலூ ரடைந்து, தேவி கோட்டை இராம நாதன் செட்டியாரிடம் பொருள் வாங்கித் திரு மதிலைக் கட்டி முடித்துத் திரு நெல்லை யம்மையின் திரு வருளைப் பூரண மாக அடைந்து விளங்கினர்.

எழுபத்திரண்டாவது

ஆண்டவருக்குத் திருநெல்லையம்மை மடைப் பள்ளியில் நடந்த திருட்டை வெளிப்படுத்தல்.

ஒரு திநம் ஆண்டவர் ஒட்டிகுறு வியற்றிய மடத்தின் கண் சயநித்திருக்கும் போது. சாலிவாடீசுவரி ஆண்டவர் சயந ஸ்தாநத்தை யடைந்து, சிரசின் பக்கத்தில் நின்று, அப்பா வென விளித்து, நான் மங்கள மான மஞ்சள் ஸ்நாநம் செய்து ஒரு திங்க ளாயிற்று மடைப்பள்ளி வேலைக்காரர்கள், அம் மஞ்சளைத் தாசியின் கிரகத்திற்குக் கொண்டு செல்கின்றனர். இவ் வந்தியை நீவிர் பார்த்திருத் தல் நீதியாமோ, இப் பொழுதும் தாசி வீட்டிற்குக் கொண்டு போதற்குப் புகை போக்கி மாடத்தில் மஞ்சளை வைத் திருக்கின்றனர். அவற்றை விசாரிப்பாயாக, வெனத் திரு வாய் மலர்ந்து, அந்தர் ஸ்தாந மாயினள், உடனே ஆண்ட வர் நித்திரைவிட் டெழுந்து, ஆலயத்திற்குச் சென்று, அத் தியாந பட்ட ராகிய சுப்பய்யரை அழைத்து மடைப்பள்ளி யினுட் சென்று புகைபோக்கி மாடத்தி லிருக்கும் மஞ்சளை எடுத்து வாரும் என் றுரைக்க, அவ் வாறே சென்று, அப் புகை போக்கி மாடத்தி லிருக்கும் மஞ்ச ளனைத்தையும் எடுத்து வந்து கொடுத்துத், தங்களுக்கு இஃ திருந்தது எவ் விதந் தெரியவரு மென்று கேட்கத், திரு நெல்லை யம்மையின் றிரு வருளால் தெரிய வந்த தென்று திரு வாய் மலர்ந்து, மடைப்பள்ளி வேலைக்காரர்களுக்கு அபராதம் நியமித்துச் செவ்வையாக நடத்திவரும்படி கட்டளையிட் டருளினர். அன்று முதல் அப் பணியாளர்கள் ஆண்டவ ரிடத்துத் திரு நெல்லை யம்பாளின் பூரணாநுக்கிரக மிருப்

பதை யுணர்ந்து பய பக்தியோடும் அபிடேகாதிகளை முறைப்படி நடத்தி வந்தனர்.

எழு பத்து மூன் ருவது

ஸ்ரீ ஆண்டவர் ஆலய பரிபாலநஞ் செய்தல்.

ஸ்ரீ ஆண்டவர் இவ் விதம் அநந்தம் திரு விளையாடல் களைப் புரிந்தும்- அடியார்களிடம் அநேக திரவியங்க ளார்ச் சித்துக் கொற்றவாளீச ராலயத் திருப் பணிகளை நடத்தியும், கிராமங்களைச் சீர் திருத்தியும், பூசை, நிவேதந முதலியவை களைச் செவ்வை யாக நடந்து வரும்படி ஏற்பாடு செய் தும், திரு நெல்லை யம்பாளுக்கு ரதோற்சவங்களை நன் ருய் நடத்தியும், அடியார்களுக்கு, வாசிட்டம், கைவல்லியம், வேதாந்த சூடாமணி, பஞ்ச தசி. கீதாத் திரயம், ரிபு கீதை, அவிரோத வுந்தியார், பரணிப் பிரபந்தம், சீவன் முத்திப் பிரகரணம், ஆத்ம போதம், விவேக சூடாமணி, உபநிட தம், முதலிய அநந்த வேதாந்த கிரந்தங்களை உபதேசித்துக் கிருதார்த்தர்க ளாகச் செய்தும், சுயிவாந க்ஷேத்திரத்தின் கண் எழுந்தருளியிருந்து, கருணாநிதி இவ் வாலயப் பணி முழுமையும் வகித்துப் பார்த்து வர வேண்டு மென்னு மெண்ண முடையரா யிருக்கும் பொழுது, ஒரு ஆடிப் பூர உச்சவத்தில் திரு நெல்லை யம்பாள் ரதோற்சவங் கொண்ட ருளும் பொழுது, மேல வீதியின்கண் இரதம் நடவாமல் நின்று கொண்டன இரதத்தின் பின் பக்க லெழுந்தருளிய ஸ்ரீ ஆண்டவரும், இரதம் நடவாமையைத் தெரிந்து கொண்டு, கல் மண்டப முகப்பி லெழுந்தருளினர். இராம நாதன் செட்டியார்,சீக்கிரம் ஆண்டவர் சந்நிதியிற் சென்று இரத நின்று விட்டதே. நிலைக்கு வரும்படி செய்தருளல்

வேண்டு மென்று விண்ணப்பிக்க, அதற்கு ஆண்டவரும், தெற்கு மடத்தார் தெற்கே இருக்க, வடக்கு மடத்தார் வடக்கே யிருக்க, இரத மெவ் விதந் தன்னிலைக்கு வந்து நிற்கு மென் றுத்தர வளித்தனர். இவ் வாக்கியத்தைக் கேட்ட அடியார்கள், தெற்குக் குளத்துக் கரையியி லுள்ள சிதம்பர விநாயக ராலயத்தி லிருந்த பெரியய்யா, அண்ணுமலை அய்யா அவர்களுக்கும், வடக்கே ஐயுனி அம்மன் ஆலயத்திருந்த கருணாநிதி குட்டை ஐயா அவர்களுக்குந் தெரிவித்தனர். அவ் விடங்களில், தியானஞ் செய்து கொண் டிருந்த கருணாநிதி முதலிய பெரியோர்களும் மிகுந்த அச்சத்துடன் சீக்கிரம் இரதத் தடியில் வந்து நின்றனர்கள், வெகு பெரியோர்க ளாகிய அடியா ரனைவரும் அங்குற்றனர். ஏனைய பரிசனங்களும் வந்து நெருங்க இரதம் அரை நொடியில், தன் னிலைக்கு வந்து நின் றன. ஆண்டவரும் தம் உளத்தின்கண் பே ரானந்த முற்றிருந்தனர்.

எழு பத்து நான் காவது.

ஸ்ரீ ஆண்டவர் அடியார்களைக் கைமாறு கேட்டல்.

ஒரு நா ளிரவிற் சவுக்கையைச் சுற்றிலும் அடியார்க ளிருக்கையில், ஆண்டவர் அனைவரையும் பார்த்துக் கல்லலய்யாவை, வெள்ளையப்பா வென விளித்து என தன் புள்ள புத்திரர்க ளெல்லோரு மெனக் கொரு கைமாறு செய்யும் படி கேட்கின்றேன். அவ் விதஞ் செய்ய வேண்டு மென்று உத்தரவு செய்தருளினர். அதற்கு கல்லலய்யா அவர்கள், ஆண்டவரைப் பார்த்துத், திரு வாக்கிற் கெதிர்வாக் குண்டோ, எவ் வித மாஞ்ஞாபித்தாலும், அவ்விதம்

நடந்து கொள்கின்றோ மென்று விண்ணப்பஞ் செய்ய, அது கேட்ட ஆண்டவர் மற்றெல்லோரும் ஒன்றும் பதில் மொழி விள்ளாதிருக்கின்றார்களே யாது காரண மென்று பின்னருங் கேட்க, அதற்குக் கல்லலய்யா அவர்களும் உத்தரவுப் பிரகாரம் நடந்து கொள்ளுகின்றோம், திரு வாக்கினு லாக்ஞாபிக்க வேண்டியது தானென்று பின்னரும் விண்ணப்பஞ் செய்ய, ஆண்டவர் எனக் கொரு பொருளுந் தர வேண்டுவ தில்லை. இன்று முதற் றங்கள் தங்கள் குடும்பச் செலவிற்குக் கையி லுள்ளது போது மென்ற மதியோடு, வியாபார நிமித்தந் தொலைகளுக்குப் பிரயாணப்படா திருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றே னென்று திரு வாய் மலர்ந்தருளினர். அது கேட்ட அடியார்க ளெல்லோரும் ஆக்ஞையின் பிரகாரம் நடக்கக் கடவோ மென்று சொல்லி, அமைந்த வுள்ளத்தோடும் விண்ணப்பித்துப் போந்தனர்.

எழுபத் தைந் தாவது

ஸ்ரீ ஆண்டவர் தமது சுவாநுபூதியைச் சபையிற் றிரு வாய் மலர்தல்.

ஆண்டவர் ஓர் தினம் இரவிற், சிக்கல், வீர பத்திர சுவாமிகள் பசுபதி கோயில், ஆறு முக சுவாமிகள், துறையூர் கருணானந்த சுவாமிகள், திரு விடை மருதூர், பிச்சு சாஸ்திரி சுவாமிகள் முதலிய மகான்களோடு சவுக்கையி லெழுந்தருளித் துறவு சுவாமிகள், பால் சுவாமிகள், கல்லலய்யா அவர்கள், தேவிகோட்டை இராமநாதன் செட்டியாரவர்கள், பள்ளத் தூர் முத்து வீரப் பய்யா முதலிய சீடர்கள் சுற்றிலு மிருந்து, திரு வாக்கை எதிர் பார்க்கப்

பாடஞ் சொல்லுங் காலத்தில், ஆண்டவர் கல்லல் வெள்ளையப்பய்யாவை பார்த்து வெள்ளையப்பா, வென விளித்துத் தர்மம், அர்த்தம், காமம், மோட்ச மென்னு மிந் நான்கு புருஷார்த்தங்களையும் யாம் தாமே பூரண மாய்த் தடையின்றி யடைந்தோ மென்று திரு வாய் மலர்ந்தருள, சுவாமின்! அவை எங்ஙனம் அடையப்பட்டன வென்று மிருது வாகக் கல்லலய்யா வினவத், தருமத்திற் காக யாம் பொருள் கொடுக்கும் பொழுது இவ்வளவு கொடுத்தே, மென்றும், இவ் வளவு கொடுக்கப் போகின்றே மென்றும், நினைவிற்கு வருகிற தில்லை. ஒருவன், எமது கையிற் றிரவியத்தைத் தந்து கொடுக்கச் சொன்னால், அதையும், இவ் வ்ள வென்று பாராமலே கொடுத்துவிடுகின்றேம். ஆதலால், யாம் செய்த தருமம் போ லொருவருஞ் செய்த தில்லை. அர்த்த மொரு குடும்பி ஒரு கிரகத்திற்குச் சம்பாதிப்பான், யாமோ நூறு குடும்பங் களுக்குச் சம்பாதித்துக் கொடுத்து வந்தோம். ஆதலால், அர்த்தமும் எம்மைப் போ லார்ச்சித்தவ ரொருவரு மில்லை. காமந் தான் உங்களுக்குத் தெரியாத தல்ல. மோக்ஷ விஷயத்தி லென்றலோ வியாச வசிட்ட ஜநகாதிகள் எந்த ஞாநம் அடைந்தார்களோ, அஃதே யாம் அடைந்த ஞாந மென பிரம சபையின்கண் ஆண்டவ ருத்தரவு செய்தருளினர்.

எழுபத் தாறுவது

ஸ்ரீ ஆண்டவர் வாசிட்ட முபதேசித்தல்.

ஆண்டவர், பள்ளத் தூர், முத்து வீரப்பய்யா அவர் களுக் கொரு முறையும், கல்லல் வெள்ளையப்பய்யா அவர்

களுக்கும், கருங்குளம், நாராயணய்யா அவர்களுக்கும், ஒரு முறையும், கண்டனூர் கருத்தய்யா அவர்களுக்கும், அரிமளம் சுப்பிரமணிய அய்யா அவர்களுக்கும், ஒரு முறையும், நேமத்தான் பட்டி, பழநி யப்பய்யா அவர்களுக்கும், கேட்டையூர், அண்ணாமலை அய்யா அவர்களுக்கும், கண்டனூர், இராமய்யா அவர்களுக்கு மொரு முறையும், ஸ்ரீ கருணாநிதி யாகிய சிதம்பர ஞான தேசிக ரவர்களுக்கும், மதுரை,குட்டை அய்யா அவர்களுக்கு, மொரு முறையும், கண்டனூர், பெரிய வெள்ளை யப்பய்யா அவர்களுக்கும், நாக்கப்பய்யா அவர்களுக்கும், பெரிய யெரியணய்யா அவர் களுக்கு, மொரு முறையும், வெங்கடாசல அய்யா அவர் களுக்கும், மேற்படியூர். குமாரப் பய்யா அவர்களுக்கும், பள்ளத் தூர், குப்பான் செட்டி அய்யா அவர்களுக்கும், தேவி கோட்டை, காசி, பழநி யப்பய்யா அவர்களுக்கு மொரு முறையு மாக, ஏழு முறை வாசிட்ட பாட மநுக் கிரகஞ் செய்தருளினர். ஒரு கால் குன்றக் குடியில், திரு வண்ணாமலை ஆதீன பரம்பரையி லுள்ள, முப் பத் தைந் தாவது பட்டம், ஆறுமுக ஞான தேசிக ரென்னும் பண் டாரச் சந்நதி, ஸ்ரீ ஆண்டவருக்கு அதிகப் பிரிய முடையவராயும், எப்பொழுதும், கோவி லூரில், ஆண்டவரை விட்டுப் பிரியாத பிரேம பத்தி யுள்ளவ ராயும், மகா வித்துவானுமா யிருந்தனர். அவர், வேதாகமாதி கிரந்தங்க ளெல்லாம் சம்பாதநம் பண்ணி சம்ரெக்ஷித்து சீவன் முத்தாநந்த முடையவரா யிருந்துள்ள மகா பெரியோர்களோடு, யேகாந்தமா யிருந்து சம்பாசநஞ் செய்துவந்தனர். அக் காலத்தில், ஆண்டவரது சமீபத்தி லிரு பக்கலு மிரண்டு விசுப்

பலகையி லிருந்து கொண்டு,இராப் பொழுது முழுமையும், சைவை, வைஷ்ணவ வாதத்தில், ஆறுமுக ஞாந தேசிகரும், திரு விடை மருதூர், பிச்சு சாஸ்திரியா ரென்று பெயர் விளங்கிய, உலோக நாத சுவாமிகளும், சைவோற்கிருஷ்ட ஸ்தாபநஞ் செய்து, சிவ பரத்துவம் ஸ்தாபித்தனர்கள். ஆண்டவரும், வைணவ சித்தாந்தத்தைத் ஸ்தாபநஞ் செய்து,விஷ்ணு பரத்துவம் ஸ்தாபித்தனர். இவ் விதமாகப் பரமாத்துவித ஞாந சித்தாந்தங்களை யுணர்ந்து சமாதி நிட்டர்க ளான மகாத்மாக்களா யிருத்தலின், விநோத மாக விவகரித்து முடிவில் சந்தோஷத்துட னிருந்து ஆநந்த மாகவே காலங் கழித்து வந்தனர்கள்.

எழு பத்து ஏழு

ஸ்ரீ ஆண்டவர் திரு வாய் மலர்ந்தருளிய பிரபந்தங்கள்.

ஆண்டவர் பூர்வந் தமது குரு மூர்த்தி பரிபூரண சமரச சுபாவ மடைந்த காலத்தும், ஏனைய காலங்களினும், தமது குரு மூர்த்தி யாகிய உகந்த குரு சுவாமிகள் பேரில், அறு சீர், எழு சீர், எண் சீர்களால், ஆசிரிய விருத்தம், வெண்பா முதலியவைகள் சொல்லித் துதித்துப், பின், அநந்தம் திரு விளையாடல்கள் செய்ததும் தவிரப், பிற் காலத்துச் சரிக்குஞ் சீவ கோடிகளின் சன்ம நிவாரண நிமித்தம் கவிகளாற் சிறந்த வெண்பா, கலித் துறை, விருத்தம், கலிப் பா, இரண் டடிக் குறட் டாழிசை, வெண்பா, செந்துதுறை, கண்ணி, சந்த விருத்தம், அகவற் பா முதலிய பல பாவினங்களாற் தெய்வ வணக்கம், தெய்வ நிச்சயம், முத்தி நிச்சயம், நெஞ்சிற் கறிவுறுத்தல், நெஞ்சோ டிரங்கல்

கிளிப் பத்து, சொருப வணக்கம் இவை முதலிய அநேக நாமங்கள் புனைந்த பிரபந்தங்களைப் பாடித் தமது சுவாநுபூதியைத் திரு வாய் மலர்ந்தருளினர்.

ஏழு பத் தெட்டு.

ஸ்ரீ ஆண்டவர், பரிபூரண மடைதல்.

ஸ்ரீ ஆண்டவர், கோவி லூர், க்ஷேத்திரத்தில், அடியார் களாகிய முமுக்ஷுகளுக்கு ஏழு முறை ஸ்ரீ வாசிட்ட கிரந்தத்தையும், மற்று மநந்த கிரந்தங்களை அநந்த வாவிர்த்தியும், பாடஞ் சொல்லி, அநுக்கிரகித்துக் கொண் டிருந்து, ஓர் நாள் சாயங் காலம், சரீர வியோகம் சமீபித்தது தெரிந்து, கல்லலய்யாவை நோக்கி, இப் பொழு திவ் விடத் தெழுந் தருளியிருக்கின்ற நமது தேசிக பரம்பரையி லுள்ள மகாத்மாக்களையும், அன்பர்களான மற்று முள்ள பெரியோர்களையும், அடியார்க ளனைவரையும் இவ் விடத்துக்கு அழைப்பிக்க வேண்டு மென்று, ஆக்ஞாபிக்க, அவர்களும், அவ் வாஞ்ஞையின் பிரகாரந் தெரிவிக்க, உடனே சிக்கல், வீர பத்திர சுவாமிகள், பசுபதி கோவில், ஆறு முகசுவாமிகள், திரு விடை மருதூர், பிச்சு சாஸ்திரி சுவாமிகள், துறை யூர் கருணாநந்த சுவாமிகள், குன்றக் குடித் திரு வண்ணாமலை யாதீநத்து வேலாயுத சுவாமிகள் முதலிய மகான்களும், அவ் விடத்திற்கு வந்து சமீபத்தில் இனிது வீற்றிருக்கத், துறவு சுவாமிகள், மதுரைப் பால் சுவாமிகள், பள்ளத்தூர் முத்து வீரப்பய்யா அவர்கள், கல்லல் வெள்ளையப்பய்யா அவர்கள், கருத்தய்யா அவர்கள், பெரியய்யா வென்னுந் திரு நாம முடைய பழயப்பய்யா அவர்கள், அண்ணாமலை ஐயா அவர்கள், அரி மளம் சுப்பிர

மணிய அய்யா அவர்கள், காரைக் குடி, அழகப் பய்யா அவர்கள, மதுரை, குட்டை ஐயா அவர்கள், கருணை யங் கட லென விளங்கிய ஸ்ரீ கருணாநிதி, மதுரை, மெய்யப் பய்யா அவர்கள், நாகப் பய்யா அவர்கள், பெரியணய்யா அவர்கள், வெள்ளையப்பய்யா அவர்கள், நல்லான் செட் டியா ரவர்கள், இராம நாதன் செட்டியா ரவர்கள், சாத் தப்ப செட்டியா ரவர்கள், இராய புரம், முத்தய்யா செட்டி யா ரவர்கள் முதலிய அநேக அடியார் குழாங்களும் வந்து, நமஸ்கரித்து, வணங்கி நிற்க, அப் பொழுது ஆண்டவர், அடியார்களனைவரைம் சந்நிதியிலிருக்கும்படி கட்டளையிட் டருளிக், கல்லய்யா அவர்களைப் பார்த்து, வெள்ளையப்பா வென விளித்து, இம் மடாலயத்தில், எப் பொழுதும் பரம் பரை யாக அடியார் குளாங்க ளிருந்து பரிபாலநஞ் செய்து விளங்கிவர வேண்டுமே உங்களுக் கெல்லாம் எப்படிச் சம்மத மென்று வினவ, அவர் சுவாமின் ஆக்ஞையின் பிர காரம் நடந்து கொள்கின்றோ மென்று, சொலல, பள் ளத் தூர், சிந்நய்யா பரிபாலநஞ் செய்து வருவானோ வென்று பிரசிநஞ் செய்ய, எல்லோரும் பிரதி உத்தரஞ் சொல்லா திருந்தனர். மீண்டும ஆண்டவர் தாமே, அவன் காலையிற் பள்ளத் தூருக்குப் போய் விடுவேனே என்று திரு வாய் விண்டு, நீ தான் பரிபாலநம் பண்ணி வரு வாயோ வென்று கேட்க, அவர்களும், மௌநமா யிருத் தலைக் கண்டு, நீயும் மூன்றும் நாள் கல்லலுக்குப் போய்விடு வாயே என்று திருவாய் மலர்ந்து, கண்ட னூர், கருத்தான் செட்டியார் பரிபாலநஞ் செய்து வருவானோ வென்று வினவி, அவனுங் கண்ட னூர் விடியப் போய் விடுவானே என்று திரு வாக களித்து, விரப்பனுஞ் சாக்கைத் திருப் பணியை ஆரம்பித்துக் கொண்டானே. வேறே யார்

பார்க்கப் போகிறார்க ளென்று சொல்லியருளினர். அதற்குக் கல்லலய்யா ஆண்டவரைப் பார்த்துத், திரு வாக்கிற் கெதிர்வாக் குண்டா, யாரைப் பார்க்கச் சொல்லி அநுக்கிரகித்தாலும், அவர்கள் அவ் வாக்கையைக் கடவாமல் பார்ப்பார்க ளென்று விண்ணப்பஞ் செய்ய, அது சரி தான், நீ சொல்லுகின்றனை, யாராகிலும் நான் பார்த்து வருகின்றே னென்று சொல்லவேண்டுமே, அப்படி ஒருவருஞ் சொல்லவில்லையே என, பின்னரும், கல்லலய்யா அவர்கள், அவ்விடத்தில் உத்தரவு கொடுத்தால் தடையில்லை யென்று விண்ணப்பஞ் செய்யப், பின்னும் ஆண்டவர் துறவுப் பிள்ளை, சிதம்பரம் சிதம்பர மென்று போய் விடுமே எங்கும் சிதம்பரந் தானே என்று சொல்லிச், சமீபத்து வடபால் நின்ற துறவு சுவாமிகளை அன்பு கூர்ந்து நோக்கி, இன்று முதல் இம் மடாலயத்தி லிருந்து அடியார்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டு பரிகலப் பிக்ஷை ஏற்றுண்ண வேண்டு மென்று அநுக்கிரகித்து, விபூதியை எடுத்துக் கரத்தில் வைத்தருளி, மீண்டும் கருணையங் கடலாகிய ஆண்டவர் தமக்குத் தென்பால் நின்ற, கருணாநிதியை அன்பாற் கருணை மழை பொழிந்து கடாக்ஷித்து என்பாற் றந்த சிவ ஞானத்தைத் திரு நெல்லை யம்பாள் உன்பாற் றந்தருளுவள், இவ் வாலயத்தைச் செவ்வை யாகப் பரிபாலநம் பண்ணி வரக் கடவை என்று ஆஞ்ஞாபித்துத், தமது திருக் கரத்தால் விபூதியை எடுத்து அநுக்கிரக பூர்வமாய்க் கையில் வைத்தருளினர் உடனே அடியார்கள் யாவரும் பேரானந்த சமுத்திரத்தில் மூழ்கி ஆச்சரிய முற்று, ஆண்டவர் திருக் குறிப் பிருந்தமையை நினைந்து, வியந்து, கனிந்து, கொண்டாடினார்கள், மேல் ஸ்ரீ குரு மூர்த்தியாகிய ஆண்டவர், கலி நா லாயிரத்துத் தொளாயிரத்து

நாற் பத் தெட்டு, சாலி வாகந சகாப்தம், ஆயிரத் தெழு நூற் றறு பத் தொன்பது, பில வங்க வருடம், உத்த ராயணம், சிசிர ருது, பங்குனி மாசம், சுக்கில பட்சம், எட் டாந் தேதி, பா நு வாரம், பௌர்ணிமை திதி, உத்திர நட்சத்திரம்; கன்னியா லக்நம், இவைகள் கூடிய சுப திநத் தில், பிரமாநந்த சிந்துவிற் கலந்தருளினர். அப் பொழுது துறவு சுவாமிகள், கருணை நிதி முதலிய அடியார்களும், மற்று மேனைய பெரியோர்களும், ஆண்டவருக்கு மண்ட லாபிடேக பரியந்த மான காரு விதிகளை அதிக சிறப்பாக நடத்தி, அடியார்களுக்கு எல்லாம் மகேசுவர பூஜையையும், ஆலயத்தில் அபிடேக நிவேதநங்களையும், அபரிமித மாகச் செய்து களிப்புற்றிருந்தனர். இந்த அற்புத வைபவங்களை யெல்லாம், அப் பொழுது சிதம்பரத்து வாசஞ் செய்து கொண்டிருந்த, ஸ்ரீ யாழ்ப் பாணம், நல் லூர், ஆறு முக நாவல ரவர்கள், ஆண்டவரது அடியவர்களு ளொருவ ராகிய அரி மளம் அடைக்கப் பய்யா அவர்கள் வாயிலாகத் தெரியப் பெற்று, மிக்க ஆராமை மே லீட்டினால், "சீர் கொண்ட சகவருட மாயரத் தெழுநூற சேருமறு பத் தொன்பதிற்-றிருமருவு பிலவங்க வருடமதின் மீனமாந் திங்களெட் டாந்தேதியிற்-றிரமருவு பானுவா ரத்தினுத் திரமெனச் செப்புநட் சத்திரத்திற்-சிறந்தபூ ரணியெனுந் திதியதனி லினிதுவரு திகழ்கன்னி லக்நத்தே, கார்கொ ண்ட புயல்வண்ணன் மலரயன் வருந்தியுங் காணாத பெரு வாழ்வெனுங்-கறைமிடற் றிறைராச கட்கய ரமேசுரன் கருணையுரு வோடமர்ந்து-கன்வெழில்கொண் மணிமாட நிலவுசபி வாமெனக் கழறுமுயர் பதியில்வாழ்வான்- கணிதமறு சீட்ர்தம தகவிருடு ரத்தவரு கருதரிய ஞாநதப நன், போர்கொண்ட காமக்கு ரோதலோ பாதியாம் புகல்

குற்ற நீங்கு புனிதன்-பொறையறிவ டக்கமருண் முதலாற் குணமொடு பொருந்திவள ருற்ற முதல்வன், புவநமூன் றினுமிவன் புகழ்சென்றி டற்கிடம் போதாதெ னச்சிறந் தோன்-பொருவிலா துயர்சுத்த வேதாந்த சாத்திரம் போத மிக்குள்ள நிபுணன், பேர்கொண்ட நிர்மலச மாதிசாட் சாத்கார பிரதாப மிகுசி ரேடஷன், "பெருமைநிறை தரு முத்துராமலிங் கக்குரு பிறங்கியிடு மத்துவிதநிட்-பிரபஞ்ச நிர்விஷய நிஷ்களா தீதமாம் பெருவெளிய தாகிநின்ற-பேசருமகண்டபரி பூரணசு கானந்த பிரமமா யிலகினு னே." என்னுங் கவியை இயற்றி யனுப்பினர்,

ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிகர் சரிதம்
முற்றுப் பெற்றது.

7. ஸ்ரீ (துறவு) அருணசல தேசிக சுவாமிகள் சரித்திரம்.

நாவலர் போற்றும் சமிநிழல் அமரும்
நாயகன் நளிநநன் மலரை,
மாஎழில் ஆறு முகன்றனைக் கொற்ற
வாழ்இறை திருநெல்லை அம்மை,
ஆவல்நல் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
கருளொடு ஞாநமும் அளித்துக்,
கோவிலூ ரினிவாழ் அருணு சலநற்
குருபரன் தாள்திநம் பணிவாம்,

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே பரமசிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் புரிந்த, பாண்டி வள நாட் டிலே, தேவி கோட்டை யென்னும் ஊரிலே, தந வைசிய குலத்திலே, இலுப்பைக் குடி கோத்திரத்திலே, விளை திர்த்

தான் செட்டியாரும், அவர் மனைவி முத்தம்மாளும், இருந்தனர். அவர்கள் புதல்வர் துறவு சுவாமிகள், கண்டனூர் அருணாசல சுவாமிகளுடன் வியாபார நிமித்தமாய்த், திருநெல்வேலிக் குப்போயிருந்தனர். அங்கு இருவரும் மிக்க சிநேகத்தால் பிரியாத் தன்மை யுடையவர்களாயிருந்து, கோவி லூரில் ஆண்டவரைச் சர ணடைந்து, அநுக்கிரகம் பெற்றுச், சிலகால மங்கிருந்து, பஞ்ச தசி கைவல்ய முதலிய வேதாந்த சாஸ்திரங்களைப் பாடங் கேட்டு, அதி விரக்தியினால், பரணிப் பிரபந்தமும் பாடங் கேட்க வேண்டு மென்னும், கருத்தினை யுடையவர்களாய், ஓர் வேதியர் முக மாகக், குன்றக் குடியில், திருவண்ணமலை ஆதீன பரம்பரையி லுள்ள 35 வது பட்டம் ஆறு முக தேசிக ரவர்களிடத்தில், அந் நூல் இருப்ப தாகக் கேள்வி யுற்று, அங்கு சென்று அவ் வாறு முக தேசிகரை வணங்கி, அஞ்ஞ வதைப் பரணிப் பிரபந்தம் வேண்டு மென்று கேட்க, அவர்களைப் பார்த்துத் தாங்கள் தானோ அஞ்ஞ வதைப் பரணி படித்துத் துறவு பண்ணிக் கொள்ளப் போகிறீர்கள்" என்று மந்தகாசத்தோடு கூறி, அந் நூலைக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்டு ஒன்றும் பதில் விள்ளாது, கோவி லூருக்குப் போய், ஸ்ரீ, முத்தி ராம லிங்க ஞான தேசிகரிடம் பாடம் கேட்டு முடித்துக் கொண்டு, அதன் பின் துற வடைய வேண்டு மென்னும் கருத் துற்று, எவ் வித உபாயத்தி லாவது ஆண்டவரிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு தான், அக் காரியத்தை முடிக்க வேணு மென் றெண்ணி, இரவிற் பாடங் கேட்டுப் போசனத்திற்குப் பின்பு, குரு மூர்த்தியின் சயன ஸ்தானத்தை யடைந்து, குரு மூர்த்தியின் திரு வடிகளை வருடிக்கொண்டிருந்து, மிருது வாக, எங்க ளிருவருக்கும் சந்யாசத்திற்கு

உத்தரவு கொடுத்தருளல் வேண்டு மென்று பிரார்த்திக்க, அப்படியே செய்வீர்கள் எனத் திரு வாய் மலர்ந்தருளினர். அவ் வுத்தரவை சிர மேற்கொண்டு மும் முறை நமஸ்கரித் தெழுந்து, கொற்றவா ளீசுவரர் ஆலயத்தினை அடைந்து, நாங் கொள்ளுந் துறவு, முற்றுப் பெற்று, நன்கு விளங்க வேண்டு மெனப் பிரார்த்தித்து, ராஜ கட்க பரமேசுவரரை யும், சாலிவாடீசுவரியையும், சாஷ்டாங்க மாக நமஸ்காரஞ் செய்து, விடை பெற்றுக் கொண்டு, வடபால் உள்ள நெடுங் குடி என்னும் ஊரில், சிவ க்ஷேத்திரத்தில், ஆதி குரு தக்ஷிணா மூர்த்தி சந்நதியில், சந்நியாசம் பெற்றுச் சிதம் பரத்திற்குச் சென்றனர். அங்குச் சென்று, சிற்சபையின் கண் எழுந்தருளியிருக்கும் நடேச பிரானை இரண்டு கால முஞ் சேவித்துக் கொண்டு, அந்தக் க்ஷேத்திரத்திற் கரத் திற் பிக்ஷை யேற்றுண்டு, வீர பத்திர ஸ்வாமிக ளிருந்த கேணி மடத்தில் வாசஞ் செய்து கொண் டிருந்தனர்

ஒரு நாள் சுவாமிக ளிருவரும், சிதம்பரத்தில் பிக்ஷைக்குச் சென்ற காலத்தில், ஒரு கிரகத்து முற்றத்தில், மாதர் கள் பிக்ஷையை வைத்துக் கொண்டு நின்றனர். ஸ்வாமி கள், பிக்ஷை வாங்குவதற்கு முற்றத்தில் சென்றவுடன் அம் மாதர்கள் கெட்ட எண்ணத்தோடு கபாட பந்தனஞ் செய்தனர். பின்னர் தங்கள் கருத்தை ஸ்வாமிகளிடம் அறி விக்க, உடனே இருவரும் மௌன முற்று முற்றத்திற் றுனே பத்மாசனத்தி லிருந்து, நட ராஜனைத் தியானஞ் செய்து கொண்டிருந்தனர். அம் மாதர்களும், தங்கள் கருத்து நிறைவேற மாட்டா தென்று எண்ணிக் கொண்டு, விரை விற் கதவைத் திறந்து விடச் சுவாமிக ளிருவரும் வெளி யில் வந்து, இனி யாம் கிரகத்திற்குள் பிரவேசித்துப் பிக்ஷை

யேற்ப தில்லை யென்று நிச்சயஞ்செய்து கொண்டு, அன்று முதல் வீதியில் நின்றே பலி யேற்றுப் புசித்து வந்தனர். ஆண்டவர் உத்தரவின் பேரில் மீண்டுங் கோவிலூருக்கு வந்து. சிதம்பர விநாயகர் ஆலயத்தில், வசித்துக் கொண்டிருந்தார்கள். சில காலம் சென்ற பின்னர், இருவரும் ஆண்டவடரித்து உத்தரவு பெற்றுச் சிதம்பரஞ் சென்று வசித்து வரும் போது. சுவாமிகள், தம்மைச் சரணடைந்த நித்தியாநந்த சுவாமிகள், திருநெல்வேலி சுப்பிரமண்ய சுவாமிகள், வளவனூர் ஷண்முக சுவாமிகள், மதுரைச் சுப்பராய சுவாமிகள், கோவிந்த சுவாமிகள் முதலிய துறவிகளுக்கும், பாகநேரி முத்துக்கருப்பையா, மதுரை மெய்யப்பையா முதலிய கிரகஸ்தர்களுக்கும், நியமமாகத் தினந் தோறும் தர்க்க யுக்தி, அநுமாநங்களோடு சாஸ்திரங்களை அநுக்கிரகித்து வந்தார்கள், அப்போது, கண்டனூர் சின்னத்துரை சுவாமிகள், மாந தியாநாதிகளின் பொருட்டுத் தனியே யிருக்க வேண்டு மென்று வடக்குக் கோபுரத்தில், மாந தியாநாதிகளைச் செய்து கொண்டிருப்பர் சுவாமிகள் முமுக்ஷுக்களுக்கு உபதேசிக்கும் காலந் தவிர மற்றக் கால மெல்லாம் கேணி மடத்து ஒடுக்கத்தினுள் தியானஞ் செய்து கொண்டிருப்பர், ஆலயத்திற்குத் தரிசந நிமித்தம் போகுங் காலத்து, ஒருவரை யொருவர் சந்தித்துக் கொள்வார்கள், ஆண்டவர் நடத்தி வருங் குரு பூஜை, திருநெல்லையம்மை யுற்சவ முதலியவற்றிற்கு, வருடந் தோறும் போய் வருவார்கள். இவ் வாறிருவரும், சிதம்பரத்தில் வசிக்குங் காலத்துச், சுவேதாரண்ய க்ஷேத்திரத்திற்குச் சென்று, ஆலயத்துட் பிரவேசித்துத் திரு வெண்காடரைத் தரிசித்துச், சந்நிதாநத்தில் நிற்கும் போது, ஆதிசைவர்

விபூதி கொடுக்கப் பெற்று, வெளியில் வந்து வீதியில் பிக்ஷைக்குச் சென்று, அகால மாயின்மையால், பிக்ஷை யகப்படாமல் இருவரும் ஆலயத்திற் பிரவேசித்து, அர்த்த சாம தரிசனஞ் செய்து, தீர்த்தத்தில் இரண்டு கை ஜல மருந்திக் குட வரையில் சிவ பெருமானைச் சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தார்கள். அக் காலையிற், சிவ பெருமான் அவ் வடியார்கள் மீது கொண்ட கருணையினால், தாம் ஆதிசைவ வேஷங் கொண்டு, கமலத்தில் இரண்டு சர்க்கரை யந்நத்தைக் கொண்டு வந்து, அவ் விரு வர் கைகளிலுங் கொடுத்தனர். அப் போது, அவர்கள் அவரை ஆதிசைவ ரென மதித்து, அதனை அன்போடு வாங்கித் தீர்த்தக் கரையில் சென்று புசித்து, மறுபடியும் நித்திரை செய்து, காலையி லெழுந்து நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு, ஆலயத்துட் சென்று, சிவ பிரானைத் தரிசிக்கும் போது, ஆதிசைவர் இருவரையும் பார்த்து இர வில் எங்கு போஜனஞ் செய்து சயனித்திருந்தீர்க ளென்று கேட்க, சுவாமிக ளிருவரும் ஒருவரை யொருவர் பார்த்து இராத்திரி அந்நங் கொடுத்தவர் இவரா யிருக்க. இப்படிக் கேட்கின்றாரே என்று யோசித்து, அவ் வாதி சைவரைப் பார்த்து, இராத்திரி இரண்டு சர்க்கரை யந்நங் கொடுத்தது தாங்கள் தானே யென்று கேட்டார்கள். அதற்கு அவர் "யான் எப் போது கொடுத்தேன்" என்று பிரதியுத்தரங் கூறினர். அதனைக் கேட்டு, இருவரும் இது ஸ்ரீ நடேசப் பெருமானது திரு விளையாடலே யன்றி, வே றில்லை யென்று தம் மநத்துட் கொண்டு, ஆச்சரியத்தையும், பே ரானந்தத்தையு மடைந்து, அங்கு சில நாள் வசித்தும், மீண்டும் சிதம்பரஞ் சென்று, அங்கு வசித்து வந்தனர். அவ் விருவரும், மற் றொரு காலத்தில், திரு வண்ணாமலைக்

கெழுந்தருளி, அங் குள்ள ஆரண்யப் பிரதேசத்தில் வசிக்க வேண்டு மென்று கருதி, அம் மலையை நோக்கிச் செல்லு கையில், மேட்டுச் சாவடியி லிருந்த சேவகர்கள், அவ் வழி யாகத் தனியே போக லாகா தென்று தடுத்தனர். அதற் கிருவரும் எங்களுக்குத் தடை யுளதோ வென்ன, இடையிற் காவி வஸ்திர மிருக்கின்றதே யென் றச் சேவ கர்கள் கூறினர். அப்போது, இருவரும் இடையி லிருந்த வஸ்திரத்தைக் களைந்து அவர்கள் முன் வைத்து விட்டு, திகம்பரிக ளாய், அருணை கிரியை யடைந்து ஈசாங்ய சுவாமி கள் மடத்திலும், அம் மலை ஆரண்யங்களிலும், சில காலம் ஏகாந்த மாய் வசித்து, பின்னர்த் திருப் பதி, திருக் காளத்தி முதலிய க்ஷேத்திரங்களிலும், கெந்த மூல பலாதிகளைப் புசித் துக் கொண்டு, சில நாட் கழித்து, மீண்டுந் தில்லையை யடைந்து நடந்து, நடந தரிசனஞ் செய்து, ஆத்மாநு சந்தானபர்களா யிருந்தனர். அப் போது, யாழ்ப் பாணத் தைச் சார்ந்த, நல்லூ ரென்னும் நகரத்தில் வசிக்கும் சைவ சித்தாந்த வித்வத் சிரேஷ்ட ராகிய, ஆறு முக நாவலர் ஸ்ரீ நடேச தரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரத்தை யடைந்து, சிற் சபேசர் திரு வீதியி லெழுந்தருளத் தரிச னார்த்த மாக அங்குவந்து சேர்ந்தனர். அப் போது, சுவாமி க ளிருவரும் அடியார் குழாங்களோடு நின்று சபா நாத னைத் தரிசித்துச் செல்லுவதை கண் காக்ஷி யாகப் பார்த்து, பின் தொடர்ந்து அவர்கள் வசிக்கும் கேணி மடத்திற் சென்று, இரண்டு மூர்த்திகளையும் தரிசித்து வணங்கி நின்ற னர். அப் போதவரைச் சுவாமிகள், "தாம் யார்?", என்று வினவ, அவர் யான் வசிப்பது யாழ்ப்பாணம் நல லூர், என் பெயர் ஆறு முகம், ஸ்ரீ நடேசப் பெரு மானைத் தரிசிக்கும் பொருட்டு இங்கு வந்தேன் என்று

கூறி நிற்க, அவர் வார்த்தை நயத்தைக் கேட்டு உட்காரும்படி ஆஞ்ஞாபித்ததின் பேரில், சற்று நேரமங் கிருந்து அவர்கள் பிரபாவங்களைக் கண்டு ஆச்சரிய மடைந்து, உத்தரவு பெற்றுச் சென்று, பின் நாள் தோறும், அவ்வாறே வந்து தரிசித்துப் போவர். சுவாமிகளும் அவரது நல்லொழுக்கத்திற்கு வியப் படைந்து ஸ்காந்த புராணத்தைத் தினந்தோறும் பகல் பதினைந்து நாளிகைக்குமேல் பிரசங்கஞ் செய்து வரும்படி ஆக்ஞாபிக்க, அங்ஙனமே செய்து வந்தனர். சுவாமிகள் அப் பிரசங்கத்தைக் கேட்டுச் சந்தோஷித்து, ஒரு நாள் இன்று முதல் புராணப் பிரசங்கம் செய்து வர வேண்டுமே யன்றிப், பாதிரிமார்களுக்குப் பாடஞ் சொல்லலாகா தென்று உத்தரவு செய்ய, அவ்வாறே அன்று முதல் பாதிரிமார்களுக்குப் பாடம் சொல்லுத லொழிந்து, புராணப் பிரசங்கஞ் செய்தலோடு, சைவ நூல்களும பயின்று வந்தனர். இவ்வாறு, அநந்த அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்துகொண்டு நெடுங்காலம் வசித்துக்கொண்டிருந்தார்கள். அங்ஙன மிருக்கு நாளில் ஒரு நாள் சின்னத் துறவு சுவாமிகளுக்குச் சிற்சபேசர் பிரசன்னமாய் "நீ காசிக்குச் சென்று கங்கா ஸ்நானம் பண்ணி விசுவ நாதரை தரிசிப்பாயாக" என்று உத்தரவு செய்ய, அதனை சுவாமிகளுக்கு அறிவித்து விடைபெற்றுக் கொண்டு, காசி க்ஷேத்திரத்தை யடைந்து கங்கா ஸ்நாநம் பண்ணி விசுவ நாதரைத் தரிசித்துக் கொண்டு சில திந மிருந்தார்கள்.

ஒரு நாள் அத் தலத்தி லிருக்கும் திருவாவடுதுறை மடத்து நமச்சிவாயத் தம்பிரானிடத்திற் சென்று, இந்தத் தேகம் குரோதி ஞு, மிதுன மாசம், 31உ சுக்கிர வாரம்,

பத்து நாழிகைக்கு வியோக மாய் விடும், இவ் விஷயத்தை எமது ஞானாசாரியர் திருப் பெருந் துறைக் கடுத்த கோவி லூா ரென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்றமை யால், அவருக்கு ஒரு நிருப வாயிலாகத் தெரிவிக்க வேண் டும் என்று கூறினர், நமசிவாயத் தம்பிரானும், அதற் கிசைந்து அன்று முதல் இரண் டடியார்களை, அத் துறவு ஸ்வாமிகளை விட் டகலாதிருக்கும்படி நியமித்து, சுவாமி கள் திரு வாய் மலர்ந்தருளிய பிரகாரம் தேக வியோக மெய்திய தன்மையை யறிந்து, ஆநந்த மடைந்து, அத் தேகத்தைக் கற் றெருட்டியில் அடக்கஞ் செய்து, கங்கையி லிறக்கிவிட்டு, இவ் விஷயத்தைக் கோவிலூர் ஆண்டவ ருக்கு மிக வணக்கத்துடன் ஓர் நிருபம் எழுதித் தெரிவித்தனர். இஃது இங்ஙன மிருக்க, சிதம்பரத்தி லெழுந்தருளி யிருந்த சுவாமிகள், தம்மோடு இடைவிடா திருந்த சின்னத் துறவு சுவாமிகள், காசிக்குச் சென்ற பின், அடியார்களுடன் கோவி லூருக் கெழுந் தருளி, குரு மூர்த்தியைத் தரிசித்து நித்தியாநந்தத்தை யடைந்திருந்தனர். பின்னர், ஆண்டவர் பூரண தசை யடையுங் காலத்து, ஆஞ்ஞாபித்தபடி, அவ் வாதீநத்தி லிருந்து பிரசங்கத்தில்,ஆதிசேஷனையும், போதனு சக்தியில், வசிஷ்டரையும், ஞானத்தில், ஜநகரையும், ஜீவகாருண்யத் தில்,ஜடபரதரையும்,சந்நியாசத்தில், சுகப் பிரஹ்மத்தையும், பக்தியில், நாரதரையும் ஒத்துக், கொற்றவா ளீஸ்வரர் திரு நெல்லை யம்மை யிருவர்களின் அநுக்கிரகத்திற்குப் பாத்திர ராய்ச், சர்வ கல்யாண குணங்களும் நிறைந்து, சம திருஷ் டியோடு பிரகாசித்து, ஆப்தம், அங்கம், ஸ்தாநம், சத்பாவம், எனும் சதுர்விதப் பணிகளுஞ் செய்து, சமதமாதி சாதங்

கள் பூரண மான சாதுக்கட்குச் சதா சத் சாஸ்திரங்களையுப தேசித்து, அவர்கள் அகத்துதித்த மகத்தான மருளையும், அஞ்ஞான இருளையும், நீக்கித் திரு வருளைத் தந்து ஞானோ த்யமாகும்படி அநுக்கிரகஞ் செய்து கொண்டு, ஆண்டவர் கட்டளைப்படி, கனிஷ்ட ராகிய கருணாநிதியை ஆராதந முதலிய கோவிற் காரியங்களைச் செவ்வை யாய் நடத்தி வரும்படி நியமநஞ் செய்து, மடாலயத்தில் அன விறந்த அடியார்களுக்கு அன்ன மளிப்பித்தும், மற்றும், மடத் திற்கும், கோவிலுக்கும் வேண்டிய காரியங்களைச் சீர்திருத் தும்படி உத்தரவு செய்தும், எல்லாவற்றிற்கும், தான் சாக்ஷி யாக மேவ யிருந்து, ஆநந்தத்தை யநுபவித்துக் கொண்டிருந்தனர்.

கைவல்ய நவநீதத்திற்குப் பத சாரம் என்ற உரை யிறற்றியும், உலகநாத ஸ்வாமிகளைக் கொண்டு சமிவந க்ஷேத்திரமாந்மியம், விவேக சூடாமணி, ஜீவந் முக்தி விவேகம், சூத சம்ஹிதை முக்தி கண்டம், சூத கீதை, ரிபு கீதை முதலிய சாஸ்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க் கச் செய்தும், விநோத மாகக் காலங் கழித்து வந்தார்கள்.

ஆண்டவர் பரிபூரண மாகிய பதி னே ழாவது மாசம் கலியுகம் 4950 சாலிவாகந சகாப்தம் 1771 சௌமிய வருஷம் தக்ஷிணாயநம், கிரீஷ்ம ருது, கடக மாசம், சுக்கில பக்ஷம், 9 உ பாநு வாரம், சதுர்த்தி திதி, பூர நக்ஷத்திரம், மிதுந லக்நம் என்னும் இவைகள் கூடிய சுப தினத்தில், சச்சி தாநந்த பரப் பிரம்ம சமரச சுபாவ மடைந்தனர். கருணா நிதியும், பெரியோர்களையும், அடியார்களையும், வர வழை த்து, அம் மூர்த்திகளுக்கு மண்டலாபிஷேக பரியந்தமான

காரியங்களைச் சிறப்பாய் நடத்தியருளினர். பரிபூரண மடை ந்த நிநத்தில், இவர்கள் மீது கருணாநிதியவர்கள் "அரியகலி யுக வருட நாலாயி ரத்துத்தொ ளாயிரத்தைம்ப தின்மே- லஞ்சாலி வாகநச காப்தமோ ராயிரம டுத்தவெழு நூற்றொ ருபதொன்-றுனசவு மியவருட மொடுதக்க ணயன மளப் பருங் கிரீஷ்ம ருதுவுமங்கடக மதிதேதி யொன்பதொடு சுக்லபக்ஷ ஷதிவா ரத்தி னிரவிற், றருமமிர்த கடிகையிரு பத்திற்றிற் பூரநட் சத்திரந் திதிச துர்த்தி-தனின் மிதுன லக் கினம தொடுவரி யானுடன் சார்வணிச வாக ரணமுஞ்- சாற்றுமிவை சேர்சுபதி னத்தினின் மணிக்கரைத் தண் கடற் றூசு டுத்த, தரைமகட் கொருதரள மாலைபுரை மது நதித் தனிநடும தாணி யென்ன, மருவிவளர் தென்கழநி யம்பதியி னுற்பவெனுளிர் மாணிக்க மெனவி ளங்கும், வர முத்து ராமகுரு லிங்கத்தி லெங்ஙனு மன்னுமொளி யாய்க் கலந்தான்-மகிமை ருரகுபதிக் கருளிருடி புங்கவ வசிட் டர்போ தகசத்தியும்-மலர்பண டவியுரக னேந்துமொரு பூச்சக்ர வர்த்திசந கன்ஞானமும், வரையரிய சடபரதர் சீவகா ருண்யமு மன்னுசுகர் சந்நி யாசமும், வான்பரவு நாரதம காமுனி வரேந்திரன் மனதிலுறு சிவ பத்தியும்- வாரித்தி ரட்டியோ ருருவுகொடு வந்தென்னை வழி முறைமை யடிமை கொண்ட, மாசிலரு ணைசல சதாசிவ சுபோதய மகாகுருசி காமணியரோ."

என்னும் ஆசிரிய விருத்தத்தை யியற்றி யருளினர். மதுரை சுப்பராய சுவாமிகள் அச் சுவாமிகள்மீது பிள்ளைத் தமி ழொன்று நூறு செய்யுட்களா லியற்றினர். இந்தப் பிள்ளைத் தமிழ் அச்சாகி யிருக்கின்றது.

குரு மூர்த்தியாகிய ஸ்ரீ ஆண்டவர், கருணாநிதியினிடத்து எப்பொழுதும் அன்பு பூண்டு திருக் கடைக் கண் சாத்தி அருளோகத்தோடு அகத்திற் பற்றுடைத் தாகி நேரில் நோக்கி வசியாது அந்நியர்கட்கு வசிப்பது போன்று வசித்துக் கொண்டும், கொற்றவாளீசுவரர் திருநெல்லையம்பாள் ஆலயப் பணிகளை நன்றாய்க் கவனித்துப் பார்த்து விருத்தியம்சங்களை அளவின்றி உண்டு பண்ணி நன்றாய்ச் சிறப்பாக நடத்தி வரவேண்டுமென்ற எண்ணமானது நெடுங் காலமாய்த் தம தந்தக் கரணத்தில் தொடர்ந்திருக்குஞ் சமயம்,கருணாநிதி திருப் பெருந் துறை சென்றனர். அதனைச் சாதுக்கள் வாயிலாகச் சுவாமிகளுணர்ந்து மந வருத்தத்தினோடு, திருப் பெருந் துறையில் வசிக்குங் கருணாநிதிக்குக், குறுந் திரட்டுப், பெருந் திரட்டு முதலிய சாஸ்திரங்களி லிருந்து, ஐம்பது செய்யுள்களைத் திரட்டி, அதற்குச் சீடாசாரம், எனப் பெயரீந்து, அதனோடு அதன் அபிப்பிராயத்தினை வசநமாக எழுதி, ஒரு சாதுவிடம் கொடுத்து,இதனை, திருப் பெருந் துறையி லிருக்கும் சிதம்பரத்தினிடம் கொடுத்து வா வென்று, அனுப்பினார்கள். அதனை, அச் சாது பெற்றுக் கொண்டு, திருப் பெருந் துறை வந்து, கருணாநிதியிடம் கொடுக்க, அவர்கள் அதனை வாங்கிப் பார்த்து மிகக் களிப்படைந்து கண்களில் ஒற்றி கொண்டு, உடனே கோவிலூருக்கு வந்து, ஸ்ரீ குரு மூர்த்தி யாகிய ஆண்டவரிடத் தன்பு மேலிட்டு, அவர்கள் அந்தக் கரணத்தில் உத்தேசித்த பிரகாரம், கோவில் மடம் முதலியவற்றி லுள்ள சகல காரியங்களையும் வகித்துக் குரு மூர்த்தியின் உள்ளன்பிற்குப் பாத்திரமாக நடந்து கொண்டார்கள்.

8. கண்டனூர், அருணாசல ஸ்வாமிகள் சரிதம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, சிவ பெருமான் அறு பத்து நான்கு திரு விளையாடல் புரிந்த பாண்டிவள நாட்டிலே, கண்டனூரிலே தன வைசிய குலத்திலே, சூரைக் குடிக் கோத்திரத்திலே, பெரிய கருப்பன் செட்டியாரும், அவர் மனைவி ஸ்வர்ணவல்லி (பொற்கொடியாள்) அம்மையாரும், இருந்தனர அவர்களுக்குப் புதல்வர் அருணாசல சுவாமிகள்.

ஒரு நாள் சிற்சபேசன் தமக்குப் பிரசன்ன மாகிக் காசிக்குச் சென்று கெங்கை ஸ்நாநம் செய்து விஸ்வநாதரைத் தரிசிக்கும்படி உத்திரவு செய்ததனைப் பெரிய துறவு ஸ்வாமிகளாகிய அருணாசல ஸ்வாமிகளுக்குத் தெரிவித்து, அவ்விடம் விட்டுக், காசி க்ஷேத்திரத்தினை யடைந்து, கங்கா ஸ்நாநம் பண்ணி விஸ்வநாதரைத் தரிசித்துக் கொண்டு சில தின மிருந்து, ஒரு நாள் அத் தலத்தி லிருக்கும் திரு வாவடுதுறை மடம் நமச் சிவாயத் தம்பிரானிடம் சென்று, "இத் தேகம் இந்த மிதுந மாதம், 31௳ சுக்ர வாரம் பத்து நாளிகைக்கு வியோக மாய் விடும் ஆனதால்,இந்தத் தேகத்தினைக் கநந விதிப்படி கற றொட்டி செய்து,அதிற் கநநஞ் செய்து, கங்கை மத்தியில் விட்டு விட்டு, எமது ஞாநாசாரியர் திருப் பெருந் துறைக் கடுத்த கோவி லூரில் எழுந்தருளி யிருக்கின்றபடியால், இத் தேக வியோகத்தினை அவர்கட்கு திருப வாயிலாகத் தெரிவிக்க வேண்டு மென்று சொல்லியருளினர். நமச்சி வாயத் தம்பிரானும், அதற் கிசைந்து, இரண்டடி யார்களைச் சுவாமிகளை விட் டகலா திருக்கும்படி செய்து, சுவாமிகள் திரு வாய் மலர்ந்தருளிய பிரகாரம் தேக வியோக மானது தெரிந்து, ஆநந்த மடைந்து, கற் றொட்டியிற் சமாதி செய்து, கங்கையி லிறக்கிவிட்டுக்,கோவி லூருக்கு

மிக்க வணக்கத்துடன் கடிதமெழுதி ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக ரென்னும், ஆண்டவருக்கு இச் சங்கதியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பட்டுக் கோட்டை அம்பலவாண பிள்ளை இயற்றியது.

வயமிகுங் குரோதிசம் வற்சரமி துநத்திலே
வளர்தேதி மூப்ப தொன்று—
மகாவமர பக்ஷமுங் துவாதசி ரோகணி
மாவெள்ளி தசக டிகையுஞ்,
செயமிகுஞ் சிம்மலக் கினசுப தினத்திலே
சின்மயா னந்த வடிவே—
திகழுருவ மாய்வந்த முத்ராம குருசுவாமி
சீரடி வணங்கி னானு,
நயமிகுந் துறவியாய்ச் சவனுநி முழுதுமே
நன்னிலய-மாயு ணர்ந்து—
நன்மைபெற ராமேசு ரங்காசி சென்றுமே
நற்றுரிய நிலையை நாடிச்,
சுயமான சீவன் முத் திப்பதந் தன்னிலே
சுகியாயி ருந்து நானுந்—
தூயவரு ணாசலசு வாமியும் விதேகச்சு
பாவமத டைந்த் னனரோ.

---

9 கோட்டை யூர், அண்ணாமலை சுவாமிகள் சரிதம்.

நாவலர் பரவும் சமிழ்மல் அமரும்
நாயகன் நளிநகன் மலரை,
மாஎழில் ஆறு முகன்றனைக் கொற்ற
வாள்இறை திருநெல்லை அமையை,

ஆவல்நல் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
கருளொடு ஞானம தளித்துக்,
கோவிலூ ரினில்வாழ் அண்ணு மலைக்
குருபரன் தனைத்தினம் பணிவாம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரம சிவன் அறு பத்து நான்கு திருவிளையாடல் புரிந்த, பாண்டி நாட்டிலே, கோட்டை யூர் என்னும் ஊரிலே, நகரவைசிய குலத்திலே, இரணிக் கோவில் கோத்திரத்திலே, ஆண்டவரிடம் வழிபட்டு, திரு வருளைப் பெற்று, அத்வைத சாஸ்திரங்களை அப்யாசித்து, பிரஹ்ம நிஷ்டரா யிருந்து, சித்தார்த்தி ஸ்ரீ பங்குனி மீ 26௳, சுக்கிர வாரம், கிருஷ்ண பக்ஷ பிரதமை, சித்திரை நக்ஷத்திரம் கூடிய சுபதிநத்தில், நிரதிசய, கைவல்ய மான பரிபூரண தசையை யடைந்தனர்.

10. *பழநியப்ப சுவாமிகள் சரிதம்.*

நாவலர் பரவும் சபிசிழல் அமரும்
நாயகன் நளிநநன் மலரை,
மாஎழில் ஆறு முகன்றனைக் கொற்ற
வான்இறை திருநெலை அமையை,
ஆவல்நன் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
கருளொடு ஞானம தளித்துக்,
கோவிலூ ரினில்வாழ் பழநியப்ப ஞான
குருபரன் தனைத்தினம் பணிவாம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரம சிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் செய்த, பாண்டி வள நாட்டிலே, நேமத்தான் பட்டி என்னும் ஊரிலே, நக

வைசிய குலத்திலே, கோத்திரத்திலே, முத்தைய செட்டி யாரும், அவர் மனைவியாரும், இருந்தனர், அவர்கள் புதல்வர், பழநி யப்ப சுவாமிகள்.

தம்மைச் சர ணடைந்த மகாதேவஸ்வாமி, கிருஷ்ண சுவாமி, முத்துக் குமார சுவாமி, வெங்கடாசல சுவாமி பூங் குடி, கண்ணப் பய்யா, கடியா பட்டி, அருணாசலையா முதலிய அநேக சாதுக்களுக்கு வேதாந்த பாடஞ் சொல்லிக் கொண்டு, கோவி லூரி லிருந்து, சித்த விசிராந்தி யடைந்து, கலியப்தம் 4961, ரௌத்திரி ஞூ, கடக மீ, 8௳, சனி வாரம், மக நக்ஷத்திரம், சுக்ல பக்ஷ, திருதியை, தெக்ஷிணா'யநம் கூடிய சுபதிநத்தில் நித்தியானந்த பரிபூரண தசையை யடைந்தனர்.

கண்ட ஞார், முத்து ராமய்யா இயற்றியது.

சுயமான கலியுக நாலாயி ரத்தித்தொ
ணூாயிரத் தறுப தொன்றிற்—
சொல்ரௌத் திரியாண்டு கடகமதி தேதியோ
ரெட்டினிற் சுக்ல பட்ச,
நயமான திரிதியை திதிமந்த வாரமொடு
நாடு மக நட்சத்திர—
நற்கடக லக்கிநமி ரதவுச்ச வந்தனி
னன்மைசேர் கழநி நகரில்,
உயர்வான முத்திரா மையனருள் பெற்றுமெய்
யுரிமையுள வடியார்க் கெலா—
முன்மையையு ணர்த்துந்தி றத்தினிற் தெக்ஷிணா
மூர்த்திக்கு வொப்ப தாகக்,
செயமான திருவுருக் கொண்டநம் பழநி
யப்பநற் றேசி கன்றான்—

சீவன்முத் தித்தசை தனிலிருந் தாநந்த
சிற்சொருப மாகி னனே.

---

11. முத்து வீரப்ப சுவாமிகள் சரிதம்.

நாவல பரவுஞ் சமிசிழல் அமரும்
நாயகன் நளிநநன் மலரை,
மாஎழில் ஆறு முகன் றனைக் கொற்ற
வாள்இறை திருநெல்லை அமையை,
ஆவல்நல் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
கருளொடு ஞாநம தளித்துக்,
கோவிலூ ரினில்வாழ் முதது வீரப்ப
குருபரன் தனைத்திநம் பணிவாம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரமசிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் செய்த பாண்டி வள நாட்டிலே, பள்ளத் தூர் என்னும் நகரத்திலே, தந வைசிய குலத்திலே, சச்சிதாநந்த விக்கிரக மாக வெழுந்தருளி யிருந்த ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிகரிடத் தன்பு பூண்டு பால்ய முதல்வழிப்பட் டடிமைத் திறத் தொழுகி நின்று, குரு மூர்த்தியின் பரிபூர்ண கிருபையைப் பெற்று, ஞாந நிதி யாய்,நற் குணக் கட லாய்,நீண்ட காலம் வசித்து,ஸ்ரீ சிதம் பர ஞாந தேசிகரின் பூர்ண சகாயத்தால், கல்லாங் குடியின் கண் ணுற்ற சிவ க்ஷேத்திரத்தின் திருப் பணி முற்று மியற்றுவித்துக், கலி யப்தம் 4976 சாலிவாகந சகாப்தம் 1791 யுவ வருடம், தை மாதம், 20உ, சோம வாரம், புநர் பூச நக்ஷத்திரம்,சுக்ல பக்ஷத் திரயோதசி, பிரதி நாம யோகம், கௌல வா கரணம் கூடிய சுபதிநத்தில் பரிபூரண தசையை அடைந்தனர்.

புகழுமெய் யுவவருட மகரமா தந்தேதி
    புகலுமிருபத் தாறினிற்,
பூர்வபச் சந்திங்கள் திதிதிர யோதசி
    யொருகடிகை யிருபதொன் றில்,
நிகழுதநுர் லக்குநம் புநர்பூச நாட்கொண்ட
    நேர்மையாஞ் சாத்திகத்தி
னிகரில்சமி வநமெனுங் கழநிநகர் வாழ்முத்தி
    ராமலிங் காசா னிடந்,
திகழுமுத லடியராய் ஞாநவா சிட்டம்வரைச்
    சிரவணு திகள்செய்துமே.
சிவகா ருண்யாதி சகலசற் குணமெலாஞ்
    சேர்ந்தமெய்ஞ் ஞாநியான,
துகளிலா துறைபள்ளத் தூர்வணிக ஞமுத்து
    வீரப்ப சுவாமிகளுமே.
சுத்தசத் துவமதாய் நிறைந்தபரி பூரண
    சொருபமா யிலகினனே.

---

12. வெள்ளை யப்ப ஸ்வாமிகள் சரிதம்.

அல்லலை அகற்றும் திறத்தினைத் தொழுவார்க்
    கருள்செயும் இமுகத் திறையைத்,
துல்லியர் துதிக்கும் அறுமுகத் தவனைச்
    சோமசுந் தரேசனை இடம்சேர்,
நல்லசௌந் தரிய நாயகி பதத்தை
    நறைமலர் சொரிபொழில் சூழும்,
கல்லல்வெள் ளையப்ப ஞாநதே சிகனைக்
    கவின்பெற நினைந்துவாழ்த் துதுமே.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரமசிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் இயற்றிய பாண்டிவள

நாட்டிலே, கல்லல் என்னும் நகரத்திலே, தந வைசிய குலத்திலே, மெய்யப்ப செட்டியாரும், அவர் மனைவியாரும் இருந்தனர். அவர்கள் புதல்வர் வெள்ளையப்ப சுவாமிகள்.

ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிகரைச் சரணடைந்து, ஆப்தாதி சதுர் விதப் பணிகளையும் செய்து, சத் சாஸ்திரம் பயின்று, திரு வருளைப் பெற்றுச், சம தமாதி குணங்கள் நிறைந்து, பிரஹ்ம விசார சீல ராய்க், குரு ஸ்தாநத்தில் பிரேம பக்தியோடு, ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக ருடைய அதிஷ்டாநம் நித்திய மங்கள மாய் விளங்க வேண்டு மென்னும், எண்ண முடையவர்க ளாய்ச். சரீர கருமம் நீடித்து எண் பத் தேழு வயது பரியந்த மிருந்து, கலியப்தம் 4988 சாலிவாகந சகாப்தம் 1809 சர்வஜித் வருஷம், தைமீ, 28உ, குரு வாரம், பூராட நக்ஷத்திரம், அபரபக்ஷத் திரயோதசி திதி, கடக லக்நம் கூடிய சுப திநத்தில் கல்லலில் நித்தியாநந்த சிந்துவிற் கலந்தனர்.

---

13. *சிதம்பர ஞாந தேசிக ஸ்வாமிகள் சரிதம்.* *(கருணாநிதி சுவாமிகள் சரித்திரம்.)*

நாவலர் போற்றும் சமிநிழல் அமரும்
நாயகன் நளிநசன் மலரை,
மாஎழில் ஆறு முகன்றனைக் கொற்ற
வான்இறை திருநெல்லை அம்மை,
ஆவல்நல் அன்பு மிகுந்துவந் தடைந்தோர்க்
கருளொடு ஞாநம தளித்துக்,
கோவிலூர் தனிழ்வாழ் சிதம்பர ஞாந
குருபரன் தான்திநம் பணிவாம்.

இவர் முன் பட்டத் திருந்த சுவாமிகளின் இளைய சகோ தரர். அச் சுவாமிகள் துறவடைந்தமையைக் கேள்வி யுற்று, அவரைத் தரிசிக்கும் பொருட்டுக் கோவி லூருக்கு வந்த போது, ஆண்டவரைச் சரண டைந்து அநுக்கிரகிக்கப் பெற்று, அங்கு சில நாள் வசித்துப், பின் மதுரை குட்டை அய்யாவுடன் திருப் பெருந் துறைக்குச் சென்று, வடக்கு மடத்தில் தியாந சமாதிகளைச் செய்து கொண்டிருந்தனர். இவர், இவ் வாறு ஆண்டவரை விட்டுத் தனித் திருப்பதைச் சிதம்பரத் திருந்த துறவு சுவாமிகள், அடியார்கள் வாயி லாகக் கேட்டு, வருத்த முற்று. குறுந் திரட்டுப் பெருந் திரட்டு முதலிய சாஸ்திரங்களி னின்றும். ஐம் பது செய்யு ளெடுத்துத் திரட்டிச் "சீடாச்சார" மெனப் பெய ரிட்டு, அதனோடு அத னபிப்பிராயம் முழுவதும் விளங்கும்படி யான ஒரு நிருபமும் எழுதி, அவற்றை ஒரு மாணாக்கரிடங் கொடுத்துச் சிதம்பரத்தின் கையிற் கொடுத்து வா வென் றனுப்பினார். அத் திரு முகத்தை அவர் திருப் பெருந் துறையிற் கருணாநிதி யிடங் கொடுக்க, அதனை அவர் மிகத் திருப்தியோடு வாங்கிப் படித்துப் பார்த்துக் கண்களி லொற்றிக் கொண் டுடனே கோவி லூருக்குப் புறப்பட்டு வந்து, ஆண்டவர் உள் ளன்பிற்குப் பாத்தி ராய் நடந்து, வந்தனர். பின்னர், ஆண்டவர் பரிபூரண மாகுங் காலத்து ஆஞ்ஞாபித்தபடியும், துறவு சுவாமிகளது உத்தரவுப் பிர காரமும், ஆஜாநுபாகுவாய்ச், சாமுத்திரிகா லக்ஷணம் பூரா அமைந் துள்ள தமது அறி வுரு வான திரு வுருவத்தாலும், திவ்விய மங்கள குணங்களாலும், சர்வ ஜந ஆநந்த கரனாய்க், குருமூர்த்தியினது பூரண கிருபையையும், திரு நெல்லை யம்பா ளுடைய பிரசந்ந மான அருளையும், அடைந்து, திட

மாகச் சுவாநுபவத்தில் அமிழ்ந்திச், சேது முதல் இமகிரி பரியந்த முள்ள சகல ஜீவர்களும் கண்ட மாத்திரத்தில் மநங் கசிந் துருகி உய்யும்படி சர்வ லோக பூஜ்யர்க ளாய், எழுந் தருளிப் பிறவிக் கடலின் மூழ்கித் தத்தளிக்கும் ஜீவர்கள் களிக்கும்படி ஞாநம் அளித்து, அவர்களை காக்கும் கருணை மாகட லாகலின் கருணாநிதி யெனப் பெயர் பெற்று, அவ் வாதீநத்தைப் பூரண மாகத் தாமே வகித்து, முன் தமது குரு மூர்த்தி யாரம்பித்த கொற்ற வாளீசுரர் ஆலயத்தையும், திரு நெல்லை யம்மை யாலயத்தையும், புதுக்கிச சம்புரோக்ஷணை செய்வித்து, உற்சவாதிகளை நடத்தி வந்தனர். ஆண்டவரை மகா லிங்க மூர்த்தி யாகவும், துறவு சுவாமிகளை நந்திகேசுர ராகவும், சமாதி ஸ்தாநத்தி லமைத்து, இருவருக்கும், ஒன் றுய்த் கர்ப்பக் கிரகம் முதலியவைகளை விநோத மாக முடிப்பித்துக் கும்பாபிஷேகமும், சிறப்பாக நடத்தி, நித்திய நைமித்திய பூஜை முதலியவற்றைச் சிரத்தையோடு செய்து வரும்படி கட்டளையிட்டு, எப் போதும் குட்டை யையா முதலியோர்கள் தம் தருகில் இடைவிடா திருக்கப் பிரம ஞாநோபதேசஞ் செய்து கொண்டு அங்கு எழுந்தருளியிருந்தனர்.

அங்ஙன மெழுந்தருளியிருக்குங் காலத்து, ஒரு சமயம் கருணாநிதி, சிதம்பரத்திற்கு, நடேச தரிசனார்த்த மாகப் போயிருந்த போது, கோட்டை யூர்ப், பெத்தாச்சி சுவாமிகள், பொன்னம்பல சுவாமிகளை அழைத்து வந்து, ஸ்ரீ கருணாநிதி சந்நிதியிற் சேர்ப்பித்து, இப் பிள்ளை மிக மேதாவியா யிருத்தலால், பாடஞ் சொல்ல வேண்டு மென்று கேட்டுக் கொள்ள கருணாநிதியும் அவ் வாறே அவரிடத்து, நற் குண, நற் செய்கை ளமைந்திருந்தமையைக் கண்டு,

அடிமை கொண்டு, மிக அன்போடு பால சிக்ஷை முதல் பஞ்ச தசி பரியந்தம், அங்கு படிப்பித்து, பின் கோவி லூருக் கழைத்து வந்து, ஏனைய சாஸ்திரங்களையும் கிரம மாகத் போதித்து வந்தனர். பொன்னம்பல சுவாமிகளும் மிகுந்த பக்தியோடு கருணா நிதியைச் சாயை போல் விட்டு நீங்காது சந்நிதியிலே யிருந்து சுஷுருஷைத் திரயங்களு மொழி யக் குருவின் பரிபூரண கிருபையைப் பெற்றுக் குரு குல வாசம் செய்து வந்தனர். இன்னும் அக் கருணா நிதியவர் கள், தம்மைச் சர ணடைந்த, காரைக் குடி. இராம சாமி ஞான தேசிகர் முதலிய அடியார்களுக்கு அநுக்கிர கித்து வந்தனர். அக் காலத் தொரு நாள் ஸ்ரீ கருணா நிதி யவர்கள், தமது சிட ராகிய, தேவி கோட்டை, இலக்கு மணச் செட்டியாரை பார்த்து, சிதம்பரம் ஸ்ரீ மூலட் டானேசுரர் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்விக்க வேண்டு மென் றுத்தரவு செய்ய, அவ் வாறே இலக்கு மணச் செட்டியாரும், தம் மினத்தவர்களை வர வழைத்து, அதற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து குரு மூர்த்தியின் சந்நிதியிற் றெரிவித்தனர், அப் போது கருணா நிதி களிப் புற்று அடியார் திருக் கூட்டத் தோடு சிதம்பரத்திற்கு எழுந்தருளி, பல தேசங்களி லிருந்தும வைதிகர் க ளான பிராஹ்மணோத்தமர்களையும், வித்வான் களையும், மற்று முள்ள பெரியோர்களையும், வர வழைத்து, அபரிமித மாகப் பிராமண போஜநம் செய்வித்து, ஸ்ரீ நடேசப் பிரானுக் கொப் பான தீக்ஷிதர்க ளனைவரையும் பூஜித்து மரியாதை செய்து, ஸ்ரீ மூலட்டானேசுரருக்குச் சொர்ண பந்தநம் செய்வித்து, வேத விதிப்படி வெகு விமரிசையாய்க் கால யுக்தி வருஷம், ஆனி மாதம் 14௳ சோம வாரத் தன்று, கும்பாபிஷேகம் நடப்பித்துப் பே

ராநந்த முற்று அடியார்களுடன் மீண்டும் கோவி லூருக்கு எழுந்தருளினர்.

அங்கு எழுந் தருளி அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்து கொண்டிருந்ததோடு, கொற்ற வா ளீசுவரர் ஆல யத்திற்கும், திரு நெல்லை யம்மை ஆலயத்திற்கும், கும்பாபி ஷேகமும், அவ் வாலயங்களின் மத்தியில் நித்திய கல்யாணி க்கும், கைலாச நாதருக்கும், ஓர் புதிய ஆலயமும், சோமாஸ்கந்தருக்கு ஓர் சபையும், கல்யாண மண்டபமும், திருக் குளமும், அக் குளத்தில், மைய மண்டப முதலி யனவு மாகிய திருப் பணிகளை இயற்றுவித்துப் பின் செய்ய வேண்டியவைகளுக்கும் பட மொன் றேற்படுத்தி, கும்பாபிஷேகம் தடாகப் பிரதிஷ்டை முதலியவற்றைச் சிறப் பாக நடத்தினர். கோவிலுக்கு ஏற்பட்ட கிராமங் களை யெல்லாம் சீர் திருத்தி அபரிமித மான வருமானங்களை யுண்டுபண்ணி, நித்திய நைமித்திய பூஜைகளையும் சிறப் பாக நடத்தி வரச் செய்து, மடாலயத்திற்கு, முன் கிராமத் தோடு புதிய கிராமங்களையும் வாங்கி, விசேஷ வருமா னத்தை யுண்டு பண்ணி, அடியார்களுக்கு அன்ன முதலிய வற்றை யுதவிக் குரு வாக்கிய பரிபாலனஞ் செய்து வந்த னர். இக் கருணா நிதி கண்ட னூர சின்னையா, பொன் னம் பல சுவாமிகள் முதலிய மாணாக்கர்கள் பலருக்கு பல முறை வாசிட்ட பாடம் நடத்தி, சமாப்தி காலத்தில் செய் யத் தக்க விதிப்படி மாணாக்கர்களால் அர்ப்பணஞ் செய் யப்பட்ட அள விறந்த திரவியங்களைக் கொண்டு பிராமண போஜநம் மகேசுர பூஜை அபிஷேக ஆராதனை முதலிய வைபவங்களை விசேஷ மாய் நடத்தி ஆநந்தத்தோ டிருந் தனர். அக் கருணாநிதி, அடியார்கள் மீது அன்பு கூர்ந்து, தமிழ்ப் பாவால் இலக்ஷணா விருத்தி யென்னும்ஓர் நூலையும்,

தமதாசிரியர் பேரில் ஸ்துதி பரமாக குரு ஸ்துதி குசுமாஞ்சலி யென அநேக செய்யுட்களையும் செய்தருளினர். இவ்வாறு, கருணாநிதி சமிவாஸ க்ஷேத்திரத்தில், வெகு காலம் அநேக அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்து கொண்டிருந்து, ஆடிப் பூரோற்சவ இரண்டாந் திரு விழா வன்று தனது தேகம் வியோகமாகு மெனத் தெரிந்து, கல்லலையா முதலிய சாதுக்களும், பொன்னம்பல சுவாமிகள் முதலிய அடியார்களும், சூழ விருக்க,தமது சீடரான காரைக் குடி இராம சுவாமி ஞாந தேசிகரை, அவ் வாதீநத் திருந்து அடியார்களுக்கு ஞாநோபதேசஞ் செய்து கொண்டு, சிவாலய மடாலய முதலியவற்றைப் பரிபாலித்து வரும்படி நியமித்து, கலி (4977) சாலிவாகந சகாப்தம் (1797) தாது வருஷம், ஆடி மாதம், கிருஷ்ண பக்ஷம், 4உ,சோம வாரம் ஏகா தசி, ரோகணி நக்ஷத்திரம், துலா லக்கிநம் என்னும் இவை பொருந்திய சுபதிநத்தில் அகண்டைக ரச சுபாவமான ஆத்மாநந்த சிந்துவிற் கலந்தருளினர். ஸ்ரீ பொன்னம்பல ஞாந தேசிகரும், இராம சுவாமி ஞாந தேசிகரும், கோட்டை நல்லூர் சுந்தர சுவாமிகளும், மற்று முள்ள பெரியோர்களும், ஒருங்கு சேர்ந்து ஸ்வாமிகளின் திருமேனியை ஆண்டவர் சந்நிதாநத்திற்கு நேராகச் சமாதி செய்வித்து, அதன் பேரில் பலி பீடம் வைத்துப் பூசித்து மகேசுரபூஜை முதலியவற்றை அபரிமித மாகச் செய்து ஆண்டவர் துறவு சுவாமிகள் ஆலயங்கட்கு எவ் வாறு நித்திய நைமித்திய பூஜைகள் நடந்து வருகின்றதோ, அவ் வாறே சுவாமி கருணாநிதிக்கும் பூஜை நடந்து வரும்படி செய்தார்கள்.

24 சீர்க ழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

திருமருவு மாயிரத் தைம்பதொன் றுமாண்டு
செறிதா து வருடத்தினிற்,
றிகழ்கடக மாதமதி னன்கான தேதியுஞ்
செறியமர பட்சந்தனிற்,
றினசோம வாரமே காதசி ரோகணி
திகழ்துலா லக்கிநத்தே.
தேவைநக ரதனில்வந் தவதார மாகியே
தென்கழரி யம்பதியினிற்,
குருநாத னூழுத்து ராமலிங் கேசனருள்
கொண்டுமே யடியவர்க்குக்,
கூறுன வப்பதியி ருந்துபி னநுக்கிரகங்
குணமாக வருளுகின்றோன்,
கோதிலரு ணசலசு வாமிகட் கிளையநற்
குலமுடைய சூடாமணி,
கொண்டலென வேபொழியு மண்டலத் துளவணிகர்
குழுவெலாம் பணியவல்லோன்,
மருமருவு கொற்றவா ளீசனற் றிருநெல்லை
மாதுதன் கருணையாலே,
மதிமன்னர் நிதிமன்னர் கவிமன்னர் புவிமன்னர்
வந்துபணி கின்றதீரன்,
மங்களம தானமட வாலயசி வாலயம்
மலர்வனஞ் சத்திரமுதல்,
மலர்வான புவனத்த னேகமுண் டாகவே
வந்தகா ரணவள்ளலா,
மருமருவு சிவகா ருணிய முத னன்குமே
யழகான திருவுருவமா,

மறிவான கலவிசெல் வம்பொறுமை கீர்த்தியை
யரவனுங் கூறமுடியா,
வத்துவித நிச்சயசி தம்பரசு வாமியென்
றுானந்த கருணாநிதி,
யகண்டபரி பூரண சதானந்த சிற்சொருப
மாகினு னறிகமாதோ.

சிதம்பர ஞாந தேசிகர் இயற்றிய நூல்.

(1) இலக்ஷணு விருத்தி, (2) குருஸ்துதி குசுமாஞ் சலி, (3) பாகவதத் திரட்டு 700, (4) ஷை 150, (5)வாசிட் டத் திரட்டு, (6)பிரபு லிங்க லீலைத் திரட்டு, (7) பிரபோத சந்திரோதயத் திரட்டு, (8) பகவற் கீதைத் திரட்டு.

---

14. குட்டைய சுவாமிகள் சரிதம்

கோவி லூரில் இடைவிடாது ஸ்ரீ கருணாநிதியோடு வெகு காலம் வசித்துப், பின்னர் துவாதசாந்த க்ஷேத்திரஞ் சென்று, சில கால மிருந்து, இந்திரனு லியற்றப் பெற்ற ஸ்ரீ சுந்தரேச ருடைய இந்திர விமாநத்தையும், ஸ்ரீ மீனுக்ஷி யம்மையின் விமாநத்தையும், இரண்டு துவஜ ஸ்தம்பங் களையும். சுவர்ணத்தா லியற்றிப், பின்னர் நந்தி மண்டப மாகிய துவஜ ஸ்தம்ப மண்டபத்தையும், உயர்ந்த கற்பணி யாக்குவித்தற் பொருட்டு, பல மான யத்நஞ் செய்து, முடிவு பெறுது நிற்குஞ் சமயத்தில், சுவாமிகளுக்கு சரீரத் தில் அசௌக்கிய முண்டாக, அக் காலத்து அவர்களை தரிசிக்கு நிமித்தம் அவர்கள் தம்பி லெக்ஷிமணஞ் செட்டி யாரும், அமராவதி புதூர் நாகப்ப செட்டியாரும், இன் னும் அநேகரும், வந்து பார்த்துக் கொண்டிருக்கும்

பொழுது, நாகப்ப செட்டியார் சுவாமிகளைப் பார்த்து, மீனாக்ஷி திருப் பணி குறையு முடியவில்லையே, தேகம் மிக வும், அசௌக்கியத்தை யடைந்திருக்கின்றதே, எவ் விதம் திருப் பணி முடியு மென்று சொல்ல, சுவாமிகளும், நாம் தானா இத் திருப் பணியைச் செய்து முடிக்க வல்லவர், ஈசனால் முடிக்கத் தக்க தொன்று மில்லையோ, இது காறும் தாங்கள் படித்த படிப்பிற்கு பிரயோசந மிவ் வளவு தானோ, பல் லாயிரங் கோடி பண்டங்களை ஒரு நிமிட காலத்திற் கற்பித் துள்ள சிற் சத்தி ரூப மான மீனாக்ஷிக்குக் குறைப் பணியுஞ் செய்து முடித்துக் கொள்ள சாமர்த்திய மில்லையோ, உங்களது அந்தக் கரணங்களில், இப்படி எண் ணம் ஏன் உண்டாக வேண்டு மென்று, திரு வாய் மலர்ந்து, அக நோக்குற் றிருந்து, சிவ சாயுஜ்ஜிய பதம் பெறு மெனுஞ் சமயத்தில், தேவகி திரு வயிற் றுதித்த பக வானும், குசேல னாகிய பிரஹ்ம நிஷ்டரும், பாலிய முதல் சிநேகித் திருந்தது போன்று, குழந்தை முதற் றோழரும், சமப் பிரியருமான ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகருந், தானும், திருப் பெருந் துறை,சிதம்பரம் திரிசிர புரம் முதலிய விடங் களில்,தனித் திருந்து யேகாக்கர சித்தத்தோடு சமாதி யநுஷ் டித்து வந்த திட வாசனை வெளிப்பட்டமையால், ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகரைப் பார்க்கும் அவா வுண்டாய், அக் கருத்தை சாதுக்கள் வாயி லாய் ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகருக்குச் தெரிவிக்க, அவர்களும் கோவிலூரி லிருந்து திரு வாலவாய் ஸ்தலத்தை விரைவி லடைந்தார்கள். அவர் களும் சந்தித்தவுடன், கலியப்தம் 4973 சாலிவாகந சகாப் தம், 1798 ஆங்கிரச வருஷம், ஆவணி மாதம், 5உ சோம வாரம், சதய நக்ஷத்திரம், கிருஷ்ண பக்ஷ பிரதமை, பத்திர வா யோகம், கரசவா கரணம் கூடிய சுபதிநத்தில் நினைத்த

கற் கரிய பரமாநந்த சிந்துவிற் கலந்தருளினர். கருணையங் கட லாகிய சிதம்பர ஞாந தேசிகரும அவர்கட்கு கிருத மாலா நதியை யடுத்த வடபால் கநந விதிகளைச் சிறப் பாகச் செய்து, அவரது பிரதம சீட ராகிய, புது வயல், வீரப் பையா அவர்களையும, கொல்லங் குடி, சின்னையா அவர்களையும், தமது சீட ராகிப, நாகைக் காரோணம், ஷண் முக சுவாமி களையும், கொண்டு, ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் ஆலயத்தி லுள்ள துவஜ ஸ்தம்ப மண்டபத்தையும், மற்று முள்ள திருப் பணிகளையுஞ், செவ்வை யாகச் செய்வித்தும், சுவாமி கள் அதிஷ்டாநத்திற்கு கெர்ப்ப கிரகம், மகா மண்டபம், விமாநம், மடாலயம் முதலியவற்றைச் சிறப் பாக முடிப் பித்தும், கொல்லங் குடி, சின்னையா சுவாமிகளை அம் மடத் தி லிருந்து அதிஷ்டாநத்திற்கு நித்திய நைமித்தியாதி பூசை களையும், குரு பூசை மகேசுவர பூசைகளையும், நன் ருக நடத்தி வரும்படி ஆக்ஞாபித்துவிட்டுக் கோவி லூருக்கு யெழுந்தருளினர்.

---

14. இராம சாமி ஞாந தேசிக ஸ்வாமிகள் சரிதம்

கோவி லூர் முத்திராம லிங்க ஞாநதேசிகர் ஆதிநத் தில், ஆசாரிய மூர்த்த மாய் எழுந்தருளியிருந்து, திரு நெல்லை யம்பாள் சந்நதியில், அஷ்ட லக்ஷிமி மண்டப மொன்று வெகு சிறப் பாக செய்து முடிப்பித்து, சிவாலயத்தில், அபிஷேக நைவேத்தியங்களையும் சிறப்பாக நடப்பித்து, குரு மூர்த்தியின் அதிஷ்டாந ஆராதனையும் சாதுக்கட்குப், போசநமும், செவ்வனே செய்வித்தும், சாதுக்கட்கு ஞாநா நுக்கிரம் செய்து கொண்டிருந்து, சின் ளுட் சென்ற

பின், சரீரா சௌக்கிய காலத்து, கல்லல் வெள்ளையப்பய்யா, ஸ்ரீ பொன்னம்பல ஞாந தேசிகர் முதலிய பெரியோர்களை அழைப்பித்துத் தமது சமீபத்தில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகரை ஆசாரிய ஸ்தாநத்தில் நியமித்து கலியப்தம் 4984 சாலிவாகந சகாப்தம் 1805 சுபாநு வருஷம், மார்கழி மாதம், 6௳, புதன் கிழமை, மக நக்ஷத்திரம், கிருஷ்ண பக்ஷ சஷ்டி திதி, தக்ஷுணாயநம், ஹேமந்த ருது, மகர லக்நம் கூடிய சுப திநத்தில் பரிபூரண பரப்பிரஹ்ம சமரச சுபாவ மடைந்தனர், அக் காலையில், கண்டனூர், முத்திராமய்யா இயற்றிய கவி— "அறிவான சாலிவா கநசகாப்த் தமது வாயிரத் தெண்ணூ றுறி—லமர்சுபா நு வருடமுந் தநுர்மாச முந்தேதி யாறினி லமர பக்ஷம்— அழகான புத வார, மகரலக் கினஞ் சட்டி யரியமக நட்சத்திர—மமைவதிற் பாண்டிநா டதனிலே சமிவாந மாகின்ற கோவி லூரில், பரிவான கொற்றவாளீசனற் றிருநெல்லை பாதாம்பு யத்தருளினுற்—பண்பான வணிகர்செய் பாக்கியத் தால்வந்த பரமர்த்தி யான வள்ளற்—பரசமய மியாவையுங் கண்டித்து வொப்பற்ற பரமாத்து விதசொருபம்—பாலிக்கு முத்திரா மய்யனற் றிருவடி பணிந்தருள் கொண்டு நின்றும், உரித்தான வாக்குமல் லார்க்கமு துதவியே யுணர்வளிக் கின்ற கருணை, யுருவாஞ்சி தம்பரசு வாமியின நுக்கிரக முண்மையாய்ப் பெற்று நின்றே, யொளிமிகு சச்சிதா நந்தபர சொரூபத்தை யுள்ளங்கை நெல்லி போல, வுத்தம சீடருக் குபதேச மருள்வதி லுணர்மிகுவ சிட்ட னெனவும், சரியான ஞாநமுஞ் சநகனுக் கொபமெனச் சற்குணந் தன்னி லேதான், சற்றுமழி வில்லாத விராமனைப் போலவுஞ் சாந்தவயி ராகமுடைய—சந்நியா சத்திலே சுகர்போல வுயர்ராம சாமிக

ளான மூர்த்தி-சர்வபரி பூரணவ கண்டபர வொளியிலே தங்கிக்கலந்த னனரோ." எனக் கூறினர்.

15. உகந்த லிங்க குரு ஸ்வாமிகள் சரிதம்.

விண்முகத் தமரர் முதலவர் வணங்க
விளங்குறும் பொற்கரி முகனைச்,
சண்முகத் திறையைப் பொருள்வைமா நகர்வாழ்
சம்புவைப் பொலம்புரி இறையைத்,
தண்முகத் தருளொ டொளிர்தரும் எனது
தாய்சௌந் தரியநா யகியை,
உண்முகத் தவர்கள் போற்றவீற் றருளும்
உகந்ததே சிகனைவாழ்த் துதுமே.

சமுத்திரமுங்,காவேரியுஞ்,சூழப் பெற்றுச் சகல சிறப்புக்களோடு விளங்கும் சோழ தேயத்தில், சிக்கல்-பொருள் வை மாநகரில், நவ வீரர் (கைக்கோளர்) குலத்தில், அவர்கட்கு தாங்கள் செய்த தவத்தால், நல் லாண்டு நற் றிங்கள் நன்னுள் நற் றிதி நன் முகூர்த்தத்தில், ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தை உகந்த லிங்க ஸ்வாமிகள் எனத் திருநாமம் வாய்ந்து திரு வள்ளுவர் நாயனுர் போலவும்,கபீர் தாஸ் போலவும், பரதிருஷ்டிக்கு நெய்தற் றொழி லுடையவர் போன்றிருந்து, அதனுல் வரும் ஆதாயத்தினை மூன்று விபாகமாக்கி, மறு நாட் டொழிற்கு நூல் வாங்குவதற் கோர் பாகமும், குடும்பச் செலவிற் கோர் பாகமும், சாதுக்கட் கந்நதாநதிற் கோர் பாகமு மாக விநியோகித்து,இவ்விதம் நா டோறும் நடத்திக்கொண்டு, சாதந சதுஷ்டய முடையராய்த் தம்மை வந்து சர ணடையாநிற்பவரைச் சோதித்து

ஞானோபதேசஞ் செய்து வந்தனர். ஒரு கால் இராய வேலூர், கந்தப்ப ஸ்வாமிக ளென்பவர்கள் ஸ்வாமிகளின் பிரபாவத்தினைக் கேளவியுற்று அநேகஞ் சாதுக்களோடு வந்து, ஸ்ரீ சுவாமிகளைப் பத்திர புஷ்ப பலாதிகளால் ஆராதித்து,நமஸ்கரித் தெழுந்து,இரு கரங்களையும் சிரமேற் கொண்டு நின்று, ஜநந மரண சம்சார துன்பத்தில் அருந் தும் அடியேங்கள் உய்யும் பொருட்டு ஞானாநுக்கிரஞ் செய்தருளல் வேண்டு மென்று பிரார்த்திக்க,அவ் விண்ணப் பத்தினைச் செவியுற்ற சுவாமிகளும் பரீக்ஷித்து அநுக்கிரகஞ் செய்யத் திரு வுளங் கொண்டு, இங்கே குரு குல வாசஞ் செய்யும்படி உத்திரவு செய்து, வடி கஞ்சியில் முத ளுள் நனைத்து வைத்திருந்த நூலை பிழிந் தெடுத்துக் கொண்டு, அந்த நூல் நனைத்த கஞ்சியைப் பருகும்படி கட்டளை யிட்டருள, வைராக்கியாதி சாதந மின்றிய மற்றைச் சாதுக் கள் அதனைப் பருகாது தெருவிற் பிக்ஷைக்குச் சென்றனர். இராய வேலூர் கந்தப்ப ஸ்வாமிகள் மாத்திரம் அக் கஞ்சி யை வாங்கி மநங் கோணாது சந்தோஷத்தோடு புசித்தனர், அதனைப் பார்த்து, இவன் தான் பக்குவி யெனத் தெளிந்து, சில காலம் அவ் விடத்திருக்கும்படி ஆஞ்ஞாபித்து, அத் யாத்ம சாஸ்திர வாயி லாகப் பரமாத்வைத ஞானத்தினை அநுக்கிரகித்தருளினர். கந்தப்ப ஸ்வாமிகளும், குரு வுப தேசத்தினைப் பெற்றுச் சுவாநுபூதியினை அடைந்து, குரு மூர்த்தியினிடத்து விடைபெற்றுக் கொண்டு, திரு வண்ணா மலை என்னுந் தலத்தினை அடைந்து, ஈசாநியத்தில், ஆரண்ய வாச மாக, நிர்ஜ்ஜநப் பிரதேச மான விருக்ஷத்தடியில் சமா தியுற் றிருந்தனர்.

சுவாமிகள் முத்து ராம லிங்க ஞாந தேசிகரிடத் தன்பு முதிர்ந்து, நிரந்தரம் அநுபூதி ஞாநங்களை அநுக்கிரகித்துக்

கொண்டு, பிரஹ்ம நிஷ்டராயிருந்து, கலியப்தம் 4919 சாலி வாகந சகாப்தம் 1740 வெகுதாந்ய வருஷம், பங்குனி மாதம், 26 மங்கள வாரம், ஏகாதசி திதி. மகநக்ஷத்திரம் சுப்பிர நாம யோகம். பத்திரவா கரணம் கூடிய சுபதிநத்தில் பரப்பிரஹ்ம சமரச ஸ்வபாவ மடைந்தனர் அதன் பின்னர், ஆண்டவர் திரு வண்ணாமலையி லெழுந்தருளி யிருக்கின்ற ஈசாந்ய சுவாமிகள், அவர் மாணாக்கராகிய சிவ குரு சுவாமிகள், பரசுராம சுவாமிகள், திரு நாகைக் காரோணம், அருணாசல சுவாமிகள், திரு வாரூர் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள் முதலிய பெரியோர்களுக்கும், தமது நகரத்தி லிருக்கிற இல்லற அடியார்களுக்கும், அங்கங்கு திரு முக மனுப்பி வர வழைத்து வைத்துக் கொண்டு மண்டலாபிஷேக பரியந்த மான கா்ம விதிகளையும், குரு பூசை மஹேசுவர பூசைகளையும். சாஸ்திர விதிப்படி சிறப் பாகச் செய்து முடித்து, அக் குரு சுவாமிகளின் மீது "தடமுயர் கடல்சூழ் பொருள்வைநன் னகரந் தனின் மநுத் தேகமாய் விளங்கித், திடமுடன் சுருதி சாஸ்திரவே தாந்தஞ் சிந்தையி லநுபவந் தெளிந்து, படிதனிற் றனைவந் தடுத்தவர்க் கிரங்கிப் பரமசற் குருவதா யுணர்த்தி, யடியவ ரடிகட் கேயுகந் தாட்சி யரன்பதி கைலைவாழ்ந் தனனே." என்னும் பாசுரத்தையும், திரு வாய் மலர்ந் தருளினர்.

---

16 வீர பத்திர சுவாமிகள் சரிதம்.

விண்முகத் தமரர் முதலவர் வணங்க
விளங்கிடும் பொற்கரி முகனைச்,
சண்முகத் திறையைப் பொருள்வைமா நகர்வாழ்
சம்புவைப் பொலம்புரி இறையைத்,

தண்முகத் தருளொ டொளிர்தரும் எனது
தாய்சௌந் தரியநா யகியை,
விண்முகத் தவர்கள் போற்றவீற் றருளும்
வீரபத் திரனைவாழத் துதுமே.

சிக்கலைச் சார்ந்த பொருள் வைத்த சேரியில், ஸ்ரீ குருமூர்த்தி யாகிய உகந்த லிங்க குரு சுவாமிகள் அதிஷ்டானத்திற்கு நித்திய நைமித்திய பூஜைகளையும், குரு பூஜை மகேஸ்வர பூஜைகளையும், ஆண்டவ ரினத்தவர்க ளான தன வணிகர்களாலும், சிஷ்யவர்க்கங்களாலும் பொரு ளுதவி செய்யப் பெற்று, யாவரு நன்கு மதிக்கும்படி நீண்ட கால நடத்தி வந்து, சித்தோபசாந்தி பெற்று, சீவ காருண்யம், பாச வைராக்கியம், ஈசுவர பக்தி, பிரஹ்ம ஞான மென்னும் நான்கும் திரு வுருக்கொண்டது போல், அமர்ந்து, புராணகம காவியப் பிரசங்கங்களிற் சிறந்து விளங்கி, தம்மை யடைந்த அடியார்கட்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்து, சரீர வியோகஞ் சமீபித்தது தெரிந்து, கோவிலூருக்குச் சிதம்பர ஞான தேசிகரவர்களுக்கு யெழுதி தெரிந்து கொண்டு, சிங்கார வேலு சுவாமிகளை அவ் வாதீனத்தி லிருந்து பரிபாலனஞ் செய்து வரும்படி கட்டளையிட்டு, கலியப்தம் நாலாயிரத்தித் தொளாயிரத் தறுபத் தொன்று, சாலிவாகன சகாப்தம் 1782, ரௌத்திரி வருஷம்; வைகாசி மாதம், 7௳, சுக்கிர வாரம், கிருஷ்ண பக்ஷ சதுர்த் தசி, பரணி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பரிபூரண த்தைசயை யடைந்தனர்.

---

17. நாக லிங்க சுவாமிகள் சரிதம்.

எண்டரும் பெரியோர் தொழுதெழ வருளும்
இபமுகத் திறைவனை விடத்தை

உண்டவர்க் கருள்வே லனை அருள் நிலத்தை
யுண்டவர் சுந்தரே சனைமண்
விண்டவர் புகழ்மீ நாக்ஷியை மேகம்
வீரைந்திவர் கண்டனூர் வாழும்,
திண்டரும் மநமஆர் நாகப்ப ஞாந
தேசிகன் தனைப்பணிந் திடுவாம்.

கடல்புடை சூழ்ந்த பூலோகத்திலே, சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்த பாண்டி வள நாட்டிலே, கண்டனூரிலே, தந வைசிய குலத்திலே, சூரைக் குடிக் கோத்திரத்திலே, பெரிய கருப்பன் செட்டியாரும், அவர் மனைவி ஸ்வர்ணவல்லி (பொற்கொடியாள்) அம்மையாரும் இருந்தனர். அவர்கள் புதல்வர் நாகலிங்க சுவாமிகள்.

நன்மையாங் கலியுக நாலாயி ரத்தித்தொ
ழாயிரத் தொண்ணூ றைந்தி
னல்விசய வத்சரத் துயர்மேட மாதத்தி
னற்றேதி பத்தொன் பதி
னனிமேவு பாநுவா ரத்தினுயர் பௌரணை
நாட்சோதி கடக ராசி
நற்கடிகை பதின்மூன்றி னுத்தரா யணமதி
னன்கான பாண்டி நாட்டில்,
திண்மைதவிர் கண்டனூர் தன்னிற்சி வாலயந்
திருமட முதலா னதுந்
தெளிவுடனுண் டாவதற் காகவுயர் வான
தேசிகன் குலத்து தித்துத்
தேவரும் புகழ்கோவி லூர்நெல்லை யருள்பெற்ற
சீர்முத்தி ராம லிங்க

தேசிக னருளினைத் தமையனு மெய்த்துறவு
சாமிபெற் றபின் பெற்றாமே,
தொன்மையாங் கர்னுபு ரிச்சூரை நகர்தனிற்
சூள்திருப் பணிகள் செய்துஞ்
சுயமதாய்ச் சாத்திரம நேகமுண் டாக்கியுந்
துகளற்ற ஞான மதனிற்
றாயநற் சநகனும் பொறுமையிற் றருமனுஞ்
சொல்லரிச் சந்தி ரனுமெய்த்
தொண்டுசெ யப்பனு முவமிக்கொ ணாதாய்த்
தோன்றியுஞ் சாந்தி யாதி,
சின்மயம தாங்குணச் செல்வரிவ ரேயெனச்
செகமெலாம் பரவ நின்றுஞ்,
சிரவணம நாதி சீடருக் கொழியாது
செப்பியுங் கடைய னேனைத்
திருவடிக் கடிமையாய்ச் செய்நாக லிங்ககுரு
தேசிக னை வெந்தை
சீவன்முத் திப்பதந் தன்னினின் றானந்த
சிற்சொருப மாகி னனே.

---

18. *கண் ணப்ப சுவாமிகள் சரிதம்.*

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரம சிவன் அறுபத்து நான்கு திரு விளையாடல் இயற்றிய பாண்டிவள நாட்டிலே, நாட்டரசன் கோட்டை என்னும் ஊரிலே தந வைசிய குலத்திலே கண் ணப்ப சுவாமிகள் அவதரித்தனர்.

கண்ட னூர் மூத்தி ராமய்யா இயற்றியது.

சீர்கொண்ட பராபவவ ருடந்து லாமதி தேதியிரு பத்தைந்தினிற், றிகழ்மந்த வாரமோ டபரபக் கத்தினிற்

றிகிநவமி மகாநாளிலே, பார்கொண்ட கழரியம் பதிச்சிதம் பரமூர்த்தி பாலருட் பெற்று மிக்க—பாசவை ராக்கியத் துடனடியர் தம்மொடு பயில்சிரவ ணம்புரிந்து, தேர் கொண்ட மதுரைமா நகர்வந்து குட்டையை யாமடஞ் சீர்திருத்தஞ், செய்தங்கு வருகின்ற வடியர்கட் கருள் செயச் செல்லப்ப சுவாமி யையும்வைத், தேர்கொண்ட கண்ணப்பச் சாமிகள் சரீரம்விட் டின்பமலை யெய்த வேண்டி யேகமே வாத்துவித மானபர சொருபத்தி லெய் தினா ரறிகமாதோ.

19. அண்ணாமலை ஞான தேசிகர் சரிதம்.

கடல் புடை சூழ்ந்த பூ லோகத்திலே பரம சிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் இயற்றிய பாண்டிவள நாட்டிலே, கழரி வாசல் என்னும் நகரத்திலே, தந வைசிய குலத்திலே, உதித்து, கோவிலூர் மடாலயத்தில், ஞானாசா ரிய ராக எழுந்தருளியிருந்து, அநேகஞ் சிஷ்யர்கட்கு, அஞ் ஞான விருளைப் போக்கி, பிரஹ்ம ஞானோபதேசஞ் செய் தும், பிரஹ்ம வித்யா பிரசாரண சபை யென ஒரு சபையினை ஸ்தாபித்து, ஸ்ரீ சுப்பைய ஞான தேசிகர், ஸ்ரீ காசிகாநந்த ஞானாச்சாரிய சுவாமிகள் முதலிய வித்துவான்களைக் கொண்டு, காரைமா நகரில், காள யுக்தி வருஷம், மாசி மாதம், 1உ முதல் ஐந்து தினங்களில் பரசமயங்களை வென்று ஜயக் கொடி நாட்டும்படி செய்தும், இன்னும் பல அற்புதங்களைச் செய்தும், திருக் களரில், குரு மூர்த்தியின் அதிஷ்டானத்திற்கு ஆலய மியற்றுவித்தும், மடம், சாதுக் கள் வசிக்க இயற்றுவித்தும், அதற்கு வேண்டிய வளவு பூ ஸ்திதிகளை வேண்டிய அளவு சம்பாதித்தும்,

பாரிஜாத வனேசுவரர் கோவில் பூஜைக்காக மருத வாமெனா ஓர் கிராமம் வாங்கி வைத்தும், பிரஹ்மாநந்தாநுபவத்தில் ஆழ்ந்திருந்து, கலியப்தம் 5020 சாலிவாகந சகாப்தம் 1841 சித்தார்த்தி வருஷம், வைகாசி மாதம், 8உ, சௌமிய வாரம், திருவோண நக்ஷத்திரம், அமர பக்ஷ சஷ்டி திதி, சிம்ம லக்நம் கூடிய சுபதிநத்தில், கோவிலூரில் பரிபூரண மாங்ய விதேக கைவல்யம் அடைந்தனர். எல்லையின்றிய சாதுக்களும், பெரியோர்களும் வந்திருந்து, எல்லாக் கிரியைகளையும் செவ்வனே நடத்தினார்கள். அக்காலத்தில் கண்டனூர், முத்திராமய்யா என்பவர் "இயல்பான கலியுகம தையாயி ரத்தொடிரு பத்தினுக் குற்ற தான-வேற்றமுள சித்தார்த்தி வருடம்வை காசிமதி யெட்டினிற் சௌமிய வாரம், யோமர பக்ஷ முறு திதிசஷ்டி, திருவோண மெழில்சிம்ம லக்கி நத்தே, யெங்கணும் புகழ் கோவி லூர்ச்நல்லை நாயகி யிணையடிக் கன்ப ரான, நயமேவு றும்முத்திராமலிங் கையனருள் பெற்றிடுங்க ருணாநிதி, நாமமா குஞ்சிதம் பரகுரு விரண்டாக நற்பட்ட மேவ மேலே, ராமசா மிகள்பட்ட மூன்றுக வீரப்ப ஞாந குரு நான்க தாக, நாடெலாம் புகழ்பணி யியற்றித்திருக்களரில் ஞாநசோ தியில டங்க. அயலிலா வண்ணமலைத்தேசி கன்பெற்ற வறிவினு லுற்ற பட்ட, மைந்தினிற் குருநாத னுக்குரிய பணிதன்னை யழகாக, வோநடத்தி, யாக்கமுள பிரமவித் யாப்ரசா ரணசபையை யன்புடன் றுனமைத்து, மத்துவித நிலைமைக்கு மேனிலைமை யில்லையென் றினிதுறுங் காரை நகரிற், சுயமான வேதாந்த வெற்றிநற் கொடியதுந் துலங்கவே கட்டி யெங்குஞ், சொலித்திடம டத்தினுக் காகவேண் டியபொருள் துரிதமாய்ச் சேகரித்தும், தூயதாங் கடவுளுக் குரியபணி யானவுஞ் சுகமுட

னடத்திமேலாஞ், சுத்தசத் துவவடிவ மாயகண் டானந்த சொரூபமா யிலகி னுனே.'' என்னும் கவியை இயற்றினர்.

---

20 சென்னை, சச்சிதாநந்த சுவாமிகள் சரிதம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, தொண்டை நாட்டிலே, ஈசூர் என்னும் நகரத்திலே, வேட் கோவர் மரபிலே, சுப்பராய பிள்ளை யென்பவரும், அவர் மனைவி முரியம்பாள் என்பவரும் இருந்தனர். அவர்கள் இல்லற வாழ்க்கையைத் தரும நெறி வழாது நடாத்தி வரு நாளில் கலியுகம் 4917க்குச் சரியான யுவ வருடம், மாதம கிழமை திதியில் ஒரு குழந்தை பிறந்தது, அக் குழந்தைக்குச் சச்சிதாநந்தன் என பெயரிட்டு அன் போடும் வளர்த்து வந்தனர், அக் கால் அக் குழந்தைக்கு மூன்று மாதம் கழிந்தவுடன், மாதா பிதாக்கள் சென்னைக் கடுத்த குயப் பேட்டை யென வழங்கும் ஷண் முக ஞாந புரத்திற்கு அக் குழந்தையைக் கொண்டு வந்தனர். அங்கு கொண்டு வந்து, பாலப் பருவம் வந்ததும் உபாத்தியாயரிடம் வித்தியாப்யாசஞ் செய்வித்து வந்தனர். அப் பொழுது அக் குழந்தைக்குத் ''தோப்பாச்சாமி என்னும் பெரியாரது கிருபாவீக்ஷணயங் தங்கப் பெற்று, இளமை பருவத்திலேயே பொறுமை, அடக்கம், அன்பு, வாய்மை, பயனில் பாராட்டாமை முதலிய நற் குணங்கள் யாவும் கண்டோர் ஆநந்திக்கு மாறு விருத்தி யடைந்து வந்தன அப் பொழுது ஷெ ஷண் முக ஞாந புரத்தில், வித்வத் சிகாமணியாயிருந்த விசாக பெருமாளையரது சகோதரர் சரவணப் பெருமாளையரவர்களிடத்தில், கல்வி கற்று இலக்கிய இலக்கணங்களில் மிகத் தேர்ச்சி யடைந்த சச்சிதாநந்தர் தமது

குல வொழுக்கத்தின்படி சிவ லிங்க தாரணஞ் செய்து கொண்டு, தாம் உபாச நாமூர்த்த மாக கொண்ட சுப்பிர மணியக் கடவுளை முக் காலமும் முறை வழா து உபாசித்து வந்தனர்.

இவ் வாறு,ஒழுகிவரு நாளில்,ஸ்ரீ மத் ஜகத் குரு சங்கர பூஜ்ய பகவத்பாதாசார்ய சுவாமிகள் மாணுக்கர் பரம் பரையில் சோழவள நாட்டில், காவேரி யாற்றின் தீரத்தில், திருத் துருத்தி என்னும் ஸ்தலத்தில், ஏற்படுத்தப்பட்டிருக் கும் இந்திரபீட மடத்தில் எழுந்தருளியிருந்த பிராஹ்மண குல திலக பரமஹம்ச சந்நியாசியாக ஸ்ரீ கரபாத்திர சுவாமி கள் பரம்பரையில் வந்த தத்தாத்திரய சுவாமிகளின் அநுக் கிரகம் பெற்ற செங்கமலச் சுவாமிகள் மரபினராய் நாகைக் காரோணத்தில் எழுந்தருளி யிருந்த, ஸ்ரீ அருணுசல சுவாமி கள் மாணுக்கர் பிறைசை ஸ்ரீ அருணுசல சுவாமிகள் ஷெஷண் முக ஞாந புரத்திற்றத் தற் செயலாய் எழுந்தருளிவர, அப் பொழுது,சச்சிதாநந்தர் தமது உபாத்தியாயரவர்களின் ஆஞ்ஞையின்மீது அவர்களைப் போய்ச் சரணுகதியாக வடைந்து, சாதந சதுஷ்டயம் கை வரப் பெற்று, ஆசாரி யருக்கு, ஆப்தாதி சதுர் விதப் பணிவிடைகளுஞ் செய்து, குருவின் கிருபா வீக்ஷண்யம் அடைந்து, சிரவண மநந நிதித் தியாசநங்களைச் செய்து வந்தனர்.

இவ் வாறு, அநேக காலம் அப்யாசஞ் செய்துகொண்டு வந்து, பின் பாஹ்ய திருஷ்டியின்றி யந்தர் முக திருஷ்டி யொடு கூடி ஆத்ம சாக்ஷாத் காரத்தினை யடைந்தார்கள். அக் கால்,அவர்களைப் பார்ப்பவர் யாவரும் "பிரஹ்மம் போகின் றது, பிரஹ்மம் போகின்றது" என்று கூறுவர். இவ் வாறு

ஆத்ம சாக்ஷாத்காரத்தினை, யடைந்து அந்தர் முக திருஷ்டியோடு இருக்கும் நாளில், அநேகம் மாணுக்கர்கட்கு ஞானோபதேசஞ் செய்தும், துவைத சைவ சித்தாந்த முதலிய மதங்களை கண்டித்து உபந்யாசங்கள் செய்தும், திருக்குத் திருசிய விவேகம், பிரத்தியக்ஷாநுபூதி விளக்கம், உத்தம வாதம், சிவகாருண்ய விளக்கம், சுவாநுபூதி விளக்கம், யதார்த்தவாதம், வேதாந்த இலக்கணம், சர்வ மத சித்தாந்த விளக்க வினு விடை, சுவாநுபூதி விநோத நான்மணி மாலை, கைவல்ய நவநீத விருத்தி யுரை, வேதாந்த சூடாமணி, விருத்தி யுரை, பிரபு லிங்க லீலை உரை, உபநிஷத விருத்தி யுரை பகவற் கீதை விருத்தி யுரை, சொருபசார, விருத்தி யுரை, முதலிய நூல்களை எழுதி மந்த முமுக்ஷுக்கட்கு உபயோகித்து வந்தார்கள். வேதாந்த சாஸ்திர ஞான மில்லாதாரிடத்துப் பேசவும், அருவருப் புற்றிருந்தார்கள். அவர்கட்கு த்வைதம் சத்யம் என்று கூறுவோரது வார்த்தை கர்ண கடூர மாயிருந்தது. ஞானாநுபூதிச் செல்வரைக் காணின் அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு காலங் கழிவதை யுணராது ஆத்ம விசாரஞ் செய்து கொண்டிருப்பார்கள். இவ் வாறு, முப் பது வருஷம் வரை அத்வைத விஷயத்தினைப் பற்றி உபந்யாசஞ் செய்தும், மாணுக்கர் பலருக்குச் சந்தேக விபரீதங்களைக் களைந்தும், வாழ்ந்து கொண்டிருந்து, பார்த்திப வருஷம், கார்த்திகை மாதம், ஆதி வாரம் ஒன்றில், வழக்கம் போல் அத்வைத உபந்யாசஞ் செய்து, உபந்யாச முடிந்தவுடன், இனித் தேகம் நில்லா தென உணர்ந்து, மாணுக்கர்கட்கு தை மாதம், தைப் பூசத்திற்குள் தெரிந்து கொள்ள வேண்டுவன யாவும் தெரிந்து கொள்ளுங்கள் என ஆஞ்ஞாபித்தனர். அவ்வாறே மாணுக்கர்களும் குறித்த காலத்திற்குள் யாவுந்

தெரிந்து கொண்டனர். பின் கலி 4985க்கு, பார்த்திப வருஷம், தை மாதம், 10௳ குரு வாரம் ஆயில்ய நக்ஷத்திரம் கூடிய சுபதிநத்தில் விதேக கைவல்யம் அடைந்தனர்.

நூற் பெயர்

1. திருக்குத் திருசிய விவேக மூலமும் உரையும்
2. பிரத்தியக்ஷா நுபூதி விளக்கம்
3. உத்தம வாதம்
4. ஜீவ காருண்ய விளக்கம்
5. சுவா நுபூதி விளக்கம்
6. யதார்த்த வாதம்
7. வேதாந்த இலக்கணம்
8. சர்வ மத விளக்க வினு விடை
9. சுவா நுபூதி விநோத நான் மணி மாலை
10. கைவல்ய நவ நீத விருத்தி யுரை
11. வேதாந்த சூடாமணி விருத்தி யுரை
12. பிரபு லிங்க லீலை யுரை
13. உபநிஷத் விருத்தி யுரை
14. பகவற் கீதை விருத்தி யுரை
15. சொருபசார விருத்தி யுரை. ஆக 15.

சச்சிதாநந்த சுவாமிகள் சரிதம் முற்றுப் பெற்றது.

---

21. திரு வண்ணுமலை, மஹாதேவ சுவாமிகள் சரிதம்,

சீர்மணக்கு மருணை கிரி தனின்மேவு
மீசாந தேசி கன்றன்

பேர்மணக்கு மரபில்வரு மாதேவ
முநிவனெனு மியற்கைப் பேரோன்
நேர்மணக்கு விளம்பிவரு டமேட
மாதிரைபஞ் சமியா நேர்ந்து
நார்மணக்கு மன்பர்பலர் போற்றநன்
முத்திதசை நண்ணி னனே.

---

22. சாக்கைக் கோட்டை, முத்துக் கருப்ப சுவாமிகள் சரிதம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரம சிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் இயற்றிய பாண்டி நாட்டிலே, மலம் பட்டி என்னும் நகரத்திலே, தந வைசிய குலத்திலே, கோத்திரத்திலே பழநியப்ப செட்டியாரும், அவர் மனைவி வள்ளி யம்மை என்பாரும் இருந்தனர். அவர்கள் புதல்வர் முத்துக் கருப்ப சுவாமி என்பவர் ஆவர்.

பார்மேவு கலிவருட மையாயி
ரத்தினொடு பகிருப தாகுமதனிற்
பண்பான சாலிவா கநசக
நவகுறைப் பதினெட்டி னரைநூறதா
யார்மேவு றுங்காள யுத்தியாண்
டதனிலே யாவணித் திங்கடெய்தி
யமைவான பத்தொன்ப தமரபக்ஷசஞ் துர்த்
தசியோடு புதனல்வராம்,
தேர்மேவு மகமதிற் கோவிலூ
ரதனிலே சிறந்திடுமி ராமசாமித்

தேசிகன் பதமதைப் பூசையா
கக்கொண்டு திகழுநற் சாக்கையுற்ற,
ஏர்மேவு முத்துக்க றப்பசுவா
மிகள்மிக்க வேற்றமுள மடமியற்றி
யெழிற்சீவன் முத்திசின் றுயர்முத்தி
யெதிரு ரேத்திடவ ருகமாதோ.

---

23. யோகாநந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் சரிதம்.

சீர்மேவு சித்தார்த்தி யாண்டாடி
திங்கட் டேதியிருபத் தொன்றுஞ்
செவ்வாயு டன்சுக்ல பட்சமொடு
நவமிதிதி சேர நுஷ சுபதிநத்தில்,
சார்மேவு காஞ்சிபுர முபநிஷத்
ப்ரமேந்த்ர சபைமடத் தெழுந்துவந்த
சச்சிதா நந்தேந்த்ர சரஸ்வதி
சுவாமிகள் சரணா விந்தமுற்று,
ஆர்மேவு மத்துவித சாஸ்திரத்
தேர்ச்சியி லாதிசே டனுமுவப்ப
வரியதர்க் கத்தினுக் கியார்வரினு
மவர்வாயை யடங்கிடப் பேசுமதுலன்,
ஏர்மேவும் யோகாநந் தேந்திர
சரஸ்வதி சுவாமியென வேவிளங்கின்,
யெங்கணும் புகழ்கோட்டை யூரினிற்
சமாதிநிலை யெய்திரு ரேத்தமாதே.

25. பொன்னம்பல ஞானதேசிகர் சரிதம்.

சொல்லமு தருளும் ஞானமுக் குறுணித்
தோன்றலை ஆன்றவர் வழுத்தும்,
எல்லையில் கருணைக் குகன்றனைச் சகப்ச
எழில்சிவ காமியம் மையினை,
நல்லவர் புகழும் நடநநா யகனை
நான்மறைப் பொருளெலாம் விரித்துத்,
தில்லையில் அமர்பொன் னம்பல ஞான
தேசிகன் தனைத்திநம் பணிவாம்.

ஸ்ரீ சிதம்பர ஞான தேசிகர் பரிபூரணம் அடைந்த பின்னர், ஸ்வாமிகளின் அடிச் சுவடுள்ள திரு வடியைப் பெற்றுக்கொண்டு சிதம்பம் சென்று, நடேசராலயத்திற்குக் கன்னி மூலையில், ஒரு மடாலயம் ஏற்படுத்தி, அதிற் றமது குரு மூர்த்தியின் திவ்விய திரு வடிகளைத் தாபித்தற் பொருட்டு, கல்லினல் ஒரு மண்டபம் செய்வித்து, அதில் அற்புத மான கேடகம் ஒன்று இயற்றி, அதில் குரு மூர்த்தியின் திவ்விய திரு வடியை எழுந்தருளப் பண்ணி, நித்திய நைமித்திய பூஜைகளையும், குரு பூஜை,மஹேசுவர பூஜை முதலியவற்றையும், பே ரன்போடு செய்வித்துத் தம தாசாரிய ஸ்தாநத்தில் நடப்பது போன்று, சாதந சம்பத்தியுள்ள முமுக்ஷுகட்குப் பிரதிதிநமும் ஞானாநுக்கிரகம் செய்து கொண்டிருந்தனர். அன்றியும், சிற்றம்பலத்தின் கண் ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளாநின்ற சிற் சபேசனுக்கு விசேட காலங்க டோறும் அன்பு மிகுந்து அளவில்லாத அபிஷேக நைவேத்தியங்களையும், திநந் தோறும்

அர்ச்சனை நைவேத்தியங்களையும், பாவாடை நைவேத்தியங்களையும், செய்வித்துப், பிரதிதிநமும், சாதுக்களோடு தரிசித்து ஆநந்தத் தமிழ்ந்தி வியாக்ரபாத ரிஷீசுவரர் ஆத்மார்த்த பூஜை செய்துவந்த யௌவநேசுவரர் ஆலயத்தினையும், சந்நிதாநத் துள்ள யௌவந தீர்த்தத்தினையும், பெரி க. சிங்கயச் செட்டியார் பேருதவியால், கற்பணியாகச் செய்வித்தும், இறும் பூதூர். தத்துவராய சுவாமிகளின் அதிஷ்டாநத்தையும், கருங் கற் பணி யாகக் கோவி லூரில் படித்த சாதுக்கள் பேருதவியாற் கற்பித்தும், அவ் வூரில் மடம் ஒன்று இயற்றுவித்தும், மடாலயங்களில் சாதுக்களுக்குப் போசநத்திற்கு வேண்டிய பூஸ்திதிகளைச் சம்பாதித்தும், செவ்வை யாகப் பரிபாலநஞ் செய்து, அவற்றிற் கிஞ்சின் மாத்திரமும் பற் றின்றி நித்திய திருப்தியுடையவ ராகவே இருந்தனர்.

---

26 கந்தப்ப ஞாந தேசிகர் சரிதம்.

தெருள்நிறை முநிவர் பணிதரும் கரியின்
றிரைகொளும் கருணைநா யகனைப்,
பொருள்நனி அருளும் முருகவேள் இறையைப்
போதயன் அரியொடு நேடும்,
அருணநல் அசலம் எனும்என் றந்தையினை
அணிஉண் ணு முலையினம் மையினை,
அருணையில் உறைகந் தப்பதே சிகனை
அநுதிநம் வணங்கிவாழ்த் திடுவாம்.

பூலோகத்திலே தொண்டை நாட்டிலே, க்ஷீர நதி தீரத்திலே, இராய வேலூரிலே, வேளாளர் குலத்திலே, திரு

நீல கண்ட தேசிகரும், அவரது பத்தினி உமைய பார்வதி யாரும், குரு லிங்க சங்கமங்களில் பே ரன் புடையவ ராய் இல்லறத்திலே. யினிது வாழ்ந் திருந்தனர். அவர் தமக் கோர் புத்திர னில்லாமையால் நெடு நா ளாய் வருந்தி திரு வருணையி லுள்ள ஸ்ரீ முருகப் பெருமானை யுபாசித்து அவ ரருளால், ஒரு புத்திரனைப் பெற்று. முருக வேளி னதருளா லவதரித்த வக் குழந்தைக்குக் கந்தப்ப னென் னுந் திரு நாம மிட்டனர். கந்தப்பர், குழந்தைப் பருவத்திலே பல திரு விளையாடல்களை யியற்றி. ஒரு காலத்தில், மூன்று நாள் காறும் யாரு மறியா வண்ணம் மறைந்திருந்தனர். பள்ளி யில் உபாத்தியாயர் பாடங்களைக் கற்பிக்கு முன்னமே அப் பாடங்களை யொப்புவித்து விட்டு, ஆண்டும், நிட்டை கூடி மௌனமா யிருப்பர். அது கண்டு உபாத்தியாயரும், அவ் வூராரும்,இவர் தெய்வீகத் தன்மை யுடையவ ரென்று நினைத்து வந்தனர். இவரது அளவு கடந்த ஆச்சரியச் செயல்கள் பலவுங் கண்டு, இவரது பிதா இவருக்குத் திரு மணஞ் செய்யாமலே ஏழாவது வயதில் ஆசாரிய வபிஷே கமஞ் செய்து, தமது வேளாளர் மரபினற்குச் சிவ தீக்ஷை செய்விக்குங் குருத் தன்மையை விளக்குந் தேசிகர் என்ற பட்ட மிட்டுச் சிவ பூஜையு மியற்றுவித்தனர். அன்று முதல் கந்தப்ப தேசிகர் பதி னாறுவது வயது வரையிலும்,நியமத் துடன், சிவ பூஜையிற் றற்பர ராய் எப் போதுந் தியானத் தோடுங் கூடியிருப்பர். பிதா வான திரு நீல கண்ட தேசி கர் புத்திர னுக்குப் பருவ கால்ம் வந்தமையால்,அவருக்குத் திரு மணஞ் செய்யவேண்டி உறவினர் வீட்டிற்குக் கன்னி கையைத் தேடிச் சென்றனர். அதனை யுணர்ந்த கந்தப்ப தேசிகர் தமது மாதாவினிடம் "நான் சம்சாரியாக மாட்

டேன் நமது பரம்பரையை யடிமை கொண்ட சிவ பெருமான் வீற்றிருக்குந் திருப் பதிகளைத் தெரிசித்துப் பேரானந்த மடைய என் மந மெழுகின்ற" தென்று கூறி, எவ்வாறோ மாதாவின் மந மகிழ்வால், விடை பெற்றுக் கொண்டு, பூமிப் பிரதக்ஷண மாய்ப் புறப்பட்டுச் சென்று ஆங்காங் குள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் செபித்து மூர்த்திகளைத் தியாநித்துத் துதித்துத் தரிசித்துக்கொண்டு செல்லுங் காலத்திலே, சிதம்பர க்ஷேத்திரத்தை யடைந்து, நடேசப் பெருமானைத் தரிசித்து, ஸ்ரீ சபாநாயகருக்கு வோர்ஜித்ய அகண்ட தீபக் கட்டளையை யேற்படுத்தி, ஆண்டுள்ள தீக்ஷதர்களால் செப்புப் பட்டயம் ஒன்று அளிக்கப் பட்டு, அந்த க்ஷேத்திரத்தி லுள்ள ஆயி குளத்தின் வட கரையில், அகோ ராத்திரஞ் சமாதி புரிந் திருக்குஞ் சித்த புருஷ ரான, ஸ்ரீ மௌந சுவாமிகளைத் தெரிசித்து, இனி நாமுந் துறவியாய் உபதேசம் பெற வேண்டு மென்னு மெண்ணத்தால், சில கால மந்த க்ஷேத்திரத்திலே பிக்ஷையால் சரீர தாரணஞ் செய்து கொண்டு, காலை மாலை யென்னு மிரண்டு காலங்களிலும, ஸ்ரீ மௌந சுவாமிகளைத் தெரிசித்துக் கொண்டு வந்தனர். ஒரு நாள் அதிக தீவிர மான விரத்தியால் தா மணிந்திருந்த வஸ்திர மனைத்து நீத்து, கௌபீந தாரி யாய் ஸ்ரீ மௌந சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றனர். அப்போது மார்கழி மாத மானதால் பனியும், மழையும், குளிரு மதிகமா யிருந்து மவற்றிற் கஞ்சாமற் சரீர நடுக்க மின்றி, யன்று பெய்த மழையில் நனைந்து கொண்டு வந்து, தேசிகர் தமதிடத்து வணக்க முற்றிருப் பதைக் கண் ணுற்று அன்றுத் தம்மீது யாரோ போர்த்தி யிருந்த கம்பளத்தை யெடுத்துத் தேசிகருக்குப் போர்த்தி யுபதேசித்து ஆண்டே தியாநத்தோ டிருக்கச் செய்தனர்.

அத் தியாந விசேஷத்தால், சில சித்தி விளங்கியது. அதனால், தமது குரு மூர்த்தி யான ஸ்ரீ மௌந சுவாமிகளின் மேல் "நித்ய பரிபூரணா" வென் றாரம்பித்துப் பஞ்ச ரத்நமென்ற வோ ரற்புத மான தோத்திரப் பா மாலையை யியற்றிச் சித்தர்களுக் குரிய யோக தண்டு யோகப் பட்டை முதலியவற்றைக் கையிற் கொண்டு, திகம்பர ராய்ச் சடா மகுடந் தரித்து, ஸ்ரீ மௌந சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்று திரு வாரூரை யடைந்து, ஸ்ரீ தியாக ராஜப் பெருமானைத் தெரிசித்து, ஆண்டு மடப் புரத்தில் நிலவுகின்ற மஹா சித்த மூர்த்தி யாகிய ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திச் சுவாமிகளுடன் சில காலம் கூடியிருந்து, திரு நாகைக் காரோணம் போகையில், சிக்கல் என்ற க்ஷேத்திரத்தை யடுத்த பொருள் வைத்த சேரியில், பிரஹ்மாநுபவ நிஷ்ட ராய்ப் பல சீடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து கொண்டு வீற்றிருக்கும், ஸ்ரீ உகந்த லிங்க ஞானதேசிகரைத் தெரிசித்து, ஆண்டுச் சில காலம் வாசஞ் செய்து, சம்பாஷித்துக் கொண் டிருந்து, பின்பு நிருவிகற்ப சமாதி கூட வேண்டு மென்று, நிர் ஜநப் பிரதேசம் போக விச்சித்து, அவ் விடம் விட்டுப் புறப்பட்டு வட திசையை நோக்கி வந்து திரு வண்ணாமலைக் கடுத்த வேட்ட வலத்திற்குச் சமீப மான பாக்கத்து மலையிலேயுள்ள வோர் குகையிலே, யாரும் அறியா வண்ணம், பல வருஷங்க ளாக நிருவிகற்ப சமாதி கூடியிருந்தனர். அப் போது அவ் வூரிலே, தொழு வேளாள ஜாதியிலே யிருந்த, முத்துச் சாமி உடையா ரென்பவர் தாம் மேய்க்கு மாடுகளிலே பால் கறந்து நா டோறும் தேசிகருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தார். இப் புண்ணிய பலனால் அவர் வீடு கட்டு நிமித்தம் அடிப்

படையிட நிலத்தைத் தோண்டும் போது, அவருக்கு நிதிக்குவிய லொன்று கிடைத்தது. அதனு லவர் சிறிது நாளிலேயே அதிக தந முடையவ ராய் விளங்குவதைக் கண்ட அவ் வூரார் இவருக்கு நிதி கிடைத்தமையை யுணராதவர்க ளாய், இப் பெரியா ரன்றோ தமக்குப் பா லுபகரித்த வுரிமையால், இரச வேதநத்தால் நாணய மளித்திருக்கின்ருர் என்று, மருண்ட மநத்த ராய்த் தேசிகரிடம் வந்து பல வித மாய்த் துதித்து சுவாமிகளே! முத்துச் சாமி உடையாருக்கு அநுக்கிரகம் செய்தது போல், எங்களுக்கு மநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று சொல்லி நிட்டைக்கு இடையூ ருய்க் கூட்ட மிட்டனர். அது கண்டு சுவாமிகள் அவ் விடம் விட்டுப் புறப்பட்டு யாரும் அறியா வண்ணம் வந்து, ஸ்ரீ உண்ணுமுலை சமேத அண்ணுமலையார் வீற்றிருக்கும் சோண சைலத்தின் தென் மேற்கி லுள்ள கோரக்க நாதரது குளக் கரையின் மேல் நிஷ்டை கூடியிருந்தனர். அவ் வூரிலே யிருந்த அருணுசலஞ் செட்டியா ரென்னு மொருவர், நெடு நா ளாய் தனக் கோர் புத்திர னில்லாமையால் மநம் வருந்தி யிருக்கும் போது, பெரியா ரருளால் புத்திரப் பே றுண்டா மெனப் பலர் சொல்லக் கேட்டுப், பெரியாரைத் தேடிச் சென்று, கோரக்க நாதர் குளக் கரையில் நிட்டை கூடியிருக்குஞ் சுவாமிகளைக் கண்டு வணங்கிப் புத்திரப் பேற்றை விரும்பியவ ராய் தொண்டு புரிந்து அன்பு செலுத்தி வந்தனர். ஆண்டு கோபாலர் பலர் பால் முதலிய வுணப் பொருள்களை யளித்து வந்தனர். அதைச் சுவாமிகள் மந மகிழ்ந் துண்டிருப்பார்கள். இங்ஙன மிருக்கும்போது ஒரு நாள் அவ் வருண கிரியில் விழிப் புலனிற்கு

வெளிப்படாது வாசம் புரியுஞ் சித்தர்கள் வந்து, ஸ்ரீ சுவாமிகளை யழைத்துக் கொண்டு போய் மனித சஞ்சார மின்றிய மலைக் குகையில் வைத்திருந்தனர். அங்கு அதிக மாய்ப் பலித்துக் கிடந்த பழ முதலியவற்றைப் பார்த்து, இக் கனியில், ஒன்றை அருணாசலஞ் செட்டியாருக் கீயின், நற் புத்திரப் பே றுண்டா மென்று ஸ்ரீ சுவாமிகள் திருவுளத்தே சங்கற்பித்தனர். அதை யுணர்ந்த சித்தர்கள், "அவ்வாறே வுலக வநுக்கிரஹ இச்சையை நிறைவேற்றுவாயாக" வென்று வேண்டிய பழங்களுடன் ஸ்ரீ சுவாமிகளை அக் குளக் கரையிலே கொண்டு வந்து விட்டுச் சென்றனர். ஸ்ரீ சுவாமிகள் தம தன்ப ராகிய வருணாசலஞ் செட்டியாருக்குப் பழத்தை யளிக்க, வது காரண மாக வேலாயுதஞ் செட்டியா ரென்னும் ஒரு நற் புத்திரனை யீன்றார். அவ் வேலாயுதஞ் செட்டியார் புத்திர ராகிய முருகப்பச் செட்டியார், தமது பிதாமக ரான வருணாசலஞ் செட்டியாருக்கு, ஸ்ரீ சுவாமிகள் அளித் தருளிய விபூதிப் பையினை, இன்றும் வைத்துப் பூசை புரிந்து தங்களுக்கு வரு மிடையூறுக ளனைத்தையும் அதனால் நீக்கிக் கொள்கின்றனர். இங்ஙனம், யாரு மறியாது ஸ்ரீ சுவாமிகள் வந்த நாண் முதல் பக்கத்துக் கிராம வாசி யான முத்துச் சாமி உடையார், தேசிகரைக் காணாமையால், மந மிக வருந்தி துயருற் றிருக்கும் போது கருணா மூர்த்தி யான ஸ்ரீ அருணாசலேசுவரர், அவரது சொப்பநத்தில், ஸ்ரீ சுவாமிகள் போல் விளங்கி, "அப்பா நீ வருந்த வேண்டாம். நாம் அருணாசலத்தின் ஈசாந்ய பாகத்தி லிருக்கின்றோம் அங்கு நீ வரக் கடவாய்" என்று திரு வாய் மலர்ந்து, ஸ்ரீ சுவாமிகள் இடம் வந்து, தமது மங்கள வடிவத்தைத் தரிசிப்பித்து, "அப்பா!

உன்னைக் காண ஓ ரன்பனை ஈசானிய திசைக்கு, வரும்படி யாய்ச் சொல்லி யிருக்கின்றோம், நீயு மங்கு போகக் கட வாய்'' என்று சொல்லி, அந்தர்த்தாந மாயினர். அக் கருணை மூர்த்தியின் கருணைத் திறத்தை, நினைத்து, நினைத்து, ஸ்ரீ அண்ணாமலையார் தோத்திரப் பாமாலை யென்னும் சில வருட் பாடல்களைப் பாடிக்கொண்டு, ஈசானிய திசைக்கு ஸ்ரீ சுவாமிகள் எழுந்தருளி வந்து, தொழு வேளாளர் குலத் திற்குப் பொது வான அண்ணாமலை யார் பூந் தோட்டத் திற்குச் சார்பான மாமரங்களும், செடிகளும், சூரைப் புதர் களும், நெருங்கின ஈசானிய தீர்த்தத்தின் தென் கரையி லுள்ள ஒரு பெரிய வால மரத்தின் கீழ் சிவ யோக சமாதி புரிந்திருந்தனர். பாக்கத்து வாசி யான முத்துச் சாமி உடையா ரென்னு மன்பர், பொதி மாட்டி லரிசி முதலிய வற்றை யேற்றிக் கொண்டு வந்து, ஸ்ரீ சுவாமிகளைத் தரி சித்து,வடங்காத வாநந்தக் காட்சியி லாழ்ந்தி அடியவர்க்கு வமுதளித்துச் சென்று, ஸ்ரீ சுவாமிகளை விட்டுப் பிரிய மந மில்லாதவரா யிடை யிடையே வந்து தெரிசித்துப் போவார். அக் காலத்தில்,ஸ்ரீ சுவாமிகள் அறு பது வயதை யும், நீண்டு பரந்த சடா பாரத்தையும், திக் காடையையு முடையவ ராய்,சதா சமாதி யோக நிஷ்டா பர ராய் விளங் கினர். அப் போது, ஸ்ரீ அண்ணாமலையார், பயங்கர மான வரிப் புலியாய் வந்து, ஸ்ரீ சுவாமிகள் நிஷ்டை கூடி யிருக்குங் காலத்தில், யா தொரு இடையூறும் வாரா வண் ணம் சமீபத்தில் காவ லாய்ப் படுத்துக் கொண் டிருப்பர். சுவாமிகள் நிஷ்டை கலைந்து சமீபத்திற் படுத்துக் கொண் டிருக்கும் வரிப் புலியைக் கண்ணுற்று, ஸ்ரீ அருணாசலேசு வரரே, இவ் வடிவந் தாங்கி நமக்குக் காவலா யிருக்கின்

றனை யென்று மிகவு மாந மகிழ் வுற்று, அப் புலியின் மீது தமது திருக் கரங்களால், "அண்ணுமலையே என் னரசே" யெனப் பல வாறு வழைத்துத் தடவிக் கொண்டிருப்பர். இதனை யுணர்ந்த மற்றைய காட்டுப் புலிகளும், தமது வினத்தின் வாஞ்சையால் ஸ்ரீ அண்ணுமலையா ராகிய வரிப் புலியைப் பின்பற்றிச் சுவாமிகளது சமீபத்தில் வந்து காவலாய்ப் படுத்துக் கொண்டிருக்கும், தம தன்பர் கள், தம்மைத் தெரிசிக்க வருங் காலத்திற், புலிகளைப் பார்த்து உங்களைக் கண்டு அன்பர்கள் பய மடைவார்க ளாதலின், சற்று விலகி யிருங்க ளென்று. திரு வாய் மலர்ந் தருளுவார்கள். அது கேட்டுப் புலிகள் விலகி நிற்பினும் நிற்கும், அல்லது, தமது மலைக் குகைக்களுக்குச் செல்லி னுஞ் செல்லும். அவ் வன்பர், தரிசித்துச் சென்றதூஉம் சுவாமிகள் சமாதி கூடி நிற்பார்கள். மீண்டும் வரிப் புலிகள் அவ் விடம் வந்து காவலா யிருக்கும். சில சமயங்களில், ஸ்ரீ சுவாமிகள் சமாதி கூடி நிற்கும் போது அன்பர்கள் வந்து சமீபத்திற் படுத்திருக்கும் வரிப் புலிகளைப் பார்த்து, அவை கள், விலகும்படிப் பயப்பட்டுக் கர கோஷஞ் செய்வார் கள்; அது சமயம் ஸ்ரீ சுவாமிகள் கண் விழித்துச் சற்று விலகி யிருக்கும்படி திரு வாய் மலர்ந்தருளுவார்கள். இங்ங னம் ஸ்ரீ சுவாமிகளின் திரு விளையாடல்கள் நிகழ்ந்து கொண் டிருக்கும் போது, கூட லூரைச் சார்ந்த தென்பேர் புதுப் பாளைய மென்னுங் கிராமத்தி லிருக்கும் ஒரு நாய்க் கர், தமக் குற்ற சூலை யென்னும் பெரும் பிணியாற் றுன் பஞ் சகிக் கொணுதவ ராய், வருத்த முற்று, ஸ்ரீ அருணுசல க்ஷேத்திரத்திற்கு வந்து, அக் காலத் துள்ள கொடி வழி மார்க்க மாய், கிரி பிரதக்ஷணஞ் செய்து வருகையில், ஸ்ரீ

தரிசித்து சுவாமிகளை இப் பெரியாராலே இப் பெரும் பிணி விலகு மென்று நம்பிக்கை யுடையவ ராய், ஸ்ரீ சுவாமிகளை வலம் வந்து நமஸ்கரித்து, சுவாமி இந் நோய் நீங்கும்படி யருள்புரிய வேண்டு மென்று பிரார்த்தித்தனர், அவர் மீ திரக்க முற்று அந் நோய் நீங்கும்படி திருக் கண் சாற்றி யருளவும்,வியாதி சூரியனைக் கண்ட பனி போல் விலகிற்று. அத் திரு விளையாடலைக் கண்டு ஆச்சரிய முற்று இப் பெரியார்க் கடிமையா யிருத்த லன்றோ நமக் குற்ற கடைமை, அதனால்,நமது ஜெந்மமுஞ் சாபல்யமா மென்று நிச்சயித்து, உடனே சந்நியாசத்தை வஹித்து, ஸ்ரீ சுவாமி கள் சந்நிதிக்கு அடிக் கடி வந்து தரிசித்துப் போவார். அதனால், அவருக்கு அநாயாச மாய்க் கல்விப் பே றுண்டா னது. அதனைக் கண்ட தமது வூரி லுள்ள சுற்றத்தவர்கள் அவண் வந்து, ஸ்ரீ சுவாமிகளிடம் உத்திரவு பெற்று அவரை யழைத்துக் கொண்டு போய், ஈசானிய சுவாமி யென்று அவருக்குத் திரு நாம மிட்டு, அவர்பாற் பலர் சிரவணஞ் செய்து வந்தனர். அச் சுவாமிகள் விதேக கைவல்லிய மடைந்த பின்னர், சமாதி யாலயமு மடமுங் கட்டி, ஸ்ரீ தேசிகர் மகிமை யோங்கும்படி ஈசானிய சுவாமி சமாதி யென்ற பெயரானேயே யின் றளவும் வழங்கி வரு கின்றனர். ஒரு நாள் ஒரு கரடி மிகுந்த பசி வருத்தத்தினால், ஸ்ரீ சுவாமிகளை மிகுந்த கோப முடைய தாய் அடித்துக் கொல்லும் பொருட்டுச் சமீபத்தில் வந்தது. அது கண்டு அங் கோர் மாமரத் தடியில் ஸ்தாபிக்கப் பெற்றிருந்த விநா யக சிலா விக்கிரக மானது, ஓடி யக் கரடி மேல் விழ, அக் கரடி வுயி ரிழந்தது, அதனா லவ் விநாயகருக்குக் கரடி விநாயக ரென்றும், மாமரத் தடி விநாயக ரென்றும், பெய ரிட்டு, இன் றளவும் வழங்குகின்றனர். இடை யிடையே

வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துப் போகும் வழக்க முடைய பாக்கத்து வாசியாகிய முத்துச் சாமி உடையார், ஒரு நாள் தமது மரபினர்க் கெல்லா நமது, "தோட்டத்தில் இப் பெரியார் வந்து தவம் புரிய நாம் எப் புண்ணியத்தைப் புரிந் தோமோ வறிகிலேம்" என்று சொல்லி, நமது நந்த வனத் திற்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கு மில் விடத்தினை யிப் பெரியாருக்கே தானஞ் செய்து விடுவது நல மென்று தீர்மானித்து, மூன்றி லொரு பாகம் வட புற மாகத் தானஞ் செய்தனர், சுவாமிகள் ஈசானிய திசையி லிருத்தலின், ஈசானிய ஞான தேசிக ரென வன்று முதல் வழங்கினர். பிணி யாளர் பலர் வரின், அவரது பிணிகள், சுவாமிகளது கிருபையால், மருந் தருந்துத லின்றியே நீங்கி வந்தன, ஸ்ரீ சுவாமிகளின் முக்ய சிடருண் முதன்மைய ரான நாக பட்டணம், இராம லிங்க சுவாமிகள், புதுச் சேரி, அருணாசல சுவாமிகள், பாக்கத்து வாசி, முத்துச்சாமி உடையார், அருணை வாசி, அருணாசலஞ் செட்டியார், என்னு மிவருள் அருணாசல சுவாமிகளின் சந்ததியார் ஒருவரு மில்லாமையா, லவர் தந மனைத்துங் கொள்வா ரின்றிப் பிரஞ்சு தேசத் தரசர்பா லிருந்தன. அப் போது அருணாசல சுவாமிகள், சுவாமிகளிடம் "யான் புதுவைக்குச் சென்று எனது குடும்பத்தவரின் திரவிய மனைத்தையும் பூர்வாசிரமந் தரித்து வாங்கி வருகின்றேன்" றனென்றனர். அதற்கு சுவாமிகள், "அப்பா நமக்குப் பணமும் வேண்டாம், கொண்ட வேடத்தையுங் களைதல் கூடாது, நீ மீறிப் போனால் மீளவு மாட்டா', யென்று திரு வாய் மலர்ந்தருளினார்கள். இங்ஙனஞ் சுவாமிகள் கருணையாற் கூறிய மொழிக ளனைத்தையுங் கடந்து, புதுவைக்குப் போய், பூர்வாச்சிரமந் தரித்துக் கொண்டு, எமக்குச் சேர வேண்டிய வெமது சந்ததியார்

சொத்தை யெமக் களித்தல் முறையா மென்று தக்க சாக்ஷி களுடன் அரசாங்கத்தவர்பாற் சொல்லிச் சொத்தை வாங்கி யேலம் போட்டுச் சுவர்ண மாக மாற்றிப் பொதி மாட்டி லேற்றிப், "போ போ மாடே" யென்று வதனை யடிக்க,யென்று மிகச் சாந்த மான வம் மாடுந் திடீ ரென்று திரும்பிக் குத்தி, அவரது குட ரொழுகச் செய்தது. அத னால், அவ ராண்டு விதேக கை வல்லிய மடைந்தனர். அப் போது, அவ் வரசாங்கத்தார் அவருடைய ஞாபகார்த்த மாய் சிலையினால் அவரையும் அவ் வெருதினையும் அப் பணச் செலவால் புதுவை முத்தியால் பேட்டைக் கடுத்த கரடி குப்பத்தின் மேற் புறத்திவ் செய்து வைத்திருக்கின்றார்கள், அது இன்றளவும் ஸ்ரீ சுவாமி களுடைய ஞாபகார்த்த மாய் விளங்கி வருகின்றது, அக் காலத்தில், அருணாசலத்தி லிருந்து விருத்தாசலம் வரையிலும் ஜில்லா கலெக்டர் அதி கார முடைய ஐடன் துரை யென்பவ ரொருவர். இச் சுவாமிகளது மஹிமைகளைக் கேள்வியுற்று, ஸ்ரீ சுவாமி களைத் தெரிசிக்க வருங் காலத்தில், சுவாமிகள் சமீபத்தி லிருந்த வரிப் புலியைப் பார்த்து, "அண்ணாமலை யாரே! ஓர் ஐரோப்பியன் வருகின்றான் அவ னுன்னைக் கண்டு பய மடைவான், ஆகையால், சற்று விலகி யிரு மென்று" கட்டளை யிட, வரிப் புலியும் விலகியது. துரையும் வந்து ஸ்ரீ சுவாமிகளைத் தெரிசித்து, நெடு நா ளாய்த் தனக் குற்ற காச வியாதியின் வலியைச் சொல்லி, அது விலகும்படி யருள் புரிய வேண்டு மென்று பிரார்த்தித்தனர். சுவாமிகள் புன்னகை புரிந்து கருணையா லதை விலகும்படி திரு வுளத் திற் சங்கற்பித்துக் காறித் துப்பினர், வியாதி யுடனே நீங்கி விட்டது. அதைக் கண்டு துரையும், மிகுந்த வாச்சரியத் தையும், அன்பையும், பயத்தையு முடையவராய், ஸ்ரீ சுவா

மிகளை நோக்கி, "சுவாமின் யான் இப் போது வேண்டிய பூமிகளைப் புதி தாகச் சேர்ந்திருக்கிறேன் அதில் தேவரீருக்கு எவ் வளவு வேண்டினும் தான சாசனஞ் செய்து வைக்கிறேன், அது நீடூழி தேவரீருக்குச் சாசுவத மாகு" மென்று சொன்னார். அதைக் கேட்டு ஸ்ரீ சுவாமிகள் புன்னகை புரிந்து, மழை வறண்ட காலத்திலும், உமது பூமி விளையுமோ வென்று பரிகசித்து, இதோ இரண்டு குழந்தைகளுடன் ஒரு பெருங் குடும்பி யுளன். அவனுக் கெவ்வளவு பூமி தானஞ் செய்தாலுந் தகும். பரதேசி யான நமக்குத் தகுதிய தாகா தென்று, ஸ்ரீ உண்ணாமுலை சமேத வண்ணாமலையாரைத் தமது திருக் கரத்தாற் காட்டித், திருவாய் மலர்ந்தருளினார்கள். ஐடன் துரை மிகுந்த பய பக்தியோடு விடை பெற்றுப் போய், அடிக் கடி வந்து தெரிசித்துக் கொண்டு போவார். தா னெந்தக் காரியத்தைச் செய்ய வாரம்பித்தாலும் ஸ்ரீ சுவாமிகளை தியானித்து "தாத்தாவே நீ யிக் காரியத்திற்கு முன் னிரு, நீ யே செய்" என்று சொல்லி தொடங்குவதை வழக்க மாக வுடையவரா யிருந்தார். ஸ்ரீ அண்ணாமலையார், ரதோத்ஸவத்திலும் முதல் தாம் வடம் பிடிக்கையில் "தாத்தாவே நீ பிடி முன் னிரு" வென்று கூறுவர். அதைக் கண்ட ஜநங்கள், இவரிடத்துள்ள ஸ்ரீ சுவாமிகளின் அன்பின் பெருக்கைக்கண்டு ஆச்சரிய மடைவார்கள், பின் போர் காலத்தில், பெண்ணை நதிக்குத் தெற்கி லிருக்கும் போது, இரதோத்ஸவ கால மிகச் சமீபித்தபடியால் இரதத்தை நடத்திவைக்கும் பொருட்டு அருணையினை நோக்கி வந்து கொண் டிருந்தனர். அப்போது பெய்த மழையின் மிகுதியால், பெண்ணை நதியினிரு கரையு நிறம்பிய நீர்ப் பிரவாஹத்தால் கடந்து வர முடியாதவ ராய்த் திகைத்து நின்று, நா மினித் தாமதித்

தால் அண்ணுமலேயார் இரதோத்ஸவம் நடை பெரு தென்று நினைத்து, தா மேறி வந்த குதிரையைப் பார்த்து "ஏ குதிரையே தாத்தாவைப் பார்க்க வேண்டும் இரதத் தையும் நடத்த வேண்டும் நீ தாத்தாவை நினைத்துக் கொண்டு இந்த வாற்றைத் தாண்டுவாய்" என்று சொல்லி அடித்தனர். உடனே குதிரை திடீ ரென்று ஜலத்தி லிறங்கி ஒரு அபாயமு மில்லாமல் அக் கரைக்கு அநாயாச மாய் விரைவாகக் கொண்டு வந்து சேர்த்தது. அதைக் கண்டு இரு கரையும் இரங்க முடியா துட்கார்ந்திருந்த ஜநங்கள் மிக்க வாச்சரிய மடைந்தார்கள்.

அப் போது திரு வருணை யீசாநியத்தி லிருந்த ஸ்ரீ சுவாமிகள் கண் விழித்து தென் பக்க மாகத் திடீ ரென்று கையை நீட்டி, இடது பக்கம் மெது வாகத் தாழ்த்தினர் கள், அத்னை யருகி லிருந்து பார்த்த, நாகை, இராம லிங்க சுவாமிகள், ஸ்ரீ சுவாமிகளை நோக்கி சுவாமின் தியாநத்தி லிருந்து, திடீ ரென்று கண் விழித்துக் கையை நீட்டி மெது வாக இடது பக்க மாய்த் தாழ்த்திய காரணத்தை வடியேங்ககட்குத் தயையாற் றெரிவிக்க வேண்டு மென்று பிரார்த்திக்க, வதற்க்கு ஸ்ரீ சுவாமிகள் "எவ ளுற்றில் விழுந்தாலும் அதற்கு நாம் உத்திரவாதி யாக வேண்டுமா" மென்று திரு வாய் மலர்ந்தருளி மௌந மா யிருந்தனர். ஐடன் துரை சுக மாக வருணை வந்து சேர்ந்து, ஸ்ரீ சுவாமி களைத் தெரிசித்து "தேவரீரது கிருபையா லபார ஜலத் தைக் குதிரையுடன் ருண்டி வந்தே" னென்று சொல்லிப் பரவச முற்றூர். பிறகு சுவாமிகளது உத்தரவினுல் அண்ணுமலேயார் இரதோத்ஸவத்தையும் வழக்கம் போல் நடத்திவைத்தனர். இங்ஙனம், ஸ்ரீ சுவாமிகள் திரு விளையா டற்களைக் கண்டு கேட்ட ஜநங்கள், ஸ்ரீ சுவாமிகளது சந்

நிதியை மிகுந்த வன்புடையவர்க ளாய், விட்டு நீங்கா திருந் தார்கள். அப் போது வரிப் புலிகள் மிகுதியும் வருவ தில்லை. பின் சில பக்குவிகள் மோக்ஷ சாதந விருப்பினர் களா யிருத்தலைக் கண்டு, அவர் பொருட்டு ஞானக் கட் டளை யெனப் பெய ரிய ஓர் அரிய நூலினை யியற்றி யுண் மையை யுபதேசித்து வருங் காலத்தில், அவ் வடியவர்கள் வசிக்கும் பொருட்டு, அவ் வருணை வாசிகளால், ஸ்ரீ சுவா மிகள் விரும்பியபடி ஒரு பர்ண சாலை யமைக்கப்பட்டது. அக் காலத்தில், திரு வண்ணமலைக் கடுத்த மண்ட குளத் தூரிலே, கர்ணிகர் குலத்திலே, இருந்த சபாபதி பிள்ளை யென்பவ ரொருவர் விதிப்படி இல் லறத்தை நடத்தி வந்த னர். அப் புண்ணியத்தால் உலகப் பற் றற்று பரம் பொரு ளைக் காணும் பற்றுடையவ ராய்த் துறந்து, ஸ்ரீ சத்குருவைத் தேடிச் சென்று, திருக் கச்சிக்குப் போய், ஸ்ரீ காமாக்ஷி சமேத ஏகாம்பர நாதரைத் தரிசித்து, அன் றிரவு தனது மனோபீஷ்டத்தை ஸ்ரீ காமாக்ஷியம்மையின்பால் சொல் லிப் பிரார்த்தித்துக் கொண்டு,கம்பா நதி தீர்த்தக் கரையில், துயில் கொண்டனர். அவரது சொப்பனத்தில் உலக மாதா வான காமாக்ஷி யம்மை, ஒரு கன்னிகை யாக விளங்கி அப்பா நீ வருந்த வேண்டாம், திரு வண்ணமலையின் ஈசா ந்ய பாகத்தில் வீற்றிருக்கும் சித்தரிடம் போய் உனது குறைவுபாட்டை நீக்கிக் கொள்ள வேண்டியது என்று திரு வாய் மலர்ந்தருளி மறைந்தனள். உடனே, திடீ ரென்று சபாபதி சுவாமிகள் விழித்து அம்பிகை யென்று தெரிந்து அன்று முதல் தேவி யுபாசனையையும், அதிகமாய்ச் செய்து கொண்டு, திரு வருணைக்கு வந்து ஸ்ரீ சுவாமிகளைத் தரிசித்து வலம் வந்து துதித்து வணக்கத்தோடும், ஆண்டு சில காலந் தொண் டியற்றிக் கொண் டிருந்தனர். இவரது

பக்குவத்தைக் கண்டு, ஸ்ரீ சுவாமிகள் ஆத்மோபதேசஞ் செய்து, நியாநத்தி லிருக்கச் செய்தார்கள்,

அப் போது சுவாமி கிருபையாலும், அம்பிகை கிருபையாலும், சபாபதி சுவாமிகளுக்கு, சமஸ்கிருத பாஷையில், அதிக பண்டிதத் தன்மை யுண்டாயிற்று. சபாபதி சுவாமிகள், தனக்கு நிஷ்டை கூடாத காரணத்தை சுவாமிகளிடம் தெரிவிக்க, அதற்குச் சுவாமிகள், வித்யா தானஞ் செய்தால்,பிரதிபந்த நீங்கி நிஷ்டை கூடு மென்று திரு வாய் மலர்ந்தருள, உடனே சபாபதி சுவாமிகள் விடைபெற்றுக் கொண்டு போய், மண்ட குளத் தூரி லிருந்த சில வேதியச் சிறுவர்களின் விருப்பின்படிக்கு சமஸ்கிருத வித்தையைத் தானஞ் செய்து, தடை நீங்கி நிஷ்டை கூடி அம்பிகையின் கிருபையால் கிணற்றில் வீழ்ந்து உயி ரிழந்த தனது சகா பாடிக்கு உயிர் கொடுத்தும், மேட்டுப் பாளையத்தில், சில சீடர்களுக்கு வேதாந்த பாடம் ஒதி வைக்கையில், நீரால் விளக் கெறித்தும், இன்னு மிவை முதலிய திரு விளையாடற்களைச் செய்து, ஆண்டுத் திருக் கோயில் கொண் டெழுந் தருளினர், அதனு லிப்போது அங்கு ஸ்ரீ தேசிகர் மகிமை யோங்கும்படிக்கு மடமும், ஆலயமும், தடமு, மிடம் பெறக் கட்டப்பட்டு, நித்திய பூஜையாதி நடந்து வருகின்றன,

கோரக்க நாதர் குளக் கரையிலே, ஸ்ரீ அண்ணுமலையார் தரிசநங் கொடுத்த காலத்தில், தா மியற்றிய அண்ணுமலையார் தோத்திரப் பா மாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய பிரபந்தங்களையும், வேதாந்த சாஸ்திரங்களையும்,

பல சீடர்களுக் குபதேசித்துக் கொண் டிருக்கையில், தமது ஞானாசாரியராகிய, சிக்கல், பொருள்வை மாநகர், ஸ்ரீ உகந்த லிங்க ஞாந தேசிகரின் விதேக கால மாரம்பித்த தன்மையைக், கோவிலூர் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக ரவர்கள் அனுப்பிய சாதுக்களால உணர்ந்து, பலசீடர்களுடன் புறப்பட்டுச் சென்று, பொருள் வைத்த சேரியை யடைந்து, ஸ்ரீ உகந்த லிங்க ஞாந தேசிகரைத் தெரிசிக்கு முன்னே விதேக கைவல்லிய மடைந்தனர், அத் திரு மேனியை யங்குச் சமாதி வைக்க வொட்டாது, அவ் வூரார் தடை செய்ததைப் பார்த்து, ஸ்ரீ சுவாமிகள் அவர்க ளறியா வண்ணம் தமது மகிமையால், ஆண்டே சமாதி வைத்தனர். மறுநாள், அதை யுணர்ந்த அவ் வூரார் மீண்டுங் கலகஞ் செய்யக் கூட்ட மிட்டனர், அதைக் கண்டு, ஸ்ரீ சுவாமிகள் புத்திர பௌத்ர பாரம்பர்யத்தைக் கெடுதி யின்றி நீங்கள் விரும்பியவர்களானால், ஜிதேந்திரிய ரான துறவிகளுடன் விவாதஞ் செய்யாதிருக்க வேண்டுமென்று மிகப் பய முறுத்த, வதற்கவர்கள், இவ் வருணைச் சித்தர் து சாப மிகப் பொல்லாததெனப் பயந்து விலகி விட்டனர் அச் சமாதிக்குச் செய்கடன் முடித்துச் சீடர்களுடன் ஸ்ரீ சுவாமிக ளருணைக்கு வந்து, முன் போல், சில காலம் ஆந்மோபதேசாதி திருவிளையாடற்களைச் செய்து கொண் டிருக்கும போது, தமது விதேககால மாரம்பித்ததை யுணர்ந்து சில நாளுக்கு முன்பே, ஒரு ஓலையில் பரிபூரண மாகுங் காலத்தை வரைந்து, தம்து ஆசநத்தின் கீழ் வைத்து. கலியுகம் 4930க்குச் சரியான சாலிவாஹன சகாப்தம் 1751க்கு, விரோதி வருஷம் மார்கழி மாதம் 26ம் தேதி குரு வாரம் மிருக சீர்ஷ நக்ஷத்திரமுங் கூடிய சுபதிநத்தில், ஸ்ரீ நடராஜப் பெருமான்

ஆயிரங் கால் மண்டபத்தில், அறைக் கட்டுக்குப் போகின்ருர், நாமு மங்குப் போக வேண்டு மென்று. தமது முக்கிய மான சீடர்களுக்குத் திரு வாய் மலர்ந்தருளி, பத்மாசநத்தி லிருந்து, உத்திர முக மாய், சிங் முத்திரை தரித்து, சிறிது அலர்ந்த நோக் காய் சமாதி கூடி, அகண்ட சச்சிதாநந்த பிரஹ்ம பாவத்தை யடையும் போது, பாக்கத்து வாசியான முத்துச் சாமி உடையார் அடியேங்களுக்கு கதி யாதோ வென வினவ, அதற்குச் சுவாமிகள், உமது குடும்பம் முன்னமே கொத்தோடே பழுத்துப் போயிற்றே" என்று திரு வாய் மலர்ந்தருளிப் பரிபூரண பாவத்தை யடைந்தனர். அது கண்ட அருணை வாசிகளும், அடியவர்களும், அத் திரு மேனியைச் சமாதி வைக்க இடத்தை நிச்சயிக்கும் போது, ஸ்ரீ சுவாமிகள் சில காலம அவ் வாசிரமத்தின் சமீபத்தி லுள்ள ஒரு வில்வக் கண்ணின் சமீபஞ் சென்று அண்ணுமலை யாரை நோக்கி நின்று திரும்பி வந்திருந்த குறிப்பை யுணர்ந்து, அவ் விடமே தகுதி யான தென்று நிச்சயித்து. ஆண்டு அத் திரு மேனியைச் சமாதி வைத்தனர். ஸ்ரீ சுவாமிகள், தனதாசநத்தின் கீழ் வரைந்து வைத்திருந்த தமது விதேக கால நிச்சயத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தார்கள். அவ் வருணை வாசிகளும், இப் போ துள்ள,வேட்டை வலம் ஜமீன்தா ரவர்களின் பாட்டி யாரின் தாயாரும், அச் சமாதி யாலயத்தையும், கோபுரத்தையும், மடத்தையும், சுதையாற் கட்டிச் சமாதி தாநத்திலோர் சிவ லிங்கத்தையும் ஸ்தாபித்து, ஆண்டு குரு சம்பிர தாயம் விளங்கி வரும் பொருட்டு சுவாமிகளின் முக்கிய சீட ரான நாக பட்டணம், இராம லிங்க சுவாமிகளுக்கு, அபிஷேகஞ் செய்து, மடாதிபதியாகவும், குரு ஸ்தாநமாகவும், ஏற்படுத்தினுர்கள். பூஜையாதி காரியங்களையு

மொழுங்கு பெற நடத்திவைத்தார்கள். ஸ்ரீ ராம லிங்க சுவாமிகளும், ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகளும், ஸ்ரீ அந்த தாதா வான மஹா தேவ சுவாமிகளும், ஸ்ரீ சதானந்த சுவாமிகளும், பரம்பரை யாய் அபிஷேகிக்கப்பட்டவர்க ளாய், குரு ஸ்தானத்தை வஹிக்கு மாசார்யர்க ளாய், விளங்கினர்கள், 6-வது பட்டத் தாசிரிய ராகிய சதானந்த சுவாமிகள், ஸ்ரீ தேசிகா தாலயத்தையும், மடத்திற் சிலது பாகத்தையும், சிலையா லியற்றிச் சாசுவத மான ஸ்தாவர சொத்துக்களையும், சேகரித்து வைத்தனர். இப் போது அந்த ஸ்தானத்தில் ஸ்ரீ அண்ணுமலை சுவாமிக ளென்னும் மஹா தேவ சுவாமிகள். ஆசாரிய ராய் விளங்குகின்றனர்.

சிதம்பரம ஸ்ரீ மெளந தேசிகரின் மேல் ஸ்ரீ ஈசாநிய தேசிகர் திரு வாய் மலர்ந்தருளிய பஞ்ச ரத்திநம்.

நித்யபரி பூரண வகண்டசா க்ஷாத்கார நிர்மலா னந்த மயமாய்—நிர்க்குண் விசாலமாய் வாக்குமன மணுகாத நிர்வாண மோன வடிவாய், சத்யவருண் மேனிகொண் டுலகிலவ தாரமாய்த் தானெழுந் தருளிவந்து—சமயநிலை யாவையு மொருசமன தாகவே தான்கண்டு மேலாகவே, முத்திமுத லானநின் னருள்சேர்ந்த வன்பரடி முடியாக வைத்து நின்னை—மூவுலகு தொழுதில்லை யம்பலந டம்புரியு முதல்வனென்ன வேநம்பினேன், னத்தியுரி போர்த்தவா வத்தமதி கூவிள மணிந்தவா கெங்காதரா—வாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞான குருவே. (1)

கல்லாலி னிழலிற் சென்றிருந் தாயமல காருண்ய வடிவ மாகி—கண்மூன்று நவ்விமழு கையினி லட பேந்தி யொரு காலதனின் மாயை யெனுமேற், செல்லாம லேமிதித் தங்கிருந் தோால்வர் செப்பரிய முத்தி பெறவே—சித்தாந்த வேதாந்த சமரச முணர்த்திபவர் சிற்சொரூப மெத்த வதனு, லெல்லாரு மிந்தவழி யாகவர வென்றுணி லேமையடி யார்க ளிடமா, யின்பமத னுன்மனுட னென்ற வடி வாமென்ன வென்பதொரு கோல முடனே,யல்லாது வவதூத வேடமது காட்டிவெகு வாயடியர் சென்று தொழவே—யாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞான குருவே. (2)

சஞ்சலவி தத்தொழில் புரிந்துமன மானது சகத்திடை நடிக்கு மேன்மேற்—சாலங்கள் செய்துவெகு வாகசின் றேயொருவர் தானுமிக ரிலலை யெனவே, வஞ்சகக் கள்வ ரென நிற்கின்ற வைம்புல வழிக்கோட்ட ரசுசெய்து—வாதாடி யேசுழலு மென்னசெய் வேனதனை வலிமெத்த வாகை யாலே, தஞ்சமென நின்னருளை நம்பினே னென்னைநீ தற்காத்து யிரக்ஷி கண்டாய்—சர்வபரி பூரண வகண்டதத் துவமான சச்சிதா னந்த சிவமா, யஞ்சலென வேகரமமைத் துவட நீழல்வள ராதியே யம்புலத்து—ளாயி குள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞான குருவே. (3)

விதேக கைவல்யம்.

திருவளர் மதியு நதியுட னிதழி சேர்ந்திடுஞ் செஞ்சடா டவியுஞ்—செங்கையின் மழுமா னணிந்திடுஞ் சிறப்புந் திகழுமை யுடன்மழ விடையும், உருவளர்ந் திருக்குழியலது தணந்து வுலகினிற் பருவமா ணுக்க ருய்யதத்

துவத்தி னிலைபறி வித்து ஓங்கிய நிட்டைசா தித்து, மருளது திருந்தும்படிகுரு வடிவ மாகியே யருளையம் பதியி, லணிவரை யீசா நியமதில் விளங்கி யன்பர்க டுதிக்கச் சிந் மயமாய், மருவின ததுவி ரோதியாந் தார்நன் மதியினி லி ருபதோ ராறில், வளர்குரு வார மான்றலை திரையோ தசியெனவ முத்துநற் றிநமே.

இங்ஙனம் பரம கருணாநிதி யாகிய ஸ்ரீ ஈசாநிய கந்தப்ப ஞான தேசிகரின் சரித்திரச் சுருக்க முற்றுப் பெற்றது.

---

27. அருணாசல மென்னும் பிள்ளைத் திரு நாம முடைய தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள் சரிதம்.

மலர்மகள் மருகன் என்னுமாற் றுணைறத்த
  மாமுகன் திருவடி மலரை,
இலைநெடு வேலன் பாததா மரையை
  இனியதியா கேச்சுரன் இணையைத்,
கலைஉறும் கமல நாயகி கழலைக்
  கருதும் ஆ ரூரினில் இலகும்,
திலகம் ஆம் தெக்ஷிணாஸ்யஞா னேச
  தேசிகன் தனைத்திநம் பணிவாம்.

பொன்னி நன்னதி புடையே பிரவாகித்து வருங் காரணத்தானே நீர் வள நில வள முதலிய எவ் வளங்களும் நிறைந் தோங்கப் பெற்றதும், எந் நாட்டினு மிக்க நன்னா டாகிய சோணாட்டிற்குச் சிகரமாக விளங்குவது மாகிய திரி சிர புரத்திற்குச் சமீபமா யுள்ளதும், கீ ழாலத்தூ ரென் னும் பெயர் பெற்றது மாகிய சிற் றூரின்கண் சற் றேறக்

குறைய இரு நூறு வருடங்கட்கு முன், கார் காத்த வேளாளர் மரபில் அவதரித்தவரும், கல்வி யறி வொழுக்கங்களிலும், குரு லிங்க சங்கம பத்தியினும். சிறந்த, சிவ சிதம்பரம் பிள்ளை யென்பா ரொருவ ரிருந்தனர். அவரும் அருந்ததி யன்ன கற்பிற் குரிய அன்னார் மனைவிய ராகிய மீனாம்பிகை யென்பாரும், ஒற்றித்த அறிவும், அன்பு முடையராய்த், தமக் குரிய இல் லற முறை வழாது நடத்தி வந்தனர்.

அன்னா ரிருவருந் தமது மரபுக் கேற்ற சைவா நுட்டான சிவ பூஜை முதலியவற்றை, மிக்க அன்புடன் வழாது செய்து வருங் காலையில், "பெறு மவற்றுள் யாமறிவ தில்லை, யறிவறித மக்கட்பே றல்லபிற" என்பன முதலிய ஆன்றோர் கூற்றை யுன்னினர்க ளாய், இம்மை மறுமைப் பயன்களை யளிக்கத் தக்க நன் மகப் பேறின்மை பற்றி மன வருத்த முற்றுப், பின் ஒரு புடை தெளிந்தனராய், தவத்தாலெப் பயனும் பெறல் எளிதா யிருக்க, இப் பயனொன்றோ வாரா தொழியும்! வரு மென்னுந் துணிபுடன் புத்திரப் பேற்றிற் குரிய பல நோன்புகள், புண்ணிய க்ஷேத்திர யாத்திரை, தீர்த்த ஸ்நாநம், ஸ்தல வாசம், சிவ விஷ்ணு வாதி மூர்த்திக டெரிசநம், பெரியோர் சேவை முதலியன செய்து கொண்டு, பூ வலம் வருங் காலையில் நானிலம் புகழும் நடு நாட்டின்கண் நம்மனோ ருய்யுமாறு அருட் கட லாகிய நம் பெருமான் சோதி மலையாக நின்றருளிய திரு வண்ணாமலை யென்னுந் திருப் பதியை யடைந்து, அத் தலத்திற் சின்னாள் வாசஞ் செய்து, அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி, கிரிப் பிரதக்ஷணஞ் செய்து மகப் பேற்றை விரும்பிய மனத்தோ டண்ணாமலையாரையும்,

உண்ணா முலை யம்மையையும்,விதி முறை வழாது தரிசித்து வரும் காலத்தில், ஓர் நாள் அண்ணாமலையார் இவர்க ளன்புக் கிரங்கி, அன் றிரவு இவ் விருவர் கனவிலும் விபூதி யுருத்திராக்க காவிகாம்பரதாரியாகிய துறவ ராகத் தோன்றி "உங்கள் மகப் பே றின்றிய குறையை நாமே வந்து நீக்கு வோம். நீவிர் நும்மூரைச் சேருங்க" ளெனத் திரு வாய் மலர்ந்து மறைந்தருளினர். உடனே இருவருந் திடுக்கிட் டெழுந்து, ஒருவர்க் கொருவர் தாம் தாம் கண்ட கன வைக் கலந்து பேசிக் கொண்டு, பெருமானது திரு வருளை வியந்து, ஆநந்த பரவச ராய்,மறு நாட் காலையில் அப் பெரு மானையும், அம்மையையுந், துதித்து, விடை பெற்று அத் திருப் பதியை விட்டு நீங்கி, தங்க ளிருப்பிடஞ் சேர்ந்து அண்ணாமலையாரை அன்புடன் தியானஞ் செய்து கொண் டிருந்தனர்.

இவ் வாறு, சின் னாட் செல்ல மீனாம்பிகை என்பார் வயிறு வாய்த்து, திங்கள் பத்துஞ் சென்ற பின்னர்,உத்தம மாகிய சுபதினத்தில் உலகி லுள்ள சர்வான்மாக்களும் உய்ய வும், சைவ முதலிய சமயங்க ளோங்கி சமயாதீதப் பேற் றைப் பெறவும், வலம் புரி யீன்ற நன் முத் தென ஓர் புத் திரனைப் பெற்றனர்.

இவ் வாறு, தமக் குண்டாகிய புத்திரப் பேற்றைக் கேள்வியுற்ற தந்தை யாகிய சிவ சிதம்பரம் பிள்ளை மிக மகிழ்ச்சி யோடு சாத கன்மங்களை முறையே செய்து அருணாசலேசுர ரருளாற் றோன்றிய மக வாதல் பற்றி, அருணாசல மெனத் திரு நாமஞ் சாத்தினர். அப் புதல்வனைப் புதைப் பொருள் கண்ட மிடியர்கள் போல, மாதா பிதாக்க ளிருவர்களும், நா ளொரு மேனியும், பொழு தொரு

வண்ணமு மாக வளர்த்து, அடிக் கடி பார்த்து, எடுத் துச்சி மோந்து, முத்த மிட்டு ஆநந்தித்து வந்தனர்; இங்ஙனம் வரு நாளில் சிவ சிதம்பரம் பிள்ளை மனைவியா ராகிய மீநாம்பி கையார் இரண்டாவது வருடத்திற் கெர்ப்பவதியாய் மற் றொரு புத்திரனைப் பெறவும், அப் புத்திரனுக்குஞ் சாத கருமம் முதலியவற்றை விதி முறை வழாது செய்து நமச்சிவாய மென நாமமுஞ் சாத்தினர். இவ் விரு மைந்தர் களையும் மிக்க வன்போடு பாது காத்து வளர்த்து வந்த னர்.

இவர்களால் வளர்க்கப் பெற்ற இருவர்களில், ஜியேஷ்ட புத்திர னாகிய அருணாசல மென்னுங் குழந்தை பிறந்தது முதற் பசியாதிகளைப் பற்றி யுரோதநஞ் செய் வது, மொன்றை நோக்கிப் பயந்து ஒலியிட் டழுதலு மொன்றை நோக்கிச் சிரித்தலுஞ் செய்த விலனாய்ப், பாயல் தொட்டின் முதலியவைகளிற் கண்களைச் சில போது முகிழ்த்துஞ், சில போது மலர்த்தும், ஒன்றை யும் விசேட மாகச் சுட்டிப் பாராமலும், மௌநமாகவே சயனித்திருக்கும். மாதா மடியில் இருத்தி முலைக் காம்பை வாயில் வைத்தாற் சுவைத்துப் பாலை யருந்தும்; வைக் காவிடின் மௌந மாகவே யிருக்கும். இங்ஙனஞ் சில நாட் சென்று குப்புற் றெழுந்து தவழ்ந்து நின்று நடக்கும் பருவ காலங்களிலுஞ், சில போது பதுமாதந மிட்டுக் கண் முகிழ்த்து நிட்டை புரியும். சில போது ஆதநமுங் கண் களை முகிழ்த்தலு மின்றி, யுபசாந்த மாகிய மநதோடு மௌந மாகவே யிருக்கும்; இங்ஙனம் ஐந்து வய தளவும் வாய் திறந்து பேசா திருப்பதை நோக்கி, அருணாசலேசுரர் அநுக் கிரகத்தாற் பிறந்த பிள்ளை யாக விருந்தும் ஊமையாக

விருக்கின்றதே! இஃது நமது தவக் குறை தானோவென, மாதா பிதாக்க ளிருவர்களும் வியாகூல சித்தர்களா யிருக்கும் போது, ஒரு நா ளருணாசலேசுரர் கிருபை கூர்ந்து, இவர்கள் மனக் குறையை நிவர்த்திக்கும் பொருட்டு, காவி காம்பர உருத்திராக்க விபூதி தாரணங்களையுஞ், சடா முடியையு,முடைய துறவராய்த் தோன்றி,வீட்டின் முகப் பி லிருக்கும் சிவ சிதம்பரம் பிள்ளைக்கு முன் னின்றனர்.

அப் பிள்ளையார்,அத் துறவரைப் பார்த்துத் திடுக்கிட் டெழுந்து முன் சென்று நமஸ்கரித் தெழுந்து, கை கட்டி வாய் புதைத்து நின்று, சுவாமின்! அடியேனுக்குச் சிவ பெருமான் கிருபையாற் றோன்றிய மைந்த னொருவ னைந்து வய தாகியும் வாய் திறந்து பேசாம லூமனாகவே யிருக் கின்றா,னக் குழந் தையைப் பேசும்படி அநுக்கிரகஞ் செய்ய வேண்டு மெனக் கூறிப், பின்னருந் திரு வடியில் வீழ்ந்து பிரார்த்தித்தனர். அப் போது, துறவ ராக வந்தவர், அக் குழந்தையை நாம் பார்ப்போ மென்றார்; உடனே தந்தை யாகிய சிவ சிதம்பரம் பிள்ளை, அப் பெரியோரை உள்ளே அழைத்துச் சென்று, ஊம னாகிய தம் புதல்வனைக் காட்டும் போது, அக் குழந்தை ஆதந மிட்டுக் கண்களை மூடி நிட்டையி லிருக்கத் துறவர் பார்த்துப், பின் சிவ சிதம்பரம் பிள்ளையை நோக்கிப், பெற்றோர் களாகிய உங்களையும, உங்கள் குலத்தோர்களையு, முலகத்தி லுள்ள பக்த சநங் களையும், நற் கதியிற் சேர்க்கும் பொருட்டு உங்கட்குப் பிள்ளையா யவதரித்திருக்கின்றா னிக் குழந்தை; ஊம னல் லன்; நீ உன் குழந்தையோடு பேசுவாய்; பதிற் கூறுகிற்பன் என்று துறவர் சொல்ல, சிவ சிதம்பரம் பிள்ளை அப்பா

குழந்தாய்! ஏன் கண்களை மூடிக் கொண்டிருக்கிறா யென வினவ!, அதற்கு மைந்தன் சும்மா யிருக்கிறே னெனச் சொல்லினன். சொல்லவும் துறவ ராகிய முனிவர் சும்மா யிருக்கின்ற நீ யா ரென்றார்; அதற்குக் குழந்தை முகிழ்த்த கண் டிறவாமல் நீயே நான்; நானே நீ யெனக் கூறினன். இங்ஙனங் கூறவும், முன் னின்ற துறவர் சத்தியஞ் சத்திய மென வசரித்து விட்டு, அந்தர் ஸ்தாந மாயினர். இவ் வற்புதத்தைக் கண்ணுற்ற மாதா பிதாக்க ளிருவர்களும், புத்திரனைப் பேசவிக்கும்படியாக வந்தவரும், இப் புத்திரரும் அருணாசலேசுரரே யாகும்; அதனா லன்றோ, அவர் கேள்விக்கு, நீயே நான், நானே நீ யென விடை பகர்ந்தனன்; இனி மேல் இக் குழந்தையை அக் கடவுளாகவே பாவித்தல் வேண்டு மெனப் பாவித்து, அற்றை நாண் முதல் மிக்க அன்பு பாராட்டி வந்தார்கள். இப்படி வருங் காலத்தில், ஓர் நாள் சிவ சிதம்பரம் பிள்ளை தன் மனையாளிடத்தில் யான் திரிசிர புரம் போய்த் தாயு மானுரைத் தரிசநஞ் செய்து வருகிறேன்; குழந்தைகளைப் பதன மாய்ப் பார்த்து வருவா யாக என்றார்; அப் போது அருணாசல மெனப் பெயர் பெற்ற பெரிய மைந்தர், பிதாவைப் பார்த்து, ஐயா! உம்மைப் பார்க்க பந்துக்களா யுள்ள இருவர்கள் இன்று பத்து நாழிகைக்குள் இவ் விடம் வருவார்கள் என்று சொல்லவும், பிதா செல்லலை யொழித் திருக்கும் போது, புதல்வர் கூறிய வாறே பந்துக்க ளிருவர் வந்தனர். இவ் வாறு, ஓரோர் சமயத்தில் திரி கால வர்த்தமாநங்களையும் பிதா முதலியோர்க்குச் சொல்லி வருவார். இவ் வாறு சொல்லி வருந் தன்மைய ராதலால், தம் மைந்தர் மாட்டு விடை பெறாது வெளியூருக்குச் செல்லுவ தில்லை என்னும்

விரத மேற் கொண்டவ ராகலான். ஓர் நாட் குழந்தை முன் சென்று நின்று, சுவாமின்! யான் சிதம்பரஞ் சென்று ஆருத்திரா தரிசநஞ் செய்து வருகிறேன், அதற்கு விடை தரல் வேண்டு மென விண்ணப்பித்தனர். அதற்கு நாளை இரு பது நாழிகைக்கு உமது மாதா தேக வியோகத்தை அடைகின்றாள் எனக் கூறியருளினர். அப் போது பிதா வானவர் என் மாதா சரீர சௌக்கிய மாக நோ யின்றி யிருக்கின்றாளே. என் னிமித்தத்தால் தேக வியோக மாவா ளென வினவ, அதற்கு சுவாமிகள்! புரை யேறி விக்க லுதய மாவதனால் என்று விடை யளித்தனர். அதைக் கேட்ட பிதா, சிதம்பரஞ் செல்லுதலை யொழித்தனர். மறு நாள் சுவாமிகள் கூறிய வாறே மாதா துஞ்சினாள்.

பின்னர், சின் னாட் சென்று, நமச் சிவாய மென்னும் இளைய மைந்தர்க்குப் பள்ளிக்கு வைக்கும் பருவம் வந்த தைக் கண்ணுற்று, அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்து, உபாத்தியாயரை அழைத்து, வித்தை யாரம்பஞ் செய்விக்கத் தொடங்குங்கால், சுவாமிகள் பிதாவை நோக்கி, ஐயா! நம்மை ஏன் பள்ளிக்கு வைக்க வில்லை என்று வினவ; சிதம்பரம் பிள்ளை சுவாமிகளுக்கு முன் வணக்கத்தோடு நின்று சகலமுந் தெரிந்த சர்வக்ஞ ராகிய சுவாமிகளையும் பள்ளிக்கு வைக்க வேண்டுமோ, வைக்க வேண்டுமாயின், அங்ஙனஞ் செய்கின்றே னென விண்ணப் பித்தனர். அதற்கு சுவாமிகள், நம் மையும் பள்ளிக்கு வைப்பீ ரென்று அருள, உடனே உபாத்தியாயருக்குத் தெரிவித்துப் பள்ளிக்கு வைத்தனர்.

அற்றை நாண் முதல், தன் தம்பியோடு பள்ளிக்குச் சென்று, கல்வி பயிலும் பிள்ளைகளோ டிருந்து, அங் குள்ள

பிள்ளைகளைப் போல், தானு மிராது, பிள்ளைகள் விளையாடினும், உபாத்தியாய ரிருக்கினும் இல்லா திருக்கினும், தான் வேறொன்றையும் நோக்காமற் சுவடியைக் கையி லேந்திப் பார்த்துக் கொண்டிருக்கும்! அல்லது, சுவடியைக் கட்டி முன் பாக வைத்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டு நிட்டையி லிருக்கும்; இவ்வா றிரா னின்ற சுவாமிகளை, உபாத்தியாயர் பார்த்துத் தம்பி! கண்களை மூடிக் கொண்டிருக்கிறாயே! படிக்க வேண்டாமோ வென்று கேட்பார். அதற்குச் சுவாமிகள் படித் தாயிற் றென்று சொல்லும்; உபாத்தியாயர் படித்ததைச் சொல் பார்ப்போ மென்பர்; உடனே சுவாமிகள் சுவடியைப் பாராமல் யா தொரு பிழையு மின்றிச் சொல்லி விடும். உபாத்தியாயர் மிக்க சந்தோஷத்துடன் மற் றொரு சுவடியைத் துவக்கிக் கொடுப்பார். அதனையும், சற்றுப் போது பார்க்கும்; மற்றைய போது நிட்டையி லிருக்கும் உபாத்தியாயர் படித் தாயிற்றா வெனக் கேட்கில், அதையும் படித்தாயிற் றென்று முன் போலச் சொல்லிவிடும், இங்ஙன மிருக்குங் காலையில், ஓர் நாள் உபாத்தியாயர் குழந்தை, வீட்டுத் திண்ணையி லிருந்து கீழே விழுந்து கை யொடிந்தது. அப்போது சுவாமிகள், பள்ளியி லிருந்த உபாத்தியாயரைப் பார்த்து ஐயா! உங்கள் குழந்தைக்குக் கை யொடிந்து விட்டது போய்ப் பார்த்து வாருங்க ளென்று சொல்லிற்று. உடனே உபாத்தியாயர் எழுந்து சென்றனர். செல்லும் போது தன்னை யழைக்க மனுடன் எதி ரோடி வருவதைப் பார்த்து, மிகவும் விரை வாகச் சென்று குழந்தையின் கைக்கு வேண்டிய சாதனங்களைச் செய்து பின் பள்ளிக்கு வந்து சுவாமிகளுக்கு முன் கை கட்டி வணக்கத்தோடு நின்று, முக் காலத்தையு முணர்ந் துள்ள சர்வக்ஞ மூர்த்தி

யாகிய சுவாமிகள் ஏன் பள்ளிக்கு வரவேண்டு மென்றார்; அதற்குச் சும்மா வந்து போகிறேன் நீங்கள் நிற்கவேண்டாம்; இருங்க ளென்று அருளியது. உபாத்தியாயர் முன் தா னிருக்கப்பட்ட வேதிகையி லிராமல், பூமியிற் றானே யிருந்தார் இவ் வாறு, சுவாமிகள் பள்ளிக்கு வரும் போது எழுந்து நிற்பர்; சுவாமிகள் இருக்க ஆக்ஞாபித்தபோ திருப்பர். இன் னிகழ்ச்சியைக் கண்ணுற்ற சுவாமிகள், சுவாமிகள் கல்விச் சாலைக்கு வருவதை நீத்து விட்டது. இவ் வாறு, சுவாமிகள் கல்வி பயின்று வந்தது மூன்று மாத காலங்க ளாம். பின்னர் தம்பி யாகிய நமச் சிவாய மென்பான், ஒரு வருடங் கல்விச் சாலையில் பயின்ற பின் னர் பள்ளிக்குப் போதலை நிறுத்தினன்.

பின்னர் வீட்டில் பிதா செய்யும் சிவ பூசைக் கேற்ற உபகரணங்களைச் சேகரித்துக் கொடுத்துக் கொண் டிருக் கும் காலத்தில், ஓர் நாள் சுவாமிகள், நமச் சிவாயத்தைப் பார்த்து, நீ பிள்ளையார் கோவில் நந்தவநத்திற்குச் செல் லும் போது, அங்கே தேங்காய், மாங்காய் வீழ்ந் திருந்தால் எடாதே; எடுத்தால் சிவாபராதி யாகுவா யெனத் திரு வாய் மலர்ந்தது. அதைக் கேட்டுக் கொண்டு சென்ற நமச் சிவாயம் சிறுவ னுதலால், ஒரு நாள் நந்தவநத்தில் வீழ்ந்து கிடந்த தெங்கின் னெற்றை எடுத்து உரித் துடைத்துத் தின்று விட்டுப், பின் பத்திர புட்பங்களை எடுத்துக் கொண்டு வந்து, பூக் குடலையைப் பூசை மேடையில் வைத்துவிட்டு, வீட்டுக்குட் சென்றனன். அப் பூங் குடலை யைப் பார்த்த சுவாமிகள், அப்பா நமச் சிவாய மென் றழைக்க, உடனே உள்ளே சென்றவன் வெளியில் வந்து சுவாமிகளுக்கு முன் னின்றனன். நின்ற நமச் சிவாயத்தை

நோக்கி இன்று பிள்ளையார் கோவில் புட்ப வனத்துக்குச் சென்ற நீ என் செய்தாய்? செய்த பாபத்திற்குக் கங்கா ஸ்நானஞ் செய்து, விசுவேசுரரையும், தரிசித்தா லன்றி, நிவர்த்தியாகா தென்று கட்டளையிட் டருளவும், நமச்சிவாயம் பயந்து உடல் நடுங்கி நின்றனன். அதைச் சுவாமிகள் பார்த்து, இனி மேல் நீ பூசைக்குப் பத்திரம் எடுக்க வேண்டாம்; ஐயா எடுத்துக் கொள்ளுவா ரென்று ஆக்ஞாபித்து வாளா விருந்தது. அது முதல் நமச் சிவாயம் வியாகூல சித்தனா யிருந்து, சின்னாட் சென்ற பின்னர், யாரிடத்தும் அறிவிக்காமற் காசி யாத்திரை சென்று விட்டான். பிதா வாகிய சிவ சிதம்பரம் பிள்ளையும், மனைவியாரும், பல விடங்களிலும் தனித் தனி யாக ஆள் விடுத்துத் தேடியுங் காணாமையால், மிக்க வியாகூல சித்தர்களாய், சுவாமிகள் திரு முன் சென்று நின்று, நமச் சிவாயம் பத்து நா ளாய் யாண்டோ சென்று விட்டான்; பல விடங்களிற் றேடியும் அகப்படவில்லை; அவ னிருக்கு மிடத்தைக் கட்டளையிட்டால் அழைத்து வருவோம்; எங்கள் மனம் பரிதவிக்கின்றதென்று விண்ணப்பித்தார்கள். அப்போது அவ்விரு முது* குரவரையும் பார்த்து, நீவிற் முற் பிறப்புகளில் பெற்ற பிள்ளைக ளெல்லாம் உங்களை விட்டுப் பிரிந்திருக்கிறார்களே, அவர்களைப் பற்றிப் பரிதவியாமல் இவனை மாத்திரம் பற்றித் துன் புறுவது என்னை? நமச் சிவாயம் இப் போது காசிக்குச் சென் றிருக்கின்றான்; நீங்கள் அழைக்கினும் வரான். கிரகாச்ரமத்தை விரும்பவும் மாட்டான்; அவ்வா றிருத்தல் உங்கட்கு நன்மையைத் தரும்; நீங்கள் கவலையை யொழியுங்கள் என்று திரு வாய் மலர்ந்தது, அவ் விருவ

* குரவர் = தந்தை தாய்

ரும் சுவாமிகள் கட்டளைப்படி கவலை யொழிந் திருந்தனர். முன் காசிக்குச் சென்ற நமச் சிவாயம், காசியை யடைந்து, முறை தவறாது கங்கை யாடி விசுவேசுரரையும், விசாலாக்ஷி அந்நபூரணி யம்மையாரையும், தரிசித்துச் சில நாள் ஸ்தல வாசஞ் செய்து, பின்னர் அப்பதியினை நீங்கித் தென் றிசை நோக்கிப் போந்து, காஞ்சி, சிதம்பரம் முதலிய திருப் பதிகள் தோறும் தெரிசநஞ் செய்து கொண்டு, ஓர் நாள் நல்வினை வயத்தால் திருச் செங் காட்டங் குடியில் அரு வுருவத் திருமேனி கொண் டெழுந்தருளிய பெருமானையும், பிராட்டியாரையுஞ், தரிசித்துச், சில நாள் அத் தல வாசஞ் செய்து கொண் டிருந்து வரும் போது, அங்கு தரிசநார்த்த மாக வந்த ஒரு பெரியாரோடு சேர்ந்து கீழ் வேளூ ரென்னும் திருப் பதிக்கு மேல் பாரிசம் ஓர் மயிலுக்குட்பட்டு இருக்கும் நீலப் பாடி யென்னும் ஊரை யடைந்து, அவண் நெடு நாளாக வசித்து வந்தவரும், கல்வி யறி வொழுக்க முதலிய வற்றாற் சிறந்தவரும், அபேத சாக்ஷாத்கார ஞானியு மாகிய, ஓர் பெரியவர்பால் தான் சந்நியாச ஆச்சிரமத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்பால் பல ஞாந சாத்திரங்களை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

இங்ஙனம், நமச் சிவாய மென்பார் வெளிப்படுதற்குச் சில காலங்களுக்கு முன், சுவாமிக ளவதரித் தருளிய பதிக்குச் சமீபித்த ஓர் சிற் றூரின்க ணுள்ள ஆரா வமுதையங்காரும், அவர் மனைவியார் இலக்குமி யம்மாளும், தங்களுக்கு வயது ஐம்பதாகியும் புத்திரப் பே றில்லை யென்னுங் கிலேசத்தோடு சீரங்கஞ் சென்று, காவேரி யாடி, அரங்க நாதரைத் தரிசித்துக் கொண்டு, சில நா ளாங்கிருந்து வசித்தனர்.

அவ்வா றிருக்கும் நாட்களுள், ஓர் நாட் கனவில் அரங்க நாதர் ஒரு பாகவதர் போல் வந்து, இருவர்களையும் பார்த்து, உங்களுக்குப் பக்கத்தி லிருக்கும் கீழா லத்தூரில், ஓர் ஞான சித்தன் அவதரித் திருக்கின்றான்; அவனுக்கு மன நிறைந்த அன்போடும் ஓர் பசுவைக் குளிப்பாட்டி, நீவிர் இருவரும் ஸ்நான சந்தி முடித்து, உலர்ந்த வஸ்திர மணிந்து, சுத்த மான இடத் துள்ள புன் முதலியவற்றை மேய்த்து, அப் பசுவின் பாலைப் புனித பாத்திரத்திற் கறந்து காய்ச்சித் தினந் தோறும் கொண்டு போய்க் கொடுத்து வருவீர்க ளாயின், அந்தப் பாலை அம் முனிவன் புசித்து, ஒரு நாள் சிறிது பாலைச் சேட மாக வைப்பன்; அதை நீவி ரிருவரும் புசிப் பீர்களானால், அதுவே கார ண மாகப் புத்திரோற்பத்தி உண்டாகு மெனக் கூறி மறைந்தருளினார். இவ் வாச்சரி யக் கனாவைக் கண்ட அவ் விருவரும், திடுக்கிட் டெழுந்து தாங்கள் ஒருவரோ டொருவர் கலந்து பேசிக் கொண்டு, கருணைக் கட லாகிய ஸ்ரீ அரங்க நாதனைத் தரிசித்து விடை பெற்று, தம் மூர்க்கு வந்தனர். பின்னர் பக்கத் துள்ள கீ ழாலத் தூரில் அவதரித் திருக்கும் மகா புருடன் யா ரென விசாரித்துத் தெரிந்து கொண்டு, கனவில் பாகவத ரிட்ட கட்டளைப்படி ஆசாரத்துடன் பாலைக் கறந்து காய்ச்சித் தினந் தோறும் அவ் விருவர்களும் ஒற்றித்து வந்து சுவாமி கள் உட்கொள்ளும்படி கொடுத்துக் கொண்டு வருநாளில், ஒரு நாள் கொடுத்த பாலிற் சிறி துண்டு சிறி துண்ணாது சேட மாக வைத்துவிட்டு, இனிப் பால் கொண்டுவர வேண்டா மெனத் திரு வாய் மலர்ந்தருளியது. உடனே உச்சிட்ட மான பாலை எடுத்துக் கொண்டு போய் அவ் விருவர்களும் மிக்க ஆதரவோடு புசித்தனர். அதே காலத்

தில் கருப்ப உற்பத்தியாய்ப் பத்தாந் திங்களில் மைந்தனைப் பெற்று மகிழ்வுற் றிருந்தனர். இவ் வரிய மகப் பே றளித்த சுவாமிகளைத் தரிசித்தற்கு விசேட நாட்களில், குழந்தை யையும், தூக்கிக் கொண்டு வருவது வழக்க மாக இருந் தார்கள். இவ் வாறு தரிசித்து வரும் ஓர் நாள் மாலையில் குழந்தை தொட்டிலில் நித்திரை செய்தது. அது காரணத் தால், குழந்தையை எடுத்து வருவதற்கு இயையாமையால் வீட்டைப் பூட்டிக் கொண்டு தா மிருவர் மாத்திரம் சுவாமிகளைத் தரிசித்தற்கு வந்தார்கள், வந்து தரிசித்து நிற்கும் அவ் வாராவமு தையங்காரையும், அவர் மனைவி யாரையும், பார்த்து, உங்கள் வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்டது; பிள்ளை தொட்டிலில் படுத் திருக்கின்றதே ஓடுங்க ளென் று ஆக்ஞாபித்து, பின்னர், பயம் வேண்டாம் பிள்ளை வெளியில் வந்து விடும் என்றுங் கட்டளையிட் டருளிற்று. அவ் வாஞ்ஞையைச் சிரமேற் கொண்ட அவர்கள் ஓடிப் பார்ப்பதற்கு முன்னரே ஊர்ச் சனங்கள் கூடி எரிகிற வீட்டுக்குள் செல்ல முடியாமல், வெளிப் புற மாக ஏறி அவித்தற்கு எத்தனம் பண்ணிக் கொண்டு இருக் கும் போது, வீட்டுக்குள் தொட்டிலிற் படுத் திருந்த குழந் தையை எடுத்துக் கொண்டு இலங்கோடு கௌபீன தாரி யாயும், விபூதி உத்தூளிதரு மாகிய ஓர் சிறிய துறவர் வெளியி லோடிவந்து கூட்ட மிட்டு வேடிக்கை பார்க்கிற ஓர் பார்ப்பனி கையிற் கொடுத்து விட்டுக் கூட்டத்தில் மறைந்து விட்டனர். பின்னர், ஓடி வந்த பிராமணனும், அவர் மனைவியும், வீடு பூட்டியபடியே எரிவதைப் பார்த்து குழந்தை மடிந்து போய் விட்டதா வென்று தலையிலும்,

வாயிலும், அடித்துக் கொண்டு அலறித் தெருவில் விழுந் தார்கள். உடனே குழந்தையை வைத்திருந்த பார்ப்பனி ஓடி வந்து; உங்கள் குழந்தை இதோ யிருக்கின்றது, வருந்தாதீர்கள் என்று கையிற் கொடுக்க, அக் குழந் தையை வாங்கி உச்சி மோந்து மார்புறத் தழீஇப் பின் வீடு பூட்டியபடியே யிருக்கிறதே! பிள்ளையை எவ்வாறு வெளியிற் கொணர்ந்தனரோ! வென்று கேட்கக், குழந் தையை வைத்திருந்த அப் பெண் இலங்கோடு கௌபீந மாத்திர முடைய ஓர் சிறிய பரதேசி கொண்டு வந்து கொடுத்தது மாத்திரந் தெரியும்; பின். யாதும் நமக்குத் தெரியா தென்றாள். அதைக் கேட்ட இருவரும் உடனே வீட்டில் நெருப்புப் பற்றியது; குழந்தை தொட்டிலில் கிடக்கின்றதே ஓடுங்க ளென்று ஆஞ்ஞை செய்து, பின் பயம் வேண்டாம் குழந்தை வெளியில் வந்துவிடும் எனச் சுவாமிகள் திரு வாய் மலர்ந்த வாறே ஈண்டு நிகழ்ந் தமையினாலும், குழந்தையை இவ் வம்மை கையிற் கொடுத்தவர் சிறிய வடிவினரும், இலங்கோடு கௌபீனரு மாகிய சிறிய பரதேசி யாக விருத்தலானும், நமது சுவாமி களே, மைந்தனை வெளிப்படுத்தித் தந்த பேரரு ளுடைய ராகும்; ஆதலால், நாளையத் தினம் நம் பிள்ளையைக் கொண்டு போய் சுவாமிகளுக்கு முன்பாக வைத்து, அவர் நாம கரணத்தையே மைந்தனுக்கும் நாம கரண மாகச் சூட்டி, மறு காரியம் பார்க்க வேண்டு மென்று பேசி முடித்தனர். மறு நாட் காலையில், குழந்தையை எடுத்துக் கொண்டு சுவாமிகள் முன்னிலையிற் றானே அருணாசல மென்று நாம கரணஞ் சூட்டினர். இவ்வாறு, செய்ததை தங்கள் வைணவ சமயத்துக் குரிய ஆசிரியர்களும், மற்ற ஞாதியர்களும், அறிந்து தங்கள் சமயத்துக் குரித்தல்லாத

இந் நாம கரணத்தை மாற்றி, வேறு பெயர் வைக்க வேண்டு மென்று தனித் தனிக் கூறியும், மாதா பிதாக்க ளவ்வாறு செய்யா திருப்பதை யறிந்த சுற்றத்தவர்களும், ஆசிரியர்களும், ஒருங்கு கூடிய ஓர் விசேட திநத்தில், ஆராவமு தையங்காரையும், அவர் மனைவியாரையும், அழைத்து, உங்கள் பிள்ளைக்கு இடத் தகாத நாம மிட்டீர் கள்; ஆதலால், அதை மாற்றி விடுங்கள்; அங்ஙனஞ் செய் யா தொழியில், சாதிகுப் புறம்பு படுத்துவோ மென்றார் கள். அதற் கவ் விருவர்களும், நாங்கள் வைத்த நாம கர ணத்தை நாங்களே மாற்ற மாட்டோம்; ஆனுலப் பிள்ளை எனக்கு வைதத நாம கரணத்தை நீக்கி, இன்ன நாம கரண மிட்டு அழையுங்க ளென்றால், அப்படியே அழைக்கின்றே மென்றார்கள், அதைக் கேட்டு நல்ல தப்படியே யாகட்டு மென்று, சபையார்கள் அப் பிள்ளையை யழைத்து, எதிரே நிறுத்தி, உன் பெய ரென் னென்று கேட்க; மைந்தன் என் பெயர் அருணசல மென்றனன். அச் சொல்லைக் கேட்ட சுற்றத்தார்களும், ஆசிரியர்களும், உன் மாதா பிதாக்கள் வசிக்கத் தகாத நாம கரணத்தை யுனக்குச் சூட்டினூர் கள். நாங்க ளதை நீக்கி வெங்கடாசல மென நாமஞ் சூட்டுகிறோம்; அதை நீ வகித்துக் கொள்வா யென்றார்கள். உடனே இள மைப் பருவத்தை யுடைய அம் மைந்தன், ஆவேச முற்று, ஓர் புருட பிரமாணங் கிளம்பிக் குதித்து நின்று, அச் சபையின் நான்கு பக்கத் துள்ளவர்களையும் மிக உக்கிர மாகப் பார்த்து, ஓ சபையோர்களே! அருணசல மென்னு நாமத்தி லுள்ள, அகரம், அரி நாமத்தின் முத லட் சரமும், ரகர உகரம், திரு வென்னும் பிராட்டி நாமத் துள்ள ஈற் றட்சரமும், ணகர ஆகாரம், நாராயணப் பெரு மானது அஷ்டாட்சர மாகிய மந்திரத்தின் ஓர் அட்சரமும்,

அசல மென்பது நீங்கள் எனக்கிட வேண்டு மென நினைத்த வெங்கடாசல மென்னும் எம் பெருமான் வீற்றிருக்கும் தான மாகவு மிருக்க, அதை வாயினால், வசிக்கத் தகா தென் றுரைத்தது அறியாமை யன்றோ? ஆதலால், நுமது வாயை மூடுவீர்! பேத புத்தியை விடுவீர்! விடுவீர்! அல்ல வெனிற் கெடுவீர்! கெடுவீர்! என்று சொல்லி, மௌன மாக விருந் தான், உடனே சபையார் அவ் விளைஞன் வார்த்தையைக் கேட்டுப் பயமும், உட னடுக்கமும், மெய் வெயர்வு, முடையவர்க ளாய், ஒன்றும் பேசாது, மெள்ள மெள்ள எழுந்து போய் விட்டார்கள். இங்ஙன மெழுந்து சென்ற ஞாதியர்கள், அவ்விருவரிடத் துள்ள துவேஷ நீங்கி யிருந்தார்கள். அவர்களும், வைணவ சம்பிரதாயத்தைக் கைவிடாதவர்களும், சைவத்திற் துவேஷ மில்லாதவர் களுமா யிருந்தார்கள்.

பின், ஓர் நாள், சுவாமிகளோடு பள்ளியிற் பயின்று வந்த ஓர் பிராமணப் பிள்ளை, விடந் தீண்டி மூர்ச்சையாகி மணி மந்திர முதலிய அநேக பரிகாரங்களைச் செய்தும், நிவிர்த்தி யாகாமல், பிரேத மாய்க் கிடக்க, அய லூருக்குப் போ யிருந்த அப் பிள்ளையின் தாயார், மறு நாள் வந்து, மைந்தன் இறந்து கிடப்பதைப் பார்த்து, வயி றலைத்து அழுதுகொண்டு, சுவாமிகளிடத் தோடி வந்து உன்னோடு பள்ளியிற் படித்த சுந்தர மாகிய ஒரு பிள்ளையையும், பாம் புக்கு இரை யாகக் கொடுத்து விட்டு, யா னுயிர் வைத் திருப்பேனோ! அவனை நீ பிழைக்கச் செய்யாவிடில், என் னுயிரை உன் முன்னிலையில் விட்டு விடுகிறே னென்று, பூமியில் விழுந்து உயிர் விட முயலும் போது, சுவாமிக ளெழுந்து அம்மா! உன் குழந்தையை எழுப்புகிறேன்!

வருவாயாக வென்று அப் பார்ப்பனி வீட்டுக்குட் சென்று அங் கிருந்த ஓர் பிரம்பை எடுத்து, அப்பா சுந்தரம் எழுந் திரு வென்று சொல்லி, தலையில் ஓரடி யடித்தது. உடனே மைந்தனும் உயிர் பெற் றெழுந்தனன்,

இவ் வாறு, சுவாமிகளிடத்தில், பல அற்புதங்கள் நடந்து கொண்டு வருங் காலத்தில், பிதா வாகிய சிவ சிதம் பரம் பிள்ளை,கை கட்டி, வாய் புதைத்து நின்று,சுவாமின்! என் மனைவி யாகிய மீநாம்பிகை பிரேதமா யிருக்க, யான் பாராதிருக்கும் வரந் தரல் வேண்டு மென்றும், சுவாமிகள் திருக் கரத்தால் எனது ஈமக் கடனை முடிக்க வேண்டு மென்றும், கேட்டுக் கொண்டனர்; மாதாவும், அவ் வாறே சுமங்கலி யாகவே யான் சரீரத்தை விட வேண்டு மென் றும், சுவாமிகள் திருக் கரத்தால் என் ஈமக் கடனை முடிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டனர்;இங்ஙன மிருக்கு நாட்களில்,ஒரு நாள்,மாதா பிதாக்க ளிருவரையு மழைத்து நமது கருமம் இதற்கு எட்டாவது நாட் காலையில் முடிந்து விடும்; நீங்கள் சிவ நாமத்தை உச்சரித்துக் கொண் டிருங்க ளென் றருள, அதைக் கேட்ட அவ் விருவர்களும், மிக்க வியாகூல சித்தர்க ளாய் பல பேர்க ளிடத்துங் கூறி, சுவாமிகள் இதற்கு எட்டாவது நாட் காலையில் சமாதி யடைந்து விடும்போ லிருக்கின்றது என்று தெரிந்து கொண்டு, தினந் தோறும் இடை விடாது சிவ நாமஞ் செபஞ்செய்து கொண் டிருந்தார்கள். எட்டா நாள் காலையில்,ஞாதிகள் முதலிய பல பேர்களும், இன்றை யத்தினம் சுவாமிகள் சமாதி யடையப் போகின்றது என வந்து கூடியிருக்கும் போது, மாதா பிதாக்க ளிருவரும் சுவாமிகளுக் கெதிரில், சிவ நாமஞ் செய்து கொண்டு பக்தி

வியத்தோ டிருந்தார்கள். அப் போது சுவாமிகள் எழுந்து இருவர் நெற்றியிலும் திரு நீறிட்டு அநுக்கிரகித்தது. அவ்வாறு,செய்யவே,மாதா பிதாக்க ளிருவரும் மூர்ச்சித்து ஒரு கணப் பொழுதிற்குள் சிவ பத முற்றனர். பின்னர், ஞாதியர்கள், இருவருக்குஞ் செய்ய வேண்டியவைகளைச் செய்து மயானத்துக்குக் கொண்டு போய் இருவருக்கும் ஒரே தானத்தில்,சிதை யடுக்கித் தீ மூட்டுதற் கான யத்தநஞ் செய்யவும்; சுவாமிகள் ஸ்நாநஞ் செய்து, பின் சென்று, கொள்ளி யெடுத்துக் கொண்டு, சுற்றி வந்து, தலைப் பக்கத்தில் வைத்து விட்டு, திரும்பி இன்ன திசையை நோக்கிச் சுவாமிகள் சென்ற தென்று ஒருவரு முணரா வண்ணம், ஓர் வெள்ளை வஸ்திரத்தோடு வெளிப்பட்டுப் பல தேசங்களிலும், சஞ்சரித்துக் கொண்டிருக்குங் காலத்தில், ஓர் நாள், வைத்தீசுவரன் கோயிலுக்கு வந்த போது, அங்கு சுவாமிகளின் ஞாதியர்களில் கோவிற் கணக்கரா யுள்ள ஒருவர் கண்டு, சுவாமிகளின் மகிமை யறியாது, தம்பி! நான் பத்து நாள் மருந்து சாப்பிட வேண்டி யிருக்கிறது. கோவிற் கணக்கை எழுதுகிறாயா வென்று கேட்கச், சிவ பணி விடை தானே பார்க்கிறே னென்று ஒப்புக் கொள்ள, உடனே கணக்கையும், எழுத் தாணியையும் சுவாமிகள் கையிற் கொடுத்தார். சுவாமிகள் வாங்கிக் கொண்டு கணக்கு மேடையி லிருந்து மணிய கார ராதியர் வந்து எழுத வேண்டியவைகளைச் சொல்கிறதற்கு முன்னமே எழுத வேண்டியவைக ளனைத்தையும் எழுதிக் கணக்கைக் கட்டிவைத்து விட்டு-பிட்டாபரரா யிருக்கும். மணியகார ராதியர் வந்து எழுதச் சொல்லும்போது எழுதி யாயிற்று கணக்கைப் பார்த்துக் கொள்ளுங்க ளென்று கூறும்; அங்ஙனமே, அவர்கள் கணக்கை யவிழ்த்துப் பார்க்கச் சரி

யாகவே யிருக்கும், ஓர் நாள் மணியகாரர் கணக்கி லுள்ள படி கோவிற் றிட்டத்தில் நாலு படி பாலும், ஒரு படி தேனும், எழுதா திருப்பதைப் பார்த்து,ஏன் எழுத வில்லை யென்று கேட்க, அதற்குச் சுவாமிகள், குருக்கள் பாலை யுந், தேனையும் அபிடேகியாமல் வீட்டுக்குக் கொண்டு போக வைத்திருக்கிறார்; போய்ப் பா ரென் றுரைக்கக், கேட்ட மணியகாரர், கோவிலுட் சென்று பார்க்கும் போது, பாலுந் தேனும் இருந்தது. இங்ஙனம் சுவாமிகள் எழுதி யுள்ள கணக்கினால், பால், தயிர், தேன், நெய்யாதிய களவும், உண்டியற் பணம், முடிப் பண, மாதிகளையும், மறைப்பவர்கள் களவும்,விளக் கெண்ணெய், அரிசி முதலிய களவும், வெளி யாய் விடு மென் றறிந்தனர். இவ் வற்புதத் தைக் கோவி லுள்ள அதிகாரிகள் யாவருந் தெரிந்து,சுவாமி களைக் கண்ட போது, அச்ச முற்று,ஆசாரத்தோடு எழுந்து கை கட்டி வணக்கத்தோடு நிற்பவர்க ளாயினர். இங்ங னந், தன்னைக் கண்டவுடன் யாவரும் அச்ச முறுவதை சுவாமிகள் பார்த்து, இந்தக் கணக்கை எழுதுவதினா லல்லவா யாவரும் நம் மிடத்து அச்ச முறுகின்றன ரென்று கருதி, உடனே அவ் வூரை விட்டு வெளிப்பட்டு விட்டது. வெளிப்பட்ட சுவாமிகள், தென் றிசை நோக்கிச் சிற் சில வூர்களிற் சஞ்சரித்துக் கொண்டு, அதி வீர ராமன் பட்டி னத்தை யடைந்து, தெருவிற் செல்லும் போது,அவ் விடத் தில் உப்பளம் பேஷ்கா ருத்தியோகத் துள்ளாரும், வேளாண் மரபினரு மாகிய சுந்தரம் பிள்ளை யென்பா ரொருவர், தெருவிற் செல்லும் சுவாமிகளைப் பார்த்துப் பெரியா ரென் றுணரா தழைத்து, உன் மர பியா தென வினவ, சுவாமிகள் கார்காத்த வேளாண்மா பென, அதற் குச் சுந்தரம் பிள்ளை நமக்குப் பூஜைக்கு இடம் பண்ணிக்

கொண் டிருந்த பையன் ஊருக்குப் போய் விட்டான்; நீ நம்மோடு போசநஞ் செய்து கொண்டு, நமது பூசைக்கு இடம் பண்ணிக் கொண் டிருக்கில், பூசா கைங்கரிய பலன் உனக்குங் கிடைக்கு மென்றனர், அதற்குச் சுவாமிகள், ஆன்மாக்களை நல் வழிப் படுத்தும் பெருங் கருணைய ராதலின், சம்மதித்துத் திநந் தோறும் பூஜைக்கு இடப் பண்ணி வைத்து விட்டு, தான் ஒரு புறம் நிஷ்டையி லிருக்கும். இஃதிங்ஙன மாக, சுந்தரம் பிள்ளை ஸ்நாந சந்தி முடித்துக் கொண்டு, பூஜை செய்யும் போது, அவர் குமாரி காந்திமதி என்னுங் கன்னிகை தேவார திருவாசகத் திருப் பாக்களைப் பிழை யற இசையோடு ஓதிக் கொண்டிருப்பது வழக்கம், இங்ஙனம் நடந்துவரும் பூஜா காலத்தில், சில போது அசைவற நிட்டையி லிருக்கும்; பிரக்ஞை வெளியில் வந்தபோது காந்திமதி பாடும் பாசுரங்களைக் கேட்டு, கண்களில் நீர் பெருகப் பரவசமா யிருக்கும்; பூஜை முடிந்தவுடனே சுந்தரம் பிள்ளை சுவாமிகளைச் சமீபத்தில் வைத்து கொண்டு, போசநஞ் செய்வர். சுவாமிகள் போசநஞ் செய்தவுடனே ஊருக்குப் புறம்பே யுள்ள குளக் கரையி லிருக்கும் தாழை விருக்ஷ நிழலில் நிட்டை செய்யும், சில போது சுவாமிகளைச் சுற்றிலும் வந்து, பாம்புகள் படம் விரித் தாடிக் கொண் டிருக்கும். இங்ஙன மிருக்குங் காலத்தில், ஓர் நாள் பூசைக்கு இடம் பண்ணி வைத்து விட்டு, வழக்கம் போல் நிட்டை புரியும் போது, அநுபூதியி லழுந்தி விருத்தி வெளிப்படாமல் எட்டு நாள் வரையில் நிவாத தல தீபம் போல், நிலைபெற வுடலும் அசை வறத் தம்பம் போ லிருந்து விட்டது. சுந்தரம் பிள்ளை சுவாமிகளைப் போசநத்துக்குப் பல மாகக் கூச்ச லிட்டு அழைத்தும் சரீரத்தைப் பற்றி யலைத்தும், சுவாமி

களுக்கு விருத்தி வெளியில் வராமலிருந்து ஒன்பதாம் நாள் கிட்டை கலைந்து எழுந்தது. உடனே சுந்தரம் பிள்ளையும், அவர் மனைவியாரும்; பாதத்தில் பணிந்து தம்பியென விளித்து, வந்தவர்கள் சுவாமிகள் என விளித்து, யாங்கள் அறிவின்மையால் சுவாமிகளைச் சிறுவராக நினைத்துப் பூசைக்கு இடம் பண்ணச் சொன்ன எங்கள் தவறை மன்னிக்க வேண்டும்: இன்று முதல் சுவாமிகளுக்கு யாங்கள் பணிவிடை செய்து வருகிறோம் என்று கேட்டுக்கொண்டவர்களாய், அன்று முதற் சுவாமிகள் பூசைக்கு இடம் பண்ணு முன்னமே தாங்களே பூசைக்கு இடம் பண்ணிக் கொண்டு வருவார்கள். இவ்வாறு நடந்து வரும் நாட்களில் ஒருநாள் சுந்தரம் பிள்ளை குமாரியாகிய காந்தி மதி யென்பாள் காம வேட்கை பொருதவளாயிரவில் எழுந்து சென்று வெளியில் ஒரு திண்ணையிற் சயனித்துக் கொண்டிருந்த சுவாமிகளைக் கட்டி ஆலிங்கனஞ் செய்யவும், சுவாமிகள் விழித்துக் காந்தி மதியின் கையை நெகிழ்த்து விட்டுத் திண்ணையினின்றுங் கீழே குதித்துக் கண் குருடாய் விட்டதோ வென்று சொல்லிக் கொண்டு அவ்வூரை விட்டு வெளிப்பட்டு விட்டது.

காந்தி மதி தனது எண்ணம் நிறைவேறாமற் போய் விட்டதே என்னும் வியாகூலத்தோடு வீட்டில் வந்து, சயனித்துக் காலையிலெழுந்த போது கண் குருடானது மன்றி, மார்பிலுள்ள தனங்களும் தோன்றாமல் மறைந்து விட்டது. இந் நிகழ்ச்சியைத் 'தாய்க் கொளித்த சூலா' வென்னும் பழமொழிப்படி மறையாது தாய்க்குணர்த்தினாள். அதைக் கேட்ட தாய், வியாகூலத்தோடிருந்தாள். சுந்தரம் பிள்ளை

பூசைக்கு வழக்கப்படி தேவார திருவாசகப் பாக்களை ஓது தற்குக் காந்தி மதியை யழைக்க, மனைவியார் காந்திமதி உடம்பு அசௌக்கியத்தால் சயனித்துக்கொண் டிருக்கிறாள் என் றுரைக்க, ஆறு லிருக்கட்டு மென்று பூசையை முடித்துப் பின் போசநஞ் செய்யும் போது சுவாமியைத் தேட, மனைவியார் சுவாமிகள் இரவிலே வெளிப்பட்டு யாண்டோ சென்று விட்டது என்றனள். அதைக் கேட் டுத் தேடிப் பார்க்க வேண்டு மென்று நினைத்துக் கொண்டு போசநஞ் செய்து, பின் தாம்பூலம் அருந்தும் போது மனைவி அருகில் வந்து, இரகசிய மாகக் காந்திமதிக்கு நிகழ்ந்த ஆபத்தை ஒன்று மொளியாது உணர்த்தினுள் அதைக் கேட்டு மிக்க வரந்தை யுற்று, ஞானிக ளிட்ட சாபம் ஞானிக ளா லன்றி, ஈசுரனுலும் நிவிர்த்திப்ப தரிது; ஆதலால், அந்தச் சுவாமிகளைக் கொண்டே நீக்கிக் கொள்ள வேண்டு மென நினைந்து, மனைவியையும், மகளையும், வண்டியிற் பிரயாணப் படுத்தித், தாமும் சுவாமிகள் சென்ற திசையைப் பல பே ரிடத்துங் கேட்டுக் கொண்டு, பிரயாண மாய்ச் செல்லும் போது, பட்டுக் கோட்டையி னருகே, ஓர் மரத் தடியில் நிட்டை செய்து கொண் டிருக்கும் பெரியவரைக் கண்டு, வணங்கி, எங்கள் மநக் குறை நீங்குமா வென்று வினவ, நீங்கள் தேடிச் செல்லும் குரு நாதனை நாளை மாலையிற் காண்பீர்கள், உங்கள் மநக் குறைவும், ஒழியு மென்றார்.

அதைக் கேட்டு, மறு நாள் அவ் விடத்தி னின்று நீங் கிச் சென்று, மாலையில் ஆவிடையார் கோவிலுக்கு வட புறம் ஒழுகும் காட் டாற்றை கடக்கவும், ஓர் சிறிய குளத்தி னருகே நிற்கும் விருக்ஷ நிழலில் சுவாமிக ளிருக்கக் கண்டு, இவர்கள் வண்டியை விட் டிறங்கிச் சுவாமிகள்

பாதத்தில் காந்தி மதியை நமஸ்கரிக்கச் செய்து,தாங்களும் வணங்கி, சுவாமின்! சிறிய ளாகிய காந்தி மதி செய்த குற்றத்தை மன்னித் தருளல் வேண்டும், சுவாமிக ளருள் புரியா தொழியில் யாங்கள் உயிருடன் வாழ்வது சிறப்பில்லை; ஆதலால், எங்கள் குறையை நீக்கி யருள வேண்டுமெனப் பன் முறை கேட்டுக் கொள்ளும் போது, காந்திமதியும் அங்ஙனமே கேட்டுக் கொள்ளவும், சுவாமிகள் இருகை கூர்ந்து அருகே யிருந்த சலத்தை யள்ளிக் காந்திமதியின் முகத்திற் றெளித்துச் செல்லுங்க ளென்று கட்டளை யிட்டுவிட்டுச்,சுவாமிகள் எழுந்து ஊருக்குட் செல்ல, காந்திமதிக்கு முன் போல் கட் பார்வையும், தாங்களுந் தோன்றின; மாதா பிதா புதல்வி யாகிய மூவரும் சுவாமிகளை விடாது பின் றொடர்ந்து செல்ல, சுவாமிகள் கோவிலிற் சென்று விநாயகர் சந்நிதாநத்தில் நிட்டாபரரா யிருந்தது. பின் றொடர்ந்து சென்ற சுந்தரம் பிள்ளை சுவாமிகள் நிட்டை கலைந்து வெளிப்படு முன்னமே சமையற் செய்து வைத்திருந்து வெளிப்பட்டவுடன் அமுதருந்தச் செய்ய வேண்டு மென்று கருதித் தீர்த்தத்தில் மூழ்கிச் சமீபத்திலுள்ள தம்பிரான் சுவாமிகள் மடத்தி லுள்ள ஓர் சாகையில், மனைவியையும், புத்திரியையும், சமையல் செய்யும்படி செய்து, தானும் ஸ்நாந சந்தி முடித்துக் கொண்டு அந்நங்கறி முதலியவைகளை எடுப்பித்துக் கொண்டு, சுவாமிகளிடஞ் செல்ல யத்தனிக்கும் போது. வெளியிற் சென்றிருந்து வந்த அம்மடத்துக் குரிய கட்டளைத் தம்பிரான் பார்த்து, மடாபிமானிக ளாகிய நீவிர் மடத்திற் போசநஞ் செய்து கொள்ளாமற் றனிச் சமையல் செய்தற்குஞ், செய்யப்பட்ட அமுது கறியாதிகளை வெளியிற் கொடு போதற்குங் காரண

மென்னை யென வினவச், சுந்தரம் பிள்ளை, முன் னடந்த விருத்தாந்தங்க ளனைத்தையும் ஒன் றொழியாது தம்பிரா னிடத்துத் தெரிவித்தனர்.

அதைக் கேட்ட தம்பிரான், ஆச்சரிய முற்று, நேற் றிரவு நமது கனவில் ஓர் பிராமணன் போற் றோன்றி நாளை யத்தினம் ஒரு முனிவன் வருகின்றான், அவனை நீ தரிசித்தனை யாயின், உனது குன்ம நோய் நீங்கிவிடும்; நமது பெயர் ஆத்ம நாத சாஸ்திரி யென்று சொல்லி, மறைந்தனர், அதைச் சொப்பனந் தானே யென்று உபேக்ஷையாக விருந் தேன்; இப் போது யோசிக்கு மிடத்து உங்களாற் சொல் லப்பட்ட சுவாமிகள் தான், சொப்பனத்தில் பிராமணராற் சொல்லப்பட்ட முனிவ ரென் றெண்ணுகின்றேன். ஆத்ம நாத சாஸ்திரி யெனப் பெயர் கூறினமையால், அவர் நமது ஆத்ம நாதரே யென் றுந் துணிகின்றேன். ஆதலால், யானும் உடன் வருகின்றே னென்று சொல்லி, ஸ்நாநாநுட்டாநங் களை முடித்துக் கொண்டு உபசாரத் திரவிய மாகக் கற் கண்டு, வாழைப் பழ முதலிய பழ வர்க்கங்களையு மெடுப் பித்துக் கொண்டு, தானும் கூடவே சென்று விநாயகர் சந்நிதியில் நிட்டையி லிருக்குஞ் சுவாமிகளைக் கண்டு உளத்தின்கண் ணெழும் பேருவகைக் கடற் படிந்து, நிட்டை கலையும் பரியந்தம் ஓர்புடை யொதுங்கி நின்று, சுவாமிகள் நிட்டையி லிருந்து விழித்த வுடனே, சுந்தரம் பிள்ளை செம்பில் சலங் கொடுபோய்ச் சுவாமிகள் திரு முன் சென்று பிக்ஷை செய் தருள வேண்டு மென்று விண் ணப் பித்தனர். சுவாமிக ளதற் குடன்பட்டு எழுதலும், உடனே கையி லிருந்த சலத்தால் சுவாமிகள் பாதத்தை

விளக்கி உலர்ந்த வஸ்திரத்தால் நீரொற்றி ஆதனத்தி லெழுந் தருளச் செய்தனர், அப் போது, சுந்தரம் பிள்ளை மனைவி யார், இலை பரப்பி நீர் தெளித்து அறுசுவை யுண்டிகளையும் உடனே படைத்தனர். படைக்கவும், தம்பிரான் ஆஞ் ஞைப்படி பிராமணன் கொடு வந்திருந்த ஆத்ம நாத ருடைய பிரசாத மாகிய சருக்கரைப் பொங்கலைத் தம்பி ரான் தனது கையால் சுவாமிக ளிலையிற் படைத்து, எம் பவப் பிணியை யொழித்தற் பொருட்டு எழுந்தருளிய குருவே! அடியேனை நெடு நாளாய்த் துன்புறுத்தும் இவ் வுடற் பிணியையும் நீக்கி யருளல் வேண்டு மென விண்ணப் பித்தனர் உடனே சுவாமிகள் சருக்கரைப் பொங்கலிற் சிறி தெடுத்து இதை யுட்கொள்வாயாகில், உன், னோய் நீங்கி விடு மென்று தம்பிரான் கையிற் கொடுத்துப், பின் சுவாமி களும் பிட்சை செய்து முடிகிறதற்கு முன்னரே தம்பி ரானுக்கு நெடு நாளா யிருந்த குன்ம நோய் அப்போதே நீங்கி, அதனால், அவர் ஆநந்த பரவசராய்ச் சுவாமிகள் பிக்ஷை செய்து எழுந்த பின் சுவாமிகளினது பரிகலச் சே டத்தையும் உட்கொண்டனர். அங்ஙனம், சுந்தரம் பிள்ளை, மனைவி புத்திரி ஆகிய மூவரும் பரிகலச் சேடத்தை யுட் கொண்டார்கள், பின்பு சுவாமிகள் முன்னர், தம்பிரான் வணக்கத்தோடு அடியேனுக்குச் சுவாமிகள் கொடுத்த பிர சாதத்தைப் புசித்த அளவில் நெடு நா ளாக வென்னைத் துன் பப் படுத்திய குன்ம நோய் சூரியனைக் கண்ட பனி போல, விலகி விட்டது. சுவாமின்! தங்கள் பாதத்தைத் தரிசிக்கவும், பரிகலச் சேடத்தை யருந்தவும், பெற்ற அடியேனுக்குப் பவப் பிணியும் நீங்கி விடு மென்பதிற் சந்தேக முளதோ? இல்லை! என் னுண்டவனே யென்று பல வாறு தோத்திரஞ்

செய்து வலம் வந்து வணங்கி ஆநந்த பரவசராய் நின்று இவ் வளவு பெருங் கருணை புரிந்த சுவாமிகளை விட்டிருத்தற்கு அடியேன் மநம் பொருது; ஆதலால், இவ் விடத்திலேயே வசிக்க வேண்டு மென விண்ணப்பித்தனர் அப்போது சுந்தரம் பிள்ளை எமது குல தெய்வ மாகிய சுவாமிகள், அதிவீர ராமன் பட்டினத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று பல தரம் விண்ணப் பித்தனர், இவ் விருவர்கள் வேண்டுகோட்கும் விடையாகச் சுவாமிகள், இவ னிங்கு மிரான், அங்கும் வரான், என் றருளியது. இவ் வா றருளியது, ஆண்டு, இராத் தங்கி விடியற் காலத்திற்கு முன் வெளிப்பட்டு விட்டது. இங்ஙனம் வெளிப்பட்ட சுவாமிகள், பல ஊர்களிலும், பல காடுகளிலுஞ் சஞ்சரித்துக் கொண்டு வருங் காலத்தில் தொண்டமான் புதுக்கோட்டையை அடுத்த திருக் கோகரணத்துக்குச் செல்லு மார்க்கத்தில், ஓர் குளக் கரையில் தான் செய்த பாப கர்ம பலத்தால், உதிர மாடன், இரத்த சாமுண்டி, பிர்ம ராட்சதை முதலிய துட்ட தேவதைகளால் பீடிக்கப்பட்டு அறிவு மயங்கி மார்க்கத்திற் செல்லுபவர்களைப் பல வாறு வைதலும், மேல் விழுந்து கடித்தலும், கல்லா லெறிதலும், மல சலங்களைக் கையி லேந்தி மேலே வீசுதலும், ஆகிய இப்படிப் பட்ட பல துன்பங்களை இழைத்துக் கொண்டு ஓர் பேயன் இருந்தான். அவ னிருக்கு மார்க்கத்தில் சுவாமிகள் செல்லப் பார்த்தவர்கள் ஐயா நீவிர் செல்லும் மார்க்கத்திலுள்ள குளக் கரையில், ஓர் பேயன் இருக்கிறான்; அவன் மார்க்கஸ்தர்கட்குப் பல துன்பங்களைச் செய்கின்றனன்; ஆதலால், வேறு வழி யாகச் செல்வீ ரென்று பல வாறு வற்புறுத்திக் கூறியும், சுவாமிகள் பதி லுரையாடாது, அக் குளக் கரைக்கு நே ராகவே செல்லும் போது, அப் பேய்க்

கோட்பட்டான்; சுவாமிகளை அடிக்கக் கல் முதலிவை களை எடுத்துக் கொண்டு ஓடி வந்தனன். அவன் வருவதைச் சுவாமிகள் பார்த்து நகைத்தது உடனே மருளன் மருணீங்கி, எறிதற் கெடுத்த கல் முதலியவைகளைக் கீழே போட்டுவிட்டு, சுவாமிகளை நமஸ்கரித்து எழுந்து, பலவாறு தோத்திரஞ் செய்து, சுமார் இருபது வருட காலமாக வென்னை வருணாச்சிரம தருமங்களை விடுத்து மகா பாபத் தொழில்களைச் செய்யும்படி செய்த துட்ட தேவதைகள், உமது புன்னகையினுலும்,கிருபா வீட்சணியத்தினு, முற் காலத்திற் சிவ பெருமான் புன்னகையால் ஒழிந்த திரிபுரம் போலாயின. ஆயினும், நீண்ட காலமாகச் சாதிப் பிரஷ்டனுகிய என்னுல் செய்யப்பட்ட பாபங்கள் நரகி லமிழ்த்திவிடுமே! அன்றியு, மெனக்குப் பிராமணத்துவம் உண்டோ! இல்லையோ வெனப் பய பக்தியோடு வணங்கிக் கேட்க, சுவாமிகள் உனது செயல் மறந்து துர்த்தேவதைகளின் வசத்தாய் நின்று நின்றுற் செய்யப்பட்ட பாப கர்மங்கள் உன்னை நரகத்தி லமிழ்த்தா, உனக்குப் பிராமணத்துவம் உண்டு; அஞ்சாதே யென்று திருவாய் மலர்ந்தது.

பின்னர் அவ் விடம் விட்டு நீங்கிப், பல ஊர்களிற் சஞ்சரித்துக் கொண்டு, ஒரு நாள் இரவில் விராலி மலைக்குச் சென்றபோது, பெரு மழை பெய்ய, அதற்கு ஒரு தாசி வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி யிருந்தது. சுவாமிகள் பசியோ டிருப்பதை விராலி மலை முருகக் கடவுள் அறிந்து, அர்த்த சாமத்தில் தனக்கு நிவேதன மாகிய சருக்கரைப் பொங்கலைத் தாம்பாளத்தோடு எடுத்துக் கொண்டு, ஒரு சிறிய பிராமணப் பிள்ளை வடிவ மாக வந்து அப்ப! வென

விளித்து, இவ் வஸ்த்தைப் புசிப்பா யென்று கொடுத்து விட்டு மறைந்தருளினர். சுவாமிகள், அவ் வஸ்த்தில் சிறிது புசித்து, மற்றையதை அத் தட்டோடு தள்ளிவைத்து விட்டு, திட்டையி லிருந்தது. கோவில் அர்ச்சகரை, புதுக் கோட்டை தாசில்தார் சுவாமியின் அர்த்த சாம நைவேத்தியப் பிரசாதங் கொண்டு வரும்படி தெரிவித் திருக்கின்றமையால், கொண்டுபோக வேண்டு மென்று மழை நீங்குகிற வரையி லிருந்து, பின் பிரசாதத்தை யெடுத்தற்கு வைத்தவிடத்திற் பார்க்கும்போது, இல்லாமையால் மணியகாரரிடத்தில், நீர் சொல்லியபடி தாசில்தாருக்கு அனுப்ப கோவிலி லுள்ள தாம்பாளத்தோடு வைத்திருந்த பிரசாதம் காணப்பட வில்லை, எவனோ திருடிக் கொண்டு போய் விட்டான் என்று சொற்றனர். அதைக் கேட்ட மணியக்காரர். இங்கு ஒருவரும் வரவில்லை; சுயம்பாகிப் பிராமணன் தாசி வீட்டுக்குக் கொண்டு போயிருப்பான்; பரிசோதிக்க வேண்டு மெனத் தீவத்தி வெளிச்சத்தோடு காவற்காரர்களை அழைத்துக் கொண்டு சென்ற போது, தாசி வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது; வெளித் திண்ணையிற் சொற்ப பிரசாதத்தோடு தாம்பாளமும்; பக்கத்தில் சுவாமிகளும் இருப்பதைக் கண்டு, சுவாமிகளை நீ யாரடா! இந்தத் தாம்பாளமும், பிரசாதமும் உனது பக்கலி லிருக்கக் காரணம் என்னென்று வினவ, சுவாமிகள் யாரோ ஒரு பிராமணக் குழந்தை நம்மை விளித்து, இவ் வமுதைப் புசிப்பா யாக வென்று கூறிக் கொடுத்துப் போயிற்று. அதை நாம் வேண்டிய அளவு புசித்து, எஞ்சியதை வைத்து விட்டோ மென் றியம்பிற்று. எதிர்த்த திண்ணையில் படுத்திருந்தவர், இவ் வமுதைப் புசிப்பா யென்ற சொல் எங்கள் காதிலும், கேட்கப்பட்டது. வசனித்த புருடன் யாரோ காணப்பட

வில்லை யென்ருர்கள். மணியகாரர் இவனை திருட னென்று, மதித்தற்கு நியாய மில்லை; ஆயினும், இவை களைத் தாசில்தாரிடத்திற் றெரிவிக்க வேண்டு மென்று சொல்லுவதற்கு முன்னமே, நித்திரையி லிருந்த தாசில்தார் சொப்பநத்தில், முருகக் கடவுள், ஓர் பரதேசி யாக வந்து, அப்பா உனக் காக அர்ச்சகர் வைத்திருந்த அமுதை யான் திருடித் தாசி வீட்டுத் திண்ணையிற் பசியோ டிருந்த ஞாந தீர னுகிய முநிவனுக்குக் கொடுத்துவிட்டேன், அம் முநி வன் புசித்து மீதம் வைத்திருக்கின்ருன். அவ் வுச்சிட் டத்தைச் சீக்கிரத்திற் சென்று, புசிப்பாயாகில் உனக் குள்ள சிர நோயும், காச நோயும், அப்போதே நீங்கி விடும், நாம் மலைக்குச் செல்கின்ருேம் என் றருளிச் செய்து மறைந் தனர்.

இங்ஙனம் கனாக் கண்ட தாசில்தார், விழித்து முருகக் கடவுளே சொப்பநத்தில் வந்தவ ராகும்; நாம் தாசிவீட்டுத் திண்ணையி லிருக்கும் முநிவரரைத் தரிசித்து, அவர் உச்சிட் டத்தையும்,புசிக்க வேண்டு மென் றெழுந்தபோது, மணிய காரர் வந்து நடந்ததைத் தெரிவிக்க; அதைக் கேட்ட தாசில்தார் மிகுந்த அன்போடும், அதிவிரை வாகச் சென்று தாசி வீட்டுத் திண்ணையி லிருக்கும் சுவாமிகளை நமஸ் கரித்து எழுந்து, மிகுந்த வணக்கத்துடன் நின்றனர். சுவாமிகள் அவரைப் பார்த்து இவ் வமுதை நீ புசிப்பா யெனவும்; மீண்டும் நமஸ்கரித்து எழுந்து, அப்பிரசாதத்தை யெடுத்து மிக்க ஆதரவோடு உட்கொண்டனர். அந்த உத்தர க்ஷணமே சிரு கீ ரென்று இழுத்துக்கொண் டிருந்த காச நோயும், ஒருத் தலை நோயும், நீங்கிவிட்டது.

உடனே தாசில்தார் சந்தோஷ சித்த ராய்ச் சிரசிற் குவித்த அஞ்சலியோடு எதிர் நின்று உரோகி யாகிய வென்னைக் கணப் போதிற் றேவரீர் உச்சிட்ட மாத்திரத்தால் அரோகியாக்கின வுமது மகிமையை என்னு லெங்ஙனம், அளவிடற்பால தாம், என்னைத் தடுத்தாட் கொண்ட வள்ளலே! எனப் பல வாறு துதித்துச் சுவாமிகளுக்கு அடியேன் தொண்டு செய்து கொண் டிருக்கும்படி உத்தரவு செய்ய வேண்டு மென விண்ணப்பித்தனர். அதற்குச் சுவாமிகள்,முருகனுக்குத் தொண்டு செய்வா யாக வென்று திரு வாய் மலர்ந்தருளிற்று.

பின், சில திந மங் கிருந்து, ஓர் நாள் வெளிப்பட்டுப் பல ஊர்களிலும் சஞ்சரித்துக் கொண்டு, பற் பல திருவிளையாடல்களை ஆண் டாண்டு நடாத்தி, இராஜ மன்னார் குடியில் வந்திருக்குங் காலத்தில், இராஜ கோபால சுவாமி கோவிலிற் சென்று சந்நிதியில் நிட்டையி லிருக்கும்போது, பூசை செய்ய வந்த அர்ச்சகர் சுவாமிகளைப் பார்த்து யாரடா சூத்திரா! நீ கோபாலன் சந்நிதியில் வந்து குந்தியிருக்கின்றாய்! எழுந்து வெளியிற் போ, போ, வென்று அதட்டிச் சொல்வதைக் கேட்டுச் சுவாமிகள், பூசகனைப் பார்த்து நீ கோபாலன் திருமேனியைத் தீண்டி அர்ச்சித்தற் கருக னல்ல; சூதக னென் றென்று சொல்லிக் கொண்டு வெளியே போய்விட்டது. உடனே பூசகன் மனைவியார் குளிக்கப் போய் வழுக்கிக் குளத்தில் விழுந்து இறந்து விட்டன ளென்று ஆள் வந்து சொல்லவும், பூசகர் வெளியிற் சென்றுவிட்டனர். அப் போது அங்கு நிகழ்ந்ததைக் கண் ணுற்ற சிலர்கள், பூசகனைச் சூதக னென் றென்று

சொல்லி வெளியிற் போந்தவர் சோதிட வல்லரோ? அல்லது, திரி கால வுணர்வுடைய ஞானியோ? என வியந்து ஒருவர்க் கொருவர் பேசிக்கொண்டு அவரைப் பார்ப்போ மென்று வெளியிற் சிலர் ஓடிப்பார்க்கக், காணாமையின், இவர் அசரீரியாகிய கடவுளரே போலு மென மேலும் வியந்து கொண்டு நின்றார்கள்.

பின்னர், வெளியிற் போந்த சுவாமிகள், சிற் சில வூர்களிற் சஞ்சரித்துக்கொண்டு நீடா மங்கலத்தி னாற்றங் கரைப் படுகையில் வந்திருக்கும் போது, ஓர் நாட் பதினான்கு வயதினை யுடைய வோர் வடுகச் சிறுவன் மாலைப் போதில் ஆற்றங் கரைக்குச் சென்றபோது, ஆண்டோர் பெரிய சற்ப மானது படம் விரித்துச் சீறிக் கொண்டு, சிறுவனைத் தீண்டற்குத் துரத்தவும், சிறுவன் பயந்து அலறிக் கொண்டு ஆங் கோர்பால் நிட்டையி லிருக்கும சுவாமிகள் முன்னர் ஓடிவந்து வீழ்ந்தனன் சுவாமிகள், கண் டிறந்து ஓடிவருஞ் சற்பத்தை கை யமர்த்தி, நல்ல பிள்ளையைத் தீண்டாதே யென்று கூறவும், உடனே சற்பம் படத்தைச் சுருக்கிக் கொண்டு திரும்பித் தானிருக்கு மிடத்துக்குச் சென்றுவிட்டது. அப் போது, சிறுவனழுதுகொண்டு வீட்டுக்குப் போகப் பயமா யிருக்கிறதே! யென் செய்வே னென்றனன் அச் சிறுவன் வார்த்தையைக் கிருபா சமுத்திர மாகிய சுவாமிகள் கேட்டு, ஓர் மரத்தைப் பார்த்து, ஓ வ ந வா ர சி யே; "இச் சிறுவனை வீட்டிற் கொடுபோய் விட்டு வருவா" யென ஆஞ்ஞாபித்துவிட்டுப், பின்னுங் கண்களை மூடி நிட்டையி லிருந்தது, உடனே அம் மரத்தி லிருந்த

சடாமுனியானது சிறுவ னுடைய பிதா வடிவங் கொண்டு வந்து சிறுவனை யழைத்துக் கொண்டு வீட்டி னருகே சென்று சிறுவனை நீ வீட்டிற்குட் செல்வாய், நான் பெரு மாள் சேவை செய்து கொண்டு வருகிறே னென்று கூறி விட்டு மறைந்தது. சிறுவன் வீட்டினுட் சென்று தன் மாதா விடத்திற் றுன் ஆற்றங் கரைக்குச் சென்றதும், ஆங்கு நிகழ்ந்ததையுங், கூறிப் பின்பு, என்னை நாயினு வந்து அழைத்துக் கொண்டு வந்தா ரெனக் கூறினுன். அவ் வார்த்தையைக் கேட்ட தாயார், நாயினு வெங்கே யென் றனள்: அதற்குச் சிறுவன் நாயினு பெருமாள் சேவைக் குச் சென்றிருக்கிருர் வருவா ரென்று சொல்லிக்கொண் டிருக்கும்போது, மன்னுர்குடிக்குச் சென்ற பிதா வானவர் வந்தார். வந்தவரை மனைவியார் பார்த்து, நமது பிள்ளை சென்ற விடத்தை யெப்படித் தெரிந்து அழைத்து வந்தீர்க ளென வினவ, அவர் நா னிப்போது தான் மன்னுர் குடியி லிருந்து வருகிறேன். பிள்ளை சென்ற விடத்தை யான் தெரிந்தது மில்லை, அழைத்து வரவு மில்லையே யென்றனர். அப் போது சிறுவன் பிதாவைப் பார்த்து என்ன நாயினு ஆற்றங் கரையில் அழுது கொண்டிருந்த என்னை யழைத் துக்கொண்டு வந்து வீட்டில் விட்டு விட்டுப் பெருமாள் சேவை செய்து வருகிறே னென்று சென்ற நீங்க ளிப் போது இங்ஙனம் சொல்லுகிறீர்களே யென்று கேட்கவும், பிதா ஆற்றங் கரையில் நிகழ்ந்த தென்னை? நீ கூ றென்று கேட்கப், பிள்ளை யானவன், ஆங்கு நிகழ்ந்ததைக் கூறி னன். பிதாவானவ ரிவ் வற்புதத்தைக் கேட்டு மிகுந்த ஆச்சரிய முற்று, அப் பெரியாரைத் தெரிசிக்க வேண்டு மென நினைந்து, சிறுவனோடு மற்று முள்ள மனைவிய ராதிய

சிலர்களை யழைத்துக்கொண்டு சென்று பார்க்கும்போது, சுவாமிகள் திட்டையி லிருந்தது. திட்டையி லிருக்குஞ் சுவாமிகளை நமஸ்கரித் தெழுந்து சமீபத்திற் செல்லாமல் நின்று, யென் பிள்ளையை விடத்தால் மரிக்காம லிரட்சித்த கடவுளே! வுலகத்தி லுள்ள தெய்வங்களும் ஏவற்பணி செய்யத் தக்க சுவாமிகளை யித்தேவ ரென்று அறிவிலி யாகிய யான் எங்ஙன மதித் தறிவே னெனப் பல வாறு துதித்து, எனது பிள்ளையைச் சுவாமிகள் நல்ல பிள்ளை யெனக் கூறினமையா லங்ஙனமே யான் நல்லய்ய னெனப் பெயரிட்டுக் கொண்டன னென விண்ணப்பித்துப், பின் காலையில் வந்து தெரிசித்துக் கொள்ளலா மென்று சொல்லிக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டனர்.

அதன் பின்னர், மறுநா ளவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கிழக்கே யுள்ள பழங் களத்து ரென்னு மோர் சிற் றூரிற் செல்லும்போது, ஆங்கு ஓர் பெண் பூரண கருப்பவதியாகிப் பிள்ளை பிரசவிக்காமல் நான்கு திந மாக அவஸ்தைப் படுவதால், தாயு மிறந்து, சிசுவு மிறந்துபோ மென்று, வீட்டி லழுது கொண்டிரா நின்ற உடையார் மரபின ராகிய ஒருவர் ஆற்றங் கரையின் மார்க்க மாகச் செல்லுஞ் சுவாமிகளைப் பார்த்துச் சீக்கிர மாக ஓடி வந்து நமஸ்கரித்துச் சுவாமிகளி னிரண்டு பாதங்களையும் பிடித்துக் கொண்டு சுவாமின்! என் மனைவி கருப்பவதி யாகி நான்கு திந மாகப் பிள்ளை பிரசவிக்காம லவஸ்தைப்படுகிறுள். இரண்டு நிமிடத்துக்குள் இறந்து விடுவாள் போற் றோற்றுகின்றது; அவ ளிறந்தாள் யானு மிறந்து விடுவே னுதலாற் சுவாமிகள் தாயுஞ், சிசுவும், பிழைக்கும்படி கிருபை செய்ய வேண்டு மென முறையிட் டழுவதைச் சுவாமிகள்

பார்த்து, நீ போய்ப் பார்க்கு முன்னமே ஆண் குழந்தை பிரசவித்து விடும்;உயிர்ச் சேதம் வராது; சென்று பார்ப்பா யென்று சொல்லவும், அவ் வுடையா ரெழுந் தோடி வீட்டின் வாசற்படியிற் கால் வைக்கவும், சுவாமிகள் கூறிய வண்ணமே ஆண் குழந்தை பிரசவித்தது; அதைக் கேள்வியுற்ற உடையார், அடங்கா மகிழ்வை யுடைய ராய்ச் சுவாமிகள் கூறியதை யங்குள்ளார்க்குக் கூறிப் பின்னும் சுவாமிகள்பால் வரவும், அங் குள்ள பலர்களும், சுவாமிகளைத் தரிசித்தற்கு வந்தனர். இவர்கள் வருதற்கு முன்னர் சொற்ப தூரஞ் சென்று, ஓர் அரச மரத்தடியி லிருந்து நிட்டை கூடியது. தரிசிக்க வந்தவர்கள், பால் பழ முதலிய வற்றை வர வழைத்து வைத்துக் கொண்டு சுவாமிகள் நிட்டையில் நின்றும் வெளிப்படும் பரியந்த மிருந்து, வெளிப்பட்ட பின்னர், பால் பழ முதலியவற்றை முன்னர் வைத்து நமஸ்கரித்து, அவைகளை யுட் கொள்ள வேண்டுமெனப் பலர்களும் பன் முறை வேண்டினர். அவ் வேண்டுகோளுக் கிரங்கி, யவைகளிற் சிலவற்றை யருந்திப் பின்னும் நிட்டை கூடியிருந்து இரவில் அவ்விடம் விட்டு வெளிப்பட்டது.

இங்ஙனம் வெளிப்பட்ட சுவாமிகள்,சிற் சில வூர்கள், நதி தீரங்கள்,வநங்களிற் சஞ்சரித்துக் கொண்டு, தன் சகோதர ராகிய நமச்சி வாய சுவாமிகள் வசிக்கும் நீலப் பாடியில் வந்திருந்தபோது, ஓர் நாள் நமச் சிவாய சுவாமி யங்குள்ள பெரியவரிடத்தில், சிவ ஞாந போதம் பாடங் கேட்டுக் கொண் டிருக்குஞ் சமயத்தில், சுவாமிக ளோர்பாற் சென்றிருந்தது. அதைக் கண் ணுற்ற பெரியார், இவன் சைவ சமய தீக்கைக ளில்லாதவனும், சிவ பூசை யாதிய ஆசார

நியம மில்லாதவனு மாகக் காணப்படுகின்றமையால்,இவன் முன்னர், சாத்திர பாடஞ் சொல்லப்படா, தென்று, தான் நடத்திவந்த பாடத்தை நிறுத்தினர். அதனைச் சுவாமிகள் தெரிந்து, தம்பியை நமச்சி வாய வென் றழைத்து, ஐந் தோலையும்,எழுத் தாணியும்,கொணர்ந்து கொ டென் றருளியது. அங்ஙனமே கொணர்ந்து கொடுக்கச், சுவாமிகள் வாங்கி அவ் வோலைகளை வாரி யே டாகச் சேர்த்து, முகப் பில், சிவ ஞான போதச் சிந்தன மெனப் பெய ரெழுதி, அவ் வேட்டில் சிவ ஞான போதத்தைச் சிந்திக்கும் முறையைத் தெளி வாக வெழுதி முடித்துப், பின் நமச் சிவாய சுவாமிக ளிடத்திற் கொடுத்து, இதி லுள்ள படி சிந்தனஞ் செய்து வருவாயானல், சிவ ஞான போத மென்னும் நூலை முறையே கேட்டுச் சிந்தித்தலினல் வரும் பயனை எளிதி லடையலா மெனக் கட்டளையிட் டருளியது. அக் கட்ட ளையைச் சிரமேற் றாங்கிய நமச் சிவாய சுவாமிகள், அவ் வேட்டைத் தனக்குப் பாடம் சொல்லும் பெரியோரிடத் துக் கொடுத்தனர். அவர் அதை வாங்கிப் பார்த்து. பரம் பரை யாக வுணர்ந்த பெரியோர்களாலும், அறியப்படாத அநுபூதிமய மான அரும் பெரருட்கள் வேதத்துக்கும், ஆக மத்துக்கும், விரோத மின்றி எளிதில் விளங்க வரைந்திருப் பதை அறிந்து, ஆச்சரிய முற்று, சிவாநுபூதியுடையரா யன்றோ இருக்கின்றார்! நாம் இச் சிவ ஞானச் செல்வரை எளி தாக நினைத்தோமே! ஆ! ஆ!! இது என்ன பாவ மென்று மிகவும் உடல் பதற, மெய் வெயர்ப்பச் சீக்கிர மெழுந்து வந்து சுவாமிகளை நமஸ்கரித்து, அடியேன் சுவாமிகளை சமயாநுட்டான ஆசார மில்லாதவ ரென மதித்துப், பாடத்தை நிறுத்திய குற்றத்தை மன்னிக்க

வேண்டு மென்று பய பக்தி விசுவாசத்தோடு கேட்டுக் கொண்டார்.

பின்னரும், அவர்களால் உபசரிக்கப்பட்டு அவ் விடத்திலேயே இருந்து வரும் போது, அவ் வூரி லுள்ள சிதம்பர முதலியா ரென்பவர், ஐம் பது வயது பரியந்தம் தமக்குப் புத்திரப் பே றின்மையால், மடத்தி லிருக்கும் பெரியோரிடம் வந்து, சுவாமிகள் முன் சொல்லிய வண்ணம், இராமேச்சுர மாதிய ஸ்தல யாத்திரைகளும், தநுக் கோடி முதலிய தீர்த்த ஸ்நாநங்களையும், நாகப் பிரதிட்டை, தண்ணீர்ப் பந்தல், அந்ந தாநம் முதலியவை செய்தும், புத்திரோற்பத்திக்கு விக்கிந மாக இருக்கும்படி, பூர்வம் என்ன பாபம் செய்தேனே? அது பிராயச்சித்தத்தால் நீங்குமோ, நீங்காதோ? அது நீங்குவதற்கு யாதோ ருபாயமும சாத்திரங்களிற் கூற வில்லையோ வென்று கேட்க, அம் மடத்துச் சுவாமிகள், அதற்கு எவ் வகைப் பாப மாயினும் நிவிர்த்தி யாதற்குச் சாத்திரங்களிற் கூறிய ஓர் சிறப்பு விதியை யான் கூறுகின்றேன் கேட்பாயாக; அஃதாவது:— பிர்மக்கியாநி யாகிய ஓர் மகானுக்குப் பிட்சை செய்வித்து அவ ருண்ட பரிகலச் சேடத்தைப் புசித்தால் நீங்கிவிடும், ஆதலால், நீ அதையுஞ் செய்து முடிப்பா யென்று கூறினார். அதைக் கேட்ட சிதம்பர முதலியார், அத் தகைய ஞாநியை நா னெப்படித் தெரிந்து கொள்வே னென்றுரைக்க, உன்னைக் கிருதார்த்த னுக்கும் பொருட்டே போலும், இப் போது நமது மடத்தில், பிர்மக் கியாநியாகிய ஓர் முநிவரர் வந்திருக்கின்றனர். அவருக்கு நாம் சொல்லியபடி செய்வா யென்று கூறி, சுவாமிகளைத் தெரிசிப்பிக்க, முதலியாரை அழைத்துக் கொண்டு, சுவாமிகள் திரு முன் சென்று, நமஸ்கரிப்பித்துக் கைகட்டி நின்று

இம் முதலியார் பிக்ஷையை ஏற்றுக் கொள்ள வேண்டு மெனப் பிரார்த்தித்தனர். முதலியாரும், அன்று முதல் சுவாமிகளுக்குப் பிக்ஷை கொடு வந்து படைத்துச் சுவாமி கள் புசித்த பின் எஞ்சிய பரிகலச் சேடத்தை மனைவியுந், தானு முட் கொண்டு வந்தனர். இவ் வாறு, நடந்து வரு கின்ற ஒன்பதா நாள் சுவாமிகள், கிரகப் பிரவேச மாய் விட்டது, இனி மேற் பிக்ஷை கொண்டு வர வேண்டா மென்று திரு வாய் மலர்ந்தருளி, அன் றிரவு தானே அவ் விடம் விட்டு வெளிப்பட்டு விட்டது. சுவாமிகள் திரு வாய் மலர்ந்த வண்ணமே அன்று முதல் முதலியார் மனைவி கருப்பவதி யாகிப் பத்தாந் திங்களில், புத்திரனைப் பெற்று, மாதா பிதாக்க ளிருவரும் களிப்புற் றிருந்தனர்.

இங்ஙன மிவர்கட்கு மகப் பே றளித் தருளிய பின்னர், நீலப் பாடியி னின்றும், வெளிப்பட்ட ஸ்வாமிகள், சிதம் பரம், விருத்த சைலம், அண்ணாமலை, வேங்கட முதலிய ஸ்தலங்களிற் சிற் சில அற்புதங்கள் தோன்றச் சஞ்சரித்துக் துக் கொண்டு, திரு வொற்றியூர் கடற் கரையி லும்,பட்டி னத் தடிகள் சமாதியின் பக்கங்களி லும், வசித்துக்கொண் டிருக்கும் போது, அவ் வூரில், ஓர் பார்ப்பனப் பெண் துட்ட தேவதைகளாற் பிடிக்கப்பட்டமையா னும், பித்த தோடத்தா னும், உண் டாகிய சித்தப் பிரம்மையால்,உடை நழுவுத லாதிகள் தெரியாமல், தெருவிற் புறப்பட்டு ஓடுதல், முற்படுவோர்களை வைதல், அடித்தல், கட்டிப் பிடித்தல், தகாத காரியங்களைச் செய்தல், முதலிய குற்றங்களைக், குடும் பத்தார்கள் பார்த்து, வீட்டி லடைத்து வைக்கினும்,அடங் காமல்,வெளியி லோடுத லு மாக விருப்பதைப் பிதா வாகிய அந்தணன் பார்த்துப், பல வைத்தியர் மாந்திரீகர்களைக்

கொண்டு பார்க்கச் செய்ய, பார்ப்பவர்களுக்கு உடனே சுரமுந், தலை நோயு முண்டாவ தன்றித், தலையில் சாம்பற் குப்பை விழுதலு மாக விருப்பதைக் கண்டு, யாவரும்பார்க் கப் பயம் அடைந்து, வராமல் இருந்ததைப் பற்றிப், பிதா மிக்க வருத்த முடையராய்,ஒற்றி யூர்ச் சிவ பெருமான் சந் நிதிக்குச் சென்று, நமஸ்கரித் தெழுந்து, துதி செய்து, அன் பர்க் கெளிய அப்பனே!என் புத்திரியைப் பற்றிய நோய், பேயாதிகளை மூன்று நாளைக்குள் நீக்கி யருளல் வேண்டும்; அங்ஙனம் அருளா தொழியில், என் புத்திரியை விட மூட்டி இறக்கச் செய்வேன். அங்ஙனஞ் செய்யில், அவள் பேயாதிகளாற் படுந் துன்பங்களும், அவள் மூல மாக எனக் குண் டாகிய துன்பங்களும், நீங்கி விடும். அக் கொலை யால் வரும் பாபத்தை யுனக்கே அற்பணஞ் செய் வேன். இது சத்திய மென்று சந்நிதியில் விண்ணப்பித்து விட்டு, வீட்டுக்கு வந்து இரவிற் துயிலும் போது, சொற் பநத்தில் ஒற்றி யூர்ச் சிவ பெருமான், ஓர் தவத்தார் போற் றோன்றி, அப்பா! ஓர் ஞான சித்த னுகிய சீவன் முத்தன் அவ தூத னய்க் கடற் கரையிற் சஞ்சரித்துக் கொண் டிருக்கின்றுன். அவன் நாளைக் காலையில் பட்டிநத்தார் சமாதியின் பக்கத்தில் நிட்டை செய்து கொண்டிருப் பான், அவனது கண்ணோக்கம் படும்படி உனது பெண் ணைக் கட்டித் தூக்கிக் கொடுபோய் வைத்தா யாகில், அவன் நிட்டை கலைந்து வெளி வந்து உன் புதல்வியை நோக்குவான். உடனே அவளைப் பிடித்த பேய் நோய்க ளனைத்தும் நீங்குவதோடு, சென்ம நோயும், நீங்கிவிடு மென்று சொல்லி மறைந்தனர். இவ் வாச்சரியக் கனு வைக் கண்ட பிராமணர், காலையி லெழுந்து, இது ஒற்றி

யூர்ச் சிவ னருளே யென்று துணிந்து, தன் ஞாதியர் சில ரைக் கொண்டு, தன் புதல்வியைக் கட்டுவித்து வண்டியி லேற்றிச் சென்று, பட்டிநத்தடிகள் சமாதியின் பக்கத்தில் தனக்குக் கனவி லருளிச் செய்தபடி திட்டையி லிருக்கும் அவ தூத ராகிய சுவாமிகள் திரு நோக்கம்படும்படி யாக நேரி லிருக்கச் செய்து, அசையாமல் பிடித்துக்கொண்டிருந் தனர். சற்றுப் போதிற்குப் பின், திட்டையி லிருந்து சுவாமிகள் கண்ணைத் திறந்து, எதிரி லிருக்கும் பெண்ணைப் பார்க்கவும், அப் பெண்ணைப் பிடித் திருந்த பேய், நோய் களனைத்தும் நீங்கின. நீங்கலும், முன் னுள்ள, நாணம், மடம், அச்சம், பயிர்ப் பென்னும், மடந்தையர்க் குரிய உத்தம குணங்களும் சித்த பரிபாகமு மவட்குத் தோன் றின, தோன்றவும், தம்மைப் பிடித்திருந்தவர்களை கையை விடும்படி சொல்லி எழுந்து, வஸ்திரத்தைச் செவ்வையாகக் கட்டி, கூந்தலை முடித்துக் கொண்டு, சுவாமிகளைப் பல முறை வலம் வந்து நமஸ்கரித் தெழுந்து, சுவாமிக ளெதி ரில் பய பக்தி, விசுவாசத்தோடு நின்று எங்கள் குல தெய் வமே! தேவரீர் வீட்சண்ணியத்தால் அடியேனைப் பிடித் திருந்த துட்ட தேவதையாதிகள், சூரியனைக் கண்ட இருள் போல் நீங்கிவிட்டன; இவ் வாறே, அடியேனது பவ நோயையும், நீங்கும்படி அநுக்கிரகஞ் செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்தனள். அதற்குச் சுவாமிகள், "அறியப் படுவன வாகிய ஜக ஜீவ பர கற்பனைகளை விடுத்துத் தனித்து அறியு மறிவாகவே இருக்கில், பவ நோய் நீங்கு" மென வநுக்கிரகித்து அவ் விடம் விட்டு வெளிப்பட்டது.

இங்ஙனம், அநுக்கிரகம் பெற்ற பார்ப்பனப் பெண், வீட்டுக்கு வந்து பிதாவை நோக்கி, என் குரு நாதன் உத் தரவுப்படி யான் ஒரு வாரந் தனித்திருக்க வேண்டும். அது

வரையில் எனக் கன்னுகாரம் வேண்டுவ தில்லை; என்பா லொருவரும் வரக் கூடாது; எட்டா நாள் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி, ஓர் அறையிற் புகுந்து மனதை யொரு நிலைப்படுத்தி, சுவாமிக ளநுக்கிரகித்தபடி நிட்டையி லிருந்து, எட்டா நாள் விதேக முத்தியை யடைந்தனள்.

இப் பார்ப்பனப் பெண்ணுக்கு ஞானாநுக்கிரகமுஞ் செய்து விட்டு வெளிப்பட்ட சுவாமிகள், சென்னை, மயி லாப் பூர், திருக் கழுக் குன்றம், சிதம்பரம் முதலிய ஸ்தலங் களிற் சஞ்சரித்துக் கொண்டு, காரைக்கா லுக்கு வந்திருக் கும் பொழுது, அங் குள்ள ஊர் மஸ்தான்சாகிப் பாகிய பெரியவர் வந்து, சுவாமிகளைப் பார்த்து, அப்பா! நீயும், நானும், எப்படி யிருந்தால், எங்கும் நிறைந்த பொரு ளாக யிருக்கலா மென்று வினவ. அதற்குச் சுவாமிகள், நீ, நான், அது, இது, என்னும் சுட் டிறந்து நின்றால், எங்கும் நிறைந்த பொருளா யிருக்கலா மென விடை பகர்ந்து விட்டு, அப் பதியை நீங்கிற்று.

இங்ஙனம், நீங்கி, நாக பட்டினம், மேலைக் கோட்டை வாசலை அடுத் துள்ள, நிபந்தக்காரர் சாவடியில், சில நாள் வசித்திருந்தது. இங்ஙனம், வசிக்கும் போது, ஓ ரன்பர் தினந் தோறும், பலகாரங் கொணர்ந்து கொடுத் துபசரித்து வந்தார். அவர், ஓர் நாள் தன் மகனைச் சுவாமிகளுக்குப் பலகாரங் கொடுத்து வா வென் றனுப்பினர். அப்படியே கொண்டு வரும் போது இடையே பக்கத்தி லுள்ள வேலியி லிருந்து ஓர் சர்ப்பம் வெளிப்பட்டு பட மெடுத்துக் கொண்டு துரத்தித் தீண்டச், சிறுவன் பயந்து கரத்தி

விருந்த பலகாரத்தைக் கீழே போட்டுவிட்டுச் சுவாமி! என்னைச் சர்ப்பம் கடிக்கின்றது! என்றலறிக் கொண்டு கீழே விழுந்தான். அத் தருணத்தில், ஓரேதுவு மின்றிச் சுவாமிகள்; நகுலா! நாகன் பால் சிறுவனகப்பட்டுக் கொண்டான்; விரைவிற் செல் லென்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தது. பக்கத் திருந்தவர்கள் சுவாமிகள் திரு வாக்கின் கருத் தறியாதவர்களா யிருந்தனர். உடனே, கீரி புறப்பட்டுச் சென்று, அச் சர்ப்பத்தை இரண்டு துண்டாகக் கடித்து விட்டுப் போயிற்று. பின், மகனைச் சர்ப்பந் தீண்டிய தெனக் கேள்வியுற்றுப், பிதா ஓடி வந்து மூர்ச்சித்துக் கிடக்கும் புத்திரனைத் தூக்கிச், சுவாமிக ளிடங் கொண்டு வந்து எதிரில் கிடத்தி சுவாமிகளுக்குப் பலகாரங் கொண்டு வந்த என் புத்திரன் சர்ப்பந் தீண்டி இறந்தான்; சர்ப்பமுங் கீரியால் துண்டிக்கப்பட் டிறந்த தென்று கூறவும், சுவாமிகள், தன் கரத்தால் மைந்தன் சிரத்தைப் பரிசித்தது; உடனே விட மயக்கம் நீங்கிப் புதல்வ னெழுந்து, சுவாமிகளை நமஸ்கரித்தனன். அப் போது, பக்கத் திருந்தவர்கள், சுவாமிகள், பிள்ளையைத் தீண்டிய சர்ப்பத்தை யடக்க நகுலனை யேவியதையும், சர்ப்பந் தீண்டப் பெற்று விடமேறி மூர்ச்சித்த பிள்ளையை எழுப்பியதையுங், கண்ணுற்று அடங்கா மகிழ்ச்சி யுடையராய், எங்கும் பிரஸ்தாபிக்க, அதனால் சுவாமிகளைப் பார்க்கப் பல ஜனங்கள் வந்து கூடத் தலைப்பட்டன. உடனே சுவாமிகள், அவ் விடத்தை விட்டு வெளிப்பட்டுப், பல தலங்களிற் சஞ்சரித்துக் கொண்டு, திரு வாரூரில், வன்மீக புரத்தி லிருக்கிற சோமநாத சுவாமி கோவிலிலும், ஓடம் போக்கி யாற்றின் கரைப் படுகைகளி லுள்ள காட்டிலும், விருக்ஷத் தடிகளிலும், வசித்துக் கொண் டிருந்தது.

சில சமயம், கண் முகிழ்த்து நிட்டை செய்துகொண் டிருக்கினு மிருக்கும், சில சமயம் சவாசநத் திருக்கினு மிருக்கும். சில சமயம் உபசாந்த நிலைமை யாவர்க்குந் தோன்ற,முக மலர்ச்சியோ டசைவற் றிருக்கினு மிருக்கும். தமக்குப் பசிநோ யதிகரிக்கில், வீதிகளிற் சென்று வெளி யிற் கிடக்கும் பரிகலங்க ளிலுள்ள அன்ன முதலியவை களை எடுத்துப் புசித்து விட்டுப், பின்னரும், முற் கூறிய விடங்களிற் சஞ்சரித்துக் கொண்டிருக்கினு மிருக்கும். இச் சுவாமிகளைப் பார்த்த ஊரி லுள்ளவர்களிற் சிலர், பயித்தியக்கார னென்றும், சிலர் பேயர் என்றும், சிலர் பற்றறத் துறந்த மகா ஞாநி யென்றும், சொல்லிக் கொள்வார்கள். இங்ஙனம் வசிக்குங் காலத்திற், சித்தூர் ஜில்லாவி லுள்ள சோம நாத முதலியா ரென்னும் ஓர் பிரபு வானவர்,குன்ம வியாதியாற் றுன் புற்றவ ராய்ப், பல ஔடதங்களா லும், அந் நோய் நிவிர்த்தியாகாமல், சிதம்பரம் நடேசர் சந்நிதாநத்தை யடைந்தால் நீங்கு மென் றெண்ணி, அத் திருப் பதியை யடைந்து, முறைப்படி சிவ கங்கையில் ஸ்நாநஞ் செய்து, விநாயகரையும்,சபா நாயகரையும், சிவகாமி யம்மையாரை யுந், தரிசித்து,அர்ச்சனை முதலிய வழிபாடுகளையுஞ் செய்து கொண்டு,விரத சீல ராய் இரண்டு திங்க ளிருந்தும் குன்மம் நீங்காமையால், அதனால், வரும் உபாதிக்கு ஆற்றாதவ ராய், இனிப் பிராணத் தியாகஞ் செய்துவிடுவதே உத்தம மென் றெண்ணி, கூர்மை யுள்ள ஓர் சூரியை வாங்கி, நன் றாய்த் தீட்டி, மடியில் வைத்துக்கொண்டு, இரவில் அர்த்த சாம மாய்த் திருக் காப்பிட்டு, அர்ச்சகர் முதலிய அனைவரும் வெளியிற் போகும் வரையில், மறை வாக விருந்து, பின் நடேசர் சந்நிதிக்கு முன் வந்து நின்று, சர்வ ஆந்மாக்

களுக்கும், இன்ப மளிக்கும் நிமித்தம் ஆநந்த நிர்த்தநஞ் செய்தருளு மையனே! இந் நோயால், நேர்ந் துள்ள துன் பத்தை என்னால் சகிக்கக் கூட வில்லை. அதனால், பிராணத் தியாகஞ் செய்து கொள்ளுகிறேன். அடியேனைத் திரு வடி யிற் சேர்த்துக் கொண் டருளு மென்று பிரார்த்தித்துக் கொண்டு, மடியி லிருந்த சூரியை எடுத்துத் தன் கழுத்தில் வைத்து, அறுக்கத் தொடங்கினபோது, நடேசர் கிருபை கூர்ந்து, அசரீரீ யாக, "உனக் குற்ற குன்மம் இப் போது இங்கே நிவிர்த்தியாகாது; திரு வாரூரி லிருக்கும் தக்ஷிணா மூர்த்தியிடம் செல்லுவா யானால், அந்த க்ஷணமே நிவிர்த்தி யாகு" மென்று, கூறக் கேட்ட சோம நாத முதலியார், இவ் வார்த்தை யா ருடையது? இங்கு யாரேனும் மறைந் திருக்கிறார்களா? வெனத் தூண் மறைவு முதலிய விடங் களிற் றேடிப் பார்த்து, ஒருவருங் காணாமையால்,நடேசர் கூற்றே எனத் துணிந்து விடியற் காலையில் ஒருவருக்குந் தெரியாது வெளியே வந்து, ஆரூரை நோக்கிப் புறப்பட்டு, அத் தலத்தை யடைந்து, கோவிலின்க ணுள்ள தக்ஷிணா மூர்த்திக்கு அபிடேக வாராதனை முதலிய சிறப்புக்க ளனைத்தையுஞ் செய்து, அப் பெருமான் சந்நிதியில் அர்த்த சாமம் வரை இருந்தும், நோய் சிறிதும் நீங்காமையால், நடேச ருடைய அசரீரீ வாக்குப் பிறந்தும், நமது துன்பம் நீங்கவில்லையே! என்று வியாகூல சித்தராய், இரவில் நித் திரை செய்யும் போது, அவர் கனவில் நடேசர் ஓர் துறவி யாக வந்து, நாம் சொல்லிய தக்ஷிணா மூர்த்தி இஃ தல்ல; இவ் வூரில், நிர் வாணி யாகத் திரிகின்றான்; அவனிடஞ் செல்வா யென்று கூறி மறைந்தனர். சோம நாத முதலி யார், காலையி லெழுந்து, திரு வாரூரில், பல பேரிடத்திலும் விசாரித்துத் தேடிப் பார்த்துக் கொண்டு, கமலாலயத்தின்

மேல் கரையில் வந்து விசாரிக்கும் போது, அங் குள்ள வர்கள், இந்தக் காட்டில் அவதூதரா யொருவ ரிருக்கின் றார்; சில போது, இப் பிராமணத் தெருவில் கிடக்கும் பரிகலங்களி லுள்ள அன்னம் முதலியவைகளை ஞமலிக ளோடு தானும், புசித்துக்கொண்டு போவர்; நீ தேடிப்பா ரென்று கூற, அப்படியே தேடிக் கொண்டு வரும் போது, ஓர் வீட்டு வாயிலிற் கிடக்கும் பரிகலத்திலுள்ள ஓத நத்தை. ஞமலிகளோடு புசித்துக் கொண்டிருந்தது. அதை முதலியார் பார்த்து, இம் மகா புருடன் றான், தக்ஷிணா மூர்த்தி யென் றறிந்து, மிக்க பய பக்தி விசுவாசத் தோடு நெருங்கிச் சென்று நமஸ்கரித் தெழுதலும், சுவா மிகள் பார்த்துத் தன் கையி லெடுத்த அமுதை முதலியார் வாயி லிட்டு, உன்னை நடேச னனுப்பினனோ வென்று கூறி யருளியது.

சுவாமிகள், தன் வாயி லிட்ட அன்னத்தை முதலியார் உட் கொள்ளவும், நீண்ட காலமாய்த் தனக் கிருந்த குன்ம நோய் நீங்கிவிட்டது. இந் நோய் தோன்றிய நா டொடங்கி வெந்நீர் அன்ன மன்றிப் புசித் தறியாத அம் முதலியார், அற்றை நாள் முதல், நெய், பருப்பு முதலிய சட் வித இரச பதார்த்தங்களுஞ் சேர்த்து, உண வருந்தினர். அருந்தப் பட்ட அவ் வுண வானது, சீக்கிரத்தி லுபாதி செய்யாமற் சீரண மாகிவிட்டது. இவ் வாறு, நோய் நீங்கப் பெற்ற முதலியார், மிக்க வாநந்த முடைய ராய், அன்பினோடும் சுவாமிகட்கு அபிடேகாதிகளைச் செய்து, பால், பழம், அன்னம் முதலியவைகளைப் புசிக்கச் செய்து, சேடமா யுள்ளவைகளைத், தானும் புசித்துப், பலருக்குங் கொடுத்து, யாவர்க்குந் தெரியும்படி, தனக்கு நீண்ட நா ளாகக் குன்ம

நோயிருந்ததும், அதை நீக்குதற் பொருட்டு, சிதம்பரம் சபா நாயகரிடத்தில் அன்பு செய்திருந்ததும், அந் நோய் நீங்காமையால், தற் கொலைக்குத் துணிந்ததும், நடேசர் அசரீரி யாகத், திரு வாரூர், தக்ஷிணா மூர்த்தியைத் தரிசித்தால் தீரு மென் றருளியதும், உடனே திரு வாரூர் கோவிலி லிருக்கும் தக்ஷிணா மூர்த்தி சந்நிதானத்துக்கு வந்ததும், அசரீரி வாக்குப்படி நோய் நீங்காமையால் வியாகூல முற்றதும்; அன் றிரவு சொப்பனத்தில், நடேசர் துறவினர் போற் றோன்றி, யா முரைத்த தக்ஷிணா மூர்த்தி, இஃது தல்ல இவ் வூரில், அவ தூத னாக ஒருவ னிருக்கின்றான் அவ னிடத் திற் செல் லென்று கட்டளையிட்டு மறைந்ததும், மறு நாட் காலையி லெழுந்து சுவாமிகளைத் தேடிக் கண்டதும், கண்டவுடனே சுவாமிகள் பரிகலச் சேடத்தைத் தன் வாயிற் போட்டு, நடேசனா உன்னை அநுப்பினா னென்று கேட்டதும், வாயிற் போட்ட அன்னம் உள்ளே யிறங்க யிறங்க வியாதியும் கீழே யிறங்கியதையும், அன்னம் வயிற் றைச் சேர நோய் வயிற்றை விட்டு நீங்கியதையும், ஒளி யாது வெளி யாகச் சொல்லினர். அன் று முதல், தக்ஷிணா மூர்த்தி யென்ற நாமம் ஆரூர் முற்றிலும் பரவி யாவர் களும் அந் நாமத்தையே சொல்லித் தோத்திரஞ் செய்தனர். பிற வூர்களி லுள்ளவர்களும், அங்ஙனமே அன்பு பாராட் டித் தோத்திரஞ் செய்து வந்தனர்.

சுவாமிகள், சில போது, சோம நாத சுவாமிகள் கோவி லிலும், சில போது, ஓடம் போக்கி யாற்றங் கரைகளைச் சார்ந் துள்ள படுகைகளி லிராநின்ற விருக்ஷத் தடிகளிலும், சில போது, கமலாலயக் கரைகளிலும், சில போது, நேர்ப்

பட்ட வீடுகளி லுள்ள படுக்கைகளிலும், நியம மின்றி யிருக்கும்; சிற் சில விடங்களில், நிட்டை செய்து கொண் டிருக்கினு மிருக்கும், அப் போது வெய்யிற்றிரு மேனியிற் படுமாயின், சர்ப்பங்கள் படத்தை விரித்து வெயிற் படா மல் மறைத்து ஆடிக் கொண்டிருக்கும், ஓர் நாள், திரு வா ரூரில், பண்டிதப் பிராஹ்மண ராகிய தாசில்தார் வீட்டில் அவர் படுக்கையிற் சென்று சுவாமிகள் படுத்தது. அதைப் பார்த்த அவர் மனைவி தாசில்தார்க்குத் தங்கள் படுக்கையில் ஒரு கிறுக்கன் படுத்திருக்கிறு னென்று தெரிவிக்க; உடனே அவர் வேக மாக வந்து பார்த்து, தன் சேவக ராகிய கேசவ நாய்க்கரை நோக்கி, இக் கிறுக்கனைப் பிரம்பா லடி யென்று சொல்லவும், கேசவ நாயக்கர் அவர் கிறுக்க ரல்லர்; பிரஹ்மக் ஞானி அவரை யடிப்பவர்களுக்கு அள வில் காலம் நரக வேதனைகள் நீங்கா வாதலின், அடிக்கக் கூடா தென்று கூறவும், தாசில்தார் உன்னை வேலையி னின்றும் நீக்குவே னென்றுர். அதைக் கேட்ட நாயக்கர் இன்று முதல் யான் தக்ஷிணு மூர்த்தி சேவகனே யன்றி உன் சேவக னல்ல னென் றுரைத்து வில்லையைக் கழற்றி, வைத்து விட்டு வெளியிற் செல்லவும், தாசில்தார் கோபங் கொண்டு, தான் ஓர் பிரம்பினுல் சுவாமிகள், திரு மேனியில் ஓ ரடி யடித்தனர். உடனே சுவாமிக ளெழுந்து துடைத் துக் கொண்டு "துடைபடும், துடைபடு" மென்று இரண்டு தரஞ் சொல்லி விட்டு வெளியிற் சென்றுவிட் டது. அன்று முதல் எட்டு நாளைக்குள் அவன் உத்தி யோகமும் போய், மனைவியு மிறந்து, தானும், நோய் முதலியவற்றுல் பீடிக்கப்பட்டவ னுபினுன். கேசவ நாய்க் கர் அற்றை நாள் முதல் சேவகத்தை நீக்கி தக்ஷிணு மூர்த் திக்கே சேவக னுகிச் சுவாமிகள் தெருவாதிகளில் நடந்து

செல்லும் போது, சுவாமிகள் விஷயச் சுட்டுதலின்மையால், ஒரோரிடங்களில் தெருவிலிருக்கும் வேலிகளிலும், பக்கங்களிலுள்ள கள்ளி முட்களிலும், பள்ளங்களிலும், விழுந்து, பின் திரும்பும், அங்ஙனம் வீழாதிருக்கும்படி, பின்றொடர்ந்து சென்று, வேலி, கள்ளி, பள்ளம் எதிர்ப்படுமாயின், முன் சென்று கை நீட்டித் தடுத்துத் திரும்பும்படி செய்து கொண்டு, சுவாமிகள் பின் செல்லுபவராயிருந்தார்.

பின், ஓர் நாள், வன்மீக புரம் பூசைத் துறையிலுள்ள ஓர் மரத் தடியிற் படுத்திருக்கும் போது, சுவாமி மடத் தெருவிலிருக்கும் ஓர் பிராமண ஸ்திரீ வந்து ஸ்நானஞ் செய்து புடவை யணிந்து கொண்டிருக்கும் போது சுவாமிகள் கண்ணைத் திறந்து பார்க்கப் பிராமண ஸ்திரீயின் மார்பில், பால் பூரித்திருந்த தனம் காணப்பட்டது. அதைச் சிலந்திக் கட்டி யென நினைந்து மிகவும் வருத்தத்தைக் கொடுக்குமே என்றிரங்கி, இரண்டு தரம் வாயினால் இச்சுக் கொட்டிவிட்டு, கண்ணை மூடிக்கொண்டது. பிராமண ஸ்திரீ புடவையை யணிந்து, சலந் திரட்டிக் கொண்டு, தன் கிரகத்துக்குச் செல்லவும், குழந்தை பாலுக்கு அழுதலைப் பார்த்து, வீட்டிலுள்ளவர் குழந்தைக்குப் பாலைக் கொடென்று கூறுவதற்கு முன்னரே, பால் வற்றி ஸ்தனங்கள் சுருங்கிப் புருடர் மார்பு போலாயினதைப் பிராமண ஸ்திரீ பார்த்து, மாமன் மாமிக்குத் தான் ஸ்நான கட்டத்துக்குச் சென்றதும், அங்கு நடந்ததும், இங்கு வரும் போது தனங்கள் சுருங்கிவிட்டதும், தெரிவிக்க, அவர்கள் ஸ்நான கட்டத்தில் பார்த்தவர் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளாயிருக்கவேண்டும்; நீ குழந்

தையை எடுத்துக் கொண்டு வருவாய்; குழந்தையைச் சுவாமிகள் திரு வடியில் வைத்துக், குழந்தைக்குப் பா லுண்டாகும்படி செய்ய வேண்டு மென்று, பிரார்த்திப் போ மெனத் புகன்று கொண்டு, குழந்தையைக் கொடு வந்து சுவாமிகள் திரு வடியில் வைத்துக், குழந்தை பா லின்றி வருந்துகிறது; பால் சுரக்கும்படி கிருபை செய்ய வேண்டு மென்றனர். சுவாமிகள் கண் திறந்து குழந்தை யையும், முன் பாக நிற்கும் தாய் முதலியவர்களையும் பார்த்து, மிருது வாக அமு திருக்கு மிடமா! அமு திருக்கு மிடமா! பெருகும்! பெருகும்! செல்வீ ரென்று அருளிச் செய்து, பின் கண்களை முகிழ்த்துக் கொண்டது. பின் தாய் குழந்தையைக் கையி லெடுக்கவும், தனம் வளர்ந்து பாலும் பெருகியது. அப் பாலைக் குழந்தைக்குக் கொடுத்து, யாவரும் துன்ப நீங்கித் தக்ஷிணா மூர்த்தியைத் தொழுது, துதித்துக் கொண் டாடிக் கொண்டு கிரகஞ் சேர்ந்தார்கள்.

பின்னர், சிக்கற் றலத்தி லிருந்த பழனி யப்ப செட்டி யா ரென்பவர், குடும்பக் குற்றங் கண்டு; துறவ ராய், இனி நாம் நற் கதி யடையச் செய்யுங் காரியம் யா தெனச் சிந்தித் துக் கொண்டிருக்கும் போது, தெருவிற் சென்று, கொண் டிருந்த இருவரில் ஒருவர், மற் றொருவரைப் பார்த்து, நாம் திரு வா ரூருக்குச் சென்று, தக்ஷிணா மூர்த்தி சுவாமி களுக்குத் திருத் தொண்டு புரியில் சீக்கிரத்தில் நற் கதியை யடையலா மென்றார். அச் சொல்லை செவி யேற்ற பழனி யப்ப செட்டியார், இந்த வாக்கியம் நமக் காகவே பிறந்த தென்று துணிந்து, உடனே துறவ ராய்த், திரு வா ரூரை யடைந்து தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்கு, ஆத்த மாகிய பணிவிடைகளைச் செய்து, தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள்

கிருபா நோக்கத்தால் ஞாநாநுபூதி யுற்று திகம்பரராயிருந் தார். அப் போது, மடப் புரம், கவரையர் தெருவி லுள்ள கவரையர்களில், கேசவ நாயக்கர், சேர்வை நாராயண சாமி நாயக்கர், பாப்பண செட்டியார், சென்னப்ப நாயக்கர், வீரா நாயக்கர், கண்ணப்ப நாயக்கர்,வீர சைவ, நஞ்சையர், மடத்து, வெற்றி வே லேயர், வைத்திலிங்கப் பிள்ளை, சிதம் பரம் பிள்ளை, அப்பு முதலியார், முத்துச் சேண்டப் புரை யர், கள்ளர் தெருவு, கணபதி வாண்டையார், பாப்புக் கண்டியர்,மாரி முத்து நாயக்கர், நாராயண சாமி சேண்டப் புரையர் முதலிய பல பேர்கள் பழனி யப்ப சுவாமிக ளிடத்தில் நாங்கள் திரவியந் தருகிறோம்; தாங்கள் தக்ஷிணு மூர்த்தி சுவாமிகளுக்குச் சமாதி யாலேயம் முன்னமே கட்டுவிக்க வேண்டு மென்றூர்கள். அதற்குப் பழனி யப்ப சுவாமிகள், சுவாமிகளின் றிரு வுளக் குறிப்பை யறிந்து, ஆலயஞ் செய்விக்க வேண்டு மென்றூர். அப்படியே செய்யலா மென யாவரும் ஒன்று கூடிச் சோம நாத சுவாமி கோவிலில் உபசாந்த நிலைமையி லிருந்த சுவாமிகள் முன் சென்று, நமஸ்கரித் தெழுந்து, வணக்கத்தோடு நின்றூர்கள். அப் போது சுவாமிக ளெழுந்து ஆற்றங் கரையி லேறி, தெற்கே நோக்கிச் செல்லப், பழனியப்ப சுவாமிகள், முதலியோரும் பின் றொடர்ந்து சென்றூர்கள். அப் போது, சுவாமிகள் கரையின் கீ ழிறங்கி ஓ ரிடத்தில் சற்று நின்று, பின் தெற்கே சென்று விட்டது. பின் றொடர்ந்து வந்தவர்களில் ஒருவர், சுவாமிகள் நின்ற விடமே குறிப்பிட்ட விடமா யிருக்கலா மென் றெண்ணி, அவ் விடத்தி லுள்ள மணலை கையாற் குவித்தார். அதில் ஓர் பொற் பண மிருக்க யாவரும் பார்த்து,இதுவே சுவாமி

கள் திரு வுள்ளத்திற் பட்ட விட மெனத் துணிந்து, நாட் பார்த்து ஆலயம் முகூர்த்தம் செய்தார்கள்.

இது விஷயந் தெரிந்த திரு வாரூர், பாவா முதலியார், முதலிய தனவான்களும், திரு வா ரூரிலும், பக்கத்துக் கிரா மங்களிலு,முள்ள பக்தர்க ளாகிய மிராசுதார்களும்,ஏழைக் குடிகளும், அவ் வவர்கள் சத்தி யநுசார மாக பிரியத் தோடு கொண்டு வந்து,கொடுக்கும் திரவியம்,செங்கல்,கருங் கல், சுண்ணும்புகளையும், தரிசனைக்கு வருபவர்கள் பாத காணிக்கை யாக வைக்குந் திரவியங்களையுங், கொண்டு, பழநி யப்ப சுவாமிகள்,கருப்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்ட பம், பிரகாரம், பத்தி மண்டபம், கோபுரம், முன் மண்டபம். சவுக் கண்டி, விமாந மண்டபம், படித் துறை யாதிகளையும், சுவாமிகள் ஐக்கிய மான போது, கருப்பக் கிரகத்துள் சமாதி வைத்தற்குச் சுரங்க மார்க்கத் தையும், செய்வித்து, கருப்பக் கிரகத்தில், தஞ்சாவூர், சர போஜி மகா ராஜா காசியி லிருந்து கொணர்ந்து கொடுத்த, பாண லிங்கத்தை ஸ்தாபித்து கும்பாபிஷேகம் செய்து, அன்று முதல் நித்திய நைமித்தியாதி பூசைகள் நடத்தி வரப்பட்டது. இங்ஙனம், நடத்தி வரும் காலத்தில், வட பாதி மங்கலம் முதலியார், சுவாமிக்கு ஆலயங் கட்டி முடிந்து விட்டது: இனி பூசையாதிகளுக்குப் பூ ஸ்திதி ஏற்படுத்த வேண்டு மென்று கருதி, சுவாமிகள் பேரால் முத்திரி யோலையில், பத்து வேலி நிலத்தைத் தாந சாசநமாக எழுதிக் கொண்டு வந்து, சுவாமிகள் பாதத்தில் காணிக்கை யாக வைத்து, நமஸ்கரித் தெழுந்து,பே ரன்போடு வணக்க மாய் நின்று, சுவாமின்! அடியேன் பத்து வேலி நன் செய் நிலத்தைச் சுவாமிகளுக்குத் தாந சாசநம் பண்ணி யிருக் கிறேன்: அதனைச் சுவாமிகள் கிருபை கூர்ந்து அங்கீகரித்

துக் கொள்ளல் வேண்டும்; என விண்ணப்பித்தனர். சுவாமிகள், திருக் கரத்தால் முத்திரி யோலையை எடுத்து, முதலியாரைப் பார்த்து, அப்பா நீ நமக்குக் கொடுத்தாய், நாம் உனக்குக் கொடுக்கின்ரேம், நீ கெட்டி யாய் வைத்துக் கொள்; குறைவு வராது என்று சொல்லிக் கொடுத்தது, கொடுக்கும் போது, முதலியார் பெற்றுக் கொள்ளச் சற்று யோசித்தார்; அங்ஙனம் யோசிப்பதைச் சுவாமிகளைச் சூழ்ந்து நின்ற பெரியோர்கள் அறிந்து, ஐயா சுவாமிகள் திருக் கரத்தால், கொடுப்பது குறைவுபடாத செல்வ மாக விருக்கும் தாமதியாமல் பெற்றுக்கொள்ளு மென்ருர்கள். உடனே வணக்கத்தோடு பெற்றுக்கொண்டார்.

பின்னர், ரொரு நாள் தியாக ராஜப் பெருமான் இரத உற்சவ தரிசனத்துக்குத் தஞ்சை, சரபோஜி அரசன் வந்த போது, உடன் வந்த சர்க்கிலைப் பார்த்து- நாம் மாலைப் போது, தக்ஷிணு மூர்த்தி சுவாமிகள் தரிசநத்துக்குப் போதல் வேண்டும். நம்மால் தாநஞ் செய்யக் கூடிய தாகச் சமீபத்தி லிருக்கிற கிராமங்களில், ஒன்றை தக்ஷிணு மூர்த்தி சுவாமிகளுக்குத் தாநஞ் செய்ய வெண்டும் என விரும்புகிறேன். ஆகையால், நம்மைக் கேட்டுக் கொள்ளும்படி சுவாமிகள் சிஷ்யர்களுக்குத் தெரிவிப்பதோடு, தாநஞ் செய்யத் தக்க கிராமத்தையுந் தெரிவித்து வைப்பாயென் றுத்தரவு செய்தார். உடனே, சர்க்கில் தக்க கிராமங்களை யெழுதி வைத்துக் கொண்டு, தாசில்தாரை அழைத்து, தக்ஷிணு மூர்த்தி சுவாமிகள், தரிசநத்திற்கு மாலையில் மகா ராஜா வருகிருர்கள். அப் போது, மகா ராஜா அவர்களிடத்தில், அங் குள்ளவர்களை இதிலெழுதப்பட்டுள்ள கிராமங்களில் ஒன்றைக் கேட்டுக் கொள்ளும்படி செய்யு

மென்று, தா னெழுதி வைத்திருந்த ஜாப்தாவைக் கொடுத் தார். உடனே, தாசில்தார் வாங்கிக் கொண்டு, பழனி யப்ப சுவாமி யாகிய திருப் பணிச் சுவாமியைக் கண்டு, சர்க்கில் தந்த ஜாப்தாவைக் கொடுத்து, சர்க்கில் கூறியதை யுந் தெரிவித்தார்; திருப் பணிச் சுவாமிகள், அப்படியே, ஆகட்டு மென்று ஜாப்தாவை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு, வந்து கோவில் குட வரை வாயிலில் கால் வைக்கவும், உள்ளே மகா மண்டபத்தில், கட்டிலிற் படுத் திருந்த சுவாமிகள், "சகல வுலகமும் நம்மிடத்தில், ஆகா யத்தில் நீல பீதாதிகள் போல ஏக தேசத் தோற்றமா யிருக்க, ஒருவன், சிறிது நிலம் கொடுக்கின்றானும், அதை ஒருவன் பெற்றுக் கொள்கின்றானும், இவ னன்றோ கானல் நீரை யுண்டு களை தீரக் கருதினான்" னென்றது, அவ் வாக்கியங் கேட்ட திருப் பணிச் சுவாமிகள், பயந்து சுட்ட சட்டியைக் கை விடுவது போலக், கையி லிருந்த ஜாப் தாவை எறிந்து விட்டுச் சும்மா விருந்தது. பின்னர், மகா ராஜா மாலையில் தமது தளங்களோடு, தக்ஷிணா மூர்த்தி, தரிசநத்துக்கு வந்து, சுவாமிகள் சந்நிதியில் தம்முடன் எடுப்பித்து வந்த பழ வர்க்கம், பலகார வர்க்கங்களை வைத்துப் பிரதக்ஷணம் வந்து. நமஸ்கரித் தெழுந்து, சுவா மிகள் திரு வடியில் தன்னாற் செய்வித்த, சொர்ணப் பாது கையைப் பூட்டித், தந்தத்தா லாகிய யோக தண்டையும் வைத்துப், பீதாம்பரங்களைத் திரு மேனியிற் சாத்தி, சில திரவியங்களைப் பாத காணிக்கை யாக வைத்துப் பின்னும் நமஸ்கரித்து, எழுந்து, வணக்கத்தோடு, விபூதிப் பிரசா தத்தை விரும்பி, இரண்டு கைகளையும் நீட்டி, விரித்துக் கொண்டு நின்றார். அப்போது, சுவாமிகள் அரசனை நோக்

காதிருப்பதைப் பக்கத்தில் நின்றுள்ள திருப் பணிச் சுவாமிகள் பார்த்து, விபூதித் தட்டை, சுவாமிகள் திருக் கரத்துக்கு, அருகாக ஏந்திக் கொண்டு, சுவாமி! மகா ராஜா அவர்களுக்கு விபூதி யளித் தருள வேண்டு மெனப் பிரார்த்தித்தனர். பின் சுவாமிகள், விபூதியை யெடுத்து, எறியவும், அது மகா ராஜாவின் கரத்தில் விழுந்தது. அதனை இராஜாவானவர் அன்போடு சிர முதலியவைகளிற் றரித்துக் கொண்டு, தோத்திரஞ் செய்து நின்றார். பின்னர் நாம் சர்க்கிலுக்கு உத்திரவு செய்தபடி இங்கு ஒருவரும் நம்மைக் கேட்க வில்லையே என்றெண்ணி சுவாமிகளை நோக்கி, நம்மா லிந்த விடத்துக்கு செய்யத் தக்கது யாதென்றார். அதற்குத் திருப் பணி சுவாமிகள், மகா ராஜா அவர்கள், இந்தச் சந்நிதானத்தில் சிரத்தை வைக்க வேண்டிய தொன்றைத் தவிர, இவ் விடத்துக்கு யாதொரு குறைவு மில்லை என்றனர். உடனே அரசன் பெரிய மோராக்கள் நூற் றெட்டால் அர்ச்சனை செய்து, சில மோராக்களைப் பாத காணிக்கை யாக வைத்துப், பின்னும் நமஸ் கரித்துக் கொண்டு, தன் யானையிற் போட்டு அடித்துக் கொண்டு வந்த நகாரக்களி லொன்றை சுவாமிகள் பூசா காலத் தடித்தற்கு இருக்கட்டு மென்று, இறக்கிச் சந்நிதானத்தில் வைத்து விட்டுத் தன் பரிவாரங்களோடு, மகா ராஜா இருப்பிடஞ் சேர்ந்தார்.

பின்னர், நாகபட்டினம் வாணக் காரத் தெருவிலுள்ள, சுப்ப பிள்ளை யென்பவர், சுவாமிகள் மகிமையைக் கேள்வியுற்று, புத்திரப் பேற்றையுஞ், செல்வத்தையும், விரும்பின வராய், மனைவியோடு, திரு வாரூருக்கு வந்து,

சுவாமிகளைத் தரிசித்து, பிட்சை செய்வித்துச், சுவாமி களின் பரிகலச் சேடத்தை யுட்கொண்டனர். இவ் வாறு, குரு வாரந் தோறும் வந்து, பிட்சை செய்வித்து, பரிகலச் சேடத்தைப் புசித்துக் கொண்டு, வருங் காலத்தில், புத் திரப் பேறும் உண்டாய்ச் செல்வமும், பெருகியது. அக் காரணத்தால், சுவாமிகளை மறவாத சித்த முடையரா யிருக் குங் காலத்தில், வியாபார நிமித்தம் சில திரவியங்களை, எடுத்துக் கொண்டு, முத்துப் பேட்டைக்கு இப் பால், ஒரு மைல் தூரத்திற் செல்லும் போது, சூரியன், அஸ்த மன மாயினன். அப் போது, சில திருடர்கள் வந்து, வண்டியை மறித்துச் சுப்ப பிள்ளையைக் கீழே தள்ளி. இம்சை செய்யும்போது, அவர் பயந்து நடுங்கி, ஆபத் சகாய ளுகிய சுவாமியை நினைத்து, அப்பா, தக்ஷிணு மூர்த்தி, யா னென் செய்வேன்! நீயே தஞ்ச மென்று கூறி, ஓல மிட்டார்! அச் சமயத்தில், மூக்காத தூரத்தி லுள்ள, திரு வா ரூரில், மடாலயத்தி னுள்ளே, சயனித் திருந்த தக்ஷிணு மூர்த்தி சுவாமிகள் எழுந்து, கோவிலுக்கு வெளி யில் வந்து, அடா வீரா! சுப்பன், திருடர் கையில், அகப் பட்டுக் கொண்டான்! சீக்கிரம் போடா வென்று இரண்டு தரஞ் சொல்லி விட்டு, முன் போற் சென்று, சயனித்துக் கொண்டது; சுப்ப பிள்ளை ஓல மிடும் போது, பக்கத்தில் பனை மரத்திற் கள் கட்டிக் கொண்டிருந்த சாணுர்களைப் போலப், பன் னிரண்டு ஆட்கள், இதோ வந்து விட்டோ மென்று சொல்லிக் கொண்டு, ஓடி வந்து திருடர்களை மேல் விழுந்து அடிக்கவும், அத் திருடர்கள், உயிர் தப்பித் துக் கொண்டு ஓடி விட்டார்கள். பின்னர், சுப்ப பிள்ளை யை வந்த பன் னிருவரும் பார்த்து, நீர் அஞ்ச வேண்

டாம்; எங்கே செல்ல வேண்டிய தென்றார்கள். சுப்ப பிள்ளை முத்துப் பேட்டைக் கென்றார். ஆனால், நாங்களும், அவ் விடந்தான் வருகிறோம்; வாரு மென் றழைத்துக் கொண்டு முத்துப் பேட்டை எல்லை வரையிற் சென்று. நாங்கள் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள் ஏவ லாள ரென்று, சொல்லி, மறைந்து விட்டனர்; அம் மொழியைக் கேட்ட சுப்ப பிள்ளை, சுவாமிகளிடத்துப் பே ரன் புடையராய், முத்துப் பேட்டைக்குப் போய்க் காரியங்களை முடித்துக் கொண்டு, திரு வாரு ருக்கு வந்து, சுவாமிகள் சந்நிதானத்தில் நமஸ் கரித் தெழுந்து, முத்துப் பேட்டையின் சமீபத்தில் தனக் குத் திருடர்களால் நேர்ந்த அபாயத்தையும், அச் சமயத்தில் தான் தட்சிணா மூர்த்தி சுவாமிகளை நினைத்து, நீயே தஞ்ச மென் றழுகதையும், அப்போது, பன் னிரண்டு சாணார்கள் ஓடி வந்து, திருடர்களை அடித்துத் துரத்தி எனக்குத் தேறு தல் சொல்லி, முத்துப் பேட்டை எல்லையிற் கொண்டு போய் விட்டு, நாங்கள் தட்சிணா மூர்த்தி சுவாமிகள் ஏவ லாளர்க ளென்று சொல்லி மறைந்ததையும், யாவர்க்கும் வெளி யாகக் கூறினார். அப்போது மடத்தி லுள்ளவர்கள், நான்கு தினத்துக்கு முன், அஸ்தமன காலத்தில் கோவிலுட் சயனித்திருந்த சுவாமிகள், திடீ ரென வெளியி லெழுந்திருந்து வந்து, "அடே வீரா! சுப்பன் திருடர் கையி லகப்பட்டுக் கொண்டான்! சீக்கிரம் போடா!!" வென்று இரண்டு தரம் புகன்று, முன் போ லுள்ளே சென்று சயனித்துக் கொண் டது; அன்று சுவாமிக ளருளிய குறிப் புரை இன்று வெளி யாயிற் றென்றார்கள். இங்ஙனம், அணிமைத் தொண்டர் கூறக் கேட்ட, சுப்ப பிள்ளை சென்னியிற் கூப்பிய அஞ் சலி யஸ்தராய், பய பக்தி விசுவாசத்தோடு நின்று, ஆபத்துக் காலத்தில் இரட்சித் தருளிய கருணா நிதியே! அடியேனை

முற்றும் இரட்சிக்க வேண்டும்; என் உடல், பொருளாவி மூன்றையும், நின் றிருவடிக்கே தத்தஞ் செய்தே னென்று, விண்ணப்பித்து, நமஸ்கரித் தெழுந்து வடக்கு இரத வீதியில் சுவாமிகள் பேரால், ஒரு திரு மட மமைத்துச் சுவாமிகள் திரு வுருவத்தையும், அமைத்து வைத்தனர். இது இங்ஙன நிற்க.

பற் பல தேசங்களினின்றும், ஸ்ரீ தியாகேசப் பெருமான் இரதோற்சவ தெரிசநத்துக்கு, அவ் வவர் சீட வர்க்கங்க ளொடு வழக்கம் போல் வந்து கொண்டிராநின்ற பிராமண சந்நியாசியர்களில்,பரமாம்ஸர்க ளாகிய கிருஷ்ணாநந்த கிரி சுவாமிகள் முதலிய சிலர்கள், ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகளது ஞாநாநுபூதி நிலைமையையும், சாபாநுக்கிரக சாமர்த்தியத்தையும், பல பேர்களாற் கேள்வியுற்று, இப் படிப்பட்ட மகானைத் தரிசிக்க வேண்டு மென்னும், பே ரவாவுடையவர்களா யிருந்து, சுவாமிகளை இருப்பிடந் தேடித் தரிசிக்கலா மென்றால், பொறாமை மிக்க, அவிவேகி ளாகிய பிராமணர்கள், குறை கூறுவார்களென்னுங் கருத்தானும், சுவாமிகள் தெருக்களி லோரிடத்திலேனு மெதிர்ப்படாமையானும், பல ஆண்டு களிலுந் தரிசனங் கிடையாமற் போயிற்று. பின் ஞோர் ஆண்டு, இரதோற்சவத்திற் காக முன் போலவே எதீஸ்வரர்க ளெல்லாம் வந்து எக்ஞேசுவரன் கோவிலில் சேர்ந்து சாஸ்திர விசாரஞ் செய்துகொண்டிருக்கும் போது, தட்சிணா மூர்த்தி சுவாமிகள், கமலாலயக் கீழ் கரைப் படித்துறையில், வந்து சயனித் திருப்பதைக் கண்டு அநேக ஜநங்கள் கூடித் தரிசநஞ் செய்துகொண்டு கூட்டமாயிருப்பதை கமலாலயம் மேல் கண்ட எக்ஞேசுவரன்

கோவிலி லிருந்த சிலர் பார்த்து, பக்கத்தில் நின்றவர்களைக் கீழ் கரையில் ஜனங்கள் கூடியிருப்பதற்குக் காரணம் என்னென்று வினவ, தட்சிணா மூர்த்தி சுவாமிகள், படித் துறையிற் சயனித்திருக்கிறது; அதுவே காரண மென்று கூற, நெடு நாள் வறிய னுய்ப் பொருள் வேண்டு மென்று தவம் புரிந்தவன்,புதைய லெதிரே யிருக்கிற தென ஒருவன் சொல்லக் கேட்டு மகிழ்வது போல, அங் கிருந்த கிருஷ்ணா னந்த கிரி சுவாமிகள், சங்கர சரஸ்வதி சுவாமிகள், இரா மானந்த சுவாமிகள் ஆகிய பரமாம்ஸ சந்நியாசியர்கள் மூவருங் கேட்டு மகிழ் வுற்று, இன்று புண்ணிய தின மாகையால், கமலாலயப் பிரதட்சிணஞ் செய்ய வேண்டு மென்று ஒருவருக் கொருவர் வார்த்தை யாடிக் கொண்டு வரப் பிரிய முள்ளவர்கள் வரலாம்; மற்றையர்க ளிருக்கலா மென்று கூறிப், பின்னர், வெளிப்பட்டுக் கமலாலயத்தை வலப் பிரதக்ஷண மாகச் செல்லும் போது, அங் குள்ள சந்நியாசியர்கள் முதலிய சிஷ்யர்களும்,பின்னே சென்றனர். சென்ற அனைவர்களும் கமலாலயக் கீழ் கரைப் படித் துறையில் வெயிலின் உஷ்ணந் தோன்றுமல், படுத்திருக் கும் தட்சிணா மூர்த்தி சுவாமிகளைப் பார்த்து, கிருஷ்ணா னந்த கிரி முதலிய பரமாம்ஸர்களும், மற்றையர்களும், வெயி லின்றிய விருக்ஷ நிழலிற் சயனித்திருந்தால் சுகமா யிருக்குமே என ஒவ் வொருவரும், நினைந்தார்கள். நினைக்க வும். சுவாமிகள் புன்னகை கொண்டு, "சேதன மாகிய ஆன் மாவுக்கு அசேதன மாகிய விருக்ஷமோ, சுகத்தைத் தரும்? தரு மெனின் கானற் சலமும் உஷ்ண பூமியைக் குளிரச் செய்யும். உண்மை நோக்க மின்மையே பேதப் பிரதீ திக்கு மூல மென" அருளிச் செய்து, பின் வாளா விருந்

தது. சுவாமிகள் திருவாய் மலர்ந்த வாக்கியங்களைச் செவி யேற்ற கிருஷ்ணானந்த கிரி, சங்கர சரஸ்வதி, இராமானந்த பாரதி என்னும் பரமாம்ஸர்களும், தங்கள் தங்கள் மனதில் இவ் வாக்கியம் நமக்குச் செய்த உபதேச வாக்கிய மென்று சிந்தித்து, சற்றசை வற நின்று, மனத்தாற் சுவாமிகளுக் குக் செய்ய வேண்டிய வழிபாடுகளைச் செய்து, பின்னர், கமலாலயத் தென் கரை வழியாக மேல் கரை வந்து, சுவா மிகள் சயனித்திருக்கும் திசையை நோக்கி நின்று இங் கிருந்து வெளிப்படையாகவும், நமஸ்காரஞ் செய்ய வேண்டு மென்னும் கருத்தை யுள்ளே பொதிந்துகொண்டு பார்ப்பவர்களுக்கு இவ் விடத்திலிருந்து பார்க்கும்போது, தியாகராஜர் கோவிற் றூபி தெரிகின்றமையால், அதனை ஈண்டு நமஸ்கரித்துக் கொள்வது உத்தமத்திலும் உத் தமமா மென்று சொல்லிக் கொண்டு, விதியுக்த மாக நமஸ் கரிக்க, மற்றையர்களும், அங்ஙனமே நமஸ்கரித்தார்கள்,

பின்னர், எக்ஷேசுவரர் கோவிலிற் சென்று சிஷியர் களைத் தவிர மற்றையர்கள் நீங்கிய போது, தங்கள் சிஷியர் களைப் பார்த்து, கிருஷ்ணானந்த கிரி சுவாமிகள் இன்றை யத்தி நமே நமக்கு மிகுந்த சுபதின மாகும்; எதனா லெனின்; பதி னைந்து வருட மாக எனது சித்தத்தி லெழுந்து கொண் டிருந்த சங்கற்பம் இன்று முடி வுற் றது: இஃதன்றி யான் சுவாமிகளைத் தரிசனஞ் செய்யும் போது வெயிலி லிராமல் விருக்ஷ நிழலி லிருந்தால் சுகமா யிருக்குமே யென்று நினைத்தேன்: எனது எண்ணத்தைச் சுவாமிக ளறிந்து, "சேதந மாகிய ஆன்மாவிற்கு அசேதந மாகிய விருக்ஷமா சுகத்தைத் தரும்? தரு மெனில், கானற் சலமும், உஷ்ண பூமியைக் குளிரச் செய்யும், உண்மை

நோக்க மின்மையே, பேதத் தோற்றத்திற்கு மூல மென எனது சித்தப் பேத பாவனை நீங்கி, யுபசாந்தியை யடையும்படி யுபதேச வாக்கியங்க ளருளியது. அவ் வாக்கியங்கள், சநகாதியர்க்குப் பரசிவம் கல்லா லடியில் தட்சிணா மூர்த்த மாக விருந்து அருளிய வாக்கியங்க ளாகும், என்று மொழியவும், சங்கர சரஸ்வதி, இராமநந்த பாரதி முதலியவர்களும், மற்று முள்ள சாதுக்களும், சுவாமிகள் நினைந்த படியே யாங்களும் நினைந்தோம். அப் போது, சுவாமிக ளிவ் வாக்கியங்களைக் கூறியது. இவ் வாக்கியங்கள் கல்லா லடியிற் பரசிவம் சனகாதியருக்கு உபதேசித்த வாக்கியங்களானால், இவ் வாக்கியங்களின் பொருளை எங்களுக்கு விரிவாக எடுத் துரைத்தல் வேண்டு மென யாவரும் பிரார்த்திக்க; சுவாமிகள் கூறிய வாக்கியத்தின் பொருளைக் கிருஷ்ணாநந்த கிரி சுவாமிகள், மூன்று நாள் வரையிலும் உபந்நியாசித்தார்கள். அதைக் கேட்ட சங்கர சரஸ்வதி முதலிய யதிஸ்வரர்களும், மற்றைச் சிஷ்ய குழாங்களும், இப் பொருள் சிஞ்ஞாசுக்களுக்கு மிக்க உறுதியைப் பயப்பிக்கு மாதலால், நூ லாகச் செய் தருள வேண்டு மெனப் பிரார்த்திக்க, கிருஷ்ணாநந்த கிரி சுவாமிகளும், "தட்சிணா மூர்த்தி சுவாமிகள் வாக்கிய சிந்தன" மெனப் பெயரிட்டு வட மொழியில் நூ லாகச் செய்யப்பட்டிருக்கின்றது.

பின் னொரு நாள், திரு வாரூர், கொத்தத் தெரு, வேளாளர் குலத் துதித்த, கல்வி யறி வடக்கம், குரு லிங்க சங்கம பக்தியிற் சிறந்தவ ராயும், கொட்டகைப் பந்தற் சிங்கார வேலைகளில் வல்லவ ராயும், அருணாசல மென்னும் நாம முடைய ராயும், தட்சிணா மூர்த்தி சுவாமிகளையே சதா தியானஞ் செய்பவ ராயும், ஒருவர் இருந்தனர். அவர் ஸ்ரீ

ரங்கம் ஏகாதசி உற்சவத்திற்கு கொட்டகைப் பந்தற் சிங்காரஞ் செய்தற்கு அழைக்க, அவர் அதற்கு உடன் பட்டு, ஸ்ரீ ரங்கஞ் சென்று, கொட்டகைச் சிங்கார வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு நாள் கொட்டகையில் வர்ண ரேக்கு முதலியவைகளை ஒட்டி, அலங்காரஞ் செய்து கொண்டிருக்கும் போது, சாரத்தினின்றும், தவறித் தான் கீழே விழும்போது, தட்சிணா மூர்த்திக்கு அபயம் என்றார்.

அப் போது கமலாலய மேல் கரையில் சயனித்துக் கொண்டிருந்த, தட்சிணா மூர்த்தி சுவாமிகள், தனது வலக் கையை உயரத் தூக்கி, தட்சிணா மூர்த்தியை நம்பினால், தட்சிணா மூர்த்தி என் செய்வானென்று கூறி, ஓர் பதார்த் தத்தைத் தாங்கி மிருதுவாகக் கீழே வைப்பது போலத் தூக்கிய கரத்தைக் கீழே வைக்கவும், சுவாமிகள் வெயிலிற் படுத்திருப்பதைக் கண்டு, குடைகளைக் கொண்டு நிழல் செய்து கொண்டிருந்த அனைவரும், எவ் விடத்திலோ உன்னதமான ஸ்தானத்தி லிருந்து, தவறிக் கீழே விழுந்த ஓர் பக்தனைச் சுவாமிக ளிங்கிருந்த படியே திருக் கரத்தா லேந்திக் கீழே வைத்ததாகத் தோற்றுகிறது. அப் பக்தனை நாம் தரிசிக்கக் கிடைக்குமோ வென்று ஒருவருக் கொரு வர் சொல்லிக் கொண்டனர். அப் போது, ஸ்ரீ ரங்கத்தில் ஓர் பனைப் பிரமாண உயர முள்ள கொட்டகைப் பந்தலி லிருந்து விழுந்தவர்க்கு, ஓர் வித வுபாதியு மின்றி யாரோ ஒருவர் தாங்கிப் பூமியில் வைத்ததாகத் தோற்றிற்று. அப்போதே, யான் இனி தட்சிணா மூர்த்திக்கு வேலைக் காரனே யன்றி மற்றைய ரெவர்க்கும் வேலைக் காரனன் றெனச் சொல்லிக் கொண் டெழுந்து, அவ் விடம் விட்டுப் புறப்பட்டு, மூன்று நா ளில் விடம் வந்து, தட்சிணா

மூர்த்தி சுவாமிகள் பாதத்தில் நமஸ்கரித் தெழுந்து, சிர மேற் குவித்த கையினராய் நின்று, திருவரங்கத்துக் கொட்டகையி லிருந்து விழுந்த வென்னை இங்கிருந்தே இரட்சித்த கருணாநிதி யாகிய உமது பெருமையை என் னென்று புகல்வேன்!! என் ஐயனே! அருட் பெருங் கடலே! குணப் பெருங் குன்றே! மதிப் பறு நிதியமே! மாசிலா மணியே! என்று பல வாறு துதிக்கவும், சுவாமிகள் பக்கத்தினின்ற வன்பர்கள், மூன்று தினத்துக்கு முன் கமலா லயக் கரையில் சயனித்திருந்த சுவாமிகள், தட்சிணா மூர்த் தியை நம்பினால், தட்சிணா மூர்த்தி என் செய்வா னென வசனித்துக் கொண்டு, ஓர் கையை உயரத் தூக்கி ஏந்திய பாவனை யாக விரித்துக் கீழே யிறக்கி வைத்தது, இந்த அன் பரைத்தா னென, தட்சிணா மூர்த்தி சுவாமிகளின் சருவக் ஞத்வத்தையும், பெருங் கருணையையும், தயா சித்தியை யும், வியந்து கொண் டாடியபோது, சுவாமிகள் கிருபைக் குப் பாத்திர ராகிய அருணாசலம் பிள்ளையையும், வியந்த னர், அன்று முதல், அருணாசலம் பிள்ளை குடும்பப் பற்றினை யொழித்து, துற வாச்சிரமி யாய், உடற் குயிர் போலும், ஊசிநூற் போலும், கட் கிமை போலும், சுவாமிகள் திரு வடியை நீங்காமற் றிருத் தொண்டு செய்து கொண் டிருந்தனர். இத் தகைய திருத் தொண்டின் விசேடத் தாலும், சுவாமிகள் வீட்சண்யத்தாலும், சில நாட் சென்ற பின், சொரூபாநுபூதி யுற்று சுட் டிறந்து நின்று திகம்பர ராயினார்.

பின்னர், ஏனங் குடி புத்தகர மென்னும், ஓர் சிற் றூரில், வேளாண் செட்டி மரபிற் றோன்றிய சுவாமி நாத

37

செட்டியா ரென்பவ ரொருவ ரிருந்தனர். அவர், கல்வி அறிவு, அடக்க வொழுக்கங்களிலும், குரு லிங்க சங்கம பக்தியிலும் சிறந்தவர்; பெரியோர் மாட்டு வேதாந்த சாத்திர பாடங் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடலாதிக ளுடைய ராய், இல் லற நெறி வழா தொழுகி வருங் காலத்து, அவர்க்குப் புத்திரி யாக வுதித்த விசாலாட்சி யென்னும் புதல்விக்கு பருவ காலம் வருவதற்கு முன்னரே; தேக முழுதிலும், மேக ரோகம் பரவி, கரும் பாறை போற் றடித்து, சுய வடிவத்தை மறைத்தது மன்றி, மிக்க தினவையு முண்டாக்கியது. அத் தினவுக்கு ஆற்றுதவளாய்த், தன் கைகளாற் சொறிதலினாலும், செங்கன் முதலியவற்றுற் தேய்த்தலினாலும், மர முதலியவைகளில் பசுக்களைப் போல், உரோஞ்சுதலினாலும், மெய் முழுதும் இரத்த மய மாகி, ஊன் வடிதலும், ஈக்கள் மொய்த்தலுந், துர்க்கந்தம் வீசுதலு மா யிருப்பதைத் தந்தை யாகிய சுவாமி நாத செட்டியார் பார்த்துச் சகியாதவ ராய், பல வைத்தியர்களைக் கொண்டு, பல மருந்துகளைக் கொடுப்பித்தும், நோய் நீங்காம லிருப்பதைக் கண்டு, மிக்க வியாகூலசித்தரா யிருந்தனர். அக் காலத்தில், மார்க்கத்தில் செல்லும், ஓர் பெரியவரைக் கண்டு, தமது மனைக் கழைத்துப் பல முகமன் கூறிச், சுவாமின்; என் புதல்வி யாகிய விப் பெண்ணுக்கு நேர்ந் துள்ள விந் நோய் நீங்குதற் குரிய ஔடதமிருந்தாற் கொடுத் தருள வேண்டு மெனக் கூறினர், அச் சொற் கேட்ட துறவர், இந் நோய் மிக்க பாப பலத்தாற் றோன்றிய தாகலின், மருந்தா னீங்குவ தன்று, ஆதலா, லிப் பாவ நீங்கி, நோயு நீங்குதற்கு, வே றோர் மார்க்க முளது; அதாவது, ஓர் தினத்தில் இலட்சந் துறவினர்க் கன்ன மளிக்க வேண்டு மென்றனர். அதைக் கேட்ட

செட்டியார் யான் அவ் வளவு செய்யுந் தகுதி யுடையே னல்லவே, என் செய்வே னென்றனர். அதற், கப் பெரி யார், யா தோ ருபாயஞ் சொல்வேன்; அங்ஙனஞ் செய்தி யேல், அநேக இலட்சந் துறவர்க்கு அன்ன மிட்டவ னுவா யென்றனர். அவ் வுபாயத்தைக் கூறியருள வேண்டு மென்று பணிந்து கேட்க, இங்ஙனங் கேட்ட செட்டி யாருக்குப், பெரியவர், திரு மூலநாயனுர், திரு வாய் மலர்ந் தருளிய திரு மந்திரத்தை மேற்கோ ளாக்கிச் சொல்லுவா ராயினுர்,

மேற்படி திருமந்திரச் செய்யுள் மாகேஸ்வர பூஜையில்

1. தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்றுபு வனமு முண்டது
கொண்டது மூன்றுபு வனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தியெ டுத்துரைத் தானே;

10. வித்தக ராகிய வேடத்த ருண்டவூ
ணத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம்ப ருகிடின்
முத்திபா மெனநம் மூலன்மொ ழிந்ததே.

எனக் கூறி யிருத்தலால், பிரஹ்ம க்ஞானி யாகிய ஒருவ ருக்கு நீ அன்ன மளிப்பா யாயின், மூன் றுலகத்தார்க்கும், மூத் தேவர்க்கும், அன்ன மளித்தவ னுவா யென்றனர். அதைக் கேட்ட செட்டியார், அத் தகைய பிரஹ்ம க்ஞானி யானவ ரெங் கிருக்கின்றனர்? அவர் பெயர் யா தெனக் கேட்டனர். அதற் கப் பெரிய ராகிய துறவர், ஞானியைக் காண்பது மிக்க வருமை யாயினும், இவ் வுலகஞ் செய்

புண்ணியப் பேற்றால், செல்வத் திருவாரூரில், ஓடம் போக்கி யாற்றி னருகில், பிரஹ்மக் ஞானியும், நடேசப் பிரான் இட் டருளிய தக்ஷிணா மூர்த்தி யென்னும் திருநாம முடைய திகம்ப ராகிய பெரியா ரொருவருளர். அவருக் குப் பிக்ஷை செய்வித்து, அப் பரிகலச் சேடத்தை மனை யாட்கும், மகட்கும், கொடுத்து, நீயு மருந்துவா யென் றுரைத்தனர். அப் போது செட்டியார், அங்ஙனமே முன் வருங் குரு வாரத் தன்று சென்று செய்கின்றேன்; தாங் களும் அடியேனுக்குத் துணை யாக வரல் வேண்டும்; இப் போது என் மனையிற் றானே சுவாமிகள் பிக்ஷை செய்து கொள்ள வேண்டு மென்றனர். அதற்குப் பெரியார், செட்டியாரைப் பார்த்து, நுமது மனையில், ஓ ரடியவருக் கன்ன மளித்தால், அவ் வொருவர்க் கிட்ட புண்ணிய மாத் திரம் நுமக் குண்டாம், உண்டவர்க்குப் பசி நீங்ுவ தன்றி வேறு பய னில்லை; பிரஹ்மக் ஞானி யாகிய ஒருவர்க் குப் பிக்ஷை செய்வித்து, அப் பிரசாதத்தோடு, ஓர் துறவிக்கு அன்ன மளித்தால்' கோடி துறவினர்க்கு அன்ன மளித்த பய னுண்டாம், உண்டவர்கட்குப் பசி நோய் நீங்குதலோடு பிறவி நோய் நீங்கிவிடும், ஆதலால், தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்கு உன் றாற் பாகஞ் செய்து, நிவேதனஞ் செய் வித்த அன்ன மாதிய பிரசாதங்களோடு நமக்கும் பிக்ஷை செய்விப்பாயானால், அது, அநேக துறவினர்க்கு உண வருத் திய பயன் உனக்குத் தருவது மன்றி, உண்ட எனக்குப் பசி நோயோடு, அதற்குக் காரண மாகிய ஜனன நோயை யும், நிவிர்த்திக்கு மாதலால், தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள் சந்நிதானத்தில் வந்து, பிரசாத பிக்ஷையை எடுத்துக்கொள் கிறேனென்று சொல்லி எழுந்து போய்விட்டனர்; அன்று

முதல் சுவாமி நாத செட்டியார், அவர் மனைவி புத்திரி யாகிய மூவரும், ஓர் கால போஜனஞ் செய்பவர்க ளாய், விரத சீலரா யிருந்து, குரு வாரத்தில், அபிடேகத்திற்கும், மகேசுவர பூசைக்கும், வேண்டிய சாமக் கிரியைகளை வண்டியி லேற்றிக் கொண்டு, திரு வா ரூருக்கு வந்து, ஸ்நாந சந்திகளை முடித்துக் கொண்டு, மடத்துக்குட் சென்று, அங் குள்ள பாக சீலர்களைக் கொண்டு, பாகஞ் செய்பச் சொல்லிவிட்டு, அவர்கள் மூவரும் பழ வர்க்க மாதிகளைக் கொண்டு வந்து, சுவாமிகட்கு முன் வைத்துப் பல தரம் வலம் வந்து, நமஸ்கரித் தெழுந்த போது, சுவாமி கள் உபசாந்த மாய்ச் சுட் டிறந்து சித்திர தீபம் போ லசைவற விருந்தது, அப் போது, சுவாமி நாத செட்டி யார் சுவாமிக ளிருக்கும் நிலை நோக்கி, அன்புமீக்கூர ஆநந்த சித்த ராய்த், தன் புத்திரியை சுவாமிகள் சந்நிதியில் நிற்கச் செய்து, தான் அஞ்சலி யஸ்தராய் நின்று, தன் கண் களில், ஆநந்த பாஷ்பம் இடைவிடாது சொரியச் சுவாமி களைக் குறித்து ஒரு பதிகம் பாடினார். அது வரு மாறு:-

ஸ்ரீமத் அகண்ட பரிபூர்ணாத்விதீய சச்சிதாநந்த
சுத்த சைதந்ய சிவ தக்ஷிணாமூர்த்தி குருவே நம;

அறுசீர்க் கழிநெடில் அடி ஆசிரிய விருத்தம்.

வாயினால் வாழ்த்தி நெஞ்சால்
வத்துநிர்த் தேசஞ் செய்து,
காயத்தால் வணக்கஞ் செய்யுங்
கருத்துடை யன்பர் முன்பாய்,
நாயினுங் கடைய ளாகி நானிருப் பதுநன் றாமோ
தாயினுங் கருணை பூத்த சச்சிதா நந்த வாழ்வே. (1)

மகம்பல புரிந்தும் முன்னூன்
மறைபல வுணர்ந்தும் ஞாநச்;
சுகந்தனை யடையா ரென்றே
சொல்லினர் முன்னோ ரெல்லா,
மகந்தையை யொழிக்கும் நின்னு
ரருளதே வேண்டு முந்நீர்ச்,
சகமெலா நிறைந்து நின்ற
சச்சிதா நந்த வாழ்வே. (2)

இச்சையைப் பேரா நந்த
திடத்தினும் வெகுளி தன்னை,
யெச்சமி லஞ்ஞா நத்தி
னிடத்தினுஞ் செலுத்தி னல்லால்,
பொய்ச்சமுக் கறுக்கு முண்மைப்
போதம்வந் துதய மாமோ,
தற்சிவ ரூப மான சச்சிதா நந்த வாழ்வே. (3)

அகமெனும் விருத்தி யான்மெய்
யறிவெனும் விருத்தி யானுஞ்,
சகமெனும் விருத்தி யென்றன்
சங்கற்ப மென்ப தாலுந்,
தகர்ந்திடு மலது மற்றோர் சாதநந் தன்னால் நீங்கத்,
தருமதோ வுரைத்தல் வேண்டுஞ்
சச்சிதா நந்த வாழ்வே. (4)

கனவிடைச் சூழ்ந்த வெந்தீ
கண்விழித் தளவி னீங்கிப்,
பினையுரு ததின்முத் தாபப்
பெருந்தழ லருளாற் றன்னைக்,

கனபரி பூரணா நந்தக் கண்ணதாக் கண்டா லன்றித்,
தனைவிட வற்றேரு சொல்லாய்
சச்சிதா நந்த வாழ்வே. (5)

நாடகச் சாலை நாப்பண்
ணாட்டிய கம்பம் போலக்,
கூடகத் திருக்குந் தம்மைக்
குறித்துமெய்ஞ் ஞாநா நந்த,
வீடகத் திருக்க வல்லார்
விரைநற வுமிழுங் கஞ்சத,
தாடலை யணிவன் கொல்லோ
சச்சிதா நந்த வாழ்வே. (6)

புனல்கன லுறுமண் மாரி
பொழியினும் புயல்கள் கூடித்,
தனதியல் வழுவா விண்போற்
சத்துவ ரசோத மத்தி,
னினமுறு தொழில்க ளாற்ற னியல்வழு வாதி ருக்குந்,
தனிநிலை நிற்ப தென்றேரு சச்சிதா நந்த வாழ்வே, (7)

இமைப்பினும் விழிப்பி னுங்கா
ணிருளையோர் படித்தாய்க் காணு,
நிமைக்கருங் கண்போற் றன்னை
நினைப்பினு மறப்பி னுந்தான்,
சமத்துவ மாகக் காணுந் தத்துவ ஞாநந் தன்னைச்,
சமைப்பதிங் கெனக்கெக் காலஞ்
சச்சிதா நந்த வாழ்வே. (8)

முற்பத விசாரந் தன்னுன் மூவித வுடல்வே ருக்கித்,
தற்பத விசாரந் தன்னுற் சகலமு மித்தை யாக்கிக்,
கற்பனை யனைத்து மந்தக் கடைப்பத விசாரந் தன்னுற்,
றற்பர மாக்க லென்றேரு சச்சிதா நந்த வாழ்வே. (9)

மமரொழித் தருளு நிற்கே
மாறியான் செய்வ தென்னே,
கமலநற் சரண மென்றன்
கருத்திடை யிருத்த லன்றித்,
தமரொடுந் திருவா ரூரிற் தக்ஷிணா மூர்த்தி யென்னுஞ்,
சமரச குருவாய் வந்த சச்சிதா நந்த வாழ்வே. (10)

இங்ஙனம் பதிகம் பாடவும், சுவாமிகள் செட்டியாரைக் கடைக் கண்ணால் வீட்சிக்க, அவர் சிந்தையில், ஒன்றே யுள தெனும் பிரக்ஞையு மழிவி, எவ்வாறு ளெப்படியோ அப்படி யிராநின்ற சுவாநுபூதி நிலைமை விளங்கப் பெற்றுச், சற்றுப் போது அந் நிலையில் அசைவற நின்று, பின் வெளி வந்து, சுவாமிகள் வீட்சண்ணியத்தால், அதீத நிலைமையு மநுபவிக்கப் பெற்றேனெனப் பல வாறு தோத்திரஞ் செய்தனர். அப் போது, பக்கலில் நின்ற சிலர், செட்டியார் பாடிய பதிகத்தில் தன் புத்திரிக் குள்ள உபாதிகள் நீங்க வேண்டு மென ஓர் பாசுரத்திலேனுங் கேட்டிலர். ஆதலின், புத்திரியிடத்துப் பாசமும், காருண்ணியமு மில்லாதவர், சுவாமிகள் மாட்டே யன்புடைய ரென்று, வசனித்துக் கொண்டார்கள். அவ் வசனத்தைக் கேள்வி யுற்ற செட்டியார், பின்னும், பல தரம் வலம் வந்து, நமஸ்கரித் தெழுந்து, சிர மேற் குவித்த கைய ராய்ச் சந்நிதியில் நின்று, தன் புத்திரிக் குற்ற மேக நோய் நீங்கும் படி கிருபை செய்ய வேண்டு மென்று, பல பாடல்கள் பாடித் துதித்தனர். அப் போது, சுவாமிகள் அவர் குழந்தையைப் பார்த்து, "என்னடி வேண்டு. மென்னடி வேண்டு, மெனப் பல தரந் திரு வாய் மலர்ந்து, அப் பெண் பேரில் பல தரம் வா

யூரலைக் காறி யுமிழ்ந்தது. உமிழுந் தோறும், விசாலாட்சி யென்னும் அப் பெண்ணானவள், விவேக முடையவ ளாகி, "உன்னடி வேண்டும்! உன்னடி வேண்டு" மெனச் சொல் லிக் கொண்டு, சுவாமிகள், திரு வா யமுதத்தைக் கையி லேந்தி, யமிர்த மாக வுட்கொண்டும், சரீராதி யங்கமுங் களப் குழம் பாக, மிக விருப்பத்துடன் பூசியுங் கொண்ட னள். அப் போது, சுவாமிகள், "அடி வேண்டில், நோய் பொடியா யுதிரும்', என் றருளியது. அப் பெண்ணுக்குச் சுவாமிகள் வா யமுதம் பட்ட மாத்திரத்தானே, விவேக முண்டாகியது மன்றி, முன் மெய் யிலுள்ள தினவு முற்று நீங்கிற்று. அத் தருணத்திற், குரு நாதன் பக்கத்தே நின்ற திருப் பணிச் சுவாமிகளுக்கு முன், அபிடேகச் சாமான் களை எடுத்து, வைத்து, சுவாமிகளுக்கு அபிடேகஞ் செய்ய வேண்டு மென வேண்டிக் கொண்டார்கள். அதற் குடன் பட்ட அன்னார், விதி யுக்க மாக, சுவாமிகளுக்கு, அபிடேகஞ் செய்து, விபூதிக் காப் பணிந்து, புட்பாதிகளை யும், அலங்கரித்து, செட்டியாரை நோக்கி, உன் புதல்வியை சந்நிதியி லுள்ள மகா பாப நிவாரண தீர்த்தத்தில், ஸ்நாநஞ் செய்வித்து, உலர்ந்த வஸ்திரந் தரிக்கச் செய்து, விபூதி யணிந்து, "சுவாமிகட்கு நைவேதநத்துக் குரிய் அமுது, முதலிய கறி பதார்த்தங்கள் கொண்டு வந்து, படைக்கச் செய்வா யாக" வென்றனர். அதைக் கேட்ட செட்டியார், தமது புதல்வியைக் கொண்டு. அவ் வாறே செய்வித்தனர்; உடனே, திருப் பணிச் சுவாமிகள், தூப தீபங் காட்டி, நிவேதநஞ் செய்து, பின்னர், சோடசோபசாரம் விதி முறை வழாது செய்து முடித்துச், சந்நிதியில் இருந்த விபூதியை யெடுதது, தான் றரித்துக் கொண்டு, தரிசனத்

துக்கு வந்த அன்பர்களுக்குங் கொடுத்துப், பின்னர், செட்டியார், மனைவி, மகள் மூவரும் ஏனை யடியவர்களுஞ் சூழ்ந்து, நிற்கச் சுவாமிகட்கு அமுது செய்வித்து, எஞ்சிய அமுதை தரிசநத்துக்கு வந் திருந்த துறவர்க ளாகிய அடியவர்கட்கும், அமுது முதலியதுஞ் செய்வித்துப், பின்னர், செட்டியார், மனைவி. மக ளாகிய மூவரும், சுவாமிகள் பரிகலச் சேடத்தை சிரத்தையோடும், உடற் பிணி, பிறவிப் பிணிகட்கு, மருந் தாக உட்கொண்டனர். அதன் பின்னர். சுவாமிகள் சந்நிதாநத்தில் வந்து, மனைவியையும், மகளையும், இருபாலும் நின்று விசிறி வீசும்படி செய்து, தான் சிரமேற் கூப்பிய கையினராய், சந்நிதியினின்று கண்கள் நீர் சோரத் தோத்திரஞ் செய்தனர். பின்னர், சூரிய அஸ்தமன சமயத்தில், மகா பாப நாச தீர்த்தத்தில், சந்தி முடித்துக் கொண்டு, சுவாமிகளைப் பல தரம் வலம் வந்து நமஸ்கரித்து, சிரத்தையோடு பால், பழம் முதலிய வைகளைச் திருப் பணிச் சுவாமிகளால், நிவேதிக்கச் செய்து, குரு நாதன் உண்ட சேடத்தைத் தாங்கள் முன் போலவே யுட் கொண்டு, சுவாமிகள் திரு வடிக்கு நே ராகத் தங்கள் சிரங்களை வைத்துக் கொண்டு, துயில் கொண்டார்கள். மறு நாட் காலையி லெழுந்த போது, விசாலாட்சியி னுருவத்தை மறைத் திருந்த கரும் பாறை போன்ற மேகப் பற்றுக்கள் முழுமையும் பொடியா யுதிர்ந்து, பூமியிலும், வஸ்திரத்திலும், நிரம்பிக் கிடந்தது. விசாலாட்சியின் சரீரம் நோய் பிடித்தற்கு முன் னிருந்த தேக காந்தியை விட தேசசா யிருந்ததை, மாதா, பிதாக்கள் கண்டு, ஆச்சரியமும், ஆநந்தமு முற்றனர்: விசாலாட்சிக்கும், அடி வேண்டில் நோய் பொடியா யுதிரும் என்ற

சுவாமிகளின் வாக்கியப் படியே யுதிர்ந்து விட்டது. இனி பவ நோயும் முற்றும், உதிர்ந்து விடு மென நினைந்து, ஆச்சரியமும், ஆனந்தமும், உற்றனள். பின், மூவரும் பாப நிவாரண தீர்த்தத்தில் மூழ்கி விபூதியாதிகள் தரித்துக் கொண்டு சுவாமிகளை நமஸ்கரித்துத் தொண்டு புரிபவர்க ளாய்ச், சின்னா ளிருந்து பின் விடை பெற்றுக் கொண்டு, தம் மூருக்குச் சென்றார்கள்.

இங்ஙனம், உள் ளன்போடு பிரார்த்திக்கும் பக்தர் களுக்கும், அவ ரவர்கள் வேண்டுகோளுக் கியைய, உரோக நிவாரணம், புத்திர சந்தானம், திரவிய சம்பத்து, ஞான சம் பத்துக்களையும், உதிப்பித்த லாகிய வற்புதங்கள் தோன்ற நடை சமாதியின ராகவும், பிரஹ்ம வித்து வரிய ராகவும்; விடயச் சுட்டிறந்த சீவன் முத்தர்க ளாகவும், சில கால மிருந்தது. பின்னை, ரோர் நாள், மகா மண்டபத்தி லிடப் பட்டிருந்த ஆதனத்தில் வட முக மாக விருந்து முடிந்தது. "முடிந்தது முற்றிலு முடிந்த" தென வசனித்துக் கொண்டு, நிட்டை கூடியது. சுவாமிகள் முடிந்த தென முடி வுரை கூறி, நிட்டை கூடியதை யடித் தொண்டு செய்து கொண்டு, வரும் திகம் ர ராகிய பழனி யப்ப சுவாமிகள்; சுவாமிகள் விதேக முத்தியை யடையுங் கால மிந்தக் கால மாக இருக்கு மெனக் குறிப்பினா லறிந்து, பலர்க்கும் தெரிவித்ததனாலும், பக்தர்களிற் சிலர்க்குத் தங்கள் தங்கள் சரீரத்திற் காணப்படும் குறிகளினாலும், சிலர்க்குச் சொற்பனங்களினாலும், சுவாமிகளைத் தரிசிக்க வேண்டு மென மனதிற் றோன்றி, ஆங் காங் கிருந்து சில பெரியோர்கள் முதலிய பல பக்தர்களு மாக வந்து, சுவாமி கள் நிட்டை கூடியிருப்பதைத் தரிசனஞ் செய்து கொண்

டிருக்கும் போது கிட்டை கூடிய எட்டா நா ளாகிய (கலி 4937) மன்மத ஞு, ஆவணிமீ, உத்திர நக்ஷத்திர மாகிய சுப திநத்தில், சச்சிதாநந்த பரிபூர்ண வியோமா தீதப் பிரஹ்ம மாத்திர மாகிய விதேக கைவல்யத்தை யடைந்தது.

அப் போது, சுற்றிலு மிருந்த பரிபக்குவர்க ளாகிய பெரியோர்கள், மன மானவை, சற்றுப் போது ஆத்மாவி லசைவற்று நின்றனர்! சுகந்த பரிமள மாகிய காற்றுகள் வீசின. சந்தந மழைத் துளிகள் சுற்றிலும் நின்றவர்கள் சரீரங்களிற் றோன்றும்படி பெய்தன! பெரியோர்கள், தங் கள்மனம் அசைவற நின்றது முதலிய சில வேதுக்களால், சுவாமிகள் விதேக கைவல்யத்தை யடைந்த தென வறிந்து, பலர்க்குந் தெரிவித்துச் சுவாமிகளுக்கு அபிஷேக வலங்கார நைவேதந மாகிய பூசைகள் செய்வித்துத், தரிசித்து விபூ திப் பிரசாதம் பெற்றுக் கொண்டு, முன் சுவாமிகளுக் காகக் கட்டப்பட்டிருந்த சமாதிக் கோவிலில் எழுந்தரு ளப் பண்ணி பே ராநந்த முற்று, மநதாற் றியாநித்து வாக்கால் வாழ்த்தினர்கள்.

திரு வாரூர் மடப் புரம்
தட்சிணு மூர்த்தி சுவாமிகள் சரிதம் முற்றுப் பெற்றது.

---

28. மழ பாடி (மழு ஆடி) சுயம்பிரகாச சுவாமிகள் சரிதம்.

மாஉடை உருவும் நரர்உடை உருவும்
மன்னிடும் இபமுக இறையைத்,
தேவுடைத் தேவர் அரதநம் ஆகச் செப்பிடும்
அறுமுக இறையை,

ஆவுடை வயிரத் தூணரை எந்தம்
அழகிய நாயகி பதத்தைக்,
காவுடை மழுவா டியிலமர் சுயம்பிர
காசதே சிகனைவாழ்த் துதுமே.
(நாம் எழுதி முன் ஒரு முறை 1916ஞ
அச்சிட்ட சரிதம்;)

தென் னாடுகள் பலவற்றினுஞ் சிறப் புற்று விளங்கா நின்ற சோழ மண்டலத்தில், பொன்னி நதியின், வட கரையி லுள்ளதுஞ், சமய குரவர்கள் நால்வருள், சுந்தர மூர்த்தி சுவாமிக ளிடத்தில், சிவ பெருமான் நம்மைத் தரிசிக்க மறந்தனையோ வென்று, யோக நித்திரையின்கண், ஆக்ஞாபிக்க, "அன்னே யுன்னை யல்லா லினி யாரைநி னைக்கேனே" என்றும், அப்பர் சுவாமிகள், திரு ஞான சம்பந்த சுவாமிகளாலும், பாடல் பெற் றுள்ளது: மார்க்கண்டேயருக்கு, ஆநந்தத் தாண்டவ தரிசநந் தந்து, மழு ஆடப் பெற்றது மாகிய, திரு மழ பாடி (திரு மழு வாடி) யென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண், சற் றேறக் குறைய 120 வருஷத்திற்கு முன், வேளாளர் குல திலக ராயும், குரு லிங்க சங்கம பத்தியிற் சிறந்தவ ராயும், சுப்பராய பிள்ளை யென்பவரும், அவர்க்குத், தருமம், ஒழுக்கம், அறிவு, அன்பு, அடக்கம், சிவ பத்தி, அடியார் பத்தியிற் சிறந்தவருங், கற்புடையவரு மான ஆத்தம்மாள் என்கின்ற மனைவியாரு மிருந்தார்கள். அவர்கள், பூர்வஞ் செய்த தவப் பேற்றாலு, மிவ் வுலகின்கண் ணுள்ள சகல ஆந்மாக்களும், பவக் கடலி னின்று முய்யும் பொருட்டாலும், சத்திய ஞாநாநந்த பரிபூரணப் பிரஹ்மமே ஒரு வடி வங் கொண்டவோ ராண்மகவைப், பாற் கடல் சந்திரனைப் பெற்றாற்

போல, அந்த ஆத்தம்மாள்,நல்ல திதி,வார நக்ஷத்திர,யோக கரண மமைந்த சுபலக்கிநத்தில் பெற்றார். வேளாண்மை யிற் சிறந்த பிதாவானவரும், தாயாரு மக் குழந்தையைப் பரிவோடும் போற்றி வந்தார்கள். அக் குழந்தையைப் பெற்றவர்கள், களிப்படையவுஞ், சுற்ற முதலிய மற்றவர் கள் வாராத வாழ்வு வாய்த்த தென்றும், சிவ ஞானம் யாம் பெறவேண்டி யிவ்வாறு வந்ததோ வென்றும், சிவன் றிரு வரு ளிங்ஙனம் நம்மைத் தடுத் தாளக் குழந்தை வடி வாக வில் வில்லில் வந்ததோ வென்று அதிசயித்துத் துதித்தும்: ஆநந்தமா யிருந்தார்கள். பெற்றோர்கள், அக் குழந்தைக்கு விதிப்படி சுப திநத்தில் கிருஷ்ண சாமி என்று நாம கரணம் சூட்டினார்கள். தாய் தந்தைய ரிருவருக்கும், இன்பம் விளைய, இவ் விளங் குழந்தை யாகிய பெருந் தகை யாரும், அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், விராதை, சத்தியம், தவம், வேதாகம சாஸ்திர ஆராய்ச்சி, சிவ பக்தி முதலியன வெல்லா முடன் வர, வளர்ந்தார். ஐந்து திரு வய தடைந்ததும், தாய், தந்தையர், அக் குழந்தைக்குக் கல்வி பயிலத் தக்க பருவம் வந்திருப்பதை யுணர்ந்து, நல்ல தோர் உபாத்தியாயரை வருவித்து, அவர்க்கு வேண் டியவற்றை வெறுப்பக் கொடுத்து, ஓதுவதற்குப் பள் ளியில் அமைத்தார்கள். அக் குழந்தைக்கு வித்தை யேற, வயது மேறி, யேழு திரு வய தடைந்தது. சுவாமிகளின் தந்தையார், சுவாமிகளின் வரலாற்றை முற்றுங் கண்டு களிக்கப் பெறாது, தேக வியோக மாய், சிவ பதம் பெற்ற னர். சுவாமிகளும், அன்னையா ரேவற்படி பிதாவுக்குச் செய்ய வேண்டிய நீர்க் கடன் முதலிய யாவும்,நூன் முறை வழுவாது செய்து முடித்தார்கள். சுவாமிகளுந், தவக்

குறை முடிக்க வந்தவர்க ளாதலால், கண்டவ ரெல்லாரும் வியக்கும்படி ஆகம புராண சைவ சித்தாந்தங்களைக் குறை வற வோதி முத் தமிழில் சிறந்தவர்க ளாய் முற்று முணர்ந்தவர்களில் முதல்வ ராக விருந்தார்கள். சுவாமிகளும், அவ் விளம் பருவத்திற் றானே முற் பிறப்பின் றொடர்ச்சியால், சிவாலய தரிசநம் செய்தல், சிவ னடியார்களுக்கு, அந்நம் படைத்தல், முதலானவைகளில், அதிக பிரியங் கொண்டு விளங்கினார்கள். மேலும், அவ் விளம் பருவத்திற் றானே சிவாலயத்திற்குத் திநந் தோறும் தவறாமல் போவார்கள். போய் வருங் காலத்தில், சந்திரப் பிரகாச மில்லாத திநங்களில், தனிமை யாய்ப் போகப் பயந்து, ஒரு முதிர்ந்த சிவ பக்தரை யழைத்துப் போவது வழக்கம். இவ் வாறாகச் சுவாமி தரிசநஞ் செய்து வரும் காலத்தில், அச் சிவ பக்தரும், சுவாமிகளின் குணாதிசயங்களைக் கண்டு, அதி விரைவில் சகலத் தியாகத்தை யடையு மென்ப தாகத் தம் மநதிற் பட்டமை கண்டு, ஒரு யுக்தி செய்ய நிச்சயித்து, ஒரு திநம் சுவாமிகளின் பின்னால் சிவாலய தரிசநத்துக்குப் போகையில்; சுவாமிகளை நோக்கி, நீங்கள் விவாகஞ் செய்து கொள்வதா யுறுதி மொழி கூறுவீர்களானால், யான் எப் பொழுதும் பின் தொடர்ந்து வருவேன், அன்றி, வாரே னென்று கூற, சுவாமிகளும், தவறாமற் சிவாலய தரிசநம் செய்யப் பேராசை மிகுந் திருந்ததால், சுவாமி தரிசநத்துக்கு விக்கிநம் வராமல் இருக்கும்படி, விவாகஞ் செய்து கொள்ளுகிறேன் னென் றுறுதி மொழி கூறினார்கள். இங்ஙன மாக நிகழு நாளில், அதன் பின் சுவாமிகள், கிரக விவகாரம் நடக்கும் நிமித்தம் பள்ளிக் கூடம் வைத்துப் பிள்ளைகட் கெல்

லாம் கல்வி கற்பித்து அதன் வருமானத்தினைக் கொண்டு, காலக்ஷேபம் நடத்திக் கொண் டிருக்குங் கால், பஞ்ச லக்ஷணங்களிலும், தேர்ச்சி யுடையவர்க ளாய், சுவாமி களைப் பார்க்க வந்த வித்துவான்க ளெல்லாம், அபஜய மடைந்து போனார்கள். தாயார், சுவாமிகளுக்கு திரு வயது பதி னாறு ஆகவும்,திரு மணம் நடப்பிக்க நிச்சயித்து உணர்த்த, சுவாமிகளும், அதற் கிணங்காதவர்களா யிருக் கக் கண்டு வருந்துகையில், இதைக் கேள்வி யுற்ற அச் சிவ பக்தரும் வந்து, முன் னடந்த மொழியை விண்ணப்பித்து, "சொற்கடவாது விளங்கும் நீங்கள் இதை மட்டும் கடக்கக் கூடுமோ" என்று கூற, சுவாமிகளும்,மௌனமா யிருந்தார் கள். உடனே நல்ல சுப தினத்தில் திரு மணம் புரிவித்து, சுவாமிகளும், மாப் பிள்ளைக் கோல மாக, மதுரைக்குச் சமீபத்தி லுள்ள கடம்பங் குளம் என்னும் கிராமத்தில், தம் மனைவியார் கிரகத்திற்குப் போ யிருக்கையில், தநத்திற் சிறந்தவரும்,வித்தையிற் பண்டிதரு மாகிய ஒரு பிராமணர் வந்து, சில அற்புதக் கேள்விகளைக் கேட்க, சுவாமிகளு மஞ்சாது விடை யளிப்ப, அப்பால், சுவாமிகளும், ஒரு செய்யுளின் தாற்பரியங் கேட்க, அவரும் சொல்ல முடியா மல், சுவாமிகளைத் தம் கிரகத்திற் கழைத்துச் சென்று, சில நாள் உபசரித்து, சுவாமிகளின் வித்வத் தன்மையைக் கண்டு வியப் புற்று, திரு வாலவா யுடையா ராகிய சொக்க நாதர் பேரிலும், அங்கயற்கண் ணம்மையார் பேரிலு மாக, நூதந மாய்ப் பாட வேண்டு மென்று கேட்க, சுவாமி களும் பாடிக் கொடுத்தார்கள். பிறகு சில நாள், அங்குத் தங்கி யிருந்து,மீண்டு மழ பாடி வந்து சில காலம் இல் லற தருமப்படி வழுவாமல், வந்த அதிதிகளுக்கு உண்டி முத

லாயின சமர்ப்பித்து வந்தார்கள். சில நாட் கழியவே, சுவாமிகளுக்குப் பிரஹ்ம ஞாநம் வர, சாதநங்கள் நான்கும் நா டோறும் விர்த்தி யாகிப் பரிபாக காலம் வரவும். தெக்ஷிண திசையி லிருந்து ஞாநாசாரியர் வந்து, சுவாமி களின் பரிபாகத்தையும், ஆகம புராணங்களி லிருந்த பே ராசையையும் கண்டு, ஆத்ம ஞாந சாஸ்திரங்களை விசா ரிப்பதைவிட்டு வீ ணுகக் காலத்தைப் போக்கக் கூடா தென்று, தத்துவ நிச்சய முண்டாக ஞாந சாஸ்திர மொன் றைக் கொடுத்து, விசாரம் பண்ணச் சொல்லியும், சுவாமி களுக்கு, முன் அப்யாசித்த ஆகம புராணுதிகளின் வாசனை விடாமல், இருப்பதை யுணர்ந்து, புராணுதி வாசனை விட்டா லொழிய, கேவல நிலை தோன்ருதென்ப தாய்த் தெளிவித்து விட்டு, மீண்டும் தான் வந்த திசை நோக்கிச் சென்றனர். இப்பால் சுவாமிகளும், அபர வறிவை விட்டு, வேதாந்த விசாரஞ் செய்து வந்தும், ஆத்ம சொருபம் வெளிப்படாமை கண்டு,வருந்தி ஸ்தலங்க டோறும்,துதித் துப் பாடி வந்தார்கள். ஒரு நாள் சுவாமிகளுக்கு ஏதோ ஒரு சங்கற்பம் திரு வண்ணுமலை போக உண்டானதால், புறப்பட்டுச் சென்று பிராரப்தப்படி நடக்குமெனப் பாத சாரியாய்ப் போகும் போது,அவ் வவ் வூரி லுள்ள ஜநங்கள் வந்து உபசரிக்கத் திருக் கோவி லூரில் பிக்ஷைக்குப் போயும், அங்நங் கிடைக்காமையினுல், முடிவில் தெருவின் கோடியில்,உண்ணுமுலை அம்மனே ஒரு கிழவி யாக வந்து, உபசரிக்கப் பிக்ஷை செய்து கொண்டு, நடந்து போய்த், திரு வண்ணுமலையில் பல அறிஞர் சூழ வீற்றிருந்தார்கள். இப்பால் சுவாமிகளின் தாயார் சுவாமிகளைக் காணுமல்

வருத்தப்பட்டு, பின் றெடர்ந்து, பல உறவினரோடு, திரு வண்ணுமலையை யடைந்தார். அங்குக் சுவாமிகளைத் தேடிக் கண்ட வளவில், சுவாமிகளை விடப் பிரிய மில்லாமல், அவ் விடத்திலேயே இருத்தி விடுவ தாகச் சிலர் சொன்ன வசனத்தைத் தாயார் கேள்வி யுற்று வருந்துகையில், சுவாமிகளும் தாயாரின் குணத்திற் காகக் கூட வருவ தாக வாக்குக் கொடுத்து, சில நாள் அங்குத் தங்கி யிருந்து புறப்பட்டு, புனல் வாசல் வந்து சேர்ந்தார்கள்.

சில காலம் தங்கி யிருந்து, மறுபடி சிதாகாச மென்னும் சிதம்பர க்ஷேத்திரத்திற்குப் போக அன்பு மிகுந்து. உடனே புறப்பட்டுப் போய், சிவ கங்கை யென்னும் திவ்விய தீர்த்தத்தில் படிந்து, விதிப்படி கோயில் வலம் வந்து, நடராஜப் பெருமான் சந்நிதி யடைந்து, நன்ருக வணங்கித் துதித்து நின்று, முன்னஞ் சிவ கங்கை என்கின்ற பாடலைப் பாடி யழுது, பிறவித் துன்பத்தைத் துடைக்க வல்லீரோ வென்று பிரார்த்தித்து நிற்க, இங்கு வந்தும், துன்ப முண்டோ வென்று அசரீரி வாக்கிய முண்டாகவே, பிரசாதம் கிடைத்தது. நடராஜப் பெருமான் உத்தரவே யெனப் பே ரானந்தத்தில் அழுந்தினவர்களாய், மிகக் களிப் புற்று, சில நாள் தங்கியிருந்து, நா டோறும் தரிசித்து வந்தார்கள், பிறகு மழ பாடி வந்து சாஸ்திர விசாரணை இல்லாமல், அசரீரி வாக்கியத்தை யெதிர்பார்த்திருந்தார்கள், இங்ஙன மாக இருக்கையில், உத்தர திசையிலிருந்து ஆத்ம ஞான சாஸ்திரங்களிற் சில அச்சிட்டு எடுத்துக் கொண்டு, ஓர் அறிஞர் திரு மழ பாடி வந்து சேர்ந்து, சுவாமிகளுக்கு வேதாந்த விசார மிருப்பதைக் கேள்வி யுற்று, சுவாமிகளின் கிரகத்துக்கு வந்து தங்கி அநேகம்

புசித்து, சுவாமிகளின் பக்குவத்தைக் கண்டு யார்க்கும் அடைவதற்கு அரி தாகிய பதத்தை யடைவீர்க ளென்று சொல்லி, தம்மிட மிருந்த சாஸ்திரங்களுள், முதலி லிருந்த பஞ்சதசப் பிரகரணத்தைக் கொடுக்க, சுவாமிகளும் நடராஜப் பெருமானே இவ் விதம் வந்து கொடுக்கிறார் என்பதாக வணங்கி வாங்கவும், அவரும் விடை பெற்றுக் கொண்டு போனார். சுவாமிகளும், சிரத்தையுடன் அதை யொருமுறை விசாரித்து. மறுமுறை பார்க்கையில் ஆதி மத்தியாந்த ரகித மாய் விளங்காநின்ற, தன் சொருபத்தை பிரத்தியக்ஷ மாய்க் கண்டார்கள். பிறகு ஸ்ரீமருத நாயக அய்யா என்பவர்களிடம் வாசிஷ்ட முதலிய சாஸ்திரங் களைப் பாடங் கேட்டு, உடனே தேகோகமா யிருந்த நாம் நித்த சுத்த புத்த முத்த சத்திய பரமாநந்தாத்துவித சொருப மாய் விளங்குகிறோமே யென்று பரவச மாய், யதேச்சை யாய், வீதி நதி மயாநம் முதலான இடங்க டோறும் கூத் தாடிக் களித் திருந்தார்கள். இதைக் கண்ட யாவரும் அதிசயங் கொண்டார்கள், ஒரு திநம் இவ் விருத் தாந்தங்களைக் கேள்வி யுற்ற, அடியார் பத்தி, சிவ பத்தி யிற் சிறந் துள்ள, சுவாமிகளின் சகோதரி யாகிய மங்களத் தம்மாள் வந்து, நமஸ்கரித்துச் சுவாமிகளைத் தா னிருக்கும் புனல் வாசல் என்னும் க்ஷேத்திரத்திற்கு அழைத்துக் கொண்டு போய் உபசரித்து வைத்திருக்கையில், சுவாமி களும், ஊர் புறம்பா யுள்ள ஏகாந்த ஸ்தாநத்தில் சமாதியி லிருந்து, உச்சிப் போதில் வந்து அந்நம் புசித்து வந்தார் கள். இப்படி யிருக்கையில், ஒரு நாள் எருக்கம் பாலைக் குடித்தால், மரண மாவார்க ளென்று ஜநங்கள் சொல் வதைப் பார்ப்போம் என்ப தாகப் பாலைக் கறந்து சில நாள் சாப்பிட்டு வந்தார்கள். அது ஆல கால விஷம் சிவ

பெருமானுக்கு அமிர்த மானுப் போல, அமிர்த மாயிற்று. சில துஷ்டர்கள் சுவாமிக ளுடைய தொடையில் மருந்து வைத்தும், வேட்டு வைத்தும், கூடாத வார்த்தைகளைச் சொல்லியும், ஜலத்தில் அமிழ்த்தியும், வைத்தார்கள். அத னுல், ஸ்வாமிகளுக்கு ஒரு பாதகமு முண்டாக வில்லை. துஷ்டர்கள் துக்கத்தினை அடைந்தார்கள். இதைக் கண்ட யாவரும் வியப் புற்றூர்கள். சுவாமிகளும், புனல் வாசலி லுள்ள பெருமான் பேரில் பாடும்படி சிலர் கேட்டுக் கொள்ள, பாடிக் கொடுத்து, அங்கு ஐந்து வருஷ கால மிருந்தார்கள்.

சில நாளில் மங்களத் தம்மாள் தேக வியோக மாய்ச் சிவ பத மடைந்தனர். உடனே சுவாமிகளும் மழபாடி வந்து பிரஹ்மாநந்தா நுபவத்தால் பிரபஞ்சத் தோற்ற மில் லாமல், உடுத் திருந்த கலைகளும், கௌபீநமும், நழுவத், திரு மேனி முழுவதும் குளிர்ந்து அந்நாகார மில்லாமல், ஆறு மாதம் வரையில் கொள்ளிட மணலில் சூரியோதய கால முதல் அஸ்த மான பரியந்தம் சூரியனையே பார்த் துக் கொண்டு அண்ணூந்து படுத்திருப்பார்கள், படுத் திருந்த அவ் விடம் குளிர்ந்து போக, வேறு இடத்தில் படுப்பார்கள். இராக் காலங்களில் நாணல் புதர்களில் இருப்பார்கள். பிறகு சுவாமிகள் ஐந்து வருஷம் மௌந மாய் ஊருக்குப் புறம்பா யுள்ள, அங்கா ளம்மன் கோவிலி லிருக்கும் போது, முன் வந்த குரு வானவர் வந்து சுவாமிகளின் விருத்தாந்தங்களைக் கேட்டு, அதிசயப்பட்டு சுயம்பிரகாசமே யென்று கூப் பிட்டு, மௌநம் விட்டு என்னேடாவது சுவாநு பவத் தைத் தெரியப்படுத்தக் கூடாதா வென்று கேட்டுக்

கொள்ள, சுவாமிகளும், கிருபை கூர்ந்து வாக்குவசரிக்க வாராது, தாழ்ந்த சப்த மாய், பிரமைவாகம் என்று பிரஹ்மாநந்த விலாசமாகத் தன் சுவாநுபவத்தையும், சுயம்பிரகாச மென்கிற நாமம் குருவால் அழைக்கப்பட்டதையுங் காட்டி, கீர்த்தந மாகப் பாடினார்கள். குருவும் இவ் வநுபவம் வரப்பெற்றிலோமே யென்று கூறி, சுவாமிகளின் பெருமை யாவராலும் அளவிடக் கூடா தென்று மாந மகிழ்ந்து சென்றனர். அது முத லாகச் சுவாமிகளும் மௌநம் விட்டுச் சகச நிஷ்டையி லிருந்து அநேகம் கீர்த்தனைகளைப் பிரஹ்மாநந்த விலாச மாய்ப் பாடி விநோதமா யிருந்தார்கள். அக் காலத்தில் சுந்தர சுவாமிகள், திரு வையா று தில்லை ஸ்தாந முதலிய ஸ்தலங்களி லுள்ள சிவாலயத் திருப் பணி யியற்றிக் கும்பாபிஷேகமுஞ் செய்யும் பொருட்டு, மழ பாடி வந்த காலத்தில், சுயம்பிரகாச சுவாமிகளைக் கண்டு தழுவி யிருவரு மாக சுகித் திருக்கையில், திரு மழ பாடி க்ஷேத்திரத்திற்கும் திருப் பணி செய்ய வேண்டு மென்றும், பொன்னி நதிக்குத் தென்பா லுள்ள கடு வெளி யென்ற ஸ்தலத்தில் சிவாலய மானது முன்னொரு காலத்தில் சோழ ராஜா, வழக்கப்படி சிவாலய தரிசநம் செய்ய வருகையில், ஆலயத்திற்குச் சமீபத்தில் ஒரு சித்தர் பிரபஞ்ச நாட்ட மில்லாமல் சமாதியி லிருப்பதைப் பார்த்து, அச் சித்தரைச் சமாதியினின்று வெளிப்படுத்தி, விடயாநந்தத்தில் செலுத்தி வைப்பவர்களுக்குப் பரிசு கொடுப்ப தாக வாக்கு அளிக்கவும், அதைக் கேள்வியுற்ற ஒரு தாசி அந்தப் பிரகாரம் செய்வ தாகச் சொல்லி மரத்தி லிருந்து விழுந்த சருகைப் புசித்துக் கண்மூடிச் சமாதியி லிருப்பதைக் கண்டு, சருகைப் போல, சிறு

உணவு செய்து நா டோறும் அவர் கரத்தில் போட்டு வர; அவரும் அதைப் புசித்து, விழித்துத் தாகத்திற்கு சலம் கேட்க, அதன் பின் தன் கிரகத்திற்கு அழைத்துக் கொண்டு போய் வைத் திருந்து, அந்த முத லான உணவுகளை யருந் தச் செய்து, விடய சுகத்தில் அழுந்தும்படி செய்ய, அவ ரும், அவள் ஏவல் கேட்டு, இங்ஙன மாக வாழு நாளில்; சோழ ராஜா முன் போல ஆலயத்திற்கு வருகையில், இந்தத் தாசி ஆலயத்தில் அநேகர் கூடி யிருக்கையில் நிருத்தஞ் செய்து காலி லுள்ள சலங்கையை நழுவ விட, அதைக் கண்ட சித்தரும் குனிந்து எடுத்துக் கட்டி விடவும், இதைப் பார்த்த இராஜா முதலானவர்கள் நகைக்க, அப்போது சித்தர்,

செல்லும் பொழுது செலுத்துவேன் சிந்தையை
வெல்லும் பொழுது விடுவேன் வெகுளியை
அல்லும் பகலு மறிவுடன் துஞ்சினல்
கல்லும் பிளந்த கடுவெளி யாகுமே'' என்ற பாவைக்

கூற, சிவ லிங்க மானது பிளக்க, ராஜா முதலானவர்கள் பயந்து வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்ள, மீண்டும்,

"எட்டி ரண்டும றியாத வென்னை
எட்டி ரண்டும றிவித்தா யென்னந்தி
எட்டி ரண்டும றிவால றிந்தபின்
எட்டி ரண்டுமி லிங்கம தாமே'' என்று பாட, முன்

போல, சிவ லிங்கம் சேர்ந்தது; அது முத லாக ஆலயம் ஜீரணித்தும், குடிகளும் வருந்தியு மிருப்பதை யுணர்ந்து, அதற்குத் திருப்பணி செய்ய வேண்டு மென்றும், சுந்தர ஸ்வாமிகளிடம் சுயம்பிரகாச சுவாமிகளும் தெரிவிக்கக்,

கர்மேந்தனம் ஞானாக்கினிக்கு ஒரு பொருளாமா" என்று சொல்லிச் சுவாமிகளும் புறப்பட்டுக் கடு வெளிக்குச் சென்று திரு நோக்கம் வைக்கவே, திருப் பணி செய்து கும்பாபிஷேகமும் நடந்தது; குடிகளும் க்ஷேமத்தை யடைந்தார்கள். ஆனதால், ஞானிகளால் வந்த குறைவு ஞானிகளால் தீருமே யொழிய வேறு வழியினுற் றீராது; சில காலத்திற்குப் பின் சுவாமிகளின் தாயார் தேக வியோக மாய்ச் சிவ பதம் பெற்றனர். அப்பால், சுவாமிகளும், மழ பாடி க்ஷேத்திரம் நீர் வள மாகப் பாட, நீர் வள முண்டாய்ச் சிறந் திருந்தது, விளாங் குடி, புனல் வாசல் முதலிய இடங்களில், நீர் வளம் முதலியன இல்லா திருந்த காலத்துச் சுவாமிகளை அழைத்துக் கொண்டு போய், அவ்வூர் ஜநங்கள் பத்துத் திநம் உபசரித்து வைத் திருந்தார்கள். அதன் பின் சுவாமிகள் அநுக்கிரகத்தால் நீர் வளம் உண்டாகச் சுக ஜீவிகளா யிருக்கின்றார்கள். சுவாமிகளின் அநுக்கிரகத்தால், அநேக சீவர்கள் ஆதி வியாதியி னின்று நிவிர்த்த மானார்கள். சுவாமிகளும், சேஷாத்திரி சிவனார் அருளிச் செய்த, நாநா சீவ வாதக் கட்டளைக்குத் தாம் அடைந்த பேறு உலகம் அடைய, கிருபை கூர்ந்து பதார்த்தம் விரித்துச் செய்தும், அநேகம் பக்தவர்களுக்கு பவக் கடலி னின்று நீங்கும்படி அநுக்கிரகித்தும், வந்தார்கள். இங்ஙன மாகச் சில காலம் சீவன் முத்தியி லிருந்து, கலி 4997 க்குச் சரியான துர்முகி ஹு தை மீ, 12 தேதி, சனிக் கிழமை, சஷ்டி திதி, அஸ்த நக்ஷத்திரத்தில், நிருபாதிக வகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவ ஸ்வருப மான நிலையில் தேகத்தினை விட்டு விளங்கினார்கள்.

சமாதி கவி.

ஆதிகலி யையாயி ரத்தாண்டின் மூன்றுகுறை வான துன் முகியாண்டினி—லமரர்பக லெனுமுத்த ராயணமு மேமந்த மானரிது மகரமதிசேர், தேதிபன் னிரண்டிலே சப்தவா ரந்தனிற் றிதிஷஷ்டி யமரபக்ஷத்—திமிரமொன் றின்றியொளி ரஸ்தநட் சத்திரஞ் சேரிரவு சாம நாலில், சோதிவா னவர்பரவு மழபாடி நகரில்வாழ் சொரூபஞா னியர்வாக்கிறுற்—றுதிபெருக வாழ்மடம் தனிற்றலைமை பெருஞான தோமிற்சு யம்பிர காசன், நீதிபெரு மடியவர்க் கருள்செய்த கண்டைக நிசசச்சி தாநந்தமாய்-நித்தியநி ரா லம்ப வத்துவித சுத்தசிவ நிலையிற்க லந்தனனரோ.

ஸ்வயம்பிரகாச சுவாமிகள் சரித முற்றுப் பெற்றது.

தோத்திரங்கள்.

காசி. (இன் னிசை).

ஆதார மற்றியம னுக்கினைக்கி யஞ்சியுந்தன்
பாதார விந்தம் பரவிப் பரதவித்துக்
காதார் கடைவிழிதோய் கங்கைநதி சூழ்விசுவ
நாதாமி கத்தளர்ந்தேன் நாளுமென்னை யாளுவையே. (1)

திரு வாரூர்.

சீரார்விண் ணிந்திர னுந் தேவரும்பூ மழைபொழியத்
தாராருஞ் சுந்தரற்காய்ச் சந்துசென்ற வெம்பெருமான்
காராரும் புன்னைமலர்க் காவிலுமை யோடிருக்கும்
ஆரூரா வென்னையுந்த னடியிணைக்கீ ழாக்குவையே. (2)

இராமேசுவரம்.

உன்னை யறிந்துடல மோர்மூன்று மீந்துனக்குத்
தன்னை யறியச் சமனில்லை-யெம்பெருமான்
பொன்னேரீ னாயைப் பொருந்துகின்ற நாளியாய்
நன்னயஞ்செய் வெவ்வுயிர்க்கு நாயகமே யிராமலிங்கம். (3)

திருப் பெருந்துறை.

வருந்தித் தவர்புரியும் வாதவூ ரெம்மடிக்காய்த்
திருந்தப் பரிநடத்துஞ் சேவகமாய் வந்தருளிப்
பொருந்தப் பசுபாசம் போக்கிச்சி வமாக்கிக்
குருந்தடியில் வீற்றிருக்குங் கோவே சிவக்கொழுந்தே. (4)

மதுரை.

அந்தரத்தின் முழுவதிர வணிபொழில்சூழ் கோடரங்கள்
கந்தரத்திற் கம்பித்தாற் கனிபடுக்குந் தென்கூடற்
செந்துவர்வாய் வல்லிபங்கா செல்வரவிற் கூட்டாமற்
சுந்தரே சாவெனைநின் றுணையடிக்கே யாக்குவையே. (5)

28. ஸ்வயம்பிரகாச சுவாமிகள் சரிதம் முற்றும்.

---

29. *சுந்தர ஸ்வாமிகள் சரித்திரம்.*

இந்துசேர் சடிலக் கயமுகன் தன்னை
இமையவர்க் கிறைவனும் குகனைச்,
சுந்தரேச் சுரனை உலகினை ஈன்ற
தோகைமீ னாக்ஷியை முகிழ்சூழ்,
கொந்தலர் பொழில்ஆர் ஸ்ரீமிறின ஒலிகள்
குமுகுமு வெனும்அரி மழம் வாழ்,
சுந்தர ஞான தேசிகன் பதத்தைத்
தொழுபவர் கழல்பணிந் திடுவாம்.

புண்ணியாபுண்ணிய மென்னு மிரு வினையி னுப்பா
யினிய ஞான சாதனத்தை யெய்தற் குரிய இடமாதலின்,

எவ் வுலகத்தில், தென் பாண்டித் திரு நாட்டில், தக்ஷிண கங்கை யெனப் பெயர் பெற் றோங்கிய தாமிர பர்ணி நதி யின் வளமிக்க தீரத்தி லுள்ளதும், புராணங்க ளான் மிகச் சிறப்பித்துச் கூறப் பெற்றது மான சாலி வாட புர மென் னுந் திருப் பெயர் வாய்ந்த திரு நெல் வேலி க்ஷேத்திரத் துக்கு வடபால், ஒரு யோசனை தூரத்தில், சிறப்பு மிக்க சித்திர கங்கா தீரத்தில், ஆநந்த வல்லி சமேத ராய் ஸ்ரீ கைலாச பதி திருக் கோயில் கொண் டருளி வீற் றிருக் கும். கங்கை கொண்டா னெனப் பெய ரிய திவ்விய சிவ க்ஷேத்திர மொன் றிருக்கின்றது.

அந்த க்ஷேத்திரத்தில், கலி, நா லாயிரத்துத் தொள்ளா யிர மாண்டிற்கு மேல், அந்தணர் குலத்தில் ஸ்ரீ அப்பய தீக்ஷிதரவர்கள் தௌஹித்ர பரம்பரையில், ஸ்ரீவத்ஸ கோத் திரத்தி லுற்பவித்தவ ராய், வருணாச்சிரம வொழுக்கங்களை, கற்பு வாய்ந்த காமாக்ஷி யம்மா ளென்னுந் தமது தரும பத்தினியாருடன் வழுவா தியற்றிவருபவ ராய், வேத வேதாங்கங்களை நன்கு கற்று ஐயந் திரி பறப் பொரு ளுணர்ந்து, தம்பாற் கற்க வருபவர்க்கு, நன் குணர்த்து பவ ராய், குரு லிங்க சங்கம பத்தியிற் சிறந்தவ ராய், பஸ்ம ருத்ராக்ஷாபரண பூஷித ராய், சிவ லிங்கார்ச்சந தற் பர ராய், கருணை யாதிய கல்யாண குணங்கள் பொருந்தியவ ராய், யஞ்ஞேசுரர் எனப் பெய ரிய ஓர் விப்பிர சிரேஷ்ட ரிருந்தார்.

அவருக்குச் சிவ பெருமானது திரு வருளால், முன் னைப் பிறவி பலவற்றில், முயன்று செய்த முழுத் தவத்தின் பலனே, ஓ ருரு வெடுத்து வந்தாற் போல, கலி நா லாயிரத்

துத் தொள் ளாயிரத்து முப் பத்து மூன்று மாண்டில், கர வருஷத்தில், கார்த்திகை மாசத்தில், இரு பதாந் திநத்தில், திர வாரத்தில், அமாவாசியில், அநுஷ நக்ஷத்திரத்தில், இடப லக்கிநத்தில், இடபாரூடரி னினிய வருளே, யோர் ம்கவா யவதரித்தது.

அந்த மாண் பார்ந்த மக வவதரித்த திவ்விய தினத்தில், அப் பதிக்கண் ணுள்ள மாந்த ரனைவரும் போந்து, அத் திரு மகவினைக் கண் களிப்ப நோக்கி, முன் கண் டறியாப் பே ரழகும், சோதி வடிவுங் கண்டு, இது சுந்தரமோ, வெனப் பே ரன்பாற் கூறிக் கூறித், தத் த மில்ல மேகுவார். ஏகு மவர் சிறிது நெறி செல்லுழித் தெவிட்டாத் திரு வழகைக் கண்ட கண்கண் மீளவுங் காண விச்சை கூரத் திரும்பி வருவர். தேவ ருலகைத் திண்டி நீண்ட செழுமை மிக்க காவில் வாழுங் கக நிரைகள் கானம் பாடிக் களித்தன. காம தேநுவை நிகர்க்கும் ஆன் கன்றுகள் துள்ளிக் குதித்துத் தருக்களி லுள்ள கனிகளை யுகுத்தன. சித்திர கங்கையின் றிரு நீத்தம், தனது ஜன்ம பூமியி லுள்ள சிவ மது கங்கை மானத் தெளிந்து விளங்கிற்று. மிகக் கூறி யென்? ஆண் டுள்ள பல் வகைப் பிராணிகளும், இகலொரீஇ நட்பு, இன்ப வாரியிற் றிளைத்தன.

சிவ பரஞ் சுடரா யிலங்கு மிம் மகவினைக் கண் குளிர நோக்கி, யஞ்ஞேசுரர், பரமாநந்த சிந்துவிற் படிந்து, சுக முற்று ராயினும், உலகியல் கருதிச் சித்திர கங்கா நதியிற் படிந்து, ஜாத கர்மாதிக் கிரியைகளை வேதங் கூறிய வாறு நடாத்தி, கோ தாநம், பூமி தாநம், சுவர்ண தாநம், முதலிய, அநேக தாநங்களும் செய்து, அரிய மானிடப் பிறவி பெற்றதனு லாம் பயன் பெற்றே மெனப் பெரு

மகிழ் வெய்தி யிருந்தனர். பின்னர், அன்னப் பிராசநம், சௌள முதலிய கிரியைகளையும், மறை புகன்ற வண்ணம் வழுவாது நடாத்தி யன்போடும் வளர்த்து வந்தனர்.

அம் மகவு, அன்பர்களிடத்திற் சிவ பெருமான தருள் வளருவது போல, வளர்ந்து வந்தது. அக் குழவி யிளம் பருவத்திலேயே விளையாடும் விளையாட் டெல்லாம் வேத புராணங்களையும், சைவாகமங்களையும், ஸ்மிருதிகளையும், நல் லாசிரியர் மூலமா யுணர்ந்த அன்பர்க ளியற்றிவரும், சிவ பூஜையாதி யுத்தமச் செயல் போலவே யிருந்தன.

சில பொழுது, இம் மகவு, அந்தணச் சிறருடன் மகா தேவ நாம பஜநம் பண்ணிக்கொண் டிருக்கும் போழ்து, பதுமாதநத்தில் வீற்றிருந்து, மெய், கண்டம், சிர மிவற் றைக் கோடாது வைத்து, சிவத் தியானம் செய்வர். இவ் வாறு, இவ் விப்பிர குல சிகாமணி, இளம் பருவத்தின் கண்ணேயே, அரிய திரு விளையாடல்களைச் செய்து கொண் டிருந்ததைக் கண்டு களித்து, ஆநந்த வாரிதியிற் படிந் திருந்த, அவரது மாதா பிதாக்கள், வினை வயத்த ராய்ப் பதி னெண் மதி நிறைந்த விக் குழவியை விட்டுப் பரகதி யடைந்தார்கள்.

பின் இச் சுந்தரரையும், இவரது மூத்த சகோதர ராகிய குப்பாணி என்ற, இராம சுப்பய்யரையும், மாதுலர் வெங்கட சுப்பய்யர், தம தூருக்கு அழைத்துக் கொண்டு வந்து வளர்த்து வந்தனர்.

பின்னர், சுந்தரர்க்கு ஐந் தாவ தாண்டில், வட மொழி தென் மொழி வல்லுந ராய வொரு வுபாத்தியாயரால்

அக்ஷராப்பியாசம் செய்வித்து, நூல்களைப் பயிற்றுவித்தனர். இச் சுந்தரர் பரசிவத்தின் றிருவருளா லவதரித்தவ ராதலின் கற்கத் தொடங்கிய நூல்களை யெல்லாம் முன் கற்றவர் போலவே, ஆசிரியர் வியப்ப எளிது விரைந்து கற்று வல்ல ராயினர். பின்னர், மாதுலராற் றானே உபநயநஞ் செய்யப் பெற்று அவ் வூரி லிருந்த இராமகிருஷ்ண கனபாடிகளிடத்தில் வேதாத்யயநமுஞ் செய்து வந்தனர். நாளடைவில் பரசிவப்ரஸாதத்தால் வேத பாஷ்யங்களையும், புராணம், ஸ்மிருதி, இதிகாசம், தர்க்கம், வியா கரணம், மீமாம்ஸங்களையும், தானே கற் றுணர்ந்து, அவ் வச் சாத்திரங்களில் வல்லுநரா யுள்ளா ரெல்லாம் வந்து வாதஞ் செய்து, தோல்வியுற்று வணங்கிப் புகழத், திசை யெலாம், தன் புகழ் பரவ இலங்கினர். பின்னர், வீரவ நல்லூ ரென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் வசித்த சுரோத்திரிய ராயும், பிரம நிஷ்டராயும், கருணை, முதிதை, மைத்திரி, உபரதி யாதிய குணங்கள் நிறைந்தவ ராயு முள்ள பிராமண சிரேஷ்டராகிய ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகளை யடைந்து, சர்வ வேதாந்த நிச்சாயக மாய் விளங்கும், சூத்ர பாஷ்யம், உப நிஷத் பாஷ்யம், கீதா பாஷ்யம், என்கிற பிரஸ்தாநத் திரயங்களையும் சம்பிரதாயப்படி சாந்தி பாடம் செய்து, பின்னர் பத்த மடை வந்து சூதசங்கிதை பாராயணமும் செய்து வந்தனர். தினந் தோறும் சுருதி கூறிய வாறு விடிய வைந்து நாழிகைக்கு முன் எழுந்து ஸ்நாநாதி நித்திய கருமங்களை நிறைவேற்றி, பஸ்ம, ருத்திராக்ஷ தாரி யாய் சிவதரிசநத்தை விதிப்படி யன்போடும் செய்வதும், நியம மான ஆகாரம் செய்வதும், சூத சங்கிதா படநம் செய்வதும். பின் சாயஞ் சந்தியில், ஸ்நாநானுஷ்டாநாதிகள் செய்வதும், ராத்திரியில் சிவ பஜநம் செய்வது மாகக் காலத்தை எட்டுணையும்

வீணுக்காமல் சிவ கைங்கர்யத்திலேயே கழித்து வருவர். இவ் வாறு, அரிய நல் லொழுக்கங்களை அநுஷ்டித்துவரும் அவ் வேதிய புங்கவரைக் கண்டு ஆச்சரிய முற்று, இவர் சிவனே யென நினைந்து, அப் பதியின்கண் ணுள்ளாரும், பிற வான்றோரும், சுந்தர சிவ னென அழைப்பா ராயினர். இவரது ஆண்டின் சிறுமையினையும், அரு மறை வழி யொழுகும் அரிய நற் குணத்தின் பெருமையினையும், மாது லர் கண்டு அதிசய முற்று, அடைச்சாணி யென்னும் கிரா மத்தில், வைதிக சாம்பவராய் சுந்தரசிவ னுடைய மரபிற் கியைந்தவ ராய் இராம சுப்பய்யர் என்னும் நாமத்தினரா யுள்ள வொரு விப்பிர சிரேஷ்ட ருடைய அருமைப் புதல்வி யாகிய ஜாநகி யம்மாளை வேத விதிப்படி மணம்புரிவித்த னர். சுந்தர சிவனார் கற் போர்வடிவுகொண் டென்னக் கவினும் ஜானகி யம்மையுடன் ஸ்வாத்மாராமராய் இல்லற நடாத்திவரு நாளில், பஸ்மருத்ராக்ஷதாரிகளா யுள்ள வேதி யர்கள், பக்தர்க்ள், யோகியர்; ஞானியர் முதலான சாதுக் களைக் காணில் அன்போடும் கிரகத்துக்கு அழைத்து வந்து போஜநம் செய்வித்தும்,அவ்வவருக்கியைந்த வுபசாரங்களை ச்செய்தும்,அவர்களிடத்திற் சாத்திரார்த்தங்களை வினவியும் ஆநந்த முறுவர். பின்னர், இவரது மனைவியாரின் பிதா வாகிய இராம சுப்பய்யர், தமது பதிக் கழைத்துச் சென்று சின்னாள் தமது இல்லின்கண் வசிக்கு மாறு செய்து, இவ ரது பத்தியின் வன்மையைக் கண்டு வியப்புற்று, பாண லிங்கமும், நடராஜர்,சிவகாமியம்மை முதலாய மூர்த்திகளை யும்,பூஜை செய்து வருமாறு கொடுத்து,பூஜை முறைகளை வைதிக சம்பிரதாயப்படி யுபதேசித்துப், பூஜை புரிவித்துச் சுந்தரசிவனாரை அவர் பதிக் கனுப்பினர். பின்னர்ச் சுந்தரர் பத்தமடை வந்து,தினமும் தமது திருக் கரத்தானே ஆயிரம்

கூவிளமும்,பிற பத்திர புஷ்பங்களும் எடுத்து திரி காலமும் மனைவியார் சமர்ப்பிக்கும் மகா நிவேத்யாதிகளை நிவேதித்து சோடசோபசாரமும் செய்து பூஜித்தும், சிவ நாம மிலக்கம் ஜபித்தும், ஆத்ம லிங்கத்துக்கு நிவேதித்தவைகளையே புசித்தும், இராத்திரியில் ஆலய தரிசநம், பஜனை முதலியவைகளைச் செய்தும், பால் பழ முதலியவற்றையே பருகியும், சிவ தியானாதிகளால் இரா முழுதும் கழித்தும், இவ்வாறு அரிய தவ மியற்றி வருவா ராயினர். இவ் வாறே, அவரது மனைவியாரும் இருந்தனர். இன்னணம் வாழ் நாளில் சுந்தர சிவன் சிவ ப்ரஸாதத்தால் நான்கு சாதநமும் அடையப் பெற்றவராய், சற் குருவை யடைந்து ஞானோபதேசம் பெற வேண்டு மென்னு மவா மிக்கவராய்,ஞாநாசிரியரைப் பலவிடங்களிலுந் தேடி, அடைச்சாணிப் பதியில் விசுவேச்சுர ரென்னும் ஒரு ஞானைசுவரிய சம்பன்ன ரிருக்கின்றாரெனக் கேள்வியுற்று, அவரது சந்நிதாநத்தை யடைந்து, அகண்ட பரசிவமே எளியேனை யாண்டருளும் பொருட்டு இத் திருக் கோலங் கொண்டு வீற்றிருக்கின்ற தென வுள்ளத்திற் குறித்து, அவரது பாத கமலங்களில் சாஷ்டாங்க மாக நமஸ்கரித்து எழுந்து, உள்ள முருகவும், கண்ணீர் பெருகவும், உரோமஞ் சிலிர்ப்பவும், நாத் தழுதழுப்பவும், நின்று தரிசித்து அடிகளே, அடியேனை ஞானோபதேசம் செய்து திரு வடிக் காளாக்கி இரக்ஷித் தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

ஆசிரியரும்,மன மகிழ்ந்து,இவரது அதிதீவிர பக்குவத்தை நோக்கிக், கிருபா நோக்கம் செய்து, சமீபத்தில் அழைத்து, அஞ்சே லென் றருளி, ஞானோபதேசம், அஸ்த மஸ்தக சையோக பூர்வம் செய்தருளினர். செய்தருளலும்,

சுந்தரர்,உலக வாதனை யற்று உண்மை வடிவினை யுணர்ந்து, ஞாதிரு ஞான ஞேயரகித கூடஸ்தாபின்ன வகண்டாகாரப் பிரம மாய் விளங்கினர், பின்னர், நெடுநேரஞ் சென்று,சமாதியினின்று விழித்து, பரமானந்தம் மனத்தி னிரம்பி யடங்காது ததும்புவது போல, ஆநந்தக் கண்ணீர் ஆருய்ப் பெருக, ஐயனே, விண்ணவர்க்கு நண்ணரிய இந் நிலையினை யருளியதற்கு, எளியேன் செய்யும் கைம்மாறு முண்டேயோ? இந் நிலையின்கண்ணே என்ஞ் ஞான்றும் தவருது நிற்குமா றருள் புரிய வேண்டு மெனப் பிரார்த்திக்க, அவர் உலகிற் கிந் நிலையினை யுணர்த்தற்கே, இத் திரு மேனியைத் தரித்த நுமக் கொருவர் அநுக்கிரகம் பண்ண வேண்டுவது முண்டோ? சம்பிரதாயத்தை விளக்க வன்றே, தாம் எம்மை யடைந்ததும், நாம் உமக் குபதேசித்தது மென் றருளினர்.

பின்னர், சின்னுள் ஆசிரியர் சந்நிதாநத்திலேயே யிருந்து,அவர் திருப் பணியை அன்போடும் செய்து,ஆசிரியரை உள்ளம் மகிழ்வித்துப், பின்னர், அவரது ஆணையின்படி பத்தமடை வந்து, தமது மனைவியாரையும், தம்மைப் போலவே முத்தி நெறியின் முயல்வித்துப், பல் லாயிரம் மாணவர்களைப் போலவே,இவரையும் ஒரு மாணவராக்கித் தாம் அடைந்த நிலையையே, அவருக்கு முபதேசித்து, முன் போலவே, அநுதினமும் சிவ பூஜை செய்தும், சமாதி செய்தும், சிவாலய தரிசநம், சிவ பஜனம்,சிவ கதாப் பிரசங்கம் செய்தும், தம்மை யடைந்த மாணவர்களுக்கு, ஞானேபதேசம் செய்துஞ் சாஸ்திரார்த்தங்களைச் சிரவணஞ் செய்வித்தும்,இச் செய லெல்லாம் சிவ சொருப மெனக் கண்டு, ஆனந்தாநுபூதிமானுய் அழகாய்க் காலங் கழித்து வந்தனர்.

பின்னர்,பக்தர்களுடன் தக்ஷிண கங்கா தீரத்தி லுள்ள க்ஷேத்திரங்களையும், தீர்த்தங்களையும், தரிசிக்கவும், தீர்த்த மாடவும், இச்சை கூர்ந்தவ ராய், பத்தர் குழாத்துடன் பிர யாணித்து, பொதிகாசலம், பாண தீர்த்தம், கல்யாண தீர்த் தம், பாப விநாசம் முத லாகத் திருச் செந்தூ ரீ ருயுள்ள தாமிர பர்ணி தீரத்தி னிரு மருங்கினு மிருக்கும் க்ஷேத்திரங் களை யெல்லாம் தரிசித் தும், தீர்த்தங்க ளாடியும்,ஆங்காங்கு ஜநங்க ளெல்லாம் பரமாநந்தக் கட லாடச் சிவ பஜநம் சூதசம்ஹிதா படநப் பிரவசநம் முத லாய செய்தும், யாத் திரையைப் பூர்த்தி செய்து,மீளத் தமது வாசஸ்தாநத்தை யடைந்து, முன் போலவே வசித்து வந்தனர்.

அடைச் சாணி கிராமத்திற்கு ஞாநாசிரியரைத் தரிசித் தற்கும், நெல்லை யம்பதிக்கு, ஸ்ரீ காந்திமதி யம்மையின் றரிசநத்திற்கும், அடிக் கடி போய் வருவர்.

போய் வரும் நாளில், ஒரு நாள் ஞாநாசிரியரைத் தரி சித்து சம்பாஷணம் செய்துகொண்டிருக்கையில், ஸ்வாமி, நமது பரம்பரையைக் கிரம மாய்த் தெரிந்து கொள்ள விருப்ப மிருக்கிற தென விண்ணப்பிக்க, ஆசிரியரும், மன மகிழ்ந்து, ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி முதல், தமது குரு மூர்த்தி யாகிய, ஆன்பூர் இராம சந்திர சாஸ்திரிகள் பரியந்த மான பரம்பரையைக் கூறி, குரு புத்திர ராகிய சோம சுந்தரசாஸ் திரிகளும், தாமும், ஒருங்கு ஆசிரிய ரருள் பெற்றோ ரென வுங் கூறினர்.

பின்னர், தம தூர் வந்து,சின் னாள் வசித்துக் கொண் டிருக்கையில், உத்தர தேச யாத்திரை செய்ய வேண்டு

மென்னும் விருப்ப முண்டாய், பல உத்தம பத்தர்களுடன் பிரயாணித்து, மதுரை, ஜம்புகேசுரம், திரு வை யாறு, மாயூரம், புள்ளி ருக்கும், வேளூர், பிரம புரம், சுவேதாரண யம், சிதம்பரம், விருத்தாசலம், காளத்தி, காசி முதலாய பல க்ஷேத்திரங்கள் தரிசித்தும், ஆங் காங் குள்ள, கங்கை, முதலாய தீர்த்தங்கள் ஆடியும், யாத்திரையை நிறைவேற் றித், தமது பதி யெய்தி யிருந்தனர்.

அக்காற் றமது ஞானாசிரியர் தாம் கங்கா யாத்திரை செய்த காலத்திற்,பரிபூரண மடைந்த தாகக் கேள்வியுற்று, ஆசிரியர் வசித்த தல மடைந்து, அவர்கள் சமாதியைத் தரிசித்து, விருத்தாந்தம் யாவுந் தெரிந்து, அவணின் றுன் பூர் அடைந்து, சோம சுந்தர சாஸ்திரிகளைத் தரிசித்து, சகஜ சமாதியின் விஸ்தாரங்களை பரஸ்பரம் நன்கு சம்பாஷித்து ஆநந்த முற்றிருந்தனர்.

பின்னர், பத்த மடை யுற்று, சகஜ நிஷ்ட ராய், மௌந விரதி யாய், சில காலங் கழித்து, மௌந விரதத்தையு நீத்துச், சகஜநிஷ்டரா யிருக்கையில், தாமிரபர்ணி நதியின் வடகரை யி லுள்ள கோடக நல் லூர் இராம சாமி சிவன் முதலிய சில வைதிகர்கள் வந்து தரிசித்து, சிவனே எம் மூரி லுள்ளா ருய்யு மாறு சூதசம்ஹிதா படநம் நடத்த வேண்டு மென் று பிரார்த்திக்க, அது நன்சாக, சம்பிரதாய மாய் நடத்தல் உசித மா மெனத் திரு வாய் மலர்ந்தருள, அவர்களும், அப்படியே யென்று, அவ் வாணையைச் சிரமேற் றுங்கி, தாமிர பர்ணி தீரத்தின் கிராமங்களி லுள்ள சாம்பவர்கள் பலரையும், வர வழைத்து, சுந்தர சிவ னவர்களைத் தமது கிராமத்திற் கழைத்துவந்து, தக்க வுபசாரங்கள் செய்து, சிவாலயத்தில்

ஓர் பக்கலில், மிக்கதோர் ஆசநத்தில் வீற்றிருக்கச் செய்து, சூத சம்ஹிதா படநத்தை விதிப்படி ஐந்து நாளில் அவர்களாற் பூர்த்தி செய்வித்து, ஐந்து நாளும், பகலும், இரவும் பிராமண போஜநமும், இராத்திரி சிவ பஜநமும, இடையிடையே கதாப்பிரசங்கமும், செய்யக் கேட்டு, எல்லாரும் நாம் இவ் வரிய மாநுடப் பிறவி பெற்றதனு லாய பயன் பெற்றோமென ஆநந்தக் கடலின்கண் மூழ்கினர், அது முதல் அங்குள்ளார் சிவனவர்கள் ஆக்ஞையின்படி அவ் வூர் சிவாலயத்தில், ஓர் பக்கலில் பஜனை மடம் நிர்மாணம் செய்து, தினமும், இரவில் சிவ பஜநம் செய்து வந்தார்கள்.

பின்னர், பத்தமடையில், யஜ்ஞேச்சுரனென்னும் ஐந்து வயதுள்ள ஓர் விப்பிரச் சிறுவன், வாய்க்காலில் வீழ்ந் திறந்து போக, அக் குழந்தையின் மாதா பிதாக்கள் இரவெல்லாந் தேடி மறு பகலிற் கண்டு எடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்து, போட்டுத் துக்கித்துக் கொண்டிருக்கையில், சுந்தர சிவன் அங்கு எழுந்தருளி, அக் குழந்தையின் மெய்யினை ஸ்பரிசித்துப் பார்த்து, உயிரின்மையை யுணர்ந்து, தமது திருத் தோண்மேற் போட்டுக் கொண்டு, ஒருவரும் அழற்கவென வாஜ்ஞாபித்து, ஓரரங்கிற் புக்கு மந்திர ஜல புரோக்ஷணஞ் செய்து, பஸ்மோத்தூளமுஞ் செய்து, சிவபிரானைச் சில சுலோகங்களாற் பிரார்த்திக்க, குழந்தை துயிலின் றெழுவது போல, சுகமாய் எழுந்திருக்க, அக் குழந்தையைக் கையிற் பிடித்துக் கொண்டு, வெளியில் வந்தனர். அது கண்டு, அங்குள்ள மாதுலர் முதலாய வெல்லாரும் மிக வாச்சரியமுற்றுப், பரசிவனே இவரெனச் சாஷ்டாங்க வந்தநம் செய்து, புகழ்ந்து கொண்டாடி ஆநந்தித்தனர்;

பின்னர், சுத்த மல்லி கிராம வாசி யாகிய, சூரிய நாராயண சிவன் முதலாய பிராமணோத்தமர்கள் வந்து தங்கள் கிராமத்திற்கு எழுந்தருளிச் சூதசம்ஹிதா படனம் நடத்தி எங்களைத் தன்னிய ராக்குவிக்க வேண்டு மெனப் பிரார்த்திக்க, சிவ னவர்களும் அதற் கிணைய, உடன் சிவ னவர்களை யழைத்துச் சென்று, மற்றைக் கிராமத்தி லுள்ள சாம்பவர்களையும், அழைத்து, தக்கதோ ரிடத்தில் சிவ னவர்களை மிக்க வுபசாரத்துடன் உயர்ந்த வாதநத்து வீற்றிருக்குமாறு செய்து, சூரிய நாராயண சிவன், சூதசம்ஹிதா மூல சுலோகங்களை வாசிக்கவும், ஸ்ரீ சிவ னவர்கள், வாக்கியார்த்த ப்ரவசநம் செய்யவும், கடையம் சேஷாசல தீக்ஷிதர் முதலாய சாம்பவ வைதிக சிரேஷ்டர்கள் அரு கிருந்து சிரவணம் செய்யவும், மகாவைபவத்துடன் முதல் நாள் படனம் நடந் தேறியது. இரண்டாவது நாள் படனம் தொடங்கி நடந்துவரும் மத்தியில், சேஷாசல தீக்ஷிதர் அவர்களை அருத்தம் சொல்லு மாறு சமிக்ஞை செய்து, வெளியே வந்து, எந்த நிமிஷத்தில் வைராக்ய முண்டாகிறதோ, அந்த நிமிஷத்தில் துறக்க வெனச் சுருதியிருப்பதால், உடனே சிகா யஜ்ஞோபவீத விஜர்ஜந புரஸ்ஸரமாய், வித்வத் ஸந்யாஸத்தைத் திடமனச் செய்து, கொண்டு, சபையிற் பிரவேசித்து ஆதநத்திருந்து படநத்தை நடத்தத் தொடங்கவும், சபையி லுள்ளா ரெல்லாரும் கண்டு, மிக ஆச்சரிய முற்று, வணங்கித் தோத்திரித்து, எல்லாரும் சிரவணம் செய்து, ஆநந்த முற்றார்கள். அன்று பிராமண போஜநம், முடிந்தவுடன் கோடக நல் லூர், இராமசிவன் நீலகண்டய்யர் முதலாய பஜனை பத்தர்களை, வரவழைத்துத் தாம் பூஜித்து வந்த பாண லிங்கத்தையும்,

ஏனைய மூர்த்திகளையும், அவரது கையிற் கொடுத்து, நீவிர் இம் மூர்த்திகளை பஜனை சபையில் வைத்துப் பூஜித்துப் பஜனை செய்தும், வாருங்க ளென்று ஆஞ்ஞை செய்தார்கள். அவர்களும், அப்படியே யென்றார்கள், பின், மூன்று நாட் படனமும் செய்து, சமாப்தி செய்துவிட்டு, உடனே திரு நெல் வேலி வந்து, ஸ்ரீ ஆசார்யாளது மடத்தி லிறங்கி வசித்து வந்தார்கள்.

அக் காலத்தில், சதாசிவ தருவாடியார் கிருஷ்ண தருவாடியார் மாவடிச் சிதம்பரம் பிள்ளை இவர்கள் வந்து தரிசித்துத், திரு வடிக் காளாகிச் சிவா நுபவச் செல்வ ராய் விளங்கினார்கள். இன்னும், பல பக்தர்களும், பண்டிதர்களும்,திரளும் வந்து தரிசித்தும்,அமுத மழையை யென்ற அத் திருவாக்கினைக் கேட்டும், ஆநந்த மடைந்து வந்தார்கள்.

பின்னர், ஆயிரத்து முப் பதா மாண்டு, இரௌத்திரி வருஷம், தை மாஸத்தில், சதாசிவ தருவாடியார் முத்துச் செல்லமையர் முதலிய அன்பர்கள் பிரார்த்தனையின்படி ஒரு நற்றிநத்தில், ஸ்ரீ ஆசார்யாள் மடத்திலேயே சூத சங்கிதா படன மாரம்பித்துப் பகலில், சுத்த மல்லி சூரிய நாராயண சிவன் மூல சுலோகங்களைப் படிக்கவும், சுவா மிக ளவர்கள், வாக்கியார்த்தப் பிர வசநம் செய்யவும், இர வில், சிவ பஜநமும், சேஷாசல தீக்ஷிதர் அவர்கள் கதாப் பிரசங்கமு மாக, ஐந்து நாளும் நடாத்தி சமாப்தி செய்தார்கள். அதன் பின், பற் பல கிராமங்களிலும் மிகவும் சிறப் பாய் இவ் வாறே படனம் நடாத்திப் பிராணிகளை யெல்லாம் பரசிவாநந்தப் பரவை யாடு மாறு கருணை புரிந்திருந்தனர்.

பின்னர்க் கோடக நல் லூரின்கண் தாமிரபர்ணி தீரத்தி லுள்ள சர வணங்களில் இடை விடாது சுவாமிகள் நிஷ்டை செய்து வந்தார்கள். அக் காலத்தில், கோடக நல் லூர் பிராமணோத்தமர்கள் தருப்பை மூடுகள் தோறும் வந்து, சுவாமீ சுவாமீ, யெனப் பே ரொளி செய்து அழைத்து, விழித்து வரின், திரு வமுது செய்வித்துச் செல்வர். செல்வ ரிவரே யன்றோ? இவ் வாறு,நடந்துவரு நாளி லோர் நாள் ஒருவரும் அன்னம் கொணரா திருக்க, "கொடுக்கச் சில னுண்டு" எனுந் திருவாக்கினாலு முன் சுந்தரர்க்கு அந்நம் அளித்த அந்நங் காணுத பொன்னம்பலத்தரே ஓர் அந்தண ருருக் கொடு வந்து, சுவாமி எனப் பன்முறை வேதம் பகர்ந்த திரு வாக்கால் விளித்து. அது கேட்டுச் சமாதி தெளிந்து, வந்த சுந்தரர்க்கு, அந்ந மூட்டி இனிய வுரையாடிக் கொண்டிருக்கையில், உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திற் றனே திரு வுருவைச் சிவபிரான் கரந்தருள, சுவாமிகள் எளியேன் பொருட்டும் இத்துணை யருளோ ஐயனே! மெய்யனே! துய்யனே! ஞால மிந்திர னொன்முகன் வானவர் நிற்க, மற் றென்னை நயந்தினி தாண்டாய்க்கு நாயேன் நவிலும் முகமன் நன்றே எனச் சில ஸ்துதிகளை வட மொழியிற் செய்தருளி, முன் போலவே சமாதி செய்து வந்தார்கள். இவ் வாறு, அரிய செயலினரா யங்கு வசித்த காரணத்தால் கோடக நல் லூர் சுவாமிகள் என்று பெயர் வந்தது.

ஆயிரத்து முப் பத் தெட்டா மாண்டு, திரு நெல் வேலிக்கு எழுந்தருளி வந்து,பின்னு மோர் முறை வைகாசி மாதத்தில் படநம் நடாத்தி அங் குள்ள அன்பர்களை நோக்கி, ஸ்ரீ நடராஜ மூர்த்தி படத்தை வைத்துப் பஜநம்

பண்ணி வரும்படி யாஜ்ஞாபிக்க, அவ் வாறே, தருவாடியார் முதலான பக்தர்கள் பஜனை மடம் ஒன்று, தற்காலத்துக்குத் திட்டம் செய்து, அதில் பஜனை செய்து வந்தார்கள். சுவாமிகள் அந்த மடத்திற் சில காலம் வசித்தார்கள். பின்னர், ஆடி மாசத்தில், கம்பா நதிக்கண் வசித்தார்கள். அவ் வாண் டைப்பசி மதிக்கண் ஸ்ரீ காந்திமதியம்மையின் மகோற்சவத்தில், ஏழாந் திரு விழாவில், அம்பிகையைத் தவழுங் குழந்தை யாகிய பாலாம்பிகை வடிவ மாகவும், எட்டாந் திரு விழாவில், கோ லடிக்கும் பெண் போன்ற திருக் கோல மாகவும், அலங்காரஞ் செய்ய வாஞ்ஞாபித்து, ஓர் பக்தரால் தங்கக் கோல்களும், சமர்ப்பிக்கச் செய்து, அந்த உற்சவம் எப்போதும் நடந்து வரும்படியாகவும், ஏற்பாடு செய்தார்கள். அவ் வாறே, இப் பொழுதும் நடந்து வருகிறது.

பின்னர், சுவாமிகள் கம்பா நதியில், வசிக்கும்போது, தீபாவளி யன்று இராமச்சந்திர மேத்தா முதல் பக்தர்கள் பலர் வந்து பே ரன்புடன் சுவாமிகளைத் தரிசித்து, ஆநந்த முற்றிருக்கையில், சுவாமிகள் போஜந விதியைத் திரு வாய் மலர்ந்தருளுஞ் சமயத்தில் வலது உள்ளங் கையில் அக்கினியிருக்கிற தென்றும், அதி லங்நம் படும்படி புஜித்தல் கூடாதென்றும், அங்ஙனம் செய்வது நீசர் போஜநத்துக்குச் சமாநம் என்றும், பிரசக்கித்தார்கள். அவ் வமையத்தில் மிக விருத்த ராய் அத் தலக் காமாக்ஷி தேவியைப் பூஜிக்கும் சுப்பிரமணிய பட்டர் அர்ச்சனைக்கு வேண்டிய பத்திர புஷ்பமும், அரிசி முதலாயவைகளும், தென்னங் கூந்தலிலக்கினியும், கொண்டு வந்தனர், மழையால், நெருப் பவிந்து போயிற்று. அவர், சுவாமிகள் சந்நிதியில் வ ந்து,

சுவாமி யான் கொணர்ந்த அக்கினி மழையா லவிந்தமையின், சீடர்களைக் கொண்டு, சிறி தக்கினி அருள வேண்டு மென, சுவாமிகள் ஆவுடையப்ப பிள்ளையை நோக்கி, இத்தடி வீரன் கோயிற் றெருச் சென்று, நெருப் பெடுத்து, வாரு மென் றுஞ்ஞாபிக்க,பக்கலி லிருந்த இராமச்சந்திரர் சுவாமி சற்று முன் அஃது துள்ளங்கையி லுள்ள தெனத் திரு வாய் மலர்ந்தருளியதே, அதனை வர வழைக்கக் கூடாதா வென, வரவழைப்போம் உமது உத்தரியத்தைக் கொடுப்பீரா வெனச் சுவாமிகள் வினவ, அவரு மியைந்து,அன் றுடுத்த கோடி வஸ்திரம் தர, வதனை சுவாமிகள் வலது உள்ளங் கையிற் றேய்க்கக், குபீ ரென்று, அக்கினி பற்றியது. மேத்தா விலை யுயர்ந்த வஸ்திர மாதலின்,அக்கினியை அவிக்க முயல, சுவாமிகள் அக்கினி ப் கவானுக்குத் திருப்தியாய்க் கொடுத்து விடு மென. அவ் வாறே, வாளா விருந்தனர். பின்னர், ஆதிசைவசிகாமணி, அந் நெருப்பி னின் றும் அக்கினியை விருத்தி செய்து, எடுத்துக் கொண்டு போயி னர். அக் காலத்தில்,அங் குள்ள பத்தர்க ளெல்லாம் கண்டு ஆச்சரிய முற்று,அஷ்ட மூர்த்தி வடிவாய இவருக்கு,அவற் றுள், ஒரு மூர்த்தியை வெளிப்படுத்தல் வியப்போ வென வும், எவனது ஆணையால் அக்கினி வரம்பு கடவாது நடக் கின்றதோ, அவனை அவ் வீச னாகிய இவர் வர வழைத்தல் வியப்போ வெனவும், கூறி சுவாமிகளைத் துதித்தார்கள். மேத்தாவும், சுவாமி நாயேன், அறியாமையாற் செய்த இவ் வபராதத்தினை பொறுத்தருள வேண்டு மெனப் பிரார்த் திக்க, சுவாமிகளும்,நகைத்து, இஃதோர் வேடிக்கை,நீவிர் அஞ்சற்க வென்று கிருபை கூர்ந்தருளப், பின் ஆண்டு வந்தா ரெல்லாரும் அடிகளது அடிகளில், அடியற்ற மரம் போல், வீழ்ந்து எழுந்து, சுவாமிகளின் கிருபாமிர்தத்தாற் குளிர்விக்கப்பட்ட ஆணையைப் பெற்றுத் தத்த மிருக்கை

புக் கிருந்தனர். பின்னர், சுவாமிகள், அத் துலா மதிக் கண்ணே, பிரதோஷ தரிசநத்திற்காக, வந்து ஸ்ரீ காந்திமதி யம்மை தரிசநஞ் செய்து பிரதக்ஷிணம் வருகையில், மிகுந்த தீபம் வைத்திருத்தலை நோக்கி, அங்கு நின்றவர்களை, இது கோவிலேற்பாடா, வழிபாடா வென்று வினவ, அவர்கள், இஃது இக் கோயில் மணியம் சுப்பிரமணிய பிள்ளை யாசக விருத்தியாற் செய்யும், வழிபா டென்று கூற, அக் கணமே அவர் வந்து, சுவாமிகளது திரு வடிகளில் மிக்க அன்போ டும் வணங்கிக் கரங்களைச் சிரமேற் கூப்பி நின்று, அடியே னுக்கு சுவாமிகள் தரிசநம் கிடைத்தது எத்துணைப் பிற வித் தவப் பயனோ வென்றுறுதிக்க, சுவாமிகள் நீவிர் இக் கைங்கரியத்தை வழுவா தியற்றிவாரும், உமக்கு சிவப் பிரசாத முண்டா மென் றாசீர்வதிக்க, அவர் சுவாமிகளை நோக்கி, தைச் சங்கராந்தியிற் றிரு வநந்தபுரத்தில் நடக்கும் இலக்ஷ தீபம் போல, இத் தலத்திலும் ஒரு முறை இயற்றித் தரிசிக்க விச்சையிருக்கின்றது. சுவாமிகள் கருணை செய்யி, னடக்கு மெனப் பிரார்த்திக்க, சுவாமிகள், அப்படியே யாகுக வென அருளி, நெல்லையப்பரையும், தரிசித்து பஜனை மடத்தில் வந்திருந்தார்கள். மறு நாள் சதா சிவ தருவாடி யாரவர்கள் சுவாமிகளை தரிசிக்க வந்த காலத்தில், லக்ஷ தீபம் நடத்த விருப்ப மிருப்பதை அப் பத்த சிரோமணி யிடம் சொல்ல, அவர்களும் அப்படியே யென, உடனே மகா லிங்க தீக்ஷிதர், ஐயா தீக்ஷிதர், இவர்களை வரு மாறு செய்து, லக்ஷ தீபம் நடத்து முறை யா தென வினவ, அவர்கள், சுவாமி சர்வஞ்ஞ சன் னிதாநத்தில் யாங்கள் தெரிவிக்கப்பாலரோ வெனக் கூறி, அதன், பின் அதன்

முறையாவது பதி னொரு தினம் மகா ருத்ராபிஷேகம், வேத பாராயணம், இதிகாச புராண படனம், பிராமண போஜநம், நாநா வித வாத்தியகோஷ வேத கோஷத்துடன் ஸ்ரீ பலி நாதரை எழுந்தருளுவித்தல், ஊஞ்சல் மண்டபக் கொலு தீப பூஜை, இவற்றை நடத்திப், பதினோராவது நாளிரவில், இலக்க தீபம் ஏற்றி இடபவாகநாருடராய் சுவாமி எழுந் தருளுதலையும், செய்தல், சம்பிரதாய மா மெனக் கேட்டு, இதற்குப் பதினையாயிரம் ரூபா செலவு மதித்து, சதா சிவ தருவாடியார் அவர்கள், சுந்தர மூர்த்திக் கவி ராஜர் அவர்களையும், நெல்லையப்ப பிள்ளையனவர்களை யும், தளவாய் ராம சாமி முதலியார் அவர்களையும், காசுக் கடை வேலாயுதம் பிள்ளையவர்களையும், இன்னும் முக் கிய மான சிலரையும், அழைத்து, ஊஞ்ஜல் மண்டபத்தில் சபை கூடி, இலக்ஷ தீப விஷய மாய்ப் பேசி, இவ் வருஷம் (1039) தை மாசம், திங்கட் கிழமை, அமாவாசை, திரு வோண நக்ஷத்திரங் கூடிய அர்த்தோதய புண்ணிய காலம் வருகின்றமையால், அம் மகா புண்ணிய தினத்தில் இலக்ஷ தீபத்தை நடத்திவிட வேண்டு மென்று தீர்மானித்து, அதற் கான முயற்சி செய்து, பின்பு கல்லத்தி முடுக்குத் தெரு அருணசலம பிள்ளையவர்கள், புராணிகர் சண்முகம் பிள்ளை யவர்கள், வடக்கு அரண்மனை காந்திமதிநாத பிள்ளை யவர் கள், இவர்களைக் காரியஸ்தர்க ளாக நியமித்து, சுவாமிகள் தருவாடியார் முதலான பத்தர்களுடன் எட்டயபுரம் முதலாய பாளையப்பட்டு, களக் காடு, முதலாய பண்ணை, பிற பத்தர்களிடமும், சென்று நெல்லையினு மாய்ப் பொரு ளீட்டி ரூபா இருபதி னாயிரம் சேர்த்து, வெள்ளித் தீபம், தங்கத் தீபம், ஓர் தங்க ரத்தினப் பதக்கம், இவைகள் வாங்கி

யும், இன்னும் இலக்ஷ தீப அங்கங்கள் எல்லாம் பரிஷ்கார மாய்ச் செய்தும், சரியை கிரியை யோகம் ஞானம் இவை களை அநுஷ்டித்துவரும் அடியவர் குழாம் அரகர வென் றநவரதம் கோஷிக்க, கற்பக தருவைப் போல், அங்கு வந்த பண்டிதர்கள், சாதாரண ஜநங்கள், யாருக்கும் அந்ந தானம், வஸ்திர தானம், சுவர்ண தானம் முதலாய எல்லாத் தானங்களையும, அவ் வருக் கிசைந்த வாறு செய்து, சூத சங்கிதா படனத்துடன் லக்ஷ தீபத்தை மிகச் சிறப்பாய் நடத்தினார்கள். பின்னர், சில நாள், பஜனை மடத்தில் வந் திருக்கையில். கொ. சிதம்பரம் பிள்ளையவர்கள் வந்து, சுவாமிகள் திரு வடிக் கமலங்களில் சாஷ்டாங்க மாய் நமஸ்கரித்து அடியேனை யாட்கொண் டருள வேண்டு மெனப் பிரார்த்திக்க, சுவாமிகள் "அப்பா அறவாழி யந்த ணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழிநீந்த லரி தெனப், பெரியர் கூறியதை யறிவா யன்றோ? அப் பரம சிவனது புகழை யநவரதமும்,நெஞ்ச நெக் குருக நாத் தழுத் தழுப்பப் பாடித் துதித்துப் பஜனை பண்ணிவருக." அவ் வாறு பஜனை பண்ணி வரும்போது, பத்தி முதிருங்கால் உள்ளம் காடின் யம் நீங்கித்,திரவ பாவத்தை யடையும், அடையவே,கட்டி யாகிய வெண்ணெய் பல அவயவங்க ளுடைய வடிவங்க ளாய்ச் செய்திருந்தது, அக்கினியின் சம்பந்தத்தை யடை யின், அது தன்பாற் செய்யப்பட்டிருந்த, அவ் வடிவங் களையும், பெயர்களையு, மிழந்து நெய்யா யிளகி நிற்பது போல, நாம ரூபங்களை யிழந்து, அன்பா யுருகி, அன்பே சிவ மெனப் பெரிய ருரைத்த வண்ணம், சிவ மாய் விளங்கி நிற்கும் இவ் வாறு, பத்தியாற் பரம் பொருளெய்தப் பெறு வ தன்றி, ஏனைய சாதந மாத்திரத்தால் அடையப் பெறுவ தின் றென்பதை, "எண்ணிலாக் கல்வியாலு மிலங்கிய

கேள்வியாலும், திண்ணிதா மதியினாலுந் தெளிய வாராது தீர, நண்ணிய ஞானி தானே நயந்தருள் செய்யின்ஞானக், கண்ணினாற் காண லாகும் கரத்திலா மலகம் போல" எனவும், "பத்தி செய்கா னருட் பெரும் பத்தருக் கன்றி, முத்தி யெய்து வதரி தென" எனவும், "யானே பொய் யென்னெஞ் சும் பொய் யென் னன்பும் பொய்யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே" யெனவும், "பத்தி வலையிற் படு வோன் காண்க" வெனவும், "அப்பொழு தருகி னின்ற வருணந்தி தேவ னன்னே, வொப்பறு பத்தி யென்னு மஞ்சன மொன்றுண் டாகிற், செப்பரு ஞானனந்த வல்ல ம தேவ னென்னும், வைப்பினை யெளிது காண லா மென மகிழ்ந்து சொன்னான்" எனவும், பெரியவர் கூறிய திரு வாக்குக்கள் நன் குணர்த்தும். ஞான சாஸ்திரங்களை நன்கு கற்றுப் பொரு ளுணரினும் "தர்க்க மானந் தானொழிய தானு யுள்ள பேரொளியை,மிக்க கருத்தா வாகுதலும் விடய மாகு தலுமின்றிப், பொக்க மறவே றறக்கண்ட பொழுது புரைதீர் பொருளான,தக்க பிரம தத்துவத்தைக் கண்டா னு குந் தானாக" வென்னு நிலைவரி னன்றிப், பய னின்றா மாக லானும்,அந் நிலையையே பகவற் பாதாளும் அவகதி யெனப் பாடியங்களிற் றிரு வாய் மலர்ந்திருத்தலினாலும்,தற் போத மிழந்து சிவ மாய் நிற்றலையே, நன் னிலை யெனச் சைவசித் தாந்த தற்பரர் பலருங் கூறியிருத்தலினாலும், "மூடன் அநு பூதி யின்றி, பிரமத்தினிடத்தில், நீரினுட் டோன்றும் பிரதி பிம்ப பழத்தைச் சுவைத்து ருசிப்பது போல, வீணா யானந் திக்கிறான்" எனப் பகவற் பாதாள் அநுபூதி யின்றிய கலை ஞான முடையவனை நிந்தித் திருத்தலினானும், அவ் வநுபூதி முன் கூறிய வாறு, சித்தஞ் சிவ பெருமானைச் சிந்தித் துருகிச்

சக வடி வொழிந்து சுக வடி வாய்ப் பிரகாசித்தலே யாதலி ஞலும், அச் சித்த முருகுதற்கு, இன்றியமையாக் காரண மான, சிவ பஜநம் செய்து வருக வென வருளலும், அத் திரு வாக் கா மமிர்தம், செவி யாகிய கால் வழிச் சென்று, நெஞ்ச மாகிய மடுவிற் பெருகி,நிறைந்து மறுகால் போவது போல, இரு கண்களினின்றும் ஆநந்த பாஷ்ப மாய்ப் பொழி ய, "தேசி கன் றன்றிரு மேனிச் சிந்தை செய்யச், சிவனைச் சிந் தித்தாகு" மென்ற, சுருதியின்படி, சுவாமிகள் திரு மேனி யைச் சிந்தை செய்து; கிருதார்த்த ராய், தன்னிய ராய், சகல வாதனையு மற்றவ ராய், சச்சிதாநந்த சிந்து வாய்ப் பிரகாசித் தனர். பின்பு, சமாதியினின்று, மெழுந்து, சுவாமிகள் திரு வடிக் கமலங்களில் விழுந்து எழுந்து, கரங்களைச் சிரமேற் கூப்பி நின்று, தன்னையே தந்த தலைவள்ள லாகிய மகா சந்நி தாநத்திற்கு நாயினேன் யாது கைம்மாறு செய்ய வல்லேன், னெனத் துதித்துப், பெருமபாலும் மகா சந்நிதாந சரண கமலங்களை விடாது உடன் சஞ்சரித்தும், தனியிருக்குங் காலையில், சகஜ ஸ்திதியி லிருந்து கொண்டே, ஆணையின் படி சிவ பஜநம் செய்தும் வந்தனர்கள். பின்னர், வேனில் வந்தது, வரலும், சுவாமிகள் தாபத் திரயங்களை மாற்றும் தண் ணருட் சாகர மாயினும், உலகியல் பொரத்து, அவ் வே டை யாற்றுர் போல," மருமலர்க் காக்கள் வா னளாய் வளர் ந்து பரிதியின்கிரணம் பானிலா வாக,இடை யிடை யிலங்க வின்னிசை ஞிமிறு, தொடை பெறப் பாடத் தோகைக ளாட, வெண் மணற் குன்றுகள் விமல னுறையும், தண் கயி லாய வரை யெனத் தயங்க, பொருனை நீத்தம் பொதிகையிற் பிறந்த, முத்தமும் பொன்னும் சுத்தமான் மதமும், அகிலு மா மரமும், துகிரொடு சுமந்து, துறை துறை தோறும் நிறைபட நிரப்பக், கண்டவ ருள்ளங் கரையி லாநந்தங்,

கொண்டதி சயிக்குங் குறுக்குத் துறையெனுந், திண்டிறற் செவ்வே டிருவு மாமலை, யடைந்து, கரையி லுவகை யோடும் வசித்து வந்தார்கள்.

அக் காலத்தில், திம்ம ராஜ புரம் சிவ சுவாமிகள் வந்து தரிசித்து அநுக்கிரகம் பெற்றுக், கூடவே வசித்தார்கள். பின், சில நாளைக் கெல்லாம் சேரை சௌந்தர பாண்டியம் பிள்ளை வந்து, சுவாமிகளது திரு வடிக் கமலங்களில் வீழ்ந் தெழுந்து, சுவாமி அடியேனை அடிகளது அடிக் கமலங் களில், அன்புடையா னுக்கி யாட்கொண் டருள வேண்டு மென்று பிரார்த்திக்க,மைந்த, "உரை செயிற் பரம ஞானம் ஒன்றுமே முத்திக்கேது.", அப் பரம ஞானம் "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" எனக் கூறிய தாம், இப் பல வேறு நாம ரூபங்களும், உண்மை யாய்ப் பார்க்கின், சிவத்தை யன்றி வேறாகாது. சிவமே எல்லா மெனத் தேர்தலே மெய்யறி வாம், எனத் திரு வாய் மலர்ந்த, விஸ்தார மாய உபதேச மொழிகளைக் கேட்டுக், கூறிய வழியே ஆராய்ந்து,எல்லாம் உண்மை யாய்ப் பார்க்கும் போது, சிவ மாய் விளங்கி நிற்றலை யுணர்ந்து, சித்தம் சிவ மாய்த் தேக வாதனை யற்று சமாதி யுற்றனர். பின் நெடு நேரஞ் சென்று, கண் விழித்து, ஆநந்த பாஷ்பம் ஆ றுய்ப் பெருக, சுவாமிகளது திரு வடிக் கமலங்களில் வீழ்ந் தெழுந்து, கரங்களைச் சிரமேற் குவித்து நின்று,சுவாமி எல்லாஞ் சிவ மாய் விளங்க மாறு அருளிய கருணையைப் புகழ்ந்து கூற, வெளியன் வல்லனே வெனத் துதித்து, அடிகளது திரு வடிக்கண்ணே அகலாத அன்பு வாய்ந்தவ ராய்ச், சிவ யோகச் செல்வரா யிலங்கினர். பின்னர்,தருவாடியார் முத லாய முக்கிய சிஷ்யர்கள்,சன்னி

தானத்தில் வணங்கி, சுவாமி உலகத்திற்கும், அடியேங்கட்கும், உபகாரமா மாறு ஸ்வாநுபூதியை எளிதில் நன்குணர்த்துவ தாய, ஒரு நூல் செய்தருள வேண்டு மெனப் பிரார்த்திக்க, அவ் வாறே, ஸ்வாநுபூதி ரஸாயந மென்னு மொரு அரிய நூலைச் செய்தருளினார்கள். அக் காலத்தில், ஒரு நா ளிரவு, குறுக்குத் துறையின்கண் ணுள்ள ஒரு மூங்கிற் பண்ணைக்குள் சமாதி செய்து கொண்டிருக்க, சுவாமிகளைப் பல இடங்களிலும் தேடிக் காணு தலைந்து வருந்திக் கொண்டிருந்த சௌந்தரபாண்டியம்பிள்ளை, திரு வருள் சித்தத்திற் குறிக்கத் தெரிந்து, அம் மூங்கிற் பண்ணை யருகில் வந்து சாஷ்டாங்க மாய் வணங்கி நிற்க, சுவாமிகளும், வெளி வந்து தரிசநம் தந்து, உபதேச மொழிகளைத் திரு வாய் மலர்ந்து கொண்டு சம்பாஷித்திருக்கையில், சௌந்தர பாண்டியம் பிள்ளை, சுவாமி! சந்நிதாந தரிசந மாத்திரத்தால் தன்னிய னானேன். தரிசநம் செய்வதற்கு முன் புதுக் கோட்டையில் வசிக்கும் ஒட்டுத் திண்ணைப் பரதேசிகள் அவர்களைத் தரிசிக்க வேண்டு மென்னும் இச்சை மிக விருந்த தென விண்ணப்பிக்க, இன்னும் தெரிசிக்கலா மென சுவாமிகள் திருவாய் மலரச், சௌந்தர பாண்டியரும், விடை பெற்று வீட்டிற்குச் சென்றனர். அன் றிரவிலேயே, சுவாமிகள் புதுக் கோட்டைக்குப் பிரயாணித்து விட்டார்கள். பாண்டியரும், மறு நாள் சுவாமிகளைத் தரிசிக்க வந்து, பல இடங்களிலும் தேடிக் காணுமையால், தாய் விட்டுப் போன வொரு தனிக் குழவி யெனத், தளர்வுற்று, பின்னர், தருவாடியா ரவர்களிடம விசாரித்து, புதுக் கோட்டை சீமைக்கு எழுந்தருளியிருத்தலைக் கேட்டுத், தாமும், அந் நகர் நோக்கிப் பிரயாணித்தனர். புதுக்கோட்டையை யடைந்து, சாந்தநாதர் திருவாலயத்தில், அந்த மூர்த்தியின் சர மூர்த்தி

யாகிய ஸ்ரீ சுவாமிகளை தரிசித்து, சாயை போல், சுவாமிகளைப் பிரியாமல் வசித்து வந்தனர். அங்கு சுவாமிகள் விஜயமா யிருப்பது தெரிந்து, அப் பதியின்கண் வஸிக்கும், பக்த சிகாமணி யாகிய, ராமசாஸ்திரிகள், ஸ்ரீ சந்நிதானத்தை யடைந்து, அநுக்கிரகம் பெற்று, சொருபாநுபூதிமா ளாய் திரு வுளக் குறிப் பறிந்து நடக்கும் உத்தம ஸத் சிஷ்ய ராய் விளங்கினர். அவரது கிரகத்தின்கண் ணுள்ள எல்லா ஜநங்களும், அப்படியே சந்நிதாநத்தின் பரிபூரண கிருபைக்குப் பாத்தியப்பட்டவர்க ளாய் விளங்கினார்கள். பின், சுப்பராய சிவன், இராமு பாகவதர், இராம சாமீ சாஸ்திரிகள், அப்பு நாயக்கர் எல்லாருங் கூடி மகாசந்நிதாநம் திருவாய் மலர்ந்தருளும் இனிய சொற்களைக் கேட்க, மிகவும் காதல் கொண்டு, மகா சந்நிதாநத்தின் முக மாய் வேதாந்தப் பிரதிபாதக மாகிய சூதசம்மிதை என்னும் புராணத்தை ஐந்து திநத்தில் சிரவணம் செய்ய உபக்கிரமித்தார்கள். மகா சந்நிதாநமும், தென் ளுடு, வட நாடுகளிலுள்ள பிரஹ்ம நிஷ்டர்களால் சூழப்பட்ட வித்வத் சபையில், அன்பர்களா லிடப்பட்ட பீடத்தில் வீராசநத்திலிருந்து கொண்டு, கீழ் திசைச் சூரியனுக்குத் தரிசநம் கொடுக்க, மேற் றிசையி லுதித்த தின மணியாய் விளங்கி, அங் குள்ள பக்தர்களுக்கு மூலாஞ்ஞாந மாகிய இருள் நிவிர்த்தி யடைய, சூதஸம்மிதாப் பிரவசந மொழிகளாகிற ஆயிரங் கிரணங்களாற் பிரகாசித்து, இனிய சொற்களால் அவர்க ளுள்ளங் குளிரும்படி செய்து, மோக்ஷம் அளிக்கப் பட்டது,

அப்போது, அங்குச் சிரவணம் செய்யும் சில விப்பிரர்கள், ஸ்திரி சூத்திரர்களுக்கு ஞாநம் கிடையா தென்று

சுருதியிற் சொல்லப்பட்டிருக்க, இவ் விடத்தில் ஈசுரப்ரசாதத்தால் சகலருக்கும் கிடைக்கும் என்றதெப்படி என வினவ, இச் சந்தேகத்தை யிறைவனே யிங்கு நிவிர்த்திப்பனென, அக் கணத்தில் இராம சுவாமி சாஸ்திரிகள் 5 வயதுள்ள சிவகாமி என்ற பேருடைய தமது குழந்தையுடன் மகா சந்நிதானத்தை பிக்ஷைக் கழைக்க வந்தார்கள். அப்போது மகா சந்நிதானம், அந்தக் குழந்தையை வாம ஹஸ்தத்தாற் பிடித்துக் கொண்டு, உனக்கு என்ன வேண்டுமென்று கேட்க, ஞானாநந்தத்தில் மூழ்க வேண்டு மெனப் பிரார்த்திக்க, மகா சந்நிதானம், அவ் வாறே ஆகுக என்று மற்றோர் கையினால், விபூதியைக் குழந்தையின் நெற்றியில் இட்டு, சிந் முத்திரை செய்வித்து. உபதேசித்தருளி வீட்டிற் கனுப்ப, வீட்டில் வந்ததும், அக் குழந்தை அவ் வுபதேச மொழிகளைச் சிந்தித்து சமாதி யுற்றது. இரண்டு ஜாம பரியந்தம், பகிர்முகத்துக்கு வர வில்லை; இதை யெல்லோரும் தரிசித்து, ஆச்சரியக் கூச்ச லுடன் மநதி லுள்ள வழுக்கு நீங்கி, யாநந்த பரவச ரானார்கள். அப்பால், மாத்தியான்னிக காலம் வந்துவிட்டது. எல்லாரும் பூஜாநுஷ்டானத்திற் குச் சென்றார்கள். போஜநத்திற்குக் காலம் தவறியதால் குழந்தை மூர்ச்சையாகிவிட்ட தென் றெண்ணி யசைத் தெழுப்பினார்கள். அக் காலத்து, அவ் விடம் வந்திருந்த வெங்கு சாஸ்திரிகள், குச்சியில் துணியைச் சுற்றி மூக்கில் விட்டார், கொஞ்சம் கண்ணைத் திறந்து, விழிக்க மநமில்லை என்று பூர்வம் போல் கண்ணை மூடிக் கொண்டது. பிறகு மகா சந்நிதானம் விஜய மாகி சீதள ஹஸ்தத்தாற் றடவி யாகாரம் கொடுத்துப் பகிர் முகம் செய்தார்கள். அந்தக் குழந்தையின் பிதா, சுவாமி சமாதி போதும் தங்கள்

கருணை காப்பாற்று மென்று கேட்டுக் கொண்டார், அந்தக் கிருபையால், இப்பொழுதும், திருச்சிராப் பள்ளிப் புன்னை வாசல் என்ற கிராமத்தில் திவ்விய சரண ஸ்மிருதி யோடு சுகமா யிருக்கிருள்.

மறு தினத்தில், இராமஸ்வாமி சாஸ்திரிகள் வண்டிக்கா ரன் அரங்கக் கோன், பத்தியின் மேம்பாட்டால், மஹா சந்நி தானத்திய திவ்விய அநுக்கிரகக்திற்குப் பாத்திர னய், சூத ஸம்ஹிதா பட்ட காலத்தில், பிரவசநம் பண்ணப்பட்ட மஹா வாக்கியார்த்தங்களைச் சிந்தித்து, ஆநந்த நர்த்தநம் செய்யத் தொடங்கினன். இராம ஸ்வாமி சாஸ்திரிகள், யாது குதிக்கின்ருயென, யான் பிரஹ்ம ஸ்வருபம் என்ற தாதிய வாக்கியங்களால் பிரமாநுபூதியைக் கரதலாமலக மெனப் பிரசங்கித்தனன். அப்பொழுது முன்னைச் சங்கத் தவர்கள் எல்லாம், ஐய மகன்று மகா சந்நிதானத்தின் அருள் வலி எம்மனோரால் அளக்கற்பாற்றே வெனப் புகழ்ந்து, திரு வடிக் கமலங்களில், அடியற்ற மர மென்ன் வீழ்ந்து வணங்கி ஆணை பெற்று, தத்த மில்லிற்கேகினர். இவ் வாறு, சூக ஸம்ஹிதா படநம் ஐந்து நாளும் முடிந் தது.

அக் காலத்து, அரிமளம், சிவ ராமன் செட்டியாரும், புதுவயல், அழகப்பன் செட்டியாரும், மகா சந்நிதாந மகிமை யைக் கேள்வியுற்று, இருவரும் புதுக்கோட்டைக்கு வந்து, மகா சந்நிதாநத்தின் பாத கமலங்களில் நமஸ்கரித்துத், தரி சித்து, அநுக்கிரகம் பெற்றுப் பணிவிடை யியற்றிக் கொண்டிருந்தார்கள். அப் போது தஞ்சையி லிருந்து ஒரு வியாபாரி நடராஜர் பட மொன்றை மகா சந்நிதாநத்தி னிடத்தில் கொணர்ந்து காட்ட, மகாசந்நிதாநமும் அதைப்

பார்த்து மகிழ்ந்து, பூஜைக்கு யோக்கியமா யிருக்கிறது என்றுன்னி, இதன் கிரையம் என்ன வென்று கேட்க, அங் கிருந்த சிவ ராமன் செட்டியார், வர்த்தகனிடத்தில் அதனை வாங்கி, மகா சந்நிதானத்தில் சமர்ப்பித்தார். மகா சந்நி தானமும், இது திரு நெல் வேலி பஜனை மடத்திற்காகு மென்று திரு வுளத்திற் கருதி, சில நாட்கழித்து. மானுக் கருடனும், படத்துடனும், திரு நெல் வேலி வந்து சேர்ந்து, பஜனை மடத்தில் அப் படத்தை எழுந்தருளச் செய்து, பஜனை சிதம்பரம் பிள்ளையவர்களை நோக்கி, பூஜை செய்து வரும்படி ஆக்ஞாபித்து சில நா ளங் கிருந்தார்கள்.

பின்னர், மகா சந்நிதானத்தின் அபாரக் கருணையின் மகிமையைக் கேள்வியுற்றுப் பல திசைகளினின்றும் பக்தர் குழாங்கள் வந்து நெருங்கின. அக் குழாங்களுடன் மகா சந்நிதானம், சிவ க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு வருகையில், புதுக் கோட்டையி லிருக்குங் காலத்து சேஷப்பா என்ற ஒரு பிராமணர், மகா சந்நிதானத்தை யடைந்து, நீர் செய்து வரும் மார்க்கம் அனைத்தும் ஜாலம் ஜநங்கள் எல்லாம் உமது பிரமத்தில் அகப்பட்டுக் கெடும் படி, சக்தி பாதம் என்னும், வியாஜத்தால் துள்ளி விழு கிறீர்; இதை நிறுத்த வேண்டியது, பிரமாண மென்று வது நிரூபிக்க வேண்டியது, என்று சொன்னார். அது சம யம் மகா சந்நிதானம் அவ்வியாஜ கருணையால், அந்த சேஷப் பாவை கதியடையும்படி கடாக்ஷ, தீக்ஷை செய்ய, அவர் சரீரம் அந்த வீட்டிற் போட் டிருந்த தாதுவளம் பந்தலின் மேல் சக்தி பாதத்தால் துள்ளி விழுந்து விட்டது. அரை முகூர்த்தம் எழுந்திருக்க வில்லை. அவ் விட மிருப்பவர்கள் ஆச்சரிய மடைந்தனர். பின் அவர், சக்தி பாதம் தெளிந்து,

வந்து வணங்கி, மகா சந்நிதான சரண கமலத்தைத் தன் சிரசில் தாங்கி. இரு கண்களிலும் ஆநந்த பாஷ்பம் பெருகத் தேக முழுவது முரோமஞ் சிலிர்ப்ப, மநதி லுள்ள மல வி க்ஷேப மழிந்து சுத்த ஸத்வம் வர உருகித் தழு தழுத்த வாக்குடன், சிவ பெருமானை அன் புள்ள பக்தியுடன் தோத்திரங்கள் செய்து, முன்னோர்க ளெல்லாம் கதியடைந்தார்கள். கல்லினும் வலிமை யான மந துடைய மகா பாபி யாகிய நான், கடுமை யாகிய கிங்கனைகளைச் செய்து, மகா சந்நிதாநத்திய பெருங் கருணை வெள்ளத்தில் மூழ்கி, துக்கம் நீங்கி,சுகக் கட லாடினேன்.என் போன்ற கன் மனத்த வரும் கதி யடையத் திரு மேனி கொண்ட பழம் பொருளே, என்று தோத்திரங்கள் செய்தார். அப்படியே, அங்குள்ள அடியார்களும், ஆச்சரியங் கொண்டு, தோத்திர மலர்கள் சொரிந்தார்கள். அதன் பிறகு, மகா சந்நிதாநம் அங்குள்ள பக்தர்களின் பிரார்த்தனையின்படி சூத ஸம்ஹிதாபடநம் நடத்தி, தம்மைவிட்டு, நீங்காத அன்பர்களுடன் ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திரத்தை யடைந்து, தரிசித்து சிவகாமியம்பாளுக்கு,முத்தக்காப் பட்டி, ஜமீந்தாரிணிபா ருடைய திரவிய வுபகாரத்தால்,திவ்ய ரத மொன்று,செய்து சமர்ப்பிவித்தார்கள். அங் கிருந்து மகா சந்நிதாநம் ஓர் காலத்தில் அன்பர்களுடன் திரு வண்ணாமலை க்ஷேத்திரத்தை யடைந்து தரிசித்து, திரு மலையை வலம் வருகையில், ஈசாந திசைக்கு வருங்கால், தம்மைச் சூழ்ந்துவரும் அடியார்களை நோக்கி, இப் பர்வதத்தை உற்று நோக்கினீரோ வென, அன்பர்கள் நோக்குங்கால், அத் திரு மலை ஜோதி மலை யாய்த் தோன்றலும், எல்லாம் வல்ல இறை யாகிய மகா சந்நிதாநத்தின் கருணையால் யுகாந்தரங்களில் அக்கினி ரூபமாய் பிரம விஷ்ணுகளுக்குத் தரிசநம் கொடுத்தபடி இப்

பரஞ்சோதி வடிவாக இன்று ஏழையேம் தரிசிக்கப் பெற்றேரும் என, ஆச்சரிய முற்று விஞ்ஞாபித்தார்கள்.

அதன் மேல், அவிடம் விட்டுப் புறப்பட்டு இடையி லுள்ள சிவ க்ஷேத்திரங்கள் பலவற்றையும் தரிசித்து, திருநெல்லை யம்பதி வந்து, பஜனை மடத்திலிருக்கும்போது, சுந்தரத் தோழப் பிள்ளை முடுக்குத் தெருவிருக்கும், எஞ்ஜினீயராபீஸ் ரைட்டர், காந்தி மதி நாத பிள்ளையவர்கள் வந்து, மகா சந்நிதாநத்தின் திரு வடிகளை யடைந்து, அவர்கள் கிருபைக்குப் பாத்ர ராஞர்கள் அவ வேளையில் தருவாடியாரவர்கள், சுவா நுபூதிரசாயநத்தை மகா சந்நிதாநத்திடத் துப் பாடங்கேட்டு வந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இஃதென்ன புஸ்தகம் என்று வினவ, அதற்குத் தருவாடியாரவர்கள், சுவா நுபூதி ரசாயநம் என்று விடை கூற, அவர்களும் கூட விருந்து சிரவணம் செய்து கொண்டு வந்தார்கள். பின்னும் கொஞ்சக் காலம் கழித்து, ஸவா நுபவ ரஸ மஞ்சரி யென்னும் சாஸ்திரத்தை இயற்றி யருளிஞர்கள்.

மறுபடியும், மகா சந்நிதாநம், புதுக் கோட்டை மார்க்கம், இராமேச்சுர யாத்திரை செய்ய உத்தேசித்து, மதுரை மார்க்கம் திருப் புத்தூர் சென்று, இராத் தங்கியிருக்கையில், மகா சந்நிதாநம் இராம சிவனை யழைத்து, இராப் போஜநத்திற்கு, கோவிலில் ஏழு கட்டி அந்நம் வாங்கி வாரும் என் றனுப்ப, அவர்களும், அங்குச் சென்று மடைப் பள்ளிக்காரரிடம் விசாரிக்க, அவர்கள் இப்போதாகில், சுத் தாந்நம் கிடைக்கும். அர்த்த சாமர்த்தி லாகில், பஞ்சாந் நமும் கிடைக்கும், உம்மிஷ்டம் என்ன வென்று கேட்க.

இவர் அர்த்த சாமத்தி லாகட்டு மென்று சொல்லி, மகா சந்நிதானத்தினிடம் வந்து, சமாசார மறிவித்து; அங் கிருந் தார்கள். எல்லாரும் மகா சந்நிதானத்தின் திரு வாக் கமுத பானம் பண்ணிக் கொண்டிருந்ததனால், போது போனது தெரியாமல், இரவு ஒரு மணி யாய் விட்டது மறுபடியும், மகா சந்நிதானம் இராம சிவனை யழைக்கு, இப்போது போய் வாங்கி வாரு மென் றனுப்ப, அங்கே கோயிற் காலம் எல்லாம் கூடி வெளிக் கதவும் திருக் காப் பிட்டிருந்ததைப் பார்த்து,வந் தறிவிக்க,மகா சந்நிதானமும், இன் றிரவில் உப வாசித்தால் எவ் வளவோ பல னுண் டென் றருளி, எல்லா ரையும் சயனிக்கச் செய்து, தாங்களும், சயனித்துக் கொண் டார்கள். பின்னர், அக் கடவுள், கருணையால், அக் கோவில் பரிசாரகரைப் போல, மகா சந்நிதானம் படுத்திருக்கு மிடத் தில் எழுந்தருளிவந்து, திரு நெல் வேலியி லிருந்து வந்த பிராமணர் எங்கே என்று வினவ, மகா சந்நிதானமும் என்ன வென்று கேட்க, வந்த பரிசாரகரும், அன்னம் கேட்ட வர் வாங்கிக் கொண்டு போகலாகாதா,இருக்கு மிடந் தேடி வருமா? என, மகா சந்நிதானம் இராம சிவனை யழைத்துக் கூடப் போய் அன்னம் வாங்கி வாரு மென, அவர் உடனே பின் செல்ல, பரிசாரகர் முன்னே சென்று, பூட்டியிருந்த கோபுர வாயிற் கதவைத் தள்ள, அது திறந்துவிட்டது. அக்கணம் இவர் கையை அவர் பற்றி மடைப்பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போய், ஏழு சாதம் வைத்திருந்தேன் ஒன்றை எலியோ, பூனையோ தின்று விட்டது போக ஆறு சாத மிருக்கின்றது கொண்டு போ மென்று கொடுக்க, அவர்கள் வாங்கிக்கொண்டு, வெளியேற,அப்பால் கோயிற் கதவு தானே மூடிக் கொள்ளப் பரிசாரகரைக் காணமல், இவர்கள் திகைத்துக் கொண்டு, பரவசப்பட்டு, ஓய்

சுவாமி, ஓய்! சுவாமி, என்று பல முறை கூவியும் காணாமை யால், ஆநந்த பரவசத்துடன் சுலோகங்களால் தோத்திரித்து நின்றார். இங்கே மகா சந்நிதானம் போனவர் வரவில்லையே என்று ஆவுடையப்ப பிள்ளையைக் கூப்பிட்டு, நீர் போய்ப் பார்த்து வாரும் என்றனுப்ப, அவர் வந்து அழைத்துக் கொண்டு, இருவர்களும் மகா சந்நிதானத்தினிடம் வந்து, நடந்த சங்கதிகளை அறிவிக்க, மகா சந்நிதானமும், ஆநந்தத் துடன் கேட்டு, பரம சிவத்தின் கிருபையைப் புகழ்ந்து, சந்தோஷித்துப் பிரசாதத்தைத் தானும் உட்கொண்டு, மற்றையர்க்கு மளித்து, ஒரு சாதத்தைப் பிரசாத ரூப மாய்ப் பின் சாப்பிட வேண்டி யுலரவைக்கும்படி ஆஞ்ஞாபித்து, இதற்குத் தேவாமிர்தமும் இணை யல்ல வென்று, ஆச்சரிய மடைந்து, அன்றிரவைச் சிவசிந்தனையாகப் பொழு தாக்கி, ஆநந்த மாய்க் கழித்தார்கள். மேல் நடப்பனவற்றைப் பார்க்க விரும்பினவன் போல, ஆதித்தனும், உதய கிரியி லெழுந்த னன். உடனே மகா சந்நிதானம் அன்பர்களுடன் ஆலயம் நண்ணி சிவபிரானுக்கு அபிஷேகாதிகள் புரிவித்து, இராமேச்சுர தரிசநம் இங்கே கிடைத்த தென ஆஞ்ஞா பித்து, புதுக் கோட்டை போய்ச் சேர்ந்து, சில நா ளங் கிருந்தார்கள்.

அங்ஙன மிருக்கையில், ஒரு தினத்தில் மகா சந்நிதானம், அன்பர்களை நோக்கி, இராமேச்சுரம் போக வேண்டு மென்று ஆஞ்ஞை செய்ய, அவ் வாஞ்ஞையைப் பெற்ற பக்தியையே பணியாய்ப் பூண்ட, அரிமளம், சிவ ராமன் செட்டியார் முத லான அன்பர்கள், யாத்திரைக் குரிய சாத நங்கள் சித்தமாயிற் றென்று விண்ணப்பிக்க, உடனே மகா சந்நிதானம், ஓர் வண்டியிலும், மற்றையோர் கால் நடை

யாயும் போகையில், இப் போது வண்டி எவ் விடத்திற் போகிற தென்று மகா சந்நிதானம் கேட்க, திரு மெய்யம் மூன்று மை லிருக்கிற தென்று சொல்லக்கேட்டு, சயனித்துக் கொண்டார்கள். திரு மெய்யங் கடந்து, சிறிது தூரம் செல்லுகையில், சிவ பெருமான் வண்டிக் கெதிராக, மகா சந்நிதானம் போலத் திரு வுரு வெடுத்து, சகலாத்துப் போர்வை போர்த்துக் கொண்டு வந்து, இனி மேல, இங்கே போகக் கூடாது, புதுக் கோட்டைக்குத் தானே வண்டியைத் திருப் பென்று திரு வாய் மலர்ந்தருள, சுவாமிகள் உத்திரவின்படி வண்டியைத் திருப்பி, வெகுதூரம் செல்ல, மகா சந்நிதானம் போர்வையைத் திறந்து, எவ் விடம் போகின்ற தென புதுக் கோட்டை யின்னும் ஐந்து மைல் இருக்கிற தென்று சொல்ல, மகா சந்நிதானம் இராமேச்சுரம் போக வில்லையா வென நடந்தவற்றைத் தாஸர்கள் வெளிப் படுத்த, மகா சந்நிதானமும், இஃ தென்னை என் றுச்சரிய முற்று, யான் வண்டியை விட்டுக் கீழி றங்க வில்லையே யென்று கூட வந்தவர்களுடன் திரு வாக் கருளி கடவுளைத் தோத்தரித் திருந்தார்கள். அவர்களும், மகா அதிசயத்தை யடைந்து, மவுநமா யிருந்தார்கள். அப்பால் எல்லாரும் புதுக் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். மறு நாட் காலையில், எவ் விடத்திருந்து வண்டியைத் திருப்பினார்களோ, அதற்கு ஒருமைலுக் கப்பால், புய லடித்து, அநேக மரங்கள் வண்டிகள், ஆடு மாடுகள், வீடுகள் முதலான சேத மாயின வென்று, பிரயாணிகள் முதலோர்களால் தெரிய வந்தது. கடவுள் கிருபைக்குக் கைமா றுளவோ என்று வியந்து, "தன் கட னடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றருளிச் செய்து அங்கிருந்தார்கள்.

அதன் பின் சிவ ராமன் செட்டியார் மகா சந்நிதாநத்தை தன் னூ ராகிய அரிமளத்துக்கு அழைத்துப் போய் அங்குள்ள மீனாக்ஷிசுந்தரேச்சுரர் ஆலயத்தை பரிஷ்காரப்படுத்தும்படி அந் நகரத்தார்களுக்கு ஆக்ஞாபிக்குமாறு சுவாமிகளை வேண்டிக்கொள்ள, அவ்விதம் ஆக்ஞை செய்து அவ்வுத்திரவுப்படி கோவில் கட்டி முடித்து மீனாக்ஷிசுந்தரேச்சுரருக்கு அஷ்ட பந்தந கும்பாபிஷேகமும் செய்து முடித்தார்கள். அந்தக் காலத்தில், நகரத்தார் வேண்டுகோளின்படி வந் திருந்த கோயி லூரர் சிதம்பரையா மகா சந்நிதாநத்தை தரிசித்து, ஆத்மாநுபூதியைக் குறித்து சம்பாஷித்து, மகா சந்நிதாநத்தினிடத்து மிக்க அன் புடையவ ராஞர்கள். பின்னர், ஒரு கால் மகா சந்நிதாநமும், கோவி லூருக்கு, அவர்கள் மநம் பிரார்த்திக்க விஜய மாகுதலும், ஐயா அவர்களும், வந்தனை வழிபாடு செய்து, நகரத்தார்க ளுடைய பல ஊர்களிலும், சூத சம்ஹிதா படநம் நடத்திச் சந்தோஷமடைந்தார்கள். பின் அவ் வூர் வந்து இரண்டாவது லக்ஷதீபம் கொல்லம் 1045,ம் ஆண்டு, தை மாசம், அமாவாசையில் வர, அதற்கு வேண்டிய பணம் சேகரித்து வருகையில், நாராயண சிவ னவர்களும், ரெங்க நாத சிவ னவர்களும், வந் தடைந்தார்கள். அப் போது, சோ ணாட்டிலுள்ள கந பாடிகள் பால கிருஷ்ண சாஸ்திரிகள் முதலிய வித்வான்களையும், கோயி லூர்,ஐயா அவர்கள் முதலியோர்களையும், மாணாக்கர்கள் சகிதம் அழைத்து உபசரித்து, மகா ருத்திராபிஷேக தரிசநம், இலக்ஷ தீப தரிசநம், ரிஷப வாகநக் காட்சி முதலிய தரிசநங்களைச் செய்வித்து, ஆநந்தத்துட னிருந்தார்கள், பின், எல்லோரும் மகா சந்நிதாநத்தில், ஆஞ்ஞைபெற்றுத் தத் தம் ஊரை யடைந்தார்கள்.

அதற் கப்பால் சில திநங் கழித்து, மகா சந்நிதாநம் திருச்சிர, ஜம்புகேச்வரம் முதலான ஸ்தல யாத்திரை செய்து, திரு வை யாறும், அதைச் சேர்ந்த ஸப்த ஸ்தாநங்களும், தரிசித்து வருகையில், அங் குள்ள சிவ நேசச் செல்வர்களா கிய பிராமணோத்தமர்கள், மகா சந்நிதாநத்தை நோக்கி இத் தலத்தையும், இதைச் சேர்ந்த சப்த ஸ்தாநங்களையும், ஜீரணோத்தாரணம் செய்து, அஷ்ட பந்தநம் செய்தருள வேண்டும். சுவாமிகள் கிருபை செய்யின் முடிவு பெறு மென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். அப் போது, அதற் கிசைந்து, சிவராமன் செட்டியார், சத்திரம் சின்னையா செட்டியார் இவர்களைப் பார்த்து, இவ் விடங்களில் யாச கம் பிரியமா வென ராஜகரம் கபிஸ்தல முதலிய திருப்ப தாற் பிரிய மென, அப்படியே, பல ஊர்களிலும் சென்று யாசித்து வந்தார்கள்.

அவ் விதம் யாசித்து வருகையில், உமையா புரம் என் னுங் கிராமத்தில், அம்பா அம்மாவிடம், மகா சந்நிதாநத் தின் சிஷ்யர்களில் ஒருவ ரான நாராயண சிவ னவர்களைப் போல, ஐயாற் றப்பர் மூர்த்திகரித்துப் போய், அம்மே! மகா சந்நிதாநம் பகல் ஒரு யாமத்தில் இங்கு வருகிறார்கள். அதற்குள், நீ சமயல் செய்து, பிள்ளையார் கோவிலில் கொணர்ந்து தயாரா யிருக்க வேண்டு மென்று சொல்லி வெளிச் செல்பவர் போல, அந்தர்த்தாந மாயினர். அவ் வம் மணியும், அப்படியே செய்து, அங்கு வந்து காத்திருக்க, மகா சந்நிதாநம் தனியே அங்கு வந்து சேர்ந்து, திருவ முது கொள்ளு முத்தியில், தேவரீர் வர வறிவித்த நாராயண சிவன் எங்கே என்று, அம்மாள் மகா சந்நிதானத்தினிடம் வினவ, அவர்களும், ஐ யாற்றப்பரது திரு விளையாட்

டென்று கூறி, அம் மாளைப் பார்த்து, யான் மாத்திரம் வந்தேன், அவர்கள் நாமக் கல்லுக்குச் சமீபம் முத்தக்கா பட்டியி லன்றோ இருக்கின்றார்கள் என, அது கேட்ட வவ் வம்மாளும், அதிசயித்து மகா சந்நிதானத்தைப் பல தரம் நமஸ்கரித்துத், திரு வமுது செய்வித்து விடை பெற்றுக் கொண்டு சேடத்தைத் தன் இல்லிற்கு கொண்டுபோய் பிரசாத மாய் புசித்து, இவ் வற்புதத்தைச் சிந்தித்து எவருடனும் சொல்லாமல் ஆநந்தித்திருந்தனர்.

பின், மகா சந்நிதாநம், திரு வையாறு வந்து சேர்ந்து, திருச் சோற்றுத் துறை, திரு வேதிக்குடி, திருக் கண்டியூர், திருப் பூந் துருத்தி, திரு நெய்த் தாநம். திருப்பெரும் புலியூர் திரு மழபாடி, திருத் திங்க ளூர், திருக்கடு வெளி இவைகளில் திரு வை யாற்றுக்குக் குப்பாணி சிவனையும், மற்றை க்ஷேத்திரங்களுக்கு பிற சீடர்களையு மனுப்பி, திருப் பணியியற்றித் திருக கண்டி யூர், திருவையாறு நீங்க லாக, மற்றை ஸ்தலங் களில், கொல்லம் 1047-ம் ஹு ஆங்கிர ஹு இடபமதியில், இயைந்த வாறு சுபதிநங்களில், பிராமண போஜநம் ரிஷப வாகநக் காட்சி முதலியவைகளுடன் அஷ்ட பந்தந கும்பாபிஷேகத்தைச் சிறப்பாய்ச் செய்து, மிதுந ரவி 3உ திருக் கண்டி யூரிலும், 9உ திரு வை யாற்றிலும், அஷ்ட பந்தந கும்பாபிஷேகம் செய்ய நிச்சயித்து, வித்வாம்ஸர் கள் கந பாடிகள் தீக்ஷிதர்கள் சாஸ்திரிகள் கோயி லூர் சிதம்பரய்யா, அவர்கள் மாணுக்கர்கள், மற்ற நகரத்தார்கள் பிரபுக்கள் முதலிய எல்லோருக்கும் பத்திரிகை அனுப்பி வரு மாறு செய்து, 3உ திருக் கண்டி யூரி லும் 9உ திருவை யாற் றி லு மாக "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என் னும் திரு வாக்கின்படி எவரு மாநந்த மடையு மாறு,

மிகுந்த சிறப் பாய்ச் செய்து நிறைவேற்றினார்கள். அக் காலையில், மகா வைத்தி பாகவதரவர்கள், அவரது தமயனார் இராம சாமி பாகவதர் அவர்கள் இவ் விருவரும் வந்து, சுவாமி களைத் தரிசித்துப் பாடித் தங்களை ஆட்கொள்ள வேண்டு மென்று பிரார்த்திக்க, அப்படியே அநுக்கிரகித்த லும், அவர்களும், திரு வடிக் கா ளாய் இடையறு அன்பு வாய்ந்தவக ளானார்கள். அதன் பின், கோயி லூர் ஐயா அவர்கள் முதலியோர்களை உபசரித்தனுப்பித் தாமும் திரு நெல் வேலிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கு பஜனை மடத்தி லிருக்கும்போது காம தேநு பூஜித்த ஸ்தல மென்றும், திந்திரிணி வந மென்றும், வழங்கு கின்ற கங்கை கொண்டான் ஸ்தலத்தி லுள்ள ஆநந்த வல்லி சமேத கைலாய நாதர் ஆலயத்திலும், அஷ்டபந்த நம் செய்ய வேண்டு மென்று, அக் கிராமத்தார் கேட்டுக் கொள்ள, அதற் கிசைந்து, சிவ ராமன் செட்டியாருடன், கொளும்பு முதலான பல தேசங்களுக்குச் சென்றிருந்தார் கள். திரும்பி வருங்கால் வல்ல நாட்டுப் பொத்தைக்குச் சமீபத்தில், திருடர்கள் வந்து, பொருளை அபகரிக்க யத்தனித்து, நெருங்கவும், அவர்கள் கண்ணிற்கு பஜனை செய்துகொண்டு செல்லுகின்ற மகா சந்நிதாநத்திய திருக் கூட்டம் பல ஆயுதங்கள் தரித்த பெரிய ராணுவ சைந்நி யங்கள் போலத் தோன்ற, திசைக் கொருவ ராய் வெருவி யோடினார்கள். பின், மகா சந்நிதாநம் கங்கை கொண் டான் வந்து சேர்ந்து, குப்பாணி சிவனைக் கொண்டு, பணி யியற்றி, கொல்லம் 1048-ம் ஆு ஸ்ரீ முக வருடம் வைகாசி மீ, 19உ ல் மகா வைத்தியநாத சிவன், அவரது சகோதரர் இராம சுவாமி சிவன் முதலானவர்கள் சகிதம் பிராமண

போஜந இடப வாகநக் காட்சியுடன் அஷ்டபந்தந கும்பாபிஷேகத்தைச் செய்து ஆநந்த மளித்தார்கள். மறு படியும், திருநெல்வேலி வந்து சேர்ந்து பஜனை மடத்தி லிருக்கும்போது, மாணாக்கர்கள் மகா சந்நிதாநத்தை வணங்கி, சுவாமி அடியேங்கட்குப் பிரம கீதையைத் தமி ழில் மொழி பெயர்த்தருள வேண்டு மென்று விண்ணப் பிக்க, மகா சந்நிதாநமு மதற் கிசைந்து சொக்க லிங்கம் பிள்ளையை எழுத உத்தரவு செய்து, மூன் றத்தியாய முடிந்த சமயத்து, கல்லத்தி முடுக்குத் தெரு, ஐயர்ச்சாமியா பிள்ளையவர்கள் சந்நிதாந தரிசநத்திற்கு வர, அவர்களிடம் இதனைக் காண்பிவிக்க, அவர்கள் பார்த்து சந்தோஷித்து, முன்னமே தத்துவ ராய சுவாமிகள் இதனைத் தமிழ்ப் பிர பந்த மாகச் செய்திருக்கின்றார்கள், அதற் கிது உரை யாக லாம் என்று சொல்லி, ஏட்டைக் கொணர்ந்து கொடுக்க, இரண்டும் ஒத்திருக்குகையைப் பார்த்து, அப்படியே பிரம கீதைக்கு உரை யியற்றினார்கள். அதைச் சென்ன பட்டணத்தில் அச்சியற்றிப் பிரசித்தம் செய்தார்கள்.

இப்படி இருக்கையில், ஒரு திநம் மகா சந்நிதாநமும் இஞ்சினீயராபீஸ் ரைட்டர் காந்திமதி நாத பிள்ளை யவர் களும், மற்றைய மாணாக்கர்களும், பஜனை மடத்தி லிருக் கும்போது, திருவநந்த புரம் காலேஜ் தர்க்க சாஸ்திர பண்டிதரும், இந்து காலேஜ் ஹெட்மாஸ்ட்டரு மாகிய, எம், ஏ. சுந்தரம் பிள்ளை யென்பவர், மகா சந்நிதாநத்தினி டம் வந்து, அடியேனையும், ஆண்டுகொள்ள வேண்டு மென்று விண்ணப்பிக்க, அவர்களுக்கும் அநுக்கிரகம் செய்தார்கள். அது முதல் மேற் கூறப்பட்டுள்ள மூன்று சாஸ்திரங்களையும், மகா சந்நிதானத்தினிடம் நன்றாய் விசா ரித்து, அதன் பொருள்களை யெல்லாம் நன்றா யுணர்ந்து

மகா சந்நிதாநத்தை நோக்கி, நியாயம் வியாகரணம் பூர்வ மீமாம்ஸை, நிரீசுர சாங்கியம் சேசுர சாங்கியம், பௌத்தம் சகஜம் முதலிய மதங்கள் அத்துவிதத்துக்கு வேறில்லாமல் அதி லடங்கியது தான் என்பதையும், உபாஸ்திகளின் எதார்த்தத்தையும், சற்று விசாரித் தெழுதி அருளிச் செய்ய வேண்டு மென்று கேட்க, அப்படியே, அவர்கள் கேட்டுக் கொண்டனவும், பிறவும், அருளிச் செய்தார்கள். கடைசி யாக,குல சேகரம் பட்டணத்தில்,சூதஸம்ஹிதா படந நடத் துகையில், இரண்டா நாட் படநத்தில் குப்பாணி சிவன் பத்த மடையில் நிரியாண மானதைத் தெரிந்து, மாவடி சிதம்பரம் பிள்ளையிடம் இரகசிய மாய் அறிவிக்க, அவரும் ஆச்சரியத்தோடு சற்று துக்கமும், அடைந்திருந்தனர். நாலா நாட் படந நடத்தி இரவில் பஜனையுடன் கதாப்பிர சங்கமும், நடத்தி, முடிந்த பின், சமுத்திரக் கரையோரம் மாணுக்கர் தற் சூழ, நிலவில் ஆநந்தமா யிருக்கும் போது, மகா சந்நிதாநம் அகாரண மாய் ஒரு பெரிய சப்தம் கொடுக்க, சீடர்கள் பயந்து, சுவாமி இஃ தென்ன வென்று வினவ, இந் நேரத்தில் பத்த மடைக் கோவிலில் கொள்ளை செய்வதற்குத் திருடர் வந்திருந்தார்கள். ஊரவர்களை எழுப்பினேன் என்று, சந்நிதாநம் திரு வாய் மலர அப்படி யா வென்று எல்லாரும் அதிசயித்து, பின்னர், அவரவ ரிடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மறு நாட் காலை யில், ஐந்தா நாட் படந நடத்தி சமாப்தி செய்தார்கள். ஆறும் நாளில், இவ் விரண்டு விஷயமும் குறித்து இரண்டு நிருபம் வந்து சேர்ந்தது, ஒன்றில், கோவிலில், திருடர்கள் திருட வந்ததாகவும், அகாரண மாய் ஒரு பெரும் சத்தங் கேட்டு ஊரார் எழுந்து, அவர்களை ஓட்டிவிட்டதாகவும் கண்டிருந்தது: அப்படியே மற் றொன்றிலும் குப்பாணி

சிவன் நிரியாண தசைசைப்பற்றி வரைந்திருந்தது. அதைக் கேட்டு அதிசய மடைந்து, அவ் விடம் விட்டுப் புறப்பட்டு திருச் செந்தூர் வந்து தரிசித்து, திரு நெல் வேலிக்கு வந்து பத்திர தீபம் நடத்தி, அப்பாற் பல தேயங்கள் சென்று, அரிமளம் போய்ச் சேர்ந்தார்கள். அங் கிருந்து, மகா வாக்கியச் சுருக்கமும், வேதாகம சம்பிரதாயப் பிரகரணமும், செய்து, அப்பால் மனோ நாச மார்க்கமு மியற்றி, முன்னர் இயற்றியருளிய பிரகரணங்களையும், ஒருங்கு சேர்த்து, நிஜாநந்த விலாசம் எனப் பெய ரிட்டு வழங்குக என, ஆக்ஞாபித்து பஜனைச் சிதம்பரம் பிள்ளை கையிற் கொடுத்தார்கள்.

இங்கு அதிக மாய் எழுதுவதால் என்? மகா சந்நிதாநம் சேது முதல் ஹிமாசல பரியந்த மான சர்வ தேசங்களிலும், லோகோபகாரார்த்த மாய்ச் சஞ்சரித்து ஆங்காங்குள்ள பக்தர்களுக்கு (அதன் பரம காஷ்டை யான சக்திபாதத்தையும் கடைக் கண்ணோக்க லேசத்தால்) (எல்லாம் பரமாநந்தாநுபூதியையும்) அருளிச் செய்து, சாவன மான பஸ்ம ருத்ராக்ஷ தாரணம் சிவலிங்கார்ச்சநம் குரு லிங்க சங்கமம் சாஸ்திரங்களில் உத்தம மான பக்தி இவைகளை நிலைநிறுத்தி, உலகை எல்லாம் உய்வித்து, பின்னர், கொல்லம் 1054-ம்ஹு வெகுதாநிய-ஹு, ஐப்பசிமீ 6உ திங்கட் கிழமை தசமி யன்று சிவ ராமன் செட்டியார் முதலான தமது கருணைக் குரிய மெய் யன்புற்ற மாணாக்கர் பலர் சூழ்ந்திருப்ப, அரிமளம் என்னும் திவ்விய ஸ்தலத்தில், பிரஹ்ம சொருபத்தில், ஐக்ய மடைந்தார்கள். வாதவூரடிகளைப் போன்ற சிவ ராமன் செட்டியாரவர்கள், ஸ்ரீ மகா சந்நிதாநம் சமாதி வீற்றிருக்கும் அந்த ஸ்தாநத்தில் ஸ்ரீ

மகா சந்நிதானத்தால் இவ் விலிங்கம் எங்குப் பதிட்டிக்கப் படுகின்றதோ, அந்த ஸ்தானத்தில், விசேஷ மாய்ப் பரம சிவம் சாந்நித்தியம் செய்தருளும், அங்குத் தவ மியற்றினர்க்கு விரைவில் இஷ்ட பலன் கிடைக்கும். நிஷ்காம மாய்த் தவ மியற்றினும் புக்தியும், கல்வியும், ஞானமும், புகழும், உண் டா மென அநுக்கிரகித்தருளிய நர்மதா லிங்கத்தை, மதுரா புரியில், இந்திரன் விமானம் இயற்றியது போல, அழகிய ஆலயம் இயற்றி, அதில் பிரதிஷ்டை செய்து, வைதிக நெறி யின்படி மிகச் சிறப் பாய் கும்பாபிஷேகமும் நடத்திய பின், நித்திய, நைமித்திய பூஜை பல சிறப்புக்களும், நடத்தி வருகிருர்கள். ஸ்ரீ மகா சந்நிதானம் இப்பொழுதும் அங்கு உள்ளன்புடன் தவம் செய்வார்க்கு பரமாநந்தம் அளித் துப் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்கள்.

ஸ்ரீ சுந்தர சுவாமிகள் சரிதம் முற்றுப் பெற்றது:

---

30. பேரூர்,

ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள் சரித்திரம்.

பேரையூர் விளங்கும் விநாயகன் அடியை
பெருங்குகப் பிரான தடியை,
போரையே கொண்ட பேரையூர் இறைவன்
பொங்குசெந் தாமரை அடியை,
நாரைகள் போற்றும் நயநா யகியின்
நற்றிரு வடிகளைத் திநமும்,
பேரையூர் வாழும் சாந்தலிங் கேசன்
பிறைஅடி களைத்திநம் தொழுவாம்.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சொருபமே ஓ ருரு வாகத் திரு மேனி கொண்டருளிய, திருத் துறை

யூர், ஸ்ரீமத் சாந்த லிங்க சுவாமிகள், சிறு வயதிலேயே கல்விப் பயன் கைவரப் பெற்று, ஆசிரியர் உத்திரவுப்படி "ஞானாம்பிகை அம்மையை மணந்து, இல் லறம் நடத்தி வருங்கால், சுவாமிகள்" மெய் யெனத் தோற்றும் உலக வாழ் வனைத்தும் பொய் யெனத் தேர்ந்து, சகல பற்றுகளையும் விட்டு, விரக்தி யடைந்து, துறவு பூண்டு, ஸ்ரீமத், சிவப்பிரகாச சுவாமிக ளிடம் ஞானோபதேசம் பெற்று, கொங்கு நாடு செய்த தவப் பயனின் விசேடத்தால், மேலைச் சிதம்பர மென்னும் திருப் பே ரூரில் எழுந்தருளி யிருந்தார்கள்.

அப் போது, அள விறந்த அடியார் குழாங்கள் சுவாமிகளிடம் சாத்திர விசாரணை செய்து வருங் கால், அவ ரவர்கள் மனோ நிலைமைக்குத் தக்க வா று, சந்தேக விபரீத மில்லாமல், சுவாமிகள் சாத்திரத்தின் சாராம்சத்தைச் சா ற்றிடுவார். பக்குவ முற்றூர்கள், பரகதி அடைய ஞானோபதேசமுஞ் செய்திடுவார். இங்ஙன மிருக்க, ஸ்ரீ குமார தேவர், ஆறு சுத்த தேக மெடுத்து செய்து வந்த தவத்தின் பயனால், ஈசன் கட்டளைப்படி, ஏ ழாவது தேகம் கந்நடதேயத் திறைவனுக்கு புத்திர னாக அவதரித்துச், சிறிது நாளரசு புரிந்து, பிறகு துறவு பூண்டு, ஒரு நாள், தன் சரித்திர முழுதும், பேரை யூர் சாந்த லிங்க சுவாமிகளுக்குத் தெரிவித்த பின்பு, தாமே போய் ஷை சுவாமிகளைக் கண்டு வணங்கி நிற்க, அது தெரிந்து சுவாமிகளும், இவரது பரிபாகத்தை நோக்கும் பொருட்டுத், தம்மிட மிருக்கும் கையேட்டுத் தம்பிரானைப் பார்த்து, அப்பா? இவனைப் பார்த்தால் அரசனைப் போ லிருக்கிறது, இவ னிந்த வழிக்

குப் பாத்திரவா னல்லன், ஆதலால், இவனைப் போகச் சொல் லென்றார். அதற்கு, அந்தத் தம்பிரானும், சுவாமி? இவனிடத்தில் அதி தீவிர பக்குவ முடைய பதி னெண் குறியு மிருக்கிற தென்று சைகை யாகச் சொல்ல, சுவாமி களும் (முன்பே அறிந் திருப்பதால்) ஆனால், இவனை நமது எருதுக்குப் புல் லறுத்துப் போடச் சொல் லென்றார். அவ் வாறே, தம்பிரான் கட்டளை யிட மகா ராஜ வான குமார தேவர், அரிவாளுங் கயிறுங் கொண்டு, பள்ளர்கள் புல் அறுப்பதைப் பார்த்துத் தாமும், அவ் வாறே அறுக்க நினைத்து, இடக் கையால் புல்லைப் பற்றி, வலக்கையால், அரி வாளைப் புல்லின் மேல் பூட்டாமல், இடக் கைமேல் பூட்டி யிழுக்க, கை அறுபட்ட மாத்திரத்தில், வலக் கையைப் பார்த்துக் கோபித்தார். இதைக் கண்ட பள்ளர் கள், நீர் ஆ ரையா? என்று கேட்டு, விருத்தாந்த முழுது மறிந்து, புல்லை யறுத்து சுமை யாகக் கட்டி, மகா ராஜா வின் முடி மேல் வைக்க, முடி சாய்ந்தது. (முன் பின் பழக்க மில்லாததால்) பள்ளர்கள், தாங்களே கொண்டு வந்து வைத்துப் போனார்கள்,

இவ் வாறு, இரண்டு நாள் சென்ற பின்பு, மூன்றும் நாள் பள்ளர்கள், இவ் விஷயத்தைக் கையேட்டுத் தம்பி ரானுக் கறிவிக்க, தம்பிரான் சுவாமிகளுக்குக் குறிப் பாகத் தெரிவித்தனர். சுவாமிகளும், மகா ராஜாவைப் பார்த்து, சோதனை நிமித்தம் கோபிக்க, அவரும் நடு நடுங்கி, ஒருபுற மொதுங்கி நின்றார். அன் றிரவு, சுவாமிகள் தம்பிரானை அழைத்து. அப்பா? எங்க ளிருவருக்கும் வெவ் வேறு கட் டமுது கட்டி, தண்டில் மாட்டி, இந்த மகா ராஜ னிடத்தில் கொடுத்து நம்மோடு கூட அனுப்பிவை

யென்று கட்டளையிட்டருள, தம்பிரான், அவ் வாறே செய்ய, சுவாமிகள் முன்னும், குமார தேவர் பின்னு மாய்ப் போகையில், சில தூரம் சென்று சுவாமிகள், இவரைத் திரும்பிப் பார்த்து, ஏன் தாமத மென்று அதட்ட, அது கேட்டு, இவரும் பயந்து, சுவாமி? "ஒரு புறம் அச்சு லிங்கம்,'; மற் றொரு புறம் கஞ்ஞ யுத்தம் இழுக்கின்றதே, என்று சொல்ல, அக் குறிப்பை யறிந்து சுவாமிகள், தமக் குத் தாமே ஆநந்த பரவச மடைந்து, ஓர் குளக் கரையி லிறங்கி இருவரும் ஒன்ருக உட்கார்ந்து இரண் டன்னத் யும் ஒன்ருகச் சேர்த்து, மகா ராஜா சுவாமிகளுக்குப் பரி மார, சுவாமிகள் உண்ட பின் சேட மான மகாப் பிரசா தத்தைத், தாமும் உட் கொண்டு, பிறகு சற் சில விஷயங் களை வசரித்துக் கொண்டிருந்து, மீண்டும் இருப்பிடம் வந்து சின்னுள் கழித்து, சுவாமிகளிடத்தில் அநுக்கிரகம் பெற்றுக் கொண்டு, சாதனை செய்து முதிர்ந்த காலத்தில், ஓர் நாள், சாந்த லிங்க சுவாமிகள், இவரை மகா ராஜா வென்று பெய ரிட் டழைத்து, அப்பா? நீ விருத்தாசலத் திற்குப் போக வேண்டு மென்று கட்டளையிட் டருளினுர். உத்தரவைப் பெற்ற குமார தேவர் உடனே பிரயாணப் பட்டு, பற் பல தலங்களைத் தரிசித்தும், அநேக அற்புதங் களைச் செய்தும், கடைசி யாய் விருத்தாசலம் வந்து அத் தலத்தில், அநேக திரு விளையாடலைப் புரிந்து வீற்றிருக்குங் கால், அத் தலத்தில், மதுரையி லிருந்து வந்திருக்கும் இலக் கண வித்துவா ஞகிய, சிதம்பரம் பிள்ளை என்பவர், ஓர் தநவந்தன் பிள்ளைக்கு இலக்கணப்பியாசம் செய்து கொண் டிருக்குங் கால், ஷை குமார தேவர் குக்ஷிபாதை நிமித்தம் ஷை தநவந்தன் வீட்டுக்கு வருகையில், ஷை பிள்ளை யான வர் இவரிடத்தில், மதிப் பற்று இரு மாந் திருப்பதைக்

கண்டு, அவரைத் தடுத் தாட் கொள்ளத் திரு வுளங் கொண்டு, அவ்வரை நோக்கி, ஓர் வாக்கியத்தைக் கூறி பயன் யா தென வினவ, எவ் வளவு வித்வ சாமர்த்திய மிருந்த போதிலும், இச் சந்நிதாநத்தில் நா வெழாமல் பயன் கூருது மயங்கி நின்று, அடிமையை மன்னித்து இரக்ஷித்தருள வேண்டு மென் று விண்ணப்பஞ் செய்து, திரு வடியில் விழுந்து வணங்கி, பின் இவரும் துறவு பூண்டு உடன் சென்ருர்.

பிறகு, இருவரும் பல தலங்களை வணங்கி, திருப் பேரூர் திரு மடத்துக்குச் சமீப மாக போகையில், விடியற் காலையாகையினுல், தம்பிரானைக் கண்டு, சுவாமிக ளிருக் கும் சமய மெப்படி யென் று வினவ, சுவாமிகள் பர நிட்டையில் எழுந்தருளி யிருக்கின்ருர் ரெனக் கூற, ஆனுல், நாம் பணி செய்வோ மென் று நினைத்து, ஸ்ரீ குமார தேவர் சாணச் சட்டி யெடுத்துக் கொண்டு, திரு மெழுகிட, சிதம் பர சுவாமிகளும், திரு வல கெடுத்துக் கொண்டு திரு வல கிட்டார். பிறகு சுவாமி நிட்டையி லிருந்து தெளிந்த பின், சேதி யறிந்து, இருவர்களும் மடத்துட் சென் று வணங்கி நிற்க, சுவாமிகளும் குமார தேவரைப் பார்த்து, அப்பா? உன்னை யடுத்து நிற்கின் றவன் யார்? என் று கேட்க, தென் ஞட்டுச் சைவ னென் று சொல்ல. இவனை ஏன் அழைத்து வந்தாய்? என் று கேட்க, அதற்கு குமார தேவர் மெளனமா யிருந்து விட்டார். இப்படி இரண்டு திநம் சென் றதும், தம்பிரான் சிதம்பர சுவாமிகள் நடையை அறிந்து, சுவாமிகளுக்குச் சொல்ல, அவர் நமக் கிருக்கும் சந்ததி போதும், ஆனுல், நமது சந்ததிக்குச் சந்ததி நெடு நாளா யில்லா திருந்து இப் போது கிடைத்த படியால், அப்படியே செய்விக்க

வேண்டு மென்று கட்டளையிட, அதற்குத் தம்பிரான் மௌனமா யிருந்து விட்டார். மூன் றும் நாள் சுவாமிகள் குமார தேவரை அழைத்து, உன் னிருப்பிடம் போ வென்று சொல்ல, குமார தேவர் "இவன் இவடத்தி லிருக் கட்டு" மென்று விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகள் "இவடத் தில் வேண்டாம் நீயே அழைத்துப் போ"வென்று சொல்ல, குமார தேவர், "இவனைக் கொண்டு போய் அடிமை யென் செய்கிற" தென்று கேட்க, இவன் பக்குவ மறிந்து, "உனக் குச் சொன்னதை இவனுக்குச் சொல்லிவை" யென்று கட்டளையிட, அவ் வாறே, குமார தேவர், சிதம்பர சுவாமி களை அழைத்துக் கொண்டு விருத்தாசலம் வந்து, சிதம்பர சுவாமிகளின் பக்குவ மறிந்து ஞானோபதேசம் செய்தருளி னர். பிறகு, இருவர்களும் பக்குவ மடைந்த ஆன்மாக் களுக்கு அவ் வப் போது, உபதேசஞ் செய்து, தங்கள் அநுபவத்தைச் சாத்திர மாகச் செய்துவைத்து பரிபூரண தசையை அடைந்தார்கள்.

ஸ்ரீமத் சாந்த லிங்க சுவாமிகள், தற் போத மாயில், எம் மதத்தி லுள்ளவர்கள்? எந் நிட்டை சொன்னாலுஞ் சம்மதமே யெனக் கொண்டு, ஆன்மாக்க ளுய்யும்படி, கொலை மறுத்தல், வைராக்கிய (பக்தி) சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார், என்னும் நான்கு அற்புத நூற் களை இயற்றி, அதன் விசேஷ கருத்துக்களை தம்மிட மிருந்த அடியார் குழாங்களுக்கு எடுத் துரைத்து, தானும், சிவ யோக சாதனையில் சீ ருற்றுப் பே ருற்றுப் பே ரானந்தக் கடலி லாழ்ந்து, ஓர் சுபதிநத்தில் சமாதி நிலையில் ஐக்கிய மடைந்தார்கள்; சுபம். சுபம்.

சாந்த லிங்க சுவாமிகள் சரிதம் முற்றுப் பெற்றது.

31. ஸ்ரீ குமார தேவர் சரித்திரம்.

அருத்தமந்ன் கடைய வளிக்குநல் கருணை
ஆழத்துப் பிள்ளையைச் சிகரிக்,
கொருத்தனென் றுரைக்குங் குமாரநற் குருவை,
யொருவிலா விருத்தரா யகனைத்,
திருத்தரன் ஞாநங் கொடுக்குநம் குருவாச்
செப்பிடும் விருத்தநா யகியை,
விருத்தநல் லசலக் குமாரதே வன்நன்
விரைமலர் அடியிணை தொழுவாம்.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதாநந்த ஸ்வரூபமே ஒருரு வாகத் திரு மேனி கொண் டருளிய, ஸ்ரீ குமார தேவர் முற் பிறப்பில் பரம சிவத்தை நோக்கி, மல்லிகார்ச்சுந பர்வதத்தில், நிஷ்காம தவஞ் செய்கையில், அந்தச் சுவாமிகளோடு கூட வே றொருவர் அந்தப் பர்வதத்தின்கண்ணே தவஞ் செய்து கொண் டிருந்தார்; அப் போது, பரம சிவம் அவரது தவத்திற் கிரங்கிப் பிரத்தியக்ஷமா யெழுந்தருளி வந்து, அப்பனே! உனக்கு என்ன வரம் வேண்டு மென்று கேட்கு மளவில், அவரோ, ஒன்றைக் கருதி, மற் றொன்றைக் கேட்ட மாத்திரத்தில், பரம சிவம் திரு வுளத்தில் முனிவு கொண்டு,அடா நீ ஜடா முநி யாகக் கடவ தென்று சபிக்க, அது கேட்டு அவரும் திடுக்கிட் டெழுந்து நின்று, சுவாமி! யான் கருதி வந்ததைக் கேளாமல் ஊழ்வினைச் சேட்டையால் தவறிப் போனேன். பரம் பொருளே! இனி யாது செய்ய வல்லேன். அச்சோ! இச் சாபம் அடிமைக்கு, எக் காலத்தில் விமோசந மாகு மென்று, அடி வணங்கி கேட்க, அடா! நீ போய், விருத்தாசலத்தில், மணி முத்தா நதிக் கரையில், வளர்ந் தோங்கி யிருக்கின்ற அரச மரத்தின்

மே லிருந்தா யாகில், இந்தப் பர்வதத்தில் உன்னோடு தவஞ் செய்து நிற்கின்ற, எமது அன்ப னாகிய ஒருவன், கர்நட தேயத்தில், இராஜ னாக வவதாரஞ் செய்து, சிறிது நாள் ராஜ்ய பாரம் பண்ணி, பிறகு விரக்தி யுண்டாய், பேரை யூர்ச், சாந்த லிங்க சுவாமிக ளிடத்தில், அநுக்ரகம் பெற்றுக் கொண்டு, மேற்படி ஆசிரிய ருத்தரவுப்படி விருத்தாசலம் வந்து, நீ இருக்கின்ற அரச மரத்தி னிழலில் இருப்பான். அப் போது, நீ அவனைக் கண்டு, வணங்கிக் கேட்டால், அவன் விமோசநஞ் செய்வா னென்று, திரு வாய் மலர்ந் தருளிய மாத்திரத்தில், அந்த ஜடா முநியும், சுவாமீ! அவ ருக்கு முத்தித் திசை எப்போ தென்று கேட்க, அடா! அந்த அன்பன் இதற்கு முன்னர், ஐந்து சுத்த தேக மெடுத்து நம்மை நோக்கி நிஷ்காம தவஞ் செய்திருக் கின்றான், இஃது ஆறாவது தேகம். இன்னம் ஒரு தேகத் தில், முக்தியை பெறுவா னென் றருளிச் செய்ய. அது கேட்டு ஜடாமுநியும், பாக்கிய மென்று பரம சிவனிடத் தில் விடை பெற்றுக் கொண்டு போய், மேற் சொல்லிய அரச மரத்தின் மே லிருந்து, எப் போது விமோசந காலம் நேரிடு மென்று வழிபார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீ குமார தேவரோ என்றால், பரம சிவத்தின் திரு வருட் படி அருளே திரு வுரு வாகக் கொண்ட போதி னும், ஆசிரியர் வேண்டி யிருப்பதால், கர்நட தேயத்தி லவதரித்துச் சிறிது நாள் அரசு செய்து, பிறகு துறவு பூண்டு, ஒரு நாள், தம் மிடத்தி லுள்ள மந்திரிமார்களில், முதல் மந்திரி யானவரால், தமது சரித்திர முழுதும் பேரை யூர்ச் சாந்த லிங்க சுவாமிகளுக்குத் தெரிவித்த பின்பு, தாமே போய் மேற்படி சுவாமிகளைக் கண்டு வணங்கி

நிற்க, அது தெரிந்து சுவாமிகளும், இவரது பரிபாகத்தை நோக்கும் பொருட்டுத், தம்மிடத் திருக்கும் கையேட்டுத் தம்பிரானைப் பார்த்து! அப்பா இவனைப் பார்த்தால் அரசனைப் போ லிருக்கின்றது, இவ னிந்த வழிக்குப் பாத்திர வா னல்லன், ஆதலால், இவனை அரசுக்கே போகும்படி சொல், லென்று சொல்ல: அதற்கு அந்தத் தம்பிரானும் சுவாமி! இவ் வரசனிடத்தில், அதி தீவிர பக்குவ முடைய சற் சிஷ்யருக் குள்ள பதி னெண் குறியும் உண்டாயிருக் கிறதே யென்று சைகையாகச் சொல்ல, சுவாமிகளும் (முன்பே அறிந்திருப்பதால்) ஆனால், இவனை நமது எருதுக்குப் புல் லறுத்துப் போடச் சொல் லென்று, கட்டளை யிட்டருள, அவ் வாறே, தம்பிரான் அரிவாளும், புல்லு கட்டுங் கயிறுங் கொடுத் தனுப்ப, மேற்படி ஸ்ரீ குமார தேவரும், அத் திருப் பணியைச் சிரசா வைத்துக் கொண்டு வயலுக்குப் போய், பள்ளர்கள் புல் லறுப்பதைப் பார்த்துத், தாமும் அவ் வாறே, அறுக்க நினைத்து, இடக் கையால் புல்லைப் பற்றி, வலக்கையி லுள்ள அரிவாளைப் புல்லின் மேற் பூட்டாமல், இடக்கையின் மேற் பூட்டி யிழுக்க, கை யறுபட்ட மாத்திரத்தில் மேற்படி வலக் கையைப் பார்த்துக் கோபித்தார். இவ் வற்புதக் காட்சியைக் கண்ணுற் கண்ட மேற்படி பள்ளர்கள், நீர் ஆ ரையா? என்று கேட்க, நான் பேரை யூர்ச் சாந்த லிங்க சுவாமிகள் வாகனத்திற்குப் புல் லறுப்பவ னென்று சொல்ல. அது, கேட்டு அப் பள்ளர்கள் ஆச்சரிய மடைந்து, இவர் அரசனைப் போ லிருக்கின்ற தென் றெண்ணி, அப் பள்ளர்களே, புல் லறுத்துக் கட்டுக் கட்டி அவர் திரு முடிமேல் வைக்க, அச் சுமை பொறுமல் திருமுடி சாய்ந்து போவதைக் கண்ட பள்ளர்கள், அப் புற்

சுமையை எடுத்து வந்து மேற்படி மடாலயத்து வெளியில் வைத்துப் போனார்கள்.

இவ்வாறு, இரண்டு நாள் சென்ற பின்பு,மூன்றாவது நாள், மேற்படி புற்சுமையை எடுத்து வந்த பள்ளர், இவர் சேதி முழுதும் கையேட்டுத் தம்பிரானுக்குத் தெரிவிக்க, அவரும் இவர் கை யறுப்புண்ட சேதியை சுவாமிகளுக்குக் குறிப்பாகத் தெரிவித்தனர். சுவாமிகளும், ஸ்ரீ குமார தேவரைப் பார்த்துச், சோதனை நிமித்தம் முனிவு கொள்பவர் போல் கோபிக்க, அவரும் உண்மையாகவே பயந்து ஒரு புறம் ஒதுங்கி இருந்துவிட்டார்.

பிறகு அன்று இராத்திரி சுவாமிகள் கையேட்டுத் தம்பிரானை யழைத்து, அப்பா! எங்களிருவருக்கும் வெவ்வேறே கட்டமுது கட்டி ஒரு கண்டத்தில், மாட்டி அரசனிடத்திற் கொடுத்து நம்மோடு கூட அனுப்பிவை யென்று கட்டளையிட்டருள, அவரும் அவ்வாறே செய்தனுப்பி வைக்க, சுவாமிகள் முன்னும், ஸ்ரீ குமார தேவர் பின்னுமாய்ப் போகையில், சில தூரம் போய், சுவாமிகள் இவரைத் திரும்பிப் பார்த்து,என்ன தாமதமென்றதட்ட. அது கேட்டு இவரும் பயந்து. சுவாமி! ஒரு புறம் அச்சுலிங்கம், மற்றொரு புறம் கணுயுத்தம் இழுக்கின்றதே என்று சொல்ல, அக் குறிப்பை யறிந்து, சுவாமிகள் தமக்குத் தாமே ஆநந்த பரவச மடைந்து, பிறகு அவ்விடத்திலுள்ள ஓர் குளக் கரை மேலிறங்கி, இருவரும் ஒன்றாக உட்கார்ந்து இரண்டந்நத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஸ்ரீ குமார தேவர் சுவாமிகளுக்குப் பரிமாற மேற்படி

சுவாமிகள், நைவேத்தியங் கொண்டபின், சேட மான மஹாப் பிரசாதத்தைத் தாமும் உட் கொண்டு, சிறிது நேரம், அவ் விடத்தில் இருவரும் சிற் சில விஷயங்களை வசனித்துக் கொண் டிருந்து, பிறகு மடாலயத்திற்கு வந்து சேர்ந்து, சில நாள் கழித்து. மேற்படி சுவாமிகளிடத்தில், அநுக்ரஹம் பெற்றுக் கொண்டு சாதனை செய்து முதிர்ந்த காலத்தில், ஒரு நாள் சாந்த லிங்க சுவாமிகள், இவரை மகா ராஜா என்று பெய ரிட் டழைத்து, அப்பா! நீ விருத் தாசலத்துக்குப் போக வேண்டு மென்று கட்டளையிட் டருள. அங்ஙனமே நல்ல தென்று விடை பெற்றுக் கொண்டு, விருத்தாசலத்தை நோக்கி வருகிற வழியில். சின்ன சேலத்திற்குக் கீழ்ப் புற மான காட்டில்,இவர் நிமித் தம் அன்பு கூர்ந்து பழ மலை நாதரே ஒரு பிராமண ரூபமா யெழுந்தருளி வந்து, தண்ணீர்ப் பந்தல் வைத்துக் கொண் டிருந்து,இவரைக் கண்டு அப்பா!நீ ஆயாச மாய்ப் போகிற படியால், நால் வகை ஜலமு மிருக்கின்றன. உனக்கு வேண்டிய மட்டும் சாப்பிட்டு விடாய் தீர்க்கலா மென் றுப சரித்துத்,தண்ணீர் கொடுக்க. இவர் அதைச் சாப்பிட்டு தாக நிவிர்த்தி செய்து கொண்டு, விருத்தாசலம் வந்து சேர்ந்து, மணி முத்தா நதிக் கரையி லிருக்கின்ற அரச மரத்து நிழலில், நடந்துவந்த ஆயாசத்தினால், சற்று இளைப் பாறச் சயனித்து பிரமாநந்த நித்திரையி லெழுந்தருளி யிருந் தனர்.

அது சேதி பெரிய நாயகியா ரறிந்து, தன தபிடேகத் திற்குச் சுவர்ண பாத்திரத்தில் வைத் திருந்த பசுவின் பாலை ஏந்திக் கொண்டு, ஓர் பிராஹ்மண ஸ்திரியைப் போல, அங்கு இவரிடத்தில் வந்து, தலைப் பக்கத்தி லுட் கார்ந்து, தனது திரு மடியின் மே லிவரது முடியைத்

தூக்கி வைத்து, அந்தப் பாலைப் புகட்டின பின்பு, இவர் ஆயாசந் தீர்ந்து, கண்ணை விழித்துப் பார்த்து, நீ ஆ ரம்மா! என்று கேட்க, அப்பா! குமார தேவா! நான் தான் பெரிய நாயகி! நீ எப்போதும் என்னிடத்தில் தானே சுகமா யிரு வென்று திரு வாய் மலர்ந் தருளி, உடனே மறைந்தருளி னாள். பிறகு, ஸ்ரீ குமார தேவர், அம்மா! உன் கிருபைக்கு அடிமை யாது கைம்மாறு செய்யவல்லேன்! என்று பல வாறு தோத்திரஞ் செய்து அங்ஙனே பரவச மாய் இருந் தார்.

இதை மேற்படி ஜடா முநி, தேடி யிருந்த பொருள் கிட்டிற் றென வெண்ணி, அம் மரத்தை விட்டுக் கீழே யிறங்கி பிராஹ்மண உருவ மாய் வந்து அதிவிநயத்துடன் அடி வணங்கி நிற்க! இவர் அந்த ஜடா முநியைப் பார்த்து, நீ யார்? என்று கேட்க: நான் ஜடா முநி யென்று சொல்ல; நீ இவ் விடத்திற்கு வந்த காரிய மென்ன வென்று கேட்ட மாத்திரத்தில், ஜடா முநி தன் து சரித்திர முழுதும் விவர மாகச் சொல்ல, அது கேட்டு, ஸ்ரீ குமார தேவரும் சந்தோஷ மாய் ஜடா முநியின் சாப நிவிர்த்தி செய்து, சிறிது நாள் அவ் விடத்தில் தானே கர பாத்திரஞ் செய்து கொண்டிருக்குங் காலத்தில், அவ் விடத்தி லுள்ள ஒரு குடும்பி யானவன், இவரை மகா னென் றறிந்து நாள் தோறும் உண்மை யாய்த் தரிசநஞ் செய்து கொண்டே வர, அவனுக்கு நாளுக்கு நாள் சகல சம்பத்தும் அபி விருத்தி யடைந்து வருகையில், ஓர் நாள், அவன் ஸ்ரீ குமார தேவரைக் கண்டு வணங்கி, சுவாமி! அடியேனுக்கு ஏதேனும் ஓர் திருப் பணி கட்டளையிட்டருள வேண்டு மென்று வருந்திக் கேட்க, ஸ்ரீ குமார தேவரும் அப்பா! அப்படி உனக் கிஷ்ட மிருந்தால் ஸ்ரீ பெரிய நாயகியார்

சந்நிதானத்திற் கெதி ராக ஒரு மண்டபங் கட்டிவை யென்று கட்டளையிட்டருள, அவனும், அப்படியே மகா பாக்கிய மென்று மண்டபங் கட்டும்படி எத்தனித்துக் கட்டும் போது, உத்திரக் கல் மே லேறாமல் வருத்த மடைந்து, ஸ்ரீ குமார தேவருக்குத் தெரிவிக்க, ஸ்ரீ குமார தேவரும், விபூதியைக் கொடுத்து இதை அந்தக் கல்லின் பேரில் போட்டுத் தூக் கென்று உத்தரவு செய்ய, அப் படியே செய்து முடித்த பின்பு, அந்தக் குடும்பியும் சந் தோஷ சித்த னாய், ஸ்ரீ குமார தேவரை வணங்கி நின்று, சுவாமி தேவரீ ருடைய பிரபாவத்தை யின்ன தென்று அளவிட்டுச் சொல்ல ஆரா லாகு மென்று நாநா வித மாகத் தோத்திரஞ் செய்ய. ஸ்ரீ குமார தேவரும், அவனை அழைத் துக் கொண்டு போய், கோபுர வாயிலிற் செய்து வைத் திருக்கும் இரண்டு துவாரபாலக ருடைய முதுகும் உ ரை பட்டிருப்பதைக் காண்பித்து,இவர்களுக்குத் தவன கஞ்சி, காய்ச்சி நைவேத்தியம் பண் ணென்று கட்டளையிட் டருள, அவனும் மகாபாக்கிய மென்று அப்படியே சேய் வித்துக் கிருத கிருத்திய னானன்.

பிறகு, ஒரு நாள், ஸ்ரீ குமார தேவரும், ஓர் குடும்பி வீட்டு வாயிலில் கர பாத்திரத்திற்குச் சென்று கையேந்த, அவர்கள் இவரது மகிமையை யறியாதவர்களாய், தங்கள் வீட்டில் சமைத்து வைத்திருந்த மச்சத்தை அன்னத்தோடு கலந்து இவர் கையிற் பரிமாற, அது தெரிந்து, ஸ்ரீ குமார தேவரும, அங்ஙனே குளத்தின் நீ ரருகிற் செல்ல, அந்த மச்சம் உயிர் பெற்று குளத்திற் குதித்துப் போய்விட்டது.

இப்படி யிருக்க, ஒரு குஷ்ட ரோகி யானவன், தனது தேக வருத்தம் நீங்க வேண்டு மென்று நாள் தோறும்

இடை விடாமல் ஸ்ரீ குமார தேவரைக் கண்டு தரிசநஞ் செய்து கொண்டே வருகையில், ஒரு நாள் அதிக வாதனை யினால் சகிக்கப்படாதவனாய், ஸ்ரீ குமார தேவரது திரு வடி யில் வந்து வீழ்ந்து, கோ வென்று அலறி முறையிட, ஸ்ரீ குமார தேவரும், அப்பா! நாம் வயித்திய னல்லவே யென் னாலும், அவனும் சுவாமி தேவரீரது திருக் கையினால் விபூதியாகிலுங் கொடுத்தால் எனது ரோகம் நிவிர்த்தியாகு மென் றிரங்கிக் கேட்க, ஸ்ரீ குமார தேவருந், திரு வுள மிரங்கி, விபூதியை யள்ளி அவனது இடக் கையில் வைத்து வலக்கையால் மூடிக் கொள்ளச் சொல்லி பழமலையார் சந்நிதாநத்தினுள் ஒரு மாடத்தி லிருக்கும் விக்நேசுவர ரைக் குறி யாகக் காண்பித்து, நீ அந்த விக்நேசுவரர் முன்னே போய், இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு நின்று, அங்கே நடக்கின்ற அதிசயத்தை நமக்கு வந்து சொல் லென்று கட்டளையிட் டருள, அவனும், அப் படியே போய் நின்ற மாத்திரத்தில் அவனுக்குச் சுழுத்தி போற் றோன்ற, அத் தருணத்தில் அந்த விநாயகக் கடவுள் தனது துதிக்கையை நீட்டி இவனது இடக் கையி லிருந்த விபூதியைத் தொட்டது போலக் கண்டு, விழித்து ஸ்ரீ குமார தேவ ரிடத்திற்கு வந்து விண்ணப்பஞ் செய்த மாத் திரத்தில், ஸ்ரீ குமார தேவரும், ஆநந்த மாய் அந்த விபூதி யைத் தொட்டுத் தரித்துக் கொண்டு! அவனையும் தரித்துக் கொள்ளும்படி உத்தரவு செய்ய, அவன் அப்படியே தரித்து வருங் காலையில், அவனது குஷ்ட ரோகம் நிவிர்த்தி யாகிச் சௌக்கிய மடைந்தான்

இப்படி யிருக்கின்ற நாளையில், ஒரு நாள், ஸ்ரீ குமார தேவரும், திரு வாரூர் மஹோற்சவத்திற்கு போயிருந்த

போது, இரதோச்சவத் திநம் தியாக ராஜப் பெருமான் இரத மேறி மாட வீதி திருக் கோலம் வருகையில், அந்த இரதத்திற்கு நேரே ஸ்ரீ குமார தேவர் தரிசநங் கொண் டிருப்பதை இரண்டு சைவர்கள் கண்டு, ஒருவர்க் கொரு வர் விகட மாய், வீர சைவ மருளைப் பார்த்தீர்களோ, வென்று பேசிக் கொள்ள, அந்த விகட வார்த்தையை, ஸ்ரீ குமார தேவர் கேட்டு, இரதத்தில் வருந் தியாக ராஜப் பெருமானைப் பார்த்து, தியாக ராஜப் பெருமானே! "வீர சைவம் மருளானால் இரதம் நடக்க, அருளானால் இரதம் நிற்க" என்று, திரு வாய் மலர்ந்தருளினவுடனே இரதம் நின்று விட்டது; பிறகு, ஸ்ரீ குமார தேவர், கொஞ்ச தூரத் திருந்த ஒரு மர நிழலி லுட்கார்ந் திருந்தார். இரதம் நின்று விட்ட சேதி தெரிந்த தர்ம கர்த்த ராகிய தஞ்சா வூர் அரசன், இரத மானது நிலை வந்து சேர்ந்த பிறகு போஜநஞ் செய்கிற தென்னும் நிச்சய முடையவ னுதலால், என்ன செய்வோ மென் றச்ச முற்று, இவ் விடத்தில், நடந்த இரகசியந் தெரியாத படியினுல், சாயங் கால் பரியந்தமும் அந்த இரதம் நடக்கும்படி அநேக பிரயத்தநங்கள் செய் வித்தும், அஃது சற்றுகிலும் அசையாது நிற்பதைப் பார்த்து, இனி யென்ன செய்யக் கூடும்! இது யாரால் உற்ற இடறு! அந்தோ! வீணில் விரதம் தவறுத லாகிறதே! எம்பிரானே! என்று வியசந முற்று, மெய் சோர்ந்து வாடி, பிறகு தேறி யிருக்குங் காலையில், மேற்படி யரசன் அவ் விடத்தில் நடந்த இரகசியத்தைக் கேள்விப் பட்டு, ஸ்ரீ குமார தேவர் இருக்கு மிடத்திற்கு வந்து அவரைக் கண்டு வணங்கி, விண்ணப்பஞ் செய்ய, ஸ்ரீ குமார தேவரும், அரச னைப் பார்த்து, இம் மறுளனிடத்தில் உங்களுக்கு என்ன

அலுவல் போங்க ளென்று சொல்ல, அரசனும் சுவாமி! இந் தப் பிழையை மன்னித்து, இரதத்தை நடப்பித் தருள வேண்டு மென்று, வெகு வாகத் தோத்திரஞ் செய்ய, அதற்கு, ஸ்ரீ குமார தேவரும் திரு வுள மிரங்கி அந்த இராஜ னுடனுஞ், சேனைக ளுடனும், எழுந் தருளி வந்து இரதத்தின் முன்னே நின்று, தியாகராஜப் பெருமானைப் பார்த்து, எமது தயாநிதியே! வீர சைவம் அருளானுல் இரதம் நடக்க, மருளானுல் இரதம் நிற்க'' என்று திரு வாய் மலர்ந்தருளின மாத்திரத்தில், இரதம் சடுதியில் நடந்து யாவருங் களிக்க நிலையிற் போய் நின்றது.

இப்பால், ஸ்ரீ குமார தேவர், மறுபடியும் விருத்தா சலம் வந்து, அவ் வரச மரத்தின் கீழ் வாசம் பண்ணிக் கொண் டிருக்குங் காலையில், பிரதேசத்தி லுள்ள ஓர் மாந் திரீகன் விருத்தாசலத்தி லுள்ள பத்திரகாளியைத் தன் கைவச மாக்கிக் கொள்ள எண்ணினவ னுய்த், தனது நாட்டை விட்டு மணி முத்தா நதிக்கு வட திசை யாக வருகையில், மேற்படி பத்திர காளி யறிந்து, அச்ச மூற்றவ ளாய், ஒரு ஸ்திரியைப் போல், ஸ்ரீ குமார தேவரிடத்திற்கு வந்து, அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணி அவருக் கெதிரே நிற்க, அது கண்டு, ஸ்ரீ குமார தேவரும் நீ யார்? என்று வினவ, சுவாமி! நான் பத்திரகாளி, என்னைத் தன் வசஞ் செய்து கொள்ளும்படி ஒரு சண்டாளன் வருகின் ருன். அதனுல், பயந்து வந்தே னென்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு, ஸ்ரீ குமார தேவரும் என்னுல் உனக்கு ஆக வேண்டிய தென் னென்று வினவ, பத்திர காளியும் சுவாமி! தேவரீரது திரு வடிகளை அடியாள் சிரசின் மேல் வைத்தால், எனது ஆபத்து நீங்கு மென்று விண்ணப்பஞ்

செய்ய, ஸ்ரீ குமார தேவரும், திரு வுள மிரங்கி, அங் ஙனமே நல்ல தென்று பத்திர காளிச் சந்நிதிக் கெழுந்தருளி வந்து, அந்த விக்ரகத்தின் முடிமேல் தமது திரு முடியைத் தூக்கி வைத்த மாத்திரத்தில், அம் மாந்திரீக னுடைய இரண்டு கண்களும், அவன் மன விருள் போலவே. இரு ளடைந்தன; அது தெரிந்த அந்த மாந்திரீகனும் பயங் கொண்டு, இந்த ஸ்தலத்தில் பெரியோர்கள் வாசஞ் செய்திருக்கின் றனர் போலும் என் றெண்ணி, அவ் விடத்தில் விசாரிக்க, ஸ்ரீ குமார தேவர் எழுந்தருளி யிருப்பதைக் கேள்விப்பட்டு, அவ ரிருக்குமிடந் தேடி வந்து, அவரைக் கண்டு வணங்கி நிற்க, ஸ்ரீ குமார தேவரும், அவனைப் பார்த்து நீ யார்? என் று வினவ, சுவாமி! நான் மாந்திரீகன், நான் இவ் விடத்திற்கு இந்த உத்தேச மாய் வந்த இடத்தில், எனக்கு இவ் வகையான ஆபத்து நேரிட்டது. இதைத் தேவரீரே தீர்த்தருள வேண்டு மென் று வெகு வாகத் தோத்திரஞ் செய்து நிற்க; ஸ்ரீ குமார தேவரும் சற்றே திரு வுள மிரங்கி அடா! உன் சரீர முள்ள வரையிலும் இந்த மாந்திரீகத்தை விட்டிருப்பா யாகில், உனக்கு ஒரு கண் மாத்திரந் தெரிய, அநுக்கிரகஞ் செய்வோ மென்னலும், அம் மாந்திரீகனும், அப்படியே நல்ல தென் று ஸ்ரீ குமார தேவரது திரு வடியைத் தொட் டுச் சொன்ன வளவில், ஒரு கண் தெரிந்து தன் னுடைய தேசத்திற்குப் போயினன்.

இப்பால், ஒரு குடும்பி யானவன், புத்திரரபேக்ஷை யினால், ஸ்திரியுந், தா னும், நெடு நா ளாய் வியசநப்பட்டுக் கொண்டு, ஸ்ரீ குமார தேவரைக் கண்டு நாள் தோறும் தரிசநம் பண்ணி வருகையில், ஒரு நாள் ஸ்ரீ குமார தேவர் திரு வுள மிரங்கி மேற்படி குடும்பிக்கு விபூதி யளிக்க,

அவ் விபூதிப் பிரசாதத்தால் அவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்து, அவர்கள் வளர்ந்து, ஐந்து வய தாகிப் பள்ளிக் கூடத்தில் வைத்து வித்தியாப்பியாசஞ் செய்வித்த பிறகு, அந்தப் பிள்ளைகளுக்கு இலக்கணாப்பியாசஞ் செய்விக்க வேண்டி, இலக்கண வித்துவா ஞகிய சிதம்பரம் பிள்ளை யென்பவரை, மதுரையி லிருந்து வர வழைத்து மேற்படி இரண்டு பிள்ளைகளுக்கும் இலக்கணாப்பியாசஞ் செய்வித்து வருங் காலத்தில், ஒரு நாள் ஸ்ரீ குமார தேவர் குக்ஷி பாதை நிமித்தம் அந்தக் குடும்பி வீட்டுக்கு வருகையில், மேற்படி சிதம்பரம் பிள்ளை யென்னும் உபாத்தியாயர், இவரிடத்தில் மதிப் பற்று இருமாந் திருப்பதைக் கண்டு, அவரைத் தடுத் தாட் கொள்ளத் திரு வுளங் கொண்டு, அவரை நோக்கி, ஓர் வாக்கியத்தைக் கூறி, அதற்குப் பயன் வினவ, அவருக் கென்ன வித்வத் சாமர்த்திய மிருந்த போதிலும், இந்தச் சந்நிதாநத்தில், நா வெழாமையால், பயன் கூருது மயங்கி நின்று, சற்றே தெளி வுண்டாகி, ஸ்ரீ குமார தேவரது திரு வடியில் விழுந்து வணங்கி, சுவாமி! அடிமையை மன்னித்து இரக்ஷித்தருள வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்து, அது முதல் துறவு பூண்டு, மேற்படி ஸ்ரீ குமார தேவரது பின் ஞகச் சாயை போற் றெடர்ந்து, தானுங் கர பாத்திரம் பண்ணிக் கொண்டிருந் தார், அவரது ஆராமையையும், மெய் யன்பையும், ஸ்ரீ குமார தேவ ரறிந்து, அவரைத் தமது ஆசிரிய ரிருக்கும் திருப் பேரை யூருக்குக் கூட்டிக் கொண்டு நடந்து, மடாலயத்திற்குச் சமீப மாகப் போகையில், விடியற் காலை யாகையினுல், எழுந் திருந்து வெளியே வந்து நிற்கிற தம்பிரானைக் கண்டு, சுவாமிக ளிருக்குஞ் சமைய மெப்படி

யென்று வினவ, சுவாமிகள் பரநிட்டையி லெழுந்தருளி யிருக்கின்ற தெனக் கூற, ஆனால், நாம் பணி செய்வோ மென்று நினைத்து, ஸ்ரீ குமார தேவர் சாணைச் சட்டி யெடுத்துக்கொண்டு திருமெழுகிட, சிதம்பர சுவாமிகளும், திருவல கெடுத்துக் கொண்டு திருவல கிட்டார்; இத் திருப் பணி முடிந்த பின்பு, சுவாமிகள் திருக் கண் விழித் தருளிய சேதி தெரிந்து இவ் விருவர்களும் மடாலயத்துட் சென்று சுவாமிகளைக் கண்டு வணங்கி நிற்க. சுவாமிகளும் ஸ்ரீ குமார தேவரைப் பார்த்து, அப்பா! உன்னை யடுத்து நிற்கின்றவன் யார்? என்று வினவ, தென்னாட்டுச் சைவ னென்று சொல்ல, இவனை ஏனழைத்து வந்தாய்? என்று கேட்க, அதற்கு, ஸ்ரீ குமார தேவர் மௌனமா யிருந்து விட்டார். இப்படி இரண்டு நாஞ் சென்ற பின்பு, சிதம் பர சுவாமிகளது நடையைக் கையேட்டுத் தம்பிரான் அறிந்து, சுவாமிகளை வணங்கிநின்று, சுவாமி இந்தச் சைவன் மிகுந்த வல்லவனா யிருக்கிறபடியால் இவனைத் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ள வேண்டு மென்று விண் ணப்பஞ் செய்ய, அதற்கு சுவாமிகளும், மேற்படி தம்பி ரானைப் பார்த்து, அப்பா! நமக் கிருக்கிற சந்ததி போதும்; நமது சந்ததிக்குச் சந்ததி நெடு நாளா யில்லா திருந்து, இப்போது கிடைத்தபடியால், அப்படியே செய்விக்க வேண்டு மென்று கட்டளையிட, அதற்குத் தம்பிரான் மௌனமா யிருந்துவிட்டார். இப்படி இரண்டு நாள் கழிந்த பின்பு, மூன்றாவது நாள், சாந்த லிங்க சுவாமிகள், ஸ்ரீ குமார தேவரை அழைத்து, நீ உன் னிருப்பிடம் போ வென்று சொல்ல, ஸ்ரீ குமார தேவரும், இவன் இவ் விடத்தி லிருக்கட்டு மென்று விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகள் இவ் விடத்தில் வேண்டாம், நீயே யழைத்துக்

கொண்டு போ வென்று சொல்ல, ஸ்ரீ குமார தேவரும் இவனைக் கொண்டு போய் அடிமை யென்ன செய்கிற தென்று கேட்க, சுவாமிகளும், ஸ்ரீ குமார தேவரைப் பார்த்து, அப்பா! நீ இவனைக் கொண்டு போய்ப் பக்குவ மறிந்து, உனக்குச் சொன்னதை இவனுக்குச் சொல்லிவை யென்று கட்டளையிட, ஸ்ரீ குமார தேவரும், மகாப் பிரசாத மென்று விடை பெற்றுக் கொண்டு, இருவரும் விருத்தா சலம் வந்து சேர்ந்து, பிறகு சிதம்பர சுவாமிகளது பக்கு வஞ் சோதித்து அநுக்கிரகஞ் செய்து அருளினார், இவர் தான், திருப் போரூர்ச் சந்நிதாநம் விளக்கிய சிதம்பர சுவாமிகள்.

இப்படி நடந்து வருங் காலத்தில், பெரிய நாயகியாரும், ஸ்ரீ குமார தேவரால் சாஸ்திரஞ் செய்விக்குமபடி திரு வுளங் கொண்டு, ஸ்ரீ குமார தேவரது யோகில் வந்து, அப்பா! குமார தேவா! நீ சாஸ்திரஞ் சொல்ல வேண்டு மென்று திரு வாய் மலர்ந் தருள, ஸ்ரீ குமார தேவரும், அம்மா! அடிமையாற் சொல்ல முடியா தென்று விண்ணப் பஞ் செய்ய, பெரிய நாயகியாரும், ஆனால், நாமே உனது நாவில் நின்று சொல்லி முடிக்கின்றோ மென் றநுக்கிர கித்து, அங்ஙனே இந்த ஷோடசு மகா சாஸ்திரங்களையுஞ் சொல்லி முடித் தருளினார். இப்படி அநந்த மகத்துவங் களைச் செய்து, அந்தத்தில், ஸ்ரீ குமார தேவரும், சொரூப சாக்ஷாத்கார பரிபூரண தசையை யடையுஞ் சமய மறிந்து, இரண்டாவது அடிமை யாகிய ரெட்டி சிதம்பர சுவாமிகள், ஸ்ரீ குமார தேவரைப் பார்த்து, சுவாமி! தேவர் பரிபூரண மான பின்பு, அடியார்கள் தரிசநஞ் செய் துய்யும் பொருட்டு, ஓர் திருப் பணி கட்டளையிட்டருள வேண்டு

மென்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு, ஸ்ரீ குமார தேவர், நாம் மறைந்தும், நமது பெயர் இருக்க வேண்டுமா வென்று, அகண்ட பரிபூரண சாக்ஷாத்கார சொருப வியா பகத்திற், புரட்டாசியீ பூர்வ பக்ஷம் சதுர்த் தசியில் கலந் தருளினர். இப் பால் ரெட்டி, சிதம்பர சுவாமிகளும், ஸ்ரீ பெரிய நாயகியார் கட்டளைப்படி ஸ்ரீ குமார தேவர் திரு நாமத்தினல் கோயில் மடாலய முதலாகியவைகளுஞ் செய் வித்து, பிறகு தாமும், பரிபூரண தசையை யடைந் தருளி னர்.

குமார தேவர் செய்த நூல்.

1. மகா ராஜத் துறவு.
2. சுத்த சாதகம்.
3. விஜ்ஞாந சாரம்.
4. அத்துவித வுண்மை.
5. பிரமாநுபூதி விளக்கம்.
6. ஞாந வம்மானை
7. வேதாந்த தசாவத்தைக் கட்டளை.
8. வேதாந்த தச காரியக் கட்டளை.
9. சகஜ நிஷ்டை
10. உபதேச சித்தாந்தக் கட்டளை
11. பிரம சித்தி யகவல்
12. சிவ தரிசந அகவல்.
13. ஆகம நெறி அகவல்.
14. வேத நெறி யகவல்.
15. பிரமாநுபவ அகவல்.
16. சிவ சமரச வாத அகவல்,

    பெரிய நாயகி யம்மன் பதிகம்.

31. ஸ்ரீ குமார தேவர் சரிதம் முற்றுப் பெற்றது.

தொண்டை நாட்டின்கண்
ஸ்ரீ சிவ சுப்ரமணிய சுவாமி ஸ்தலங்களுள் ஒன் ருகிய
திருப் போரூர் ஆதீநம்

32. ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் சரிதம்.

உலக மிறைஞ்சு நிலை பெற் றுள்ள தாய்க், காண் டகு வள நிறை பாண்டி நன் ஞட்டின், வரு பல பாண் டியர், திரு வர சிருக்கை யாய், மலைய மாதவ னென நிலவு மெய்க் குரவனுற் றலையளிசெய, நனி வளர் தமிழ்ப் பெரும் பயன், பொங்கப் பலவிளை சங்கப் பலகை சேர், தெய்வத் தகைய தாம் வையை யடுத்தநா, வெண்ணில் சிரங்கற் கண்ணிம ஞளன், றிருவிளை யாட லிருநா லெட்டு, நிகழ்தரு தலமெனப் புகழ் திரு மதுரையிற், சங்கப் புலவர் மரபிற் ருேன்றிச் சிதம்பர கவி ராஜ ரென்னும் பெய ரினரா, யங்கயற்க ணம்மை யுபாசநா விரத மேற் கொண் டிருந்தனர்.

கொங்கு தேயத்தி லுள்ள, பே ரூர் அவிநாசி யென் னும் தலத்தில், வீர சைவ சமயாசாரிய, ராய் வீற் றிருந்த, சிவப் பிரகாச சுவாமிகள தருள் பெற்ற, அவரது சகோதரி புத்திர ராகிய, சாந்த லிங்க சுவாமிகள், குரு மூர்த்த மாகி, அங்கு எழுந் திருந்த நாளிற், கன்னட தேயம்,புங்க னூரில், அரசியல் புரிந் திளமையிற் ருனே, துறவு பூண்டு, சாந்த லிங்க சுவாமிகளால், ஞாநோபதேசம் பெற்று, அவர் கட்ட ளைப்படி விருத்தாசலத்தில் வந்த குமார தேவர், மணி முத்தா நதிக் கரையில், ஒ ரரச மர நிழலி லெழுந்தருளி யிருக்க, அம் மரத்தின்கண் பூர்வம் ஒரு காரணத்தாற் காத்திருந்த பிரம ராக்ஷஸ, குமார தேவரது தீக்ஷண்யத்

தால்,அவர்க் கெதிர் வரலும்,யார் நீ யென வினவத், தனது *பூர்வ சரித்திரங்களை விண்ணப்பஞ் செய்து, தரிசனை பெற்று, முன்னைய தேகத்தை யடைந்து விடை கொண்டு சென்றது.

பின்னர், குமார தேவர், ஆறு மாதத்திற் கொரு முறை சாந்த லிங்க சுவாமிகளது தரிசனார்த்தம் அவிநாசிக்குச் சென்று, விருத்த கிரிக்கு வரும் நியமங் கொண்டிருந்தபடி, தாம் விருத்த கிரியி லிருந்து வருகிற மார்க்கத்தி லோரூரிற், சிவ பக்தியிலும், அடியார் பூசனையிலும், முதிர்ந்த அன் புள்ள, ஒரு ரெட்டியாரது வேண்டுகோளால் அவ ரில்லத் திற் பிக்ஷை யங்கீகரித்து நடக்கின்றவரா யிருந்த போது, அவருக்கு, புத்திரர்க ளுண்டாக வநுக்கிரகிக்கப் பிறந்த குழந்தைகளுக்கு, ரெட்டியார் வித்தியாப்பியாசஞ் செய் விக்க வேண்டிச், சிதம்பர கவி ராஜ ரவ்வூருக்கு வரக் கண் டுபசரித்து, அவரைக் கொண்டு, கல்வி பயில்வித்து வருகையில், அக் காலத்தில் வந்த குமார தேவர், அங்கு சிதம்பர கவி ராஜர், அப் பிள்ளைகளுக்கு வாசிப்பிக்கின்ற வளமையும், கல்வி மாக்ஷிமையையும், கேள்வி யுற்று நோக்கி, அவரை யாட் கொள்ளக் கருதிச், சில வேதாந்த

*பூர்வ சரித்திர மாவது தான் கைலை, சாலிற் காமி யத்தை யுத்தேசித்து தவம் செய்ததும், பரம சிவம் பிரசந்ந மான போது, நிஷ்காமியத்தைப் பற்றி வரங் கேட்டதா லிவ் வுரு வா கென்று சபித்ததும், அங்கு நிஷ்காமியத்தை முன்னிட்டுத் தவம் புரிந்த, மற்றோர் மூவருள் ஒருவர் சிவப் பிரகாசர், ஒருவர் சாந்த லிங்கர், மற் றொருவர் குமார தேவ ராய் வருவ ரென்றதூஉம், அக் குமார தேவராற் சாபம் நிவிர்த்தியாயிடு மென்றதுமாம்.

இவற்றை இப் போது பாடலாய் சிதம்பர சுவாமிகள் புரா ணத்திற் கண்டு கொள்க.

சொற்களுக்குப் பொருள் வினவ உத்தரஞ் சொல்ல விசையாமற் சும்மா விருந்ததை நோக்கி, நாம் வினவியவை அரிய பொருளின வாதலால், இன் னொரு கா லிவண் வரும் பொழுது சொல்க வென் றுரைத்துச் சென்று, தமது ஆசிரிய தரிசநம் பெற்று விருத்தாசலம் சேர்ந்திருந்து, பின்னும் அவ் வாறு வந்த போது, ரெட்டியார் கிரகத்தில் கவி ராஜரை நோக்கி வினவ, முன்னைய வாறே சும்மா விருக்க, நாம் பிக்ஷை பண்ணிக் கொண்டு வருவதற்குள், முன் வினவிய சொற்களுக்கு பொருள் சொல்லக் கடவை யென்று கட்டளையிட், டுள்ளே போந்து புசித்து வந்து கிருபா நோக்கத்தில், கேசாதி பாதம் வரை மூன்று முறை நோக்கித், தம தாசிரிய ரிருக்குந் திசையை யுன்னி வழிக் கொண்டனர்.

சிதம்பர கவி ராஜரும், அச் சொற்களின் பொருள்களை யுள் ளுணர்ந்து, அன்பும், பத்தியு மேலிட்டு, அவரை விட்டு நீங்காச் சாயை போற் றொடர்ந்து சென்று, அன் றிர வெல்லாம் நடந்து விடியற் காலையில் அவிநாசியிற் குரவர் இருக்கையிற் சேர்ந்தனர். அவ் வமயம் உதய கால மானதாற், குமார தேவர் கோமயங் கரைத்துத் திரு மடத்தின் தலை வாயிலில் தெளிக்கச், சிதம்பர சுவாமி திரு வலகிட, இங்ஙனம் பணி புரிந்து, பின்னர்த் தம் நியமங்களை முடித்து, முன்னும் பின்னு மாக, இருவரும் பரிணமத்திற் புகுந்து, சாந்த லிங்க மூர்த்தி சந்நிதாநத்தில் தரிசநார்த்தம் புறங் காத்திருக்க, ஆசிரியர் ஒடுக்கத்தினின்றும் புறம் போந்து அங்கு நின்ற இருவரையுங் கண்ணுற்று, மீண் டுள்ளே யெழுந் தருளித் தா மியற்றியுள்ள, வைராக்கிய சதகம், தீபம், அவிரோத வுந்தியார், கொலை மறுத்தல், முதலிய

நூல்களையும், கண்ணுடைய வள்ளலார் ஒழுவி லொடுக்கத்தையும், எடுத்து வந்து, தரிசநந் தந்து, குமார தேவரை நோக்கி, அப்பா! நாம் உன்னைப் புத்திர னாகக் கொண்டாற்போல, நீயு மிவ் வொரு புத்திரனைக் கொணர்ந்தாய், இப்பிள்ளை, கல்வி கேள்விகளா லமைந்த பக்குவசாலி யாகலால், இத் தோன்றலைக் கொண் "டிந் நூல்களுக்கு உரையியற்றுவித்திடுக" வென்று, தாங் கொணர்ந்த புத்தகங்களைத் தந் தருள, அவற்றைக் குமார தேவர், இரு கையாலும், ஏற்றுக் கண்களி லொற்றிக் கொண்டு, சிதம்பர தேவரிடத்தி லளிக்க, அவரும் கைகளி லேந்திச் சிரத்தில் வைத்தஞ்சலித்து நிற்கக், குமார தேவர் ஆசிரியரை வணங்கி, தேவரீர் இப் பிள்ளையைப் புத்திர னாகக் கடாக்ஷித்தல் வேண்டு மென்ன, ஆசிரியர் நமக்குப் புத்ரன் நீ யிருக்கின்றனை, அவ் வா றுனக்குப் புத்திர னாக விவ் விளவலைக் கொள்க, வென் றருளி, விடைதரக் கொண்டு சிதம்பர சுவாமியுடன் விருத்தாசலத்தி லடைந்தனர்.

இங்கு குமார தேவர், சிதம்பர தேவருக்கு, வாதுளாகம, வீராகமங்களிலும், உத்தர சைவ சித்தாந்தத்திலும், நிருபண மாகி யுள்ள, வீர சாமாநியம், வீர விசேஷம், வீர நிராபார முதலிய இரு பத் தொரு தீக்ஷையையும், வீர சைவ விதி முறையை யநுக்ரஹித்து, இயமாதி அங்க யோகங்களையு முணர்த்தி, ஞானோபதேசம் செய்து, சமாதி கூட்டுவிக்க, அவ் வாறே, தாம் அவற்றை யுள்ளங் கைக் கனி போல, ஐய மாதி முத் தடையு மற நன் குணர்ந்து, ஞாந சமாதி கூடி யிருக்கையில், ஒரு மயில் தோன்றித் தனது சிறகை விரித்துச் சொருபத்தை மறைத்து நிருத்தம் செய்ததைக் குமார தேவரிடத்தில் விண்ணப்பஞ் செய்ய, ஆசிரியர் அந்த ரகசியத்தைப் புலப்படுத்தாமல், சிதம்பர மூர்த்தியை

நோக்கி, உனக்கு உபாசநா மூர்த்தியா யுள்ளது யா தென்ன? மதுரை அங்கயற்கண் அம்மை யெனக் கேட்டு, நம்மை யிங்குப் பெரிய நாயகியார் ஆட் கொண் டுயிர்க் குறுதித் துணையா யிருக்கின்றபடி,நீ, மதுரைக்குச் சென்று அங் கயற்க ணம்மையை யுபாசித்தால், தேவியார் உனக் குறுதித் துணையாய் நின்று, அதனைப் புலப்படுத்து மென்று விடை தரச், சிதம்பர மூர்த்தி, ஆசிரியரை வணங்கித், தேவ ரீரே அதனைத் திரு வுளம் பற்ற லாகாதோ வென, ஆசிரியர் அப்பா! உனக்கு உபாசநா மூர்த்தியா யுள்ள தேவியார் சந்நிதிக்கே போதல் நல மென் றுரைத்தனர்.

குரு வாக்கியந் தவறாமல்,திரு மதுரைக் கெழுந் தருளி நாற் பத் தைந்து நாள் கொண்ட ஒரு மண்டல அளவை யுள் தேவியார், தரிசநந் தந் தருளாவிடில், அங் குள்ள பொற் றாமரைத் தீர்த்தத்தில் தாம் வீழ்ந்து வியூக மாயிடுவ தாக நிச்சயஞ் செய்து கொண்டு, தேவியார், சந்நிதிக்கெதி ரில், நா டோறும் பொற் றாமரையி லாடி, நித்திய நியம முற்று, ஒரு பிடி பச் சறுகும், மூன் று கை கத் தீர்த்தமும், ஒரே வேளை புசிப் பாக உட் கொண்டு, நிஷ்டை சாதித் திருக்கையில், தேவியார் சோதனைக் காரண மாக, சுரமும், கை காற் பிடிப்பும், சிறங்கு முதலிய நோய்களும், சம்ப விக்க, அவற்றால்,மிகவும் வருத்தங்கள் நேரிட்டும், தமது ஊக்கஞ் சோராமலும், அருந் தவம் தவறு படாமலும், நிலைத்துச் சில நாள் செல்லப், பின்பு தம்மால் எழுந்து நிற் கவும், அசையவும், அசக்த ராய்த் தவ றுற்றதையும்; தாம் நின்ற நிலை பெயராமல் அங்கு தரிசநார்த்தம் வருகின்ற வர்களால், அறுகும், நீரும், வருவித்துத் தினந் தோறும் உச்சி

காலத்தி லவற்றைப் புசித்து, அந் நாளளவை வரையில், தமது விரதத்தை நிறைவேற்றி, மீநாக்ஷி யம்மையின் அநுக்கிரஹார்த்தம், கலி வெண்பா வென்னும் ஓர் தமிழ்ப் பிரபந்தம் பாடினர். அது போழ்து தேவியார், திரு வுள மகிழ்ந்து, எதிர் வந்தருளி இவரது சரீரத்தி லுள்ள பிணிகளுடன், மலப் பிணியும், விலகு மாறு மலர்க் கரத்தாற் றடவித், திரு வாய் மலர்ந்தருளி நின்றார். உனது அநுபவத்திற் சொரூபத்தை மயி லாடி மறைக்கின்ற தாவது, இப் பதியின் வடபால் முப் பது யோசனை தூரத்தில் யுத்த புரி யென்று சுப்ர மண்ய க்ஷேத்திரம் ஒன் றுண்டு. அஃது இதற்கு முன் ஆறு தரம் பிரசித்தி யாய் விளங்கி யிருந் திப் போது ஜீரணப்பட்டிருக்கின்றது, இனி ஏழாந் தரம் உன்னாலே ஜீரணோத்தாரண மாகி, நிலை பெற்று விளங்க, வேண்டுவதா யுள்ளது. அத் தல மூர்த்தியே உனக்குக் குரு வடிவா யெழுந்தருளித் தரிசநந் தந்து, மேல் உண்மையை விளக்கும். இக் காரண மாக, அக் கடவுள் உனது நிஷ்டாநுபவத்தில், மயி லுருவாய் வந்து சொரு பத்தை மறைத்த தென்று காண்க. ஆதலால், நீ இது போதே யத்தலத்திற்குச் செல்க வெனத் திரு வுளம் பற்றினர். இவ் வா றருள் பெற்ற, சிதம்பர தேவர் சிவ ஞாந பேற்றை யடையும் வண்ணம், எண்ணிய அடியேனுக்கு ஸ்தல ஜீரணோத்தாரணம் செய்க வென்றோ அருளிச் செய்தீர். தாமே அடியேன் வேண்டுகோளை யநுக்ரஹிக்கலாமே யென்று குறை யிரக்கத், தேவியார் இன்று முதல் நாற்பது திநங்களுள், அத் தலத்து முருகவேளே ஆசிரிய வுருவாய் முன் வந் தருள்புரியுமாதலா, லுனக்கு அவன் அநுபூதி சித்தி யாகும். இவ் வமயம் தவறுபடில், மேலே ஜநந மெடுக்க வரும், அஞ்சே லென வுரைத்து, மறைந் தருளி

னர். அவ் வாறே, சிதம்பர மூர்த்தி, தேவியார் அருட் பிரசாதத்தை மேற்கொண் டடி வணங்கிப் போற்றி யுத்த புரி யென்னுந் திருப் போ ரூரை நோக்கி வட திசை வழிக் கொண்டு வருவா ராயினர். இஃது நிற்க.

அந் நாளில், திருப் போ ரூர் ஆ றுவது முறை ஜீரண முற்றுப் பனங் கா டாகிப் பல வகை கொடிகளாலும், செடிகள், விருக்ஷங்களாலும், அடர்ந்ததா யிருந்தது. அக் காட்டில், ஒரு பெண்பனைச் சாரலில், ஸ்ரீ சுப்ரமண்யம் புற் றிடங் கொண்டு வீற்றிருந்தது. அக் காட்டின் கிழக்கே, சிலர் பயி ரிடுந் தொழிலின ராய், வீடு கட்டிக் கொண் டிருந்தனர். அவ் வூரில் விஸ்தாரம் பனை மரங்க ளுள்ளன வாகையால். சான்றூர்கள் சிலர், அம்மரங்களிற் பனஞ் சாறு, நுங்கு, பழம், கிழங்கு முதலியவையால், ஜீவனஞ் செய்து வந்தனர். அவருள் ஒருவன், அப் பனங் காட்டிடத்தில், ஒரு பெண் பனை மரம் நன்றாய், யுயர்ந் தோங்கி வளர்ந்து ஓலைக் கோர் பாளை யாக அரும்பி விசேஷித்துக் குலைகள் செழித்திருந்ததைக் கண்டு, அம் மரத்தை யடர வூறுங் கொடிகள் சூழ்ந்திருந்ததைக் களைந்து, அம் மரத்தி லேறிப் பாளைகளைச் சிறுக் கறுத்துக் குடங்களைப் புகட்டி, யதனாற் கிடைத்த மதுவின் பயனை ஒரு பொழுது காண விசேஷ பிரயோஜநம் பெற்று, அன்று மாலைப் போழ்தில் வந்து பார்க்க, முன் போலவே அக் கொடிகளால் அது அடரப்பட்டிருந்தது கண்டு, அது களைத் துணித்து, மது பலனைக் கைக்கொண்டனன். அங்ஙனம் நா டோறும் அதிகரித்துப் படர்ந்து சுற்றிக் கொள்ளும் அக் கொடிகளை இரண்டு காலமுங் களைந்து

அம் மரத்திற் குடங் குட மாக மதுவை யவ் வொருவனே கொண்டு போகத் தொடங்கினன். நா டோறும், கொடி களை யறுப்பதில் மிகவும் வருத்த முற்று, அதனை வேறுடன் களைய வெண்ணி, அதற் கேற்ற கருவிகளைக் கொண்டு, சிலருடன் வந்து சுற்றிலு முள்ள புதர்களை வேர் களைந்து வருகையில், அம் மரத்தின் கீழ்த் திசையினின்று, மேற் றிசையி லோங்கிப் படுத்துக் கீழே யுருவி யோடிய மூல வேரைப் பற்றி யரிவாளால் வெட்ட, அங் குள்ள புற்றில் திரு மேனி மறைந் துள்ள ஸ்வயம்புவின் மேல் தாக்கின தால் சிவப்பு உண்டாயிற்று. அதனைக் கண்டு சான்றோன் முதலியோர், துண் ணென அச்சுற்றுத் துடித்து, மூர்ச்சை யாயினர். இவ் வாறு, நோக்கிய பிற னொருவன், அயலி லுள்ள பனைமரங்களி லேறிக் கொண் டிருந்தவர்கட்குத் தெரிவிக்க, அவர்கள் பொள் ளென வந்து மூர்ச்சை யுற்ற வர்களைச் சீதோபசாரஞ் செய்து, பெண் பனையின் அடியைப் பற்றி நன்கு சோதித்துப் பார்க்க, அப் புற்றி னுட் ஸ்வயம்புவைக் கண்டு, அஞ்சிப் பக்தி மேலிட்டு முருகக் கடவுளைத் தோத்திரம் செய்ய, மூர்ச்சை யடைந்து கிடந்தவர்கள், தெளிந் தெழுந்து போற்றினர். அது முத லாக, அச் சான்றோர் தமக்குள் ஏணிக் கோர் பெரிய பணம் ஏற்பாடு செய்து சுவாமிக்குக் கூரைக் கட்டிட மாக ஓர் சிற் றாலயம் புரிவித்து அவ் வூர்க் குடிகளுடன் சேர்ந்து, சுவாமிக்குப் பூஜை முதலியவை நடத்த ஆதி சைவ ரொருவரை நியமித்தனர். அவர் முத னாள் ஸ்வாமிக்குத் திருமஞ்சன முதலியன செய்து, கற்பூர ஆராதனை செய்கை யில், அவ்வூரும், குற்றாலயமும், அந் நிலையே வே றோர் காரண மின்றிப் பற்றிக்கொண்டது கண்டு, அவ் வாதி

சைவ ரஞ்சி யோடிப் போயினர். ஊராரும், மிகவும் பயந் திருந்தனர். அது காரண மாக, சுவாமிக்குச் சின் ஞள் பூசை முதலியவு மில்லாம லிருந்தன.

இப்பால், சிதம்பர சுவாமிகள், அங்கயற்கண் அம்மை யருளியதை விண்ணப்பம் செய்ய நினைந்து, மதுரையினின் றும் விருத்தாசலத்திற்கு வந்து பார்க்க, அவ் வமயம் குமார தேவர் நிஷ்டையி லிருந்தபடியால், நிட்டை தெளியக் காலம் நீடிக்கும். அது காறு மிங் கிருந்து சேவித்துச் சொல்லிக் கொள்ள வேண்டின், தேவியார் கட்டளையை நடத்தத் தாமதிக்கு மென்று கருதி (அகண்டாகார மய மாகிச் சுட் டிறந்த சுகாதீத மாகி, யுல குயிர் பர மென்று வேறு கருதற் கேலாத சச்சிதாநந்த சம்பூர்ண ஜோதியின் வசத்த ராய் நின்ற நிலே பெயராது) ஆசிரியரை வல முற வந்து வணங்கிப், புற விடை கொண்டு, வட திசை வரு கையிற், பொம்மைய பாளைய மென்னும் ஊரினிற் சிவாநு பூதிச் செல்வ ராகியும், சதுரக் கள்ளிப் பாலே தம துண வாக வுண்பவரும், சிதம்பர சுவாமிகளது அதிதீவிர பக்குவ தசையில், கைவந்த அநுபவ சித்தியைக் கேள்வி யுற்று, அவரைப் பார்க்க விருப்பங் கொண்டிருந்தவரு மாகிய, பாலைய சுவாமிகளைத் தாமுங் காணு மாறு அவர் வசித் திருக்கும் வீதி வழியே செல்லாநிற்க, அச் சமயம், வைகறை யாகலால், பாலைய சுவாமிகள் குளக் கரையி லிருந் தெதிராய் வர, இருவரும், நோக்கி யளவளாவி வசித்துக் கொண்டு, திரு மடத்தின் தெருத் திண்ணையி லெழுந்தருளியிருந்து, தந்த தாவநம் செய்து கொண்டே எட்டு நாள் வரை யிராப் பகல் விடாமற் சுபாநு பவத்தை முன்னிட்ட நிலைகளைப் பேசிக் கொண்டிருந்து, ஒன்பதா

நா ளுதய காலத்தில், மேட்டு மடையில், திரும்பி வாய் பூசிக் கொண்டு, சிவார்ச்சனை முடித்து, அவருடன் புசித்து, விடை கொண்டு வந்தனர். சின்னாள் பின்பு, ஸ்ரீ மயிலாசல மென்னும் க்ஷேத்திரத்தில் தமது குரு மூர்த்தி யாகிய ஸ்ரீ சுப்ரமண்ய சந்நிதியில், பாலைய சுவாமிகள் நிரதிசயாநந்த பூரண ராயினர்.

கிளிய னூர் வழியே வரும் சிதம்பர தேவர், அவ் வூர்ச் சோலையிற் பா கோடிக் கொண்டிருந்த செங் குந்தரைப் புசிக் கந்நங் கேட்க, அவர்க ளன்ன மிடுதற்குச் சற்று நேரந் தாமதிக்கு மென அங் கிருந்து தமது நிலையைக் குறிப்பா லுணர்ந்த, ஒரு விதந்து வாகிய மூதாட்டி, யிரு வினை யொப்பு மலபரிபாகம் நேரிட் டிருந்தா ளாகையாற், சுவாமிகளைக் கண்டவுடன் பத்தி மேலிட்டு வலம் வந்து, பணிந் துபசரித்துத், தந்த கேழ்வரகா லாய புற்கை யமு தைப் புசித்து, அம் மூதாட்டியைக் கிருபா நோக்கம் செய்து, நடக்கப் பின் தொடர்ந்த அம்மையை நோக்கித், தாயே! நீ தொடர்வது யாது கருதி யென வினவத், தேவ ரீர்க்கு அடியாள் பணிவிடை புரிந்து புநிதை யாக வேண்டி னேன். அது பாலித் தருளல் வேண்டு மென்று போற்றக் கேட்டு, நாம் திருப் போரூர் என்னும் க்ஷேத்திரத்தை ஜீரணோத்தாரணம் செய்க வென்று மதுரை யங்கையற்க ணம்மை யருளிய வாறு, அப் பதிக்குச் செல்லாநின்றோம். இன்னும் ஓ ராண் டிருந்து நம்பால் வருக வென் றநுஜ்ஞை செய்து, மலை, கான், யா றுகள் பிற்படக் கடந்து, திருப் போரு ராகிய பனங் காட்டி லணுகி, யங்கு வள்ளைப் பூடால் நிறைந்த ஓ ரோடையைக் கண்ணுற்று, நியமங்களை முற்றி, அவ் வழி வந்தோரை இங்கு கோயி லிருக்கின்றதா

என்ன; சுவாமி! மலைச் சாரலின் கீழ்ப்பால் வேம்படி விநாயகர் கோயி லொன் றுள்ள தெனச் சிதம்பர தேவர், பிள்ளையார் சந்நிதிக்கு வந்திருந்து, அன்று முத லிரண்டு நாள் வரை அத் தீர்த்தத்தின் மூழ்கிச் சிவ பூஜை முதலிய வற்றை முடித்து வசித்தனர். மூன்றா நாள் மாலைப் போதில், அத் தீர்த்தத்திற்கு வருகையிற், கள்வர் சிலர் சுவாமிக ளணிந் துள்ள ஆபரணங்களைப் பறித்துக் கொண்டு போகப், பதுக்கி யிருந்து வெளிப்பட்ட மாத் திரத்தில், அவர்களுக்குக் கண்கள் தெரியாமற் போய் நடுங்கி நிற்க, நீங்கள் யா ரென்று சுவாமிகள் கேட்ட வளவில், தாங்கள் இன்னா ரென்றும், செய்ய வந்த காரியம் இன்ன வென்றும் சொன்னவுடன், தாம் பூண் டிருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்தலும், அவர்கள் பெற் றுக் கொள்ளாமல், மிகவும் அச்ச முற்று, நமஸ்கரித்துத் தேவரீரது தெய்வத் தன்மையைச் சற்றும் அறியாத பாபிக ளாய்க் கண் ணொளி யிழந்தோம், க்ஷமித்துக் கடாக்ஷிக்க வேண்டு மென முறையிட் டோலமிடச், சுவாமிகள், கள்வர்களே! இழந்த கண்கள் வரக் கூடுமோ வென நாங் கள் அறி வின்றிச் செய்த குற்றங்களைப் பொறுத்து எவ் வாற்றானும் இப் புலைஞ ரான எங்கட்குக் கண்கள் தெரி யும்படி கிருபை செய்ய வேண்டு மென்று பிரார்த்திக்க, நீங்கள் இது காறும் களவாற் சம்பாதித்த பொருள்களுள், உமது ஜீவனம்சத்திற்கு சென்றது போக, மிகையாய், நிற்கும் பொருள்களை, முருகக் கடவுளுக்கு அற்பனமாக்க உடன் படுவீ ராயின், கண்கள் விளங்கு மாறு சுவாமி கடாக்ஷிக்கு மென்றதைக் கேட்டுத், தத்தஞ் செய்தோ மென்று பாதத்தில் வீழ்ந்து தெண்டனிட, அக் கணமே அக் கள்வர் யாவருக்கும் கண்கள் நன்றாய்த் தெரிய சுவாமி

கள் அப் பொருளைக் கொண்டு வருக வெனக் கட்டளை யிட்டு, வள்ளையா ரோடையில், நீ ராடி நித்திய நியமங்கள் புரிந்து, அப் பனங் காட்டை நோக்கி வருதலும், அதன் நடுவில், ஒரு பெண் பனை மூலத்தில், ஸ்ரீ சுப்ரமண்யம் ஸ்வயம்பு வாய் முளைத் திருந் தருளியதைப் பார்த்து, அன்று தொடங்கிச் சுவாமி சந்நிதியிற் சரண சம்பந்த மில்லாமல், தரிசந மாத்திரம் செய்து கொண்டு, பிள்ளையார் கோயிலில் வசிப்பவ ராயிருந்தனர். அங்ஙன மிருக்க, ஓர் திநம் முருகக் கடவுள் குமார தேவரைப் போ லெழுந் தருளக் கண்டு, சிதம்பர சுவாமிகள் அச்ச முற்று, விரைந் தோடிச் சென்று, சரணஞ் செய்து நிற்க, ஆசாரியர் நோக்கி நீ இவண் வசிப்பது என்னை யென, அங் கயற்க ணம்மை யருளியதை விண்ணப்பஞ் செய்ய, அவண் யா மிருவரும் முருகக் கடவுளைத் தரிசிப்போம் வருக வென்று முன்னும் பின்னு மாய்த் தொடர்ந் தணுகும் போது, சுவாமிகள் ஆசாரியரை நோக்கி ஆதியில் இவ் வாலயம் எத் துணை விலாசமும் தன்மையு மாகி யிருந்த தெனக் கேட்டனர். அதற்கு, ஆசிரியர் சிதம்பர சுவாமிக்கு நெற் றியில் திரு வெண் நீறு சாத்தி நேத்திரத்தாற் பரிசித்து, ஆலய அளவும், தீர்த்தம், திரு வீதி முதலியவையும், பார்ப்பா யென்ன, அவ் வாறு பார்க்துங்கால், ஆலயம், கெற்ப கிருஹம், அந்தராளம், மஹா மண்டபம், சர்வ வாத்திய மண்டபம், தேவி யார் சந்நிதி, மடைப்ப ளாகம், திரு மதில், கோபுர வாயில், மயில் மண்டபம், துஜஸ் தம்பம், பலி பீடம், பிராகார வீதி, மாட வீதி, மடாலயம், தீர்த்த முதலிய யாவும், சிற்ப நூ லளவைப்படி யநந்த விசித்திர மாகவும், சிறப் பாகவும், விளங்கக் கண்டனர்.

ஆசிரியர் அவ் வாலயத்துட் புகுந்து, முருகக் கடவுள் சந்நிதியிற் சிதம்பர தேவர்க்கு அநுக்ரஹித்து, ஹர ஹர வென் றருளிய மஹா வாக்கியத்துடன் மூல ஸ்தாநத்திற் ஸ்வயம்பு வாய் வீற்றிருக்கும் தம்மைத் தாமே நோக்கி, யஞ்சலி முகிழ்த்தா ராயினர். அப் போழ்து, முருகக் கடவு ளாகிய ஆசிரியரது திரு வடிகளை யெதி ராகக் கொண்டு, வடதிசை யாக சாஷ்டாங்க மாய்ச் சரணம் புரிந் தெழு வதற்கு முன், ஆசிரிய வுருவாய் வந்தருளிய மூர்த்தி திரு வுருக் கரந்தனர். சிதம்பர தேவர், எழுந்து பார்க்கையிற் சுவாமி பனை மர மூலத்திற் பழைய படியே யிருக்க நோக்கி யளவிலாத ஆநந்த வசத்தரா யதிசயித்தனர்.

ஸ்ரீ சுப்ரமண்யமே, சிதம்பர சுவாமிகளது ஆசிரிய ராகிய குமார தேவர் வடிவா யெழுந்தருளி, யநுக்ரஹம் புரிந் தாட் கொண்டபடியால், சுவாமியே தமக்குக் குரு மூர்த்த மாக நின்றது. அந் நாள் தொடங்கிச் சரண சம்பந் தம் நடந்து விடுகின்றது. பின்பு, கலி வெண்பாவால் நெஞ்சு விடு தூது என்னும் ஓர் பிரபந்த மியற்றி, விருத்த கிரியின்கண் குமார தேவர்க் கனுப்பி விநாயகர் கோயிலில் வசித்திருந்தனர். அதனை யறிந்த, ஒரு குலாலன் பிள்ளைகள் அவ் வாலயத்தின் வட்பா லுள்ள கண்ணுவப் பேடென்னு மூர்க் கருகிற் கீழ்ப்பால் நெடு நா ளாய் நேத்திரந் தெரியா திருந்த தமது தந்தையைப் பார்த்து ஐயா! வேம்படி விநா கர் கோயிலில், ஓர் பெரியவ ரெழுந்தருளி யிருக்கின் றனர். அவரைச் சரண் புகின் உமக்குக் கண் தெரியும்படி செய் தருளுவ ரென்ன, வயதால் முதிர்ந்த அக் குலாலன், மைந்தர் சொல்லை நம்பி, சுவாமிக ளிடத்திற் சென் று

பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, பக்தி பூர்வ மாக வேண்டு கோள் செய்வதற்கு, சுவாமிகள் ஸ்ரீ சுப்ரமண்யம் நீ யெண்ணியாங்குக் கடாக்ஷித் தருளு மென்று சிந்தித்த வுடன், அவனுக்குக் கண்க ளிரண்டும் தெரிந்தன. அக் குலாலன், தேவரீர் இத் தலத்தினின்றும் அடியேன் சிறு குடிலின்கண் ஒரு புளிய மர மிருக்கின்றது, அங் கெழுந் தருளி வசிக்கலா மென் றுபசரித்துப் பிரார்த்திக்க, அன்று தொட்டு அம் மர நிழலில் வந்து அக்நி வளர்த்துக் கொண்டு வீற்றிருந்தனர். மற் றோர் நாள், திருப் போருரை யடுத்த வட கிழக்கி லுள்ள, கால வாக்க மென்னு மூரில் ஒரு முடவன் சுவாமிகளைத் தரிசித்துச் சரண மடைந்து * நெகிடியிற் பூத்த திரு நீ றருளப் பெற் றுக் கொண்டு, பவித்திர னாகினன். இம் மகிமையைக் கேட்ட வநேகர் தம்மை வருத்திய வெப்ப நோய், சூலை, வயிற்று வலி, மஹோதரம், காமாலை, குடல் வாதம், குட்டம், பெரும் பாண்டு, தலை வலி முதலிய பெரு நோய் களை நிவிர்த்தி செய்து கொள்ள வேண்டி யங்கு வந்து வழிபட்டு வணங்கிச் சுவாமிகள் அருளிய நெகிடித் திரு நீற்று மருந்து பெற்று, அவ் வவ் வியாதிகளி னின்றும் நீங்கிச் சுக முற்றனர். இப் பான்மையோராற் சில காணிக் கைகள் சேர்ந்தன. அவற்றுடன், முன் சொன்ன கள்வர் கள் கொணர்ந்த திரவிய முதலியவற்றைச் சுவாமிகளிடத் திற் செலுத்தித், தாமும் அடிமையா யேவற் பணி செய்து நின்றனர்.

அங் குள்ள குடித்தனக்காரர்களும், சான்றோர்களும், இம் மகிமையைக் கேள்வியுற்று வந்து பிரதக்ஷிண நமஸ்

* ஞெகிழி - நெகிடி என மருவியது.

காரஞ் செய், தெதிர் நின்று, இவ் வூர்ப் பனங் காட்டில் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயம் சீரண மாகி, சுயம்பு வாகிய சுவாமி மாத்திர மிருக்கின்றது. அதற்குப் பூஜை புரிந்து கற்பூர ஆராதனை செய்யின் ஊர் பற்றிக் கொள்கின்றது. அவ் வா றினி நேரிடா வண்ணம் ஆலய ஜீரணோத்தாரணம் செய்து நித்திய பூஜை முதலியவும் நடத்துவித்து இவ் வெளியோங்களையும் காத்தல் வேண்டு மெனக் குறை யிரப்பக், கருத் திசைந்து, நாம் பரதேசி யானதால் நம்மால் ஆவ தென்ன அள வற்ற நிதி வெண்டுமே யாயினும் நுமது வேண்டுகோளின்படி அவைக்கு முயற்சி புரியத் தொடங்கினால், நீவிர் செய்யு முதவி யா தென விளுவ எமது பதி யாகிய இக் கிராமத்தை ஆண்டவர் பொருட் டுத் தந்திடுவது மன்றிக், கடவுளுக்கு வேண்டிய ஏவல்க ளனைத்தும் யாங்களே செய்கின்றோ மென் றுறுதியா யுரைத்திட, அங்ஙனம், இது போழ்தே செய்யத் தொடங்கு வீ ராயின், திருப் பணி முதலியவற்றை நடத்தலா மென வுரைத் தருளினர். அக் கணமே ஊரார் செப்பேட்டில் வரைந்து தத்தஞ் செய்து கொடுத்துச் சுவாமிக ளநுஞ்ஞை யின்படி நடந்துவரத் தொடங்கினர்.

அன்றோ ருதியாலும், தரிசனார்த்தம் வந்தவர்கள் உதவியாலும், ஆலயத் திருப்பணியை நடத்த வேண்டிக் கற்பக் கிருஹம் செய்யத் தொடங்கிய போது, முன்னர்க் கூறிய கிளிய னூர்ப் பதியின்கண் ணிருந்த மூதாட்டி, சுவாமிகள் கட்டளையின்படி (காணிகளை சேகரித்துக் கொண்டு) இங்கு வர வேண்டு மென் றன்பு மிகுந்து தனக்குப் பொருள் வருவா யின்மையால் அங் குள்ள செங் குந்தர் நூ லிழைக்கையிலும், பாகோடுகையிலும்,

புடவைகள் நெய்வதிலும், நிலத்திற் சிந்துகின்ற நுண்ணூல்களை நாடோறு மெடுத்துச் சேர்த்துச் சிவத் தியானத்துடன் கோவை செய்து பின் படு வாக்கி அந் நூற் படுவுகளைப் புடவை நெய்வித்து விற்றதில், ஒரு பொன் கிடைத்தது. ஓ ராண்டு கழித்து, அதனைக் கைக்கொண் டங்கிருந்து திருப் போரூர் சேர்ந்து சுவாமிகள் வீற்றிருக்கும் ஆசிரமந் தேடி வந்து தரிசனை பெற்று, அப் பொன் ஒன்றையும், குரு காணிக்கை யாக வைத்து வலம் வந்து நமஸ்கரிக்கச் சுவாமிகள் நோக்கி, யந் நாளளவும் இப் பெண்பால் மெய் வருந்திச் சம்பாதித்துக் கொணர்ந்து செலுத்திய பே ரன்பினை யுள் ளுவந்து, அப் பொன்னைத் தமது திருக் கையி லேந்திச் சென்னியிலும், நெற்றியிலும், கண்ணிலும், தோளிலும், மார்பிலும், வைத்து வைத்து ஆநந்தத்தால் ஆடி அதனைக் கர்பக் கிருஹத்தின் சிகர வேலைக் குபயோகித்தனர். அத் தருணம் தரிசநார்த்தம் அங்கு வந்திருந்த சென்னைப் பாளையத்தான் செட்டியா ரென்பவர் அந்த அற்புதத்தைக் கண்டு இரண்டு பை வராகன் கொண்டு வந்து சுவாமிகளுக்கு முன்னே வைத்து வணங்க, அந் நிதியின் மேல் கண்ணோக்கஞ் செலுத்தாது எட்டு நாளைக்குப் பின்னர் ஒரு வா றுள்ளந் திரும்பி யிந் நிதியைத் திருப் பணிக் குபயோகித்துக் கொண்மின் றேவலோர்க்குக் கட்டளையிட்டனர். அன்றியும், நாடோறுந் தரிசநத்திற்கு வருகின்றவர்கள் செலுத்துங் காணிக்கைக ளாகிய நிதி யனைத்தும் அவ் வவர்களைக் கொண்டே சந்நிதாநத்திற் சேர்த்து, கெற்பக் கிருஹம், அந்த ராளம், மகா மண்டபம், மயில் மண்டபம், துஜ ஸ்தம்பம், பலி பீடம் இவற்றை நிறைவேற்றுவித்து மந்திர விசேட மான ஸ்தம்பநமு மியற்றி யந்திரக் கும்பாபி

ஷேக முதலியவும் நிறைவுறுத்து நித்திய பூஜை ஆராதனை யை நடத்திவந்தனர்.

திருப் போரூர் தலத்தில் வசித்து பிரகிர்தி யுபாதை களை விசர்ச்சநஞ் செய்தது தகுதியற் றதென்று கருதித் தாம் வீற்றிருந்த புளிய மரத்தின் தென் கிழக்கில் தவஞ் செய் வதற் கிசை வுள்ள ஓர் பரிணும மியற்ற வெண்ணிச் சரஸ் வதி கூடம் பூசை யீடம் ஒடுக்க, உறையுள் இவற்றை நிருமித்து அதன் வடபா லிருந்த சிறு குளத்தைத் றடாக மாக்கி, அதன் மேற்பாங்கில் மண் சுவ ரெழுப்பித் தட் டோடு மேய்ந்த ஓர் குற் றூலாலயம் கட்டுவித் ததில் விநாயகப் பிரதிட்டையும், வேலாயுதப் பிரதிட்டையும், புரித்து பிள்ளையார்க்குச் சுந்தர விநாயக ரெனத் திருப் பெயர் சாத்தித், தடாகத்திற்கு வேலாயுத தீர்த்த மெனப் பெயர் கூறினர். முன்னர் ஸ்ரீ சுப்ரமண்ய மூர்த்தியாலயத் திருப்பணி தொடங்கின நாள் தொட்டுப் திருப் போரூர்ச் சந்நிதி முறை யெனப் பெய ரிட்ட ஞாந நூல் பஞ்சாதி கார விளக்க முதலியன நிலை பெற வியற்றி, ஆதியிற் குமார தேவர் முன் னிலையிற் சாந்த லிங்க சுவாமிகள் உரை யிடுக வென் றருளிய வைராக்கிய சதகம் முதலிய எல்லா நூல்களுக்கும், விருத்தி யுரையுஞ், செய்து பாதிரி யம்மையார்க்கு அநுக்ரஹித்து ஞாநம்மை யெனத் தீக்ஷா நாமந் தரித்துக் கட்டளையிட்டபடி, அவர் பரிணுமத்தின் கிழ்ப்புற மார்க்கத்திற்கு வட பாரிசத்திருந்த கயத்தைப் பெரிய வாவி யாக்கி,யதற்கு வற்ரு நீர் குள மெனப் பெயர் புனைந்து, அதன் கரை சார்பில், நந்தவநம் தண்ணீர்ப் பந்தல், இத் திருப் பணிகள் செய்து கொண்டு,அதன் வட கரையில், ஆத்மார்த்த மாகச் சிவ லிங்க பிரதிஷ்டை செய்து, பூசித்திருந்தனர். ஒரு நாள், ஞாநம்மை சிதம்பர

தேவரிடத்தில் வந்து, நமஸ்கரித்து மாணிக்க வாசக சுவாமிகள் ஓதி யருளிய திரு வாசகத்திற் "புணர்ப்ப தொக்க, வெந்தை யென்னை" என முத லெடுத்த பாசுரத் திற்குப் பொரு ளருளிச் செய்தல் வேண்டு மென்று விண் ணப்பஞ் செய்து, பன் னாள் திநந் தோறும் பிரார்த்தித்து வருகையில், ஒரு நா ளிறக்க முற்று, அப் பனுவற்குப் பொரு ளுரைக்க, அஃது அள விறந்த ஏட்டி லெழுத இடங் கொடுத்து வளர்ந்து வருகையில், முருகக் கடவுள் ஆசிரிய மூர்த்த மாக வந்து சேவை யருளி, யிப்பனுவல் சொல்லிய திரு வாத வூரரே, திரு வாசகத்திற்குப் பொருள் சொல்லாமற் சிற் சபையே யதற்குப் பொரு ளெனக் காட்டி யிருக்கவும், இப் போ துரையிட் டடங்குமோ வெனத் திரு வாய் மலர்ந்தருளலும், சிதம்பர தேவர் பெண்பால் வேண்டு கோளால் இயந்தவுரை செய்யத் தொடங்கிய தென் றிறைஞ்சினர். ஆயின், அவ் வோர் பனுவற்குப் பத வுரை யாகச் சொல்க வென்று கூறிக், கடவுள் மறைந்தருளினர். ஆதலால், அவ் வோர் பனு வற்கு மாத்திரம், சிதம்பர சுவாமிகள் பத வுரை யருளிச் செய்ய கேள்வியுற்று, அம்மை ஆநந்த மடைந்து, அதன் பின்னர், நெடு நா ளிருந்து, ஓர் ஏகாலிப் பெண்ணுக்கு அநுக்ரஹஞ் செய்து, ஆசிரியர் கட்டளை மேற் கொண்டு கிளிய னூர்ப் பாதிரி யென்னும் தலத்தை நண்ணி, நிஷ்டா நுபவ மெனப் பெயர் பெற்ற தோர் சாத்திர மியற்றி, நிஷ்டாநுபூதியில் ஒடுக்க முற்றனர். சின்னா ளான பின் னர், ஏகாலி யம்மையும் ஒடுக்க மாயினர். இவ் விருவர் சமாதிகளும், அவ் வூரில் இந் நாளவும் ஆராதிக்கப்பட் டுள்ளன.

இங்கு சிதம்பர தேவர், அநந்த மான்மியங்களுடன் ஐம்பதாண்டிற்குக் குறையாமல் வீற்றிருக்கையிற், சென்னைப் பட்டினத்திற்குப் பத்து நாழிகை வழிச் சேய்மையில். மேற்றிசையிலுள்ள பூவிருந்த வல்லி யென்னும் ஊருக் குட்கிடை யான கோவூரில், துளுவ வேளாளர் மரபிற் றோன்றிய, திரி புராந்தக முதலி யென்பவர் புத்திரரும் பம்மல் வில்லராய முதலி தௌகித்திரரு மாகிய, சிவ சங்கரர் என்னும் பெய ருள்ள ஓர் சிறு பிள்ளையை யிளமைப் பருவம் மேற்படுவதற்கு முன்னரே, திருப் போரூர் முருகக் கடவுள் ஆட் கொண் டருளிய வாறு, அவர் சென்னியிற் சடை யுற்பத்தி யாகி மயக்க மடைந்தவர் போலவும், பித்து உடையர் போலவும், தெய்வங் கோட்பட்டார் போலவும், ஓடியும், பாடியும், கூத் தாடியும் தீர்த்தங்களில் மூழ்கியும். விபூதி யுத் தூளநஞ் செய்தும், இவ் வாறு கோலாகல மாக விருக்க, அவர் தந்தை அவற்றி னுண்மையை யறியாமல் ஆயுள் வேதியரைக் கொண்டு மணி மந்திர ஔஷத முதலியவற்றைப் பிரயோகித்தும், அவை நீங்காமையால், அக் காலத்தில், ஜீரணோத்தார மாகி விளங்கி யுள்ள திருப் போரூர்ச் சந்நிதியின் கடவுட் டன்மையையும், சிதம்பர தேவர் மகாத்மியங்களையும், பலரும் சொல்லக் கேள்வி யுற்றுத், தமது புத்திரருடன் திருப் போரு ரடைந்து சுவாமி தரிசநம் செய்து, இந் நியமத்திற் சின் னாள் ஒழுகியும் அவை நீங்கா திருந்தமையாற், சிதம்பர தேவரிடத்திற்குச் சென்று, வலம் வந்து பணிந்தஞ்சலி செய்து, புத்திரனை யெதிரிற் கிடத்தி, சுவாமிகளே! இக் குழந்தைக்கு நேரிட்ட பிணியை நிவர்த்தித் தாளல் வேண்டு மென்று வருந்தி முறையிட, அப் பிள்ளையின் குறிப்பை யுள்ளுணர்ந்து

தந்தையை நோக்கி, அப்பா, இப் பிள்ளையை யெடுத்துக் கொண்டு சந்நிதிக்குச் சென்றால், ஆறு முகம் துணை செய்யு மென் றருளிச் செய்ய, அவ் வண்ணம் தந்தை குழந்தை யுடன் அங் கடைந்து, அபிஷேகம் முதலியவை செய்வித்து கர்ப்பூராராதனை செய்யும்போது, முருகக் கடவுளைத் தோத் திரஞ் செய்ய, வந்நிலையில் அங் கிருந்தவருள் ஓர் சிறுவன் பேரில் கடவுள் ஆவேச மாக இக் குழந்தையை நா மாட் கொண்டோ மாதலால், உனது பிள்ளை யன்று, நமது பிள்ளை யாகு, மிப் பிள்ளையை நமது சந்நிதானத்தில் விட் டிடக் கடவை யெனக் கட்டளையிட, அது கேட்டவுடன் மனங் களித்துத் தந்தை புத்திரரைச் சிதம்பர சுவாமிக ளிடத்தில் ஒப்புவித்து, விடைபெற்று நீங்கின பின்பு, வீர சைவ விதிப்படி சிவ லிங்க தாரண முதலியவற்றை யநுக் ரஹித்துச், சிவ சங்கிரத் தம்பிரான் எனப் பெயர் தந்து, ஓர் திரு நீற்றுப் பையும், வேலாயுதமும், ஓர் தாம்பாள மும் பிள்ளை கையிற் கொடுத்துக், குழந்தாய் நீ யின்று தொட்டு ஆலயத்திற் சென்று நின்று பிச்சை யேற்றுத் திருப் பணிகளை நடத்தி வருக வென்று கட்டளையிடப், பிள்ளை சுவாமி! அடியேன் சிறியன், ஒன்றும் எனக்குத் தெரியாதே யென விண்ணப்பஞ் செய்தலும், சிதம்பர தேவர், அப்பா! அங்கு வருவோர்களுக்கு ஆறு முகம் துணை யென்று திரு நீறு தருவா யாயின் திருப் பணி தானே நிறைவேறும், அது செய்க என்று விடை யளிக்க அதனை மேற்கொண்டு ஆலயத்திற் சென்று இருந் திடை விடாமல் முயன்று திருப் பணிகளை யும், பிரமோற்சவம் முதலிய சிறப்புக்களையும், நடத்தி வந்தனர்.

பரிணமைத்துட் பூஜா மடத்தின் மேல் பாற் கூடத் தொடுக்க வுறை யுள் வழியாகச் சுரங்கம் செய்வித்து, அதற்

குத் தென்பால் சமாதி உள்ளறை கட்டுவித்து, அதில் நா டோறும் சுவாமிகள் நிட்டை கூடியிருந்தது. சின்னாள் பின்னர், இடப ரவி விசாக பௌர்ணமியில், தாம் சமாதியில், நிரதிசயானந்த பரிபூரண நிலையிற் கலவாமல் கலந்து நிற்கும் செவ்வி வருவ துணர்ந்து, அதற்கு முன்னாளாகிய சுவாதி நக்ஷத்திரத்திற் சிவ சங்கர தேவரை யழைத் தருளி அப்பா! இது முத லினி ஆண்டு தோறும் இச் சுவாதி நாளி லிங்கு மகேசுவர பூஜை செய்வித்து, மறு நா ளாகிய விசாகத்தில், ஸ்ரீ சுப்ரமண்ய மூர்த்திக்கு மகாபிஷேகம் நடத்தி, சுவாமி திரு முக மண்டல வுயரப் பிரமாணம் திருப்பா லாடையில், சுத்தாந்நமும், பருப்பு, நெய், பால், தயிர், பதார்த்த பக்ஷண பல வர்க்கங்களும் படைத்து, நிவேதித்து, ஆராதித்துத் தரிசித்து வரக் கடவை யென்றும், மூன்று நாள் இத் தல விநாயக ராகிய வேம்படி விக்நேசுவரருக்கு, அபிஷேகம் நடத்தி, ஆண்டு தோறும் வைசாக பௌர்ணமியில், ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி மகாபிஷேக முதலிய சிறப்புக்கள் நிர்விக்ந மாக நிறை வேறும் பொருட்டு, நாம் பிரார்த்தனை செய்து கொண்டபடி, ஆயிரக் தெட்டுத் தேங்காய்களுடன் மகா நைவேத்திய முதலியவும், நிறைவேற்றக் கடவை யென்றும், அது தொடங்கிப் பிரணவ மலைத் தியாக கைலாச நாதர் கோயில் முதலிய சந்நிதிகட்கும் முறைப்படி யபிஷேகாதிகள் செய்வித்துத் தரிசநம் செய்து, வரக் கடவை யென்றங், கட்டளை பணித்து, அன்று மகேசுவர பூஜையை நடத்திக் காட்டி, மறு நாள் வைசாக பௌர்ணமி யாதலால், மாணுக்கரை ஆலயத்திற் கனுப்புதலும், மகாபிஷேக முதலியவற்றைத்

தமது கருத்தின்படி நடத்த அவ ரவ் வாறு அங்கு நண்ணி, அச் சிறப்புகளை நடத்திக் கொண்டிருக்கப் பரிணாமத்தில் சுவாமிகள் வேலாயுத தீர்த்தத்தின் மூழ்கிச், சிவ பூஜை ஆராதனைகளை முடித்து ஒடுக்க வுறையுளின்கண் ணிஷ்டை கூடி யிருந்தது. இது நிற்க,

ஆன்மாக்களுக்கு நினைக்க முத்தி தருவதாய், முன்னோர் காலத்தில் பரம சிவமே அழற் பிழம் பாய் வளர்ந் தோங்கிப் பின் யுகங்கட்குத் தக்க வாறு மலை வடிவாய் விளங்கி யிருக்கின்ற, திரு வண்ணா மலையிற் சோணாசல தேவர் என்பவர், தமக்கு அருணகிரி மூர்த்தியே குரு வாய் வந்தநுக் கிரகிக்கப் பெறல் வேண்டு மென்று வைராக்கிய விரத மேற் கொண்டு முப் பதாவது வயது தொடங்கித் தொண் ணூறு வய தாகு மளவும் நியமந் தவறுமற் கிரி பிரதக்ஷணஞ் செய்து வருகின்றவர், ஓர் தினத்தில் அடி யண்ணாமலை கோயிற் புறத்து வரும் போது, சிவ பெருமான் செயலால் தாக மிகுந்து மூர்ச்சை யாயிட, அண்ணாமலையார் ஓர் ஆதி சைவ ராய்க் கலயத்திற் றண்ணீர் கொண்டு வந்து மூர்ச்சை தெளிவித்து, நீ இத் தீர்த்தத்தை யுண்டு சோபந் தவிர்த்தி யெனலும், அடியேன் அறுப தாண் டளவாய் அண்ணா மலையார் குரு வடி வாய் வந்தருளல் வேண்டு மெனும் விரதத்தாற் கிரி வலம் வருகின் றேன். அது கைகூடு முன்னர், ஜல பானம் செய்யத் தக்க தில்லை யென் றுறுதியா யுரைத்து மறுக்க, அங்ஙனங் கேட்ட ஆதி சைவ வேதியர், கலி யுகத்தில் அண்ணாமலையார் குரு மூர்த்த மாக வந்து அருளிச் செய்வ திய லாது ஆயினும் இத் தலத்திற்குக் குண திசைக் கடற் கரைச் சாரலில், ஸ்ரீ பிரணவ சைலம் புறஞ் சூழ்ந் துள்ள

யுத்த புரி யென ஓர் புண்ய தல முள்ளது. அதில் சிதம்பர தேவ ரென் றொரு பெரியவ ருளர். அவர் நாளது திங்கள் விசாக நாட் பௌர்ணமியிற் பூரண தசை யடைய வுள் ளார். அதற்குள், அங்குச் சேர்வை யாயின், அவரால் கோறியபடி குரு வுப தேசம் கிடைக்கு மென்று கூறி மறைந்திடச், சோணாசல தேவர் இக் கண்ட வடிவம் சிவ பிரானே யென் றுணர்ந்து தியானித்து ஜல பானம் செய்து, அந் நிலையே தாழ்க்காமல் வழிக் கொண்டு, மலை, காடு, யா றுள்ளன கடந்து, திருப் போரூரில் விரைந்து வந்து (இங்ஙனம் நடந்த வாறு ஞான நோக்கா லறிந்து, தமது வரவு பார்த்திருந்த சிதம்பர சுவாமியைத் தேடித் தரிசித்து வலம் வந்து சரணஞ் செய்யச், சுவாமி நோக்கி நீவிர் யாவ ரென வினவலும் சோணாசல தேவர்.

நேரிசை வெண்பா.

எடுத்தசன னங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்துவளர்
பன்னக ணைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதா
மன்னு சிதம்பரதே வா.

நெடி லடி விருத்தம்.

நவகுண முக்கு றும்பு நவைகண்மற் றனைத்துந் தீர்ந்து
பவகுணஞ் சற்றுந் தாக்காப் பரமயோ கிகளாய் நின்ற
சிவகுணச் செல்வர் போற்றுஞ் சிதம்பர தேவா வென்ற
னவகுணம் போக்கி யாள்வ தையநின் கடன தாமால்.

என்ற றிங்ஙனம் சொல்லித் துதித்து வணங்கச் சுவாமிகள் கிருபை கொண்டு அவர் கோரியதை அநுக் ரஹம் செய்தனர். பின்னும் சோணாசல தேவர்,

எழு சீர்க் கழி நெடில் விருத்தம்.

யானெனல் காணேன் பூரண வறிவின்
யாதினு மிகுந்தபே ரொளிநீ
தானென நிற்கச் சமத்துற வென்னைத்
தன்னவ ளுக்கவுந் தகுங்காண்
வாவென வயங்கி நின்றனைவம் பூத
மார்க்கமா நெறிதந்து மாருத்
தேனென ருசித்து ளன்பர்கைக் கலந்த
செல்வமே சிவபெரு மானே.

என்று தோத்திரம் செய்தனர். அப் போழ்து, சிவ சங்கர தேவர் ஆலயத்தில் மகாபிஷேகாதிகளை நடத்தித் தீபாராதனைக்குச் சிதம்பர சுவாமிகளை யெதிர்பார்த் திருந்தபடி வாராமையால், அதனையும் நடத்தி வருகையிற் பரிணமத்திற் சுவாமிகள் சோணுசல தேவரை நோக்கி, அப்பா! யாம் நிரதிசயாநந்த சமாதி புகுகின்றனம். இக் கற்பலகையால் வாய்தலை மூடித் தளம் படுத்து, நமது சிவ சங்கரத்துக்கு இதனை யறிவித் தவனதாராமையைத் தீர்த்து எமது வேண்டுகோள் தவறாமல் சொல்லி யாங்கு நடத்தி வரும் வண்ணம் ஸ்ரீ சண்முக மூர்த்தி துணை செய்யு மென்று தெரிவித்துப், பின்னர் நின்னூர்க்குப் போதுக வெனப் பணித்து, அக் கணமே தமது பூஜா திரவ்யங்களுடன் நில வறை வழியாகச் சமாதி ஸ்தாநத்தி லிறங்கி ஒடுக்க முற்று நின்றது. அச் சமயம் முருகக் கடவுள் சந்நிதியிற் கர்ப்பூர தீபாராதனை நடந்து வரும் வேளையாக லாற் சிதம்பர சுவாமிகள் ஆண்டவர் சந்நிதியில் அஞ்சலி யஸ்தராய்த் தோன்றி, மூல ஸ்தாநத்தில் மறைந்திடக்

கண்டு, சிவ சங்கர மூர்த்தியும், ஆலயத் திருந்த வேதியர் முதலிய பலரும், அற்புதமும், ஆச்சரியமும், ஆநந்தமு முற்று. ஹர ஹர வென்று வாக்கிய முழக்கத்துடன் நமஸ் கரித்துப் பரவச ராயினர். சிவ சங்கர தேவர், ஆண்டவர் கைங்கரியங்களின் மற்றவையும் நிறை வுருத்திப் பரிஞ மத்தை நோக்கி, வருகையில், ஏவ லாளர் சிதம்பர சுவாமி கள் பூரண தசையி லமர்ந்த முறைமைகளைச் சொல்லக் கேள்வியுற் றடங் கரிய ஆராமை மேற் கொண்டு பூரணு நந்த வசத்த ராய்க், கண்ணீர் ஆரா யோடித் ததும்ப உள் புகுந்து ஆசிரிய ரொடுக்க முற்ற சந்நிதியி னின்று இவ் வாறு சொல்லத் தொடங்கினர்.

எழு சீர் கழி நெடில் விருத்தம்.

இக்கலி யுகத்தி லெழுந்தவென் குருவே
யின்பமே யன்பினு ணிறைந்த,
முக்கனி ரசமே முதிர்சுவை யமுதே
மூதறி வேமறைப் பொருளே,
சக்கரை யொடுகற் கண்டென ருசிக்குந்
தயாளுவே தமியனேன் றனக்குத்,
துக்கசா கரத்தைத் தொலைத்தருள் புரிந்த
தாயநீ யெங்கொளித் தனையே. 1

தாழ்விலாப் பொருளே தனிமுத லாண
தயாளுவே தற்பர வடிவே,
வாழ்வினிற் சிறந்த வதுலமெய்ஞ் ஞாந
வாநந்த வமுதமே யடுப்போர்க்,
கேழ்வினைப் பிறவி யிடர்களைந் தளிக்கு
மின்பமே யெளியனேன் றன்னைச்,

சூழ்வினை யனைத்துந் தொலைத்தருள் புரிந்த
துணைவநீ யெங்கொளித் தனையே, 2

இத்தலத் தினினின் னிணையடி யடைந்தோர்க்
கின்பமே யன்பினி லுறைந்த,
மெய்த்தவக் கொழுந்தே விளங்குமா ரமுதே
வேதவே தாந்தவே சிகனே,
சித்தமுண் மகிழ்ந்தென் செருவெம் பகையைச்
சிதைத்திடச் சிறியனேன் றனக்குச்,
சுத்தமெய்ஞ் ஞான சுகமளித் தாண்ட
சுகிர்தநீ யெங்கொளித் தனையே 3

அன்பினர்க் குரிய வங்கையிற் கனிபோ
லமர்ந்திடு மமுதமே யெவையுந்,
துன்பெனக் கரந்த தோன்றலே துணையே
தொகுத்திடற் கரியவான் பொருளே,
மன்பதைக் கெல்லா மருளுநற் பரமே
மாதவ வடிவமே யடியேற்,
கென்பிறப் பிறப்பைத் தவிர்த்தருள் புரிந்த
வெந்தைநீ யெங்கொளித் தனையே. 4

பத்திமை புரியப் பரிந்தெனை யழைத்துப்
பணித்துவா வெனவெனக் கினிய,
புத்திக ளுரைத்துப் போகென விடுத்துப்
புன்மையேன் றன்மையை யறிந்த,
நித்திய நிமல நிட்கள நிறைவே
நீணிதி யேயருட் குருவே,

முத்தியங் கடலே முழுமறைப் பொருளே
முதல்வநீ யெங்கொளித் தனையே. 5

ஐயனே யருளா லடியனை யாண்டிங்
கருட்குரு வென்னவீற் றிருந்த,
துய்யனே துணையே தோன்றலே நிறைந்த
சுகக்கட லமுதமே யெனையிவ்,
வையமீ திருத்தி வடிவினை மறைத்த
வண்மையை யறிகிலேன் றமியே,
னுய்யுமா றருள்வாய் சிதம்பர தேவே
யோவென வுள்ளளைந் தழுதார். 6

உடனே சோணாசல தேவரோ டிவர் வந் தழைத்துக் கொண்டு போந்து, ஆசநத் திருத்தி, யாராமையை யொருவா ருற்றி, சுவாமிகள் கட்டளையிட்ட முறைமையை விண்ணப்பஞ் செய்து, அமு தருந்தி, தாமும் அமுது கொண்டு, விடை பெற்றுத் திரு வண்ணுமலையிற் சென்றிருந்தார்

1. கொலை மறுத்தல் உரை.
2. வைராக்கிய சதகம் உரை.
3. வைராக்கிய தீபம் உரை.
4. அவிரோத வுந்தியார் உரை.
5. ஒழுவி லொடுக்கம் உரை.
6. திருப் போரூர் சந்நிதி முறை.

இவற்றை செய்தனர்.

32 சிதம்பர சுவாமிகள் சரித்திரம்
முற்றிற்று.

(சேலம் ஜில்லா, ஆத்தூர் சமீபம்)
தொற மங்கலம் (நல்லாற்றூர்)

33. சிவப் பிரகாச சுவாமிகள் சரித்திரம்.

தொண்டை நாட்டிலே சப்த புரிகளுள் ஒன்றுய் விளங்குகின்ற காஞ்சீ புரியிலே, சுமார் 300வருஷத்துக்கு முன் தொண்டை மண்டலத்தார் மரபி லுள்ளோருக்குக் குருவாக விருந்த குமார சுவாமி பண்டார மென்பவர், திருக் கார்த்திகைக்குத் திரு வண்ணுமலை யாத்திரை போகும் போது, வழியில் ஒரு நந்த வநத்திற் பக லிறங் கிச் சிவ பூசை செய்து, அன்று சாயங் காலம் அந்தத் தலம் போய்ச் சேர்ந்து, ஈசாநிய தீர்த்தத்தில் அநுஷ்டாநஞ் செய்து கொண்டு, "பூஜைப் பெட்டக மெங்கே"? என்று தம் முடைய பரிசாரகரைக் கேட்க, அதற் கவர்கள் பக லிறங்கி யிருந்த விடத்திற் ருனே வைத்து மறந்து வந்த தாக விண்ணப்பஞ் செய்ய. அப் பொழுது அவர் மிகவும் வியாகூல முற்றவ ராய், அந்தப் பரிசாரகரோடு உள்ளூர் மனித னொருவனைக் கூட்டிப், பக லிறங்கி யிருந்த இடம் வரைக்கும் போய்ச் சோதனை செய்து வரும்படி சொல்லி யனுப்பிப், பின்பு தாமும், தமது மனைவியும், ஓரிடத்திற் றங்கியிருந்து, நம் முடைய ஆத்மார்த்த மாகிய உடைய வரைப் பிரியும்படி நேரிட்டதே யென்று சஞ்சலப்பட் டுக் கொண்டு, அன் றிரா முழுதும் துயி லின்றிச் சிவத் தியாநம் பண்ணிக் கொண் டிருக்கும் போது, இவரது புண்ணிய முதிர்ச்சியினுலே அண்ணுமலையார் ஒரு சங்கம ராகத் திரு வுருக் கொண்டு, இவ ரிடத்திற்கு எழுந் தருளி, "நீர் மனே துக்க மடைய வேண்டிய தென்ன" என்று கேட்க, இவர் தமக்கு நேரிட் டிருக்கும் ஆபத்தை விண்

ணப்பஞ் செய்ய, அதற்குச் சுவாமி யானவர், "நீர் அங்கம் வேறு இலிங்கம் வேறாக விருத்தலால் பிரிய லாயிற்று. லிங்காலிங்க சம்பந்தியா யிருந்தால் இப்படிக்கு நேரிட மாட்டாதே" என்று, வீர சைவ சமயாசார நெறிகளைக் கிரமப்படி போதித்து, "உமது பூஜைப் பெட்டகம் உதயத்தில் வந்து சேரும், ஆகிலும், நீர் இது முதல் லிங்க தாரணஞ் செய்து கொள்ளும்" என்று அநுக்ரஹிக்க, அதற் கிவர், "எனது சிஷ்யர் பந்துக்கள் முதலானவர்களுக்கு இச் செய்கை விரோத மாக இருக்கும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அது கேட்டுச் சுவாமி யானவர், "இந்தச் சிஷ்யர் முதலியோரால் உமக்கு யா தொரு பயனு மில்லை. ஆதலால், நா முரைத்த படியே சிவ லிங்க தாரணஞ் செய்து கொண்டால், உம்மிடத்தில் மூன்று புத்திரரும், ஒரு புத்திரியும், அவதரிப்பார்கள். அவர்களால், இகபர சாதக முண்டு" என்று அருளிச் செய்ய, அதற் கிவர் உடன்பட்டனர். அப் போது, சுவாமி யானவர், "இந்த ஆலயத்திற்குத் தெற்கு வீதியி லிருக்கும் குரு தேவரிடத்திற்குச் சென்று, தாரண தீக்ஷை செய்து கொள்ளும்" என்று அநுக்ரஹித்து, இதைக் குரு தேவருக்குந் தெரிவித்து அந்தர்த் தான மானார்.

பின்பு விடியற் காலத்தில், பூஜைப் பெட்டகம் வந்து சேர்ந்தது. அப் பொழுது, குரு தேவர் உத்தரவின்படி அவரது அடியார்கள், இவரைத் தேடி வந் தழைக்க, அவர்களுடனே மடம் போய்ச் சேர்ந்து, குரு தேவரைத் தரிசித்து, அவராலே தாரண தீக்ஷை அநுக்ரஹிக்கப் பெற்றுத், திருக் கார்த்திகைத் திரு விழா நிறை வேறிய பின்பு, கச்சிப்

பதிக்கு வந்து சேர்ந்து, தமது அநுஷ்டாநத்தின்படியே, சிஷியருக்கும், தாரண தீக்ஷை செய்து கொண்டிருக்கும் காலத்தில், முன்பு அண்ணுமலையார் அநுக்ரகித்தபடியே மூன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும், அவதரித்தார்கள். அவர்களுக்கு, முறையே சிவப் பிரகாச மென்றும், வேலாயுத மென்றும், கருணைப் பிரகாச மென்றும், ஞாநாம்பை யென்றும், நாம கரணஞ் செய்து, உரிய பருவத்தில் வித்தியாரம்பஞ் செய்வித்து, வளர்த்து வருங் காலத்தில், தந்தையான குமார சுவாமி யையர், சிவ லிங் கைக்கிய மானுர். பின்பு, ஜேஷ்ட ராகிய சிவப் பிரகாச சுவாமிகள், தமது தாயாரையும், சகோதரர்களையும், அழைத்துக் கொண்டு, அருணுசலம் போய்ச் சேர்ந்து, குரு தேவரைத் தரிசித்து, அவ் விடத்திற் சில காலம் வாசஞ் செய்யும் நாள்களுள், ஒரு நாள், அந்தச் சோண சைலத்தை வலம் வரும் போது சோண சைல மாலை யென்று நூறு செய்யுள் தோத்திரஞ் செய்தருளினுர்.

இன்னும் இலக்கணப் பயிற்சிக் காகத் தக்ஷிணம் போக வெண்ணித் தனது சகோதரர்களுடனே புறப்பட்டு வாலி கண்ட புரத்துக்குத் தெற்கே ஐந்து கடிகை தூரத்தில், துறை மங்கல மென்னும் கிராமத்திற்கு வட பக்கத்தி லிருக்கும் ஓர் நந்த வநத்தில் இறங்கிச் சிவ பூசை செய்து கொண்டிருந்த செய்தியை, அந்தக் கிராமாதிபராகியும், லிங்க தாரண முடையவ ராகியும், சங்கமத்தினிடத்தில் மிகுந்த அன்புள்ளவ ராகியு மிருந்த அண்ணுமலை ரெட்டியார் கேள்வியுற்று, அந்த வநத்திற்கு வந்து, அவரைத் தரிசித்த மாத்திரத்திலே அவருக்குப் பணிவிடை செய்து,

அநுக்கிரகம் பெறவேண்டு மென் றெண்ணிச் சுவாமிகளை நோக்கி "இவ்விடத்திற் சில காலம் வாசஞ் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து, சுவாமிகளது அநுமதி பெற்றுத், தங்கள் குரு வாகிய சென்னபசவையர் மடத்துக்கு அடுத்த மேல் புரத்தில், ஒரு திரு மடங்கட்டிக் கொடுத்துத் தாமும், அவருக்குப் பக்தி செய்து கொண்டு வந்தார்.

சுவாமிகளும், அங்கே இரண்டு வருஷ காலம் வரையில் அண்ணுமலை ரெட்டியாருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக் கொண்டிருந்து, தாம் கொண்ட கருத்தை நிறைவேற்ற வேண்டித் தக்ஷிணம் போய்வர வேண்டுமென்று ரெட்டியாரிடத்திற் சொல்லிக்கொண்டு, திரு நெல்வேலிக் கெழுந் தருளிய போது, அதன், கீழ்ப் புறத்தில் தாம்ரபர்ணி நதியின் கரையி லிருக்கின்ற சிந்து பூந் துறையில்,தருமபுரத் தாதீநத்தைச் சார்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரா னென்பவர், இலக்கணத்தில் மிகுந்த வல்லவரா யிருக்கின்ரு ரென்பதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற் சென்று அவரைக் கண்ட மாத்திரத்தில், அவர் சிவப் பிரகாச சுவாமிகளைப் பார்த்து, "நீங்கள் நம்மிடத்திற்கு வந்த காரியம் என்ன?" என்று வினவ, அதற்குச் சுவாமிகள் "இலக்கணங் கற்க வேண்டி வந்தோம்" என்று சொல்ல, அப்போது தம்பிரான் இவரது இலக்கியப் பயிற்சியை அறிதற் பொருட்டு "(கு) என் றெடுத்து (ஊருடையான்") என்று இடையில் வைத்துக் குவ் விறுதி யாக ஒரு வெண்பா முடித்துக் காட்டுக" என்று கேட்க, அதற்குச் சுவாமிகள் அருளிச் செய்த,

வெண்பா.

குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்,
முடக்கோடு முன்ன மணிவார்க்கு—வடக்கோடு,
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள,
ஆருடையா னென்னுமு லகு.

என்று அருளிய வெண்பாவில் வடக் கோடு தே ருடையா னென்றதற்குத் தம்பிரான் மிகவும் வியந்து சிவப் பிரகாச சுவாமிகளைத் தழுவிக் கொண்டு,தமது ஆசநத்திற் சம மாக விருக்கச் செய்து, அவ ருடைய சகோதரர்களுக்கு ஐந்து இலக்கணங்களையும், ஒரு பக்ஷத்துக்குள்ளே பாடஞ் சொல்லி நிறைவேற்றிய பின்பு, சுவாமிகள், தங்களுக்கு அண்ணாமலை ரெட்டியார் கொடுத்த முந் நூறு பொன்னை யும், குரு தக்ஷிணை யாக வைப்பித்து உபசாரஞ் சொல்ல, அதற்குத் தம்பிரான், "நமக் கிது வேண்டாம், திருச் செந் தூரில் ஒரு தமிழ்ப் புலவர் நம்மைத் தூஷித்துக் கொண் டிருக்கின்றார், அவரைக் கல்வியினால் வென்று நம்மிடத்தில் வந்து வணங்கும்படி செய்விக்க வேண்டும்" என்று சொல்ல, சுவாமிகள் அதற் கியைந்து, தம்பிரானால் அனுப்பப்பட்ட மாணாக்கரோடு தாமும், திருச் செந்தூருக் குப் போய் முருகக் கடவுளைத் தரிசநஞ் செய்து, பிரதக்ஷி ணம் வரும்போது, அந்தத் தமிழ்ப் புலவர் ஸ்வாமிகளோடு கூட வந்த மாணாக்கரைக் கண்டு, "இவர் யார்?" என்று கேட்க, அதற் கவர்கள், "தம்பிரானிடத்திற் பாடங் கேட் டவர்' என்று சொன்ன போது, அந்தப் புலவர் தம்பி ரானைத் தூஷிக்க, ஒருவருக் கொருவர் கலகம் நேரிட்டு, அப் போது புலவர், சிவப் பிரகாச சுவாமிகளோடு நூதந மாகப் பாடி வெற்றிகொள்வோ மென்று நினைத்து, "நிரோட்டக யமக மாகப் பாடுகிறது" என்றும், "அப்

படிப் பாடுகையில் நம் மிருவருள் தோல்வி யடைகிறவர் பாடி முடித்தவருக்கு அடிமை யாகிறது" என்றும்,பேசிக் கொண்டு இருவரும் பாடத் தொடங்கினார்கள், அப் போது சிவப் பிரகாச சுவாமிகள் திருச் செந்தி னிரோட் டக யமக வந்தாதி யென (30) கலித் துறை தோத்திரஞ் செய் துடனே முடித்தார். அப் புலவருக் கொரு பாட லும் ரிரம்பாமையால் தோல்வி யடைந்து, சுவாமிகளை வணங்கி" அடிமை யாயினேன்" என்று சொல்ல, அப் புலவரையுங் கூட அழைத்துக் கொண்டு, தம்பிரானிடத் திற்கு வந்து அடிமையாகச் செய்வித்தலால், தம்பிரான் திரு வுள மகிழ்ந்து சுவாமிகளைப் பார்த்து, "தேவரீர் சிதம்பரத்தில் சில காலம் வாசஞ் செய்யவேண்டும்" என்று கேட்க, அதற்கு உடன்பட்ட சிவப் பிரகாச சுவாமிகள் அவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு, அவ் விடத்தி லுள்ள சிவ ஸ்தலங்க டோறுஞ் சென்று தரிசஞ் செய்த பின்பு, தொற மங்கலம் வந்து சேர்ந்து, அண்ணாமலை ரெட்டியாருக்கு முன் போலவே அநுக்ரஹித்துக் கொண் டிருக்கும் போது, தம தன்ப ராகிய அண்ணாமலை ரெட்டி யார் பொருட்டு, அவரது கம்பத்தக் கிராம மாகிய வாலி கண்ட புரத்துக்கு வாயு மூலையி லிருக்கும் வெங்கை மா நகரத்தில், வந் தெழுந்தருளிய பழ மலை நாதர் மீது தோத் திர மாக வெங்கைக் கோவை, வெங்கைக் கலம்பகம், வெங்கை யுலா, வெங்கை யலங்காரம், என்னும் நான்கு பிரபந்தமுஞ் செய்தருளிய பின்னர், அண்ணாமலை ரெட்டி யாரை அழைத்துக் கொண்டு, சிதம்பரத்திற்குப் போய் ஒரு திரு மடங் கட்டுவித்து, அதிற் சில காலம் வாசஞ் செய்திருந்து. பின்பு விருத்தாசலத்திற் கெழுந் தருளி, பழ

மலை நாதர் பேரில் அந்தாதியும், பிக்ஷாடன நவ மணி மாலை யும், கொச்சகக் கலிப் பாவும், பெரிய நாயகி யம்மை பேரில் (19) கலித் துறையும், (10) கழி நெடில் விருத்த மும், திரு வாய் மலர்ந் தருளிச், சில காலம் அவ் விடத்தில் வாசஞ் செய்யும் போது, ஒரு நாள் மணி முத்தா நதியின் கரையி லிராநின்ற தோட்டத்தி லுதிர்ந்து கிடந்த மனோ ரம்மிய மாகிய ஒரு மாம்பழத்தைச் சிவ நைவேத்தியஞ் செய்யத் தக்க தென்று கையி லெடுத்துக் கொண்டு வரு கையில், அதைக் கண்ட தோட்டக்காரன் சுவாமிகள் மன வருத்த முறும்படி கோபித்த போது அருளிச் செய்த,

வெண்பா

அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளா,
லடர்த்ததுவுஞ் சத்தியமே யாகு—லெடுத்ததொரு,
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி,
சாங்கனிக்கா நித்தன்வரத் தான். என அருளிச் செய்தனர்.

பின்பு வட திசையை நோக்கிக் காஞ்சி புரத்தைத் தரிசிக்க வரும் போது, பே ரூ ரவிநாசியி லிருந்து சாந்த லிங்க சுவாமிகள் மார்க்கத்தில் வர, அவரைக் கண்டு கூடவே அழைத்துக் கொண்டு, பொம்மைய பாளையத் துக்குச் சமீப மாக வந்த போது, சாந்த லிங்க சுவாமிகள் சிவப் பிரகாச சுவாமிகளைப் பார்த்து, "நாம் சிவ ஞான பாலைய சுவாமிகள் சந்நிதானத்துக்குப் போய்த் தரிசனஞ் செய்ய வேண்டு மாதலால் அவர் பேரில் தோத்திர மாகச் சில பாடல்கள் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ததற்கு, "அடியேன் நர ஸ்துதி செய்கிற தில்லை" என்று சொல்லி, அன் றிராத்திரி ஓ ரிடத்திற் றங்கி யிருந்த போது, இவரது ஸ்வப்நத்தில் முருகக் கடவுள் மயில்

வாகநாருட ராய் எழுந்தருளி, ஒரு பாத்திரத்தில் விடு புஷ்பங்களை வைத்து, "இம் மலரை மாலை யாகத் தொடுத்து நமக் கணிய வேண்டும்" என்று திரு வாக்குச் செய்த படியால், விடியற் காலத்திலே, சிவப் பிரகாச சுவாமிகள் நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு தாம் கண்ட ஸ்வப்நத்தைச் சாந்த லிங்க சுவாமிகளுக் கறிவிக்க, அதற் கவர், "தேவரீர் பாமாலை தொடுக்கக்கூடா தென்று சொல்லியபடியால், அப் பாமாலையே தொடுக்க வேண் டிக் குறிப்பித்தபடி", என்ற மாத்திரத்தாலே, சிவ ஞாந பாலைய சுவாமிகள் பேரில், தா லாட்டு, நெஞ்சு விடு தூது, கலம்பகம், இம் மூன்று பிரபந்தமுஞ் செய்து கொண்டு போய்ச் சந்நிதாநத்தி லரங்கேற்றி ஞாநோபதேசம் பெற்று, அந்த ஞாநாசாரியரது கட்டளையினால்,தமது தங்கை யாகிய ஞாநாம்பையைச் சாந்த லிங்க சுவாமிகளுக்கு விவாகஞ் செய்து கொடுத்துப், பின்னர் காஞ்சீ புரம் வந்து, சில காலம் வாசஞ் செய்து கொண்டிருக்கும் போது, மேற் சொல்லிய சுவாமிகள் பேரில், பிள்ளைத் தமிழும், திருப் பள்ளி யெழுச்சியும், அதிசயப் பத்துஞ், செய்து அருளி னார். மற் றொரு காலத்தில், அண்ணாமலை ரெட்டியார் சுவாமிகளை விவாகஞ் செய்து கொள்ளும்படி பிரார்த்தித்த போது அருளிய,

கொச்சகக் கலிப்பா

செய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்,
பாய்கொண்டான் வந்துதொழும் பட்டீச்சு ரத்தரனே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்தும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

பின்பு கருணைப் பிரகாச சுவாமிகளை விவாகஞ் செய்து கொள்ளப் பிரார்த்தித்த போது, அவர் செய் தருளிய பாடல்,

நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நகையால்,
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றூர்.
காண லாவதோ ருருவமெய் நாரியைக் கண்டால்,
பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ.

என்று சொல்லிய பாடலின் கருத்தைச் சுவாமிகள் அறிந்து, தனது சகோதர ரிருவரையும்,இல் லறத்தி லிருக்கச் செய்து, தாம் துற வற மாக வெழுந் தருளியிருந்து, பிரபு லிங்க லீலை, சித்தாந்த சிகாமணி, வேதாந்த சூடாமணி, சிவப் பிரகாச விலாசம், தர்க்க பரிபாஷை, திருக் கூவப் புரா ணம், சத மணி மாலை, நால்வர் நான் மணி மாலை, நிரஞ் சன மாலை, கைத் தல மாலை, அபிஷேக மாலை, இஷ்ட லிங்கப் பெருங் கழி நெடில், குறுங் கழி நெடில், நன் னெறி, சுவ நாம மகிமை, அன்றியும், திருப் பதிகம் பெற்ற தலங்க ளொவ் வொன் றுக்கு, இரண் டிரண்டு வெண்பாக்களும், செய் தருளினூர். இவர் சகோதரர் வேலைய சுவாமிகள், "நல் லூர்ப் புராணம், இஷ்ட லிங்கக் கைத்தல மாலை, கும்ப கோணஞ் சாரங்க தேவர் சரித்திர மாகிய, வீர சிங்காதன புராணம், குக நமச் சிவாய மூர்த்தி கள் சரித்திர மென்னும் நமச் சிவாய லீலை, கிருஷ்ண சரித் திர பாரி சாத லீலை, மயிலத் திரட்டை மணி மாலை" என் னும் இப் பிர பந்தங்கள் செய்தருளினூர். இவரது கனிஷ்ட ராகிய கருணைப் பிரகாச சுவாமிகள், இஷ்ட லிங்க வகவல், திருக் காளத்தி புராணத்தில் சீ காளத்திச் சருக்கம் வரையிலுஞ் செய்தருளி, வெங்கைமா நகரத்தில் 18ம் வய

தில், சிவ லிங் கயிக்ய மாய்ச் சமாதி யானார். அப் போது யாத்திரை யாக வெழுந்தருளி யிருந்து வந்த சிவப் பிரகாச சுவாமிகள் செய்த ருளிய,

அறுசீர் விருத்தம்.

முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்ட சுவை முதிர்ச்சி யாலே, தன்னியலை முழுதுமுரைத் தமை யாமுன் னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி, மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே, யென் னுடன்வந் தவரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே.

அப்பொழுது வேலைய சுவாமிக ளருளிச் செய்த அறுசீர் விருத்தம்.

"ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற் றமையனினு மதிக மென்றே, பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட் டிருந்துமென்ன புதுமை தானோ, காண்டகு கண் மணியேயல் விளங்கருணைப் பிரகாசக் காளாய் நீதான், மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன் யானுமிகு வன்னெஞ் சேனே."

பின்பு, சிவப் பிரகாச சுவாமிகள், மிகவும் மகிமை யோ டிருந்து காளத்திப் புராணத்தில், கண்ணப்பர் சருக்க மும், நக்கீரர் சருக்கமும், செய்தருளி 32ம் வயதிலே நல் லாற்றூரில், சிவ ஞாந பாலைய சுவாமிகளால் விடப்பட் டிருந்த மடத்திலே, சிவ லிங் க ஐக்கிய மாய்ச் சமாதி யாயி னார்.

அப்போது வேலைய சுவாமிகள் அருளிச் செய்த வெண்பா.

அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந்த றிவித்த,
சொல்லுமி ருவரிடைத் தோன்றிய யான்—முல்லை,
யரும்பிற் பொலியு மணிமுறுவ லல்லாய்,
கரும்பிற் கணுவிகர்த்தேன் காண்.

பின்பு, காளத்திப் புராணத்தைப் பாடி நிறைவேற்றிப், பெரு மாத்தூர் மடத்தில், 72ம் வயதில், சிவ லிங் கயிக்ய மாய்ச் சமாதி யாயினர்.

33. சிவப் பிரகாச சுவாமிகள் சரிதம் முற்றுப் பெற்றது.

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம:

34. *சொரூபாநந்த, தத்துவ ராய சுவாமிகளின் சரித்திரம்.*

வடக்கே, திரு வேங்கட மலையையும், தெற்கே, குமரி யாற்றையும், கிழக்கே, கடலையும், மேற்கே, கடலையும், எல்லை யாக வுடைய தான, தமிழ் நாட்டின்கணுள்ள தொண்டை நாடு, மகத நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, மலை நாடு, துளுவ நாடு என்பவற்று ளொன் ருகிய, மகத நாடு, அல்லது, நடு நாட்டிலே, வீரை மா நகரிலே, இற்றைக் கேறக் குறைய 600 வருஷத்திற்கு முன்னர்த், தமிழ் மக்கள் செய்த தவப் பய ஞக வைதிக சைவப் பிராஹ்மண வருணத்திலே, புண்ணிய மூர்த்திக ளிருவர், அம்மான் மருமக னென்னும் முறை யுடையவர்க ளாகத் திரு வவதாரஞ் செய்தார்கள். அவர் கள் நல் லாசிரியரை யடுத்து, வட மொழி, தென் மொழி

களுள், கற்க வேண்டியனவற்றை ஐயந் திரியறக் கற்று, அறி வொழுக்க முடையவர்க ளாக வளர் பிறை போல வளர்ந்து வருங் காலத்தில், அவர்களுள், ஒருவர் தத்துவ விசாரமும், மற் றொருவர், சொரூப விசாரமும், செய்து, வந்தமையின், அவ் விருவரும், முறையே, தத்துவ ராய னென்றும், சொரூபானந்த ரென்றுங் காரணப் பெயர் பெற்று விளங்குவா ராயினர்.

தத்துவ ராயரும், சொருபானந்தரும், நீக்க மற்ற, நண் பினை யுடையவர்க ளாய்க், கல்வி யறி வொழுக்கங்களால் மேம்பட்டுப் பிரமசரிய நிலையினின்றுந் தவறாது விளங்கி வருங் காலத்தில், ஒரு நாள், அவ் விருவரும், நாம் சற் குரு மூர்த்தியை யடைந்து தத்துவோபதேசம் பெற்று, உயர் வற வுயர் நல முடைய முத்தியினை யடைதல் வேண்டும். இதுவே, மனிதப் பிறப்பின் பய னென்று, தம் முட் பேசி யொரு முடிவிற்கு வந்து, பசியால் வருந்துவோன் அந்நத்தைத் தேடு மாறு போன்றும், தீயால் வருந்து வோன், தண்ணீ ரைத் தேடு மாறு போன்றும், வெயிலால் வருந்துவோன், நிழலைத் தேடு மாறு போன்றும், சற் குரு நாதனைப் பிறவிப் பிணியை யொழிக்கு மாறு, தேடுவா ராயி னர்; இவர்கள், புண்ய க்ஷேத்திரங்களிலும், புண்ணிய நதி தீரங்களிலும், இன்னும் பல விடங்களிலும், பல நாள் தேடிப் பார்த்தும், சிவ சொரூப மாந் தேசிக மூர்த்தி, தமக் கெதிர்ப்படாமையால், மிகவும் வருத்த முற்று, நம் முள் யா வருக்கு, முன்னர்ச் சற்குரு நாத னநுக்கிரஹங் கிடைக் கின்றதோ, அவர்க்கு, மற்றவர் சீட ராதல் வேண்டு மென்று உறுதி செய்து கொண்டார்கள். பிறகு, சொருபா நந்தர் தெற்கிலும், தத்துவ ராயர் வடக்கிலு மாகப் பிரிந்து

போனார்கள். தெற்கே சென்று சொரூபானந்தர், திருப் பைஞ் ஞிலி யென்னும் சிவ க்ஷேத்திரத்தையும், திரு வெள்ளறை யென்னும், விஷ்ணு க்ஷேத்திரத்தையும், தன் பக்கத்தே யுடையதா யிருக்கின்ற, கோ வத்த மென்னும் ஊரை யடைந்த போது, அவருக்கு, "வேர்க்குங்கண் ணீர்ததும்பும் புங் கம்பிக்கு மெய்ந்நடுங்கும், வார்த்தை நழுவு மனம் பதறுங்-கார்க்கதமாய்க், காந்துமுரோ மாஞ்சலியாகுங் காதலித்தார்க், கேய்ந்த குணங்கா ணிலவையெட் டும்" என்று ஒழிவி லொடுக்கம் கூறுகின்ற வாறு, வேர்த்தல், கண்ணீர் ததும்பல் முதலிய நற் குறிக ளுண்டாயின, உண்டாகவே, அவர் இந்தப் பதி நமது குரு நாத னெழுந் தருளியிருக்குந் திருப் பதி யாகும் என்று சிந்தித்து, ஊரினுட் சென்று, அங் குள்ளாரை நோக்கி, இங்கே மஹாத் மாக் கள் எழுந்தருளி யிருக்கின்றார்களோ வென்று வினவினார். அதற் கவர்கள், இவ் வூர்ப் புறத்திலே நாணற் புத ரொன் றிருக்கின்றது. அப் புதரிலே ஒரு பெரியவ ரிருக்கின்றார். அவர் பெயர் சிவப் பிரகாச சுவாமிகள்; அவர் எப் போ தாவது மாலைக் காலத்திலே அப் புதரினின்று வெளியே வருவா ரென்று கூறினார்கள். அது கேட்ட சொரூபா நந்தர், அப் புத ரிருக்த மிடஞ் சென்று, அவரது வரு கையை யெதிர் பார்த்துக் கொண்டிருந்தார், அவ் வா றவர் காத்துக் கொண்டிருக்கும் போது, ஒரு நாள் மாலை யிலே சிவப் பிரகாச சுவாமிகள் வெளியே வந்தார்; அது கண்டு சொரூபாநந்தர், "சைதந்யம் சாஸ்வதஞ் சாந்தம் வியோமாதீதம் நிரஞ்சநம், நாதபிந்து கலாதீதம் தஸ்மை ஸ்ரீ குரவே நம." என்று கூறித், துதித்து, அவரது திரு வடியில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, அடியேனை பிறவிப்

பெருங் கடலினின்றுங் கரை யேற்ற வேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

அவர், இவன் அதி தீவிரத்தர பக்குவ னென்று குணங் குறிகளால், செவ்வி தாக வறிந்து, சொரூபாநந்தருக்கு, "நினை வரிய வொரு பிரமம் நீயே" என்று தத்துவோபதேசத்தை, ஐயந் திரி பில்லா வாறு செய்தனர். அதனால், அவர் சகஜ நிஷ்டை பெற்றவ ராகி அவ் விடத்திலேயே யிருந்தார் இஃ திங்ஙன மாக, வடக்கே சென்ற தத்துவராயர், குரு நாதன் கிடைக்கப் பெறுமையால், மழை யில்லாப் பயிர் போல, மனம் வாடித் தெற்கே வந்து கோவத்தத்தில் சொரூபாநந்தரைக் கண்டு, பரவச முற்று, நடந்த வரலாற்றினைச் செவ்வி தாக வறிந்து, அவரிடத்து ஒரு மொழியி னுண்மைப் பொருளை யுள்ளவா றறிந்து, நிர்விகற்ப நிஷ்டை கூடி நிரதிசயாநந்த வடிவ மாக விளங்கி யிருந்தார்.

இவ் வாறிருக்குங் காலத்தில், சொரூபாநந்தர், தமிழிற் கவி பாடுந் திறமை கருவிலே யமையப் பெற்ற தத்துவ ராயரை நோக்கி, அன்பனே! நீ உலோகோபகாரமாகச் சில நூல்க ளியற்ற வேண்டு மென்று குறிப் பாகப் பல முறை தெரிவித்து வந்தனர். சொரூபாநந்தர், வற்புறுத்திக் கூறுமை யாலும், நிஷ்டையின் மிகுதியாலும், நூ லியற்ற வேண்டு மென்னு மெண்ணம் தத்துவராயருக் குண்டாகா திருந்தது. அது தோன்றும்படி சொரூபாநந்தர், ஒரு நாள் அமாவாசையில் எண்ணை இட்டுக் கொள்ள, ஏவலாளரை நோக்கி, எண் ணெய் கொண்டு வரு மாறு கூறினார். அது கேட்ட தத்துவ ராயர், இன்று அமாவாசை யெனக் கூற வேண்டி,' அம் என்றார். அப் போது சொரூபாநந்தர் விதி

நிஷேத சூந்ய ஞன னெனக்கா, நீ விதி கற்பிக்க வந்தாய். எதிரே நில்லாதே, ஓடிப் போ என்று (வேண்டு மென்று) கடு கடுத்துக் கூறினர். அதற்குத் தத்துவ ராயர் மிகவும் பயந்து நடுக்க முற்று, இனி நான் இச் சரீரத்தோ டிருத்தல் தகுதி யுடைய தாகாது; கடலில் விழுந் திறப்பதே தகுதி யென்று குரு சந்நிதானத்தை நோக்கிக் கொண்டே பின்னடி வைத்து நடந்து பிரி வாற்ருமை காரண மாகக் கண்களில், நீர் தாரை தாரை யாக வொழுக, பரமாசாரிய ராகிய சிவப் பிரகாச சுவாமிகள் மீதும், ஆசிரிய ராகிய சொருபாநந்தர் மீதும், சிவப் பிரகாச வெண்பா, தத்துவாமிர்த மென்னும் நூல்களையும், திருத் தாலாட்டு முதல் அமிர்த சார மீரு யுள்ள அடங்கல் முறையினையும், பாடிப் போம் போது, அவற்றைத் தொடர்ந்து சென்ற அடியார்கள் அப் போதப் போ தெழுதிக் கொண்டு போய்ச் சொருபாநந்தர் முன்னர் வைத்தார்கள். அவர் அந் நூல்களின் மீது விருப்ப மில்லாதவர் போல, மயி ருள்ளவன் வாரி முடிப்பது போல்,வாய் உள்ளவன் பாடி யனுப்புகின்ருன் என்று கூறிக் கொண்டிருந்தார். இஃதிங்ஙன மாக, தத்துவ ராயர், குரு தரிசநங் கிட்டாது போனமை பற்றி, மிகவும் வருத்த முற்றுப் பாடு துறையில் திரு வடி மாலையைப் பாடிக் கொண்டு கடலில் விழுந் திறக்கச் சமீபித்துச் சென்றதை யடியார்களுட் சிலர் விரைந் தோடி வந்து சொருபாநந்தருக்குத் தெரிவித்தார்கள். அதற் கவர், "அந்தக் குருவிற்கு வீங்கி யை வரச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட, அவ் வடியார்கள், விரைந் தோடிப் போய்த், தத்துவ ராயருக் கதனைத் தெரிவித்தார்கள், அதனை லவர் அங்க மெல்லாம் பூரித்து, 'என்னையும் சுவாமி வரக் கட்டளையிட்

டதோ? என் பிழையையும், பொருத்தருளிற்ரே? என்று தழு தழுத்துக் கூறிப், பின்னர்,

"ஆடுங் கழலா மடியி லொளித்தக்கால், தேடுவ தில்லையென் ருடாய் கழல், திருவடி யல்லதென் ருடாய் கழல்" என் றிறுதி யாக வுடைய பாடு துறையைப் பாடிக் கொண்டே வந்து சொரூபாநந்தரை யடைந்து, "பிழை பொறுத்தருள்க" என்று பல முறை வணங்கி, அவர் இரு வெனக் கூற, பரவசப்பட் டிருந்து, பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார். இவ் வா றிருக்கும் போது, சொரூபாநந்தர், தத்துவ ராயர், பாடிய நூல்களைச் செவ்வி தாக ஆராய்ந்து பார்த்துப் பெரு மகிழ்ச்சி யடைந்து, அதை வெளியே காட்டாது, தத்துவ ராயரை நோக்கி, அன்பனே! இந் நூல்கள் உனக்கே யுபயோக மாம். பொது வாக யாவருக்கு முபயோக மாகா என்று கூறினர். கூறின அச் சமயத்தில் மடைத் தொழி லாளர் சொரூபாநந்தரை, யமுது கொள்ள அழைத்தார்கள். அவர் அமுது கொண்டு வருவதற்குள், தத்துவ ராயர், குரு மூர்த்தியின் குறிப்பைச் சிந்தித் துணர்ந்து, மோக வதைப் பரணியில், ஒரு பிரகரண மாக வமைத்துச் சசி வர்ண போதத்தைப் பாடி முடித்து, குரு மூர்த்தி வந்ததும், அவர் திரு வடியில், அந் நூலை வைத்து வணங்கினுர். அதனைச் சொரூபாநந்த சுவாமிகள் பார்த்து வியந்து பெரு மகிழ் யடைந்தனர்.

பிறகு, தத்துவ ராய சுவாமிகள், ஈசுவர கீதை, பிரம கீதை முதலிய நூல்களைப் பாடி முடித்து நிர்விகற்ப சமாதி புரிந்திருந்தார். இவ ரிவ்வா றிருக்குங் காலத்தில், யாத்திரை செய்து வந்த சில வாராத்தியர்களும்,சில வித்துவான்களும், சொரூபாநந்தரது சந்நிதாநத் திருந்த தத்துவ ராயர் முன்

னர் வந்து, போர் முகத் தாயிரங் களிற் றியானையைத் தனக் கூறுபா டின்றிக் கொன்ற வீரனைத் தலைவ னாகக் கொண்டு பாடப்படும் பரணி யென்னும் பிரபந்தத்தை, வீர மென் பதைச் சொப்பனத்தும் பெற் றில்லாத உம் முடைய குருவைத் தலைவ னாகக் கொண்டு, "அஞ்ஞ வதைப் பரணி, மோக வதைப் பரணி"யென்னும் பிரபந்தங்களை நீர் பாடிய தெவ் வா றமையும் என்று வினவ, அதற் கவர், நமது தேசிகோத்தமர் தம்மை யடுத்த, அள விறந்த சிஷ்யர்களது அகங்கார மாகிய யானைகளை, யுப தேச மாகிய போர் முகத் திலே, மிகு வெளி தாகக் கொன்று விடுகின்றமை பற்றி, அப் பிரபந்தங்களைப் பாடினே மென்று கூறினர். அதற் கவர்கள், நீர் கூறும் அகங்கார மாகிய யானை நேத்திரேந்திரியத்தா லறியப்படுவ தன்றாகலின், அது பொருந்தாது; பொருந்துவ தாகக் கொள்ளினும், ஒரு சிஷ்யனது அகங்கார மாகிய யானையைக் கொல்லுவதற்கு, அநேக நாள் வேண்டும்; உமது குரு, ஏக காலத்தில் ஆயிரஞ் சிஷ்யர்களது, அகங்கார மாகிய யானைகளைக் கொல்லுவ தெவ் வா றமையு மென்று வினவ, அதற்குத் தத்துவ ராய சுவாமிகள், அதனை யவர்கட் கநுபவ மாகக் காட்ட வேண்டு மென்று கருதி, விடை கூறாது மநத்தை யுள் விழிப் பார்வை யாக்கிச், சமாதி கூடி யிருந்தார். ஆக்ஷேபஞ் செய் தவர், சொருபாநந்தரது சந்நிதாந விசேஷத்தால், இராப் பக லறியாது மூன்று நாள் பரியந்தம் நிர்விகற்ப ஸ்திதியினைப் பெற் றிருப்பா ராயினர். நா லாம் நாளில், தத்துவ ராயர் சமாதி கலைந்து, வெளி முகப் பட்ட போது, அவர்களும், வெளிப் பட் டெழுந்து, சொருபாநந்தரையும், தத்துவராயரையும், பல முறை வணங்கித், துதித்து, நாங்கள் அஞ்ஞாநத்தின் மிகுதிப் பாட்டால், ஆக்ஷேபித்தோம்; தங்களது

சந்நிதான விசேஷம் பதி னுயிரஞ் சிஷ்யர்களது அஞ்ஞா நத்தையு மேக காலத்தி லொழிக்கு மாற்ற லுடைய தென்று கூறி, வித்துவான்க ளியாவரும் தத்துவ ராயரது பிரபந்தங்கட்குப் போற்றுக் கவிகள் புகல, யாவரும் அவ் விரு மூர்த்திகட்கும் சிஷ்யர்க ளாகிச் சென்றார்கள். பிறகு, சொரூபாநந்தர் உலோகோபகார மாகத் தமிழி லுள்ள வேதாந்த சாஸ்திரங்கள் பலவற்றையும், நன் காராய்ந்து வேண்டிய செய்யுட்களை யதிகார வடை வாக வெடுத் தமைத்துத் தமது குரு மூர்த்தியின் பெயர் விளங்கச் சிவப் பிரகாசப் பெருந் திரட் டென் ஞெரு நூலைத் திரட்டி யருளினார். (*சிவப் பிரகாசர் திரட் டியது பற்றி, அது சிவப்பிரகாசப் பெருந் திரட்டென்று பெயர் பெற்ற தென்று கூறுவாருமுளர்.)

சிவப் பிரகாசப் பெருந்திரட் டென்று சொல்லப் படும் அத் திரட்டைத், தத்துவ ராயர் சங்கிரக மாகத் திரட்டி, இடை யிடையே தாம் வகுத்த வகுப்பிற் கேற்ற வண்ணம், 424 செய்யுட்களைச் சேர்த்துக், "குறுந் திரட் டென் ஞெரு நூலைத் திரட்டியருளினார். சிவப் பிரகாசப் பெருந் திரட்டின் செய்யுட் டொகை 2821. குறுந் திரட் டின் செய்யுட் டொகை 1390. பின்னர், தத்துவ ராயர் சொரூபாநந்தரை (கண்) இமை போற் பிரியா திருந்து வருங் காலத்தி, லொரு நாள், சொரூபாநந்தர் தத்துவ ராயரை விட்டுப் பிரிந்து போவா ராயினர். அது கண்டு, தத்துவ ராயர் அவரைப் பின் தொடர்ந்து போகையில்,

*"ஆனை யாயிர மமரிடை வென்ற,
மாணவ னுக்கு வகுப்பது பரணி" இலக்கண விளக்கம்.

சொரூபானந்தர் கா டென்றும், மலை யென்றும், கருதாது பல விடங்கட்கு, சென்று திரிந்து, பின்னர் கடற் கரையை யடுத்துப் போய்க் கடலின் மீது தமது யோக மகிமையாற் போவா ரானார். பிரியாது கூடவே சென்ற தத்துவ ராயர், தாம் செல்லுவதற்குக் கட லிடங் கொடுக்காமைக் காகப் பெருங் கவலை யுற்று, தேசிகோத்தமரை நினைந்து, நினைந்து, இளங் கன்றைப் பிரிந்த பசுவைப் போலக், கதறிக் கதறி, யழுது தேடிச் சோர்வுற்ற போது, சொரூபானந்தர் அவர்க்குத் தரிசநந் தந்து, சில நாள் அவ ருடனிருந்து, திரு நெல் வேலிக்கு வடக்கு ஆற்றங் கரை யோரத்தி லுள்ள சேந்த மங்கலத்தில், பரிபூரண தசையை யடைந்தார். தத்துவ ராயர், சிதம்பரத்திற்கும், விருத்தாசலத்திற்கும், இடையே யுள்ள எறும் பூரில் மகா மௌந தசையை யடைந்தார்.

தத்துவராயர் இயற்றிய நூல்களாவன.

1. அடங்கன் முறை, 2. பாடு துறை, 3. சிவப் பிரகாச வெண்பா, 4. தத்வாமிர்தம், 5. ஈசுவர கீதை, 6. பிரஹ்ம கீதை, 7. குறுந் திரட்டு, 8. பெருந் திரட்டு ஆம்.

சொரூபானந்த தத்துவராய சுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

35. *ஸ்ரீ கர பாத்திர சிவப் பிரகாச சுவாமிகள் சரித்திரம்.*

கருணை தென்னச் சொரிதரும் மதம்சேர்
கயமுகன் றனைக்கனை அசுரப்.
பருவரல் உறவேற் படைவிடு குகனைப்
பாநுபு ரிசரை உலகை,
அருள்மர கதவல் லியின்மலர் அடியை
அறம்வளர் வியாசர்பா டியில்வாழ்,

தெருள் உறும் கருணைச் சிவப்பிர காச
தேசிகன் தனைத்திநம் பணிவாம்

புண்ணிய பூமி யாகிய பரத கண்டத்தின் தென் பாகமான சென்னை மாகாணத்திலே, தொண்ட வள நாட்டிலே, சென்னியம் பாக்க மென்னும் திருப் பதியிலே, தர்ம சிவா சாரியரைக் குரு வாகக் கொண்ட, பேரி செட்டிமார் மரபிலே, வீர சைவத்தை மேற் கொண் டுள்ள, பத்தர் குல, நற் குண, நற் செய்கை யுள்ள மருதுண மகரிஷி கோத்திரம், முத்து சாமி பத்தரும், அவரது கற் புடைய மனைவியார், வள்ளி யம்மையாரும், இல் லறம் வழுவாது நடத்தி வாழ்ந்து வந்தனர் அவ் வாறு வாழும் நாளில், அவர்கள் செய்த பூர்வ புண்ணிய விசேஷத்தால், சாதந சதுஷ்டய மிகுந் துள்ள உத்தம ஞாந பரிபாகிகள் செய்த தவப் பேறென் றுரைக்கும் வண்ணம், வேதாந்த மான, சித்தாந்த போத வாக்கிய லட்சியார்த்தப் பொருளே திரண்டு ஒரு மானிட சட்டை சாத்தி வந்த தென்று சொல்லும்படி அருமைப் புதல்வ ராக, அவர்கட்கு 'சிவப்பிரகாசம்'. என்னும், ஓர் பெய ரிய சத் புத்திரர் அவதரித்தனர்,

இவர், பாலிய பருவந் தொடங்கியே சம தமாதி குணங்களை யுடையவ ராக விருந்து, ஞாந நூற்களையே யோதி யுணரும் பக்குவம் வாய்ந்தவ ராகவும், பொறுமை, அடக்கம், அன்பு, சத்தியம், நிராசை, பயனில் பாராட்டாமை முதலிய நற் குண, நற் செய்கைக ளெல்லாம் உடையவ ராயும், அமைந்திருந்தனர். மேலும், இம் மகான் தமது குலத் தொழிலில் ஈடுபடாததைக், கண்ட, அவரது சகோதரர், அவர் மேற் கொண்ட மார்க்கத்தைத், தமது குடும்ப அபிவிர்த்தியை நோக்கித் தடைசெய்து வந்தனர். ஆயினும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என்னும் பெரியார் திரு வாக்குக் கிணங்க, அவருடைய பிறவிப் பெரும் பயனை அடையும் நோக்க முடையவராகவே இருந்தனர்."

அப்போது, திருக்கு திரிசிய விவேகம், அத னுரை, பிரத்தியட்சா நுபூதி விளக்கம், உத்தம வாதம், சீவகாருண்ய விளக்கம், மற்றும் பல ஞான நூல்களுக் காசிரியரும், உலகத்தி லியங்கும் சீவ கோடிகள் தம் முடைய பவக் கடலி லிருந்து உய்யும் வண்ணம் வேதாந்த ரசமாகிய ஆகாரத்தை உண்பித்தவரு மாகிய, ஈசூர், ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிக ளருளைப் பெற்றவரும், சென்னைமா நகரில், ஞானாநுபா நுவா யிருந்தவரு மாகிய, சாது இரத்ந சற் குருவின் சந்நிதாநத்தை அடுத்து, ஞாந அப்பியாசம் செய்து வந்தனர். பாஹ்ய திருஷ்டி யின்றிச், சதா அந்தர் முக திருஷ்டி யுள்ள வராய்ச், சித்திர தீபம் போல, நிர் விகற்ப சகஜ நிஷ்டாநுபவ நிரதிசயாநந்த வாழ்வி லிருந்து வந்தனர். தமது ஞாநாசாரியர், பரிபூரண தசையை அடைந்த பின், "எல்லார்க்குக் காலன் துறவீவன், ஈயாமுன் நல்லோர் துறப்பர்" என்னும் மெய் யுரையை மேற்கொண்டவராய்த், தமது இல்லத்தினின் றும் புறப்பட்டுச் சென்னையை யடுத்துள்ள, திரு வான்மியூர்க்குச் சென்று, கடுந் துறவை மேற் கொண்டு, மௌந விரதம் பூண்டு, நிஷ்டை சாதித் திருந்தனர்; இந் நிலையி லிருந்த இவர், பிறர்க்குப் பயன் படா திருப்பதைக் கண்ட, மேற்படி, ஸ்ரீ சாது இரத்ன குருவினிடத்து ஞாந அப்பியாசம் பெற்று வந்த அவருடைய சகபாடிகள், அவரைச் சென்னையின்கண் அழைத்து வந்தனர். அக் காலம், சென்னையின் கண் எழுந்தருளி

விருந்து, மௌன நிலையை விட்டு, ஞான நூற்களைப் பலர்க்கும் போதித்து வந்தனர். இவர்க்குச் சற் சீடர்கள், நூற்றுக் கணக் காகப் பெருகினர். இச் சற் சீடர் குழாம், பெருகுவது, தமது நிஷ்டைக்குத் தடையா யிருக்கிறதென்று கருதி, இவர் சென்னையை விட்டு நீங்கினர். அவர் சென்ற நெறி அறியாராய்ச், சீடர்கள் நெடுங் காலம், அவரைத் தேடிக் காணாது வருந்திக், கடைசியில் பொதிய மலையில் கண்டு, தரிசித்து அவரைச் சென்னைக் கெழுந்தருளுமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். சுவாமிகள், இயற்கையிலேயே சாந்தமும், பூத தயாளமு முடையவராதலின், அவர் தம் வேண்டுகோளுக் கிணங்கிச், சென்னைக் கெழுந் தருளினர். சுவாமிகள் எதனிடத்தும் ஒட்டுப் பற்றின்றிக் கடுந் துறவு பூண்டிருந்தமையின், அவர்பால், சென்னையில், பல சீமான்களும், சீமாட்டிகளும், செல்வாராயினர், அவர்பா லடைந்து, இஷ்ட சித்திகளைப் பெற்ற சில கன தனவான்கள், அவர்க்குச் சென்னைச் சூளை ஸ்ரீமான் பி டி, செங்கல்வ ராய நாயகர், பூந் தோட்டத்தில், அவர்க்கென்று, ஓர் ஆச்சிரமம் கட்டி வைத்தனர். மேற்படி நாயகர் குடும்பத்தினரும், சுவாமிகள், அருங் குணங்களைக் கண்டு, தமது தோட்டத்தில் சுவாமிகளுக்கு ஓர் ஆச்சிரமம் கட்ட இடந் தந்தனர். சுவாமிகள், ஆச்சிரமத்தில் தனியே யிருந்து, நிஷ்டை சாதித்து வந்தனர். சுவாமிகள், பகிர் முக மாகும் காலங்களில், தம்மை வந் தடுக்கும், சாதந சதுஷ்டய முள்ள முமுட்சுக்களுக்கு அஞ்ஞான விருள் நீங்குதற்கு, ஓர் ஞான சூரியராயும், நின்று, நியாயம், சோதனை, பொருத்தமுற வேதாந்தப் பிரசங்கம் புரிந்து, அதனால், அவர்களது சந்தேக விபரீதங்களை யெல்லாம் ஒழித்து மகா வாக்கிய ஞானோபதேசம் புரிந்து, பகிர் முக திருஷ்டியை

நிவிர்த்தித்து, அந்தர் முக திருஷ்டி யுள்ளவர்க ளாக்கு வித்து, அவர்களை நிர்விகற்ப ஞானாநந்த வாரிதியில், மூழ் கச் செய்தனர். மேலும், சுவாமிகள் சென்னையில், வேதாந் தம் பரவ வேண்டு மென்னும் பெரு நோக்க முடையவ ராய்ச், சாது மகா சங்க மென் னொரு சங்கத்தை யேற்படுத் தினர், அது, சென்ற பல வருஷங்க ளாக மிகச் சிறப் பாக நடைபெற்று வருகின்றது. சென்னையின்கண், வரும் சாதுக்களுக்கு உண்டி முதலிய வசதி இன்மையைச் சுவாமிகள் பெரிதுங் கவனித்து, அக் குறைவை நிவிர்த்தித் தற் பொருட்டுச், சென்னைக் கடுத் துள்ள, வியாசர் பாடியில், புற்றிற்கு பால் வார்க்குந் தோட்டத்தை, அன்பர்களைக் கொண்டு வாங்குவித்து, அதில், சாதுக்கள் தங்குவதற்கு போதிய கட்டடங்களைக் கட்டுவித்திருக்கிறார். இங்குச் சாதுக்களுக்குச் சமஸ்கிருத பாட சாலை முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு வேண்டிய யோசனைகள் செய்யப்பட்டு வந்தன.

சென்ற பல வருஷங்க ளாக மேற்படி தோட்டத்தி லும், செங்கல்வ ராயநாயகர் பூந் தோட்டத்திலும், சாதுக் கள் பலர் வருதல், போத லுடையவரா யிருந்தனர். தினந் தோறும், 20 சாதுக்களுக்கு குறையாது வியாசர் பாடி, ஆநந்தாச்சிரமத்தில், தங்கி யிருப்ப துண்டு. சுவாமிகள், சந்நிதான விசேஷத்தினால், எல்லாத் திருப் பணிகளும், குறை வின்றி நடந்து வந்தன. மேற்படி சாதுக்கள், சமஸ்கிருத பாட சாலை முதலிய திருப் பணிக்காக, ஒரு லட்சம் ரூபாய் திட்டஞ் செய்யப் பட்டிருந்தது. வெண் ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தது போல், சுவாமிகள் (5—4—1918) உதயாதி பூர்வம் 1-20க்குத் தமது 45வது வயதில், பரிபூரண தசையை யடைந்தனர். ஆயினும்,

சுவாமிகளின் சத்திய சங்கற்பம் வீணுகா தன்றே? அது, சுவாமிகளின் சிஷ்ய கோடிகளுள் ஒருவரது மனத்திலா வது, உற்பூத மாகாம லிராது. காலக் கிரமத்தில், அது முற் றுப் பெறுவ தாம். பய னேக்காது செய்யும் ஞானிகளின் சங்கற்பங்களை முடிக்கப் பகவான் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்ருரென்பது சாஸ்திர சம்மத மாதலின், நமது சுவாமிகளது, சாது சமஸ்கிருத பாடசாலை முதலிய கைங்கரிய நோக்கம், அவர் தம் சிஷியர் வாயி லாகத் தொடர்ந்து பற்றிப் பூர்த்தியாவ தாம்.

சுவாமிகளுக்கு, ஹேம வித்தை தெரியு மென்று கருதி, அவரை அடுத்து, ஏமாற்ற மடைந்த சிலர், அவ ருண்ணும் அன்னத்தில், விஷங் கலந்து விட முயற்சியும் செய்தனர். ஆயினும், சுவாமிகள், தமது சரீர பாதுகாப்பில் திருஷ்டி யில்லாதவரா யிருந்தனர். சுவாமிகள், தம்மை நேரில் தூஷிப்பவரிடத்தும், புன் சிரிப்பும், இன் சொல்லும், உடையவரா யிருந்தனர், அவர். தம் அரிய பெரிய குணங் களை அளவிட்டுச் சொல்லுதல் ஆயிர நாவை யுடைய ஆதிசேஷனுலும், அளவிடற்பால தன்று. மண், பெண், பொன், ஆசைகளைப் பற்றறத் துறந்த பெரியார்க்கு, உயர்வு தாழ்வுக ளில்லை யென்பதனைச் சுவாமிகள்பால் நிதரிசன மாகக் கண்டனம். தம்பால் வரும் பல்லோரையும், உயர்வு தாழ்வு கருதாது, சுவாமிகள், சகோதர ராகப் பாவித்து வந்தன ரென்று கூறுவது மிகையாகாது. மேற்படி திருப் பணிகள், நிறை வேறுவதற்கு வேண்டிய பொருள்கள் எவ் வாறு எங் கிருந்து வந்த தென்று ஒருவருக்கும் இதுகாறும் விளக்க மாகத் தெரியாது. சுவாமிகள், ஒருவரையும் உள்ள வரையிலும் ஒன்றும் கேட்ட தில்லை. காந்தத்தின் சந்நிதா

நத்தில், இரும்பு சேடிப்பது போலச், சுவாமிகள் சந்நிதா நத்தில், எல்லாம் குறை வின்றி நடந்தேறி வந்தன,

வருடந் தோறும், ஸ்ரீ சங்கர் ஜயந்தி, சித்திரா பௌர்ணிமை மஹோத்சவ முதலியன, மிகு சிறப்பாக நடந்தேறி வந்தன. சென்னை, ஸ்ரீ செங்கல்வ ராய பூந் தோட்டத்தில், மங்கள வாரந் தோறும் சுவாமிகள் வேதாந்த பாடம் நடத்தி வந்தனர். இவ் வழியால் ஆயிரக் கணக் கான ஜநங்கட்கு வேதாந்த சாஸ்திரங்களில், சிரத்தையும். ஈசுவ ரோபாபாசனையில், விருப்பமும், சாதுக்களிடத்தில், பக்தி யும், பெருகி வந்தன. ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாதா சாரிய, சுவாமிக ளவர்கட்கு ஆலய மொன்று வியாசர்பாடி ஆநந்தாஸிரமத்திலும், சென்னை, ஆநந்தாஸிரமத்திலும், கட்ட வேண்டு மென்பது, சுவாமிகளின் நோக்கங்களி லொன்று. அந் நோக்கம் முற்றுப் பெருது போனது பெரிய தோர் நஷ்ட மாம்.

சுவாமிகள் வேதாந்த அபிவிர்த்தியின் பொருட்டுச் சமஸ்கிருத ஹிந்தி பாஷைகளி லிருந்து, ஆத்ம புராண முதலிய பல அரிய நூல்களை வெளியா மாறு செய்திருக் கின்றார். பல சாஸ்திரங்களி னின்றும், இன்றியமையாத செய்யுட்களைத் திரட்டி அமைத்த, வேதாந்த மனன சிந்தா மணி யென்னும் ஒரு பெரிய வேதாந்த நூலை அச் சேற்றி வெளியிட்டிருக்கின்றார். ஞாந சாதக சகாய மென்னு மொரு நூலை, சாதகர் பொருட் டெழுதி அச்சிட்டு வெளி யாக்கியு மிருக்கின்றார். வேதாந்த வித்தை சென்னையி லும், பிற விடங்களிலும், பரவுதற் குரிய மார்க்கங்களைப் பல வழியா லும்,செய்திருக்கின்றார். சுவாமிகள், இவ் வாறு பல வேலைகள் செய்து வந்த காலத்தில், அநேகருக்குப் பல

நன்மைகள் உண்டாயின. சுவாமிகள் பரிபூரண தசை யடைந்தது வேதாந்தத்திற்கே பெரிய நஷ்ட மாகும்.

அம் மகாத்மா தம்முடன் ஒத்து உழைத்துவந்த தமது நண்பர் ஒருவரது பேருதவியைக் கொண்டு சென்னையில், சாது மகாசங்கத்தை ஸ்தாபித்த பின், இவ் விருவரும் சுத்த சங்கல்பத்தோடு சென்னையிலிருந்தே செய்துவந்த பெருமுயற்சியாலே, சென்னை மாகாணத்தின் பல இடங்களில், இச் சாது மகாசங்கத்தைத் தொடர்ந்து பல சாது சங்கங்கள் ஏற்பட்டு மிகு விமரிசையாய் நடைபெற்று வருகின்றன.

சுவாமிகள் தம்முடைய வாழ் நாள் முற்றும் சுகப் பிரம்மத்தைப் போல, பிரமசாரிய விரதத்தையே மேற்கொண்டிருந்தார். இவர் யாவரும் வியந்து போற்றத் தக்க காம ஜித்துவா யிருந்தபடியால், இம் மகானிடத்து உயர் குல, மாது சிரோண்மணிகளும், மிக ஆர்வ மாய் வேதாந்த சாஸ்திர சிரவணஞ் செய்துவந்தனர். சுவாமிகளது நோக்கம பலவும் பரமேசுவரனது கருணையால் முற்றுப்பெறு மென்று நம்பியிருக்கின்றோம்.

கர பாத்திர சிவப் பிரகாச சுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

36. காளையார் கோவில், செல்லப்ப சுவாமிகள் சரித்திரம்.

பாண்டி வள நாட்டிலே, புதுக் கோட்டை சீமையிலே, அரிமளம் என்னும் ஊரிலே, நல் லொழுக்கம், நற் செயல் உடைய மாதா பிதாக்கள் இருவருக்கும் நல்ல நேரத்தில்

ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு செல்லப்பன் என்று பெயர் வைத்து வளர்த்து வந்தனர். அந்தச் செல்லப்பன் வயது வந்ததும் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்று வந்தனர். கல்வி கற்று முடிந்து, நகரத்தார் வழக்கப்படி சிலோன் சென்று கடையில் வேலை பார்த்து வந்தனர். அங்கு சில சமயங்களில், வைராக்கியம் உண்டாகி. ஊர் வந்து இருந்தனர். பின் ஒரு சமயம் கோவிலூரில், இராம சாமி ஞான தேசிகரிடம் போய் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை சொல்லி சரணாகதி அடைந்தனர். அவர்களும், இவரை பக்குவி என்று அறிந்து பிரமக்ஞான உபதேசம் செய்தனர். அதனை கேட்டு, அங்கு அப்பியாசம் செய்து கொண்டு இருந்தனர். அதன் பின் தஞ்சா வூர் பால் சாமி மடம் போய், மடாதிபதி யாக, இருந்தனர். அங்கு சில காலம் இருந்த பின், மதுரை, தெற்கு வெளி வீதி குட்டையா மடத்திற்கு அதிபதி யாக இருந்தனர். அங்கு வெகு காலம் அதி பதி யாக இருந்து பலருக்கு பிரமக்ஞான உபதேசம் செய்தனர். அதன் பின், காளையார் கோவிலுக்கு சென்று, ஒரு மட ஸ்தாபநம் செய்து, கொண்டு இருந்து, தேவ கோட்டை ஜமீந்தாருக்கு ஞான உபதேசம் செய்து நீண்ட நாள் இருந்து காளையார் கோவிலிலேயே மடத்தில் சமாதி ஆயினர்.

கண்டனூர், பிரமவித்யாப் பிரசாரண சபைக் காரிய தரிசி, முத்தி ராமையா இயற்றியது.

அணிகொண்ட கலியுகமை யாயிரத் திருபத்து மூன்றாந்
துந்துபி,
யாடிமா தத்திரு பத்தொன்ப தாந்தேதி யானதோ
ரமரபக்க

மமர்சஷ்டி யாதித்த வாரமிரே வதியுற்ற தானதோர்
சுபதினத்தில்,
ஆண்டவர் மரபினி லருள்பெற்றி டும்ராம சாமிகட்
கடிமை பூண்டு,
மணியான ஞானம தடைந்துமே தஞ்சைநகர் மாமதுரை
சாக்கையுற்ற,
மடங்களுக் கதிபதி யாயிருந் தவற்றிற்கு வாள் பொருள்க
டேடிவைத்தும்
வைராக்கிய முபாதிந டையுள்ள சீடரை மதித்துமே
யருள்புரிந்தும்
வையகந் தனிலுற்ற வணிகர்கள் புகழமிக வாழ்ந்துமே
யுலகின்மிக்க,
இனியான தேவாங்க ராளுமரு ளைசலந் செட்டியா
ரவர்களுக்குத்
தீக்கையி லுயர்மகா வாக்கியம துதனைத் தெளிவாய
நுக்ரகித்துந்
தென்பாண்டி நாட்டிலுயர் காளையார் கோயிலிற்
றிருமடங் கட்டுவித்துக்
தேவர்முத லியாவரும் பார்த்துக்க ளித்திடச் சிறப்புட
னங்கிருந்தே
பணிகொண்ட பொருமையிற் றருமரைப் போலவும்
பக்திவா கீசர்போலும்
பாங்கான போதனைவ சிட்டரைப் போலவும்
பகரரிச் சந்தரனெனவும்
பண்பான கொடையினிற் கன்னனைப் போலவும்
பார்ப்பவரெ லாமதிக்கப்
பாரிலுயர் செல்லப்ப சாமிசிற் குணமான பரசொருப
மாயினரரோ.

காளையார் கோவில்
செல்லப்ப சுவாமிகள் சரித்திரம் முற்றுப் பெற்றது.
ஓத் தத் ஸத்;

37. சாக் கோட்டை வீரப்ப சுவாமிகள் சரித்திரம்.

பரமேசுவரன் அறுபத்து நான்கு திரு விளையாடல் செய்த பாண்டி வள நாட்டிலே, புது வயல் என்னும் ஊரிலே, மாதா பிதாக்கள் என்னும் இருவரும் நல் ஒழுக்கம், நற் செயல், அடியார் பக்தி உடையவர் களாய் இருந்தனர் அவர்களுக்கு நல்ல வருஷத்தின் நல்ல மாதத்தில், நல்ல வாரத்தில், ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த குழந்தைக்கு வீரப்பன் என்று பெயர் வைத்து வளர்த்து வந்தனர். வயது ஐந்து ஆனவுடன் பள்ளிக்கு வைத்தனர். அவனும் பள்ளிக் கூடம் சென்று கல்வி கற்று வந்தனன் வயது ஆக ஆக சம்சாரத்தின் வெறுப்பு உண்டாகி, கோவிலூர் போய் இராம சாமி ஞான தேசிகரை குரு வாக அடைந்து சரணுகதி ஆயினன். அவரும் அந்த வீரப்பன் என்பவனுக்கு பரிச்சை செய்து, பிரம வித்தையை உபதேசித்தனர். அவனும் அதைக் கேட்டு அங்கு இருந்தே ஞானப்பியாசம் செய்து வந்தனர். அங்கு இராம சாமி ஞான தேசிகர் பரிபூரண தசையை அடைந்த பின்னர், அவரது இரு பாத குரடு ஆகிய திரு வடிகளை கையில் கொண்டு, சாக் கோட்டை என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தனர். அங்கு மடம் ஒன்று ஸ்தாபித்து, வந்த பக்குவிகளுக்கு பிரம வித்தையை உபதேசம் செய்து வந்தனர் நீண்ட நாள் இருந்து பலருக்கும் உபதேசம் செய்து விட்டு ஓர் நற் றினத்தில் சமாதி ஆயினர்.

வீரப்ப சுவாமிகள் விதேக முத்தி ஆசிரிய விருத்தம்.

ஓங்குகலி யையாயி ரத்தாறு குரோதியி லுயர்மகர
ரவிய மைந்த—வொருபத்து மூன்றுடன் புதன்வார மேலான

வெள்ளி குறைவு கிருஷ்ண பக்கம், பாங்குடைய பஞ்சமித் திதியோடு நட்சத்திர பரமான வுத்த ரத்தில்-பரமனுரு சமிவநச் சேத்திரமெ னுங்கோயி லூரதாம்—பதியு றைந்து, தீங்குறும வித்தையாற் கட்டுண்ட சீவரைச் சிவமாக்கி விட ளித்துச், சித்திவிளை யாடல்புரி முத்திரா மேசகுரு சீர்பரவி மரபில் வந்தே, ஈங்குநற் சாக்கையி லெழுந்தரு ளும் வீரப்ப வெந்தை குரு பரம முத்தி—யெய்தியது மியநங்கள் தொழு முருவினை மறைத்தது மியாவர்க்கு மிக வி யப்பே.

சாக்கோட்டை,

வீரப்ப சுவாமிகள் சரித்திரம் முற்றுப் பெற்றது.

38. *அரசப்ப சுவாமிகள் சரித்திரம்.*

நாடரும் பொருளை நமக்கருள் சித்தி
நாயகன் நளிநன் மலரைத்,
தாடரும் பரற்கும் பரங்கிரி இறையைத்
தாணுவாம் சுந்தரேச் சுரனை,
நீடிய வினைகள் யாவையும் பொடிசெய்
நீள்கயற் கண்ணியம் மையினைத்
தேடமர் கூடல் அசுவத்த நாத
தேசிகன் தனைத்திநம் பணிவாம்.

கடல் புடை சூழ்ந்த பூலோகத்திலே, பரம சிவன் அறு பத்து நான்கு திரு விளையாடல் செய்த பாண்டி வள நாட்டிலே, காரைக் குடி என்னும் நகரத்திலே, தந வைசிய குலத்திலே, பிள்ளையார் பட்டி கோத்திரத்திலே அவதரித்த வர் அரசப்ப சுவாமிகள்.

காரைக் குடி யென்னும் ஊரில் மது க்ஷேத்திர மெனக் கியாதி யடைந்த தாயும், கலியினை நாசம் செய்கின்றதாயும், கோவிலூ ரென்று விசேஷமாகப் பிரசித்தி அடைந்த தாயும், அநேகம் பெரியோர்களாற் சூழப்பட்டதாயும், ஒரு ஸ்தாநம் இருக்கின்றது. அந்த ஸ்தாநத்தில், ஆத்ம நிஷ்டர்களாயும், விஷய விரக்தர்களாயும், சிவ பக்தர்களாயும், மகாத்மாக்களாயும், இருக்கின்றவர்களாற் சூழப்பட்டு, முத்தி ராம லிங்க மென்ற பெயரை யுடைய ஒரு மகான் இருந்தனர். மகாத்மாவாயும், ஆத்மாநந்தத்தில், எப்பொழுதும் ரமித்துக் கொண்டு, சதா பிஹ்மத்தியாநத்தில் மூழ்கி இருக்கின்ற அந்த மகானுக்குச் சாவிவாடீஸ்வரி தேவி சதா பிரசந்நமாய், அடிக் கடி தரிசநம் கொடுத்தனள். சாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி யான குருவே, அந்தத் திருமேனியை அடைந்து, பஜித்தவர்களைச் சமுசார சமுத்திரத்தினின்றும் கரை யேற்றிக் கொண்டிருந்தார். அவருக்குச் சிஷ்யர்களாக விசேஷக் கியாதி யுடைய சநகாதிகளே, சிதம்பரம், வெள்ளையன் குட்டையன், ஸ்கந்தன், பெரிய அருணாசலம், சின்ன அருணாசலம், குழந்தை யென்னும் பெயர்களுடன் அவதரித்தனர். இன்னும் அநேக விரக்தர்கள் சிஷ்யர்களாக இருந்தார்கள். அவர்களைச் சரணாகதியாய்ப் போ யடைந்து பிரஹ்ம ஞாநத்தை அறிய வேண்டு மென்ற விருப்பத்தோடு அரசப்ப ரென்னும் பெயரை யுடைய நமது ஸ்வாமிகள் சதா தம் சற் குருவிற்குத் திருப்தி யுண்டாகு மாறு சேவை செய்து வந்தார்கள் அந்த முத்தி ராம லிங்க ஞாந தேசிகரும், இவரைப் பார்த்து, நீயே பிரஹ்மம், ஜகத் பொய் என்று போதித்தார்கள். அந்தச் சற் குரு

உபதேசத்தினுல் பிரத்தியகாத்மாவின் ஸ்வரூபத்தினை அறிந்தார். அநந்ய பக்தியாகின்ற சிஷ்ருசைஷயினுல் குருவை ஆராதித்துக் கொண்டு, விதேக முத்தி வரை குரு சமீபத்தில் (நிழல் போல்) வசித்து வந்தார்கள்.

அதன் பின், சில காலம் ஆண்டே வசித்து வரும் போது, உத்தம மான சிவ க்ஷேத்திரத்தில், ஜீவ னுள்ள வரை வசிக்க வேண்டு மென்று மநதில் எண்ணினுர். ஆளுடையார், கோவில், ஆலாசியம், (மதுரை) சிதம்பரம் என்னும் மூன்ற னுள் யாண்டு வசிப்பது சிலாக்கியம்? என்று சிந்தையோடு கூடியிருக்கும் சமயத்தில், ஸ்வாமிகளுடைய ஸ்வப்நத்தில், மிக ஆதரவோடு நீ ஆலாசியத்திற்கு வருக வென்று, ஸ்ரீ சுந்தரேசுரர் ஆஞ்ஞை பண்ணி, மீனுக்ஷி சுந்தரேசுவரர்களுடைய சந்நிதியில் தீபாராதனையையும் தரிசிப்பித்து மறைந்தார். பக்தர்களுடைய இஷ்டத்தினைச் செய்விக்கின்றவராயுங், கருணுநிதியாயு மிருக்கின்ற சுந்தரேசுவரருடைய ஆஞ்ஞையினுல், சுவாமிகளும், மதுரமா யிருக்கின்ற மதுரா புரியை வந்து அடைந்தார். தென் றிசையி லிருக்கின்ற கிருத மாலா நதிக் கரையில் உள்ள ஒரு மடத்தில், அநேக காலம் வசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த பட்டணத்திற்கு ஈசுவரராயும், சகல ஜகத்திற்கும் அதிபராயும், மேலான பிரஹ்ம வித்யா ஸ்வரூபி யான மீனுக்ஷிக்கு நாயக ராயும், இவ் வள வென்று அளவிடக் கூடாத கருணையினுற் பூரண மான மநத்தினை யுடையவராயும், ஏழைகளை இரக்ஷிப்பதில் அதிக ஆதரவுடன் கூடினவராயும், ஆச்சரியமான லீலா விநோதத்தினை யுடையவராயு மிருக்கின்ற சுந்தரேசுவர ருடைய சரித்திரத்தினை, அகாதமா யிருக்கின்ற

எல்லாச் சமுத்திரங்களையும் உள்ளங் கை ஜலமாய்ச செய்வதில் சமர்த்தராயும், லோக கண்டகர்க ளான மாதாபி, இல்வலனைப் பக்ஷணம் செய்வதில் சமர்த்தராயும், சூரிய சந்திரர்களுடைய போக்குவரவைத் தடுத்த விந்திய மலை யின் கர்வத்தினைப் பங்கம் பண்ணினவராயும், குற்றாலத்தி லிருந்த விஷ்ணுவைச் சிவ லிங்க மாகச் செய்து, துஷ்ட வைணவரவர்களுக்குத் துக்கத்தினைக் கொடுத்தவராயும், உலகத்தி னுடைய துன்பத்தை நிவிர்த்திக்கும் பொருட்டுப் பூமியினுடைய தென் திசையில் வந்து சமன் செய்தவரா யும், தக்ஷிண திக்கி லிருக்கின்ற ஜநங்களுக்கு இதம் செய் யும் பொருட்டு ஈசுவரனிடத்தி லிருந்து தமிழ்ச் சூத்திரத் தினை அடைந்தவ ராயும், சிவனே நான் என்னும் பாவனை யினால் சாக்ஷாத் ஈசுவர னுக்கு இரண்டாவது ஈசுவர விக்கிர தராயும்,தமது சித்தத்தில் ஸ்ரீ சுப்பிரமணியருடைய பாதார விந்தத்தைச் சதா தியானஞ் செய்து கொண்டிருக்கின்ற வராயும், ஒருவரா லும் சாதிக்கக் கூடாதிருக்கின்ற தபசி னால் சந்தோஷத்தினை யடைந்த ஸ்ரீ சதாசிவத்தினின்றும் சர்வப் பிராணிகளுக்கும் குருவாயிருக்கும் தன்மை பெற்று ஜகத்குருவாயும்,இருக்கின்ற, அகஸ்திய மகரிஷியை யன்றி, யாவர் வர்ணிக்கச் சமர்தத ராவர். சர்வ ஜகத்திற்கும், மாதா பிதாக்க ளாய் இருப்பினும், பாவனு பலத்தின் விசேஷத்தினால், தமது மாதா பிதாக்க ளாய மீனாக்ஷி சுந்த ரேஸ்வரர்களை, ஸ்வாமிகள் பக்தியோடு நாடோறும் நன் றாகப் பிரதக்ஷிண நமஸ்கார தோத்திரங்களால் சந்தோஷம் செய்வித்துக் கொண்டு வசித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி வசித்துக்கொண்டு வரும் போது, பங்குனி உத்த ரத்தில் நடக்கின்ற குரு பூஜைக்குக் கோவி லூருக்கு வருஷந் தோறும் போய் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு

வருஷத்தில், குரு பூசைக்கு ஒரு வாரத்திற்கு முன் சுந்தரேசுவரர் வந்து இவ் வூரிலேயே குரு பூசையை நடத்துக. அங்கு செல்ல வேண்டாம் என்று உத்தரவு கொடுத்ததை லக்ஷியம் பண்ணுமல், குரு விஷயத்தில் ஈசுவர வாக்கியம் சரிதல்ல வென்று கருதி மடத்தி லிருந்து புறப்பட்டுச் சந்நிதி மண்டபத்தில் வந்து உட்கார்ந்தவுடன், ஸ்வப்நத்தில் குரவ ரெழுந்தருளி, நீ கோவி லூருக்கு வர வேண்டாம் இவ் விடத்தில், குரு பூசை நடக்கும். நீ அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், தடைப்படாது என்று கூறித், தெற்கு வாசலி லிருக்கின்ற நாயக்கர்மார்களுக்கும் இந்தக் குரு பூசையை நீங்கள் எல்லோரும் சேர்ந்து நடத்த் வேண்டு மென்றும் ஆக்ஞை செய்தனர்- உத்தரவான பிரகாரம் அவர்களும் அவ் வாறே நடத்தி வந்தார்கள். சுவாமிகள் வசிக்கும் மடத்தில், குரு பீடத்தில், சம்புவாகிய நடராசரைத் தியானித்துப் புஷ்பங்களால் பூஜித்து அநேக காலம் வசித்து வந்தார்கள். ஒரு கால் சுவாமிகள் வசிக்கும் மடத்தில் மீனுக்ஷி தேவி சகிகளோடு ஸ்வப்நத்தில் வந்து அந்த மடத்தி லிருக்கின்ற குப்பையைக் கூட்டிக் கொண்டு இருக்கும்போது, அம்பிகையை அந்தச் சகிகள் பார்த்து, சுவாமி கோபித்துக் கொள்வர் வா'' வென்று கூப்பிட்டனர். அப் போது தேவி நான் என் செய்வேன், நமது புத்திர னை அரசப்பன் சுப்பராயனென்கின்ற துஷ்டனேடு சேர்ந்து மடத்தினை அசுத்தப் படுத்திவிட்டான். அதற் காக இந்த மனோ மடத்தினைக் கூட்டுகின்றேன். என்று சொன்னவுடன் பரமாத்ம ஞானியாகிய சுவாமிகளும் விழித்துக் கொண்டு, அது முதல் வஞ்சக னையும், விட னையும்,இருக்கின்ற சுப்பராயனை விட்டு

நீங்கி வசித்து வந்தார்கள். இவ் வாறு, நீளுட் சென்ற பின், கால யுக்தி வருஷம், கார்த்திகை மாசத்தில் அவர்களது ஸ்வப்நத்தில் சுந்தரேஸ்வரர் தேவியோடு வந்து, ஹே தேவி உன் புத்திரனால் பூசை செய்யப்பட்ட சருகான பத்திரத்தைப் பார் என்று கூறியதும், தேவியும் புத்திமானாகிய புத்திரனால் யாது செய்ய முடியும்? புஷ்பத் தோட்டமோ மழையில்லா திருப்பினும் தண்ணீர் இறைப்பதற்கு பண மில்லாததனால் காய்ந்திருக்கின்றது இவனால் யாது செய்ய முடியும் என்று மறு மொழி கூறினார். இவ் வாறு, கூறிய மாதா பிதாக்க ளாகிய மீனாக்ஷி சுந்தரேசுவரர்களினது வார்த்தையினைக் கேட்டு சுவாமிகள் ஸ்வப்நத்தினின்றும் சஹஜ மாக விழித்துக் கொண்டு, அந்த மடத்திற்கு நாய னாக யிருக்கின்ற கிருஷ்ண நாயக்கனை அழைத்து (அவனுக்கு) தர்மத்தைப் போதித்து, இந்தப் புஷ்பச் செடிகளை நா டோறும் இறைவைத் தண்ணீரால் ஆதரவோடு பரிபாலிப்பையேயாயின், அதனால் உனக்கு நிகரில்லாத புண்ணியமும், சுகமும், கிடைக்கும் என்று கூறியதும், அவனும், மந மின்றி அங்ஙனமே செய்வேன் என்று கூறினன். இவ் வாறு அநேக முறை கூறியும் அவன் சுவாமிகள் நோக்கம் போற் செய்ய வில்லை. பின் ஒரு தினத்தில் சுவாமிகள் கிருஷ்ண நாயக்கனை அழைத்து என் இதமான வார்த்தையினை நீ யேன் கேட்கவில்லை என்று கேட்க, அவனும் அவ்வாறே செய்கின்றேனென்று பொய் வசநம் கூறினன். அப்போது வாக்கினல் மட்டும் சொல்லுகின்றாய், செய்கையினால் காண்பிக்கின்றாயில்லை. ஆனதால், முன் போன்று பொய் கூறேன், உமது வசனத்தின் பிரகாரம் அவசியம் செய்கின்றேன் என்று உன் நாதனை ராமனிடத்தில் ஆணை வைத்துப் பிரமாண பூர்வக

மாகக் கூறுவாயாயின், உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை வருமென்று கூறினூர்கள்! கிருஷ்ண நாயக்கன் அக்கால் ஒன்றும் பதில் கூருமல் வேறு சித்த முடைய வனுய்ப் போய்விட்டான். அதன் பின் சுவாமிகள் தம் வாக்கியத்தினைப் பிரீதியோடு கேட்டுப் பதில் சொல்லாமற் போனதை அறிந்து, மநதில் வியசநத்தோடு சிவாலயத்தினை அடைந்து மாதா பிதாக்க ளாகிய மீனுக்ஷி சுந்தரேஸ்வரருடைய சந்நிதியில் விநயத்தோடு நமஸ்கரித்து, சுந்தரேஸா? தயா சிந்துவே? என்னுடைய விண்ணப்பத்தைக்கேளும்' நீர் பூர்வத்தில் திரிபுராசுராதிகளை சம்ஹரித்தும், 64 வித மான லீலைகளைச் செய்தும், முன்னம் செய்திருக்கின்ற காரியங்கள் எல்லாம் சத்தியமா யிருக்குமாயின், கிருஷ்ண நாயக்கனிடத்தி லிருந்து எனக்கு வந்திருக்கின்ற அவமானம் உமக்கு வந்திருக்கின்றதாகும். இன்னும், விசேஷ துக்கத்தைக் கொடுக்கின்ற உபாதியும் அவனுக்கு உண்டாகட்டும், என்று தெரிவித்துத் தம் மடத்திற்கு வந்து ஈசுவரனை ஸ்மரித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின், முற் புகன்ற வருஷம் மாதம் 16ங் தேதியில் கிருஷ்ண நாயக்க னுடைய பாரியையின் ஸ்வப்நத்தில் சில ஜனங்கள் வந்து உன் புருஷன் அரசப்ப சுவாமிகளை அவமானஞ் செய்தான், அதனுல் கொல்லுவதற்கு மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்கள் வருகின்ருர்க ளென்று நாங்கள் கேள் விப்பட்டோம், ஆகையால், உன் பதியை ஒளித்து வைத்துக் கொள் என்று சொன்னது போல, ஸ்பநத்தில் கண்டு அந்த ஸ்பநத்தில் அந்த க்ஷணத்தில் அவ் வாறே பல்லக்கிலேறிக் கொண்டு சைந்நியங்களோடு மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்கள் வருகின்றதை அவளும் பார்த்தாள். உடனே எழுந்து பரபரப்போடு அந்த விருத்தாந்தத்தைச் சொல்லு

கின்றதாகச் சீக்கிரமாய் தன் பர்த்தாவின் சமீபம் வந்தாள். அதற்கு முன்பே அவன் ஸ்வப்நத்தில் விமாநத்தில் ஏறிக் கொண்டு சைதந்யங்களோடு தெற்கு சின்னக் கடை வீதியில் மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்கள் வருகின்றனர் போலும். அதனைப் பார்க்கின்றதற்கு பட்டணத்து ஜநங்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடியிருப்பது போலும், பார்த்திருக்கும்போது, அவ் விஷயத்தைக் கூறுவது போல ஒரு சிவ பக்தன், தன் சமீபத்தில் வந்து, அடே கிருஷ்ண நாயக்கா நீ அரசப்ப சுவாமிகளை நிந்தனை செய்ததால் உன்னைக் கொல்வதற்கு மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்கள் இதோ வருகின்ருர்கள் என்று சொன்னதைக் கேட்டு அவருக்கு இவன்.

அவர்கள் கோபத்திற்கு நான் பாத்திரமாவேனே வென்று பிரதி யுத்தரம் சொன்னது போற் கண்டு நன்கு விழித்தனன், அவ் வாறே பாரியையும், சொன்னுள். அதனை கிருஷ்ண நாயக்கன் கேட்டு, நான் அரசப்ப சுவாமிகளுடைய வாக்கியத்தை அங்கீகரியாமல் அவமானஞ் செய்தே னல்லவா. அதற்காக அச் சுவாமிகள் பரமசிவனிடத்தில் தெரியப்படுத்தி யிருப்பார்கள் என்று விளங்குகின்றது. அதனுல், அந்த விருத்தாந்தத்தை நஷ்டபூர்வக மாகச் சிவன் அறிவிக்கின்ருர் என்று மநதில் சிந்தித்து விபசாரத் தோடு கிரகத்தில் வசித்து வந்தான். அதன் பின் அந்த மாதம் 26-வது தேதியில் அவன் தேகத்தில் வாந்தி, பேதி யுண்டாயிற்று, அதனுல், அவன் பிராணுந்தமாகும்படியாகிவிட்டான். பின்னும், அவனுடைய நிலத்தில் விளைந்திருந்த நெற்களும் சதா திருடர்களால் நாச மடைந்தன. இவற்றை யெல்லாம் கிருபையோடு கூடிய சுவாமிகள் கேட்டு மாதா பிதாக்களாகிய

மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்களிடத்தில் நமஸ்கரித்துச் சாம்ப மூர்த்தி யாகிய தயாநிதியே? கிருஷ்ண நாயக்கனுக்குச் சிக்ஷை பண்ணினது போதும், அவனைக் கொல்ல வேண்டாம். நான் முன் உபாதி வர வேண்டு மென்று தெரிவித்தேனே யன்றி அவனைக் கொல்லும்படி தெரிவிக்க வில்லை என்று தெரிவித்து, தம் ஸ்தானம் வந்து சேர்ந்தார்கள். அதன் பின் கிருஷ்ண நாயக்கன் ஈசுவர கிருபையினால் ஆரோக்கியத்தினை அடைந்தான். பின் சித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் 1உ யில் தெற்குக் கடை வீதியில் இருவரும் சந்தித்தார்கள். அப் பொழுது சுவாமிகள் அவனைப் பார்த்து க்ஷேமமா? பூர்வ விருத்தாந்தத்தை நினைத்துக் கொள், என் வாக்கியத்தை அவமானஞ் செய்து என்னை அநாதரவு செய்தாய். அதனால் வியசநத்தோடு சுவாமி சந்நிதியில் நான் தெரிவித்தேன். அதனால் கொர்வி யாகிய உனக்கு வாந்தி பேதியும், நெல் நஷ்டமும் உண்டாயின. அதைக் கேள்விப்பட்டு மீண்டும் உனது ரோகம் சாந்தி யாகும் பொருட்டுச், சுவாமி சந்நிதியில் பிரார்த்தித்தேன். அதனால் நீ ரோகத்தினின்றும் பிழைத்தாய் இதில் சந்தேகம் இல்லை என்று கூறிய வார்த்தையைக் கேட்டு, அந்த ராத்திரியில் கிருஷ்ண நாயக்கன், தன் ஸ்வப்நத்தில் மீனாக்ஷிசுந்தரேஸ்வரர்கள் யுத்தத்திற்கு வந்ததாகக் கண்டதையும், தன் பாரியை ஸ்வப்நத்திற் கண்டு வந்து சொன்னதையும், தனக்குப் பேதி உண்டாய்ப் பிராணன் போகும்படி வந்ததையும், நெற் கொள்ளை போனதையும், அரசப்ப சுவாமிகள் கூறிய வார்த்தையையும், ஆலோசித்து, மகாப் பிரபு வாயும், பக்தர்களுக்கு இஷ்டத்தைச் செய்கின்றவ ராயு மிருக்கின்ற சுந்தரேஸ்வர ருடைய விசித்திரமான

லீலை இவையாம் என்று நிச்சயம் செய்து, இந்தச் சரித்திரம் யாவற்றையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டான். இவ் வாறிருக்கும்போது அந்த மாதம் 22-ந்தேதி இரவில் ஸ்வாமிகளது ஸ்வப்நத்திற் பரமசிவன் சித்த ரூபியாய் வந்து, உனக்கு மகா விஷ்ணு மாமன், அந்த விஷ்ணு பக்தன் உனக்கு மைத்துனன், உனது மைத்துனனை கிருஷ்ண நாயக்கனிடத்தில் என்னுடைய திரு விளையாடல் புத்தகம் இருக்கின்றது. அதை வாங்கி நீ பார் என்று கூறியதற்கு, அவனிடத்தில் அந்தப் புத்தகம் இல்லை, என்னிடத்தில் இருக்கின்றது நான் திரு விளையாடலைப் படித்து முடித்தேன் என்று சுவாமிகள் பதில் சொன்னபின், பரமசிவன் மீண்டும் சுவாமிகளை விளித்து, அந்தப் பழைய திரு விளை யாட லன்று, இது புதிதாயும், உன்னிமித்தம் செய்ததாயும், என் சரித்திர மாயும் 65வது என்று பெயருடையதாயு மிருக்கின்ற திரு விளையாடற் புத்தகம் அவனிடத்திருக்கின்றது, அதனை வாங்கி நீ பார், மற்றும், உன் புஷ்பத் தோட்டத்தில் இருக்கின்ற எல்லாப் புஷ்பங்களையும் சுப்பராயன் அபகரித்துக் கொண்டு போகின்றான், அதையும் பார் என்று சொல்லி மறைந்தார். அதன் பின் சுவாமிகள் உஷத் காலத்தில் சிவனைத் தியானஞ் செய்து கொண்டு எழுந்து புஷ்ப மின்றி யிருக்கின்ற தோட்டத்தினைப் பார்த்து ஆச்சரிய முள்ள மநதோடு கிருஷ்ண நாயக்கனை அழைத்துப் புஷ்பத்தோட்டத்தைக் காண்பித்து ஸ்வப்நத்தில் பரம சிவன் கூறியதனையும் சொன்னார்கள். அதனைக் கேட்டு, அவன் இது ஆச்சரியமா? முன் நான் உங்களை அவமானஞ் செய்ததற்காகச் சுவாமி சந்நிதியில் என்னைச் இரக்ஷிக்க வேண்டு மென்று வியசன மநதோடு நீங்கள் தெரி

வித்த பிரகாரம் எனது ஸ்வப்நத்திலும், என் சம்சாரத்தின் ஸ்வப்நத்திலும், மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்கள் சகல சைந்யங்களோடும் யுத்தத்திற்கு வந்தார்கள். அதற்குமேல் என்ன ஆச்சரியமிருக்கின்றது? மற்றும் உங்கள் ஸ்வப்நத்தில் பரமசிவனின் உங்கள் மைத்துனை என்னிடத்தில் திருவிளையாடற் சரித்திரப் புத்தக மிருக்கின்றது. அதை வாங்கிப் பார் என்று கூறியது, இது தான் என்று கூறி, அந்தக் காகிதங்களைக் கொடுத்தான். ஸ்வாமிகள் அதை வாங்கிப் பாரத்து இவனது ஸ்வப்நத்திலும், இவனுடைய பத்நியினது ஸ்வப்நத்திலும், பரம சிவன் செய்த திருவிளையாடலை இதுவரையில் இவன் சுயமாக வெளிப்படுத்தவில்லை என்று நினைத்து பரமசிவன் நம் ஸ்வப்நத்தில் தம் சரித்திரம் இவனிடம் இருக்கின்றது. அதை வாங்கி நீ பார் என்று கூறினார். இக் காரணத்தினால் இந்த லீலை உலகில் பிரசித்தமாதல் வேண்டும் என்பது திருக் கருத்தே போலும், ஆச்சரியம் பரமசிவனுக்குப் பக்தனிடத்திலுள்ள காருண்யம் அளவிடக் கூடாததாக இருப்பது பிரகாசமாயிருக்கின்றதென்று மநதில் எண்ணிப் பரம சந்தோஷத்தை அடைந்தார்கள். அதன் பின், கிருஷ்ண நாயக்கனும், சுவாமிகளும், நம் விஷயத்தில் சாக்ஷாத் ஸ்ரீ சுந்தரேசர் இவ்வளவு அதிக சிரமத்தை எடுத்துக் கொண்டாரென்று மநதில் அதிக மான வியசநத்தையும், சந்தோஷத்தையும், ஓரே காலத்தில் அடைந்தார்ள். இவ்வாறு சுவாமிகள் விஷயத்தில் அநேகம் விசித்திரமான லீலைகள் சுந்தரேஸ்வரரால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சுவாமிகளுக்கு ஒரு கால் ரிஷபாருடராயும், சித்த ரூபராயும், விமாநத்தி லிருக்கின்ற விக்கிரக ரூபராயும் வந்து தயாளுவாகிய சம்புவினால் அநேக வித மாய் அநுக்கிரகஞ் செய்

யப்பட்டிருக்கின்றது. ஒரு கால் பரமசிவன் சுவாமிகள் ஸ்வப்நத்தில் வந்து மலையாளத்தி லிருந்து ஒரு மறையோன் நடேச மூர்த்தியைக் கொண்டு வந்து உனக்குக் கொடுப்பான். அதனை வாங்கிச் சந்தோஷ மாய்ப் பூஜிக்க என்று ஆக்ஞாபித்தனர். அவ் வாஞ்ஞையின்படியே சுவாமிகள் விழித்துச் சிவ வாக்யத்தினை ஸ்மரித்துக் கொண்டிருந்தார்கள். அவ் வாறே, ஒருவன் வந்து இந்த நடராஜ மூர்த்தியினுடைய சுந்தர ஆகிருதியைப் பாரும் என்று கூறி, அதனை சுவாமிகளிடத்தில் கொடுத்தான். சுவாமிகள் ஆச்சரியத்தோடு அந்த மூர்த்தியை வாங்கிப் பக்தியோடு பூஜித்து வந்தார்கள். பரமசிவன் சுவாமிகளிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆச்சரியத்தைச் செய்கின்றவராக இருக்கின்றார். சுவாமிகளும், பக்தர்களுடைய சித்தத்துக்கு ஸ்தாந பூதமா யிருக்கின்ற சுந்தரேஸ்வரருடைய ஆலயத்தில் நாடோறும் சென்று கால் மாறி நடஞ் செய்கின்ற நடராஜவைப் பூஜித்துக் கொண்டு அநேக காலம் இருந்து வந்தார்கள். இவ் வாறு சுவாமிகள் அந்தர் முக புருஷர்களுக்குள் அக்ர கண்ணியராயும், சாந்த முதலான சற் குணக் கூட்டங்களுக்கு நிதியாயும், மஹா ஆசார சீலராயு மிருந்தார்கள். ஒரு கால் சுவாமிகள் ஸ்வப்நத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வந்து, அஞ்ஞானத்தை எறித்தார். ஒரு கால் சுவாமிகள் ஸ்வப்நத்தில் வந்து மன்மதனை கண்டு நீயார் என்று கேட்டார்கள். நான் மன் மதன் என்று பதில் கூறிய மாத்திரத்தில் ஈசுவர வடிவான சுவாமிகள் நெற்றிக் கண்ணால் எரித்தார். சுவாமிகள் நந்திகேஸ்வரர் விக்நேஸ்வரர், ஸ்கந்தர் மால் முதலான தெய்வங்களிடத்தில் பக்தி யுடையவர்களாயினும், விசேஷ மாய் நடராஜரிடத்திலும், குருவினிடத்திலும்,

பக்தி செய்பவர்கள், அவர்கள் பிரசாதத்தால், பிரஹ்மாத்ம ஐக்கிய ஞானத்தை அடைந்தவர்கள், அநேக காலம் சிவ ஸ்தாந உத்தம மான துவாதசாந்த க்ஷேத்திரத்தில் வசித்துக் கொண்டு, மீநாக்ஷி சுந்தரேஸ்வரர்களை அகோராத்திரம் ஆராதித்துக் கொண்டு வந்தார்கள். ஜீவன் முக்தி தசையை அடைந்து, குரு பக்தர்களோடு ஜீவன் முக்தி புரத்தில் இருப்பவர்களாயும், காமாதி வைரிகளை ஜயித்தவர்களாயும், சாந்தியுடையவர்களாயும், முமுக்ஷுக்களாயுமிருக்கின்றவர்கட்கு, ஜீவன் முக்தி சுகம் கிடைக்கும் பொருட்டு வசித்து வந்தார்கள். விசேஷமாக மீநாக்ஷி சுந்தரேஸ்வரர்களுடைய புத்திரராய், ராம லிங்கம் என்ற பெயரை யுடையவருக்குப் பிரஹ்ம ஞாநத்தைக் கொடுப்பதற்கும், ஜீவன் முக்தி சுகத்தைக் கொடுப்பதற்கும், சாக்ஷாத் சச்சிதாநந்த அகண்டாகார அத்வைதப் பிரஹ்மமே, ஜலம் ஆலங் கட்டி ஆனது போலவும், நெய் விழுதானது போலவும், பஸ்பம் போன்று விளங்கும் அரசப்ப வடிவ மாய்ப் பக்தர்களுக் கநுக்கிரகிக்கு நிமித்த மாய் அவதாரம் செய்தது, சுவாமிகள் இந்தப் பரிசுத்த மான ஆத்ம நிஷ்டையாலே பக்தர்களுக் கநுக்கிரகஞ் செய்து கொண்டு இருந்து, பவ வருஷம், மார்கழி மாதம், சஷ்டி திதி, பூர நக்ஷத்திரம், சோம வாரத் தன்று விதேக முக்தியை காற்று அசை வின்றி போல், அடைந்து பரிபூரணப் பரப்பிரஹ்ம ஸ்வரூபத்தில் ஐக்கிய மானார்கள். மீநாக்ஷி சுந்தரேஸ்வரது இந்த லீலை யாவும் அமிர்தத்தினைக் கொடுக்கின்றன, மீநாக்ஷி சுந்தரேஸ்வரரைப் போல், அபீஷ்டத்தினைக் கொடுக்கின்ற தெய்வம், மூன்று உலகத்திலு மில்லை. அவரை உபாசிக்கின்ற புண்ணிவான்களுக்கு ஈண்டுத்

துர்லபம் என்ன விருக்கின்றது. அநேக கோடி ஜன்மங்களில், நிஷ்காமியமாய்ச் செய்த புண்ணிய சமூகத்தினால் சித்த சுத்தி வந்து, முடிவான ஜென்மம் உடையவர்கட்கு இந்தத் துவாதசாந்த ஸ்தல வாசம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சுபம் அஸ்து.

அரசப்ப சுவாமிகள் சரித்திரம் முற்றுப் பெற்றது.

39. சென்னை, சூளை சுப்பைய ஞாந தேசிக சுவாமிகள் சரித்திரம்.

கொங்கு நாட்டின்கண், கோயம் புத்தூருக்கு அருகில் உள்ள வேட்டைக்காரன் புதூர் என்னும் கிராமத்தில், மருதாசலம் பிள்ளைக்கும், அப்மணி அம்மாளுக்கும், உதித்து, இளமையின்கண்ணே ஆங்கிலம் கற்று, ஔடதப் பணியராய், அரிய பெரிய புகழுடன் இல்லின்கண் இருந்து முற்பவத்தில் செய்த சற்கர்மங்களின் பயனாக விக்நேசப் பெருமானின் விமல அருள் விளக்கால், விராகத்தை அடைந்து, பற்றைத் துறந்து, வெளிப் போந்து, திருக்குற்றாலத்தை அணுகி, ஆங்குள்ள விகநேசப் பெருமானை வணங்கித் துதித்துக் கொண்டு வருங்கால், கோவிலூர், வீர சேகரப் பெருந்தகையாரின் மாணாக்கர், பனையூர் பட்டி அருணாசல சுவாமிகள் என்னும் பெரியார், அருணகிரியாருக்கு அறுமுகவன் வந்தாங்கு, எதிர் பட்டனர். அவர் இவரது நற்குணங்களை கண்டு, கோவிலூர் என்றோர் வேதாந்த மட ஸ்தாநம் இருக்கின்றது, ஆங்கு நீர் செல்வீரேல், நலமாம் என்று உரைத்த, அவ்வுரை கேட்டு அவ்வண்ணமே கோவிலூரை அடைந்து, அங்குள்ள வீர சேகர விமல மாதவ வித்தகருடைய திருப்பாதத்தை சர

னடைந்து, மாணாக்க ராகி, அந்த பிரம சபைக்கண் ஆசிரியர் அருகில் இருந்து, ஆத்தாதி பணிகளை அன்போடு செய்து அருள் பெற்று, வேதாந்த நூல்களை விதிப்படி பாடங் கேட்டு தெரிந்து, நிட்டை யுடைய ராய், வாரணசி அடைந்து, வட மொழி, கற்று, திட முறு வித்துவா னாய் விவேகாநந்த சுவாமிகள் போன்று, பிரசங்கம் செய்து, உலகத்தை ஈடு ஏற்றுபவ ராய், பல அடியார்கட்கும், ஆயிரக்கணக்கான அன்பர்கட்கும், வட மொழி, தென் மொழி நூல்களை போதிக்கும் ஆசிரிய ராய், நியாய சந்திர ராய், வேதாந்த பாஸ்கர ராய், சென்னை சூளை ஆநந்த ஆசிரமத்தில், இருபத் தைந்து வருஷம் பிரதி திநம் மாலை ஏழு மணி முதல் எட்டு மணி வரை வேதாந்த பிரசங்கம் கேட்போர் ஆநந்திக்கும்படி ஆயிரம் பேருக்கு உபந்யாசம் செய்து கொண்டு இருந்து, ஆத்ம புராணம், பகவத் கீதை உரை, வாசிஷ்ட உரை, சமஸ்கிருதமொழி பெயர்ப்பு நூல் இருப்பத்து ஒன்று மொழி பெயர்த்து, தமிழ்க் கவி நூல் இருபது செய்து கொண்டும், நீண்ட நாள் திடகாத்திர மாய் இருந்து சமாதி ஆகினார்கள்.

சென்னை சூளை ஸ்ரீமத் வீர சுப்பைய ஞாந தேசிக சுவாமிகளின் விதேக முத்தி நாட் குறிப்புக் கவி.

பதினான்கு சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சொல்லுறுங் கலியை யாயிரத் தோடு
தோயுமுப் பத்திரண் டதனில்
துதைந்திடும் பிரஜோத் பத்தியாம் ஆண்டு
துனும்புரட் டாசியாம் மாதம்

புல்லுறு மிருபத் தாறதாந் தேதி
புகன்றிடுஞ் சோமவா ரத்தே
பொருந்திடும் பூர்வ பிரதமை திதியார்
புனிதசு வாதியாம் உடுநாள்

நல்லுத யாதி இருபத்தா றேகால்
நாழிகை வேளையில் சென்னை
நகருறு சூளை நியாயசந் திரரும்
ஞானவே தாந்தபாஸ் கரரும்

வெல்லுமா மகிமை மண்டலே சுரரும்
விளங்குசொன் முகிலுமாம் திருவார்
வீரசுப் பைய ஞானதே சிகரார்
விதேகமா முத்தியுற் றனரே.

கலியுக வருஷம் 5032, தமிழ் வருஷம் பிரஜோத்பத்தி வருஷம், புரட்டாசி மாதம், 26ம் தேதி திங்கட் கிழமை உதயாதி நாழிகை 26¼ (பிற் பகல் மணி 4½) ஆங்கில வருஷம் 12—10—1931 பூர்வபக்ஷ பிரதமை திதி. சுவாதி நக்ஷத்திரம்.

40 வேத மொழி பெயர்ப்பு
சிவாநந்த சுவாமிகள் சரித்திரம்.

வேதாரணியத்தில், அகம்படியர் குலத்தில், சாமித் தேவர், மதுரை யம்மை, என்பவர் வயிற்றில் நல் ஓரையில் உதித்து இளமையில் தமிழ் கற்று முன் செய்த நல் வினைப் பயனால், இளமையிலேயே பல பெரியார்களை அடைந்து யோகாப்பியாசம் முதலியவற்றை மனம் தூயதாம் வண்

ணம் பழகி, பின்னர், சண்முகக் கடவுளின் தண் அருளால், கோவி லூரை அடைந்து, வீரசேகரப் பெருமானார் திரு வடியை சரண் அடைந்து, அன்போடு இவ் வெந்தை யாருக்கு, ஆத்த முதலிய பணிகளை செய்து கொண்டு விதிப் படி வேதாந்த நூல்களை பாடம் கேட்டு, தெளிந்து சிந்தித் துக் கொண்டு, வாராணசி சென்று, விதிப்படி பரம அம்ச சந்நியாசம் பெற்றுக் கொண்டு, எந்தையாரின் திரு வடித் திறத்தால், வட மொழியில், வியாகரணம் தர்க்கம் முதலிய கருவி நூல்களும், பூர்வ மீமாம்சை முதலிய உபாங்க நூல் களையும் கற்று, உத்தர மீமாம்சை நூல்கள் அத்வைத சித்தி, கண்டந காத்தியம் முடிவாயுள்ளவற்றையும, கற் றுணர்ந்து, அங்கு உள்ளாருக்கும், ஓதுவித்துக் கொண்டு, இருக்க, இவ் வீரசேகரப் பெருமானார் திரு வருள் தென் நாட்டிற்கு இழுத்துவர, இங்கு வந்து வேதம் மொழி பெயர்ப்பு, வீரதேசிக ஞாந தேசிக வசன புராணம், மேற்படி கவி புராணம், பிள்ளைத் தமிழ், திரு வொற்றியூர் புராணம், முதலிய பல நூல் இயற்றிக் கொண்டு நீண்ட நாள் இருந்து, ஏகாம்பர குப்பத்தில் சமாதி ஆனார்கள்.

சிவாநந்த சுவாமிகள் விதேக கைவல்யம்.

தீர்மிகுங் கலியை யாயிரத் தோடு
சேருநாற் பத்திறே டைந்தில்
திகழுதா ரணவாண் டைப்பசி மாதம்
தேதியார் பதினைந்தோ டமையும்
நேர்மிகுங் கிழமை மங்கள வாரம்
நிருமலப் பௌர்ணமி திதியும்
நிகழ்ந்திடும் பரணி யுடுவுறு நாளில்
நிலைமிகுந் திருக்களர்த் தலமார்

பேர்மிகும் வீர தேசிக ருளைப்
　　பெற்றுல குக்கருள் புரிந்தோன்
பிறங்கிடுங் தெய்வ வடமொழி வேதம்
　　பெருமைசங் கரவிஜ யாதி.
தேர்மிகுந் தமிழில் மொழி பெயர்த்தளித்தோன்
　　திகழுமே காம்பரக் குப்பத்
திருக்குமப் பேட்டை சிவாநந்த ஞாந
　　தேசிகன் முத்தியுற் றனனே.

கலியுக வருஷம் 5045, தமிழ் வருஷம் தாரண வருஷம், ஐப்பசி மாதம் 15தேதி, செவ்வாய்க் கிழமை பௌர்ணமி திதி பரணி நக்ஷத்திரம், ஆங்கில வருஷம் 31–10–1944.

மகாத்ம சரிதாமிருதம்
40 பெயர் சரித வசநம் முற்றுப்பெற்றது.

இராமநாதபுரம் ஜில்லா, திருப்பூவணம், வேதாந்த மடம், காசிகாநந்த ஞானாச்சாரிய சுவாமிகள் இயற்றிய நூல்கள்.

1 ஹிந்தி மொழி பெயர்ப்பு.

1 வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா வசநம் 2 50
2 விசார சாகரம் வசநம் 2 50

2 சமஸ்கிருத மொழி பெயர்ப்பு

3 கதா சரித் சாகரம் (கதை வசநம்) 2 25
4 ஹரிமீடே, ஹரிதத்வ முக்தாவலி பத உரை 0 75
5 வியாச தாத்பரிய நிர்ணயம் வசநம் 0 50
6 நைஷ்க்கர்மிய சித்தி வசநம் 0 50
7 வேதாந்த சித்தாந்த முத்தாவலி வசநம் 0 50
8 ஸ்வராஜ்ய சித்தி வசநம் 0 50
9 பகவற்கீதை 15-வது அத்தியாயம் சமஸ்கிருதம் தமிழ்
பத உரை, தமிழ். பாட்டு, தமிழ் உரை, மூர்க்க சதகம்
சமஸ்கிருதம் தமிழ் பத உரை நிர்க்குண அஷ்டோத்தர
சத நாமாவளி சமஸ்கிருதம் தமிழ் நாலு சேர்ந்தது 0 50
10 வேதாந்த பரிபாஷை வசநம் 0 44 [வசநம் 0 25
11 மண்டல பிராஹ்மண உபநிஷத்-ராஜ யோக பாஷ்யம்
12 ஈசாவாஸ்ய உபநிஷத்-சங்கர பாஷ்யம் வசநம் 0 25
13 வேதாந்த சஞ்ஞா வசநம் 0 13

3 தமிழ் உரை நூல்

14 நாநா ஜீவ வாதக் கட்டளை 2 00
சத்யார்த்தப் பிரகாசிகை உரை 2 00
15 கீதா சாரத் தாலாட்டு, லகு சந்திரிகை உரை 0 50
16 மேற்படி, நக்ஷத்திர விளக்க உரை 2 00
17 சசிவர்ந போதம், பதார்த்த பாஸ்கரன் உரை 2 00
18 மகாராஜத் துறவு-மநப் பிரசாதினி உரை 1 50
19 பக்தி (வைராக்கிய) சதக பத உரை பொழிப்புரை 1 00
20 மேற்படி உரை உதாரணக் கவி, பக்தி ரச உரை 0 50
21 வைராக்கிய தீபம் பத உரை பொழிப் புரை 1 00
22 மேற்படி உரை உதாரணக் கவி, சுடர் உரை 0 50
23 சிட்டாசாரம் பால போதினி உரை
24 கைவல்ய நவநீதம், தத்துவார்த்ததீபிகை உரை 2 50
உதாரணக் கவி 233க்கு, ஆதித்தன் உரை 1 50
25 சார்த்த சதக ஸ்தோத்ர ரச மஞ்சரி பரிமள தீப உரை

26	திரு எம் பாவை, திருப்பள்ளி எழுச்சி மணி மாலை, சிறுசுடர் உரை	0 75
27	மந்திர உபதேசம் வசனம்	0 25
28	திரிம்சத் ஸ்தோத்ர ரச மஞ்சரி, நந்தா ஒளி உரை	0 25
29	வட நாட்டில் அரித்துவாரக் கும்பமேளாவும், தென்னாட்டில் சாதுக்கள் மேளாவும் வசனம்	0 13
	சாது சங்க திருவல் விழா வைபவம்	0 50
30	மடங்களின் உத்பத்தியும், தற்போதுள்ள நிலைமையும்	0 13
31	அதிஷ்டானத்தில் இருப்பவர்கட்கும், அத்வைதிகட்கும் ஓர் அறிக்கை	0 25
32	ஒன்பது துறவியர் பாடிய அருட் பா மாலை கவி 280	1 00
33	திருக் களர், வீர சேகர ஞான தேசிகர் சரிதம் வசனம்	1 00
34	காசிகாநந்த விஜயம் வசனம்	0 25
35	மார்கழித் திங்கள் பாராயண மஞ்சரி கவி (62)	0 50
36	வேதாந்த சாஸ்திர ரத்நாவலி (9) சேர்ந்தது	3 00
37	வேதாந்த சாஸ்திர ரத்நத் திரயம் விவேக சூடாமணி கவி 671, அஞ்ஞவதைப் பரணி கவி 494, பஞ்ச தசி கவி 796 (3) சேர்ந்தது கவி (1961)	3 00
38	கீதாத் திரயம், ஈசுவர கீதை கவி 338, பகவத் கீதை கவி 545, பிரஹ்ம கீதை கவி 547 மூன்று சேர்ந்தது ஆக கவி 1430)	3 00
39	வாசிட்டம் கவி (2055)	2 25
40	சப்ததா சப்ததி: தோத்திர ரச மஞ்சரி கவி 70 நந்தா ஒளி உரை	0 75
41	விம்சதி ஸ்தோத்திர ரச மஞ்சரி கவி 20 டை உரை	0 25
42	பக்தி சதக தோத்திரப்-தோத்திரப் பிரகாச உரை	0 19
43	திரு எம் பாவை-திருப் பள்ளி எழுச்சி பத உரை	0 25
44	குட்டுக்கோல் கட்டாரி புச்சம் கண்டநப வசநம	2 00
45	கோவிலூர் மடத்தின் அத்புத மகிமா அகூபாரம்	0 75
46	கைவல்ய நவநீதம் கிருதபாத உரை	3 00
47	மேற்படி ஆராய்ச்சி 0 13 48 டை பத சார உரை	3 50
49	வேதாந்த சூடாமணி சந்தோஷ தாயினி உரை	5 00
50	வேதாந்த சூடாமணி மூலம்	0 50
51	பிரஹ்ம கீதை கவி 547	0 38
52	ஈசுவர கீதை கவி 338	0 25
53	பகவத்கீதை கவி 545, 1 25, 54 பஞ்சதசி கவி 796	0 62
55	மகாத்ம சரிதாமிருதம் (40 பெயர் சரிதம்)	4 00